தமிழ் நூல் வரலாறு

(A General History of Tamil Literature)

எழுதியவர்:
செந்தமிழ்ச் செல்வர், சைவசமய சிரோன்மணி,
பேராசிரியர், வித்துவான்
பாலூர் கண்ணப்ப முதலியார், M.A., B.O.L.
தமிழ்த்துறைத் தலைவர், புதுக்கல்லூரி, சென்னை.

வெளியிட்டவர்:
ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம்
53-56, பவழக்காரத் தெரு :: சென்னை - 1.

தமிழ் நூல் வரலாறு

(A General History of Tamil Literature)

எழுதியவர்:

செந்தமிழ்ச் செல்வர், சைவசமய சிரோன்மணி,

பேராசிரியர், வித்துவான்

பாலூர் கண்ணப்ப முதலியார், M.A., B.O.L.

தமிழ்த்துறைத் தலைவர், புதுக்கல்லூரி, சென்னை.

வெளியிட்டவர்:

ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம்

53-56, பவழக்காரத் தெரு : : சென்னை - 1.

உரிமை ஆசிரியர்க்கே] 1962 [விலை ரூ. 5

முதற் பதிப்பு: டிசம்பர், 1962.

The Progressive Printers, Madras-1.

முகவுரை

"தமிழ் நூல் வரலாறு" என்னும் பெயரிய இந் நூல், தமிழ் இலக்கிய வரலாற்று நூலே ஆகும். ஆனல், ஈண்டு நூல் என்னும் சொல், இலக்கியத்தை மட்டும் குறிக்கப் பெருமல், இலக்கண முதலான நூற்களையும் குறிக்கவேண்டும் என்னும் குறிக்கோள் கொண்டே, தமிழ் நூல் வரலாறு என்ற பெயருடன் திகழ்கிறது. தமிழ் இலக்கண இலக்கியங்களின் வரலாற்றைக் கூறுவதுடன், அந்நூற்களின் ஆசிரியர் வரலாறுகளையும் கொண்டு, இது துலங்குகிறது என்பதையும் ஈண்டு அறிதல் வேண்டும். இதில் அமைந்துள்ள தோற்றுவாயும் இறுவாயும், தமிழ் நூல்களின் வழி, தமிழ் நாட்டு மக்கள் வாழ்க்கை எத்தகையது, கலைகள் எத்தகையன, தமிழ்மொழி, தமிழ் நூல்கள் எம்முறையில் வளர்ந்தன என்பன போன்ற அரிய குறிப்புக்களுடன், தமிழ் நாட்டின் சிறப்பையும், தொன்மையையும், தமிழ் மொழியின் பழமையையும், மாண்பையும் அறிவிக்கின்றன.

இந்நூல் முற்கால, இடைக்கால, பிற்கால நூல்களைப்பற்றியும், ஆசிரியர்களைப் பற்றியும் மட்டும் குறிப்பிடாமல், இக்காலத்தில் உள்ள புலவர்களைப் பற்றியும், அவர்கள் எழுதியுள்ள நூல்களைப் பற்றியும் அறிவிக்கும் அமைப்பில் அமைந்துள்ளது. இச் சிறப்பே அன்றி, இந்நூலைப் படிப்பவர்கட்குச் சோர்வு தட்டாமல், தமிழ் நூல்களில் ஓர் ஈடுபாடு ஏற்பட வேண்டும் என்னும் குறிக்கோளுடன், தமிழ் நூல்களிலிருந்து சுவைமிக்க, கருத்து நிறைந்த பாடல்களும் இதில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

இந்நூல் சென்னைப் பல்கலைக்கழகத்தார் பி.ஏ., பி.எஸ்ஸித் தமிழ் மாணவர்கள், தமிழ் இலக்கிய வரலாற்றையும் பயிலவேண்டும் என்ற குறிக்கோளுடன் வெளியிட்டுள்ள பாடதிட்டத்திற் கிணங்கச் சிறிதும் வழுவாத நிலையில் எழுதப்பட்டதாயினும், தமிழ் எம்.ஏ. பட்டம்பெற விரும்பும் மாணவர்கட்கும், வித்துவான் பட்டம்பெற விழைவோர்க்கும், தமிழ் நூல் ஆராய்ச்சியில் ஈடுபடுவோர்க்கும், பொழுது போக்காகப் படிக்க அவாவுவோர்க்கும் பயன்படும் வகையில் விரிந்த அளவில் எழுதப்பட்டுள்ளது என்பது இதன் சிறப்புக்களில் ஒன்றாகும்.

இன்னோரன்ன சிறப்புக்களுடன் இலங்கும் இந்நூலைச் சீரிய முறையில் வெளியிட்ட சென்னை, ஆசிரியர் நூற்பதிப்புக் கழகத்து உரிமையாளராகிய ஸ்ரீ K. S. சீநிவாசாச்சாரியார் அவர்கட்கும், புரொக்கிரசிவ் அச்சகத்தார்க்கும் என் நன்றியை அறிவித்துக்கொள்கின்றேன்.

இந்நூலைத் தமிழகம் அன்புடன் வரவேற்று, என்னை இத்துறையில் மேன்மேலும் ஈடுபட்டு உழைக்க ஊக்கமளித்துத் துணை செய்யுமாறு பெரிதும் வேண்டிக் கொள்கின்றேன்.

பாலூர் கண்ணப்ப முதலியார்

"அம்மை அப்பர் அகம்"
43, விஜய விக்னேஸ்வரர் கோவில் தெரு,
சூளை, சென்னை-7. *12-12-'62*

Syllabus

B.Sc. and B.A.—PART II (b)

III PAPER

(A General History of Tamil Literature:)

I. Ancient Tamil Literature: ...

(i) Sangam Period: Three Sangams-their existence-different opinions-Nakkirar's references to the Sangams-First Sangam and Second Sangam-Agattiyanar and his disciples-Agattiyam, Tolkappiyam and other works-Third Sangam-Anthologies-Ettuthogai and Pathuppattu-Classification as Agam and Puram-its significance.

(ii) Keelkanakku-Eighteen Works: Ethical Works and other Literary works-Tirukkural and Naladiyar.

(iii) Kaviyams: Twin Epics - Silappathikaram and Manimegalai-Their forms and messages.

II. Mediaeval Literature:

(i) Religious Hymns: Nayanmars and Alwars-Thevaram Thiruvachagam and the Sacred Four Thousand-Hymns-Twelve Thirumurais.

(ii) Contribution of religious institutions to Tamil Literature and Grammar: Jains and Buddhists-Perunkathai. Jivaka Chintamani and other Kavyams-Grammatical Works-Yapparungalam, Nannul, etc.-Saivites and Vaishnavites-Periyapuranam and Kambaramayanam-other Puranas.

III. Later Works:

(i) Minor Literary Works: Prabandhams-Some important works among them-lack of originality in most of the Prabandhams.

(ii) Commentaries: Commentators on Alwar's works, Commentaries on Grammatical works-Ilampuranar, Nachinarkkiniyar and Parimelazhagar.

(iii) Minor Poets: Included in Thanippadal Thirattu-Sthalapuranams-Kumaraguruparar and Sivaprakasar-their important works.

IV. Modern Literature:

Contact with Western Scholars-Rev. Beschi's service-Thempavani-other European scholars-Dr. Caldwell and Dr. G. U. Pope-Islamic Literature-Seerapuranam-Arutpa of Ramalinga Swamigal-Arumuga Navalar, Meenakshisundaram Pillai-Vedanayagam Pillai's Prathaba Mudaliar Charitram, the first Novel in Tamil-Professor Sundaram Pillai's Manonmaneeyam-Maraimalai Adigal and V. G. Suryanarayana Sastriyar-Dr. Swaminatha Aiyar, Subramanya Bharathiyar and Thiru-Vi-Kalyanasundara Mudaliar-Journalism-Growth of Novels and Short Stories-Pammal Sambanda Mudaliar and his dramas.

பொருளடக்கம்

		பக்கம்
சங்க காலத் தமிழ் மக்கள் வாழ்க்கை	...	1
முத்தமிழ் (இயல், இசை, நாடகம்)	...	12
கலை நூல்கள்	...	19
முச்சங்க வரலாறு	...	24
சங்கம் இருந்தது என்பது	...	28
சங்கத்தைப் பற்றிய பலரது கருத்து வேற்றுமைகள்	...	30
அகத்தியரும் அவர்தம் மாணவர்களும்	...	33
தொல்காப்பியரும் தொல்காப்பியமும்	...	39
எட்டுத் தொகை	...	61
பத்துப் பாட்டு	...	96
அகமும் புறமும்	...	111
பதினெண் கீழ்க்கணக்கு	...	122
காவியங்கள் (பெருங் காப்பியம், சிறுங் காப்பியம்)	...	149
ஒன்று முதல் எட்டுத் திருமுறைகள்	...	172
ஒன்பது முதல் பன்னிரு திருமுறைகள்	...	193
ஆழ்வார்களின் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்	...	225
சமணர்களின் தமிழ்த் தொண்டு	...	241
பௌத்தர்களின் தமிழ்த் தொண்டு	...	244
சைவ மடங்களின் தமிழ்த் தொண்டு	...	246
சைவ சித்தாந்த நூல்கள்	...	255
சித்தர்கள்	...	267
இலக்கண நூற்கள்	...	274
நிகண்டுகள்	...	287
கம்பரது காவியம்	...	290
புராணங்கள்	...	296
பிற்கால இலக்கியங்கள்	...	311
உரை ஆசிரியர்கள்	...	321
வைணவ நூல் உரை ஆசிரியர்கள்	...	326
வைணவ நூல் ஆசிரியர்கள்	...	329

		பக்கம்
தனிப்பாடல் திரட்டு	...	331
குமர குருபரர்	...	343
சிவப்பிரகாசர்	...	348
அருணகிரிநாதர்	...	355
வில்லிபுத்தூரார்	...	358
தாயுமான சுவாமிகளும், சிவஞான முனிவரும்	...	361
பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்	...	368
தத்துவப் பிரகாசர், ஒப்பிலாமணிப் புலவர்	...	370
சக்தி முற்றப் புலவர், சாந்தலிங்கக் கவிராயர்	...	371
சாந்தலிங்கர், அரிதாசர், குருகைப் பெருமாள், அமிர்த கவி	..	372
நல்லாப்பிள்ளை, பெருந்தேவனூர், வீர கவிராயர்	...	373
வரதுங்க பாண்டியர், அதிவீரராம பாண்டியர்	...	374
சிவக்கொழுந்து தேசிகர்	...	376
கிறித்தவர் தமிழ்த் தொண்டு	...	377
முஸ்லீம் புலவர்களின் தமிழ்த் தொண்டு	...	385
இராமலிங்க சுவாமிகள்	...	393
தொழுவூர் வேலாயுத முதலியார்	...	397
மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை	...	398
டாக்டர் சுவாமிநாதய்யர்	...	399
வல்லூர் தேவராசப் பிள்ளை, சுந்தரம் பிள்ளை	...	401
சோமசுந்தர நாயகர், மறைமலை அடிகள்	...	402
திரு. வி. கலியாண சுந்தர முதலியார்	...	407
பூவை. கலியாணசுந்தர முதலியார், சூரிய நாராயண சாஸ்திரியார்	...	408
பாரதியார்	...	409
பின்னத்தூர் நாராயணசாமி ஐயர், தேசிக விநாயகம் பிள்ளை	...	412
வடிவேல் செட்டியார், சடகோப ராமானுஜாசாரியார், கிருஷ்ணமாச்சாரியார், கா. சுப்பிரமணிய பிள்ளை	...	413

பக்கம்

வேங்கடசாமி நாட்டார், வேங்கடாசலம்
பிள்ளை, ரா. ராகவ ஐயங்கார் ... 414
மு. ராகவ ஐயங்கார் ... 415
சுப்பிரமணிய முதலியார், ... 417
அரசன் சண்முகனர், பாண்டித்துரைத் தேவர் ... 418
கோபால கிருஷ்ணமாச்சாரியார்,
வையாபுரிப் பிள்ளை ... 419
பாலசுப்பிரமணிய முதலியார், சேதுப்பிள்ளை,
செல்வ கேசவராய முதலியார் ... 420
தஞ்சை ஸ்ரீநிவாசப்பிள்ளை, பாம்பன் சுவாமிகள்,
சிங்காரவேலு முதலியார், நமச்சிவாய
முதலியார் ... 421
அநவரத விநாயகம் பிள்ளை, மாணிக்க நாயகர்,
இலக்குமணப் பிள்ளை, சுப்பிரமணிய முதலியார் ... 422
பூரணலிங்கம் பிள்ளை, மணி. திருநாவுக்கரசு
முதலியார், கதிரேசஞ் செட்டியார் .. 423
தாச்சி. அருணசல முதலியார், பூண்டி. அரங்க
நாத முதலியார் ... 424
யாழ்ப்பாணப் புலவர்கள் ... 425
பத்திரிகைகள் ... 431
நாவல்கள் ... 433
சிறு கதைகள் ... 434
நாடகம் ... 435
தமிழ் இசை வளர்ச்சி ... 438
இக்காலப் புலவர்கள் ... 439
தமிழகம் ... 461
தமிழ் மொழி ... 467

தமிழ் நூல் வரலாறு

—: o :—

I. பழங்காலத் தமிழ் இலக்கியம்
(Ancient Tamil Literature)
சங்க காலம் (Sangam Period)

தோற்றுவாய்

1. சங்க காலத் தமிழ் மக்கள் வாழ்க்கை

பழங்காலம் பொற்காலம் ஆகும். அக்காலத்து மக்கள் நனிநாகரிகராய் வாழ்ந்தனர். தங்கள் வாழ்வை இயற்கையோடு இயைத்து வாழ்ந்தனர். இலக்கிய வளத்தில் சிறந்து விளங்கினர். சாதி சமய வேறுபாடின்றித் திகழ்ந்தனர். புலவர் பெருமக்களுக்குப் புரவலர்கள் பெரு மதிப்பு ஈந்து வந்தனர். மக்களும் பெரியோர்கட்கு அடங்கி, ஒடுங்கி வாழ்ந்தனர். இங்ஙனம் இவர்கள் இலங்கி வந்தனர் என்பதற்குரிய சான்றுகள் சங்ககால இலக்கியங்களால் தெரியவருகின்றன. அவற்றை இனிவரும் கட்டுரை வாயிலாக நன்கு உணரலாம்.

சங்க கால மக்கள் தங்கள் நாட்டுக்குத் தலைவனாக அரசனைக் கொண்டிருந்தனர். அதனால்தான், 'மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்,' என்ற வாக்கும் அக்காலத்தில் எழுந்தது. மக்களும் அவனது வெண்கொற்றக் குடையின் கீழ்த் தங்கி இன்புற்றனர் என்பதை "வேந்தன் கவிகைக்கீழ்த் தங்கும் உலகு," என்ற குறள் அடியால் அறியலாம். இதற்குச் சான்று நெடுஞ்செழியன் கூற்றாகிய "என் நிழல் வாழ்நர்" என்பதே போதுமானது. அரசர்கள் தலைவர்களே ஆயினும் ஐம்பெருங் குழு, எண் பேர் ஆயத்தார் என்ற அமைப்பினைக் கொண்டே அரசு செலுத்தியுள்ளனர். ஐம்பெருங் குழு ஆவார் அமைச்சர், புரோகிதர்,

தானைத் தலைவர், தூதர், சாரணர். சாரணர் ஆவார் ஒற்றர். எண்பேர் ஆயத்தார் கரணத்தியலவர் (அரசாங்கப் பெருங் கணக்கர்), கரும விதிகள் (அரச வேலைகளை நடத்துவோர்), கனகச் சுற்றம் (பொருட் காப்பு அதிகாரிகள்), கடைகாப் பாளர் (நாடு காவல் அதிகாரிகள்), நகரமாந்தர் (சட்ட சபை உறுப்பினர் போன்றவர்), படைத் தலைவர், யானை வீரர், குதிரை வீரர் என்பவர்கள். இங்ஙனமெல்லாம் அரசன் பொறுப்பேற்று நடத்தினமையின், அவனை மக்கள் இறை என்றே எண்ணி வந்தனர்.

தம் நாட்டு மக்களைப் பகைவரினின்று பாதுகாக்கப் பல அரண்களை அமைத்து அரசன் காத்தனன். அவ்வரண்களை "செம்பு புனைந்து இயற்றிய சேணெடும் புரிசை," எனப் புறநானூறு புகல்கிறது. மேலும் அவ்வரண், " உயர்வகலம் திண்மை அருமை இந்நான்கின் அமைவரண் என்றுரைக்கும் நூல்" என்ற முறைமைக்கு ஒப்ப இருந்தன. இம்மதில்களில் பலவகை இயங்கு பொறிகள் அமைக்கப்பட்டிருந்தன. இவ்வாறு அமைந்திருந்தது என்பதைச் சிலப்பதிகாரம் நன்கு எடுத்து மொழிகின்றது. அவை தூண்டில், தொடக்கு, கவை, பணை முதலான பல.

மதில் வளத்தைப் பெருக்கியது போல, நிலவளத்தை நீர்வளத்தைப் பெருக்குவதிலும் அரசர்கள் கண்ணும் கருத்துமாய் இருந்தனர். இதனைப் பட்டினப்பாலை,

> " *காடுகொன்று நாடாக்கிக்*
> *குளந்தொட்டு வளம்பெருக்கி* "

என்றும், புறநானூறு "நிலன் நெறி மருங்கின, நீர்நிலை பெருக" என்றும் கூறுதல் காண்க.

தமிழ் நாட்டில் கல்வி உணர்ச்சி மிக இருந்தது. இதில் சமய வேறுபாடோ, மரபு வேறுபாடோ இல்லை. தமிழ்த் துறையில் எல்லோர்க்கும் சம மதிப்பு இருந்தது. பெண் பாலாரும் கற்றுத் தேர்ந்திருந்தனர்; கவிஞர்களாகத் திகழ்ந் தனர். தொழில் பல புரிந்து கொண்டே கல்வி கற்றுப் பெரும் புலவர்களாக இருந்திருக்கின்றனர். உதாரணமாக அறுவை வாணிகன் இளவேட்டனார், கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார், மருத்துவன் தாமோதரனார், கணியன் பூங்குன்றனார் முதலானவர்களைக் காட்டலாம்.

பெண்பாலாருள் பலரும் கவிஞர்களாகத் திகழ்ந்துள்ளனர். ஔவையார், பூதப்பாண்டியன் தேவிபெருங் கோப்பெண்டு, பாரிமகளிர், வெண்ணிக் குயத்தியார், காக்கைப் பாடினியார் போன்றோர் சிறந்த கவிஞர்கள்.

அரசாங்கத்திற்கு வருவாய் வரிகள் மூலமும், சுங்கங்களின் மூலமும், சிற்றரசர்கள் கொடுக்கும் திறைப்பொருள் களின் மூலமும் கிடைத்து வந்தன. இதனைச் "சாத்தொடு வழங்கும் உல்குடைப் பெருவழி" என்ற பெரும்பாணாற்றுப் படை கொண்டு தெளியலாம். சுங்கச் சாவடியில் ஏற்றுமதி இறக்குமதிகட்குரிய கட்டணங்களைப் பெற்றதை "வைகல்தோறும் அசைவின்றி உல்குசெய" என்று பட்டினப்பாலை மூலமும் அறியலாம். நாட்டிற்குக் கப்பம் மூலம் பொருள் வந்ததைச் சிலம்பு "திறை சுமந்து நிற்கும் தெவ்வர்" என்று செப்புதல் காண்க.

தேர்வு மூலம் மக்களைத் தேர்ந்தெடுத்த ஊர் மன்றங்கள் அக்காலத்திலும் இருந்தன. வாக்குச் சீட்டு அக்காலத்தில் குடவோலை எனப்பட்டது. இது குடத்தில் இடப்பட்டதனால் இப்பெயர் பெற்றது. இதனைக் "கயிறு பிணிக் குழிசி ஓலை கொண்மார்" எனவரும் அகநானூற்றுத் தொடர் அறிவிக்கிறது. இம்மன்றம் சிற்றூர்களில் ஆட்சி மன்றங்களாகத் திகழ்ந்தன.

நகர அமைப்பே அக்காலத்தில் ஓர் ஒழுங்கு முறையில் அமைந்திருந்தது. இதனைப் பரிபாடல் நூல் அழகுற அறிவிக்கிறது. "மதுரைமா நகர் தாமரை மலர் போன்றது. தாமரையின் இதழ்கள் போன்று தெருக்கள் இருந்தன. தாமரையின் இடையில் உள்ள பொகுட்டுப்போல் அரசன் அரண்மனை இருந்தது; பூந்தாது போலக் குடிகள் இருந்தன" என்று ஒரு பாடல் கூறுகிறது. சிலப்பதிகாரம் அரசன், அமைச்சன், படைத் தலைவர் ஆகியோர்கள் தனித்தனி வாழ் இடங்கள் அமைந்திருந்தன என்று கூறுகிறது.

கோயில்கள் பல இருந்தன. அக்கோயில்கள் சிவபிரான், திருமால், முருகன், பலதேவன், கொற்றவை, சாத்தான் முதலானவை. இங்கு விழாக்கள் நடக்கும். இதனைச் "சாறு அயர்களம்" என்னும் திருமுருகாற்றுப் படை அடி அறிவிக்கும்.

அக்காலத்தில் அறம் தழைத்திருந்தது. எல்லா அறத்தினும் உணவளித்தல் ஆகிய அறத்தைப் பெரிதும் போற்றிப் பேணி வந்துள்ளனர். இதில் அக்கால மக்கள் உறுதி கொண்டிருந்ததை "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்" என்று மணிமேகலை நூல் சுட்டிக் காட்டுதல் காண்க.

அக்காலத் திருமண முறை இன்னது என்பது அகநானூற்றில் இரு பாக்களால் இயம்பப் பெற்றுள்ளது.

> "கனை இருள் அகன்ற கவின்பெருங் காலைக்
> கோள்கால் நீங்கிய கொடுவெண் திங்கள்
> கேடில் விழுப்புகழ் நாள்தலை வந்தெனப்
> புதல்வன் பயந்த திதலைஅவ் வயிற்று
> வால்இழை மகளிர் நால்வர் கூடிக்
> கற்பினின் வழாஅ நற்பல உதவிப்
> பெற்றோர் பெட்கும் பிணையை ஆகென
> நீரொடு சொரிந்த ஈர்இதழ் அலரி
> பல்இருங் கதுப்பின் நெல்லொடு தயங்க
> வதுவை நன்மணம் கழிந்த பின்றைக்
> பேரில் கிழத்தி ஆகெனத் தமர்தர
> ஓரில் கூடிய உடன்புணர் கங்குல்"

என்றும்,

> "அங்கண் இருவிசும்பு விளங்கத் திங்கள்
> சகடம் வேண்டிய துகள்தீர் கூட்டத்துக்
> கடிநகர் புனைந்து கடவுள் பேணிப்
> படுமண முழவொடு பருஉப்பணை இமிழ
> மழைபட் டன்ன மணல்மலி பந்தர்
> இழைஅணி சிறப்பில் பெயர்வியப் பாற்றித்
> தமர்நமக்கு ஈந்த தலைநாள்"

என்றும் வருதல் காண்க. இவ்விரு பாடல்களின் வழி நாம் அறிவன: இத்திருமணக் காலங்களில் பந்தரில் புது மணல் பரப்பப்பட்டிருக்கும். விளக்குகள் ஒளிவிட்டுக் கொண்டிருக்கும். மணமக்கள் மணமாலைகளுடன் திகழ்வர். கோள்கள் நன்னிலையில் இருக்கச் சந்திரன் ரோகிணியுடன்

கூடிய காலத்துக் கவினுறு காலை வேளையில் முகூர்த்தம் நடக்கும். மாதர்கள் தூநீர் கொணர்வர். மகளிர் மங்கள ஆரவாரம் செய்வர். பிள்ளைகளைப் பெற்ற பெண்டிர்கள் மணமகட்கு நீர் ஆட்டுவர். பின் அம்முது பெண்டிர் "கற்பினின்று தவருது ஒழுகுவாயாக. உனது கணவனுக்குப் பல்லாற்ருலும் தொண்டு புரிந்து அவன் களிக்கும் வகையில் அன்பு காட்டி மனைவியாக மாண்புடன் துலங்குவாயாக" என்று கூறி, மணமக்களை இரவு ஒன்று கூட்டி இன்புறச் செய்வர். இஃது ஒரு செய்யுளில் கண்ட மணமுறை. அடுத்த செய்யுளில் கண்ட மணமுறை, "வானம் ஒளியுடன் துலங்கும். மதி ரோகிணியுடன் சேர்ந்திருப்பன். கடவுளை வணங்குவர். மணமுரசு ஒலிக்கும். மணமகள் நீராட்டப் பெறுவள். பந்தல் புதுமணல் பரப்பப்பட்டிருக்கும். மணமகள் அணிகலப் பொலிவுடன் பந்தலில் அமர்ந்திருப்பள். இதன் பின் மணமகனுக்கு மணமகள் உறவினர் மணமகளை ஈந்து மகிழ்வர்" என்பது. இவ்விரு செய்யுட்களிலும் புரோகிதர் மணம் நடத்தினர் என்னும் குறிப்பு இன்மையினைக் காண்க. இதனை நன்கு திரு. P. T. Srinivasa Iyengar, M.A. அவர்கள் தமது History of the Tamils என்னும் ஆங்கில நூலில் "It will be noticed that in this ancient Tamil rite of marriage there is absolutely nothing Aryan, no lighting of fire, no circumambulation of fire, and no priest to receive dakshina" என்று எழுதியிருப்பதையும் ஈண்டுக் காண்க.

மணமகள் பெருஞ் செல்வக்குடியில் பிறந்தவளாய்ப் பல பணியாளர்களைப் பெற்றிருப்பினும், தானே சமைத்துக் கணவனை உண்பித்து, களித்து வந்தனள். இதனைத்

> "தான்துழந் தட்ட தீம்புளிப் பாகர்
> இனிதெனக் கணவன் உண்டலின்
> நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே"

என்ற குறுந்தொகைப் பாடலில் காண்க.

தமிழ் நாட்டில் பலவகைத் தொழில்களும் மலிந்திருந்தன. இவர்கள் உழவுத் தொழிலில் பெரிதும் ஈடுபட்டிருந்தனர். இதனை 'வேலி ஆயிரம் விளையுட் டாக' என்னும் பொருநர் ஆற்றுப்படை அடியால் தெளியலாம்.

இத்தொழிலைத் தலைசிறந்ததாகக் கருதினர் என்பதை 'உழந்தும் உழவே தலை' என்று குறள் கூறுதல் காண்க. ஆடை நெய்வதிலும் வல்லுநர் ஆதலை,

" நூலினும் மயிரினும் நுழைநூல் பட்டினும்
பால்வகை தெரியாப் பன்னூ றடுக்கத்து
நறுமடி செறிந்த அறுவை "

என்று சிலம்பும், 'நீலக் கச்சைப் பூவார் ஆடை' என்று புறநானூறும், "கொட்டைக் கரையப் பட்டுடை" என்று பொருநர் ஆற்றுப்படையும் கூறுதல் காண்க. ஆடைகள் நுண்மை யுடையனவாய் இழை ஓடியது அறியப்படாதனவாய் இருந்தன என்பதை 'நோக்கு நுழைகல்லா நுண்ணிய பூக்கனிந்து அரவுரி அன்ன அறுவை" என்று பொருநர் ஆற்றுப்படை புகல்கிறது.

பெண்கள் நூல் நூற்று வந்தனர் என்பது அவர்கட்கு வழங்கிய பருத்திப் பெண்டிர் என்ற பெயரால் தெளிவாகிறது. அவர்களுள் விதவையர் இதில் பெரிதும் பங்கு கொண்டனர் என்பதை நற்றிணை 'ஆளில் பெண்டிர் தாளில் செய்த நுணங்கு நுண் பனுவல்' என்பதனுலும் தெளியலாம். மக்கள் சட்டை அணிந்திருந்தனர். அது மெய்ப்பை எனப்பட்டது. 'மெய்ப்பை புக்க வெருவரு தோற்றம்' என்பது முல்லைப் பாட்டு. மெய்ப்பைக்குக் கஞ்சுகம் என்ற சொல்லும் இருந்தது. 'கஞ்சுகன் உரைப்போன்,' எனச் சிலம்பும், 'கஞ்சுக முதல்வர்' என மேகலையும் இயம்புதல் காண்க.

ஆடைத் தொழிலே அன்றி, அணிகலத் தொழிலிலும் தமிழக மக்கள் தலைசிறந்திருந்தனர். இத்தொழில் மிக்கு இருந்தமையினைக் காலணிகள் சிலம்பு, பரியகம், நூபுரம், பாடகச் சலங்கை, அரியகம் எனப் பல பெயருடன் விளங்கியதால் அறியலாம். இடை அணி விரிசிகை எனப்பட்டது. வளைகள் மணிவளை, சங்கவளை, பவழவளை முதலியனவாக இருந்தன. கழுத்தணிகளாக வீரச்சங்கிலி, சரப்பளி, சவடி, முதலியன இருந்தன. இங்ஙனம் பல அணிகள் பூண்டு விளங்கினர் தமிழ் மக்கள்.

சிலப்பதிகாரம் இந்திர விழா ஊர் எடுத்த காதையில் பல தொழிலாளர்கள் இருந்ததைக் குறிப்பிட்டுள்ளது.

தமிழ் நாட்டில் வாணிகத்தை நேர்மையான முறையில் நடத்தினர். இவர்கள் செய்த வாணிப முறையினை,

> *“வடுவஞ்சி வாய்மொழிந்து*
> *தமவும்பிறவும் ஒப்பநாடிக்*
> *கொள்வதூஉம் மிகைகொளாது*
> *கொடுப்பதூஉம் குறைகொடாது”*

என்று பட்டினப்பாலை பகர்கிறது. உள்நாட்டு வாணிபமே அன்றி, வெளிநாட்டு வாணிபமும் நடந்து வந்தது. கப்பல் வழியே சென்று வாணிபம் நடத்திய அவர்கள், பல கப்பல்களைக் கொண்டிருந்தமை கொண்டு தெளியலாம். கப்பலுக்குக் கலம், நாவாய், வங்கம் என்ற பெயர் கொடுத்துள்ளார்கள். இவர்களது வெளிநாட்டு வாணிபத்தைப் பற்றிப் பிளினீ, தாலமி முதலான மேற்கு நாட்டவர்கள் தம் குறிப்பில் குறித்துள்ளமை காண்க.

விருந்து புறந்தருதலில் தமிழ் மக்கள் தலைசிறந்தவர்கள். இங்ஙனம் விருந்தினரை உபசரிக்கும் பண்பு பெண்டிரின் சிறப்பாக அக்காலத்தில் இருந்தது. இதனைத் தொல்காப்பியம்,

> *“விருந்துபுறந் தருதலும் சுற்றம் ஓம்பலும்*
> *பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள்”*

என்று சொல்லுகிறது.

சங்க காலத்தில் புலவர்களின் சிறப்புப் பொலிவுற்று விளங்கியது. அவர்கள் வறுமையில் வாடினாலும் பெருமித வாழ்க்கையில் பிழைத்திலர். இதனை,

> *“முற்றிய திருவின் மூவர் ஆயினும்*
> *பெட்பின்றி ஈதல் யாம்வேண் டலமே”*

என்று அவர்கள் பாடிக் களித்திருந்தனர். ஒருமுறை பெருஞ்சித்திரனார் அதியமானிடம் சென்றார். அதுபோது அவன் அவரைக் காணாது பரிசில் மட்டும் பணியாளிடம் அனுப்பியபோது, புலவர்

> *“காணாது ஈத்த இப்பொருட்கு யானோர்*
> *வாணிகப் பரிசிலன் அல்லேன்”*

என்று கூறிப் பரிசில் வாங்காது மீண்டனர். அதியன் பொருள் கொடுப்பத் தாழ்த்தான். அங்கிலையில் ஔவையார்,

"தன் அறி யலன்கொல் என்னறி யலன்கொல்
காவினம் கலனே சுருக்கினெம் கலப்பை
எத்திசைச் செல்லினும் அத்திசைச் சோறே"

எனக் கூறிக் கிளம்பினர்.

இளவெளிமான் பெருஞ் சித்தனுர்க்குச் சிறிது பரிசில் கொடுத்தான். அதனை வாங்க விரும்பாதவராய், 'பெரிதே உலகம் பேணுநர் பலரே,' என்று கூறிப் பொருளை வாங்காது சென்றனர். பின் குமணனிடம் பொருள் பெற்று வந்து இளவெளிமானைக் கண்டு,

"இரவலர் புரவலை நீயும் அல்லை
புரவலர் இரவலர்க் கில்லையும் அல்லர்
இரவலர் உண்மையும் காண் இனி இரவலர்க்
கீவோர் உண்மையும் கான் இனி நின்னூர்க்
கடிமரம் வருந்தத் தந்தியாம் பிணித்த
நெடுநல் யானைஎம் பரிசில்
கடுமான் தோன்றல் செல்வல் யானே"

என்று மீண்டும் வந்து கூறிச் சென்ற புலவரின் பெருமித வாழ்க்கையினைக் காண்மினே காண்மின்!

புலவர்கட்கு அரசர்கள் அக்காலத்தில் பெருமதிப்பு ஈந்தனர்.

முரசு கட்டில் என்பது தெய்வீகமானதாகக் கருதப்பட்டது. அதில் வெற்றித் திருமகள் அமர்ந்திருப்பாளாம். அதில் அரச முரசு வைக்கப்படும். ஒரு முறை மோசிகீரனுர், பெருஞ்சேரல் இரும்பொறை என்னும் சேர மன்னனைக் காணச் சென்றுர். புலவர் வழி நடந்து வந்த இளைப்பால், அம்முரசு கட்டிலில் ஏறி உறங்கலாயினுர். அவர் ஏறிய போது அங்கு முரசு இல்லை. அக்கட்டிலில் எவர் ஏறினும் கொலைத் தண்டனைக்குள்ளாவர். இங்கிலையில் மன்னன் வந்தான். புலவர் உறங்குதலைக் கண்டான். வாளால் அவரை மாய்க்கவேண்டியவன், சிவிறி கொண்டு விசிறி-

ஞன். புலவர் விழித்தார்; மன்னன் செயலைக் கண்டார். கண்டு வியந்து, "அணுக வந்துநின் மதனுடை முழவுத்தோள் ஓச்சித் தண்ணென வீசியோனே' என்று பாராட்டினர். அரசன் செயல் புலவர்கள் மாட்டுக் கொண்ட பெருமதிப்பை உணர்த்துகிறதன்றோ!

ஒரு முறை நலங்கிள்ளியும், நெடுங்கிள்ளியும் போரிட்டனர். இந்நிலையில் கோவூர்கிழார்,

"ஒருவீர் தோற்பினும் தோற்பதுங் குடியே
இருவீர் வேறல் இயற்கையும் அன்றே
குடிப்பொருள் அன்றுநும் செய்தி."

என்று அறிவுரை கூறினர். இருவரும் போரை நிறுத்திக் கொண்டனர்.

கிள்ளிவளவன் மலயமானின் சிறு குழந்தைகளைப் பகைமை காரணமாக யானையால் மிதிக்க ஏற்பாடு செய்தான். அதனை அறிந்த கோவூர் கிழார் அவனிடம் சென்று,

"களிறுகண் டழூஉம் அழாஅல் மறந்த
புன்றலைச் சிறாஅர் மன்றுமருண்டு நோக்கி
விருந்தில் புன்கணோ உடையர்
கேட்டனை ஆயின்நீ வேட்டனை செய்ம்மே."

எனக் கூற, அப் பாலர்களைக் கொல்லாது விடுத்தான் மன்னன்.

நெடுங்கிள்ளி தன்னாட்டுக்கு வந்த இளந்தத்தர் என்னும் புலவரை நலங்கிள்ளியினிடமிருந்து வந்த தூதன் எனக் கருதிக் கொல்ல முனைந்தான். அதுபோது கோவூர் கிழார் அவனிடம்,

"வடியா நாவின் வல்லாங்கு பாடிப்
பெற்றது மகிழ்ந்து சுற்றம் அருத்தி
ஓம்பாது உண்டு கூம்பாது வீசி
வரிசைக்கு வருந்தும் இப்பரிசில் வாழ்க்கை
பிறர்க்குத் தீதறிந் தன்றோ இன்றே"

என்று கூற மன்னன் புலவரை விடுதலை செய்தான்.

கோப்பெருஞ் சோழன் தன் மக்களுடன் போர் செய்ய நேர்ந்தது. இதனை அறிந்த புல்லாற்றூர் எயிற்றியனுர் அரசனிடம் சென்று,

"எண்ணில் காட்சி இளையோர் தோற்பின்
நின்பெருஞ் செல்வம் யார்க்கெஞ் சுவையே
அமர்வெஞ் செல்வ! நீஅவர்க் குலையின்
இகழுநர் உவப்பப் பழிஎஞ் சுவையே
அதனால்,
ஒழிகதில் அம்மநின் மறனே"

என்னலும், மன்னனும் போரை நிறுத்தினுன்.

இவற்றினும் வேறு சான்றுகள் புலவர்கட்கு அந்நாள் இருந்த பெருமிதத்திற்கு வேண்டுமோ? அக்காலத்தில் மன்னர்கள் தம்மைப் புலவர்கள் பாடுதலையே ஒரு சிறப்-பாகக் கருதி வந்தனர். புலவர் பாடும் புகழுடையோர் என்ற சிறப்புப் பெறவே எண்ணினர்.

புலவர்கள் அக்காலத்தில் தம் நலத்தினும் பிறர் நலத்-தின் பொருட்டே பாடுபட்டனர். பேகன் என்பான் தான் மணந்த மனைவியை விட்டு, வேருெருத்திபால் வாழலாகுன். அதனை அறிந்த புலவர்களான கபிலர், பாணர், அரிசில் கிழார், பெருங்குன்றூர் கிழார் பேகனிடம் சென்று பாடி அவனை அவளிடம் செல்லுமாறு முயன்றுள்ளனர். அம் முயற்சியில் தமக்காக வேண்டாது பேகன் மனைவியின் பொருட்டு வேண்டி நின்றனர்.

"பசித்து வாரேம் பாரமும் இலமே
அறம்செய் தீமோ அருள்வெய் யோயேஎன
இஃதுயாம் இரந்த பரிசில் அஃதருளின்
இனமணி நெடுந்தேர் ஏறி
இன்னு துறைவி இரும்படர் களைமே."

என்று பரணரும்,

"அன்ன வாகனின் அருங்கல வெறுக்கை
அவைபெறல் வேண்டேம் அடுபோர்ப் பேக!
அருந்துயர் உழக்குந்நின் திருந்திழை அரிவை

தண்கமழ் கோதை புனைய
வண்பரி நெடுந்தேர் பூண்கநின் மாவே."

என்று அரிசில் கிழாரும்,

"அரிமதர் மழைக்கண் அம்மா அரிவை
புதுமலர் கஞல இன்று பெயரின்
அதுமன் எம் பரிசில் ஆவியர் கோவே."

என்று பெருங்குன்றூர் கிழாரும் பாடிய பாடல்களைக் காண்க.

புலவர்கட்குப் பெரும் பொருள் மன்னர்கள் ஈந்துள்ளனர். ஏன்? தன் மகனையே புலவர்க்கு ஈந்த மன்னனும் உண்டு. இக்குறிப்பினைப் பதிற்றுப் பத்து மூலம் பரக்கக் காணலாம். பரணருக்குக் கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன் தன் மகன் குட்டுவன் சேரல் என்பானைத் தந்தனன்.

பொருள் கொடுக்க இயலாத நிலையில் தன் தலையையும் கொடுத்தனன் அக்காலச் சிற்றரசன். இதனைக் குமணன் வரலாற்றில் காணலாம். இளங்குமணன், தன் அண்ணன் தலையினைக் கொணர்வார்க்கு ஆயிரம் பொற் காசு அளிப்பதாகக் கூறி இருந்தனன். இந்நிலையினை அறியாத வறுமையுற்ற பெருந்தலைச் சாத்தனார் குமணனைக் காண வந்தார். அவன் காட்டில் இருப்பதை அறிந்தார். அங்குச் சென்று அவனைச் சந்தித்தார். அதுபோது குமணன் புலவர்க்குப் பொருள் தரும் நிலையில் இல்லாதவனாக இருந்தும், தன் தலையினை வெட்டித் தம்பி கையில் கொடுத்துப் பொருள் பெறும்படி தன் வாளை ஈந்து வெட்ட வேண்டினான். புலவர் உடனே வாளைப் பெற்று இளங்குமணனிடம் சென்று,

"பாடுபெறு பரிசிலன் வாடினன் பெயர்தல்
நாடுஇழந் ததனினும் நனிஇன் னாதென
வாள்தந் தனனே தலைஎனக் கீய"

என்று பாடிக் குமணனது கொடையினைச் சிறப்பித்தனர்.

வறுமையில் வள்ளலாகத் திகழ்ந்தவர்களும் புலவர்கள். பெருந்தலைச் சாத்தனார் தம் வறுமை நிலையை,

"ஆடுநனி மறந்த கோடுயர் அடுப்பின்
ஆம்பி பூப்பத் தேம்பசி உழவாப்

பாஅல் இன்மையின் தோலொடு திரங்கி
இல்லி தூர்ந்த பொல்லா வறுமுலை
சுவைத்தொறும் அழூஉம்தன் மகன்."

எனப் பாடியுள்ளனர். இத்தகையவருக்குக் குமணனால் பெரும் பொருள் கிடைத்தது. அப் பெரும் பொருளைப் பெற்ற அவர், தம் மனைவியாரிடம்,

" நின்னயந் துறைநர்க்கும் நீநயந் துறைநர்க்கும்
பன்மாண் கற்பினின் கிளைமுத லோர்க்கும்
கடும்பின் கடும்பசி தீர யாழநின்
நெடுங்குறி எதிர்ப்பை நல்கி யோர்க்கும்
இன்னோர்க் கென்னாது என்னொடும் சூழாது
வல்லாங்கு வாழ்தும் என்னாது நீயும்
எல்லார்க்கும் கொடுமதி மனைகிழ வோயே."

என்று கூறினர். இதனினும் வறுமையினும் செம்மை சான்ற சான்றோர்களாக அக்காலத்துப் புலவர்கள் வாழ்ந்தனர் என்பதற்கு வேறு சான்றுகள் வேண்டுமோ?

இன்னோரன்ன சான்றுகளால் சங்ககால மக்கள் வாழ்க்கை இனிது விளங்குகின்ற தன்றோ! இனி இவர்களின் மொழியாம் தமிழைப்பற்றியும் அறிந்து கொள்வோமாக.

2. முத்தமிழ்

இயல்

பழங்காலச் சங்கத்தின் வழி முத்தமிழ் வளர்ந்தன. முத்தமிழ் ஆவன இயல், இசை, நாடகம் என்பன. இம் முத்தமிழ்க்கும் இலக்கண, இலக்கியங்களும் உண்டு. இம்முத்தமிழும் ஒன்றை ஒன்று தழுவித் தமிழ் மொழிக்கு இன்றி அமையாதனவாக இருக்கின்றன. இவ்வாறு தமிழ் மொழி ஒரு தொகையாக வழங்கி வருதலைப்போல் வேறு எந்த மொழியிலும் காண இயலாது. முத்தமிழ் பற்றிய குறிப்புக்கள் இலக்கியங்களில் காணப்படுகின்றன. 'குடக்கோ முனிச் சேரன் தண்டா உரை முத்தமிழ்' என்பது சிலம்பின் சிறப்புப்பாயிரம். "சோற்றுப் பெருக்கல்லவோ தமிழ் மூன்றுரை சொல்வித்ததே" என்பது அடியார்க்கு நல்லார் உரை. "சங்கத் தமிழ் மூன்றும் தா" என்பது ஔவையார்

வாக்கு. பின் வந்த பிரபந்தங்களில் முத்தமிழ்க்கான குறிப்பைக் காணலாம். முத்தமிழும் ஒருங்கு சேர்ந்த நூலாகச் சிலப்பதிகாரம் இன்றும் விளங்கிக் கொண்டிருக்கிறது.

இயல் தமிழ் என்பது இயல்பான தமிழாகும். இயல் தமிழில் இசையும், தாளமும் கலக்கப் பெறுமானுல், இசைத் தமிழாகும். இசைத் தமிழுடன் ஆட்டம் சேரின், நாடகத் தமிழ் ஆகும். இயல் தமிழ் மனத்துக்கு இன்பம் தரும். இசைத் தமிழ் காதுக்கு இனிமை தரும். நாடகத் தமிழ் கண்ணுக்கும், காதிற்கும் மகிழ்வு தரும்.

இயல் தமிழ் இலக்கணம் ஐந்து வகைப்படும். அவை எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்பன. பொருள், இலக்கணம் அகப்பொருள், புறப்பொருள் என இருவகைப்படும். இவ்வைந்து இலக்கணங்களையும் கூறும் நூல்கள் தொல்காப்பியம், அவிநயம், வீர சோழியம், இலக்கண விளக்கம், தொன்னூல், முத்து வீரியம் என்பன.

இவற்றுள் அவிநயம் என்பது அவிநயனுரால் இயற்றப் பட்டது. இவரை அகத்தியர் மாணவர் என்பர். இந்நூலில் இருந்து பல நூற்பாக்களை மயிலைநாதர் தம் நன்னூல் உரையில் எடுத்துக் காட்டியுள்ளனர். இந்நூலுக்கு இராச பவித்திர பல்லவ தரையர் பதவுரை எழுதியுள்ளனர். நன்னூலிலும் அவிநயனுர் கருத்துக்கள் உண்டு. அவிநயனுர் சமணராகக் கருதப்படுகின்றனர். யாப்பருங்கல விருத்தியிலும் இவரது நூற்பாக்களின் மேற்கோள்கள் உள. இவர் விருத்தத்திற்கு இலக்கணம் கூறுகிறுர். ஆகவே, இவர் அகத்தியர்க்கு மாணவர் என்றற்கு இல்லை. இவர் கி.பி. 9-ஆம் நூற்றுண்டினர் என்பது அறிஞர்களின் துணிபு.

முத்து வீரியம்: இதனை இயற்றியவர் முத்து வீரிய பாண்டியன் என்பவர். இவர் பொற்கொல்லர் மரபினர். ஊர் உறையூர். காலம் கி. பி. 19-ஆம் நூற்றுண்டு. பிற இலக்கண நூற்களைப் பற்றிப் பின்னர் அறிவோம்

இயற்றமிழ்க்கு இலக்கியங்கள் சங்க நூற்களும், பிற்கால நூல்களும் ஆகும். இவற்றுள் பலகாவிய நூல-

களும் அடங்கும். சைவ, வைணவ, சைன, பௌத்த, முஸ்லீம், கிறித்தவ மக்களாலும் இயற்றப்பட்ட நூற்களும் இக்காலத்தில் வெளிவரும் நூல்களும் இயற்றமிழில் சேர்க்கப்படும்.

இசை

இசைத் தமிழ்க்குரிய இலக்கண நூல்களும், இலக்கிய நூல்களும் பெருநாரை, பெருங்குருகு, இசை நுணுக்கம், தாளசமுத்திரம், சச்சபுட வெண்பா, பதினாறு படலம், தாள வகை ஒத்து, இசைத்தமிழ் செய்யுட்கோவை, இந்திர காளியம், பஞ்சமரபு, பஞ்சபாரதீயம், தேவாரம், திரு-விசைப்பா, நாலாயிரப் பிரபந்தங்கள் முதலானவை.

பெருநாரை இசைத்தமிழ் நூல் என்பது மட்டும் அறியப் படுதலே அன்றி, வேறு குறிப்பு ஒன்றும் அறிதற்கு இல்லை. இது முதுநாரை என்றும் கூறப்பெறும். இதைப்போன்றதே பெருங்குருகு என்பதும். இது முதுகுருகு எனப்படும். பஞ்ச-பாரதீயம் என்பதைத் தேவ இருடி நாரதன் என்பவர் செய்-தனர் என்பர். பஞ்சமரபு என்பது அறிவனார் என்பவரால் இயற்றப்பட்டது. இசை நுணுக்கம் அகத்தியரது மாண-வருள் ஒருவரான சிகண்டி என்பவரால் சயந்த குமாரன் இசை அறிவு பெற இயற்றப்பட்டது. இது வெண்பாவால் அமைந்தது. தாள சமுத்திரத்தைப் பரத சூடாமணி என்-பவர் இயற்றினார் எனக் கூறுவர். இதுவும் வெண்பாவால் ஆயது. இந்திரகாளியம் யாமளேந்திரரால் இயற்றப்பட்டது. இந்நூலைப் பற்றிய மற்றைய குறிப்புக் கிடைத்திலது. தேவா-ரம், பிரபந்தங்களைப் பற்றிப் பின்வரும் இடங்களில் காண்க. இக்காலத்தில் சுரமாக உள்ள ஸட்ஜம், ரிஷபம், காந்தாரம், மத்தியமம், பஞ்சமம், தைவதம், நிஷாதம் என்பனவற்றிற்கு அக்காலத்தில் குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என வழங்கப்பட்டன. இவ்வேழினின்று தோன்றியவை பண்களும், திறன்களும் ஆகும். நிறை நரம்புடையது பண். குறை நரம்புடையது திறன். பண்-களின் பெயர்களுள் சில: கொல்லி, சீகாமரம், செவ்வழி, கௌசிகம், பஞ்சமம், செந்துருத்தி, வியாழக்குறிஞ்சி, தக்கேசி, காந்தார பஞ்சமம், பழம்பஞ்சுரம், சாதாரி, புற-நீர்மை, மேகராகக் குறிஞ்சி, அந்தாளிக்குறிஞ்சி, குறிஞ்சி, பழந்தக்கராகம், கொல்லி, கொல்லிக் கௌவாணம் நட்ட-ராகம் ஆகியவை. இவற்றை இக்காலத்தில் முறையே,

நவரோசு, நாதநாமக்கிரியை, யதுகுல காம்போதி, பைரவி, ஆகிரி, மத்தியமாவதி, காம்போதி, கேதாரகௌளம், சங்கராபரணம், பந்துவராளி, பூபாளம், நீலாம்பரி, சாமா, அரிகாம்போதி, அரபி, நவரோசு, பந்துவராளி என்னும் ராகப் பெயரால் பாடுகின்றனர்.

பண்களை இராப்பண், பகற்பண் என்றும் கொண்டனர். காலைப்பண்ணும், பகற்பண்ணும் உண்டு. விளரிப்பண் இரங்கல் குறிப்பை உணர்த்தும். இன்னின்ன யாமத்திற்கும் இன்னின்ன பண் என்பதும் உண்டு. ஒன்பான் சுவைக்குரிய பண்களும் உண்டு. அக்காலத்தில் பண் அமைந்த பாடல்கள் உருக்கள், வரிகள் என்று அழைக்கப்பட்டன. இக்காலத்தில் இவை கீர்த்தனங்கள் எனப்படும். பெருந்தேவபாணி, சிறுதேவபாணி, பெருவண்ணம் என்பன இசைப்பாடல்கட்கு உரிய பெயர்கள். தமிழ் இசை பொருந்திய பாக்கட்கு வன்மையுண்டு. மேகராகக்குறிஞ்சிப் பண்ணுள்ள தேவாரத்தைப் பாடவைத்து, மழை இல்லாத காலத்து மழை பொழிவித்த பெருமை திருவாவடுதுறை ஆதீன கர்த்தர் ஸ்ரீலஸ்ரீ திருச்சிற்றம்பல தேசிக குருமகா சந்நிதானத்திற்கு உண்டு. கண்ணிகளும் இசையைச் சார்ந்தவையே. பிற்காலத்துத் தோன்றிய திருப்புகழ், சிந்து முதலியனவும் இசைத்தமிழ் இலக்கியங்களே.

இசைக்குரிய கருவிகள் குழல், யாழ், முழவு, மத்தளம், சல்லிகை, ஆவஞ்சி, இடக்கை, கரடிகை, துடி, முரசு கொம்பு, பறை, கஞ்சதாளம், நெடுவங்கியம், குறுந்தூம்பு, தட்டை, சல்லி, மாக்கிணை முதலான பலவாகும். ஈண்டுக் காரைக்கால் அம்மையார் பாடியுள்ள

“துத்தம்கைக் கிள்ளை விளரி தாரம்
உழைஇளி ஓசைபண் கெழுமப்பாடிச்
சச்சரி கொக்கரை தக்கை யோடு
தகுணிதம் துந்துபி தாளம் வீணை
மத்தளம் கரடிகை வன்கை மென்தோல்
தமருகம் குடமுழா மொந்தை வாசித்
தத்தனை விரவினோ டாடும் எங்கள்
அப்பன் இடந்திரு ஆலங் காடே”.

என்னும் பாடலை நினைவு கூர்வோமாக.

இசை பற்றிய குறிப்புக்கள் தொல்காப்பியத்தில், 'இசையொடு சிவணிய நரம்பின் மறைய' என்றும், 'யாழின்' என்றும், 'துறையமை நல்யாழ்' என்றும், 'பாட்டின் இயல்பே பண்ணத்தின் இயல்பே" என்றும் குறித்தல் காண்க. கலிப்பாட்டில் வரும் அராகம் தமிழ் இசைக் குறிப்பே ஆகும். ஆடும்போது தாளால் தாளம் இட்டமையின் தாளம் என்றும், பண்ணிற்காகக் கையில் தாளம் போட்டதால் பாணி என்றும் பெயர் அமைத்துக்கொண்டனர் தமிழர். இசைக் கருவிகள், தோல்கருவி, துளைக் கருவி, நரம்புக்கருவி, கஞ்சக்கருவி என நான்காகப் பகுக்கப்பட்டன.

ஐந்து வகை யாழ்கள் இருந்தன. அவை பேரியாழ் 21 நரம்புடையது. மகரயாழ் 19 நரம்புடையது. சகோட யாழ் 14 நரம்புடையது. செங்கோட்டியாழ் 7 நரம்புடையது. சுரையாழ் ஒரு நரம்புடையது. இக்காலத்தில் பிடில் எனப்படுவது, அக்காலத்தில் கின்னரி, கின்னரம் எனப்பட்டது. இந்த இசைகளை எல்லாம் வளர்த்தவர் பாணர்களே ஆவார்.

ஆதியாழ் என ஓர் யாழ் இருந்ததாகவும் அறிகிறோம். அஃது ஆயிரம் நரம்புடையதாம். அதனை அருங்கலம் என்றும் அழைத்தனர். இன்ன காலத்துக்கு இன்ன யாழ் வாசித்தல் என்ற முறையும் அக்காலத்தில் இருந்தது. "யாம நல்யாழ் நாப்பண்" என்று மதுரைக் காஞ்சியிலும், 'நல்யாழ் யாமம் உய்யாமை' என நற்றிணையிலும் கூறப்பட்டிருத்தல் காண்க.

நாடகம்

நாடகத்தமிழ் உண்மை, "நாடக வழக்கினும், உலகியல் வழக்கினும், பாடல் சான்ற புலனெறி வழக்கம்" என்றும், கூத்தர், விறலியர் என்றும், தொல்காப்பியம் கூறுதலால் அறியலாம். நாடகத்தைப் பற்றிய குறிப்புக்கள் இலக்கியங்களில் பல உண்டு. "பாடல் ஓர்த்தும், நாடகம் நயந்தும்" என்பது பட்டினப்பாலை. "கூத்தாட்டு அவைக்களம்" என்பது குறள். "நாடகம் கண்கனியக் கவர்ந்-

துண்டு, "கிளை நரம்பிசையும், கூத்தும் நாடகம் இயற்று-கின்றூர்" என்பன சீவக சிந்தாமணி. "பாட்ல்சால் சிறப்பில் பரதத் தோங்கிய நாடகம்", "நாடகக் காப்பிய நன்னூல்" என்பன மணிமேகலை. அரங்கேற்றுக்காதை சிலம்பில் அமைந்து, நாடகத்தின் பெருமையினைக் காட்டி நிற்கிறது. "நயத்திரம் பொருந்த நாடகம் கண்டும்" என்றுவரும் மணி-மேகலை அடியினையும் காண்க. "நாடகத்தால் உன்னடியார் போல் நடித்து" என்பது மணிமொழியார் வாக்கு. "நாடகம் கண்டார்க்கு இன்பம் செய்வதாகும்" என்று பேராசிரியர் கூறியுள்ளார். இந்நாடகம் மத சம்பந்தமாகவும், பெரியோர் வரலாற்றுத் தொடர்பாகவும் நடிக்கப்பட்டது. செய்யுளும் உரைநடையும் கலந்திருந்த நாடகம் கூத்து என்ற பெயரா-லும் வழங்கப்பட்டது. நடிப்போர் கூத்தர், பொருநர், கோடியர், விறலியர் எனப்பட்டனர்.

பொழுது போக்கவும், அயர்ச்சியை நீக்கவும் நாடகம் நடிக்கப்பட்டது. செங்குட்டுவன் கண்ணகிக்குக் கல் கொணர்ந்தபின் நாடக அரங்கில் ஓர் ஆதனத்தில் தன் வாழ்வரசியுடன் இருந்தபோது, பறையூர் நாடக வல்லான் கூத்தச்சாக்கையன் சிவபெருமான் ஆடல்களுள் ஒன்றூன கொடுகொட்டி நாடகத்தை நடித்துக் காட்டினுன் எனச் சிலம்பு செப்புகிறது. நன்றியறிதலை அறிவிக்கும் முறையில் நாடகம் நடத்தப்பட்டதாகத் தெரிகிறது. சீவகனுக்குச் சுதஞ்சனன் பேருதவி புரிந்தவன். ஆகவே, அவன் வரலாற்றை நாடகமாக நடத்துமாறு சீவகன் ஏற்பாடு செய்ததையும் ஈண்டைக்கு நினைவு கொள்ளலாம்.

நாடக அரங்குமுறை பற்றித் தமிழர் நன்கு கவனம் செலுத்தியுள்ளனர். தூய்மையான இடத்தில் அரங்கத்தை அமைத்தனர். ஓவியம், விளக்கு, தூண்கள் நன்கு அமையக் கவனம் செலுத்தினர்.

விளக்கு ஒளிவிட்டு எரியும்போது, அரங்க மேடையின் தூண்களின் நிழல் அரங்கில் விழாதபடி அப்பால் விழும்படி அமைத்தனர். திரைகள் நன்கு வண்ணத்தால் உருவங்-ளுடன் திகழ்ந்து, ஒருமுக எழினி, பொருமுக எழினி, கரந்துவரல் எழினி என்ற பெயரால் இருந்தன. கரந்துவரல்

எழினி என்பதே இக்காலத்தில் கூறப்பெறும் Trickish scene போன்றது. இந்தக் குறிப்புக்கள் சிலம்பால் அறிய வருகின்றன.

நாடகம், அகக்கூத்து, புறக்கூத்து, வேத்தியல், புற-வியல், சாந்திக் கூத்து, விநோதக் கூத்து, ஆரியக் கூத்து, தமிழ்க் கூத்து, இயல்புக் கூத்து, தேசியக் கூத்து எனப் பல பிரிவுடன் திகழ்ந்தது. இதனால் நாடகத் தமிழின் சிறப்பு இன்னது என்பதை உணர்ந்து கொள்ளலாம்.

அபிநயம் பிடிக்கையில் காட்டப்படும் கைகளை ஆண்கை, பெண்கை, அலிக்கை, பொதுக்கை, எழிற்கை, தொழிற்கை, பொருட்கை எனவும் கூறிவந்தனர். நின்று ஆடல், வீழ்ந்தாடல் எனவும் பாகுபடுத்திக் கொண்டனர்.

ஆட்டத்தின் பெயர்களாகச் சில காணப்படுவன. அல்லியம், கொடுகொட்டி, குடை, குடம், பாண்டரங்கம், மல், துடி, கடையம், பேடு, மரக்கால், பாவை என்பன. இவை இறைவன், திருமால், முருகன் முதலான தெய்வங்-களால் ஆடப்பட்டன. இத்தகைய குறிப்புக்கள் சிலப்-பதிகாரத்தில் கூறப்பட்டுள்ளன.

நாடகத்தில் பாடப்படும் பாட்டு உரு என்று அக்-காலத்தில் வழங்கப்பட்டது. இக்காலத்தில் அஃது உருப்படி எனப்படுகிறது.

நாடகத்தைப் பற்றிய பழம்பெரும் நூல்கள் பரதம், அகத்தியம், முறுவல், சயந்தம், குணநூல், செயிற்றியம், பரத சேனாபதீயம், மதிவாண நாடகத் தமிழ்நூல் முத-லானவை. பரதம், முறுவல், சயந்தம், குணநூல் இவை பற்றி ஒன்றும் அறிதற்கில்லை.

செயிற்றியம் என்பது செயிற்றியனார் என்பவரால் இயற்றப்பட்டது. சூத்திர யாப்பால் இயன்றது.

பரத சேனாபதீயம் என்பது வெண்பாவால் இயன்ற நாடக நூல். இதனை ஆதிவாயிலார் என்பவர் இயற்றினார்.

மதிவாண நாடகத்தமிழ் நூல் என்பது நூற்பாவாலும், வெண்பாவாலும் ஆன நாடக நூல். இதனை மதிவாணர் என்பவர் இயற்றினார்.

கலை நூல்கள்

அளவை நூல்: இதனைத் தருக்க நூல் என்னலாம். இது தமிழ் மொழியில் அமைந்தது. இது கட்டளைக் கலித்-துறையால் ஆனது.

எண்ணூல்: கணக்குப் பற்றிய கலை நூல். இவ்வகை-யைச் சார்ந்த எண் சுவடி, குழிமாற்று முதலான நூல்களும் உண்டு.

ஓவிய நூல்: இது சித்திரம் வரைதலைப் பற்றி அறிவிப்பது. இந்நூல் உண்மையினை 'ஓவியச் செந்நூல்' என மணிமேகலை அறிவிக்கிறது. இக்கலையினை உணர்ந்த-வர்களை மணிமேகலை, "வித்தகர் இயற்றிய விளங்கிய கைவினைச் சித்திரம்," என்கிறது.

கரவட நூல்: திருடுவது எப்படி என்பதை அறிவிக்-கும் நூல். இது குறித்தே "களவும் கற்று மற" என்ற பழமொழி எழுந்தது போலும்! இந்நூலை எழுதியவர் கருணீசுதர் எனத் திரு. டாக்டர் ஐயர் அவர்கள் கூறியுள்ளனர். திருட்டை அறிந்து திருட்டைக் கண்டு பிடிக்க, இஃது இயற்றப்பட்டதாம். இந்தக் கரவட நூலின் குறிப்பே, சிலம்பில் "மந்திரம் தெய்வம் மருந்தே நிமித்தம் தந்திரம் இடனே காலம் கருவி-என்று எட்டுடன் அன்றே இழுக்குடை மரபில் கட்டூண் மாக்கள் துணை எனத் திரிவது" என்று கூறுகிறது. மதுரைக் காஞ்சியில் கள்வரது தோற்றத்தை, "இரும்பிடி மேஎந்தோல் அன்ன இருள்சேர்பு, கல்லும் மரனும் துணிக்கும் கூர்மைத் தொடலை வாளர் தொடுதோல் அடியர், குறங்கிடைப் பதித்த கூர்நுனிக் குறும்பிடிச் சிறந்த கருமை நுண்வினை நுணங்-கற, நிறம் கவர்பு புனைந்த நீலக் கச்சினர், மென்னூல் ஏணிப் பலமாண் சுற்றினர், நிலன் அகழ் உளியர் கலன் அசை இக்-கொட்கும் கண்மா றூடவர்" என்று கூறுகிறது. இவ்வாறு கள்வர் இருத்தலைக் கரவட நூலால் அன்றி, வேறு எங்ஙனம் தெரிய இயலும்?

கனு நூல்: இது கனவின் பயனை அறிவிக்கும் நூல். கட்டளைக்கலித் துறையால் ஆனது. இதுபற்றி வேறு குறிப்பு அறிதற்கு இல்லை. இந்நூலின் பயனும், சிறப்பும்

சீவகனது தாய் கண்ட கனவிற்கும் சச்சந்தன் பயன் கூறியதனுலும் அறியப்படுகின்றன.

பரிநூல்: இதனை வடமொழியார் அசுவநூல் என்பர். அதாவது குதிரையின் இலக்கணமும், இன்னின்ன இலக்கணமுடைய குதிரைகளைப் பெற்றிருப்பவர் இன்னின்ன பலனை அடைவர் என்பதும் இதில் கூறப்படும். இந்த உண்மையினை மாணிக்க வாசகர் வரலாற்றில் வரும் குதிரைகளைப்பற்றிக் கூறும் கல்லாடம், வாதவூரர் புராணம், திருவிளையாடற் புராணம் ஆகிய நூல்களில் காணலாம். இவ்வாறு கூறுதற்குக் காரணம், பரிநூல் என ஒரு நூல் இருந்ததனுல் என்பது பெறப்படுதல் காண்க.

சிற்ப நூல்: இதனைச் சிற்ப சாத்திரம் என்பர் வடமொழியார். இந்நூல்வழி கோவிலோ, அரண்மனைகளோ, கட்டடங்களோ கட்டப்படும் போது, இன்னின்ன இவ்விவ் இடங்களில் இருக்க வேண்டும் என்று எடுத்து இயம்பும். இங்ஙனம் அமையாதேல், அவை விரைவில் நாசமுறும். இவை போன்ற குறிப்புகளைத் தரும் நூல் இது. இந்நூலினை நன்குணர்ந்ததனுல்தான், சேக்கிழார் பெருமானுர், பூசலார் நாயனுர் புராணத்துள், "அடிநிலை பாரித்து" என்றும், "அடி முதல் உபானம் ஆதி ஆகிய படைகள் எல்லாம் வடிவுறும் தொழில்கள் முற்ற" என்றும், "மானமுடிவுறு சிகரம்" என்றும்,

"தூபியும் நட்டு மிக்க சுதையும்நல் வினையும் செய்து
கூவலும் அமைத்து மாடு கோவில்சூழ் மதிலும் போக்கி
வாவியும் தொட்டு மற்றும் வேண்டுவ வகுத்து மற்றும்
தாபரம் சிவனுக் கேற்க விதித்தநாள் சாரும் நாளில்"

என்றும் பாடியுள்ளார்.

நிமித்த நூல்: இது சகுன நூல் எனப்படும். இதனை வடமொழியார் சகுன சாஸ்திரம் என்பர். சிலம்பு நிமித்த உண்மையினை "இமில் ஏறு எதிர்ந்தது இழுக்கு," என்கிறது. கட்சியுள் காரி கலுழ்தலும், நன்சொல் கேட்டலும் சகுனமாகக் கருதப்பட்டன. இதனை முறையே, புறப்பொருள் வெண்பாமாலையிலும், முல்லைப்பாட்டிலும்,

"நெடிபடு கானத்து நீள்வேள் மறவர்
அடிபடுத் தார்அதர் செல்வான்—துடிபடுத்து
வெட்சி மலைய விரவார் மணிநிரைக்
கட்சியுள் காரிகலு ழும்"

என்றும்,

"எழுவணி சீரூர் இருள்மாலை முன்றில்
குழுவினம் கைகூப்பி நிற்பத்—தொழுவில்
குடக்கள்நீ கொண்டுவா என்றாள் குனிவில்
தடக்கையாய் வென்றி தரும்"

என்றும்,

"இன்னே வருகுவர் தாயர் என்போன்
நன்னர் நன்மொழி கேட்டனம்"

என்றும் கூறப்படுதல் காண்க. இவ்வாறு கூறுதற்குக் காரணம் நிமித்த நூல் உண்மையால் என்க.

புதையல் நூல்: இஃது இன்ன இடத்தில் இன்ன பொருள்களைத் தோண்டிப் பெறலாம் என்பதை உணர்த்தும் நூல். இதனால் பழங்காலத்தில், இக்காலத்தில் பேசப்பெறும் Geology அறிவு அக்காலத்திலும் இருந்தது என்பதை அறிந்து இன்புறுவோமாக. உதயணன் கதை என்னும் நூல், உதயணனுக்கு இந்நூலில் நல்ல புலமை உண்டு என்பதைத் தெரிவிக்கிறது.

மடை நூல்: சமையல் முறைகளை அறிவிக்கும் நூல். இதுபோது இது பாக சாத்திரம் என்ற பெயரால் உரை நடையில் விளங்கிக் கொண்டிருக்கிறது. மடை நூல் இருந்த உண்மை 'மடைநூற் செய்தி' என்ற தொடர் மணிமேகலையில் காணப்படுதலாலும், 'நுண் பொருள் பனுவலின் வழாஅப் பல்வேறு அடிசில்' என்று சிறு பாணாற்றில் வரும் அடிக்கு உரை செய்த நச்சினார்க்கினியர், "கூறிய பொருளையுடைய மடை நூல் நெறியில், தப்பாத பல வேறுபாட்டையுடைய அடிசிலை" என்று எழுதியிருப்பதாலும் அறிந்து கொள்ளலாம்.

யானை நூல்: இது யானையின் வளர்ப்பு, யானையைப் பிடிக்கும் முறை, அதன் உணவு, அதற்கு வரக்கூடிய நோய்,

அந்நோயைத் தீர்க்கும் முறை, அதனைப் செயல்படுத்தும் முறைகள் முதலானவற்றை அறிவிக்கும் நூல்.

இங்ஙனம் பல்கலைகட்கும் நூல்கள் தமிழில் இருந்தன. அவை தமிழரது கவனக் குறைவாலும், எரியாலும், செல்லாலும் அழிந்து போயின. இது தமிழர்களது தவக் குறைவே ஆகும்.

தமிழ் இலக்கியங்களில் காணப்படும் சில அரிய குறிப்புக்களால், தமிழ் மக்களது தொழில் நுட்பக் கலையின் அறிவினை நாம் வியக்காமல் இருக்க முடியாது.

இக்காலத்தில் Government Meteorological Dept. பொழுதை அளத்தலையும், தட்பவெப்ப நிலைகளை அறிந்து, அளந்து கூறுதலையும் நாம் அறிகிறோம். இந்த விதமான செயலை, நாழிகைவட்டில் எனபதைக் கொண்டு தமிழர் நடத்தினர். இதனை முல்லைப் பாட்டில் "பொழுது அளந்து அறியும் பொய்யா மாக்கள்" என்றும், "குறுநீர்க் கன்னல் இனைத்தினைத் தென்றிசைப்ப" என்றும், "நாழிகை இசைப்ப" என்று அகநானூற்றிலும், "நாழிகைக் கணக்கர்" என்று சிலம்பிலும், "குறுநீர்க் கன்னலின் யாமம் கொள்பவர்" என்று மணிமேகலையிலும் வருதல் காண்க. காலேந்திரம் என்ற இயந்திரம் பெருங்கதை நூலில் பேசப்படுகிறது. இது காலத்தை அறிவிக்கும் கருவி.

பழங்காலத்தில் கடிகாரம் கடிகையாரம் என்று வழங்கப்பட்டது. அதனைக் கறுப்புக் கயிற்றால் கட்டி ஆரமாக மார்பில் அணிந்திருந்தனர். சிலகாலங்கட்கு முன்பு பெரிய மனிதர்கள் நம் நாட்டிலும் இவ்வாறு அணிந்திருந்தனர். இதுபோது சில நாகரிகர் மூக்குக் கண்ணாடியினை இவ்வாறு அணிந்திருத்தல் உண்டு. கடிகை ஆரத்தினைச் சண்ட மகாசேனர் தம் கழுத்தில் அணிந்திருந்தார் எனப் பெருங்கதை என்னும் நூல் கூறுதலால் அறியலாம்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் இறைவனிடம் பல பொருள்களைத் தமக்குக் கொடுக்க வேண்டினர். அவற்றுள் ஒன்று "காம்பினொடு நேத்திரங்கள் பணித்தருள வேண்டும்" என்பது. ஈண்டுக் காம்பினொடு நேத்திரங்கள் என்பது

நல்ல frame இட்ட cooling glass என்பதாகும். ஆகவே, அக்காலத்தில் மூக்குக் கண்ணாடி அணிந்தமை அறிக.

இக்காலத்தில் போரில் போரிடப் பல பொறிகள் கையாளப்படுகின்றன. அக்காலத்திலும் " நூற்று வரைக் கொல்லி, பரிவுறு வெங்நெய், பாகடு குழிசி, கல்லிடு கூடை, ஆண்டலை அடுப்பு, தூண்டில் தொடக்கு, கைபெயர் ஊசி, சென்றெறி சிரல், கோல் குந்தம்" முதலானவற்றைப் பயன்படுத்தினர். இதன் விளக்கத்தைச் சிலம்பில் காண்க.

Light House என்பது இக்காலத்தில் கலங்கரை விளக்கம் என்னும் பெயருடன் இருப்பதைக் காண்கின்றோம். இவ்வமைப்பு நமது பண்டைக் காலத்து அமைப்பே ஆகும். இதனை,

" விண்பொர நிவந்த வேயா மாடத்து
இரவில் மாட்டிய இலங்குசுடர் ஞெகிழி
உரவுநீர் அழுவத்து ஓடுகலங் கரையும்"

என்று பெரும்பாணாற்றுப் படையிலும், " இலங்கு நீர் வரைப்பில் கலங்கரை விளக்கமும்," என்று சிலம்பிலும் வருதல் காண்க.

இக் காலத்தில் Under-ground drainage எனப்படும் கழிநீர் செல்லக் கட்டப்படும் அமைப்பு, பழங்காலத்தில் கரந்து படை எனப்பட்டது. இது தெரு நடுவில் அமைந்தது. கருங்கல்லால் மூடப்பட்டது. இக் காலத்தில் இரும்பு வட்டக் கருவியால் மூடப்பட்டுள்ளது.

புதுவையில் Glass House என்ற கண்ணாடி மண்டபத்தைக் கண்டு களிப்புறுகிறோம். இது போன்ற அமைப்பே மணிமேகலையில் கூறப்பெறும் பளிங்கு மாளிகையாகும்.

இக் காலத்தில் நீரைக் குறைத்தும் பெருக்கியும், அலங்காரமாக வெளியிடும் நீர்ஊற்றினை Fountain என்கிறோம். இது பெரிதும் சோலைகளில் இருப்பதையும் அறிகிறோம். இவ்வமைப்புக்குத் தமிழர்கள் அக்காலத்தில் இட்ட பெயர் " இலவந்திகை " என்பது.

விசை முடுக்கி விட்டதும் தாமே இயங்கும் வண்டிகளும் அக்காலத்தில் இருந்தன. இதனை, " பூணி இன்றியும்

பொறியின் இயங்கு மாண் வினைவையம்" என்று பெருங்கதை பேசுதல் காண்க.

"வலவன் ஏவா வானவூர்தி" என்றும், "மயிற் பொறி" என்றும் முறையே புறநானூற்றிலும், சீவகசிந்தாமணியிலும் வருதலைக் காணும்போது, அக்காலத்திலும் ஆகாய விமானம் இருந்தமை புலப்படுகின்றது. உதயணனும், வாசவதத்தையும் ஆகாய விமானத்தில் ஏறிச் சென்று சம்புத் தீவில் உள்ள இடங்களைக் கண்டனர் எனப் பெருங்கதை மூலமும் அறிகிறோம்.

"இன்னோரன்ன குறிப்புக்களை நந்தமிழ் நூல்களில் காணும்போது, இக் கலைக்குரிய நூல்களும் அவற்றைக் கற்றுத் துறைபோய தொழிலாளப் பெருமக்களும் நம் தமிழ் நாட்டில் இருந்தனர் என்பதை அறிந்து நாம் பெருமிதம் கொள்ள வேண்டும்.

---

3. முச்சங்க வரலாறு

தமிழ்ச் சங்கங்களைப்பற்றி நக்கீரர் வாக்கால் அறியப்படுவனவும், இச்சங்கங்களின் வரலாறும்

(Nakkirar's references to the Sangam—First Sangam and Second Sangam including Third Sangam.)

சங்கம் என்னும் சொற்குப் பொருள், கூட்டம் என்பது. ஈண்டு இச்சொல் புலவர் கூட்டத்தை உணர்த்தி நிற்கிறது. இப் புலவர் கூட்டத்தைக் குறிக்கும் வேறு சொற்களும் இலக்கியத்தில் பயின்று வந்துள்ளன. அச் சொற்கள் தொகை, கழகம், கூடம் என்பன. "உயர் கூடலில் ஆய்ந்த ஒண் தீந்தமிழ்" என்று மணி மொழியாரும், "மதுரைத் தொகை ஆக்கினன்" என்று சம்பந்தரும், "நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கம் ஏறி" என்று அப்பரும், "கந்தனை அனையவர் கலைதெரி கழகம்" என்று கம்பரும், "கூடல் புலவர்" என்று தமிழ்விடு தூது ஆசிரியரும் கூறுமாற்றால் தெரியலாம்.

தமிழ்ச் சங்கத்திற்குப் பலருடைய ஆதரவும் தொடர்பும் இருப்பினும், இச் சங்கத்தை வளர்த்த பெருமை பாண்டி-

யர்கட்கே ஏற்றிக் கூறப்பட்டுள்ளது. சங்கத்தை நிறுவிய வர்களும் பாண்டியர்களே என்பதும் தெரிய வருகின்றது.

முச்சங்கங்களைப் பற்றி இறையனார் அகப்பொருட்கு நக்கீரர் எழுதிய உரை வழி நாம் அறிவன கீழ்வருவன :

"தலைச் சங்கம், இடைச் சங்கம், கடைச் சங்கம் என மூவகைப்பட்ட சங்கம் இரீஇயினார் பாண்டியர்கள். அவருள் தலைச் சங்கம் இருந்தார் அகத்தியனாரும், திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுளும், குன்றெறிந்த முருகவேளும், முரிஞ்சியூர் முடி நாகராயரும், நிதியின் கிழவனும் என இத் தொடக்கத்தார் ஐஞ்ஞூற்று நாற்பத் தொன்பதின்மர் என்ப. அவர் உள்ளிட்டு நாலாயிரத்து நானூற்று நாற்பத்தொன் பதின்மர் பாடினார் என்ப. அவர்களால் பாடப்பட்டன எத்துணையோ பரிபாடலும், முது நாரையும், முது குருகும் களரியாவிரையும் என இத் தொடக்கத்தன. அவர் நாலாயிரத்து நானூற்று நாற்பதிற்றியாண்டு சங்கம் இருந்தார் என்ப. அவர்களைச் சங்கம் இரீஇயினார் காய் சின வழுதி முதலாகக் கடுங்கோன் ஈறாக எண்பத் தொன்பதின்மர் என்ப. அவருள் கவி அரங்கேறினார் எழுவர் பாண்டியர் என்ப. அவர் சங்கம் இருந்து தமிழ் ஆராய்ந்தது கடல் கொள்ளப்பட்ட மதுரை என்ப. அவர்க்கு நூல் அகத்தியம்."

"இனி, இடைச்சங்கம் இருந்தார் அகத்தியனாரும், தொல்காப்பியனாரும், இருந்தையூர்க் கருங்கோழியும், மோசியும், வெள்ளூர்க் காப்பியனும், சிறு பாண்டரங்கனும், திரையன் மாறனும், துவரைக் கோனும், கீரந்தையும் என இத் தொடக்கத்தார் ஐம்பத்தொன்பதின்மர் என்ப. அவருள்ளிட்டு மூவாயிரத்து எழுநூற்றுவர் பாடினார் என்ப. அவர்களால் பாடப்பட்டன கலியும், குருகும், வெண்டாளியும், வியாழ மாலை அகவலும் என இத் தொடக்கத்தன என்ப. அவர்களுக்கு நூல் அகத்தியமும், தொல்காப்பியமும், மாபுராணமும், இசை நுணுக்கமும், பூத புராணமும் இவை என்ப. அவர் மூவாயிரத்து எழுநூற்று யாண்டு சங்கம் இருந்தார் என்ப. அவரைச் சங்கம் இரீஇயினார், வெண்டேர்ச் செழியன் முதலாக முடத்திருமாறன் ஈறாக ஐம்பத்தொன் பதின்மர் என்ப. அவருள் கவி அரங்கேறினார் ஐவர்.

பாண்டியர் என்ப. அவர் சங்கம் இருந்து தமிழ் ஆராய்ந் தது 'கபாடபுரத் தென்ப. அக்காலத்துப்போலும் பாண்டிய நாட்டைக் கடல் கொண்டது.''

''இனிக் கடைச் சங்கம் இருந்து தமிழ் ஆராய்ந்தார் சிறுமேதாவியாரும், சேந்தம் பூதனாரும், அறிவுடை அரனாரும், பெருங் குன்றூர்க்கிழாரும், இளந்திருமாறனும், மதுரை ஆசிரியர் நல்லந்துவனாரும், மருதன் இளநாகனாரும் கணக் காயனார் மகனார் நக்கீரனாரும் என இத் தொடக்கத்தார் நாற்பத் தொன்பதின்மர் என்ப. அவருள்ளிட்டு நானூற்று நாற்பத் தொன்பதின்மர் பாடினார் என்ப. அவர்களால் பாடப்பட்டன. நெடுந்தொகை நானூறும், குறுந்தொகை நானூறும், நற்றிணை நானூறும், புறநானூறும், ஐங்குறு நூறும், பதிற்றுப் பத்தும், நூற்றைம்பது கலியும், எழுபது பரிபாடலும், கூத்தும், வரியும், சிற்றிசையும், பேரிசையும் என்று இத் தொடக்கத்தன. அவர்க்கு நூல் அகத்தியமும், தொல்காப்பியமும் என்ப.''

''அவர் சங்கம் இருந்து தமிழ் ஆராய்ந்தது ஆயிரத் தொண்ணூற்றைம்பத்தியாண்டு என்ப. அவர்களைச் சங்கம் இரீஇயினார் கடல் கொள்ளப்பட்டுப் போந்திருந்த முடத்திரு மாறன் முதலாக உக்கிரப் பெருவழுதி ஈறாக நாற் பத் தொன்பதின்மர் என்ப. அவருள் கவி அரங்கேறினோர் மூவர் பாண்டியர் என்ப. அவர் சங்கம் இருந்து தமிழ் ஆராய்ந்தது உத்தர மதுரை என்ப.''

அடியார்க்கு நல்லார் சிலப்பதிகார உரையில் தலைச் சங்கம், இடைச் சங்கம் பற்றிய குறிப்புக்களை இறையனார் களவியலில் கண்டாங்கு கூறிச் சென்றுள்ளனர். திரு. டாக்டர் ஐயர் அவர்கள், தமது சிலப்பதிகாரப் பதிப்பில், தமக்குப் பாண்டி நாட்டிலுள்ள செவ்வூர்ச் சிற்றம்பலக் கவிராயர் அவர்கள் வீட்டில் இருந்த பழைய ஏட்டுப் புத்தகத்தில் கிடைத்த ஓர் அகவல்பாவைக் காட்டியுள்ளனர். அப்பாவழி, முச்சங்க வரலாற்றைக் காண்கின்றோம். அதுவும் இறை-யனார் களவியல் கூறியாங்கு கூறுகின்றது. என்றாலும், சிற்சில குறிப்புக்கள் மட்டும் வேறுபடுகின்றன. எடுத்துக் காட்டிற்கு ஒன்றைக் காண்க. களவியல் உரையில் கடைச் சங்க நூலாக முத்தொள்ளாயிரம் கூறப்பட்டிலது. ஆனால், அகவல் முத்தொள்ளாயிரத்தைச் சேர்த்துக் கூறுகிறது.

முச் சங்கங்களைப் பற்றி இறையனார் களவியல் உரையில் நக்கீரனார் கூறிய கூற்றுக்களை ஆய்ந்த நாம், நான்காம் சங்கமாகக் கருதப்பட்டதையும் ஈண்டு நினைவு கூர்தல் நல்லது.

நான்காம் சங்கம்

மேலே கூறிய மூன்று சங்கங்களுக்குப் பின் நான்காம் சங்கம் ஒன்று இருந்ததாகத் தெரிகிறது. அதன் காலம் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டெனக் கருதப்படுகிறது. இது கி. பி. ஐந்தாம் நூற்றாண்டு கடைசியில், வச்சிர நந்தி சங்கக் காலத்தில் ஏற்படுத்தப்பட்டு, கி. பி. ஆறும் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து வளர்ச்சியுற்றிருக்க வேண்டும்.

முச்சங்க காலத்தினும் இந் நான்காம் சங்கம் வேறானது என்பதற்குரிய சான்றாக, அக் காலத்தில் அகவல் பாக்களிலும், கலிப்பாக்களிலும் பாடல்களை அமைத்துப்பாடி இருக்க, அச் சங்கங்கட்குப் பின் வந்த நூல்கள் வெண்பாக்களில் பெரிதும் பாடப் பட்டிருப்பதால் கூறலாம். அதாவது கி. பி. 410 ஆம் ஆண்டில் வச்சிரநந்தி என்ற சமணமுனிவர், திராவிட சங்கம் ஒன்றை நிறுவினார் என்றும், அச்சங்கத்தின் மூலம், களப்பிரர் என்பவரால் கலக்கமுற்ற தமிழரைத் தம் பண்டை அற ஒழுக்கங்களைக் கடைப்பிடித்து ஒழுக, நல்வாழ்க்கை நடத்த நீதி நூல்களை எழுதுவித்தனர் என்றும், அங்ஙனம் எழுதப்பட்ட நூல்களே கீழ்க்கணக்கு நூல்களுள் சில என்றும் ஈண்டுக் கருதுதற்கு இடம் இருக்கிறது. நக்கீரரும் கடைச் சங்க நூற்களாகக் கீழ்க்கணக்கு நூற்களைக் குறிப்பிடாமையினையும் ஈண்டு உளம் கொள்ளுதல் வேண்டும்.

நாலடியாரில் "நல்கூர்ந்தக் கண்ணும் பெருமுத்தரையரே செல்வரைச் சென்றிரவாதார்" என்று வரும் அடிகளில் முத்தரையர் என்ற தொடர் வருதல் கொண்டு, அத் தொடர் கி. பி. ஏழாம் நூற்றாண்டு, முதலாம் பரமேஸ்வரனைக் குறிக்கும் ஆதலில், அந்நூல் கி. பி. 7 ஆம் நூற்றாண்டு என்பர். கைந்நிலையின் காலம் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டென்பர். அக்காலத்தனவாகச் சிறுபஞ்ச மூலம், பழமொழி நானூறு, திரிகடுகம் முதலான நூல்களையும் கூறுவர்.

அக்கால நூல்களின் தோற்றம் நான்காம் சங்க காலத்தில் நிகழ்ந்திருக்க வேண்டுமென வரலாற்றால் அறியப்படுதலின், நான்காம் சங்கம் ஒன்று இருந்திருக்க வேண்டுமென ஏற்றலே பொருத்தம் ஆகும்.

சங்கங்கள் இருந்தன என்பதற்குரிய ஆதாரங்களும், பலர் இது பற்றிக் கூறும் கருத்து வேற்றுமைகளும்

(Three Sangams—Their existence and different opinions.)

சங்கம் இருந்தது என்பது

இத் தலைப்பினைப் பற்றிக் கூறவேண்டுவது இன்றியமையாததாகின்றது. ஒரு சிலர் சங்கம் இருந்ததில்லை எனவும் கூறத் துணிகின்றனர். அங்ஙனம் எண்ணுதற்கு நூல்கள் இடம் தரவில்லை.

"நிலம்தரு திருவில் பாண்டியன் அவையத்து" என்று தொல்காப்பியப் பாயிரம், சங்கத்தை அவை என்ற சொல்லால் குறிப்பிடுகின்றது.

"தொல்லாணை நல்லாசிரியர்
புணர்கூட் டுண்ட புகழ்சால் சிறப்பின்
நிலம்தரு திருவின் நெடியோன்"

என்னும் மதுரைக் காஞ்சி அடிகளில் புலவர்கள் சேர்ந்திருந்த சங்கக் குறிப்பைக் காண்க. சங்கம் மதுரையில் இருந்தது என்பது "தமிழ் நிலைபெற்ற தாங்கரும் மரபின் மகிழ்நனை மறுகின் மதுரை" என்று சிறுபாணாற்றுப் படை செப்புகிறது. மணிமேகலை "ஒண் தமிழ் மதுரைத் செழுங்கலைப் பாவாய்" என்கிறது. "நீண்மாடக் கூடலார் புலன் நாவில் பிறந்த சொல்" என்பது கலித்தொகை. "தென் தமிழ் நன்னாட்டுத் தீதுதீர் மதுரை", "தமிழ் கெழு கூடல்" என்பன புறநானூறு. சின்னமனூர்ச் செப்பேடு, மதுரையில் தமிழ்ச் சங்கம் இருந்ததை "மகாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்" என்று குறிப்பிடுகிறது.

"நன் பாட்டுப் புலவனுய்ச் சங்கம் ஏறி, நற்கனகக் கிழி-தருமிக்கு அருளினேன் காண்" என்பது அப்பர் வாக்கு. "கூடலின் ஆய்ந்த ஒண்தீந்தமிழ்" என்று குறித்தனர் திருவரதவூரர். "தலைச் சங்கப் புலவனுர் தம்முன்" என்பர் சேக்கிழார் பெருமானுர்." "சங்கத் தமிழ் மாலை முப்பதும்" என்பது ஆண்டாள் அம்மையார் வாக்கு. "சங்கத் தமிழ் மூன்றும் தா" என்பது ஔவைப் பாட்டியின் மொழி. "சங்க முகத்தமிழ்" என்பர் திருமங்கை ஆழ்வார். "பாண்-டியன் பாடு தமிழ் வளர்த்த கூடல்" என்பது ஆசாரிய மாலை. "தென் தமிழ் நாட்டகல் பொதியில் திருமுனிவன் தமிழ்ச் சங்கம் சேர்கிற்பீரேல்" என்பர் கம்பர். யாப்பருங்-கல விருத்தி மேற்கோள் பாடல் ஒன்றில் "வீயாத் தமிழ் உடையான் பல்வேல்தானைப் பாண்டியன்" எனக் கூறப்-பட்டுள்ளது. பேராசிரியர் தொல்காப்பிய மரபியல் உரை-யில், "மூன்று வகைச் சங்கத்து நான்கு வருணத் தொடு-பட்ட சான்ருேரும்," என்று முச்சங்கக் குறிப்பினைக் கூறி யுள்ளனர். வைணவ வடகலை, தென்கலைக் குரு பரம்பரை யும், திருவாய் மொழியும் சங்கம் இருந்த குறிப்பை அறிவிக் கின்றன. திருவிளையாடற் புராணங்கள் சங்கப் பலகை இருந்தது என்பதைத் தெரிவிக்கின்றன.

வால்மீகி ராமாயணம் சங்கம் இருந்ததைக் குறிப்பிடு-கிறது. டாலமி பிளினி போன்ற மேற்கு நாட்டு அறிஞர்-கள் தாம் எழுதிய குறிப்புக்களில் சங்கத்தைப் பற்றிக் குறிப்பிட்டுச் சென்றனர். வரலாற்றுக் குறிப்புக் கொண்ட பெரிப்புளூஸ் என்னும் நூலும் சங்கத்தைப் பற்றி அறிவிக்-கின்றது. இலங்கை வரலாற்று நூல்களான மகாவம்சம், இராஜாவளி, இராஜ ரத்னுகிரி போன்ற நூல்களும், சங்கம் இருந்ததை ஒவ்வி அறிவித்துள்ளன.

சங்க காலப் புலவர்கள் தக்க புலவர்களையும், தக்க நூல்களையும் மதிப்பிடுதற் பொருட்டு இறைவனை வேண்டி, ஒரு சங்கப் பலகை பெற்று, அதனை மதுரைப் பொற்ரு மரைக் குளத்தில் இட்டு, அதில் நூலையோ புலவரையோ அமர்த்தினர். அஃது இடம் கொடுப்பின், அப்புலவரையும் நூலையும் ஏற்பது என்றும், இங்ஙனம் இன்றி நீரில் தள்ளி விடின், புலவரையும் நூலையும் ஏற்றல் கூடாது என்றும் ஒரு முறையை மேற்கொண்டிருந்தனர். இதனை, "மொழி

அறிசங்கப் பலகை", "மரபறி சங்கப் பலகை" எனப் பழைய திருவிளையாடலும், "பழுதறும்படி புலவர் ஏறிய பலகை" என்று வில்லிபுத்தூராரும் கூறுதல் காண்க.

மதுரையில் சங்கமண்டபம் இருந்தது என்பது, இன்றும் மதுரை சுந்தரேசர் கோயிலின் பெரிய சுற்றுவரவின் தென் மேற்கு மூலையில் சங்கத்தார் கோயில் என்ற ஒன்று அமைந்து இருப்பதைக் காணலாம். அங்கு நாற்பத்தொன்பது புலவர்களின் உருவங்களும் உள்ளன. மதுரைப் பொற்றாமரைக் கரையில் உள்ள மண்டபக் கற்றூண்களில் சங்கத்தாருடைய உருவங்கள் காணப்படுகின்றன. இந்தக் குறிப்பினை "பீடார் பொற்றாமரைச் சங்கம்" எனக் குலோத்துங்கன் கோவை கொண்டு தெளியலாம். சிலேடைப் பொருளில் சங்கம் மதுரையில் இருந்ததை, "சேல்பாய் தடத்துமுள செய்யுள் மிக்கேறு சங்கம்" என்று சேக்கிழார் செப்பியுள்ளதையும் காண்க.

இச் சங்கத்தில் இறைவனும் ஒரு புலவனாய் இருந்தான் என்பதையும் தமிழ் நூல்களில் பரக்கக் காணலாம். "சிற்றம்பலத்தும் என் சிந்தையுள்ளும் உறைவான் உயர்மதிற் கூடலில் ஆய்ந்த ஒண்டீந்தமிழ்" என்பது திருக்கோவையார். "சென்றணைந்து மதுரையினில் திருந்து நூல் சங்கத்துள் அன்றிருந்து தமிழ் ஆராய்ந்தருளிய அங்கணர்" என்பது பெரிய புராணம். "மதுரை ஆலவாயன் என உரை செய்தே அவை நெடுநாள் இருந்தவன்" என்பது வேப்பத்தூரார் திருவிளையாடல். "கண்ணுதல் பெருங்கடவுளும், கழகமோடு அமர்ந்து பண்ணுறத் தெரிந்தாய்ந்த பசுந்தமிழ்" என்பது பரஞ்சோதியார் திருவிளையாடல்.

சங்கத்தைப் பற்றிய பலரது கருத்து வேற்றுமைகள்

திருவாளர் திருநீலகண்ட சாஸ்திரியார் சங்கம் இருந்தது என்பதை ஒப்புக்கொண்டாலும், அஃது ஒரு சங்கமாகத்தான் இருக்கவேண்டும். அச்சங்கம் கி. பி. முதலாம் நூற்றாண்டில் இருந்திருக்க வேண்டும் என்பர். அவர் கூற்று: "The Sangam age may be taken to have extended from say A.D. 100" என்பது. இவருடன்

இணைந்து, திரு. வையாபுரிப் பிள்ளை அவர்கள் சங்கப் புலவர்கள் யாவரும் கி. பி. இரண்டாம் நூற்றுண்டிற்கு முற்பட்டவர் ஆகார் என்று எழுதுகிருர். "We may be reasonably certain that no poet of the Sangam age seems to be earlier than the second century A.D." என்பது அவர்தம் மொழிகள். பெருமை சான்ற இப் பேரறிஞர்கள் இருவரும் தமிழ் மொழிக்குத் திருத்தமான வரி வடிவம் ஏற்பட்டது, கி. பி. மூன்ரும் நூற்ருண்டிற்குப் பின் எனவும் கூறியுள்ளனர். "We have seen that the languages of the short Brahmi inscriptions of the third century was Tamil" என்பது திரு. சாஸ்திரியார் கருத்து. The Tamil script in its formative stage contact with Sanskrit and Prakrit Languages and Literature must have been largely influential in shaping the Tamil mind" என்பது திரு. பிள்ளை அவர்களின் எண்ணம்.

தொல்காப்பியம் சங்கப் புலவர்கட்கு இலக்கணம். அஃது இரண்டாம் மூன்ரும் சங்கத்தார்க்கும் முந்தியது. அது செம்மை சான்ற செந்தமிழ் மொழிகளால்தான் எழுதப்பட்டது. அந்நூல் தமிழ் மொழியின் வரி வடிவ நிலைகளைப் பேசும்போது,

"மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல்
எகர ஒகரத் தியற்கையும் அற்றே"
"முப்பாற் புள்ளியும் எழுத்தோர் அன்ன
உள்பெறு புள்ளி உருவா கும்மே."
"புள்ளி இல்லா எல்லா மெய்யும்
உருவுரு வாகி அகரமொடு உயிர்த்தலும்
ஏனை உயிரொடு உருவுதிரிந்து உயிர்த்தலும்
ஆஈர் இயல உயிர்த்த வாறே"

என்னும் நூற்பாக்களை இயம்பியுள்ளது. இதனுல், பழம் பெருங் காலம் முதற் கொண்டே தமிழ் மொழிக்கு வடிவம் உண்டு என்பதை நன்கு அறிதல் வேண்டும். தொல்காப்பியக் காலத்துத் தமிழ் மொழியின் வரிவடிவ இலக்கணம் தமிழ் மொழிக்கே ஆகும். தமிழ் மொழிக்குரிய எழுத்துக்கள் இத்தனை என்பதையும் தொல்காப்பியனுர்,

" எழுத்தெனப் படுவ,
அகர முதல னகர இறுவாய்
முப்பஃதென்ப
சார்ந்துவரல் மரபின் மூன்றலங் கடையே "

என்று அறுதியிட்டு உறுதிப்படுத்தினர். இதனைக் கருத்தில் கொண்டே திருவள்ளுவரும் இலக்கிய வாயிலாக உணர்த்த வேண்டி,

" அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு "

என்று அகரத்தில் தொடங்கி,

" ஊடுதல் காமத்திற்கு இன்பம் அதற்கின்பம்
கூடி முயங்கப் பெறின். "

என்று னகரத்தில் முடித்துக் காட்டினர். மேலும், தமிழ் மொழி தனக்கே உரித்தான எ, ஒ, ழ, ற, ன, என்ற ஐந்து சிறப்பெழுத்துக்களைக் கொண்டு திகழ்ந்தது; திகழ்கிறது; திகழும்.

" றனழஎ ஒவ்வும் உயிர்மெய்யும் உயிர்அளபு
அல்லாச் சார்பும் தமிழ் "

என்று நன்னூல் கூறுதல் காண்க.

கால்டுவெல் துரைமகனார் தமிழ், பிறமொழியின் துணை வேண்டாது தனித்துத் திகழும் நிலையினை நடுநிலையில் நின்று "The Tamil, however, the most highly cultivated ab intra of all Dravidian idioms can dispense with its Sanskrit altogether, if need be, and not only stand alone, but flourish without its aid" என்று அறை கூறி அறைந்திருப்பதைக் காண்க.

மறைமலை அடிகளார் தாம் எழுதிய மாணிக்கவாசகர் கால ஆராய்ச்சி நூலில், சங்க கால நூல்களிலும், அதற்கு பிற்பட்ட நூல்களிலும் எந்த அளவிற்கு வடசொற்கள் சேர்ந்துள்ளன என்பதையும், நூற்றுக்கு எத்தனை விழுக்காடு என்பதையும் எண்ணிக்கையோடு எடுத்து எழுதியிருப்பது கொண்டு, கால்டுவெல் ஐயர் வாக்கு உறுதி ஆதலைக் காணலாம்.

திரு. இராகவ அய்யங்கார் அவர்களும், பிராமித் தமிழ் எழுத்து உண்டாதற்கு முன்னரே, பழங்காலமாகத் தண்டமிழ் மொழிக்கே உரிய எழுத்துக்களைத் தமிழ் பெற்றிருந்தது என்று கூறுகின்றனர்.

இன்னோரன்ன காரணங்களால் முச்சங்க உண்மைகளையும் சங்க காலப் பழமையினையும், தமிழ் மொழிக்கே உரிய எழுத்து உருவங்களையும் நன்கு தெளிந்து நாம் பெருமிதம் கொள்ளலாம்.

---

4. அகத்தியரும் அவர்தம் மாணவர்களும்

(Agathiar and his disciples)

அகத்தியர்

தமிழ் மொழி வழக்கில் ஒருவரைக் கட்டாயப் படுத்தும் முறையில் பேசும்போது 'அகத்தியமாகச் செய்வாயா, வருவாயா' என்று கூறுவதைக் கேட்கின்றோம். இந்தப் பொருளை நினைக்கிறபோது தமிழுக்குக் கட்டாயமானவர், அவசியமானவர் என்ற காரணம் கருதிப்போலும் இப்பெரியார் அகத்தியர் எனப்பட்டார் என்று கருத இடம் இருக்கிறது. இவரது வரலாறு, குறிப்பு ஆகியவைகள் ஒரு படித்தனவாக இல்லை. பலவாறு சிதறுண்டு, சிக்குண்டு உள. இவர் குடத்தினில் பிறந்தனர் என்ற காரணத்தால் கும்பமுனி எனவழைக்கப் பட்டனர். இவரைத் தமிழ் நூல்களும், வடமொழி நூல்களும் குறிப்பிடுகின்றன. இங்குத் தமிழ்மொழிச்சார்பில் இவருக்கு எந்த அளவில் இடம் இருக்கிறது என்பதைச் சிந்திப்போமாக.

ஒரு சமயம் இறைவன் இறைவியை மணம் செய்த திருவிளையாடலை மேற் கொண்டபோது, தேவர்களும், முனிவர்களும், ஏனையோரும் இமயத்தில் ஒன்று கூட, வட கோடு தாழத் தென்கோடு உயர்ந்ததாகவும், அந்நிலையினைச் சமன் செய்ய இறைவர், அகத்தியரைத் தென் திசை சென்று ஆண்டிருந்து சமன் செய்யுமாறு பணித்தனர் எனவும், அதுபோது அகத்தியர் தென்னாடு தமிழ் மொழி வழங்கும் தேயமாதலின், அங்கு அம்மொழி அறிவின்றி

எங்ஙனம் செல்வேன் என்று விண்ணப்பிக்க, இறைவர், அவர்க்கு எழுத்து, சொல், பொருள் இலக்கணங்களை அறிவித்ததாகவும் பழைய திருவிளையாடற் புராணம்,

“ ஆதரம்சேர் குறுமுனியும் எனைஒன் றுக்கி
அருள்செய்தாய் அருள்செய்த படியே செல்வல்
ஓதரும்தென் பூமிதமிழ்ப் பூமி என்பர்
ஒண்டதமிழிற் குரியஎலாம் அடிமைக் கிங்கே
போதமுற அறிவித்தல் வேண்டும் என்று
போற்றுங்கால் எழுத்துச்சொல் பொருள்முன் ஆன
நீதியிடைச் சூத்திரங்கள் அறியும் வண்ணம்
நெறியின்கண் அறிவித்தார் நேசம் கூர்ந்தே ”

என்று கூறுகிறது. காஞ்சி புராணமும் “ தென் மொழியை உலகமெலாம் தொழுதேத்தும் குட முனிக்கு வலியுறுத்தார் கொல்லேற்றுப் பாகர் ” என்று அறிவிக்கிறது. இந்தச் சான்றுகளினால் அகத்தியர் தம் பெயரால் அகத்தியம் என்னும் இலக்கண நூலைச் செய்தனர் என்பர். இந்த அகத்தியம் எழுத்து, சொல், பொருளுக்கே இலக்கணம் கூறுவதன்றி இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழுக்கும் இலக்கணம் கூறும் நூல் என்று கருதப்படுகிறது. இதுவே தமிழ் மொழிக்கு முதல் நூல் என்று பன்னிரு படலப் பாயிரம், “ ஆனப்பெருமை அகத்தியன் என்னும் அருந்தவ முனிவன் ஆக்கிய முதல் நூல் ” என்று கூறுகிறது.

முத்தமிழ் இலக்கணங்களைப் பரப்பிய பெருமை அகத்தியர்க்கு உண்டு. இதனைப் பலபடி தமிழ் நூல்கள் புகழ்ந்து கூறுகின்றன. “ தமிழெனும் அளப்பரும் சலதி தந்தவன் ”, “ தழற்பொலி விழிக் கடவுள் தந்த தமிழ் தந்தான் ”, “ தமிழ் மாமுனி ” என்பன கம்பர் வாக்குகள். “தேனார் கமழ் தொங்கல் மீனவன் கேட்பத் தெண்ணீர் அருவிக் கானார் மலையத் தருந்தவன் சொன்ன கன்னித் தமிழ் ” என்று யாப்பருங் கலக் காரிகையும், “ அகத்தியன் புவனிக்கு இயம்பிய தண்டமிழ் ” என்று வீரசோழியமும், “ மூவாத் தமிழ் பயந்த முன்னூல் முனிவாழி ” என்று தண்டி அலங்கார மேற்கோள் பாடலும், “ அகத்தியன் பயந்த செஞ்சொல்ஆர் அணங்கு ” என வில்லிபுத்தூரார் பாரதமும் குறிப்பிடுதல் காண்க.

இங்கே ஓர் ஐயம் எழலாம். அகத்தியர் வருவதற்கு முன்பே தென்னுட்டில் தமிழ்மொழி இருந்ததாகக் கூறப்படுகிறபோது, அம்மொழிக்கு இலக்கணமும் இலக்கியமும் இருந்திருக்கவேண்டுமே. இங்ஙனம் கருத இருக்க, அகத்தியர் இலக்கணம் செய்தார் என்பது எப்படி? என்பதே அவ்வையம். இதற்கு விடை டாக்டர் சுவாமிநாத ஐயர் தமது "சங்கத் தமிழும் பிற்காலத் தமிழும்" என்னும் நூலில், "அவர் வருவதற்குமுன்னமே இந்நாட்டிலிருந்த தமிழையும் அதன் இலக்கணத்தையும் அவர் தந்தார் என்று கூறி இருப்பது உபசார வழக்கு. இங்ஙனம் கூறி இருத்தற்குக் காரணம், தமிழ் மொழிக்கு அக்காலத்தில் இருந்த ஒரு மெலிவைப் போக்கி, அவர் இலக்கணம் செய்து மாணக்கர்களுக்குப் பாடஞ் சொல்லிப் பாதுகாத்தமையே" என்று எழுதியிருப்பது காண்க. மேலும், அகத்தியர் வருவதற்கு முன் தமிழ் நாட்டில் தமிழ் மொழி வழங்கியது என்பது நாம் உணர்ந்துள்ளோம். அக்காலத்தில் தமிழ் இலக்கிய நூல்கள் இருந்திருக்கின்றன. இதனே அகத்தியரே தமது அகத்திய நூலில் தெள்ளத் தெளிய,

"இலக்கியம் இன்றி இலக்கணம் இன்றே
எள்ளின் ருகில் எண்ணெயும் இன்றே
எள்ளின் றெண்ணெய் எடுப்பது போல
இலக்கி யத்தினின் றெடுபடும் இலக்கணம்"

என்று இயம்பி இருப்பதையும் ஈண்டு உணர்க.

அகத்தியர் வடதிசையினின்று போந்து தென்திசையில் பொதிகை மலேயில் தங்கினுர் என்பது யாரும் அறிந்ததே. பொதிகையில் தங்கி ஆண்டு ஒரு சங்கத்தையும் அகத்தியர் நிறுவினுர் என்பதும் வான்மீகி ராமாயணத்தால் தெரிகிறது. சீதையைத் தேடத் தென்திசை நோக்கிச் செல்லும் வானரங்களுக்குச் சுக்ரீவன் "பொதிகை மலேயில் அகத்தியமா முனிவரின் தமிழ்ச் சங்கம் உளது. அங்குச் சென்ருல் நீங்கள் தமிழ்ச்சுவையினே இனிதில் நுகர்ந்து அங்கேயே தங்கிவிடவும் நேரிடும். இதனுல் நமது குறிக்கோள் நடைபெருது தடைபெறும்" என்று கூறினுன் என்ற குறிப்பு உளது. கம்பராமாயணத்துள் பொதியில் மலேயில் சங்கம் இருந்ததை "தென்தமிழ்நாட் டகன்பொதியில்

திருமுனிவன் தமிழ்ச்சங்கம்" என்னும் அடி விளக்கிக் கொண்டு இருக்கின்றது.

அகத்தியர் இறைவனிடம் தமிழ் கற்றனர் என்பதோடின்றி, முருகப்பெருமானிடத்தும் தமிழ் கற்றனர் என்பதும் கூறப்படுகிறது. குமாரக் கடவுள் இயற்றிய இலக்கணம் குமரம் எனவும், அதுவே அகத்தியர் செய்த அகத்தியம் என்னும் நூலுக்கு முதல் நூல் எனவும் திரு. ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை என்பவர் செந்தமிழ் என்னும் பத்திரிகையில் எழுதியுள்ளனர்.

அகத்தியர் செய்த அகத்தியம் முற்றிலும் நமக்குக் கிடைத்திலது. ஒருசில நூற்பாக்களே நமக்குக் கிடைத்துள.

அகத்தியர் முதற் சங்கத்தில் புலவராக இருந்தவர். மகேந்திர மலையில் ஆகம நூல்களாம் அருள் நூல்களைக் கேட்டனர். தெற்கு நோக்கி வந்தபோது, இடையே குறிக்கிட்டு இவரது போக்கைத் தடைசெய்த விந்த மலையை அடக்கினர். வில்லவன், வாதாபி ஆகிய இரு அரக்கர்களை அழித்தனர். இவர் விதர்ப்பன் மகளான உலோபா முத்திரை என்பவரை மணந்தனர். இவ்விருவருக்கும் பிறந்த பிள்ளை சித்தன் என்பவர். அகத்தியர் தென்னாடு புறப்பட்டபோது, அவர் தம் கமண்டலத்தில் இருந்த கங்கை நீர் கவிழ்ந்து காவிரியாறாகப் பாய்ந்தது என்பதை மணிமேகலை,

> *"அமர முனிவன் அகத்தியன் தனது*
> *கரகம் கவிழ்த்த காவிரிப் பாவை"*

என்று கூறுகிறது. இன்னோரன்னவை அகத்தியரைப் பற்றிய குறிப்புக்கள். மேலும்,

வான்மீகி ராமாயணத்தில் மலையமலைத் தொடர்ச்சிக்கண், பொதியில், காவிரித் தோற்றம், கோதாவரித் தோற்றம் ஆகிய இடங்களில் அகத்தியர் இருக்கைகள் இருந்தன என்றும், இராமர் இவரிடம் சென்று வழிபட்டுப் படைக்கலங்களைப் பெற்றனர் என்றும் கூறப்பட்டுள்ளன. இவைமட்டும் அன்றிக் குஞ்சரம் என்னும் மலையில் விசுவகருமன் அகத்தியருக்குக் கோவில் கட்டினான் எனவும், இராமனுக்கு ஆதித்ய ஹிருதயம் என்னும் மந்திரத்தை அகத்தியர் உபதேசித்தார் எனவும் கூறப்படுகின்றன.

இவர் தமிழ் மக்கள் பகைவர் சிலரால் தீதுருதபடி காக்கும் பேராற்றல் படைத்து வாழ்ந்தவர்; தவவலிமை உடையவர். இவர் மதுரைக் காஞ்சியில்,

"தென்னவன் பெயரிய துன்அருந் துப்பின்
தொன்முது கடவுள் பின்னர் மேய"

என்று சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளனர்.

அகத்தியரைப் பற்றித் தொல்காப்பிய எழுத்ததிகாரத்தின் பாயிர உரையில், உச்சி மேற்புலவர்கொள் நச்சினார்க்கினியர் கூறும் வரலாறு: "தேவர் எல்லாம் கூடி, யாம் சேர இருந்தனம். மேருத்தாழ்ந்து தென்திசை உயர்ந்தது. இதற்கு அகத்தியனாரே ஆண்டு இருத்தற்குரியர்' என்று அவரை வேண்டிக்கொள்ள, அவரும் தென்திசைக்கண் போதுகின்றவர் கங்கை யாருழைச் சென்று காவிரியாரை வாங்கிக்கொண்டு, பின்னர் யமதக்கினியாருழைச் சென்று அவருடன் பிறந்த குமரியார் உலோபா முத்திரையாரை அவர் கொடுப்ப நீர் ஏற்று, நிறீஇப் பெயர்ந்து துவாரப்பதி போந்து நிலம் கடந்த நெடுமுடியண்ணல் வழிக்கண் அரசர்பதினெண்மரையும், பதினெண் கோடி வேளிர் உள்ளிட்டாரையும் அருவாளரையும் கொண்டு போந்து காடுகெடுத்து நாடாக்கிப் பொதியின்கண் இருந்து, இராவணனைக் கந்தருவத்தால் பிணித்து, இராக்கதரை ஆண்டு இயங்காமை விலக்கித் திரணதூமாக்கினியாராகிய தொல்காப்பியனாரை நோக்கி, "நீ சென்று குமரியாரைக் கொண்டு வருக" எனக்கூற, அவரும் "எம்பெருமாட்டியை எங்ஙனம் கொண்டு வருவல்" என்றார்க்கு 'முன்கைப் பின்னாக நாற்கோல் நீளம் அகல நின்று கொண்டு வருக' என, அவரும் அங்ஙனம் கொண்டு வருவழி, வையை நீர் கடுகிக் குமரியாரை ஈர்த்துக் கொண்டு போகத் தொல்காப்பியனார் கட்டளை இறந்து சென்று, ஓர் வெதிர்ங்கோலை முறித்து நீட்ட, அது பற்றி ஏறினார். அது குற்றம் என்று அகத்தியனார் 'குமரியாரையும் தொல்காப்பியனாரையும் சுவர்க்கம் புகாப்பீர்' எனச் சபித்தார்." என்பதாகும்.

அகத்தியர் செய்த அகத்திய நூல் 12,000 பாக்களையும், நூற் பாக்களையும் யுடையது என்பர்.

" ஆலும் ஆனும் ஒடும் ஒடுவும்
சாலும் மூன்றும் வேற்றுவைக் கதுவே
செய்வோன் காரணம் செயத்தகு கருவி
எய்திய தொழில்முதல் இயைபுடைத் ததன்பொருள்"

என்பது அகத்தியர் நூற்பா.

அகத்தியம் என்னும் நூலே இருந்ததில்லை என்று கூறுவார் கூற்றும் தமிழகத்தில் உண்டு. ஆனல், உரை-யாசிரியர்கள் பலரும் அகத்தியச் சூத்திரங்களை எடுத்து மேற்கோள் காட்டியுள்ளனர். இறையனுர் களவியல்நூல் உரையில் முதல் சங்கத்தார்க்கும், இடைச்சங்கத்தார்க்கும் இலக்கண நூல் அகத்தியம் என்று கூறப்பட்டுள்ளது.

இந்த அகத்தியத்தில் எழுத்து, சொல், பொருள், யாப்பு, சந்தம் வழக்கியல், அரசியல், அமச்சியல், பார்ப்பன இயல், சோதிடம், காந்தருவம், கூத்து முதலானவை பற்றிக் கூறப்பட்டிருப்பனவாகத் தெரிகிறது.

அகத்தியர் செய்தனவாகப் பல மருத்துவ நூல்களும், நாடி நூல்களும், சோதிட நூல்களும் கூறப்படுகின்றன. அகத்தியர் சிவநெறியினர். இவரது காலம் மிகமிகப் பழைய காலம் என்றே கூறவேண்டும்.

அகத்தியரின் மாணவர்கள்

அகத்தியனுர் மாணுக்கர்கள் பன்னிருவர். அவர்கள் தொல்காப்பியன், அதங்கோட்டாசான், துராலிங்கன், செம்-பூட்சேய், வையாபிகன், வாய்ப்பியன், பனம்பாரன், கழா-ரம்பன், அவிநயன், காக்கைபாடினி, நத்தத்தன் என்-பவர்கள். இது,

" மன்னிய சிறப்பின் வானேர் வேண்டத்
தென்மலை இருந்த சீர்சால் முனிவரன்
தன்பால் தண்டமிழ் தாவின் றுணர்ந்த
துன்னரும் சீர்த்தித் தொல்காப் பியன்முதல்
பன்னிரு புலவர்"

என்னும் புறப் பொருள் வெண்பா மாலை சிறப்புப் பாயிரத்-தால் தெரிகிறது. இப்பன்னிரு புலவர்களும் சேர்ந்து செய்த

நூல் பன்னிரு படலம் என்பது. புறப்பொருள் வெண்பா மாலை என்னும் நூலுக்கு இதுவே முதல் நூல்.

இப்பன்னிருவருள் தொல்காப்பியர் தொல்காப்பியம் என்னும் நூலை இயற்றினர். அதங்கோட்டாசான் என்பவர் நான்மறை முற்றிய அதங்கோட்டாசான் என்று பனம்பாரனாரால் சிறப்பிக்கப்பட்டவர். தொல்காப்பியம் இவர்முன் அரங்கேற்றப்பட்டது. இவ்விரு குறிப்புக்கள் அன்றி வேறு தெரிந்திலது. அவிநயனார், காக்கை பாடினியார், நத்தத்தனார், கழாரம்பன், வையாபிகன் தம்தம் பெயரால் இலக்கண நூல் செய்தனர் என்பது யாப்பருங்கல உரையால் புலனாகிறது. பனம்பாரனார் தொல்காப்பியத்திற்குச் சிறப்புப் பாயிரம் அளித்தவர். இவர் இலக்கண நூல் செய்திருப்பதாக யாப்பருங்கல விருத்திவழி அறியவருகிறது. குறுந்தொகையில் பனம்பாரனார் பாடிய பாடல் காணப்படுகிறது. அவர் வேறு என்பது சிலர் கருத்து.

---

5. தொல்காப்பியரும் தொல்காப்பியமும்

(Tholgappiar)

தொல்காப்பியர்

தொல்காப்பியர் அகத்தியர் மாணவர்கள் பன்னிருவரில் ஒருவர். அவர்பால் இவர் தமிழ் இலக்கண அறிவு பெற்றனர் என்பதைப் பன்னிருபடலத்துப் பாயிரத்தாலும், புறப் பொருள் வெண்பா நூலாலும் உணரலாம்,

தொல்காப்பியர் பெயரைப் பற்றிப் பல ஐயங்கள் உள. இவரது இயற்பெயர் திரணதூமாக்கினி என்பர். இவரது பெற்றோர் ஜமதக்கினி முனிவர் என்பர். யமதக்கினி முனிவர் திருமகனார் பரசுராமர் ஆதலின், திரணதூமாக்கினியார் அவரது உடன்பிறந்தவர் ஆதல் வேண்டும். திரணதூமாக்கினியார் பரசுராமர் உடன் பிறந்தார் என்றோ, யமதக்கினி முனிவர் புதல்வர் என்றோ வடமொழிப் புராணங்களிலேனும், இதிகாசங்களிலேனும் யாண்டும் கூறப்பட்டிலது. ஆகவே, தொல்காப்பியர் பெயர் தொல்காப்பியரே ஆதல் வேண்டும். இப்பெயர் குடியை ஒட்டிய பெயர்.

சேக்கிழார் குடும்பத்தில் பிறந்தவர் சேக்கிழார் என்று கூறப்பட்டதுபோல், இவர் காப்பியக்குடியில் தோன்றின பற்றியும், அக்காப்பியக்குடி பழமையான குடி ஆதல் பற்றியும் தொல்காப்பியர் என அழைக்கப் பட்டனர்.

இத்தொல்காப்பியக் குடி, பாண்டிய நாட்டின் தென் பகுதியிலும், சோழ நாட்டில் சீர்காழிப்பதியின் பக்கத்திலும் இன்றும் இருப்பதாகக் கருதப்படுகிறது. மேலும், இத்தொல்காப்பியர் என்பதற்கு வேறு பொருளும் கூறப்படுகிறது. அதாவது, தொன்மையான மொழிமரபைக் காக்கும் நூலாகிய தொல்காப்பியத்தைச் செய்தமையின் தொல்காப்பியர் என்று அழைக்கப்பட்டார் என்பதாகும். தொல்காப்பியரைப் பற்றிய ஒரு சில குறிப்புக்கள் அகத்தியர் என்ற தலைப்பின் கீழும் கூறப்பட்டுள்ளது; ஆண்டுக் காண்க.

தொல்காப்பியம்

தொல்காப்பியர் இயற்றிய தொல்காப்பியத்தைப் பற்றி இனிக் காண்போமாக. தொல்காப்பியம் வழிநூல் ஆகும். இதற்கு முதல் நூல் அகத்தியர் இயற்றிய அகத்தியம் ஆகும். இது பன்னிரு படலத்திலும், பல்காப்பியனார் இயற்றிய பல்காப்பியத்திலும் கூறப்பட்டிருத்தலால் அறியவரும் உண்மையாகும்.

அகத்தியர் நூல் செய்தற்கு முன்னும் தமிழில் நூல்கள் இருந்திருக்க வேண்டும். அவற்றையும் தொல்காப்பியர் நன்கு பயின்றவர். இதனை உட்கொண்டே தொல்காப்பியர் தமது நூலில் தாமாகக் கூறுவதாகக் கூறாமல், தமக்கு முன்பிருந்த புலவர்களும் இவ்வாறு கூறியுள்ளனர் என்பதை நன்கு தெரிவிக்க,

"புகரின்று என்மனார் புலமை யோரே
ஆயிரண் டென்ப அறிந்திசி னோரே"

"வரைவின்று என்ப வாய்மொழிப் புலவர்
நல்லிசைப் புலவர் செய்யுள் உறுப்பென
வல்லிதில் கூறி வகுத்துரைத் தனரே

"யாப்பென மொழிப யாப்பறி புலவர்
யாப்பின் வழியது என்மனார் புலவர்
தோலென மொழிப தொன்னெறிப் புலவர்
நூலென மொழிப நுணங்குமொழிப் புலவர்"

என்றும் கூறியுள்ளனர். இந்த உண்மையினைத் தொல்காப்பியப் பாயிரம் "முந்து நூல் கண்டு முறைப்பட எண்ணிப் புலந்தொகுத்தோன்" என்று கூறுகிறது.

இங்ஙனம் இருக்க, இவர் இந்திரனால் செய்யப்பட்ட ஐந்திரம் என்னும் நூலைப் பயின்றவர் என்று கூற வந்து, இதற்குச் சான்றாகப் பனம்பாரனார் சிறப்புப் பாயிரத்தில் வரும் "ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்" என்பதைக் காட்டுவர். மேலும், சிலப்பதிகாரத்தில் வரும் "விண்ணவர் கோமான் விழுநூல்" என்பதையும் எடுத்துக் காட்டுவர். விண்ணவர் கோமான் இந்திரனே ஆயினும், அவன் செய்த நூல் "இந்திர காளியத்தை" என்றும் கருதலாம். இந்திரனால் செய்யப்பட்ட இலக்கணம் வடமொழியில் இருப்பதாக இதுவரை தெரிந்திலது. அற்றேல், ஐந்திரம் என்பதன் பொருள் யாதாக இருக்கலாம் என்று வினவலாம். அத்தொடர் ஐந்திறமாக இருக்க வேண்டும் என்பர் தமிழ் வரலாறு எழுதிய ஆசிரியர் திரு. K. சீனிவாச பிள்ளை அவர்கள். அதுபோது அத்தொடர் ஐந்து திறங்கள்—அதாவது ஐந்து கூறுபாடுகள்—என்ற பொருள் தந்து நிற்கும். ஐந்து கூறுபாடுகள் ஆவன எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்பன. இவ்வைந்து கூறுபாடுகளான இலக்கணம் நிறைந்த புலவர் என்ற கருத்தில்தான் பனம்பாரனார் "ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்" என்றனர் எனல் பொருத்தம் ஆகிறது.

தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் என்ற முப்பெரும் பிரிவுடையதேனும், ஆசிரியர் தொல்காப்பியர் யாப்பு அணிகளையும் பொருள் அதிகாரத்தில் இணைத்துப் பேசித் தாம் ஐந்திறம் நிறைந்த தொல்காப்பியர் என்று நிறுவியுள்ளதைக் காண்க. பொருளதிகாரத்தில் ஏனைய இலக்கணங்களும் கூறி இருப்பினும், மொழிக்கு இலக்கணம் ஐந்து என்பதே தொன்றுதொட்ட மரபாதல் காண்க. அல்லது ஐந்திரம் என்பது இந்திரன் செய்த ஐந்தின் வியாகரணம் எனக் கொண்டு, அதனையும் படித்தவர் என்று பொருள் கொண்டு தொல்காப்பியரின் வடமொழிப் புலமையினையும் அறிந்து கொள்ளலாம்.

தொல்காப்பியம் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என்ற முப்பெரும் பிரிவினையுடையது.

எழுத்ததிகாரத்தில் நூல் மரபு, மொழி மரபு, பிறப்பியல், புணரியல், தொகை மரபு, உருபியல், உயிர் மயங்கியல், புள்ளி மயங்கியல், குற்றியலுகரப் புணர்ச்சி என ஒன்பது உட்பிரிவுகள் உள. இவ் ஒன்பது பிரிவுகளின் நூற்பா நானூற்று எண்பத்து மூன்று.

நூல் மரபில் தமிழ் மொழியில் உள்ள எழுத்துக்களின் பெயரையும், முறையையும், தொகையையும், அளவையும், கூட்டத்தையும், இனத்தையும், மயக்கத்தையும் பற்றிக் கூறப்பட்டுள்ளன.

"மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல்
எகர ஒகரத் தியற்கையும் அற்றே"

என்ற நூற்பாவினைக் காண்க.

மொழி மரபு என்பதில் எழுத்தானும் மொழிகளின் மரபு கூறப்பட்டுள்ளது. எழுத்துக்கள் ஒன்றோடொன்று சேர்ந்து மொழியாதல் மரபு என்றாலும், ஓர் எழுத்து நின்றே மொழியாதல் உண்டு என்பதை இப்பகுதியில் ஆசிரியர் விழிப்புடன்,

"நெட்டெழுத் தேழே ஓரெழுத் தொருமொழி"

என்று கூறியுள்ளனர். தொல்காப்பியர் காலத்தில் எ, ஒ என்னும் எழுத்துக்கள் மெய்யெழுத்துக்களைப் போலத் தலையில் புள்ளி பெற்று எழுதப்பட்டன என்பதை இப் பகுதியில் காணலாம்.

பிறப்பியல், எழுத்துக்கள் எவ்வாறு பிறக்கின்றன என்பதை அறிவிக்கிறது. பகரம் மகரம் பிறப்பதை "இதழ் இயைந்து பிறக்கும் பகார மகாரம்" என்று கூறியதைக் காண்க.

புணரியல் ஒரு சொல்லோடு ஒரு சொல் புணர்தலைக் கூறுவதாகும். மகர ஈற்று அஃறிணைப் பெயருடன் அத்துச்சாரியை வரும்போது, அகரம் கெடும் என்பதை "அத்தின் அகரம் மகரமுனை இல்லை" என்றதைக் காண்க.

தொகை மரபு என்பதிலும் புணர்ச்சி பற்றிய இலக்கணம் தொகுத்துக் கூறப்படுகிறது. வேற்றுமையிலும், அல்வழியிலும் வரும் சொற்றொடர்கள் தொக்கி நிற்கும் முறையைச் சொல்வதும் தொகை மரபே ஆகும். குற்றியலுகரம் இன்சாரியையுடனும் வரும் என்பதைக் "குற்றியலுகரக் கின்னே சாரியை" என்று கூறியதை உணரவும்.

உருபியலில் வேற்றுமை உருபுகளுடன் சொற்கள் புணர்வது கூறப்பட்டுள்ளது. நீ என்னும் முன்னிலைப் பெயர், வேற்றுமைப் புணர்ச்சியில் நி என்று குறுகி நின் என்றுதலை,

"நீஎன் ஒருபெயர் நெடுமுதல் குறுகும்
ஆவயின் னகர ஒற்று கும்மே"

என்ற நூற்பாவில் காண்க.

உயிர் மயங்கியலில் ஒரு சொல்லின் ஈற்றில் உயிர் எழுத்து நிற்க, அதனோடு வந்து சேரும் மொழிகள் எவ்வாறு அமையும் என்பது அறிவிக்கப்படுகிறது. வாழிய என்பது வாழி எனப் புணர்ச்சியில் வரும் என்பதை,

"வாழிய என்னும் செயஎன் கிளவி
இறுதி யகரம் கெடுதலும் உரித்தே"

என்ற நூற்பாவில் விளக்கியுள்ளார்.

புள்ளி மயங்கியல் மெய்யுடன் வல்லினமும், சிறுபான்மை ஏனைய இனங்களும் புணரும் புணர்ச்சியைக் கூறுவதாகும். நிலைமொழியில் ணகரமெய் நிற்க வருமொழியில் வல்லினம் வந்தால் டகரமாகும் என்பதை

"ணகர இறுதி வல்லெழுத் தியையின்
டகாரம் ஆகும் வேற்றுமைப் பொருட்கே"

என்பது காண்க.

குற்றியலுகரப் புணரியலில் குற்றியலுகரப் புணர்ச்சி கூறப்பட்டுள்ளது. வன்றொடர்க் குற்றுகரம் வலி மிக்கு வருதலை "வல்லொற்றுத் தொடர் மொழி வல்லெழுத்து மிகுமே" என்று கூறுதலைக் காண்க.

இவ்வெழுத்ததிகாரத்தில் அமைந்துள்ள பிறப்பியல், தமிழ் மொழிக்குச் சிறப்புத் தரும் பகுதியாகும். இதன் துணை கொண்டு பிறமொழிகளின் ஓசைகளை நன்கு எழுதிக் காட்டலாம். ஆசிரியர் பல்வேறு ஒலிகளை நன்கு ஆய்ந்துள்ளமை, இப் பகுதியில் தெள்ளிதில் விளங்கும். இன்னின்ன ஒலிகள் சொற்களைத் தொடங்கற்குரியன, முடித்தற்குரியன என்றெல்லாம் கூறி இருக்கின்றனர். இன்னின்ன ஒலிகட்குப் பின் இன்னின்ன ஒலிகள் வரும் என்ற திட்ப நுட்பங்களை இதில் காணலாம். இந்தத் திட்ப நுட்பம் வட மொழி பாணினியத்திலும் இல்லை என்பர் திரு. எஸ். வையாபுரிப்பிள்ளை. இவ்வெழுத்ததிகாரத்திற்கு இளம் பூரணர், நச்சினர்க்கினியர் உரை எழுதியுள்ளனர். பேராசிரியரும், கல்லாடனாரும் உரை எழுதி யுள்ளார் எனத் தெரிகிறது. ஆனால், அவை கிடைத்தில.

சொல்லதிகாரத்தில் கிளவி ஆக்கம், வேற்றுமை இயல், வேற்றுமை மயங்கியல், விளிமரபு, பெயர் இயல், வினை இயல், இடை இயல், உரி இயல், எச்ச இயல் என ஒன்பது பிரிகள் உள. இவ்வதிகாரத்தில் அமைந்துள்ள நூற்பாக்கள் மொத்தம் நானூற்று அறுபத்து மூன்றாகும்.

கிளவி ஆக்கம் என்பது சொற்கள் பொருள்கள்மேல் ஆமாறு உணர்த்துவதாகும். வழுக்களைந்து சொற்களை அமைத்துக் கோடலைக் கூறுவது எனினும் ஆகும். இக்கால ஆங்கில இலக்கண நூற்களில் முதற்கண் தொடர்களைக் கூறிப் பின் ஒவ்வொரு சொற்களின் பெயர்களைக் கூறுவதைச் சிறப்பாகப் பாராட்டுவர். இம்முறை நமது பண்டைய முறை என்பது இச் சொல்லதிகாரத்துக் கிளவியாக்கம் கூறுவது கொண்டு நாம் பெருமை கொள்ளுதல் வேண்டும். இதன் பிறகே பெயர் வினை முதலியன இவ்வதிகாரத்தில் கூறப்பட்டுள்ளன.

கிளவி ஆக்கத்தில் உயர்திணையாகக் குறிக்கப்பட்டவர் யாவர் என்பதை ஆசிரியர் தொல்காப்பியனார், "உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே" என்று கூறி இருப்பது கொண்டு தெளியவும். மக்கட் சுட்டு—அதாவது நன்கு மதிக்கப்படும் மதிப்பு—அல்லாதவர் உயர்திணையினராகக் கருதப்படார் என்பதை நன்கு தொல்காப்பியர் அறிவித்துள்ளதைக் காண்க. இதனால் மக்களாகப் பிறந்தவர்கள் யாவரும்

.உயர்திணை ஆகார் என்பது நன்கு புலப்படுதலை உணரல் வேண்டும்.

வேற்றுமை இயலில் பெயர்ப் பொருளை வேறுபடுத்தும் வேற்றுமை உருபுகளைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது. எழுவாய் வேற்றுமை பற்றிக் கூறுங்கால், "எழுவாய் வேற்றுமை பெயர் தோன்று நிலையே" என்றது காண்க.

வேற்றுமை மயங்கியலில் ஒரு வேற்றுமை உருபு நிற்க வேண்டிய இடத்தில் மற்றொரு வேற்றுமை உருபு மயங்கி வருதல் கூறப்பட்டுள்ளது. இதனை,

"யாதன் உருபில் கூறிற் றாயினும்
பொருள்செல் மருங்கின் வேற்றுமை சாரும்"

என்ற நூற்பாவினை உற்று நோக்குக.

விளி மரபில் விளி வேற்றுமை பற்றிய இலக்கண விதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இகர ஈறுடைய நம்பி போன்ற சொற்களும், ஐகார ஈறுடைய நங்கை போன்ற சொற்களும் நம்பீ என்றும், நங்காய் என்றும் வரும் என்பதை "இ ஈ ஆகும், ஐ ஆய் ஆகும்" என்றது காண்க.

நால்வகைச் சொற்களில் பெயர்ச் சொற்களைப் பற்றிய விதிமுறைகளைக் கூறும் பகுதி, பெயரியல் ஆகும்; பலவகைப் பெயர்கள் இதில் கூறப்பட்டுள்ளன. ஒருவர் என்னும் சொல் ஆண்பாலுக்கும் பெண்பாலுக்கும் உரியதாக வரும் என்பதை, 'ஒருவர் என்னும் பெயர்நிலைக் கிளவி, இருபாற்கும் உரித்தே தெரியும் காலை" என்று கூறியுள்ளனர் ஆசிரியர். இந்தச் சொல் ஆட்சியின் நுட்பத்தை வியந்து குமரகுருபரர் "இறைவனை ஒருவன் என்றாலும், ஒருத்தி என்றாலும் பொருள்வழு ஏற்படுமே. ஆகவே, ஒருவர் என்று கூறின் இவ்வழுவராது. இத்தகைய வழுவராது காப்பது செம்மை சான்ற தமிழ் மொழியே ஆகும்" என்று வியந்து, அச்சிறப்பினை,

"ஒருவனுக்கும் ஒருத்திக்கும் உருவொன் றால்அவ்
உருவை இஃ தொருத்தன்என்கோ ஒருத்தி என்கோ
இருவருக்கும் உரித்தாகஒருவர் என்றோர் இயற்சொல்
இலதெனின் யான்மற் றென்சொல் கேனே"

எனப் பாடி மகிழ்ந்துள்ளார் குமரகுருபரர்.

வினையியலில் வினைச் சொற்களின் இலக்கணம் கூறப்பட்டுள்ளது. வினைச் சொல்லாவது யாது என்பதை விளக்க வந்து இடத்து,

“வினைஎனப் படுவது வேற்றுமை கொள்ளாது
நினையும் காலைக் காலமொடு தோன்றும்”

என்று கூறியுள்ளார்.

இடையியலில் இடைச் சொல் இலக்கணம் கூறுவதோடின்றி இடைச் சொற்கள் இன்னின்ன பொருளில் வரும் என்பதையும் கூறியுள்ளனர் ஆசிரியர்.

“இடைஎனப் படுப பெயரொடும் வினையொடும்
நடைபெற் றியலும் தமக்கியல் பிலவே”

என்று இடைச் சொல்லின் இலக்கணம் கூறியதைக் காண்க. கொன் என்பது இடைச்சொற்களில் ஒன்று. அதன் பொருள் இன்ன என்பதை,

“அச்சம் பயம்இலி காலம் பெருமை என்
றப்பால் நான்கே கொன்னைச் சொல்லே”

என்று சுட்டியுள்ளனர். பயம் இலி ஆவது பயன் இன்மை என்பதாம்.

தமிழில் உரிச் சொற்கள் இன்னின்ன என்பதை உயிரியலில் காணலாம். சொற்களைக் காண்பதோடின்றி அவ்வவற்றின் பொருள் இன்னின்ன என்பதையும் இதன்கண் உணரலாம். தமிழில் நிகண்டுகள் தோன்றுவதற்கு இவ்வுரி இயலே அடிப்படையாகும். ஓர் உரிச்சொல் வலி, வருத்தம் என்னும் பொருளில் வரும் என்பதை, ‘தாவே வலியும் வருத்தமும் ஆகும்’ எனப்பட்டது.

எச்ச இயல் என்பது ஒழிபியல் போன்றது. முன்னர்க் கூறப்படாமல் எஞ்சி நின்றவற்றை இதில் கூறியுள்ளனர். ஈ, தா, கொடு என்பன ஒரு பொருளையே குறிப்பினும் இச் சொற்கள் யார் யாரால் பயன்படுத்தற்குரியன என்பதை இப் பகுதியில் தெளிவுற,

“ஈஎன் கிளவி இழிந்தோன் கூற்றே
தாஎன் கிளவி ஒப்போன் கூற்றே
கொடுஎன் கிளவி உயர்ந்தோன் கூற்றே”

என்று கூறியிருத்தலைக் காண்க. இதனால் ஒவ்வொரு மொழிக்கும் ஒரு தனிச் சிறப்பு உண்டு என்பதை நன்கு உணர்தல் வேண்டும். இவ்வமைப்புத் தமிழ் மொழியில் அமைந்த ஒரு தனிச் சிறப்பாகும். இதனை உட்கொண்டே, ஆசிரியர் தொல்காப்பியனார் "எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே" என்ற நூற்பாவையும் கூறியுள்ளனர்.

இனிப் பொருளதிகாரத்தைப் பற்றிக் காண்போமாக.

பொருளாவது இன்னது என விளக்க வந்த நச்சினார்க்கினியர், "பொருளாவன அறம் பொருள் இன்பமும், அவற்றது நிலையின்மையும், அவற்றின் நீங்கிய வீடு பேறுமாம். பொருள் எனப் பொதுப்படக் கூறவே, அவற்றின் பகுதியாகிய முதல் கரு உரியும், காட்சிப் பொருளும், கருத்துப் பொருளும், அவற்றின் பகுதி ஆகிய இயங்குதிணையும், நிலைத்திணையும் பிறவும் பொருளாம்" என்றார்.

இப் பொருளதிகாரத்தில் அகத்திணை இயல், புறத்திணை இயல், களவியல், கற்பியல், பொருளியல், மெய்ப்பாட்டியல், செய்யுள் இயல், உவமை இயல், மரபியல் என ஒன்பது இயல்கள் உள.

அகத்திணையியல் என்பது அகத்திணைக்கெல்லாம் பொது இலக்கணம் கூறுவது. அகமாவது இன்பம்; திணையாவது ஒழுக்கம்; இயலாவது இலக்கணம். அகம் என்பது இன்னது என்பதை நச்சினார்க்கினியர் "ஒன்றிய அன்பான ஒருவனும் ஒருத்தியும் கூடுகின்ற காலத்துப் பிறந்த பேரின்பம். அக் கூட்டத்தின் பின்னர் இவ்விருவரும் ஒருவர்க்கொருவர் தத்தமக்குப் புலனாக இவ்வாறிருந்ததெனக் கூறப்படாததாய், யாண்டும் உள்ளத்துணர்வே நுகர்ந்து இன்பம் உறுவதோர் பொருள்" என்றனர்.

முதற் பொருள் பொழுதும், நிலனும் ஆகும். உரிப் பொருள் புணர்தல், பிரிதல், ஊடல், இரங்கல், இருத்தல் என்பன. கருப் பொருள்கள் இன்ன என்பன,

> "தெய்வம் உணாவே மாமரம் புள்பறை
> செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ
> எவ்வகை பிறவும் கருஎன மொழிப"

என்ற நூற்பாவிற் காண்க.

அகத்திணையியலில் கைக்கிளை, ஐந்திணை, பெருந்திணை என ஏழு திணைகள் விளக்கப்படும். புறத்திணையியலில் அகத்திணை ஏழற்கும் புறமாகிய ஏழு திணைகள் கூறப்படும். அவை குறிஞ்சிக்குப் புறமாக வெட்சியும், முல்லைக்குப் புறமாக வஞ்சியும், மருதத்திற்குப் புறமாக உழிஞையும், நெய்தற்குப் புறமாகத் தும்பையும், பாலைக்குப் புறமாக வாகையும், பெருந்திணைக்குப் புறமாகக் காஞ்சியும், கைக்கிளைக்குப் புறமாகப் பாடாண் திணையும் ஆகும்.

இந்தப் புறத்திணைப் பகுதியுள் போர் முறைகளையும், வீரர் இயல்புகளையும், வீரர் மனைவிமார் நிலைகளையும், நிலையாமை முதலியவைகளையும் காணலாம். வீரர்கட்கு கல் நடு நிகழ்ச்சிக்கு முன் செய்யப்படுவன இன்ன என்பதை,

> *"காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல்*
> *சீர்த்தகு சிறப்பில் பெரும்படை வாழ்த்தல்*
> *இருமூன்று வகையில் கல்லொடு புணர"*

என்று கூறப்பட்டிருத்தல் காண்க.

களவாவது, இன்னது என்பதை நச்சினார்க்கினியர், "பிறர்க்குரித்தென்று இரு முது குரவரால் கொடை எதிர்ந்த தலைவியை அவர் கொடுப்பக் கொள்ளாது, இருவரும் கரந்த உள்ளத்தோடு எதிர்ப்பட்டுப் புணர்ந்த களவு" என்றனர்.

களவியலில் ஆண் மகன் இயல்பு, பெண்கள் பண்பு முதலியன கூறப்படுதலைக் காணலாம்.

> *"பெருமையும் உரனும் ஆடூஉ மேன"*

என ஆண் மகன் இயல்பும்,

> *"அச்சமும் நாணும் மடனும் முந்துறத்த*
> *நிச்சமும் பெண்பாற் குரிய என்ப."*

என்று பெண்பால் பண்பும் கூறப்பட்டிருப்பதைக் காண்க.

தலைவன் தலைவியும், கொடுப்பாரும் அடுப்பாரும் இன்றித் தாமே கூடி மகிழும் நிலைகள் இப் பகுதியில் கூறப் படும்.

கற்பியலில் உற்றார் உறவினர் அறிய, இருவரும் மணந்து இல்லறம் நடத்தும் இயல்புகள் கூறப் பெறும். கற்பு இன்னது என்பதை

"கற்பெனப் படுவது கரணமொடு புணரக்
கொளற்குரி மரபின் கிழவன் கிழத்தியைக்
கொடைக்குரி மரபினர் கொடுப்பக் கொள்வதுவே."

என்ற நூற்பா விளக்குகிறது.

பொருள் இயலில் பொருள் இன்னது என்பதை விளக்க வந்த நச்சினார்க்கினியர், "சொல் உணர்த்தும் பொருளும் தொடர் மொழி உணர்த்தும் பொருளும் ஒருங்கு கூறப் படுவது" என்று கூறியுள்ளனர்.

இதில் நற்றாய், செவிலி, தோழி, தலைவி, தலைவன் முதலானவர்கட்குரிய பண்புகளும், செயல்களும் கூறப் படும். தலைவன் தலைவியைப் பணிந்து போகும் வழக்கம் உண்டு என்பது இப் பகுதியில் அழகுற,

"மனைவி உயர்வும் கிழவோன் பணிவும்
நினையும் காலைப் புலவியுள் உரிய"

எனக் கூறப்பட்டுள்ளது.

மெய்ப்பாட்டியலில் எண் வகைச் சுவைகள் இன்ன என்பதையும், அவை எத்தனை வகையாகப் பகுக்கப்படும் என்பதையும் காணலாம்.

"நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகைஎன்று
அப்பால் எட்டே மெய்ப்பா டென்ப"

என்று மெய்ப்பாடுகள் இன்ன என்பதைக் காட்டி இருப் பதைக் காண்க.

உவமையியல் என்பது அணியினைப்பற்றி அறிவிப்ப தாகும். என்றாலும், பிற்கால இலக்கணங்களில் காணப்படும் அணிகள் எல்லாம் இதன்கண் இடம் பெறா. உவமை அணி எவ்வெவ்வாறு வரும் என்பதை மட்டும் இதில் விளக்கப் பெறும். உவமை இந்திந்தப் பாகுபாட்டில் வரும் என்பதை,

"வினைபயன் மெய்உரு என்ற நான்கே
வகைபெற வந்த உவமைத் தோற்றம்"

என்று இதில் கூறப்பட்டுள்ளது.

செய்யுள் இயற்றும் முறை இன்னின்ன என்பதையும், செய்யுள் வகைகளையும் உணர்த்துவது செய்யுளியலாம்.

செய்யுளில் வரும் சீர்களில் மெய்யெழுத்துக்களை எண்ணக் கூடாது என்பது விதி ஆதலை,

"உயிர்இல் எழுத்தும் எண்ணப் படாஅ
உயிர்த்திறம் இயக்கம் இன்மை யான"

என்ற நூற்பாவில் விளக்கிக் காட்டப்பட்டது.

மரபியல் உயர்திணை அஃறிணை உயிர்களின் ஆண், பெண் என்பவற்றிற்குரிய பெயர்களையும், மக்கள் குழந்தைகளையும், ஏனைய உயிர் இனக் குழவிகளையும் இன்னின்ன சொற்களாலேயே கூற வேண்டும், மரஞ் செடி இவற்றின் இலை தழைகளை இன்னின்ன மொழிகளால் உணர்த்த வேண்டும் என்பன போன்ற விதிகளையும், ஓர் அறிவு முதல் ஆறறிவு எவை என்பதையும், இவ்வறிவினையுடையவை எவ்வெவ் உயிர்கள் என்பதையும் நன்கு விளக்குகிறது.

"ஒன்றறி வதுவே உற்றறி வதுவே
இரண்டறி வதுவே அதனொடு நாவே
மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே
நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே
ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே
ஆறறி வதுவே அவற்றொடு செவியே
நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே"

"புல்லும் மரமும் ஓர்அறி வினவே
நந்தும் உரளும் ஈரறி வினவே
நண்டும் தும்பியும் நான்கறி வினவே
மாவும் புள்ளும் ஐயறி வினவே
மக்கள் தாமே ஆறறி உயிரே"

என்ற நூற்பாக்களைக் காண்க.

தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள், யாப்பு என்ற இலக்கணங்களை அறிவிப்பதோடன்றி, மக்கள் வாழ்க்கையைப் பற்றிய விதி விலக்குகளையும் கூறுவது என்பதையும் நாம் மறத்தல் கூடாது. இந் நூல் பல கலைகளைப் பற்றிய குறிப்புக்களையும் கொண்டது.

இசைத் தமிழ்க் குறிப்புக்கள் தொல்காப்பியத்துள் உண்டு. "அளபிறந்து துயிர்த்தலும் ஒற்றிசை நீடலும் உளவென மொழிப இசையொடு சிவணி", "பாட்டின் இயல்பே பண்ணத் இயல்பே" என்பன போன்ற நூற்பாக்களைக் காண்க.

"கீர்த்தி மிகுபுகழ்" என்ற விதியால் இறைவன் புகழைக் (கீர்த்தியைப்) பாடுதற்கு இடம் உண்டு என்பதை உணர்க.

நாடகப் பகுதிக்கான ஏற்ற விளக்கமாக,

"நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம்"

என்ற நூற்பா விளங்கிக் கொண்டிருத்தலைக் காணவும்.

இந் நூலில் பாட்டு (Poem or lyric), உரை (Prose), நூல் (Grammar and Science), வாய்மொழி (Scripture), பிசி (Riddle), அங்கதம் (Satire and imprecation), முதுசொல் (Proverb) என்பன பற்றிக் கூறப்பட்டதையும் காணலாம்.

மறை தமிழில் உண்டு என்றதும் தொல்காப்பியத்தால் அறிய வருகிறது.

"மறைமொழி கிளந்த மந்திரத் தான"

என்றும்,

"நிறைமொழி மாந்தர் ஆணையில் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப"

என்றும் வரும் நூற்பாக்களைக் காண்க. தமிழ் மந்திரங்களைப்பற்றிக் கூற வந்த உரையாசிரியர் நச்சினார்க்கினியர், "ஈண்டுக்கூறியது தமிழ் மந்திரங்களை. அவற்றை வல்லார் வாய்க் கேட்டுணர்க" என்று விளக்கிப் போந்தார்.

தவ ஒழுக்கத்தைத் தமிழ் மக்கள் மேற்கொள்ளுதல் பற்றி "**சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே**" என்றும், தவ நூல் பற்றிய பயிற்சிக் குறிப்பினை "**வேண்டிய கல்வி யாண்டும் மூன் றிறவாது**" என்றும் கூறுதல் அறிக.

கணித நூல் உணர்ச்சி எந்த அளவுக்கு இருந்தது என்பதை "மாஎன் இளவி" என்ற நூற்பாத் தொடரால் தெளியலாம். தொல்காப்பிய மெய்ப்பாட்டியல் உள நூல் பொருளையே நன்கு எடுத்து இயம்புவதாகும். இவ்வாறு தொல்காப்பியம் எக்கலையையும் உணர்த்தும் நூலாக இருக்கிறது என்பதை அந்நூலை முறைப்படி நுணுக்கமாக ஆய்ந்தால் நன்கு தெரிய வரும்.

இனி, இந்நூலின் காலத்தை ஆய்வோமாக. பாணினி பகவான் இயற்றிய பாணினியம் இயற்றப்படுவதற்கு முன், அதாவது கி. மு. 5-ஆம் நூற்றுண்டுக்கு முற்பட்டது என்பது யாவரும் ஒப்ப முடிந்த கருத்தாகும். ஆதலின், அதனையும் கடந்து இந்நூல் எக்காலத்து இயற்றப்பட்டது என்பதைச் சிறிது காண்போம். தொல்காப்பியம் முதற் சங்கத்தின் இறுதியில் இயற்றப்பட்டதாகத் தெரிகிறது. இதனைப் பொருள் அதிகாரத்தில்

> *"பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்*
> *ஐவர் யாத்தனர் கரணம் என்ப"*

என்ற நூற்பாவின் விசேட உரையில் நச்சினர்க்கினியர் "இவ்வாசிரியன் ஆதி ஊழியின் அந்தத்தே இந்நூல் செய்தலின், முதல் நூல் ஆசிரியர் கூறியவாறே களவு நிகழ்ந்த பின்னர், கற்பு நிகழுமாறும் கூறித் தாம் நூல் செய்கின்ற காலத்துப் பொய்யும் வழுவும் பற்றி இருடிகள் யாத்தவாறு கூறினர்" என்று விளக்கம் எழுதினர். இவ் வரிகளால் இந் நூல் முதல் சங்கத்தின் இறுதியில் இயற்றப்பட்டதாதல் தெரிய வருகிறது. ஆனல், அக் காலம் இன்னதென்பது தெரிதற்கில்லை. ஈண்டுக் கரணம் என்பது திருமண வினை (செயல்) என்ற பொருளிலும், யாத்தனர் என்பது உறுதிப் படுத்தினர் என்ற பொருளிலும் இருத்தல் அறிக. தொல்காப்பியரே ஐ என்னும் சொல்லுக்கு "ஐயே தலைமை அழகும் ஆகும்" என்று கூறி இருத்தலின், ஈண்டு நச்சினர்க்கினியர் ஐயர் என்பதற்கு இருடிகள் என்று

பொருள் கூறியதை விடத் தலைவர், உள்ளம் அழகியர் என்று பொருள் காண்டலே சிறப்பாகும். கரணம் என்பது திருமணத்துக்குரிய செயலையே குறிக்கும் என்பது,

" கற்பெனப் படுவது கரணமொடு புணரக்
கொளற்குரி மரபின் கிழவன் கிழத்தியைக்
கொடைக்குரி மரபினர் கொடுப்பக்கொள் வதுவே
கொடுப்போர் இன்றியும் கரணம் உண்டே
புணர்ந்துடன் போகிய காலை யான "

என்றும் கூறிய நூற் பாக்களால் அறியவருகின்றன.

இந் நூல் சிறப்புப் பாயிர விசேட உரையில், " நான்கு கூறுமாய் மறைந்த பொருளும் உடைமையினுல் மறை என்ருர். அவை தைத்திரியமும், பௌடிகமும், தலவகாரமும், சாம வேதமும் ஆம். இனி, இருக்கும், யசுவும், சாமமும், அதர்வணமும் என்பாரும் உளர். அது பொருந்தாது. " இவர் இந் நூல் செய்த பின்னர் வேத வியாசர் சின்னுட் பல் பிணிச் சிற்றறிவினேர் உணர்தற்கு நான்கு கூருக இவற்றைச் செய்தார் ஆதலின்," என்று நச்சினுர்க்கினியர் கூறி இருக்கின்றனர்.

வேத வியாசர் வேதங்களை நான்கு கூருகப் பகுத்தவர் என்பதை வில்லிபுத்தூராரும் " தோத்திரமான தெய்வச் சுருதிகள் யாவும் நான்காக் கோத்தவன் " என்று குறிப்பிட்டுள்ளார். வேத வியாசர்தாம் மகாபாரதம் பாடியவர். தொல்காப்பியம் யாக்கப்பட்ட காலத்தில் வேதம் நான்கு பிரிவுடன் விளங்கவில்லை. ஆகவே, பாரதம் பாடப்பட்ட காலத்துக்கு முற்பட்டது இந்நூல் என்க. பாரதப் போர் கி. மு. 3102-ல் நடந்தது என்பர். பாரதத்தில் கபாடபுரத்தைப்பற்றிக் கூறப்பட்டுள்ளது. அங்குப் பாண்டியர் வாழ்ந்தனர் என்கிறது பாரதம். இதனையும் நினைவு கொள்ளுதல் நலம்.

" வினையில் நீங்கி விளங்கிய அறிவின், முனைவன் கண்டது முதல் நூல் ஆகும்," என்னும் நூற்பாவுக்கு விசேட உரை கூற வந்த பேராசிரியர் " அதுதானும் பனம்பாரனுர் வடவேங்கடம் தென் குமரி எனக் குமரி ஆற்றினை எல்லை

யாகக் கூறிப் பாயிரம் செய்தமையின், சகரர் வேள்விக் குதிரையினை நாடித் தொட்ட கடலகத்துப்பட்டுக் குமரி ஆறும் பனைநாட்டோடு கெடுதற்கு முன்னையது என்பதூஉம்" என எழுதியுள்ளனர். இக்குறிப்பு இந்நூல் இராமாயணத்துக்கும் சில நூற்றுண்டுகட்கு முற்பட்டதாதல் வேண்டுமென யூகிக்க இடம் இருக்கிறது.

பேராசிரியர் வையாபுரி பிள்ளை அவர்கள், தொல்காப்பியம் கி. பி. 5 ஆம் நூற்றுண்டில் எழுதப்பட்டிருக்கலாம் என்று தாம் எழுதிய History of Tamil Language and Literature என்னும் நூலில் "The earliest date to which Tolkappiar may be assigned is fifth Century A.D. The famous Sangam of Vajranandi was established in A.D. 470 and perhapes Tolkappiam was its literary output" என்று குறிப்பிட்டுள்ளனர். வரலாற்றுப் புலமையும், இலக்கியப் புலமையும் சிறக்க வாய்ந்தவர்கள் தொல்காப்பியரை கி. மு. வுக்கு முற்பட்டவர்கள் என்று கூறிப் பல அகப்புறச் சான்றுகளைக் காட்டிச் செல்ல, இப்பெரியார் கி. பி. நூற்றுண்டு எனக் கூறல் வியப்பினும் வியப்பு. இப் பேராசிரியர் கூற்றினும், "Whatever antiquity may be attributed to the Tolkappiam, it must have been proceeded by many centuries of Literary Culture. It lays down rules for different kinds of poetical compositions which must have been deduced from the examples furnished by the best authors whose works were then in existence." என்று டாக்டர் கால்ட்வெல் ஐயர் எழுதி இருக்கும் வரிகளைப் படிக்கும்போது மனம் ஒருவாறு அமைதி உறுகிறது. இதன் திரண்ட பொருள் தொல்காப்பியத்தின் பழமை எதுவாயினும், இலக்கியம் பல நிறைந்த காலத்துப் பல நூற்றுண்டுகட்கு முன்னர் இது தோன்றியது என்பதாம்.

அடுத்தாற்போல் தொல்காப்பியரது சமயம் இன்னது என்பதையும் சிறிது கூறல் பொருத்தம் ஆகும். தொல்காப்பியர் சைனர் என்ற கொள்கையும், சைவர் என்ற கொள்கையும் தமிழ் அறிஞர்கள் இடையே அமைந்த ஒரு கருத்தாகும். இதற்கிடையே வைணவர் என்ற கருத்தும் ஒரு சிலரிடையே உண்டு.

தொல்காப்பியர் வைணவர் என்று சாதிப்பார் கூற்றுக்கு ஆதரமாக இரண்டொரு நூற்பாக்களைக் காட்டுவர். அவற்றுள் ஒன்று,

> "மாயோன் மேய காடுறை உலகமும்
> சேயோன் மேய மைவரை உலகமும்
> வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
> வருணன் மேய பெருமணல் உலகமும்
> முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல்எனச்
> சொல்லிய முறையால் சொல்லவும் படுமே."

என்பது. இந் நூற்பாவில் மாயோனை முதற்கண் வைத்துப் பேசப்பட்டமையின், உயர்வு தாழ்வு கருதி இம் முறையில் திருமால் முதற்கண் வைத்துக்கூறித் திருமாலுக்கு முதன்மை தந்துள்ளனர் தொல்காப்பியர் என்பர். இதற்கு இலக்கணமாகச் சிறப்புடைப் பொருளை முற்படக் கிளத்தல் என்ற விதியையும் காட்டுவர். மேலும், தொல்காப்பியர் காலத்தில் திருமால் வழிபாடு நால்வகை நிலத்திலும் மிகுதியாய்ப் பரவி இருத்தல் வேண்டும் என்றும் கூறுகின்றனர். இனி, இவ்வாறு கருதுவார் கூற்று எவ்வெக் காரணங்களால் பொருந்தாது என்பதைச் சிறிது காண்போம்.

திருமால் நால்வகை நிலத்தினர்க்கும் வழிபடு தெய்வம் என்பதைத் திருமால் அன்பர்கள் அன்பினால் கூறலாமே அன்றி, இலக்கண இலக்கிய வழி கூற இயலாது. திருமால் முல்லை நிலத்திற்கு மட்டும் தெய்வம் என்பதை அறுதியிட்டு உறுதிப்படுத்தவே சேக்கிழார் பெருமானார், "அங்கண் முல்லையின் தெய்வம் என்று அருந்தமிழ் உரைக்கும் செங்கண்மால் தொழும் சிவன் மகிழ்திரு முல்லை வாயில்" என்று பாடிக்காட்டி இருப்பதைக் காண்க.

தொல்காப்பியர்க்கு முல்லை நிலத்தின் ஒழுக்கத்தைச் சிறப்பிக்க வேண்டி, முதற்கண் முல்லையைக் கூறவேண்டியதாயிற்றே ஒழிய, திருமாலை முதற்கண் வைத்துப் பேச வேண்டும் என்பது அன்று. நூல் ஆசிரியரது உட்கிடையை நன்குணர்ந்த நச்சினார்க்கினியர்; "இனி, முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என்ற முறை என்ன எனின், இவ்வொழுக்கம் எல்லாம் இல்லறம் பற்றிய ஒழுக்கம் ஆதலின்,

கற்பொடு பொருந்திக் கணவன் சொற்பிழையாது இல்லிருந்து நல்லறம் செய்தல் மகளிரது இயற்கை முல்லை ஆதலின், அது முற்கூறப்பட்டது" என்று விளக்கி இருப்பதை நன்கு ஓர்தல் வேண்டும். இதைக் கருதும்போது "சிறப்புடைப் பொருளை முற்படக் கிளத்தல்" என்ற இலக்கண விதி சாலவும் பொருத்தமானதே. "மாயோன் மேய" என்ற சூத்திரத்தின் ஈற்றடியாகிய "சொல்லிய முறையால் சொல்லவும் படுமே" என்றதையும் கவனித்தல் வேண்டும். இதனை நச்சினார்க்கினியர் நன்கு சிந்தித்துள்ளார். அங்ஙனம் சிந்தித்த அவர் "உம்மை எதிர்மறை ஆகலின், இம்முறை அன்றிச் சொல்லவும் படும்" என்பது பொருளாயிற்று. அது தொகை நூல்களிலும், கீழ்க்கணக்குகளினும் இம்முறை மயங்கி வரக்கோத்தவாறு காண்க." என்று விளக்கம் கூறுதல் காண்க.

அடுத்தாற்போல் தொல்காப்பியர் திருமாலுக்குச் சிறப்பிடம் தந்துள்ளனர் என்பதற்கு எடுத்துக்காட்டும் நூற்பா,

> *"மாயோன் மேய மன்பெருஞ் சிறப்பின்*
> *தாவா விழுப்புகழ்ப் பூவை நிலையும்"*

என்பதாகும். இதற்கு உரை கூறவந்த இளம்பூரணர் "மாயோனைப் பொருந்திய நிலைபெற்ற பெருஞ் சிறப்பினையுடைய கெடாத விழுமிய புகழைப் பொருந்திய பூவை நிலையைக் கூறுதலும்" என்றும், "மாயோன் காத்தல் கடவுள், பூவை வளர்ச்சியைக் கண்டு மாயோன் நிறத்தை ஒத்ததெனப் புகழ்தல்" என்றும், எழுதியதோடு இன்றி "மாயோன் முதலாகிய தேவர்களோடு உவமித்தலே பூவைநிலை என்ப" என்றும், "வேறு கடவுளரை நோக்கி உவமித்து வருபவை எல்லாம் பூவை நிலையாகக் கொள்க" என்றும் விளக்கம் தந்து பேசியுள்ளனர். இதற்கு நச்சினார்க்கினியர் விளக்கம் தரும்போது "மாயோன் விழுப்புகழ் மாயனுடைய காத்தல் புகழையும், 'மேய பெருஞ் சிறப்பிற்றாவா விழுப்புகழ்—ஏனோர்க்கு உரியவாய் மேவிய பெரிய தலைமையில் கெடாத படைத்தல், அழித்தல் என்னும் புகழ்களையும், மன் பூவை நிலையும், மன்னர் தொழிலுக்கு உவமையாகக் கூறும் பூவை நிலையும்" என உரை எழுதியதோடின்றி, "மன்" எனப் பொதுப்படக் கூறியதனால்

நெடுநில மன்னர்க்கும் குறுநில மன்னர் முதலியோர்க்கும் கொள்க. பெருஞ் சிறப்பு என்றதனால், "படைத்தலும், காத்தலும், அழித்தலும் அன்றி, அவர் அவர் தாமாகக் கூறலும், முருகன் இந்திரன் முதலியோர்க்குக் கூறலும் கொள்க," என்றும், "தாவா என்றதனானே" அரசர் புகழைக்காட்டி வாழ்வோர்க்குக் கூறுதலும், "அவரை அரசர் பெயரால் கூறுதலும் கொள்க," என்றும் விளக்கி-யுள்ளனர்.

மேலே சுட்டிய இருபெரும் உரை ஆசிரியர்கள் விளக்கங்களில் திருமாலியர் கருதுவது போலத் திரு-மாலுக்கே சிறப்பிடம் தந்து தொல்காப்பியர் கூறியுள்ளார் என்பது பெறப்படாமை அறிக.

தொல்காப்பியப் பாயிரத்தில் வரும் "பல்புகழ் நிறுத்த படிமையோனே" என்ற தொடரில் உள்ள படிமையோன் என்பது சமணத் துறவிகட்குரிய பெயர் ஆதலின், தொல்-காப்பியர் சமணராதல் வேண்டும் என்பர் ஒரு சிலர். இத்-துடன் இன்றித் தொல்காப்பியர் உயிர்களை ஓர் அறிவு ஈர் அறிவு முதலாகப் பாகுபாடு செய்து கூறுதல் சமணர் மரபு என்று கூறி, ஆசிரியர் சமண மரபினர் என்பர். தொல்-காப்பியர் கூறிய நூற்பா,

"ஒன்றறி வதுவே உற்றறி வதுவே
இரண்டறி வதுவே அதனொடு நாவே
மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே
நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே
ஐந்தறி வதுவே அவற்றொடு மனனே
நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே"

என்பது.

இவ்வாறு கூறுவார்க்குக் கா. சுப்பிரமணியப் பிள்ளை அவர்கள், தமது இலக்கிய வரலாற்றில், "ஆசிரியர் காலம் வால்மீகி இராமாயணம் எழுந்த கி. மு. 7-ஆவது நூற்றாண்-டிற்கு முற்பட்டதாகலானும், சமணம் பௌத்தம் முதலியன அக்காலத்திற்குப் பின் தோன்றினமையாலும் ஆசிரியர் அம்மதத்தைச் சேர்ந்தவர் என்று கோடல் தவறாகும்" என்று எழுதி இருப்பதே ஏற்ற விடையாகும்.

இனித் தொல்காப்பியர் சைவர் என்பதற்கு ஏற்ற முறையில் தொல்காப்பியத்தில் எவையேனும் அகச்சான்றுகள் ஆணித்தரமாக உளவோ என்பதைக் காண்போம். தொல்காப்பிய மரபியலில்,

"வினையின் நீங்கி விளங்கிய அறிவின்
முனைவன் கண்டது முதல்நூல் ஆகும்"

என்னும் நூற்பா உளது. ஈண்டு இறைவனது உண்மை இயல்பு நன்கு விளக்கப்பட்டுள்ளது. உயிர்கள் வினையினின்று நீங்காதவை, சிற்றறிவுடையவை. தேவர்களும் இத்தகையவர்களே. வினையே ஏனைய தெய்வங்கள் இறத்தற்கும் பிறத்தற்கும் காரணம். ஏனைய தெய்வங்கள் பிறந்து இறந்து வருவதை இலக்கியங்களில் காண்கிறோம். அவர்கள் அறிவும் சிற்றறிவு என்பதை, "ஞானக்கண் அதுகொண்டு நாடுமாறு உணராதே" என்று அத் தேவர்களின் சிற்றறிவினை எடுத்து மொழிந்துள்ளமை கொண்டும் தெளியலாம். இன்னோரன்ன காரணங்களால்தான் முழுமுதற் பரம்பொருளினை "வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவன்" என்றனர் ஆசிரியர். இங்கு முனைவன் என்றது சிவபெருமானை என்பது புலனாகிறது. இதனைத் திருமுறைகளில் பரக்கக் காணலாம். மணிமொழியார் "முனைவனே முதல் அந்தம் இல்லா மல்லல் கரைகாட்டி ஆட்கொண்டாய்" என்று கூறி யிருப்பது இப்பொருட்கு இயைந்த எடுத்துக் காட்டாம். இதனால் தொல்காப்பியரைச் சைவர் என்று கூறலாம் என்பர். அடுத்தாற்போல்,

"கொடிநிலை கந்தழி வள்ளி என்று
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே"

என்னும் நூற்பாவினைக் காட்டித் தொல்காப்பியர் சைவர் என வற்புறுத்துவர். ஈண்டுக் கொடி 'நிலை, கந்தழி, வள்ளி என்ற சொற்களுக்கு உரைகூற வந்த நச்சினார்க்கினியர் முறையே, "கீழ்த்திசைக் கண்ணே நிலைபெற்றுத் தோன்றும் வெஞ்சுடர் மண்டிலம், ஒருபற்றுக் கோடும் இன்றி அருவாகித் தானே நிற்கும் தத்துவம் கடந்த பொருள், தண்கதிர் மண்டிலம்" என்று உரை எழுதியுள்ளார்.

கந்தழி என்பதற்குக் கூறிய விளக்கத்திற்கு, எடுத்துக் காட்டினை இயம்பும்போது நச்சினார்க்கினியர்,

"சார்பினல் தோன்றாது தான்அருவாய் எப்பொருட்கும்
சார்பெனநின் றெஞ்சான்றும் இன்பம் தகைத்தரோ
வாய்மொழியான் மெய்யான் மனத்தான் அறிவறிந்த
தூய்மையதாம் மைதீர் சுடர்"

என்று உதாரணம் காட்டியதோடு இன்றி,

"உற்ற ஆக்கையின் உறுபொருள் நறுமலர் எழுதரு நாற்றம் போல்
பற்ற லாவதோர் நிலையிலாப் பரம்பொருள் அப்பொருள்"

என்ற திருவாசகத்தையும் எடுத்துக்காட்டி, "அதனை (கந்தழியை) உணர்ந்தோர் கூறிய ஆற்றால் உணர்க" என்று எழுதிப் போந்தார். தத்துவங் கடந்த பொருள் (கந்தழி), வெஞ்சுடர் (கொடிநிலை), தண்கதிர் (வள்ளி) ஆகிய இவற்றைக் கண்ணாக உடையவன் இறைவன் என்பது ஆன்றோர் வாக்கால் அறிய வருகிறது. இதனை உமையம்மையார் இறைவனது இரு கண்களை விளையாட்டாக மூடிய போது, உலகு இருண்டது என்பதைத் தேவாரத் திருமுறைகள், "நலமலி மங்கை நங்கை விளையாடி ஓடி நயனத்தலங்கள் கரமா, உலகினை ஏழும் முற்றும் இருள் மூட மூட" என்றும், "மலை மடந்தை விளையாடி வளையாடு கரத்தால் மகிழ்ந்தவன்கண் புதைத்தலுமே வல்லிருளாய் எல்லா உலகுடன்தான், மூடஇருள்" என்றும் கூறுதல் காண்க. இத்துடன் இன்றி, "அருக்கன் ஆவான் அரன் உரு அல்லனோ" என்று இத்திருமுறை வினாதலும் காண்க. ஆகவே, கொடிநிலை என்று தொடங்கும் நூற்பா சிவ பெருமான் வணக்கக் குறிப்பினைக் காட்டுதலின், தொல்காப்பியர் சைவர் என்பர்.

தொல்காப்பியர் சைவர் என்பதற்குச் சான்றாக மூன்றாவதாகக் கூறும் காரணம், "மலர்தலை உலகத்து மரபு நன்கறியப் பலர்செலச், செல்லாக் காடு வாழ்த்து" என்று தொல்காப்பியர் காட்டை வாழ்த்திக் கூறுவதால் என்க என்பர். இத் தொடர்ப் பொருளை விளக்கவந்த நச்சினார்க்கினியர், "அகன்ற இடத்தினையுடைய உலகங்களிடத்து வரலாற்று முறையினைப் பலரும் பெரிதும் உணரும்படி-

யாகப் பிறந்தோர் எல்லோரும் இறந்துபோகவும், எஞ்ஞான்-றும் இறப்பின்றி நிலைபெற்ற புறங்காட்டினை வாழ்த்து-தலாகும்'' என்று எழுதியுள்ளனர். இக்கருத்தே தோன்றும் வண்ணம் இளம்பூரணர் இடமகன்ற உலகத்தின் மரபு நன்கு விளங்கப் பலரும் "மாயத் தான் மாயாத புறங்காடு வாழ்த்தலும்'' என்று எழுதி இருக்கின்றனர்.

ஈண்டுக் காடு வாழ்த்து என்பது ஆகு பெயராக, அக்காட்டில் எல்லாம் அழியத் தான் அழியாது நிற்கும் சிவ-பெருமானை வாழ்த்திய வாழ்த்தாகும். இதுதான் பொருள் என்பது மேலேகாட்டிய தொடரில் வரும், "பலர் செலத்தான் செலா'' என்ற தொடரில் தொனிப்பதைக் காண்க. சிவ-பெருமான் ஒருவனே எல்லாம் அழிய, தான் அழியாதவன். "ஈறி லாதவன் ஈசன் ஒருவனே'' என்ற அப்பர் வாக்கைக் காண்க. மேலும், ஈண்டு அச்சூத்திரத்திற்கு உதாரணம் காட்ட வந்த நச்சினார்க்கினியர்,

"உலகுபொதி உருவம் தன்னுருவ மாகப்
பலர்பரவத் தக்க பறந்தலை நன்காடு"

என்று பெரும்பொருள் விளக்கம் என்னும் நூல் பாடல்களி-லிருந்து காட்டியுள்ளனர். இம்மேற்கோள் அடிகளின் பலர் பரவத்தக்க பறந்தலை நன்காடு என்பது அந்நன் காட்டில் நடமாடும் கூத்தப் பெருமானையே குறிக்கப்பட்டதை யூகிக்கவும்.

இப்பொருளே "எல்லாப் புறனும்தான் கண்டு உலகத்து மன்பதைக் கெல்லாம் தானாய்த் தன்புறம் காண்போர்க் காண்பறி யாதே'' என்ற புறநானூற்று அடி-களில் இருப்பதையும் காண்க. இன்னோரன்ன காரணங் களைக் காட்டித் தொல்காப்பியர் சைவர் என்பர்.

செங்கோன் தரைச் செலவு: இதனை தலைச் சங்க காலத்து நிலவிய நூல் என்பர். இதன் சிறப்புப் பாயிரத்துள் முத்தூர் அகத்தியன் என்னும் பெயரிய ஒரு புலவர் இருந்தனர் என்பது புலனாகிறது. இது முற்றும் கிடைக்கப் பெறாத நூல். இதுவரை கிடைத்த பாடல்கள் ஏழு. இவ்வேழு பாடற்கும் உரை எழுதப்பட்டு வெளிவந்துளது. இந் நூலில் பாயிரப் பாடலைப் பாடியவர் ஏழ்தெங்க நாட்டு முத்தூர் அகத்தியன் என்பவர்.

ஏனைய நூற்களைப் பற்றிய குறிப்புக்களை முத்தமிழ் என்னும் தலைப்பில் காண்க.

6. எட்டுத் தொகை
(Third Sangam—Anthologies Ettuthogai)

சங்க காலத்தில் தொகை நூல்கள் மிகுதி என்னலாம். இத்தொகை நூல்களில் ஒரு புலவரது பாடல்களை மட்டும் காணப் பெருமல், பல புலவர்கள் பாடிய பாடல்களைக் காண-லாம். அப்பாடல்கள் பல்வேறு சமயங்களில் பாடப்பட்டன-வாக இருக்கும். இப்பாடல்கள் ஆங்காங்குச் சிதறுண்டு கிடந்தன. அங்ஙனம் சிதறுண்ட பாக்களை அரசர்கள் தக்க அறிஞர்களைக் கொண்டு தொகுத்து உதவுமாறு செய்தார்கள். அங்ஙனம் தொகுக்கப்பட்ட நூற்கள் வகையைச் சேர்ந்ததே எட்டுத் தொகை என்பது. இத் தொகை நூற்களின் வழி பண்டைக்கால மக்களின் ஒழுகலாறு, மூவேந்தர்கள், வள்ளல்கள் ஆகிய இவர்களைப் பற்றிய வாழ்க்கைக் குறிப்புக்கள், நல்ல அறிவுரைகள், புலவர்களின் பெருமித வாழ்க்கை இன்னோரன்ன பல குறிப்புக்களை நன்கு உணர்ந்து கொள்ளலாம். இந்நூற்கள் அகத்தைப் பற்றியும், புறத்தைப் பற்றியும் கூறுவனவாக உள்ளன. இத்தொகை நூற்களின் பெயர்கள் பாட்டின் அளவாலும், பொருட் சிறப்பாலும், பாவின் பெயராலும், குறுமை நெடுமையாலும் அமைந்து கிடக்கின்றன. இவ்-வெட்டுத் தொகை நூற்களின் அகப் பொருளைப் பற்றிய பாடல்களே மிகுதியாக உள்ளன. அவ் எட்டுத் தொகை நூல்கள் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறு நூறு, பதிற்றுப் பத்து, பரிபாடல், கலித்தொகை, அக நானூறு, புறநானூறு என்பன.

"நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு
ஒத்த பதிற்றுப் பத்தோங்கு பரிபாடல்
கற்றறிந்தார் ஏத்தும் கலியோ டகம்புறமென்
றித்திறத்த எட்டுத் தொகை."

என்பது பழம் பாடல். இனி எட்டுத் தொகை நூற்களில் கண்ட நூற்களைத் தனித்தனியே ஆய்வோமாக.

நற்றிணை: சங்க மருவிய நூல்களில் எட்டுத் தொகை-யைச் சார்ந்த முதல் நூல். இஃது அகப்பொருள் பற்றி-யது. அகப் பொருட் பிரிவுகளில் திணையும் ஒன்றாகும்.

அத்திணைப் பெயரையே இது பெற்றிருப்பதனால், இதற்கு இப்பெயரையும் சூட்டி, நல் என்ற அடைமொழியையும் சேர்த்து, இந் நூலுக்குப் பெயர் தந்துள்ளனர். இதனால் இதன் சிறப்பு நன்கு தெரிய வருகிறது. மேலும், எட்டுத் தொகை நூற்களுள் முதற்கண் வைத்துக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந் நூலில் 175 புலவர்கள் பாடிய நானூறு பாக்கள் உள. கடவுள் வாழ்த்தைப் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார். அவ் வாழ்த்துத் திருமாலைப் பற்றியது. இந் நூலின் உள்ள ஒவ்வொரு பாட்டின் அடி வரையறை ஒன்பதடி சிறுமையும், பன்னிரண்டடிப் பெருமையும் ஆகும். இந்நூல் முழுமைக்கும் செவ்விய முறையில் திரு. பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் அவர்கள் உரை எழுதியுள்ளார். இந் நூலைத் தொகுப்பிக்குமாறு செய்து உதவியவன் பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி என்பவன். இந் நூலில் பெண்பால் புலவர்கள் பாடிய பாடல்களும் உண்டு.

இந் நூல் வழி நாம் அறியும் செய்திகள் பலவாகும். இந் நூலில் காணப்படும் புலவர்களின் சிலரது பெயர்களை அறிதற்கு இல்லை என்றாலும், அவர்கள் பாடிய பாடல்களில் அமைந்துள்ள அரிய தொடர்களாலேயே குறிக்கப் பெற்றுள்ளனர். இக்கருத்திற்குச் சான்றாக, ‘வண்ணப்புறக் கந்தரத்தனார், தனி மகனார், விழிக்கண் பேதைப் பெருங் கண்ணனார், தும்பிசேர்கீரனார், தேய்புரிபழங்கயிற்றனார்.’ என்ற பெயர்களை எடுத்துக் காட்டலாம்.

> “வாழ்வோர் போகிய பேரூர்ப்
> பாழ்காத் திருந்த தனிமகன் போன்றே”

> “தேய்புரிப் பழங்கயிறு போல
> வீவது கொல்என் வருந்திய உடம்பே”

என்ற அடிகளைக் காண்க.

உவமை அழகுகட்கும் இந்நூல் சிறந்த எடுத்துக் காட்டாகும். மழையின் மின்னலுக்கு உவமையாகக் கொல்லன் செய்யும் செம்புக் குடத்திலிருந்து வரும் பொறிகள் காட்டப்பட்டுள்ளன.

> “கம்மியர் செம்புசொரி பானையின் மின்னி”

என்னும் அடியே இதற்குச் சான்று. அஃறிணை உயிர்களை-யும் உறவாய்க் கருதியவர்கள் தமிழர் என்பதை இந் நற்றிணைப் பாடல் நன்கு தெரிவிக்கின்றது. ஒரு தாய் தன் மகளுக்குத் தான் இளமையில் வளர்த்த புன்னையைப் பற்றிக் கூறுகையில், அப்புன்னை தன் மூத்த மகள் என்று கூறினதாகப் பாடிய பாடல் அடிகள்தாம், "நெய்பெய் தீம்-பால் பெய்தினிது வளர்ப்ப நும்மினும் சிறந்தது நுவ்வை ஆகும் என்று அன்னை கூறினள் புன்னையது சிறப்பே" என்பன. இப்புன்னை தலைமகளது தமக்கை முறையாக அமைதலின், அதன் நிழற்கீழ் தானும் தன் காதலனும் இருந்து நகையாடல் பற்றி நாணுவதாகக் கூறிய,

> "அம்ம நாணுதும் நும்மொடு நகையே
> துறைகெழு கொண்கநீ நல்கின்
> நிறைபடு நீழல் பிறவுமார் உளவே"

என்ற அடிகளைக் காண்க.

உண்மைச் செல்வம் இன்னது என்பதை இந்நூல்,

> "நெடிய மொழிதலும் கடிய ஊர்தலும்
> செல்வம் அன்றுதன் செய்வினைப் பயனே
> சான்றோர் செல்வம் என்பது சேர்ந்தோர்
> புன்கண் அஞ்சும் பண்பின்
> மென்கட் செல்வம் செல்வம் என்பதுவே"

என்று பாடிக் காட்டுகிறது.

உண்மைக் காதலின் இயல்பைக் கீழ்வரும் அடிகளில் காணலாம்.

> "சாதல் அஞ்சேன் அஞ்சுவல் சாவில்
> பிறப்புப் பிரிவ தாகுவ தாயின்
> மறக்குவன் கொல்லென் காதலன் எனவே."

இதன் கருத்து, இறப்பதற்கு அஞ்சவில்லை. மறுபிறப்பில் தலைவனை மறக்க நேருமோ என்பதுபற்றித்தான் அஞ்சுவன் என்று தலைவி கூறியதாகும். அக்காலத்துக் கற்புடைப் பெண்கள் பிறந்தகம் செல்வச் சிறப்பில் இருந்தும், தான் புக்க அகம் வறுமைக்கு நிலைக் களனாக இருப்பினும் செல்வ வளத்தை விரும்பாள் என்னும் குறிப்பினை,

"கொண்ட கொழுநன் குடிவறன் உற்றெனக்
கொடுத்த தந்தை கொழுஞ்சோ றுள்ளாள்"

என்ற அடிகளில் காண்க.

ஆடவர்களே பொருள் தேடுதற்குரியர். அதன் பொருட்டு வெளியில் செல்வர் என்ற குறிப்பை "செயல்படு மனத்தர் செய்பொருட்கு அகல்வர் ஆடவர், அதுவதன் பண்பே" என்ற அடியில் காணலாம். நெய்தல் நில மக்கள் என்றும் வளம் உடையவர் என்பதைக் காட்டும் அடிகள்.

"இருங்கதிர் நெல்லின் யாணர்த வறப்பின்
மாநீர் முண்டகம் தாஅய்ச் செறுபுலர்ந்து
இருங்கழிச் செறுவின் வெள்ளுப்பு விளையும்"

என்பன. அக்காலத்தில் ஊர்தியில் வருவோர், உயிர்கட்கு உறுகண் உருவகையில் ஊர்தியைக் கொண்டு செலுத்துவர் என்பது.

"ஆழி மருங்கின் அலவன் ஓம்பி
வலவன் வள்பாய்ந் தூர"

என்ற அடிகள் புலப்படுத்துகின்றன.

இன்னோரன்ன பல கருத்துக்கள் இந்நூலின்கண் உள. சில அரிய குறிப்புக்களுக்கும் இடனாய் அமைந்ததும் இந்நூலே. இதில் கண்ணகி செய்த செயல் போன்ற ஒரு குறிப்புக் காணப்படுகிறது. அது,

"ஏதி லாளன் கவலை கவற்ற
ஒருமுலை அறுத்த திருமா உண்ணி"

என்பது. இதில் கூறப்பட்ட கண்ணகியின் செயல் கோவலன் மனைவி செய்த செயல் அன்று; வேறு ஒருத்தியின் செயல் என்று அறிஞர்கள் கூறுவர். இஃது ஆய்தற்குரியது. நற்றிணை கடைச் சங்க காலத்து நூல் என்றாலும், இடைச் சங்க காலத்து முடத்திருமாறனுடைய பாடல்கள் இரண்டு, இதன்கண் உள என்பதையும் அறிதல் வேண்டும்.

குறுந்தொகை: எட்டுத்தொகை நூல்களுள் இரண்டாவது. நல்ல குறுந்தொகை என்ற அடைகொடுத்துக் கூறியிருப்பது கொண்டு இதன் பெருமையினை அறியலாம்.

இதனைத் தொகுத்தோன் பூரிக்கோ. இதில் உள்ள பாடல்களின் சிறுமை நாலடியும், பெருமை எட்டடியும் ஆகும். இதனால் தான் இது குறுந்தொகை எனப்பட்டது. முதன் முதல் தொகுக்கப்பட்ட நூல் இஃது என்பது அறிஞர்களின் முடிவு. இதில் பாரதம் பாடிய பெருந்தேவனார் செய்த கடவுள் வாழ்த்துடன் ஏனைய அகப்பொருள் தழுவிய நானூறு அகவல் பாக்கள் உள. இந்நூலில் முந்நூற்று எண்பது பாடல்கட்குப் பேராசிரியரும், ஏனைய இருபது செய்யுள்கட்கு நச்சினார்க்கினியரும் உரை எழுதினர் என்பது தெரிகிறது. ஆனால், அவ்வுரைகள் காணக் கிடைத்தில. என்றாலும், டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் சிறந்த உரையினை இந்நூல் முழுமைக்கும் எழுதியுள்ளனர். இந்நூலின் பாடல்கள் இருநூற்று ஆறு புலவர்களால் பாடப்பட்டுள்ளன. இந்நூலில் காணப்படும் புலவர்களில் சிலர் தம் பெயரால் குறிப்பிடப் படாமல், தாம் பாடிய பாடல்களில் அமைத்த தொடர்களாலும், உவமைகளாலும் குறிக்கப்பட்டுள்ளனர். கயமனார், கள்ளில் கேளில் ஆத்திரையார், ஓரேர் உழவர், மீனெறி தூண்டிலார், அணில் ஆடு முன்றிலார், செம்புலப்பெயல் நீரார், விட்ட குதிரையார், நெடு வெண்ணியனார், குப்பைக் கோழியார் என்பன போன்ற பெயர்கள் எடுத்துக் காட்டுக்கள் ஆகும். மதுரை ஆலவாய் அவிர்ச்சடைக் கடவுள் தருமிக்கு எழுதித்தந்த "கொங்கு தேர் வாழ்க்கை" என்னும் பாடல் இத்தொகை நூலில்தான் உள்ளது. இந்நூல் பாடல்கள் பல உரையாசிரியர்களால் பெரிதும் எடுத்துக்காட்டாக எடுத்து ஆளப்பட்டுள்ளன.

இந்நூல் வழி அறிய வரும் செய்திகள் பற்பல. மலையில் உள்ள மரங்களை வெட்டிச் சுட்டபின் தினை, ஐவனம் விதைப்பர். இரவில் கொள்ளிக் கட்டைகளை வைத்துக் கொண்டு தினையினைக் காப்பர். முதல் விளைவைக் கடவுளுக்குப் படைத்தபின்பே உண்பர். இன்னோர் அன்ன அரிய செயல்கள் குறிஞ்சி நில மக்களுடையன. பாலையில் உள்ள நீர் வெவ்வெங்கலுழி எனப்படும். பாலையில் செல்வார் உண்ண நெல்லி மரம் வளர்க்கப்படும். அதனால் அது "அறந் தலைப்பட்ட நெல்லி" எனப்படும். அம்பைப் பாறையில் தீட்டி நகத்தில் அதன் கூர்மையைப் பார்ப்பர். பாலையில் நீர் அரிதாதலின் மரப்பட்டையை மென்று அதில் வரும் நீரால் சிறிது நீர் வேட்கையினைத் தீர்த்துக்கொள்வர்.

இவ்வாறுன குறிப்புக்கள் பாலை பற்றிய பாடல்களினுல் தெரிய வருகின்றன.

முல்லை நிலம் செம்மண்ணுடையதாக இருத்தலும் உண்டு. அங்கு மழை பெய்ய அது செந்நிறத்துடன் துலங்கும். ஆகவே, அதனைச் செம்புலம் என்று கூறுவர். வரகு முல்லை நில மக்கள் உணவு. ஓலையைக் குடையாக இந்நிலமக்கள் பயன்படுத்துவர். இவை போன்ற பல செய்திகளை முல்லை பற்றிய பாடல்களில் காணலாம்.

மருதம் நாகரிகம் மிக்க நிலம் என்பதும், இங்கு இல்லறம் இனிது நடக்கும் என்பதும், இங்குள்ளவர்கள் மகிழ்வில் திளைத்தலின் மகிழ்நர் என்ற பெயரைப் பெற்றிருப்பதும், ஈரம் கண்டதும் உழவர் விதை விதைக்க விரைதலும் போன்ற மற்றும் பல செய்திகள் மருதப் பாடல்களால் அறியலாம்.

நெய்தல் நிலம் உப்பு விளை கழனி எனப்படும். இங்குள்ள பரதவர் தாம் பிடித்த திமிங்கிலத்தை எறி உளியால் எறிந்து கொல்வர். பரதவர் சுருவால் அன்றிப் பெரு மீன்களால் காயம்படின், அஃது ஆறும் வரையில் மீன் பிடிக்கச் செல்லார். இப் புண்ணை ஆற்றுதற்குப் பரதவன் மனைவி பெரிதும் துணைபுரிவள். மணல் பரப்பு, கடல்கரை மரங்கள் உதிர்த்த மலரால் மூடப்பட்டு இருக்கும். இவ்விடத்தில் காதலரும், தம்பதிகளும், குழந்தைகளும் அமர்ந்து அளவளாவி விளையாடுவர். இந்தச் செய்திகளைப் போன்ற பிற செய்திகளை நெய்தல் பற்றிய பாடல்களில் பரக்கக் காணலாம்.

இயற்கைக் காட்சிகள் பல இதன்கண் உள. தாய்ப் பறவையின் வருகையைக் குஞ்சுப் பறவை எதிர்நோக்கும் நிலையினையும், அத் தாய்ப் பறவை தன் குஞ்சுக்குக் கொணர்ந்த உணவைத் தன் குஞ்சு தன் வாயைத் திறக்கும் தருவாயில் செருகுகின்ற காட்சியினையும்,

> *"ஞாயிறு பட்ட அகல்வாய் வானத்*
> *தளிய தாமே கொடுஞ்சிறைப் பறவை*
> *இறையுற ஓங்கிய நெறிஅயல் மராஅத்த*
> *பிள்ளை யுள்வாய்ச் செரீஇய*
> *இரைகொண் டமையின் விரையுமால் செலவே."*

என்னும் வரிகளில் காண்க.

ஆமையின் பார்ப்புத் தாய் முகம் நோக்கி வளருமாம். இதனைத் தலைவி தலைவனைக் காணும்தோறும் தன் காமம் வளர்தற்கு உவமை காட்டி இந்நூல் அறிவிக்கிறது. "யாமைப் பார்ப்பின் அன்ன காமம்" என்ற தொடரைக் காண்க. ஒந்திபாலை நிலத்தவர்க்கு நிமித்தம் காட்டும் உயிர் இனங்களில் ஒன்று. உடன்கட்டை ஏறுதல் உயர்-திணை மக்களுக்கே அன்றி, அஃறிணை உயிர்கட்கும் உண்டு என்பதை ஒரு குறுந்தொகைப் பாடல்,

> *"கருங்கண் தாக்கலை பெரும்பிறி துற்றெனக்*
> *கைம்மை யுய்யாக் காமர் மந்தி*
> *கல்லா வன்பறழ் கிளைமுதல் சேர்த்தி*
> *ஓங்குவரை அடுக்கத்துப் பாய்ந்துயிர் செகுக்கும்."*

என்று கூறுகிறது.

நாய் பல வீடுகளில் வளர்க்கப்பட்டாலும், பிராம்மணர்-கள் வீட்டில் வளர்க்கப்படமாட்டாது என்பதை "ஆசில் தெருவில் நாய்இல் வியன்கடை" என்ற தொடர்கொண்டு தெளியலாம். இவ்வாறே பெரும்பாண் ஆற்றுப் படையிலும் "மனைஉறை கோழியொடு ஞமலி துன்னாது மறைகாப் பாளர் உறைபதி" என்ற கருத்து வருகிறது.

கணந்துள் என்பது ஒரு பறவை. இது பாலையில் வாழ்வது. இது தன் குரலை எழுப்பி, "ஆறலை கள்வர் உளர்; இங்கு வராதீர்" என அவ்வழியே போவார்க்கு உணர்த்துமாம். இச்செய்தி,

> *"ஆற்றயல் இருந்த இருந்தோட்டு அம்சிறை*
> *நெடுங்கால் கணந்துள் ஆள்அறி வுறீஇ*
> *ஆறுசெல் வம்பலர் படைதலை தவிர்க்கும்"*

என்ற அடிகளில் அறிய வருகின்றது. ஆண் குருவி தன் பெடை கருவுயிர்க்க மெத்தென்று கூடு அமைத்தலை,

> *"உள்ளூர்க் குரீஇத் துள்ளுநடைச் சேவல்*
> *சூல்முதிர் பேடைக் கீனில் இழைஇயர்*
> *தேம்பொதிக் கொண்ட தீங்கழைக் கரும்பின்*
> *நாறு வெண்பூக் கொழுதும்."*

என்று ஒரு குறுந்தொகைப் பாடல் கூறுகிறது.

இளமையில் ஒருவர் மயிரை ஒருவர் பிடித்து இழுத்துச் சண்டை செய்து கொண்டவர்கள், பின்னுல் மணமுடித்து இன்புறுவர். இதனை,

" இவன் இவள் ஐம்பால் பற்றவும் இவள் இவன்
புன்தலை ஓரி வாங்குநள் பரியவும்
காதல் செவிலியர் தவிர்ப்பவும் தவிராது
ஏழில் சிறுசெரு உறுப "

என்ற அடிகளில் காண்க. " மணமகிழ இயற்கை காட்டி " என்னும் அடி இவர்கள் மணந்து கொண்டதைக் காட்டும்.

தாமே தேடிய பொருளைச் செலவழித்தல் மாண்பு அன்றி, முன்னோர் தேடியபொருளைச் செலவிடல் பண்பன்று என்பது பண்டையோர் முறைமை. இதனை, " உள்ளது சிதைப்போர் உளர் எனப்படாஅர் " என்ற தொடர் காட்டு-கிறது. ஆடவர் சோம்பி இருத்தல் கூடாது என்பதை " வினையே ஆடவர்க்கு உயிரே " என்ற தொடர் விளக்கு-கிறது. அக்காலத்தில் பசு வைத்திருப்பது ஒரு சிறப்பு என்பதும், " ஓர்ஆன் வல்சிச் சீர்இல் வீடு " என்ற தொட-ரால் அறிய வருகிறது. இங்ஙனம் பற்பல செய்திகளை இந்-நூலில் காணலாம். நூலில் உள்ள பாடல்கள் சில பெண்-பாற் புலவர்களாலும் பாடப்பட்டவை.

ஐங்குறுநூறு

இந்நூல் எட்டுத் தொகையில் மூன்ருவது. பொருள்-களின் இயற்கையையும், தமிழின் இன்சுவையினையும் இதன் கண் அறியலாம். இந்நூல் அகப்பொருளைத் தழுவியது. இது சிவபெருமானைப் பற்றிய கடவுள் வாழ்த்தினை முதற்-கண் பெற்றுளது. இஃது அகவற்பாவால் அமைந்துள்ளது. அவ் வாழ்த்தில் வரும் " நீலமேனிவால் இழைபாகத்து " என்ற தொடரினை, " நீலமேனி வால் இழை ஆகத்து " எனத்திரித்து, அது திருமால் வாழ்த்தாகும் என்று கூறுகிறவர்களும் உளர். இவ்வாருன அத்தொடர் ஐயர் அவர்களின் பதிப்பில் காணப்படாமையின், அது பொய்ப்படும் கூற்று என விடுக்க. மருதம், நெய்தல், குறிஞ்சி, பாலை, முல்லை ஆகிய ஐந்து நிலங்கட்கும் தனித்தனியே நூறு நூறு

பாடல்களைக்கொண்டு ஐந்நூறு பாடல்கள் இதன்கண் காணப்படுகின்றன. செய்யுட்களின் சிற்றெல்லை மூன்றடி-கள்; பேரெல்லை ஆறு அடிகள். இதனுல்தான் இந்நூல் ஐங்குறுநூறு என்ற பெயரைப் பெற்றது. இந்நூலைத் தொகுக்கும்படி கேட்டவன் யானைக்கண் சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை என்னும் சேரன். தொகுத்துத் தந்தவர் புலத்துறை முற்றிய கூடலூர்கிழார் ஆவார். இந்-நூலுக்குக் கருத்துரையும், பழைய உரையும் உண்டு. ஆனல், எழுதியவர் யாவர் என்பது தெரியவில்லை. இந்-நூலில் சில பாடல்கள் காணப்பட்டில.

இந்நூலுக்குக் கடவுள் வாழ்த்தைப் பாடி அமைத்தவர் பாரதம் பாடிய பெருந்தேவனுர் என்பவர்.

மருதம்: இந்நூலின் முதலாவதான மருதத்திணையினைப் பாடியவர் ஓரம்போகியார் என்பவர். இவர் கடைச் சங்கப் புலவர்; மருதவளத்தைப் பாடுதலில் வல்லவர். இவர் சேர வேந்தனை ஆதன் அவினி என்பவனைப்பற்றிக் குறித்துள்-ளனர். இல்லறத்தின் சிறப்பை இனிது எடுத்துப் பேசியுள்ளனர்.

இல்லத்திற்குக் கற்பு இன்றியமையாதது என்பதும், அக்கற்பு மன்னனது செங்கோலினுல்தான் நிலைபெற்று நிற்கும் என்பதும் இவர் கூறும் கருத்துக்களாகும். இவ்வாசிரியர் கூறும் உவமை சுவை பயப்பதாகும். உலகியல் கூறும் முறையும் இன்பம் தருவதாகும்.

"நெற்பல பொலிக பொன்பெரிது சிறக்க
விளைக வயலே வருக இரவலர்
பால்பல ஊறுக பகடுபல சிறக்க
பகைவர் புல்ஆர்க பார்ப்பார் ஓதுக
பசியில் லாகுக பிணிசேண் நீங்குக
வேந்துபகை தணிக யாண்டுபல நந்துக
அறம்நனி சிறக்க அல்லது கெடுக
அரைசு முறைசெய்க களவில் லாகுக
நன்றுபெரிது சிறக்க தீதில் லாகுக
மாரி வாய்க்க வளனனி சிறக்க"

என்ற அடிகளைக் காண்க.

நெய்தல்: இந்நூலின் இரண்டாவது திணையாகிய நெய்தல் திணையைப் பாடியவர் அம்மூவனூர் ஆவார். கடைச்சங்கப்புலவர். இவர் சேர பாண்டியராலும், பாரி என்னும் வள்ளலாலும் ஆதரிக்கப்பட்டவர். சேர நாட்டுத் தொண்டி, மாந்தை நகர், பாண்டிநாட்டுக் கொற்கை, நடுநாட்டுக் கோவலூர் இவரது பாடலில் காணப்படுகின்றன. இவற்றின் சிறப்புக் குறிப்புக்களையும் காணலாம். இவரது பாடலில் கடலினும் நட்புப் பெரியது என்பது சுவைத்தற்குரியது. தலைவி தலைவன் பிரிந்தபோது தான் மெலிவுற்ற நிலையைப் பாணனிடம் கூறித் தூதுவிடுக்கும் கருத்தில்,

" காண்மதி பாண நீ உரைத்தற் குரியை
துறைகெழு கொண்கன் பிரிந்தென
இறைகேழ் எல்வளை நீங்கிய நிலையே."

என்று பாடிய பாடலைக் காண்க.

குறிஞ்சி: மூன்றாவதாகிய குறிஞ்சித் திணையைப் பாடியவர் கபிலர். இந்நூலில் இவர் கூறும் உவமை சுவை தருவதாகும். குதிரையின் குடுமி பார்ப்பனச் சிறுவன் குடுமி போன்றது என்று கூறி இருப்பது நகைச் சுவைக்கு ஏற்றது. "பார்ப்பனக் குறுமகப்போலத் தாமும் குடுமித்தலைய மாவே" என்பது அவ்வடி. தலைவி தலைவனிடம் கொண்ட காதலால் அவன் உள்ளத்திற்கு மாறுகப் பெற்றோர் நடந்தால் உயிர் விடுவேன் என்று கூறும் பாடல் காதலின் உயர்வைக் காட்டும். தலைவியின் வேறுபாடு கண்டு வெறியாட்டயர்தலும் போன்ற அந்நாட் செய்திகள் பல இதன்கண் உள. தலைவி பாலையில் கலங்கல் நீரை உண்டதைக் கூறும் வாய்ப்பை ஒரு பாட்டு,

" அன்னாய் வாழிவேண் டன்னைநம் படப்பைத்
தேன்மயங்கு பாலினும் இனிய அவர்நாட்
டுவலைக் கூவல் கீழ
மானுண்டு எஞ்சிய கலுழி நீரே."

என்று கூறுகிறது. இதன்கண் காதலன் காதலிக்குள்ள அன்புடைமை நன்கு கூறப்பட்டுள்ளது. இதனை "மீமிசை நன்னாட்டவர் வரின்யான் உயிர் வாழ்தல் கூடும் அன்னாய்" என்ற அடிகளால் அறியலாம். மக்கள் சிறப்பை "பொன் போல் புதல்வர்" என்று புகழ்கிறது. குரக்குப்பத்து,

கிள்ளைப்பத்து, கேழல் பத்து ஆகிய தலைப்பில் இவ்வுயிர் இனங்களின் இயல்புகள் கூறப்பட்டிருப்பது படிக்கச் சுவை தருவதாகும். தலைவியைப்பற்றிய ஒரு பாடல்

"குன்றக் குறவன் காதல் மடமகள்
வண்டுபடு கூந்தல் தண்தழைக் கொடிச்சி
வளையள் முளைவாள் எயிற்றள்
இளையள் ஆயினும் ஆரணங் கினளே"

என்பது.

பாலை: அன்பு வைக்கப்பட்டாரது பண்பை நினைத்த அளவில், நெடுந்தூரம் நடக்கும் போதும் வழி நடைத் துன்பம் தெரியாது என்பதையும், காதல் வேட்கை-யால் தான் விரும்பிய காதலனை மணக்கத் தடையாய் இருந்த தன் தாயை "அறன் இல்யாய்" என்று வைவதையும், அந்தணரைப் பற்றிக் கூறுகையில் "அறம் புரி பெருமறை நவின்றநா" என்பதையும் கூறிய இடங்கள் இப்பகுதியில் காணப்படுகின்றன.

"புன்கண் யானையொடு புலிவழங் கத்தம்
நயந்த காதலன் புணர்ந்துசென் றனளோ"

என்ற அடிகள் காதலியின் உண்மை அன்பைக் காட்டுதல் காண்க.

நான்காவதாகிய இப்பாலைத் திணைப் பகுதியைப் பாடியவர் ஓதல் ஆந்தையார். இவரைப்பற்றிய குறிப்பு ஒன்றும் அறிதற்கில்லை.

முல்லை: மனைக்கு விளக்கம் மனைவி என்பதும், தாம் பெற்ற குழந்தைகளுடன் விளையாடல் பெருமகிழ்வு தரும் என்பதும், தலைவியைக் காண விரைந்த நிலை குறித்துப் பாகனை விரைவில் தேரைச் செலுத்துக என்பதும் போன்ற பல செய்திகள் இதில் கூறப்பட்டுள்ளன. தலைவன் இல்லில் இன்புற்றிருந்த நிலையை அறிவிப்பது

"மாதர் உண்கண் மகன்விளை யாடக்
காதலில் தழீஇ இனிதிருந் தனனே
தாதார் பிரசம் ஊறும்
போதார் புறவின் நாடுகிழ வோனே."

என்பது.

ஐந்தாவதாகிய இந்த முல்லைப் பகுதியின் ஆசிரியர் பேயனார் என்பவர். இவரைப் பற்றி ஒன்றும் அறிதற்கு இல்லை.

இத்தகைய அரிய ஐங்குறு நூற்றைத் தொகுத்துக் கொடுத்த பெரியார் புலத்துறை முற்றிய கூடலூர்கிழார்; மலைநாட்டுக் கூடலூரைச் சார்ந்தவர்; வேளாளர்; இவர் வான நூல் புலமையிலும் சிறந்தவர். இவர் ஒரு விண்மீன் வீழ்ச்சியைக் கண்டு, தம்மை ஆதரித்த கோச்சேரமான் யானைக் கண்சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை இந்நாளில் இறப்பான் என்று பாடியவர்.

பதிற்றுப்பத்து

எட்டுத் தொகை நூல்களுள் இது நான்காவதாகும். சேர மரபினருள் பதின்மரைப்பற்றி அகவல் பாக்களில் பாடப்பட்ட நூல். ஒவ்வொரு சேரரையும் பத்துப் பத்துப் பாக்களில் பாடி இருத்தலின் இது பதிற்றுப்பத்து என்ற பெயரினைப் பெற்றுள்ளது; முதல் பத்து முதல், பத்தாம் பத்துவரை இருந்துள்ளது. ஆனால், இதுபோது முதல் பத்தும், பத்தாம் பத்தும் இன்றி, ஏனைய எட்டுப்பத்துக்களுடன் இது திகழ்கிறது. இந்நூற் புறப்பொருட் பகுப்பைச் சார்ந்தது. இதனை இதனுள் வரும் உழிஞை அரவம், பெருஞ்சோற்றுநிலை, தும்பை அரவம், காவல், முல்லை முதலான புறத்துறைப் பெயர்களைக் கொண்டு தெளியலாம்.

இந்நூலின் ஒவ்வொரு பத்தின் ஈற்றிலும் அமைந்துள்ள பதிகப் பாடல்களின் மூலம் யார்மீது பாடப்பட்டது? பாடியவர் யாவர்? பாடிப்பெற்ற பரிசில்கள் யாவை? என்பனவற்றைத் தெளிவுற விளங்கக் காணலாம்.

இரண்டாம் பத்து: இஃது இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் மீது பாடப்பட்டுள்ளது. இதைப் பாடியவர் குமட்டூர்க் கண்ணனார். இவர் பிராம்மண மரபினர். பாடிப்பெற்ற பரிசில் உம்பர்காட்டு ஐந்நூறு ஊரும், முப்பத்தெட்டு ஆண்டுகள் தென்னாட்டு வருவாயில் ஒரு பகுதியும் ஆகும்.

இப்பாட்டுடைத் தலைவன் இமயத்து வில்பொறி பொறித்தவன்; ஆரியரை வணங்கச் செய்தவன்; யவனரைப்

பிணித்தவன்; தன் பகைவர்களின் தலையில் நெய்பெய்து, கைகளைப் பின்கட்டி, அவர்கள் தம் அரும்பெரும் பொருள்களைத் தன் நாட்டிற்குக் கொணர்ந்தவன்; அப்பொருள்களைத் தானே துய்க்காமல் பிறர்க்கும் ஈந்தவன். "அருவிலை நன்கலம் வயிரமொடு கொண்டு பெருவிறல் மூதூர்த் தந்து பிறர்க்குதவி" என்று பதிகம் கூறுதல் காண்க. இவனது வீரம், ஈரம் இவற்றினை இப்பத்தில் நன்கு காணலாம். நூலகத்து இவனது சிறப்பு,

> *"தண்ணிய எழிலி தலையாது மாறி*
> *மாரி பொய்க்குவ தாயினும்*
> *சேர லாதன் பொய்யலன் நசையே"*

என்று கூறப்பட்டுள்ளது.

மூன்றும் பத்து: பல்யானைச் செல்கெழுகுட்டுவன் மீது பாடப்பட்டது. இவன் புலவர் விரும்பியபடி ஒன்பது யாகங்களைப் புரிய உதவி செய்தவன். பத்தாவது வேள்வியையும் நடத்திக் கொள்ளுமாறு துணை புரிந்தவன். இந்த வேள்விப் பயனால் புலவர் தம் மனைவியாருடன் சுவர்க்கம் புகுந்தனர். புலவர் அந்தண மரபினர். இச்சேரன் இமயவரம்பன் தம்பி. உம்பர்காட்டில் செங்கோல் செலுத்தியவன். பகைவர் கோட்டைகளைத் தகர்த்துத் தீ வைத்தவன். முதியோர் சொல்படி நடந்தவன். பெற்றதைப் பிறர்க்கு ஈந்தவன். கீழ்க்கடல், மேற்கடல் இரண்டிலும் ஒரு நாளில் நீராடியவன். அயிரைமலைத் துர்க்கையினை வழிபட்டவன். இப்பத்தில் அறவழியில் நடத்தும் அரசிற்கு ஆகாதவை இன்ன எனக் கூறுகையில்,

> *"சினனே காமம் கழிகண் ணோட்டம்*
> *அச்சம் பொய்ச்சொல் அன்புமிக உடைமை*
> *தெறல்கடு மையொடு பிறவும் இவ்வுலகத்*
> *தறம்தெரி திகிரிக்கு வழியடை ஆகும்."*

என்று கூறியிருக்கிறது. இப்பத்தைப் பாடியவர் பாலைக் கௌதமனார்.

நான்காம் பத்து: இஃது களங்காய்க் கண்ணிநார் முடிச்சேரல் மீது காப்பியாற்றுக் காப்பியனாரால் பாடப்பட்டது. இவர் பெற்ற பரிசில் நாற்பது நூறாயிரம் பொன்னும்,

மன்னன் ஆட்சியில் பாகமும் ஆகும். இம்மன்னன் பிறந்த-போதே பகைவர் நடுங்கினர். "முனைபனிப்பப் பிறந்து" என்ற தொடரைக் காண்க. இவன் புகழை நிறுத்தியவன்; பூழிநாட்டு நன்னனை வென்றவன். அவனது காவல் மரமான வாகை மரத்தை அறுத்தவன். இவ்வாறு பல நாடு நகரங்-களையும், அரசர்களையும் வென்று களவேள்வி புரிந்தவன். இம்மன்னனது தானையின் சிறப்பைப் புலவர்,

"புறக்கொடை எறியார் நின்மறப்படை கொள்ளுநர்
நகைவர்க் கரணம் ஆகிப் பகைவர்க்குச்
சூர்நிகழ்ந் தற்றுநின் தானை."

என்று பாடியுள்ளார்.

ஐந்தாம் பத்து: இது கடல் பிறக் கோட்டிய செங்குட்டுவன் மீது பாடப்பட்டது. இதனைப் பாடியவர் பரணர். இதனைப் பாடி உம்பர்க்காட்டு வருவாயையும், மன்னன் மகனையும் பரிசிலாகப் பெற்றனர்.

இம்மன்னன் வடவர் அஞ்சும் ஆற்றல் உடையவன். இமயத்துத் தன் கொடியினை நிறுத்திய நெடுஞ்சேரலாதன் மகன். கண்ணகிக்குக் கோவில் எடுக்க இமயஞ்சென்று கல் கொணர்ந்தவன். கனக விசயரையே அக்கல்லைச் சுமக்கச் செய்தவன். இவனைப் பற்றிய பதிகத்தால் இவன் வடநாட்டினின்று பல பசுக்களையும், கன்றுகளையும் கொண்டு வந்தவன் என்பதும், பற்பல ஊர்களை வென்றவன் என்பதும், பழையனது காவல் மரமான வேம்பைத் தடிந்த-வன் என்பதும், சோழர் ஒன்பதினமர்களையும் வென்றவன் என்பதும் அறியப்படுகின்றன. கடல் பிறக்கோட்டியவன் என்னும் அடைச்சிறப்பால் கடலில் கலம் செலுத்திக் கடல் பின்னுகச் செல்லத் தான் முன்னுகச் சென்றவன் என்பதும் தெரிகிறது. இங்ஙனம் இவன் கடல்வழி தன்வீரம் காட்டிச் சென்றுன் என்பதை,

"கோடுநரல் பௌவம் கலங்க வேலிட்டு
உடைத்திரைப் பரப்பில் படுகடல் ஓட்டிய
வெல்புகழ் குட்டுவன்."

என்ற அடிகளில் காணலாம்.

ஆறும் பத்து: இது காக்கை பாடினியார் நச்செள்ளையார் ஆடு கோட்பாட்டுச் சேரலாதன் மீது பாடியுள்ளனர். இவர் பெண்பாற்புலவர். ஆதலின், அணிகலன்களுக்கென ஒன்பது துலாம் பொன்னும், நூறுயிரம் பொற்காசும் பரிசிலாகப் பெற்றனர். இவரது பாடல் ஒன்று குறுந்தொகையில் உளது. அதில், "விருந்துவரக் கரைந்த காக்கையது பலியே" என்று காக்கையை பாடியிருத்தலின், நச், செள்ளையார் என்னும் இயற்பெயருடன், காக்கை பாடினியார் என்ற அடையுடன் கூறப்பட்டனர்.

இப்பாட்டுடைத் தலைவன் பார்ப்பாருக்குப் பசுதானமும், குடநாட்டில் ஓர் ஊரும் ஈந்தவன். வான வரம்பன் என்ற பெயரையும் உடையவன்; மழவரை வென்றவன்; குடி மக்களை நன்முறையில் குழந்தையைத் தாய் காப்பதுபோலக் காத்தவன். இவன் நாள்தோறும் தன்னை நாடிவந்த இரவலர்க்கு ஈந்துவந்த சிறப்பினை,

> *"இரவலர் புண்கண் தீர நாள்தொறும்*
> *உரைசால் நன்கலம் வரைவில வீசி"*

என்ற அடிகள் நன்கு உணர்த்துகின்றன. மேலும், இவன் இரவலர் வராதிருப்பின் அவர்கள் இருக்கும் இடம்தேடி வரவழைத்து ஈந்தும் வந்தனன் எனவும் இப்புலவர் கூறியுள்ளனர்.

> *"வாரார் ஆயினும் இரவலர் வேண்டித்*
> *தேரில் தந்த வர்க் கார்பதம் நல்கும்*
> *நகைசால் வாய்மொழி இசைசால் தோன்றல்"*

என்ற அடிகளைக் காணவும்.

ஏழாம் பத்து: இது செல்வக் கடுங்கோ வாழி ஆதன் என்பான் மீது, கபிலரால் பாடப்பட்டது. இவர் பெற்ற பரிசில் நூறுயிரம் பொற்காசும், மலைமீது நின்று காட்டிக் கொடுத்த நாடும் ஆகும். இப்புலவர் நல்லிசைப் புலவன் என்று பெருங் குன்றூர்க் கிழாராலும் "வெறுத்த கேள்வி விளங்கு புகழ் கபிலன்" என்று பொருந்தில் இளங்கீரனாராலும், "புலன் அழுக்கற்ற அந்தணாளன்" என்றும், "பொய்யா நாவில் கபிலன்" என்றும் மாறோகத்து நப்பசலையாராலும் பாராட்டப்பட்டவர்.

இப்பாட்டுடைத் தலைவனும் சேரன், பகைவர் பலரை ஓட்டியவன். சேனைபலம் மிக்குடையவன். இவன் பார்ப்பாரிடத்தில் பெரிதும் அன்பும் அடக்கமும் காட்டியவன். இதனை "பார்ப்பார்க் கல்லது பணிபு அறியலையே" என்ற அடிகொண்டு தெளியலாம். பொய்யும் அறியாதவன் என்பதை,

"நிலம்திறம் பெயரும் காலை ஆயினும்
கிளந்த சொல்நீ பொய்ப்பறி யலையே"

என்ற அடிகள் உணர்த்துகின்றன.

எட்டாம் பத்து : இது தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை என்னும் சேரன் மீது பாடப்பட்டது. பாடியவர் அரிசில் கிழார். பாடிப் பெற்ற பரிசில் ஒன்பது நூறாயிரம் பொற்காசும், அரசாட்சியும் ஆகும். ஆனால், அரசாட்சியினை மன்னர்க்கே தந்து விட்டனர். என்றாலும், அவனுக்கு அமைச்சராக அமர்ந்தனர். இவர் பெயரால் இவர் வேளாளர் என்பது தெரிகிறது.

இச் சேர மன்னன் அதிகமானையும், இருபெரும் வேளிரையும் வென்றவன். பகைவர்களது முரசு, கொடி நகை இவற்றைக் கொண்டு வந்தவன். கனவேள்வி புரிந்தவன். தகடூரை வென்றவன். இவன் பெற்ற புதல்வன், எத்தகையவன் என்பதைப் புலவர்,

"ஒடுங்கீர் ஓதி ஒண்ணுதற் கருவில்
எண்ணியல் முற்றி ஈரறிவு புரிந்து
சால்பும் செம்மையும் உளப்படப் பிறவும்
காவற் கமைந்த அரசுதுறை போகிய
வீறுசால் புதல்வன் பெற்றனை."

என்று கூறுமாற்றால் உணரலாம்.

"வண்மையும் மாண்பும் வளனும் எச்சமும்
தெய்வமும் யாவதும் தவமுடையோர்க்கு"

எனவும் இப்பத்துக் கூறுகிறது. இப்பாட்டுடைத் தலைவனது பண்பை உணர்த்தும் நிலையில்,

> "உயிர்போற் றலையே செருவத் தானே
> கொடைபோற் றலையே இரவலர் நடுவண்
> பெரியோர்ப் பேணிச் சிறியோர் அளித்தி"

என்று பாடினர் புலவர்.

ஒன்பதாம் பத்து: இது குடக்கோ இளஞ்சேரல் இரும்பொறை என்னும் சேரன் மீது பெருங்குன்றூர் கிழார் பாடினர். இப்பத்தைப் பாடி முப்பத்திரண்டாயிரம் பொற்காசுகளையும், மற்றும் பல பரிசில்களையும் பெற்றனர். இப்புலவர் வேளாளர். இம்மன்னன் சோழ பாண்டியரை வென்றவன். பகையரசரிடமிருந்து கொணர்ந்த பொருள்களை இரவலர்க்கு ஈந்தவன். செங்கோல் செலுத்தியவன். இப்பத்தில் உள்ள விறலி யாற்றுப்படையில் "சென்மோ பாடினி நன்கலம் பெறுகுவை" என்று கூறி இருப்பது கொண்டு, இம்மன்னனது கொடைச் சிறப்பை நன்கு தெரிந்து கொள்ளலாம். இப்பத்தைப் பாடிய புலவர் உவமைச் சிறப்பினை,

> "ஈரம் உடைமையின் நீரோர் அனையை
> அளப்பரு மையின் இருவிசும் பனையை
> கொளக்குறை படாமையின் முந்நீர் அனையை."

என்ற அடிகளில் காணலாம்.

இந்நூலின் கடவுள் வாழ்த்தும், முதல் பத்தும், பத்தாம்பத்தும் இது போது வெளி வந்துள்ள பதிப்பில் இல்லை என முன்னர்க் கூறினேம். ஆனல், தொல்காப்பியப் புறத்திணை இயல் 26 ஆம் சூத்திர உரையில் "எரிகொள்ளு வன்ன" என்று தொடங்கும் பாடலை எடுத்துக் காட்டி, "இது கடவுள் வாழ்த்து" என்று எழுதப்பட்டுள்ளது. 'உரையாசிரியர்கள் பெரிதும் சங்க நூற்களில் இருந்துதான் மேற்கோள் காட்டுவர். மேலும், நச்சினர்க்கினியர் இது கடவுள் வாழ்த்து ,என்று கூறியதோடின்றி, அதனைத் தொடர்ந்து, "தொகை நூல்களினும் கீழ்க்கணக்கு நூல்களிலும் உள்ள கடவுள் வாழ்த்தெல்லாம் இதன்கண் அடங்கும்," என்றும் எழுதியுள்ளார். இதனல் "எரிகொள்ளு அன்ன" என்று தொடங்கும் பாடல், கடவுள் வாழ்த்து

அகப் படாத பதிற்றுப்பத்தின் கடவுள் வாழ்த்தாக இருக்கலாம் என்று எண்ண இடம் இருக்கிறது. முதற்பத்தையோ, பத்தாம் பத்தையோ சார்ந்தனவாகத் தொல்காப்பிய உரை வழியும், புறத்திரட்டு நூல் வழியும் நான்கு பாடல்களைக் காண்கின்றோம்.

இத்தகைய நூலிற்குப் பழைய குறிப்புரை மட்டும் உளது. இக் குறிப்புரையில் "சின்னூல்" என்ற குறிப்புக் காணப்படுகிறது. சின்னூல் என்பது நேமிநாதம். அந்நூலின் காலம் கி. பி. 12 ஆம் நூற்றாண்டு. ஆகவே, குறிப்புரை ஆசிரியர் அந்நூலின் காலத்தவராகவோ, பிற்பட்டவராகவோ இருக்க வேண்டும்.

பரிபாடல்

எட்டுத்தொகை நூல்களுள் இஃது ஐந்தாவது வரிசையில் உள்ளது. இது பாவினால் உற்ற பேராகும். இது பரிபாட்டு என்றும் கூறப்பெறும். இஃது இசைப்பா என்று கூறப்பட்டதாகவும் அறியவருகிறது. இப்பாடற்கு விளக்கம் கூறவந்த இளம்பூரணர், "பரிந்த பாட்டு பரிபாட்டு என வரும். அஃதாவது வெண்பாவாக வருதலின்றிப் பல உறுப்புக்களோடு தொடர்ந்து ஒரு பாட்டாகி முற்றுப் பெறும்" என்று எழுதியுள்ளார். பேராசிரியர் இதனை விளக்கும்போது, "பரிபாடல் என்பது பரிந்து வருவது, அஃதாவது கலியுறுப்புப் போலாது, பல அடியும் ஏறவருவது" என்பர். நச்சினார்க்கினியர் "பரிபாடல் என்பது பரிந்து வருவது. அது கலியுறுப்புப் போலாது, நான்கு பாவானும் வந்து பல அடியும் வருமாறு நிற்கும் என்று உணர்க" என்பர். பாவகையில் இவ்வாறு விளக்கிய புலவர்கள், இப்பாடல் எப்பொருள் பற்றிப் பாடப்பெறும் என்பதையும் விளக்கும்போது, "அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப் பொருள் நான்கனுள் இன்பத்தையே பொருளாகக் கொண்டு, கடவுள் வாழ்த்து, மலைவிளையாட்டு, புனல் விளையாட்டு முதலியவைபற்றி இப்பாடல் வரும்" என்று பேராசிரியரும், "தெய்வ வாழ்த்து உட்படக் காமப் பொருள் குறித்து உலகியலே பற்றிவரும்" என்று நச்சி-

ஞர்க்கினியரும், "தெய்வமும் காமமும் பொருளாக வரும்" என்று யாப்பருங்கல விருத்தியாரும் விளக்கி யுள்ளனர். பரிபாடல் இருபத்தைந்தடி சிற்றெல்லையும், நானூறு அடி பேர் எல்லையும் கொண்டு வரும் என்பர்.

இன்னோரன்ன இலக்கணங்கட் குரிய பரிபாடல்கள் நமக்கு இருந்தவை எழுபது. அவ்வெழுபது பாடல்களுள் திருமாலுக்கு எட்டும், முருகப்பெருமானுக்கு முப்பத்தொன்-றும், காடு கிழாட்கு ஒன்றும், (கடலுக்கு ஒன்று என்ற கருத்தும் உண்டு), வைகையாற்றிற்கு இருபத்தாறும், மதுரைக்கு நான்கும் ஆகும். ஆனால், இதுபோது உள்ளவை இருபத்து நான்கு பாடல்களே. சில முழுப்பாடல்களின் சிதைவுகளான உறுப்புக்களும் உள. அங்ஙனம் அமைந்த சிதைவுள்ளவை மதுரையைப் பற்றியும், வைகையைப் பற்றியும் குறிப்பனவாகும்.

இப்போதுள்ள இருபத்திரண்டு பாடல்களுள் திருமாலுக்கு ஏழு, செவ்வேட்கு எட்டு, வைகைக்கு ஒன்பது என உள்ளன. பாடல்களின் ஈற்றில் பண்களின் பெயர்கள் காணப்படுதலின், இப்பாடல்கள் இசையுடன் பாடப்பட்டிருக்க வேண்டும் என்பது புலனாகின்றது. இந்நூலில் காணப்படும் இசைகள் பாலை, யாழ், திறம், காந்தாரம் என்பன. இவ்வாறு பண்வகுத்த அறிஞர்கள் கண்ணகனார், கன்னநாகனார், கேசவனார் நல்லச்சுதனார், நன்னாகனார், நாகனார், பித்தாமத்தர், பெட்டநாகனார், மருத்துவன் நல்லச்சுதனார் ஆவார்.

இந்நூலில் காணப்படும் பாடல்களைப் பாடிய ஆசிரியர்-கள் பதின்மூவர். அவர்களைப்பற்றிச் சிறிது ஆய்வோம்.

ஆசிரியர் நல்லந்துவனார்: இவர் முருகப் பெருமானுக்கு ஒன்றும், வைகைக்கு மூன்றும் ஆக நான்கு பாடல்களைப் பாடியவர். இவர் முருகனது திருப்பரங்குன்றத்தைப் பாடுகையில், அஃது இமயமலை போன்றதென்றும், அங்-குள்ள சுனை சரவணப் பொய்கை போன்றது என்றும் பாடி-யுள்ளனர். மகப்பேறு கருதி யாவரும் இம்மலையை வழிபடு-தல், மழைவளம், வையைப் பெருக்கு, புதுநீர்விழவு, ஊர்தி-ஏறல், நீர்விளையாடவரல், பொன்மீன் கொண்டு செல்லல்

முதலானவற்றையும் இவர் கூறியுள்ளனர். மக்கள் முருகனை வழிபட்ட நிலையினை,

"வருபுனல் அணிகென வரங்கொள் வோரும்
கருவயி றுறுகெனக் கடம்படு வோரும்
செய்பொருள் வாய்க்கெனச் செவிசார்த் துவோரும்
ஐயதர் அடுகென அருச்சிப் போரும்"

என்று குறித்துள்ளனர். இப்புலவரே கலித்தொகையைக் கோத்தவர்; நெய்தல் கலியையும் பாடியவர். இவர் திருப்பரங்குன்றைப் பாடிய சிறப்பை, "மதுரை மருத னிளநாகனார் தந்துவன் பாடிய சந்துகெழு நெடுவரை" என்று சிறப்பித்துக் கூறியுள்ளனர். இவர் மதுரை திருப்பரங்குன்றம் வழியையும், வையையின் இயற்கை இயல்பையும் ஒழுங்காகக் கூறுதலின், இவர் மதுரைவாசி எனலாம். இவரை மதுரை ஆசிரியன் நல்லந்துவனார் என்றது இது குறித்தே போலும்!

இளம் பெருவழுதியார்: இவர் திருமாலுக்குரிய பாடல் ஒன்றைப் பாடியவர். எல்லா மலைகளிலும் திருமாலிருஞ்சோலை சிறந்தது என்கிறார். "திருமால் இருங்குன்றம் திருமால் போன்றது. ஆகையால், அதனைச் சென்று தொழுங்கள்" என்றும் பாடியுள்ளார். இக்குன்றில் வாழவே இவர் விரும்பித் திருமாலை வேண்டுகிறார். இவர் மரபால் பாண்டியர்; இளமையில் பெருமை பெற்றவர். இன்னோரன்ன காரணங்களால் இவர் இளம் பெருவழுதியார் எனப்பட்டனர் போலும்! இவர் இப்பாடலே அன்றிப் புறநானூற்றிலும் ஒருபாடலைப் பாடியுள்ளார். இவர் கடலுள் மாய்ந்த இளம் பெருவழுதி என்ற பெயரையும் உடையவர். இவர் மக்கட்கு உணர்த்துவன,

"தையல் அவரொடும் தந்தார் அவரொடும்
கைம்மக வோடும் காதல வரொடு
தெய்வம் பேணித் திசைதொழுதனிர் சென்மின்"

என்பன.

கடுவன் இளவெயினனார்: இவர் முருகப் பெருமானையும், திருமாலையும் பாடியுள்ளனர். ஆகவே, இவர் இருவரிடத்தும்

அன்புடையவர் என்பது தெரிகிறது. திருமாலுக்குக் கருடன், பனை. நாஞ்சில் கொடிகளாக உள்ளன என்பது இவர் பாட்டால் தெரிகிறது. கருடனது பெருமைகளும், வராக, நரசிம்ம, வாமன அவதாரச் செயல்களும் இவரது பாடலில் கூறப்பட்டுள்ளன. முருகனைப் பற்றிய வரலாறும், பிறந்த போதே முருகன் இந்திரன் முதலிய தேவர்களை வென்றமையும், பிணிமுகம் என்னும் யானையை ஊர்ந்து சென்று கடல் நடுவே சூர்மாவைப் பிளந்தமையும், வெறியாடல் செயலும் இவர் பாட்டில் காணலாம். இவர் முருகனை வேண்டும் வரம்,

"யாம்இரப்பவை, பொருளும் பொன்னும் போகமும் அல்ல நின்பால்
அருளும் அன்பும் அறனும் மூன்றும்
உருள் இணர்க் கடம்பின் ஒலிதா ரோயே"

என்பது.

கரும்பிள்ளைப் பூதனார் : இவர் வையைக்குரிய பாடலைப் பாடியவர்களுள் ஒருவர். இவர் பாடலில் புதுநீர் விழாச் சிறப்பு, நீர் விளையாட்டின் ஒழுங்கு, பாண்டியன் கொடைச் சிறப்பு ஆகியவை காணப்படுகின்றன. மாடங்களில் சித்திரம் எழுதப்பட்டன என்பதையும், அச்சித்திரம் உயிர் உள்ளது போலவே காணப்படும் என்ற குறிப்பையும் இவர் பாடலில் காணலாம். இதனை,

"எழில்மாடத்துக் கைபுனைகிளர் வேங்கை காணிய
வெருவுற்று மைபுரை மதம்பிடி மடநல்லார் விதிப்புறச்
செய்தொழில் கொள்ளாது மதிசெத்துச் சிதைதர."

என்ற அடிகளில் காண்க.

கீரந்தையார் : இவர் திருமால்மீது பாடிய புலவர்களுள் ஒருவர். இவரது பாடலில் நெய்தல், ஆம்பல், கமலம் என்னும் மொழிகள் பேரெண்களைக் குறிக்கும் சொற்களாக உள்ளன. திருமால் தேவர்கட்கு அமுது அளித்தது, பல ஊழிகள் முதலான செய்திகள் இதில் காணப்படுகின்றன. திருமாலின் தோற்ற வருணனை படிக்கச் சுவை தரும்.

"நின்னது திகழ்ஒளி சிறப்பு இருள்மணி
கண்ணே புகழ்சால் தாமரை அலர்இணைப் பிணையல்
வாய்மை வயங்கிய வைகல் சிறந்த
நோன்மை நாடின் இருநிலம் யாவர்க்கும்
சாயல் நினது வான்இறை."

என்ற அடிகளில் காண்க.

குன்றம்பூதனார்: இவர் முருகனைப் பாடியவர். இவரது பாடல்களில் இவர்க்குள்ள தமிழ்ப்பற்று, தமிழ் மரபு, திருப்பரங்குன்றச் சோலை, சுனை, அருவி, தினை, மயில் இவற்றைப் பற்றிய வர்ணனைகள் இருத்தலைக் காணலாம். இவரது பாட்டால் திருப்பரங்குன்றில் சித்திர அம்பலம் இருந்ததாகத் தெரிகிறது. அகப்பொருள் இலக்கணச் சிறப்பை,

"தள்ளாப்பொருள் இயல்பில் தண்டமி ழாய்வந்திலார்
கொள்ளா ரிக்குன்று பயன்"

என்ற அடிகளில் காண்க.

கேசவனார்: இவரும் முருகனைப் பற்றிப் பாடிய புலவர். முருகனை வேண்டும் பகுதி, இவரது செவ்வேள் பற்றினை நன்கு விளக்குகிறது. பரிபாட்டின் இசை வகுத்த புலவர்களுள் இவரும் ஒருவர் ஆதலின், இவரது இசைப் புலமை விளங்குகிறது. மயிலின் குரல், மணந்து தணந்தோரை விரைவில் வருக என விளிப்பதாக உளது என்பது இன்பம் பயப்பதாகும்.

"தோகை யார்குரல் மணந்து தணந்தோரை
நீடன்மின் வாரும் என்பவர்சொல் போன்றனவே"

என்ற அடிகளைக் காண்க.

நப்பண்ணனார்: இவர் முருகனைப் பாடியவர். இவர் பாடலில் வள்ளியம்மையார் திருமணம், மதுரையினின்று திருப்பரங்குன்றம் வருவார் நெருக்கம், அம்மலையில் எழுதப்பட்ட புராண இதிகாசச் சித்திரங்கள், பலவகை மலர்கள் முதலியன பற்றிய குறிப்புக்களைக் காணலாம். தமக்கு வேண்டிய பயனைக் கருதி யானை உண்ட மிச்சிலைக் கன்னியரும், மணமானவரும் உண்பர் என்ற செய்தியும்

இவர் பாடலில் உண்டு. குரங்குகளுக்குத் தின்பண்டம் தருதலை இவர்,

"குரங்கு அருந்து பண்ணியங் கொடுப்போரும்"

என்று கூறியுள்ளனர்.

நல்லச்சுதனார்: முருகப் பெருமானைப் பாடியவருள் இவரும் ஒருவர். இவரது பாடலில் திருப்பரங்குன்ற மகளிர் செயல்கள், ஆடவரும் மகளிரும் சுனைநீர் ஆடல், பன்மண முடன் காற்று வரும் சிறப்பு, குறமகளிர் ஆடல், இவர் முருகனிடம் வேண்டும் வரம் இன்னோரன்ன பிறவற்றை இவரது பாடலில் காணலாம். இவர் இந் நூற்பாடலின் சில-வற்றிற்கு இசைவகுத்துள்ளமையின், இவரது இசைப்-பயிற்சியை உணரலாம். இவர் முருகனை வேண்டிய வரம் இன்னது என்பது கீழ்வரும் அடிகளில் காண்க.

"நன்றமர் ஆயமோ டொருங்குநின் அடியுறை
இன்றுபோல் இயைகெனப் பரவுதும்
ஒன்றார்த் தேய்த்த செல்வநின் தொழுதே."

நல்லழுசியார்: இவர் வையை மீதும், முருகப் பெரு-மான் மீதும் பாடிய புலவர்களுள் ஒருவர். இவரது பாடலில் மதுரை வளம், வைகையின் கரை, துறை, நீர் விளையாட்டு முதலியன சிறப்பிக்கப்பட்டுள்ளன. திருப்பரங்குன்ற வாழ்வு விண்ணுலக வாழ்வினும் சிறந்தது என்பதையும் இவர் தம் பாட்டில் கூறியுள்ளனர். இதனை,

"மாலை மாலை அடியுறை இயைநர்
மேலோர் உறையுளும் வேண்டுநர் யாஅர்"

என்ற அடிகளில் காணலாம்.

நல்லெழுணியார்: இவர் திருமாலைப் பாடியவர். இவர் திருமால் திருவுருவைப் பலபடி பாராட்டிப் புகழ்ந்துள்ளார். ஐம்பெரும் பூதங்களும் திருமாலே என்பதனைப் பின்வரும் அடிகளால் அறியலாம்.

"ஒன்றனில் போற்றிய விசும்பும் நீயே
இரண்டின் உணரும் வளியும் நீயே
மூன்றில் உணரும் தீயும் நீயே
நான்கன் உணரும் நீரும் நீயே
ஐந்துடன் முற்றிய நிலனும் நீயே"

நல்வழுதியார்: இவர் வைகையைப் பாடியவருள் ஒருவர். வைகை மலையிலிருந்து பொருள்களை அடித்து வருகிறது என்றும், மதுரையின் மதிலில் மோதுகிறது என்றும் கூறியுள்ளனர். நீர் விளையாட்டின் வகை, நீர் விளையாட மக்கள் ஊர்திகளில் வருதல் இவற்றையும் தம் பாடலில் குறித்துள்ளனர். மகளிர் அலங்காரம் செய்து கொள்ளுதலை இப்புலவர்,

" மின் அவிர் ஒளிஇழை வேயு வோரும்
புகைகெழு சாந்தம் பூசு வோரும்
கார்கொள் கூந்தல் கதுப்பமைப் போரும்
வேர்பிணி பன்மலர் வேயு வோரும்
புட்டகம் பொருந்துவ புனைகு வோரும் "

என்று பாடுதல் காண்க.

மையோடக் கோவனார்: இவர் வையைக்குரிய பாடலைப் பாடியவருள் ஒருவர். வைகைப் பெருக்கிற்குப் பாண்டியன் படைப்பெருக்கை உவமையாகக் கூறி உள்ளனர். இதனால் இவரது அரசப்பற்றுத் தெரிகிறது. மேலும், திருமருத முன்றுறைச் சிறப்பு, நீர் விளையாட்டு முதலிய குறிப்புக்களையும் இவரது பாட்டில்காணலாம். வைகையின் வெள்ளப் பெருக்குச் சென்ற நிலைக்கு உவமை கூறும்போது,

" ஆடல் அறியா அரிவை போலவும்
ஊடல் அறியா உவகையள் போலவும்
வேண்டுவழி நடந்து "

என்று கூறியுள்ளார் இப்புலவர்.

இத்தகைய நூலுக்கு உரை கண்டவர் பரிமேலழகர். இந் நூலின் 22, 24 ஆவது பாடல்கள் தொல்காப்பியச் செய்யுளியல் உரையில் காணப்படுபவை. ஒன்று திருமாலையும், மற்றொன்று மதுரையையும் பற்றியன. திருமால் பற்றிய பாடலில், சிவபெருமான் தன்னைப் பணிபவரைப் பெற்றவனே அன்றிப் பிறரைப் பணியும் தன்மையன் அல்லன் என்பதை நன்கு தெளிவுற " பணிவில் சீர்ச் செல்விடைப் பாகன் " என்று கூறியிருப்பது காணத்தக்கது, வையை பற்றிய பாடலில் வைகையில் நீராடியவர் யார் யார் என்பதை,

" கற்றுரும் கல்லா தவரும் கயவரும் பெற்றுரும்
பெற்றுல் பிழையாத பெண்டிரும் பொன்தேரான் தானும்"
என்ற அடிகள் தெரிவிக்கின்றன.

புறத்திரட்டு நூலில் சில பாடல்கள் காணப் படுகின்றன. அவை பரிபாடல் பாட்டின் உறுப்புக்கள் எனக் கருதப்படுகின்றன. அவை அனைத்தும் மதுரையின் மாண்பை விளக்குவன :

அவற்றுள் இரண்டு,

" உலகம் ஒருநிறையாத் தானோர் நிறையாப்
புலவர், புலக்கோலால் தூக்க—உலகனைத்தும்
தான்வாட வாடாத் தன்மைத்தே தென்னவன்
நான்மாடக் கூடல் நகர்."

" ஈவாரைக் கொண்டாடி ஏற்பாரைப் பார்த்துவக்க
வேய்மாடக் கூடலும் செவ்வேள் பரங்குன்றும்
வாழ்வாரே வாழ்வார் எனப்படுவார் மற்றையார்
போவாரார் புத்தேள் உலகு."

என்பன.

கலித்தொகை

இந்நூல் சங்கம் மருவிய எட்டுத்தொகையில் ஆறுவது. இஃது அகப்பொருள் தழுவிய நூல். முற்றிலும் கலிப்பாட்டினுல் ஆனது. இந் நூலைத் தொகுத்துக் கொடுத்த அறிஞர் நல்லந்துவனுர். கடவுள் வாழ்த்துப் பாடலைப் பாடியவரும் இவரே. இவர் மதுரையில் வாழ்ந்தவர். இவர் தொகுத்தார் என்பதை,

" நாடும் பொருள்சான்ற நல்லந்துவன் ஆசான்
சூடுபிறைச் சொக்கன் துணைப்புலவோர்—தேடுவார்
கூட்டுணவே வாழ்த்தோடு கொங்காம் கலையினையே
கூட்டினுன் ஞாலத் தோர்க்கு."

என்ற பாடலைக் காண்க. நச்சினுர்க்கினியரும், " ஆசிரியர் நல்லந்துவனுர் கோத்தார்" என்று குறிப்பிட்டுள்ளார். இந்நூல், புலவர் பெருமக்களால் பெரிதும் பாராட்டப்பட்டுள்ளது.

" திருத்தகு மாமுனி சிந்தா மணிகம்பன்
விருத்தக் கவிவளமும் வேண்டேம்—திருக்குறளோ
கொங்குவேள் மாக்கதையோ கொள்ளேம் நனிஆர்வேம்
பொங்குகலி இன்பப் பொருள்."

"பொங்குகலி இன்பம் பொருள்" என்ற உணர்ச்சி மிக பாடியதை ஓர்க. 'கற்றறிந்தார் ஏத்தும் கலியோடு,' என்ற அடைச்சிறப்பினையும் காண்க.

ஓடு என்பது மூன்றும் வேற்றுமை உருபு. இவ் உருபு எதனோடு சார்த்தி வழங்கப்படுகிறதோ, அது தனிச் சிறப்புடையது. இது தொல்காப்பியர் கருத்து. இதனை "ஒருவினை ஒடுச்சொல் உயர்பின் வழித்தே" என்னும் நூல்பா கொண்டு தெளிக.

இத்தகைய பெருமைக்குரிய நூலின் கடவுள் வாழ்த்து இறைவன் ஆடிய கொடுகட்டி, பண்டரங்கம், காபாலம் ஆகிய கூத்துக்கள் குறிக்கப்பட்டுள்ளன. அவை எதுபோது ஆடப்பட்டன என்பதையும், உலகம் அனைத்தும் அழிந்த போது உமையம்மையும் இறைவனும் மட்டுமே எஞ்சி நிற்பர் என்பதையும் அறியலாம். முதலாவதாகிய பாலைக் கலியில் முப்பத்தைந்து பாடல்கள் உள. பொருளைத் தேடுதற்குரிய காரணம் இன்னது என்பதும், பாலையின் இயல்பும், தலைவி பிரிந்த போது ஆற்றி இருத்தலையும், பாலையின் வெம்மைக்குக் கொடுங்கோன்மையின் வெம்மையும், தலைவன் பின் தலைவி சென்றதும் தக்கதே ஆகும் என்பதற்குக் காட்டப்பட்ட உவமைகளும், கடன் வாங்குங்கால் உளதாகும் இயல்பும், கொடுக்குங்கால் உளதாகும் இயல்பும், மற்றும் பலவும் அழகுறப் பாடப்பட்டுள்ளன பொருளின் சிறப்பு.

"தொலைவாகி இரந்தோர்க் கொன்றீயாமை இளிவென
மலையிறந்து செயல்சூழ்ந்த பொருள்."
"இல்லென இரந்தோர்க் கொன்றீ யாமை இளிஎனக்
கல்இறந்து செயல் சூழ்ந்த பொருள்."

எனக் கூறப்பட்டது.

பாலைக்கலியைப் பாடியவர் சேரமான் பாலை பாடியபெருங் கடுங்கோ; சேரமன்னர் மரபினர்; கொடையும், வீரமும், கல்வியும் நிரம்பியவர். இவரது பாடல்கள் குறுந்தொகையில் அகநானூற்றில் உள்ளன.' இவர் அறநூல், மரநூல், விலங்குநூல், இசை, ஓவியம் ஆகியவற்றில் வல்லுநர் என்பது இவரது பாடலால் தெரிகிறது.

இரண்டாவதாகிய குறிஞ்சிக்கலியினைப் பாடியவர் கபிலர். முத்தமிழ்க் கபிலர் என்றும் கூறுவர். இதில் இருபத்தொன்பது பாக்கள் உள. தலைவன் தலைவிபால் வைத்த காதலால் இரவில் வருவதும், அவ்விரவோ வல்விலங்குகள் உலவும் இடமாதலின், வாரற்க என்று தோழி தலைவனிடம் கூறும் பகுதியும், ஓர் இளைஞன் நீர் கேட்பவன் போலவந்து இளையவளைக் கண்டு நீர் பருகும் நிலையில் அவள் மீது கண்ணோட்டம் புரிந்ததும், இவை போன்ற செய்திகள் இதன் கண் உள.

" அஞ்சலோம் பென்றுரைப் பொய்த்தற் குரியனோ
குன்றகல் நன்னாடன் வாய்மையில் பொய்தோன்றின்
திங்களுள் தீத்தோன்றி அற்று."

என்பது குறிஞ்சியில் கண்ட அடிகள்.

மூன்றாவதாகிய மருதக்கலியில் முப்பத்தைந்து பாடல்கள் உள்ளன. இதில் தலைவன் தலைவியைத் துறந்து பரத்தையர்பால் ஒழுகலும், அதனால் தலைவி ஊடல் கொள்ளுதலும், அவளுடலைத் தீர்க்க அவன் விருந்தினரை அழைத்து வருதலும், தலைவி தலைவனிடம் தன் புதல்வனையும் தொடாமல் பரத்தையர் இல்லமே செல்க எனக் கூறுதலும் போன்ற செய்திகளைப் படித்துச் சுவைக்கலாம்.

" பூங்கண் புதல்வனைப் பொய்பல பாராட்டி
நீங்காய் இகவாய் நெடுங்கடை நில்லாதி
ஆங்கே அவர்வயின் சென்றீ அணிசிதைப்பான்
ஈங்கெம் புதல்வனைத் தந்து."

இப்பகுதியினைப் பாடியவர் மருதன் இளநாகனார். இவர் மதுரை ஊரினர்; இறையனார் களவியலுக்கு உரை வகுத்தவர்களுள் ஒருவர். சைவசமயத்தவர். இவரது பாடல்கள் சங்க நூல்களில் உண்டு. இவருக்கு நல்லந்துவனாரிடத்தில் பெருமதிப்புண்டு. குழந்தைகட்கு ஐம்படைத்தாலியே அன்றி, இறைவனது ஆன் இலச்சினை அணிதலும் உண்டு என்பதை உணர்த்தியுவர்.

நான்காவதாகிய முல்லைக்கலி பதினேழு கலிப்பாக்களைக் கொண்டது. இதன்கண் பலவகையான எருதுகளைப் பற்றியும், ஏறுதழுவும் இயல்புகளைப்பற்றியும், ஏறு

தழுவும் வீர ஆயர்களையே ஆயமகள் மணக்க விரும்புவள் என்பது பற்றியும் கூறிஇருப்பதைக் காணலாம். எவன் ஏற்றின் கொம்புக்கு அஞ்சுகின்றானோ, அவனை ஆய்மகள் மறுபிறப்பிலும் புல்லாள் என்பதை நாம் இதன் வழி காண்கிறோம்.

"கொல்லேற்றுக் கோடஞ்சுவானை மறுமையும்
புல்லாளே ஆய மகள்"

என்ற அடிகளைக் காண்க.

இப் பகுதியைப் பாடியவர் உருத்திரன் என்பவர். இவர் சோழன் உருத்திரன் என்றும் கருதப்படுபவர்.

ஐந்தாவதாகிய நெய்தற்கலி, முப்பத்து மூன்று பாடல்களைக் கொண்டது. இதன்கண் பாடப் பட்டுள்ள மாலைக் கால வர்ணனைகள் சுவை தருவனவாகும். ஆற்றுதல், போற்றுதல், பண்பு, அன்பு, அறிவு, செறிவு, நிறைவு, முறை, பொறை ஆகிய இப் பண்புகள் இன்ன இன்ன தன்மையன என்று விளக்கி இருப்பவை என்றும் மறக்க ஒண்ணாக் கருத்துக்களாகும்.

"ஆற்றுதல் என்பது அலந்தவர்க்கு உதவுதல்
போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை
பண்பெனப் படுவது பாடறிந்து ஒழுகுதல்
அன்பெனப் படுவது பேதையார்ச் சொல்நோன்றல்
செறிவெனப் படுவது மறைபிறர் அறியாமை
முறைஎனப் படுவது கண்ணோடாது உயிர்வவ்வல்
பொறை எனப்படுவது போற்றாரைப் பொறுத்தல்"

என்ற அடிகளைக் காண்க.

இப் பகுதியினைப் பாடியவர் நல்லந்துவனார். இவரை ஆசிரியர் நல்லந்துவனார் என்றும் கூறுவர். இவரது பாடல்கள் சங்க நூற்களிலும் உண்டு.

அகநானூறு

இந்நூல் நெடுந்தொகை என்றும் கூறப்பெறும். எட்டுத் தொகை நூல்களுள் ஐந்து அக ஒழுக்கத்தைப் பற்றிக் கூறினாலும், அக ஒழுக்கப் பெயராலேயே இந்நூல் வழங்கப்

பெற்றது, இதன் சிறப்பை உணர்த்தும் என்றும் கூறலாம். இந் நூலுக்குப் பதவுரையோ, பொழிப்புரையோ பண்டை நாளில் இல்லை. ஆனால், பழைய குறிப்புரை மட்டும் உண்டு. இப் பழைய குறிப்புரை கொண்டு இந்நூலின் சுவையினை முற்றிலும் உணர இயலாது. இந்நிலையில் இதுபோது இந் நூலுக்கு முழுவுரை வந்துளது. இஃது எட்டுத் தொகையில் ஏழாவது.

இந்நூலுக்குப் பாரதம் பாடிய பெருந்தேவனார் இயற்றிய கடவுள் வாழ்த்துடன், ஏனைய அகப்பொருள் தழுவிய நானூறு அகவற்பாக்களுடன் அமைந்துள்ளது. இந்நூலுள் காணப்படும் பாடல்கள் ஏனைய அகப்பொருள் பாடல்களினும் அடி அளவில் மிக்கு இருத்தலின், இது நெடுந் தொகை என்னும் பெயரைப் பெற்றது. இதில் காணப்படும் பாடல்கள் பதின் மூன்றடிச் சிற்றெல்லையும், முப்பத்தொன்று பேரெல்லையும் கொண்டுள்ளன. இந்நூலில் காணப்படும் பாடல்கள் ஒருவரால் பாடப்பெருமல் பலரால் பாடப்பட்டவை. அங்ஙனம் பாடிய புலவர்கள் நூற்று நாற்பத்தைந்து பேர் என்றாலும், மூன்று பாடல்களின் ஆசிரியர் பெயர்கள் அறிதற்கு இல்லை.

இந்நூல் களிற்றியானை நிரை (1—120 பாடல்கள்), மணிமிடைபவளம் (121—300), நித்திலக்கோவை (301-400) என்ற முப்பிரிவினையுடையது. யானை போலக் கம்பீரத் தோற்றத்துடன் இப்பகுதியில் அடங்கிய நடையும் பிற பொருளும் காணப்படுதலின், களிற்று யானை நிரை என்றும், இரத்தினமும் பவழமும் கலந்தாற்போலச் சமமான நடையும் பொருட்பொலிவும் கொண்டு இப்பகுதி திகழ்தலின், மணிமிடை பவளம் என்றும், ஒரே வகையான முத்துக்களைக் கோத்தாற்போல ஒரே நடையில், பொருட்பொலிவில் இப்பகுதி விளங்கலின், நித்திலக் கோவை என்றும் பாகுபடுத்தப்பட்டது. பாலைக்கு இருநூறும், குறிஞ்சிக்கு எண்பதும், மருதம், முல்லை, நெய்தல் ஆகிய இவற்றிற்குத் தனித்தனி நாற்பதும் என்னும் எண்ணிக்கையில் இந்நூல் 400 பாடல்களைக் கொண்டு திகழ்கிறது.

இந்நூலைத் தொகுத்து உதவும்படி கேட்டவன் உக்கிரப்பெருவழுதிப் பாண்டியன். இதனைத் தொகுத்துக் கொடுத்-

தவர் மதுரை உப்புரிகுடிகிழார் உருத்திரசன்மர் என்பவர். இந்நூலைப் பல புலவர்களும், உரையாசிரியர்களும் எடுத்து ஆண்டுள்ளனர். இந்நூல் வழி மக்கள் இயல்பு, வழக்கு, நாகரிகம், திருமணமுறை, அரசர் மாண்பு, கொடை, வீரம், நீதி, நாடு, வள்ளல்கள் சிறப்பு, புலவர்கள் மேன்மை போன்ற பல செய்திகளை உணரலாம். அக்காலத்துக் காதல் மாண்பை,

" யாக்கைக்கு, உயிர் இடத்து அன்ன நட்பின் அவ்வுயிர்
வாழ்தல் அன்ன காதல்
சாதல் அன்ன பிரிவரி யோளே."

என்ற அடிகளில் காண்க. இத்துடன் இன்றிக் காதலர்களின் இணைபிரியா நிலைக்கு உவமை காட்டுகையில் "இருதலைப் புள்ளின் ஓருயிர் அம்மே" என்றுகூறி இருப்பதையும் காணலாம். பண்டைக் காலத் திருமண முறையினைக் கீழ்வரும் அடிகளிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

"உழுந்து தலைப்பெய்த கொழுங்களி மிதவை
பெருஞ்சோற்று அமலை நிறப நிரைகால்
தண்பெரும் பந்தர்த் தருமணல் ஞெமிரி
மனைவிளக் குறுத்து மாலை தொடரிக்
கனை இருள் அகன்ற கவின்பெறு காலைக்
கோள்கால் நீங்கிய கொடுவெண் திங்கள்
கேடில் விழுப்புகழ் நாடலை வந்தென
உச்சிக் குடத்தர் புத்தகல் மண்டையர்
பொதுசெய் கம்பலை முதுசெம் பெண்டிர்
முன்னவும் பின்னவும் முறைமுறை தரத்தரப்
புதல்வன் பயந்த திதலைஅவ் வயிற்று
வால்இழை மகளிர் நால்வர் கூடிக்
கற்பினில் வழாஅ நற்பல உதவிப்
பெற்றோர் பெட்கும் பிணையை ஆகென
நீரொடு சொரிந்த ஈர்இதழ் அலரி
பல்லிருங் கதுப்பின் நெல்லொடு தயங்க
வதுவை நன்மணம்."

இயற்கை வர்ணனைகள் மிகுதியாக உள்ளன. அவற்றினை விரிக்கின் பெருகும். என்றாலும் இரண்டொன்றை மட்டும் ஈண்டுக் காண்போமாக.

இதில் கூறப்பட்டுள்ள இயற்கை நிகழ்ச்சிகளும், மக்கள் இயல்புகளும் படிக்கச் சுவை பயப்பன ஆகும். உயிர் இனங்களின் செயல்களும், மலை, காடு, மருதம், கடற்கரை, பாலை இவற்றின் வர்ணனைகளும் இன்பம் ஊட்டு-வனவாகும். தினைப்புனம் காக்கும் பெண், குறிஞ்சி இசை பாடத் தினை யுண்ணவந்த யானை, உண்ணுதலை விடுத்து அப்படியே நின்றுவிடும். இதனைக் "குறிஞ்சி பாடக் குரலும் கொள்ளாது நிலையினும் பெயராது மதகளிறு உறங்கும்" என்னும் அடியில் காணலாம். சகுனம் பார்க்கும் இயல்பு விலங்குகளிடமும் இருக்கிறது. பன்றி ஒன்று தினையுண்ணப் புறப்பட்டபோது, பல்லி ஒலித்தது. அதைக் கேட்ட பன்றி மெல்லத் தினைப் புனம் குறுகியது என்பதை "படுவாய்ப் பல்லிப் பாடு ஓர்த்துக் குறுகும் புருவைப் பன்றி" என்பதைக் காண்க. குரங்குகள் குறும்புள்ளவை. ஒரு குரங்கு பலாப் பழத்தைக் கண்டது. அதனையே தெப்ப-மாகக் கொண்டு அருவி வழியைக் கடந்து அடுத்த ஊரை அடைந்தது.

*

வரலாற்றுக் குறிப்புக்களும் இதன்கண் உள்ளன. "யவனர் தந்த வினைமாண் நன்கலம், பொன்னொடு வந்து கறியொடு பெயரும்" என்னும் அடியில் உள்ள யவனர் என்பார் கிரேக்கரும் ரோமரும் ஆவர். இவர்கள் நமது நாட்டு மிளகைப் பொன் கொடுத்துப் பெற்றுப் போயினர் என்பது வரலாறு. இதுவே இவ்வடிகளில் குறிக்கப்படுவது. நவநந்தர்கள் என்பார் தமது பெரு நிதியைக் கங்கை யாற்றில் மறைத்து வைத்த செய்தியை இந்நூலில் வரும் "பல் புகழ் நிறைந்த வெல்போர் நந்தர், சீர்மிகு பாடலிக் குழீஇக் கங்கை நீர் முதல் கரந்த நிதியம் கொல்லோ" என்ற அடிகளால் உணரலாம். மௌரியரைத் தமிழ்மன்னர் வெற்றி கொண்டது பற்றிய செய்தியை,

"தெம்முனை சிதைத்த ஞான்றை மோகூர்
பணியா மையின் பகைதலை வந்த
மாகெழு தானை வம்ப மோரியர்
புனைதேர் நேமி உருளிய குறைத்த"

என்ற அடிகளில் காண்க.

குழந்தையின் வர்ணனையை இத்தொகை நூல்,

“நாயுடை முதுநீர்க் கலித்த தாமரைத்
தாதின் அல்லி அயல்இதழ் புரையும்
மாசில் அங்கை மணிமருள் அவ்வாய்
நாவொடு நவிலா நகைபடு தீஞ்சொல்
யாவரும் விழையும் பொலங்தொடிப் புதல்வன்.”

என்று கூறுகிறது. குழந்தைகளைச் சிறப்பித்ததோடு இன்றிக் குழந்தைப் பேறே இம்மைப் பயனையும் மறுமைப் பயனையும் ஈயவல்லது என்பதை,

“இம்மை உலகத்து இசையொடும் விளங்கி
மறுமை உலகமும் மறுவின்றி எய்தும்
செறுநரும் விழையும் செயிர்தீர் காட்சிச்
சிறுவராய்ப் பயந்த செம்மலோர் எனப்
பல்லோர் கூறிய பழமொழி.”

என்ற அடிகளில் தெரியலாம். சூளைமீது புகைபடிந்துள்ளது. அதற்கு உவமை காட்டுகையில், மலை மீது மேகம் சூழ்ந்திருப்பது போன்றதெனக் கூறிய உவமை சுவை பயப்பதாக உளது. செவ்வானத் தோற்றத்தை உவமையால் விளக்கும் போது “இரு பொருள் தெய்வத் துருவுடன் இயைந்த தோற்றம் போல” என்று கூறப்பட்டுள்ளது. இருபெருந் தெய்வம் அம்மையப்பர் ஆவர். அரன் அரிவடிவம் எனினும் ஆம்.

பாலைநில மக்கள் வழியில் போவாரை வருத்துவர். அங்ஙனம வருத்த அம்பு விடுப்பர். அதுபோது அம்பு சிதையினும் சிதையும். அந்நிலையில் அந்நிலவாசிகள் அம்பு சிதைந்ததற்கு வருந்துவரே அன்றி, இறந்தவர்கட்கு இரங்கார். இதனை இந்நூல்,

“சென்றோர் செல்புறத்து இரங்கார்
கொன்றோர் கோல்கழிபு இரங்கும் அதர”

என்கிறது. இதன் வழி பாலைமக்களின் இரக்கம் இன்மையைக் கூறியவாறும். நம் தமிழ்நாடு பொன்வளம் மிகுதியும் பெற்றிருந்தது. சுரங்கங்கள் பல இருந்தன. இது “நன்னன்

விண்பொரு நெடுவரைக்காவாஅன் பொன்படு மருங்கு" என்று இந்நூலில் வரும் அடி நன்கு உணர்த்து-கின்றன. இங்ஙனம் பல குறிப்புக்களை இந்நூலில் பரக்கக் காணலாம். இந்நூலில் பெண்பாற் புலவர்களும் இடம் பெற்றுள்ளனர்.

புறநானூறு

புறநானூறு எட்டுத்தொகை நூல்களுள் இறுதியானது. புறப்பொருள் கருத்துடைய பாடல்களைக் கொண்டது. பாரதம் பாடிய பெருந்தேவனாரது கடவுள் வாழ்த்து உள்பட நானூறு அகவல் பாக்களைக் கொண்ட நூல் இது. ஆனால், 267, 268 ஆம் எண்ணுள்ள பாக்கள் கிடைத்தில. இதில் அரசர்களும், துறவிகளும், ஆண்பால், பெண்பால் புலவர்களும் பாடிய பாடல்கள் உண்டு. இது தமிழ் நாடு, தமிழ் மக்களின் பண்டைய நிலை, சிறந்த நாகரிகம் முதலானவற்றை உணர்த்தும் தலைசிறந்த நூல். முடி-யுடை மூவேந்தர்கள் குறுநில மன்னர்களின் வீரத்தையும், ஈரத்தையும், கடை எழுவள்ளல்கள், மற்றும் வீரர்கள், குடி-மக்கள் இவர்களின் கொடை மாண்புகளையும், சில புலவர் வரலாற்றுக் குறிப்புக்களையும், அரிய பெரிய நீதிகளையும் அறிவித்தலின் இது தலைசிறந்தது. அரிய பல குறிப்புக்களை இதன்கண் காணலாம். இந்நூலை யார் தொகுத்தனர்? தொகுக்கும்படி செய்தவர் யார்? என்பன போன்ற குறிப்-புக்கள் தெரியவில்லை. இந் நூலுக்கு நல்ல பொழிப்புரை பண்டைக் காலத்திலேயே எழுதப்பட்டு உளது. ஆனால், பிற்பகுதியில் 269 முதல் 400-வது பாடல்கட்குப் பழைய உரை கிடைத்திலது. பாடல்களும் சிதைந்து காணப்படு-கின்றன. இப்பகுதிகட்குரிய குறிப்புரைகளை டாக்டர் ஐயர் அவர்கள் எழுதியுள்ளனர்.

இந்நூல் புறம், புறப்பாட்டு எனவும் வழங்கப்பட்டது. இந்நூலில் பாடியுள்ள புலவர்கள் ஒரு குலத்தவர், ஓர் இடத்-த்தவர், ஒரு காலத்தவர் அல்லர். ஒவ்வொரு பாட்டின் ஈற்றி-லும் திணை, துறைகள் குறிக்கப்பட்டுள்ளன. மேலும், அப்-பாடல் யார் மீது, யாரால், எதுபோது பாடப்பட்டது என்ற குறிப்புக்களும் ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும் உள. ஒரே புலவர் ஒரே அரசனைப் பாடிய பாடல் அடுத்து

அடுத்து வரும்போது, "அவனை அவர் பாடியது" என்பது மட்டும் குறிக்கப் பெற்றுள்ளது. மன்னனை ஒருமையிலும், புலவரை மரியாதைப் பன்மையிலும் குறித்திருப்பது கொண்டு புலவர்கட்கு இருந்த மாண்பு தெரிகிறது.

இந்நூலின் ஒரு பிரதியில் அறநிலை என்ற பகுப்புக் காணப்பட்டதால், இது பொருள் நிலை, இன்ப நிலை என்ற பகுப்புடன் திகழ்ந்திருக்க வேண்டுமென டாக்டர் ஐயர் கருதுகின்றனர். இந்நூல் முற்காலப் பிற்கால உரை ஆசிரியர்களால் பெரிதும் எடுத்தாளப்பட்டுள்ளது.

இந்நூலின் உரையாசிரியர் யாவர் என்பது தெரிதற்கு இல்லை. இவர் தமது நூலில் சில மறுப்புரைகளையும் எழுதியிருத்தலின், இவருக்கு முன்பும் இதற்கோர் உரை இருக்க வேண்டும் என்பது தெரிகிறது. இந்நூலுக்குப் திணை, துறைக் குறிப்புக்களுள் சிலவற்றினை நச்சினார்க்கினியர் மறுத்திருத்தலின், இந்நூலின் உரை ஆசிரியர், நச்சினார்க்கினியருக்கும் முற்பட்டவர் போலும்!

இந்நூலில் அமைந்த உவமைகள் சுவையும் பொருத்தமும் உடையன. அரசனுக்கு உயிரும், அருளுக்கு நீரும், உபகாரிக்குப் பாலையில் இருந்த மரமும், கள்மயக்கத்திற்குத் தேள் கடுப்பும், மெல்லிய உடைக்குப் பாம்புத்தோலும், நண்பர்கட்குக் கண்ணும், முயல் கண்ணிற்கு நீர்க்கொப்புளமும், வறுமைத் துயர்க்கு நரகத்துயரும் கூறப்பட்டுள்ளன. இந் நூலால் பல அரிய குறிப்புக்கள் அறிய வருகின்றன. இடி வெள்ளை நிறத்தது, நிலத்திற்கும் நீர் முந்தியது, மழைத்துளி கடலில்வீழின் முத்துண்டாகும், தேவலோகத்திருந்து பூலோகத்திற்குக் கரும்பு கொணரப் பட்டது, உடைப்பை மீனால் அடைத்தல், காப்பாளர் யாமம் தோறும் உலாவி ஊர்காத்தல், தரும ஓடம் விடுதல், பெண்டிர் நூல் நூற்றல், போர்க்குச் செல்லும்போது குளத்தில் குளித்துச் செல்லல், போரில் கண்இமை கொட்டியவர் மீது போரிடாமை என்பனபோன்ற செய்திகளை அறிந்து கொள்ளலாம்.

இறைவன் அம்மை அப்பனாக விளங்குதலை "பெண்ணொரு திறன் ஆகின்று" என்னும் தொடர் காட்டுகிறது.

அம்மை அப்பனே எல்லா உயிர்க்கும் காவல் என்பதை "எல்லா உயிர்க்கும் ஏமமாகிய தாழ்சடை பொலிந்த அருந்தவத்தோன்" என்னும் தொடர் காட்டுகின்றது.

பாரதப் போர் நடந்த காலத்தில் பெருஞ்சோற்று உதியம் சேரலாதன் பஞ்ச பாண்டவர் சேனைக்கு உணவு அளித்து உதவினன் என்பது, "அலங்குளைப் புரவி ஐவரொடும் சினைஇ நிலந்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை ஈரைம் பதின்மரும் பொருதுகளத் தொழியப் பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்" என்ற அடிகளால் அறிய வருகின்றது.

அறப்போர் முறை அக்காலத்து இருந்தமை "எம்மம்பு கடிவிடுதும் நும்அரண் சேர்மின்" என்று கூறி இருப்பது கொண்டு தெளியலாம். தானத்தில் சிறந்தது அன்னதானம் என்பதை, "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என்ற அடியால் அறியலாம். புலவர்களால் பாடப்பட்டவர், வலவன் ஏவா வான ஊர்தியில் செல்வர் என்பதும் அறிய வருகிறது. இக் காலத்தில் சந்திர மண்டலம்வரை செல்வதைக் கண்டு இறும்பூது எய்துகிறோம். இவ்வாறே புறநானூற்றுக் காலத்தில் இதுபோன்ற மண்டலங்களுக்குச் சென்று ஆய்ந்தனர் என்பதை "செஞ்ஞாயிற்றுச் செலவும், அஞ்ஞாயிற்றுப் பரிப்பும், பரிப்புச் சூழ்ந்த மண்டிலமும், வளிதிருதரு திசையும் வறிது நிலைஇய காயமும் என்றிவை சென்றளந் தறிந்தோர்," என்ற அடிகளில் காண்க.

அரசனது வெற்றிக்கு அறநெறியே முதன்மைத்து என்பது இதில் அறியப்படும் நீதி. பண்டைக் காலத்தில் கடலில் கப்பலைச் செலுத்திக் காற்றையும் அடக்கியவர் நம் தமிழ் வேந்தர் என்பதை "நளியிரும் முன்னீர் நாவாய் ஓட்டி வளிதொழில் ஆண்ட உரவோன்" எனப் பெருமிதத்துடன் இந்நூல் பாடுகிறது. அக்காலத்து வள்ளல்கள் புண்ணியம் கிடைக்குமென்ற நோக்குடன் அறமது புரியாமல், பிறர் வறுமை தீர ஈந்து வந்தனர். அக்கால வீர மக்கள் கொடை மடம் படுதல் அல்லால், படைமடம் படாது வாழ்ந்தனர்.

புறநானூற்றில் அமைந்த நீதிகள் பற்பல. இதனைச் "செல்வத்துப் பயனே ஈதல்" என்றும், "தீதும் நன்றும்

பிறர்தர வாரா" என்றும், "நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும் அல்லது செய்தல் ஓம்புமின்" என்றும்,

" ஈயென இரத்தல் இழிந்தன்று அதனிள்
ஈயென என்றல் அதனினும் இழிந்தன்று
கொள்ளேனெக் கொடுத்தல் உயர்ந்தன்று அதன்எதிர்
கொள்ளேன் என்றல் அதனினும் உயர்ந்தன்று"

என்றும் வந்துள்ளனவற்றைக் காண்க.

இழிந்தன்று என்பதற்கு இழிந்தது என்பதும், உயர்ந்தன்று என்பதற்கு உயர்ந்தது என்பதும் பொருளாம். பெண்களின் வீரவுரைகளும் செயல்களும் இந்நூலில் தான் காணப்படுகின்றன. "என் மகன் அறப்போர் செய்யாது ஓடினன் ஆயின், அவனுக்குப் பாலூட்டிய மார்பை அறுத்தெரிவேன்" எனப் போர்க்களம் சென்று தன் மகன் எங்ஙனம் இறந்தான் என்பதை நேரில் கண்டு மகிழ்ந்தாள். ஒருத்தி தன் குடிக்கு ஒருமகனே உள்ளான் என்பதை உணர்ந்தும், ஒருத்தி தன் மகனைப் போர்க்கு அனுப்பினள் என்பதை,

" ஒருமகன் அல்லது இல்லோள்
செருமுகம் நோக்கிச் செல்கென விடுமே."

என்று கூறிய வீரநிலையினை நோக்குக. இங்ஙனம் எண்ணிலாத பற்பல குறிப்புக்கள் இந் நூலில் காணக் கிடைக்கின்றன.

பத்துப் பாட்டு
(Pathuppattu)

எட்டுத் தொகை இன்ன என்று முன்னர்க் கண்டோம். இதுபோது பத்துப்பாட்டு இன்னது என்பதையும் அறிதல் வேண்டும். எட்டுத் தொகை நூற்களில் பற்பல புலவர்களால் பற்பல சந்தர்ப்பங்களில் பாடிய பாடல்கள் இருக்கக் கண்டோம். ஆனல், பத்துப்பாட்டு என்பது பத்துத் தனித்தனி நூல்களைக் கொண்ட ஒரு தொகுப்பாகும். பல அடிகள் கொண்ட நீண்ட பாட்டுக்கள் இதில் உள. இந்நூலையும் ஒருவர் தொகுக்குமாறு கேட்க, ஓர் அறிஞர் தொகுத்துத்

தந்திருக்கவேண்டும். இன்றேல் எவரேனும் ஓர் அறிஞர் பெருமகனார் தாமே தொகுத்திருக்க வேண்டும். இந்நூல் பொருட்கிசைந்த கற்பனைகளைக் கொண்டது என்பது.

" பத்துப்பாட் டாதிமனம் பற்றினவர் பற்றுவரோ
எட்டுணையும் பொருட்கிசையும் இலக்கணமில் கற்பனையே."

என வரும் மனோன்மணிய அடிகளால் தெரிகிறது. இனி இத்தொகுப்பு நூலில் உள்ள பத்துப் பாட்டுக்களைப்பற்றி அறிவோமாக.

பத்துப் பாட்டு என்னும் இத்தொகுப்பு நூலில் பத்து நூல்கள் அமைந்துள்ளன. அவை திருமுருகாற்றுப்படை, பொருநர் ஆற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும் பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடு-நல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடு காடாம் என்பன.

இவ்வரிய தொகுப்பு நூலுக்கு உச்சிமேல் புலவர்கொள் நச்சினார்க்கினியர் என்பார் உரை எழுதியுள்ளனர். இவ்-வுரையினால், இவ்வுரைக்கு முன்பும் மற்றுமோர் உரை இருந்-திருக்க வேண்டும் என்பது தெரிகிறது.

இப் பத்துப் பாட்டு நூலில் உள்ள பாடல்கள் பாட்டு எனவும், பா எனவும் வழங்கப்பெறும். " சான்றோர் உரைத்த தண்டமிழ்த் தெரியல், ஒருபது பாட்டும் " என்று நச்சினார்க்-கினியர் உரைச் சிறப்புப் பாயிரத்தாலும், பேராசிரியரைப் போன்ற உரையாசிரியர்கள் " பாட்டினும், தொகையினும் வருமாறு கண்டு கொள்க " என்று * குறிப்பிடுமிடத்தில், பத்துப் பாட்டினை முன்வைத்துக் கூறுவதாலும் " மூத்தோர்-கள் பாடியருள் பத்துப் பாட்டும், எட்டுத்தொகையும் " என்று தமிழ்விடுதூது அடிகளாலும், இந்நூலின் சிறப்பை நன்கு உணரலாம்.

இப் பத்துப் பாட்டுள் முல்லைப் பாட்டும், குறிஞ்சிப் பாட்டும், பட்டினப்பாலையும் அகத்திணைக்கு உரியன. ஏனைய ஏழும் புறத்திணைக்கு உரியன. பத்துப்பாட்டில் ஆற்றுப் படையாக உள்ளவை ஐந்தாகும். இனி ஒவ்வொரு பாட்-டைப் பற்றியும் சிறிது அறிவோமாக.

திருமுருகாற்றுப்படை: இதனைப் பாடியவர் மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரர் ஆவார். இது புலவர் ஆற்றுப்படை எனவும், முருகு எனவும் கூறப்பெறும். இதில் 317 அடிகள் உள்ளன. இஃது ஆசிரியப் பாவால் அமைந்தது. ஆறு+படை என்னும் இரு சொற்களால் ஆன இத்தொடரின் பொருள் வழிப்படுத்தல் என்பது. அதாவது வள்ளல் ஒருவனைக் கண்டு வேண்டிய பொருள்களைப் பெற்றுவரும் ஒருவன், தான் வரும் வழியில் ஒரு வறுமையாளனைக் கண்டு, அவனிடம் தனக்குப் பொருள் ஈந்து வறுமையினைப் போக்கிய வள்ளல் இருக்கும் இடத்தையும், வள்ளலின் பெருமையினையும் கூறி அவ்வறுமையாளனை வள்ளலிடம் வழிப்படுத்துவதாகும். ஈண்டு முருகப் பெருமானிடத்தில் வழிப்படுத்தலின், முருகாற்றுப் படையாகி, முருகனது தகுதியின் பொருட்டுத் திரு என்னும் அடைமொழி தந்து திருமுருகாற்றுப்படையாகி இப் பெயரால் இந்நூல் வழங்கப்படுவதாயிற்று. நச்சினார்க்கினியர் திருமுருகாற்றுப்படைக்கு விளக்கம் தரும்போது, 'வீடு பெறுதற்குச் சமைந்தான் ஓர் இரவலனை, வீடுபெற்றான் ஒருவன் முருகனிடத்தே ஆற்றுப்படுத்தது' என்று விளக்கியுள்ளார்.

திருமுருகாற்றுப்படைக்கும் ஏனைய ஆற்றுப்படைக்கும் ஒரு வேறுபாடு உண்டு. பொதுவாக ஆற்றுப்படை நூல்கள் யாரை ஆற்றுப்படுத்துகின்றார்களோ, அவரது பெயரை இணைத்தே வழங்கப்பெறும். ஆனால், திருமுருகாற்றுப்படை, யாரிடத்தில் ஆற்றுப்படுத்தப்பட்டதோ, அவரது பெயரைச் சார்த்தியே வழங்கப்பட்டு வந்துள்ளது.

இந்நூல் முருகப்பெருமானுக்குரிய ஆறுபடை வீடுகளைப் பற்றியும் குறிப்பிட்டுச் சொல்கிறது. அப்படைவீடுகள் திருப்பரங்குன்றம், திருச்சீர் அலைவாய் (திருச்செந்தூர்), திருவாவினன்குடி (பழனியில் உள்ளது), திருஏரகம் (இதுவே சுவாமிமலை), குன்றுதோறாடல் (மலைகள் பலவும்), பழமுதிர்ச்சோலை (இதுவே கல்அழகர் கோவில் மலை மேல் இருப்பது). திருமுருகாற்றுப்படையில் முருகன் திருவடிவப் பெருமை, அவன் சூரன் என்பவனைக் கொன்றது, மதுரையின் பெருமை, இயற்கைவளன், ஆறுமுகங்களும், பன்னிரண்டு கைகளும் முருகனுக்கு இருக்கும் காரணம், முனிவர்-

களின் ஒழுக்கம், அந்தணர்கள் வழிபடும் முறை, முருகனது அணி, ஆடை முதலியன பற்றிய சிறப்பு, அவன் வீற்றிருக்கும் இடங்கள், துதிக்கும் முறை, அவனது அருளைப்பெறும் வழி, தொண்டர்களின் நற்பண்பு, பழமுதிர் சோலையில் விழும் அருவியின் சிறப்பு, சூரரமகளிர், ஆடுமகளிர், பாடும்மகளிர் இயல்பு முதலியன கூறப் பட்டுள்ளன. மேலும், முருகனது ஊர்தி மயில்மட்டும் அன்று; யானையும், ஆடும் ஆகும் என்பதும், மயில்கொடி, சேவல்கொடி ஆகிய இரண்டும் உண்டு என்பதும் தெரிய வருகின்றன.

"திருவீற் றிருந்த தீதுதீர் நியமத்து
மாடமலி மறுகில் கூடல் குடவயின்
இருஞ்சேற் றகல்வயல் விரிந்துவாய் அவிழ்ந்த
முள்தாள் தாமரைத் துஞ்சி வைகறைக்
கள்கமழ் நெய்தல் ஊதி எல்படத்
கண்போல் மலர்ந்த காமரு சுனைமலர்
அஞ்சிறை வண்டின் அரிக்கணம் ஒலிக்கும், குன்றும்"

என்பது திருமுருகாற்றுப்படையில் கண்ட இயற்கை வர்ணனை.

இந்நூலை எழுதிய புலவர் நக்கீரர். இவரது தந்தையார் கணக்காயர். ஆசிரியர் ஊர் மதுரை. ஆகவே, இவர் மதுரைக் கணக்காயனர் மகனார் நக்கீரர் எனப்பட்டார். இவர் இந்நூலே அன்றி நெடுநல்வாடை என்னும் நூலையும் பாடியவர். இவர் இயற்பெயர் கீரர் என்பது. நல்ல என்னும் பொருள் தரும் ந என்னும் அடைமொழியுடன் இவர் நக்கீரர் எனப்பட்டார். இறையனார் களவியலுக்கு முதல் முதல் உரை கூறியவர். இவர் வடமொழியே சிறந்தது தமிழ் தாழ்ந்தது என்று கூறிய குயக்கொண்டானைத் தமிழ்ப்பாடல் பாடி இறக்கச் செய்து, பின் பலர்வேண்ட, மீண்டும் தமிழ்ப் பாடலையே பாடி உயிர்ப்பிக்கச் செய்தனர். இதனை "குயக் கொண்டான்' ஆனந்தம் சேர்க சுவாகா என்றும், செந்தமிழே தீர்க சுவாகா" என்றும், முறையே பாடியுள்ளன வற்றைக் காண்க. நக்கீரர் நாலடி நானூறு, அடி நூல் என்பனவும் பாடினர் எனவும் கூறுவர்.

பொருநர் ஆற்றுப்படை: இதனைப் பாடியவர் முடத்தாமக் கண்ணியார் என்பவர். இதில் உள்ள அடிகள் 248; இஃது ஆசிரியப்பாவால் அமைந்தது. ஆனால், இடையிடையே வஞ்சி அடிகளும் உண்டு. பரிசில் பெற்ற பொருநர், பரிசில் பெறாத பொருநனை, இளஞ்சேட்சென்னியின் மகனான கரிகாலனிடம் ஆற்றுப்படுத்தியதாகும். பொருநன் பொருநனை ஆற்றுப்படுத்தியதால், இது பொருநர் ஆற்றுப்படை எனப்பெயர் பெற்றது. பொருநரில் மூவகையுண்டு. அவர்கள் போர்க்களம் பாடுவோர், ஏர்க்களம் பாடுவோர், பரணி பாடுவோர் எனப்படுவர். அவர்களுள் இங்குப் போர்க்களம் பாடும் பொருநரைப் பற்றியே கூறப்பட்டது.

இந்நூலில் காவிரியின் சிறப்பினையும், கரிகால் பெருவளத்தான் சேரர்களையும் பாண்டியர்களையும் வென்றதையும், பொருநர்கள் பொற்றாமரையினையும் விறலியர் பொன் அரிமாலைகள் பெறுதலையும், பரிசிலர்கள் யானை, தேர் முதலியன பெறுதலையும், பொருநர்கள் விழாக்கள் நடக்கும் இடங்களில் கூடுவர் என்பதையும், பாலையாழின் அமைப்பினையும், விறலின் முடிமுதல் அடிவரை வர்ணிக்கப்பட்ட வர்ணனையையும், கரிகாலன் தன்மாட்டு வந்தவர்களையும் உணவு அளித்து உபசரித்து உண்பிக்கும் இயல்பினையும் காணலாம்.

" அறல்போல் கூந்தல் பிறைபோல் திருநுதல்
கொலைவில் புருவத்துக் கொழுங்கடை மழைக்கண்
இலவிதழ் புரையும் இன்மொழித் துவர்வாய்
பலவுறு முத்தின் பழிதீர் வெண்பல்
மயிர்குறை கருவி மாண்கடை அன்ன
பூங்குழை ஊசல் பொறைசால் காதின்
நாண் அடச் சாய்ந்த நலம்கிளர் எருத்தின்
ஆடமைப் பணைத்தோள் அரிமயிர் முன்கை
நெடுவரை மிசைஇய காந்தள் மெல்விரல்
கிளிவாய் ஒப்பின் ஒளிவிடு வள்உகிர்
அணங்கென உருத்த சுணங்கணி ஆகத்து
ஈர்க்கிடை போகா ஏர்இள வனமுலை
நீர்ப்பெயர்ச் சுழியின் நிறைந்த கொப்பூழ்

உண்டென உணரா வுயவு நடுவினை
இரும்பிடித் தடக்கையில் செறிந்துதிரள் குரங்கின்
பொருந்துமயிர் ஒழுகிய திருந்துதாட் கொப்ப
வருந்துநாய் நாவில் பெருந்தகு சீறடி"

என்பது விறலியின் கேசாதி பாதவர்ணனை.

சிறுபாணாற்றுப்படை: பாணர்கள் சிறுபாணர், பெரும் பாணர் என இரு வகையினர். அவர்களுள் ஈண்டுச் சிறு-பாணரை ஆற்றுப்படுத்தினமையால், இது சிறுபாணாற்றுப் படை என்ற பெயரைப் பெற்றது. இதுவே அன்றி, "இன்குரல் சீறியாழ் இடவயின்தழீஇ," என்று சீறியாழ் குறிப்பு இதன்கண் கூறப்பட்டமையின், அவ்வாழினையுடை-யர் என்ற காரணம் பற்றி வந்த பெயர் எனினும் ஆம். பாணர் என்பார் பாடுவோர் ஆவார். இவர்களுள் இசைப் பாணரும், யாழ்ப்பாணரும் உளர். ஈண்டு யாழ்ப்பாணனைப் பற்றிக் கூறப்படுகிறது. இது 269 அடிகளைக் கொண்டது; ஆசிரியப் பாவால் ஆயது. இதனைப் பாடியவர் இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனர். பரிசில் பெற விரும்பிய பாணன் ஒருவனைப் பரிசில் பெற்றான் ஒருவன் ஓய்மான்நாட்டு நல்லியக் கோடனிடத்தில் ஆற்றுப் படுத்திய முறையில் இது பாடப்பட்டுள்ளது. இதனைச் "சிறப்புடைத்தான சிறு-பாணாற்றுப்படை" என்பர் தக்கயாக பரணி உரை ஆசிரியர்.

இதில் விறலியின் முடி முதல் பாதம் வரையில் வர்ணித்-துள்ள வர்ணனை, மூவேந்தர்களின் தலை நகரங்களின் சிறப்பு, கடைஏழு வள்ளல்களின் அருஞ்செயல், பாட்டு-டைத் தலைவர் வீரம், கொடை, நெய்தல் நில இயல்பு, விருந்-தினரைப் பேணும் முறை, யாழ் வர்ணனை, நல்லியக் கோடன் தன்னை அடைந்தார்க்கு ஈந்து அனுப்பும் முறை முதலான செய்திகள் நன்கு எடுத்து இயம்பப் பட்டுள்ளன.

இந்நூலைப் பாடிய இடைக்காட்டு நல்லூர் நத்தத்தனர் என்பவர்; நாடு இடைக்கழி நாடு. இவர் ஊர் நல்லூர். இவரது இயற்பெயர் தத்தனர் என்பது. ந என்னும் சிறப்புப் பொருள் தரும் எழுத்துச் சேர்த்து நத்தத்தனர் எனப்பட்டார்.

“செய்ந்நன்றி அறிதலும் சிற்றினம் இன்மையும்
இன்முகம் உடைமையும் இனியன் ஆதலும்
செறிந்துவிளங்கு சிறப்பின் அறிந்தோர் ஏத்த
அஞ்சினர்க் களித்தலும் வெஞ்சினம் இன்மையும்
மாணணி புகுதலும் அழிபடை தாங்கலும்
வாள்மீக் கூற்றத்து வயவர் ஏத்தக்
கருதியது முடித்தலும் காமுறப் படுதலும்
ஒருவழிப் படாமையும் ஓடியது உணர்தலும்
அரிஏர் உண்கண் அரிவையர் ஏத்த
அறிவுமடம் படுதலும் வரையாது கொடுத்தலும்
பரிசில் வாழ்க்கைப் பரிசிலர் ஏத்தப்
பன்மீன் நடுவண் பால்மதி போல
இன்னகை ஆயமொடு இருந்தவன்”

என ஓய்மா நாட்டு நல்லியக் கோடன் இயல்புகளை எடுத்து இயம்பி இருத்தல் காண்க.

பெரும்பாணாற்றுப் படை: இது 500 அடிகளைக் கொண்ட ஆசிரியப் பாவால் ஆயது. பெரும்பாணர் ஆவார், பாணர் வகுப்பினருள் ஒரு பிரிவினர். இவர்கள் தம் கையில் பேரியாழினைக் கொண்டு விளங்குபவர் ஆதலின், இப்பெயர் பெற்றனர். இவர்கள் பெரிதும் மதுரையிலும், காவிரிப்பூம்பட்டினத்திலும் வாழ்ந்தவர்கள். இவர்கள் பெரிய குழலையும் கொண்டிருந்தனர். காஞ்சியில் வாழ்ந்த இளந்திரையன் என்னும் மன்னன்பால் பரிசு பெற்ற ஒரு பாணன் பரிசில் பெறாத ஒரு பாணனை ஆற்றுப்படுத்தியதாகப் பாடப்பட்டதாகும். இதனைப் பாணாறு என்றும் கூறுவர்.

இதன்கண் இளந்திரையனது ஆட்சியின் சிறப்பால், விலங்குகள் வழிப்போவாரை ஒன்றும் செய்யாது என்றல், நாலாபக்கமும் பிரிந்து செல்லும் வழிகளில் காவல் புரிபவர் அரச ஆணைக்கு ஏற்பப் பணிபுரிதல், அந்தணர், உழவர், வீரக் குடிமக்கள் இயல்பு, ஆயர் பண்பு, மருதநில நிகழ்ச்சிகள், ஊறுகாய் அமைக்கும் முறை, கலங்கரை விளக்க உண்மை, திருமாலின் திருப்பதிகளுள் ஒன்றான திருவெஃகாவின் சிறப்பு, காஞ்சியின் மாண்பு, இளந்திரையன் பாணர்கட்குப் பொற்றாமரை ஈதல், விறலியர்க்கு

அவன் பொன்மாலை தருதல், காஞ்சியினைச் சார்ந்த மலைவாழ் குரங்குகள் முனிவர்கட்குப் பணிவிடை புரிதல் போன்ற விளக்கங்களைக் காணலாம்.

இத்தகைய நூலையாத்த புலவர் உருத்திரங் கண்ணனார் என்பவர். இவர் பிறந்த ஊர் கடியலூர் என்பது. இவர் தந்தையார் உருத்திரன் என்ற பெயர் உடையவராய் இருத்தல் வேண்டும். இவர் அந்தணர். இவர் திருமாலிடத்தில் அன்புடைமையினை, இவர் திருமாலை இந்நூலில் சிறப்பித்திருப்பதினின்று தெரிய வருகிறது. இவர் ஒவ்வொரு வகுப்பார் செயல்களைக் கூர்ந்து கவனித்துக் கூறும் இயல்பினர்.

> *" அல்லது கடிந்த அறம்புரி செங்கோல்*
> *பல்வேல் திரையன் படர்குவிர் ஆயின்*
> *கேள்அவன் நிலையே கெடுகநின் அவலம்*
> *அத்தம் செல்வோர் அலறித் தாக்கிக்*
> *கைப்பொருள் வௌவும் களவேர் வாழ்க்கை*
> *கொடியோர் இன்றவன் கடியுடை வியன்புலம்*
> *உருமும் உரறாது அரவும் தப்பா*
> *காட்டு மாவும் உறுகண் செய்யா "*

என்று இளந்திரையன் செங்கோன்மைச் சிறப்புக் கூறப்பட்டதைக் காண்க.

முல்லைப் பாட்டு: இந்நூல் முல்லை எனவும் பெயர் பெறும். இத்தொடர்க்குப் பொருள் கூற வந்த நச்சினார்க்கினியர் 'இல்லறம் நிகழ்த்துதற்குப் பிரிந்து வரும் துணையும் ஆற்றி இரு என்று கணவன் கூறிய சொல்லைப் பிழையாமல் ஆற்றி இருந்து, இல்லறம் நிகழ்த்திய இயற்கை முல்லையாம்' என்பர். இது 103 அடிகளைக் கொண்ட ஆசிரியப் பாவால் அமைந்தது. இந்நூலால், அக்காலத்தில் சகுனம் பார்த்தலும், போர்க்களத்தில் பாசறையின் அமைப்பும், பாகர் யானைகளை அவை உணரும் வகையில் பேசி, அவற்றிற்கு உணவருந்தும் செயலும், வீர மங்கையர் அரசனைக் காத்து நிற்றலும், நாழிகையினை அறிந்து அளந்து கூறுதலும், கார்காலத்தே காடுதரும் காட்சிகளும் செவ்வனே அறியப்படுகின்றன.

இந்நூலை இயற்றிய புலவர் காவிரிப்பூம் பட்டினத்துப் பொன் வணிகனார் மகனார் நப்பூதனார் ஆவார். இவ்வாறு இவர் கூறுப்படுதலால் இவர் தந்தையார் பொன் வணிகனார் என்பதும், இவர் ஊர் காவிரிப்பூம்பட்டினம் என்பதும் தெரிய வருகின்றன. வணிகர் மரபினர் என்பதும் அறிய வருகின்றது.

விரிச்சி கேட்டலை மலரும் நெல்லும் தூவிக் கேட்பர் என்பதை, "நெல்லொடு, நாழி கொண்ட நறுவீ முல்லை அரும்பு அவிழ் அலரி தூய்க் கைதொழுது, பெருமுது பெண்டிர் விரிச்சி நிற்க" என்ற அடிகள் அறிவிக்கின்றன. வீரமாதர் வாள் ஏந்தி நின்ற நிலையினை,

"குறுந்தொடி முன்கைக் கூந்தல் அம்சிறுபுறத்து
இரவுபகல் செய்யும் திண்பிடி ஒள்வாள்
விரவுவிரிக் கச்சில் பூண்ட மங்கையர்."

என்ற அடிகள் காட்டுகின்றன. மலர்கள் மலர்ந்த காட்சிகளை,

"செறியிலைக் காயா அஞ்சனம் மலர
முறிஇணர்க் கொன்றை நன்பொன் காலக்
கோடல் குவிமுகை அங்கை அவிழத்
தோடார் தோன்றி குருதி பூப்ப"

என்னும் அடிகள் இயம்புவதை உணரலாம்.

மதுரைக் காஞ்சி: இது 782 அடிகளால் வஞ்சிப் பாவால் பாடப்பட்ட நூல். இடையிடையே வஞ்சி அடிகளும் இருத்தலை இதில் காணலாம். "மதுரை இடத்து அரசற்குக் கூறிய காஞ்சி" என்பது மதுரைக் காஞ்சியாம். காஞ்சி என்பது நிலையாமை என்னும் பொருளைத் தருவது. ஆகவே, தலையாலங் கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு வீடு பேறுநிமித்தம் பலவகை நிலையாமையை அவனது செவியில் அறிவுறுத்தும் நிலையில் இது பாடப்பட்டது. இதனை இந்நூலில் வரும் "திரை இடுமணலினும் உரைசெல மலர்தலை உலகம் மாண்டு கழிந்தனரே" என்ற அடியால் நன்கு உணரலாம். இந்நூலின் சிறப்பை, "பெருகுவள மதுரைக் காஞ்சி" என்று சிறப்பித்துக் கூறுமாற்றால் உணரலாம்.

இந்நூலால் செங்கோல் புரியும் நாட்டில் கோள்கள் பிறழா என்பதும், நெடுஞ்செழியன் தலையாலங்கானத்தில் சேர சோழர்களையும், ஐந்து குறுநில மன்னர்களையும் வென்ற செய்தியும், அரசன் பகைவர்களை வென்று கொணர்ந்த பொருள்களை நண்பர்கட்கும் புலவர்கட்கும் வழங்குதலும், முன்னோர் அடி ஒற்றி நடக்கும் அறிவுடைமையும், வாய்மையின் பொற்பும், கொடுத்துப் புகழ் கொள்ளும் உவகையும் முதலானவற்றை அறிந்து கொள்ளலாம்.

பாண்டிய நாட்டின் ஐந்திணை வளனும் அங்குள்ள நாள் அங்காடி, அல் அங்காடியின் வர்ணனையும், மதுரையில் இருப்போர் பொழுது போக்கும் முறையும், இரவில் கள்வர் களவாடும் முயற்சியும், அதனைக் காவலாளர் காக்கும் திறனும், திருப்பரங்குன்ற விழா, திருவோணநாள் விழாக் குறிப்புக்களும், வீரர்களது வீரச் செயல்களும், அவ்வீரர்கட்கு அரசன் யானைகளை வழங்கும் சிறப்பும் கூறப்பட்டுள்ளன.

இத்தகைய நூலைப் பாடியவர் மாங்குடி மருதனார் என்பவர். இவர் மாங்குடி கிழார் என்று கூறப்பட்டவராகவும் தெரியவருகிறார். கிழார் என்பதால் இவர் வேளாளர் என்பது உணர வேண்டியுளது. இவர் இந்நூல் பாட்டுடைத்தலைவன் அவைப் புலவர். இவர் நிலையாண்மையினை அரசனுக்கு அறிவுறுத்தி நல்வழிப்படுத்தியதனால் இவரைக் காஞ்சிப் புலவன், மதுரைக் காஞ்சிப் புலவன் என்றும் கூறுவர். இவரை "ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி, மாங்குடி மருதன் தலைவனாக" என்று பாண்டியனே புகழ்வதனால் இவர்பால் அவனுக்கிருந்த பெருமதிப்புப் புலனாகிறது. புலவர் சைவ மரபினர் என்பது "மழுவாள் நெடியோன் தலைவனாக" என்று கூறுதலால் தெரிகிறது. இவரது ஏனைய பாடல்கள் நற்றிணை, குறுந்தொகை, அகம், புறம், திருவள்ளுவ மாலை ஆகியவற்றில் உள்ளன.

"அரசியல் பிழையா தறநெறி காட்டிப்
பெரியோர் சென்ற வடிவழிப் பிழையாது
குடமுதல் தோன்றிய தொன்றுதொழு பிறையின்
வழிவழிச் சிறக்க நின்வலம்படு கொற்றம்

குணம்முதல் தோன்றிய வார்இருள் மதியின்
தேய்வன கெடுகநின் தெவ்வர் ஆக்கம்
உயர்நிலை உலகம் அமிழ்தொடு பெறினும்
பொய்சேண் நீங்கிய வாய்நட் பினையே.''

என்பன மதுரைக்காஞ்சியில் சில அடிகள்:

நெடுநெல் வாடை: இது 188 அடிகளால் ஆசிரியப் பாவால் இயன்ற நூல். இது நெடிதாகிய நல்லவாடை எனப் பொருள்படும். பிரிந்த காதலர்க்கு வாடை நீண்டு தோன்றுதலானும், குளிரையும் மழையையும் பொருள் படுத்தாத குடியர்கட்கு நல்லதாக இருத்தலானும், இது நெடுநெல் வாடை ஆயிற்று. வாடை, வடக்கு இருந்து வரும் குளிர் காற்று. அரசன் வேற்று நாட்டில் இருந்தான். ஆதலின், அவனுக்கு நல்லதாக இருந்ததால் நல்வாடை ஆயிற்று எனினும் ஆம்.

பாண்டியன் நெடுஞ்செழியன் பகை மேற்சென்றனன். சென்றவன் வெற்றியுடன் திரும்பும்படி வெற்றிக்குத் தேவதையான கொற்றவையைப் பரவுவாள் கூறியதாக இந்நூல் பாடப்பட்டது.

இந்நூலில் கூதிர்க் காலத்தில் மக்கள் மா, புள் முதலானவை குளிரால் வருந்துதலையும், அரசிவாழ் அரண்மனைச் சிறப்பும், அரசியின் கட்டில் மாண்பும், அதில் அமைந்த கைத் தொழில் மேம்பாடும், அரசன் போரில் புண்பட்ட வீரர்களை நள் இரவில் மழையில் குளிரில் சென்று கண்டு ஆறுதல் மொழி கூறுதலும், பூ மலர்தலால் பொழுது அறியும் மரபும், மகளிர் மாலைக் காலத்தைக் கொண்டாடும் முறையும் போன்ற செய்திகளை அறிந்து கொள்ளலாம். இந்நூலாசிரியரைப் பற்றிய வரலாற்றுக் குறிப்பினைத் திருமுருகாற்றுப் படையில் காண்க.

'' மாடம் ஓங்கிய மல்லல் மூதூர்
ஆறு கிடந்தன்ன அகல்நெடும் தெருவில்
படலைக் கண்ணிப் பரேர்எறுழ்த் திணிதோள்
முடலை யாக்கை முழுவலி மாக்கள்
வண்டுமூசு தேறல் மாந்தி மகிழ்சிறந்து
துவலைத் தண்துளி பேணார்.''

என்று குடியர் நிலையினைக் குறிப்பிடுதல் காண்க.

குறிஞ்சிப் பாட்டு: இது 261 அடிகளைக் கொண்டு ஆசிரியப் பாவால் அமைந்த நூல். இது பிரகத்தன் என்னும் மன்னனுக்குத் தமிழ்ச் சுவையை ஊட்டப் பாடப்பட்டதாகும். தலைவி வெளிவர இயலாமல் தாயரால் இல்லத்தில் அடைக்கப்படும் நிலையில் தலைவி, "எப்படியும் தலைவன் தன்னை நாடி வருவானே! அவன் வரும் வழியில் அவனுக்குத் தீங்கு இழைக்கத் தக்க சில நிகழ்ச்சிகள் ஏற்படுமே" என்று கவன்று பாங்கிக்குக் கூறப் பாங்கிச் செவிலித் தாய்க்குத் தலைமகளது பருவநிலையினையும், தலைவன்பால் களிறு தரு புணர்ச்சி, புனல் தரு புணர்ச்சி முதலான புணர்ச்சிகளைக் கூறி அறத்தொடு நிற்றலைக் கூறும் முறையில் பாடப்பட்டதாகும்.

இதில் தலைவன் தலைவியது இயற்கைப் புணர்ச்சியும், பின்னர் நிகழும் புணர்ச்சிகளும் (கூட்டம்) இவற்றின் காரணங்களும் கூறப்பட்டுள்ளன. இது பெருங்குறிஞ்சி எனவும் கூறப்படும்.

தலைவிக்குக் காமத்தால் உண்டான வேறுபாடுகள், தலைவியின் மேல் சென்று, பயப்படுத்திய நாயைத் தலைவன் காத்தல், மாலைக் காலத்தில் மக்கள், பறவைகள், விலங்குகள் செய்யும் செயல்கள், தலைவி நீராடி 99 மலர்களைச் சேர்த்துக் குவித்தாள் என்பது, திருமணம் புரிந்து இல்லறம் நடத்தும் இயல்பு, வஞ்சினம் கூறும் முறை ஆகியவைகள் இந்நூலால் அறியும் செய்திகளாம்.

இத்தகைய நூலைப் பாடிய பெரியார் கபிலர் ஆவார். இவர் பிறந்த ஊர் திருவாதவூர். இவர் பிராம்மண குலத்தவர். இவர் வேள்பாரியின் நண்பர். மலையமான் திருமுடிக்காரியிடத்தும் அன்புடையவர். இவர் பேகனையும் பாடியவர். பேகன் தன் மனையாளைத் தணந்து இருந்தபோது அவனை அவளிடம் சேர்க்கப் பெரிதும் முயன்ற இவரது நண்பர்களுள் பரணரும் ஒருவர். கபிலபாணர் என்ற தொடர் இதற்குச் சான்று. இடைக் காடருக்கும் இவர் நண்பராய் இருந்தவர். இதனைப் "பின்னம்இல் கபிலன் தோழன் பெயர் இடைக்காடன் என்போன்" என்றுவரும் பழைய திருவிளையாடற் புராணத்தால் தெரிகிறது. இவர் பாடிய பாடல்களாக 279 செய்யுட்கள் கணக்கிடப்படுகின்றன. பத்துப்பாட்டு,

எட்டுத் தொகை, பதினெண் கீழ்க்கணக்கு என்னும் நூல்களில் எல்லாம் இவரது பாடல்கள் உண்டு. சைவத் திருமுறையில் உள்ள மூன்று நூல்களும் இவர் பாடியன என்று கூறுவர். இரண்டு நூல்கள் பாடியனவாக இருப்பினும், மூத்த நாயனார் இரட்டை மணிமாலை இவர் பாடினதாக இருக்குமோ என்ற ஐயம் எழுகிறது. காரணம் சங்க காலத்தில் மூத்த நாயனார் (விநாயகர்) பற்றிய குறிப்பு இன்மையே ஆகும். மேலும், இவர் பாடிய ஏனைய பாடல்களில் சிவபெருமான், திருமால், திருமுருகன், பலதேவன், பிரமன் ஆகிய குறிப்புக்களே உள. இவரது புலமை நயங்களை இவரது ஏனைய பாடல்களின் வழி சுவைக்கவும். இந்நூலில் வரும் மலர்களில் சில,

"ஒண்செங் காந்தள், ஆம்பல், அனிச்சம்,
தண்கயக் குவளை, குறிஞ்சி, வெட்சி,
செங்கொடு வேரி, தேமா, மணிச்சிகை
உரிதுநா றவிழ்தொத்து, உந்தூழ், கூவிளம்
எரிபுரி எறுழம், சுள்ளி, கூவிளம்
வடவனம், வாகை, வான்பூங் குடசம்
எருவை, செருவிளை மணிப்பூங் கருவிளை
பயினி, வானி, பல்லிணர்க் குரவம்."

என எடுத்துக் கூறப்பட்டுள்ளன.

பட்டினப்பாலை: இது 301 அடிகளைக் கொண்ட நூல். இதில் வஞ்சி அடிகளும், ஆசிரிய அடிகளும் கலந்துள்ளன. இதன் இறுதி, ஆசிரியப்பாவின் இலக்கணம் படி முடிந்துள்ளது. இது வஞ்சி நெடும்பாட்டு எனவும் கூறப்படும். இந்நூலைக் கரிகாற் பெருவளத்தான் மீதுபாடிப் புலவர் ஆறுயிரம் பொன் பரிசு பெற்றனர். சில குறிப்பால் பெற்ற பரிசில் ஆறுகோடி என்றும் அறிய வருகிறது. பட்டினத்தை (காவிரிப்பூம்பட்டினத்தை) சிறப்பித்துக் கூறிய பாலைத் திணையாதலின், இப்பெயர் இந்நூலுக்குத் தரப்பட்டது. பாலை என்பது பிரிவு என்னும் உரிப்பொருளை உணர்த்துவது. இதில் வேற்று நாட்டிற்குத் தலைவன் பிரியும் காலத்து, அவன் செல்லுதலைத் தவிர்ந்து தன்னெஞ்சொடு கூறுதலைக் காணலாம். "முட்டாச் சிறப்பின் பட்டினம் பெறினும், வாரிருங் கூந்தல் வயங்கிழை ஒழிய, வாரேன் வாழிய

நெஞ்சே" என்று இந்நூலில் வரும் அடிகளே பட்டினப் பாலை என்னும் இந்நூற் பெயர்ப் பொருளை நன்கு விளக்கி நிற்கின்றன.

இந்நூலில் சோழநாட்டின் பெருமை, காவிரிப்பூம்பட்டி-னத்தின் சிறப்பு, கரிகாலனது வீரம் முதலான குறிப்புக்கள் காணப்படுகின்றன. இவைகளே அன்றிப் பஞ்சம் உண்டா-தற்குரிய காரணங்களும், காவிரி ஆற்றின் சிறப்பும், கடற்-கரைவாசிகள் இராக் காலத்தும் பகற்போதும் பொழுது போக்கும் விதங்களும், கடல் வாணிபம் நிகழ்ந்த முறையும், ஏற்றுமதி, இறக்குமதிகளின்போது சோழன் புலிப்பொறி இட்டுப் பொருள்களை வெளியேற்றியதும், இவற்றிற்கு வாங்கும் குறிப்பும், காவலர்கள் பொருள்களைக் காக்கும் முறையும், பலவகைக் கொடிகள் பல இடங்களில் கட்டப் பட்ட குறிப்பும், வணிகர் இயல்பும், கரிகாலனது இளமை வரலாறும் கூறப்பட்டுள்ளன.

இத்தகைய நூலையாத்த புலவர் கடியலூர் உருத்திரங்-கண்ணனர் ஆவார். இவரது வரலாற்றைப் பெரும்பாணாற்-றுப்படை நூல் குறிப்பில் காண்க.

ஏற்றுமதி இறக்குமதி நிலையினை,

"*நீரின்றுநிலத்து ஏற்றவும்*
நிலத்தினின்று நீர்ப்பரப்பவும்
அளந்தறியாப் பலபண்டம்
வரம்பறியாமை வந்தீண்டி
அருங்கடிப் பெருங்காப்பின்
வலியுடைவல் அணங்கினோன்
புலிபொறித்துப் புறம்போக்கி
மதிநிறைந்த பலபண்டம்."

என்று இப்பாட்டு குறிப்பிடுகிறது.

மலைபடுகடாம்: இந்நூலில் "மலைபடுகடாம் மாதிரத்து இயம்ப" என்ற தொடர் காணப்படுகிறது. இதன் பொருள் மலைகளாகிய யானைக்கு உண்டாகின்ற ஒலி திசைகள் எல்லாம் ஒலிப்ப என்பது. இந்தப் பொருட் தொடர் இதில் இருத்தலின், இதற்கு இப்பெயரே சூட்டி வழங்கினர். இது கூத்தர் ஆற்றுப்படை என்றும் கூறப்பெறும்.

அதாவது பரிசில் பெற வரும் கூத்தன் ஒருவனைப் பரிசில் பெற்றான் ஒருவன் ஆற்றுப் படுத்தியதாக இதில் கூறப்பட்டிருத்தலின், இப்பெயர் பெற்றது. இதனைப் பாடியவர் இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார் என்பவர். இப்புலவர் இப்பாடல்வழிக் கூத்தரைச் செங்கண் மாத்துவேள் நன்னன் சேய்நன்னனிடத்தே ஆற்றுப்படுத்தியுள்ளனர். இதில் ஐந்நூற்று எண்பத்துமூன்று அடிகள் உள்ளன.

இந்நூலால் பலவகை இசைக் கருவிகள் யாழ்வர்ணனை, மலைச்சாரல் வளம், வேடர் குறவர் வாழ்க்கை, இவர்கள் வருவிருந்தினருக்கு உணவளித்து விடுக்கும் முறை, இவ்வாறே உழவர், இடையர் ஆகியோர் வந்த விருந்தினரைப் பேணிய முறை, நன்னன் ஊரின் மாண்பு, இம்மன்னனைக் காண வந்தார் கொண்டு வந்த காணிக்கைகள், நன்னன் தன்பால் வந்த கூத்தர் விறலியர் ஆயினார்க்குப் பரிசில் அளித்து அனுப்பும் செயல்கள், மன்னனைக் காண வழி நடைக்கையில் ஏற்படும் இடையூறுகள், இடைவழியே கிடைக்கக்கூடிய உணவு வகைகள், சேயாற்றின் பெருமை, நீலகண்டப் பெருமான் கோவில் முதலானவற்றை அறியலாம்.

புண்ணால் வருந்தும் வருத்தத்தை மாதர்கள் பாட்டுப்பாடித் தணித்தலையும், கவர்ந்த வழிகள் தொடங்கின், தொடக்கத்தில் புல்லை முடிந்து வைத்தலும் போன்ற குறிப்புக்களும் காணப்படுகின்றன.

"புலவோர்க்குச் சுரக்கும்அவன் ஈகை மாரியும்
இகழுநர்ப் பிணிக்கும் ஆற்றலும் புகழுநர்க்கு
அரசுமுழுதும் கொடுப்பினும் அமரா நோக்கமொடு
தூத்துளி பொழிந்த பொய்யா வானின்
வீயாது சுரக்கும் அவன்நாள்மகிழ் இருக்கையும்
நல்லோர் குழீஇய நாநவில் அவயத்து
வல்லார் ஆயினும் புறம்மறைத்துச் சென்றோரைச்
சொல்லிக் காட்டிச் சோர்வின்றி விளக்கி
நல்லிதின் இயக்கும் அவன் சுற்றத் தொழுக்கமும்
ஞாயிறு அன்னஅவன் வசையில் சிறப்பும்"

எனவரும் இவ்வரிகளில் நன்னனது ஈரம். வீரம், சுற்றத்தின் பண்பு இவற்றைக் காணலாம்.

அகமும் புறமும்
(Agham and Puram)

தமிழர்கள் வாழ்க்கை முறை தலைசிறந்த முறையாகும். அவர்கள் தங்கள் வாழ்க்கையினை இரு கூறுபடுத்தி வாழ்ந்தனர். ஒன்று அகவாழ்வு, மற்றொன்று புறவாழ்வு. அகம் இன்பத்தையும், புறம் போர் முதலானவற்றையும் குறிக்கும். அகத்தைப்பற்றி விளக்கவந்த உச்சிமேற் புலவர் கொள் நச்சினார்க்கினியர் "ஒத்த அன்பால் ஒருவனும் ஒருத்தியும் கூடுகின்ற காலத்துப் பிறந்த பேரின்பம். அக்கூட்டத்தின் பின்னர் அவ்விருவரும் ஒருவர்க்கொருவர் தத்தமக்கும் புலனாக இவ்வாறு இருந்ததெனக் கூறப்படாததாய், யாண்டும் உள்ளத்துணர்வே நுகர்ந்து இன்பம் உறுவதோர் பொருள். ஆதலின், அதனை அகம் என்றார். எனவே அகத்தே நிகழ்கின்ற இன்பத்திற்கு அகம் என்றது ஓர் ஆகு-பெயராம்" என்று விளக்கியுள்ளனர்.

புறமாவது அறனும் பொருளும் என்னும் இயல்பினை உடையதாய்ப் புறத்தே நிகழும் ஒழுக்கம். அறனும் பொளும் பற்றிப் புறத்தே நிகழும் ஒழுக்கத்தைப் புறம் என்றது ஆகு-பெயர். இதனால் வாழ்வு இரண்டே என்பது பெற்றாம். இக்-கருத்தே கிரேக்க நாட்டவர்கட்கும் என்பது,

"Two things greater than all things are;
One is Love and the other is War."

என்று ஹோமர் கூறுவதினின்றும் தெளியலாம். புறத்தில் போரும் அடங்கும் என்க.

அகவாழ்வின் ஆரம்பத்தைப்பற்றியும் இறுதியில் அஃது எவ்வாறு அமைந்து விளங்குகிறது என்பதையும் சுருக்கமாக ஈண்டுக் காண்போமாக.

அகம்

பொரு இறந்த தலைமகனும் தலைமகளும் தமியராய் ஒரு பொழிலகத்து எதிர்ப்படுவர். எங்ஙனம் எதிர்ப்படுவர் எனில் கூறுதும்: தலைவன் கற்கந்தும் (கல்தூண்), எய்ப்-போத்தும் (ஆண் முள்ளம்பன்றியும்), கடுங்கண் யானையும்,

தறுகண் பன்றியும், கருவரையும், இருநிலனும், பெரு விசும்பும் அனையார். ஆளி மொய்ம்பினர், அரிமான் துப்பினர், பல்பன்னூருயிரவர் கூர்வேல் இளைஞர், தற்சூழச் செல்வன்.

தலைவியும் உடன்பிறந்து உடன் வளர்ந்து, நீர்உடன் ஆடி, சீர்உடன் பெருகி, ஓல் (தாலாட்டு) உடன் ஆட்ட, பால் உடன் உண்டு, பல் உடன் எழுந்து, சொல் உடன் கற்று, பழமையும், பயிற்றியும், பண்பும், நண்பும், விழுப்பமும், ஒழுக்கமும், மாட்சியும் உடையார் பற்பன்னூருயிரவர், கண்ணும் மனமும் கவரும் ஒண்ணுதல் மகளிர் தற்சூழத் தாரகை நடுவண் தண்மதி போலச் செல்வள். இங்ஙனம் சென்ற தலைவியும் உடன் வந்தாரும் தழைவிழை தக்கன தொடுத்தும் என்றும், கண்ணி தண்ணுறு நாற்றத்தன செய்தும் என்றும், போது மேதக்கன கொய்தும் என்றும், மயிலொடு மாறுடுதும், குயிலோடுமாறு கூவுதும் என்றும், அருவியாடி அருஞ்சுனை குடைதும் என்றும், வாசமலர்க் கொடியின் ஊசலாடுதும் என்றும், பரந்து அப்பால் உள்ளார் இப்பால் உள்ளார் கொல்லோ என்றும், இப்பால் உள்ளார் அப்பால் உள்ளார் கொல்லோ என்றும், இவ்வகை நினைத்துப்பிரிய, இங்ஙனம் பிரிந்த தலைவி "சந்தனமும் சண்பகமும், தேமாவும் தீம்பலவும், ஆசினியும், அசோகமும் கோங்கும், வேங்கையும், குரவமும் விரிந்து, நாகமும், திலகமும், நறவும், நந்தியும், மாதவியும், மல்லிகையும், மௌவலொடு மணம் கமழ்ந்து, பாதிரியும் பாவை ஞாழலும் பைங்கொன்றையொடு பிணி அவிழ்ந்து, பொரிப்புன்கும், புன்னாகமும் முருக்கொடு முகை சிறந்து, வண்டறைந்து தேனார்ந்து வரிக்குயில்கள் இசைபாட, தண் தென்றல் இடைவிராய்த்த தனியவரை முனிவு செய்யும். பொழிலது நடுவண் ஒரு மாணிக்கச் செய்குன்றின்மேல் விசும்பு துடைத்துப் பசும்பொன் பூத்து வண்டு துவைப்பத் தண்தேன் துளிப்பதோர் வெறியுறு நறுமலர் வேங்கைகாண்பள். கண்டு பெரியதோர் காதல் களிகூர்ந்து, தன்செம்மலர்ச் சீறடிமேல் சிலம்பு கிடந்து சிலம்புடைப்ப, அம்மலர் அணிக் கொம்பர் நடை கற்பதென நடந்து சென்று, நறைவிரி வேங்கை நாள்மலர் கொய்வாள். கொய்த இடத்து மரகதமணி விளிம்படுத்த மாணிக்கச்சுனை மருங்கினதோர் மாதவி வல்லி மண்டபத்துப் போது வேய்ந்த பூநாறு கொழுநிழற்-

கீழ்க் கடிக் குருக்கத்தி கொடிப்பிடித்துத் தகடு படு பசும்பொன் சிகரங்களின் முகடு தொடுத்து ஞான்று வந்து இழிதரும் அருவி பொன் கொழித்து மணி வரன்றி மாணிக்கத் தொடு, வயிரம் உந்தி அணிகிளர் அருவி ஆடகப் பாறைமேல் அதிர்குரல் முரசின் விண்ணிரட்ட, வண்டும் தேனும் யாழ் முரல, வரிக் குயிலும் கிளியும் பாடத் தண்தாது தவிசுபடப் போர்த்ததோர் பளிக்குப் பாறை மணித்தலத்து மிசை நீல ஆலவட்டம் விரித்தாற்போலத் தன் கோலக் கலாவம் கொளவிரித்து முளை ஞாயிற்று இளவெயில் எறிப்ப ஓர் இளமயில் ஆடுவது நோக்கி நிற்பள்.

இந்நிலையில் தலைமகனும் பற்பன்னூருயிரவர் கூர்வேல் இளைஞரொடு நளிர் மாமலைச் சாரல் வேட்டம் போய், விளையாடுவான், ஆண்டு எழுந்ததோர் கடுமானின் பின் ஓடிக் காவல் இளைஞரைக் கையகன்று, நெடுமான் தேரொடு பாகனை நிலவு மணல் கானியாற்று நிற்கப் பணித்து, தொடு கழல் அடி அதிரச் சுருள்இருங் குஞ்சி பொன் ஞாணில் பிணித்துக் கடிகமழ் நறுங்கண்ணி மேற்கொண்டு வண்டு மணம் அயர அஞ்சாந்தின் நறுநாற்றம் அகன் பொழிலிடைப் பரந்து நாற, அடுசிலையொடு கணை ஏந்தி வடிவு கொண்ட காமன் போலச் சென்று அவள் நின்ற இரும்பொழில் புகுவன். வட கடலில் இட்ட ஒரு நுகம் ஒரு துளை, தென் கடலில் இட்ட ஒரு கழி சென்று கோத்தாற் போலவும், வெங்கதிர்க் கனலியும் தண்கதிர் மதியமும் தங்கதி வழுவித் தலைப் பெய்தாற் போலவும் தலைப்பெய்து ஒருவரை ஒருவர் காண்பர்.

தலைவன் தலைவி குறிப்பறிந்து தலைவியைச் சேர்ந்து கூடிக்களித்துப் புணர்ந்து நீங்குவன். இங்ஙனம் பிறர் யாரும் அறியா நிலையில் பன்னாட்கள் நடக்கும். பிறகு தோழி அறிந்து இருவரையும் கூட்டிவருவள். தோழி தலைவனிடம் தலைவியை மணந்து கொள்ளுமாறு வற்புறுத்துவள். பின் தலைவன் தலைவியைப் பெற்றோர் அறியாவகை அழைத்துச் செல்வன். பின்னர்த் திருமணம் நடக்கும். இல்லறம் இனிது ஆற்றுவர். தலைவன் ஓதல், காவல், தூது, துணை, பொருள் காரணமாகப் பிரிவன். அது போது தலைவி, தோழியின் ஆறுதல் மொழிகளால் ஆற்றி இருப்பள். பரத்தமை காரணமாகவும் தலைவன் பிரிய நேரிடும். அதனால் ஊடலும் கூடலும் நிகழும்.

ஐந்திணை ஒழுக்கம்

அகப்பொருள் முறையில் தமிழர்கள் ஐந்திணை என்ற பகுப்பை அமைத்துக் கொண்டனர். திணை என்பது நிலத்தையும், ஒழுக்கத்தையும் உணர்த்தும். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற நிலப் பெயராலும், கூடல் இருத்தல், ஊடல், இரங்கல் பிரிதல் என்ற ஒழுக்க உரிப்பொருளாலும் கூறி வந்தனர். பாலை என்பது இக்காலத்தில் (Desert) என்ற பொருளில் அக்காலத்தில் இல்லை. குறிஞ்சியும் முல்லையும் மழைவளனின்றி வறண்ட நிலையில் உள்ள போது, அந்நிலங்கள் பாலை எனப்படும். "முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து நல்லியல்பு அழிந்து நடுங்குதுயர் உறுத்துப் பாலை என்பதோர் படிவம் கொள்ளும்" என்னும் சிலப்பதிகார அடிகளைக் காண்க.

குறிஞ்சி மலைநாடு, முல்லை காட்டு நாடு, மருதம் வயல் நாடு, நெய்தல் கடற்கரை நாடு. குறிஞ்சி நாட்டிற்குத் தலைவனாக உள்ளவன் பொருப்பன், வெற்பன், சிலம்பன் என்றும், தலைவி குறத்தி, கொடிச்சி என்றும், அங்கு வாழ் மக்கள் குறவர், கானவர், குறத்தியர் என்றும் கூறப்பட்டனர். இந்நாட்டைச் சார்ந்த பறவைகள் கிளி, மயில் என்பன. விலங்குகள் புலி, கரடி, யானை, சிங்கம். இந்நாட்டுச் சிற்றூர் சிறுகுடி எனப்படும். இவர்கட்கு நீர், மலை வீழ் அருவியும் சுனை நீரும் ஆகும். இந்நாட்டு மக்கள் அணியும் மலர்கள், வேங்கைப்பூ, குறிஞ்சிப்பூ, காந்தள் மலர்கள். இங்குள்ள மரங்கள், சந்தனம், தேக்கு, அகில், அசோகம், நாகம், மூங்கில். இங்குள்ள மக்கட்கு மலை நெல், மூங்கில் அரிசி, தினை அரிசி என்பன உணவுப் பொருள்கள். இங்குள்ளார்க்கு இசைக்குரிய கருவிகள் தொண்டகப் பறை, குறிஞ்சியாழ்; பண் குறிஞ்சிப்பண். இந்நாட்டு மக்கள் மருள் ஏறப்பெற்று ஆடுதலும், மலை நெல் விதைத்தலும், தினை வித்திக் காத்தலும், தேன் எடுத்தலும், கிழங்கு தோண்டி எடுத்தலும் தொழிலாகக் கொண்டவர்கள். அருவியாடியும், சுனை ஆடியும் இன்புற்றுப் பொழுது போக்குவர். இந்த நிலத்தெய்வம் முருகன்.

முல்லை நிலத் தலைவன் குறும் பொறை நாடன், தோன்றல் என்றும், தலைவி மனைவி, கிழத்தி என்றும், மக்கள்

இடையர், இடைச்சியர், ஆயர், ஆய்ச்சியர் என்றும் குறிப்பிடப்படுவர். இங்குக் காட்டுக் கோழி, மான், முயல் உயிர் இனப்பொருள்களாகும். இங்குள்ள இடம் சிற்றூர், பாடி எனப்படும். இவர்கட்கு நீரைத்தருவன குறுஞ்சுனையும், காட்டாறும் ஆகும். இங்குள்ள மலர்கள் குவளை, முல்லை, தோன்றி, பிடவம், கொன்றை, காயா, குருந்தம் என்பன. இவர்களது உணவுப் பொருள் வரகு, சாமை, முதிரை, அவரை, துவரை முதலியன. இவர்களது இசைக்கருவி ஏற்றுப்பறை, முல்லையாழ்; பண் சாதாரி. இங்குள்ளார் தொழில் சாமை, வரகு இவற்றை விதைத்தல், கட்டல், அரிதல், கடாவிடல், மூவினம் மேய்த்தல் ஆகும். பொழுது போக்கு, குழல் ஊதுதலும், ஏறு தழுவுதலும், குரவை ஆடுதலும் ஆம். காட்டாற்றில் குளித்து இன்புறுவர். இந்த நிலத்திற்குரிய தெய்வம் திருமால்.

மருத நிலத்தலைவன் ஊரன், மகிழ்நன் என்றும், தலைவி கிழத்தி, மனைவி என்றும் கூறப்படுவர்; மக்கள் உழவர் உழத்தியர், கடையர், கடைசியர் எனக் குறிக்கப் பெறுவர். இங்குள்ள பறவைகள் வண்டானம், மகன்றில், நாரை, அன்னம், போதா, கம்புள், குருகு, தாரா என்பன. விலங்குகளாக அமைந்தவை எருமை, நீர்நாய் ஆகும். இங்குள்ள ஊர்கள் பேரூர், மூதூர் என்று அழைக்கப்படும். இவர்கட்கு ஆறும், வீட்டுக்கிணறும், குளம் ஆகிய நீர்நிலைகள் நீரைத் தரும். தாமரை, கழுநீர், குவளை என்ற மலர்களை இங்குக் காணலாம். காஞ்சி, வஞ்சி, மருதம் ஆகிய மரங்கள் இங்கு உண்டு. செந்நெல்லும், வெண்ணெல்லும் இந்நாட்டவர்க்குரிய உணவுப் பொருள்கள். இந்நாட்டு மக்களின் இசைக்கருவிகள் கிணை, மணமுரசு, மருதயாழ் என்பன; பண் மருதப்பண். இந்நாட்டு மக்கள் விழாக்கள் நடத்தியும், களை கட்டியும், நெல்லரிந்தும், கடாவிட்டும், குளத்தில் குளித்தும், தொழில் புரிந்தும் பொழுது போக்குவர். இந்நிலத்துக்குரிய தெய்வம் இந்திரன்.

நெய்தற் நிலத்தலைவன் சேர்ப்பன், புலம்பன் என்றும், தலைவி நுளைச்சி, பரத்தி என்றும், மக்கள் நுளையர், நுளைச்சியர், பரதர், பரத்தியர், அளவர், அளத்தியர் என்றும் குறிக்கப்பட்டனர். நீர் காக்கை இங்குள்ள உயிர் இனம். இங்குள்ள இடங்கள் பாக்கம், பட்டினம் எனப்படும். நீர்நிலைகள் உப்புக் கிணறு, ஊற்று நீர். மலர்கள்

நெய்தல், கண்டகம், தாழை, முண்டகம், அடம்பு, கண்டல் முதலியன. மரம் புன்னையும், ஞாழலும் ஆகும். உப்பு விற்றல், மீன் விற்றல் காரணமாக வருவன, இவர்கட்க்கு வருவாய். இங்குள்ளார்க்குரிய பறை மீன்கோள்பறை, நாவாய், பம்பை என்பன. இசைக்கருவி விளரியாழ். பண் செவ்வழி. இவர்கள் மீன் பிடித்தலும், உப்புண்டாக்கலும், மீன் உணக்கலும், விற்றலும் தொழிலாக உடையவர்கள். கடலில் நீர் ஆடுவர். இவர்கட்குத் தெய்வம் வருணன்.

பாலைத்தலைவன் விடலை, காளை, மீளி எனப்படுவான். தலைவி எயிற்றி எனப்படுவாள். மக்கள் எயினர், எயிற்றியர் என்றும், மறவர் மறத்தியர் என்றும் வழங்கப் பெறுவர். இங்குள்ள பறவை புரு, பருந்து, எருவை, கழுகு என்பன. இங்கு வாழும் விலங்கு செந்நாய். இங்குள்ள ஊர் குறும்பு, நீர்நிலை வற்றிய கூவல், குழி. மலர்களாக இருப்பவை குரா, மரா. இங்குள்ள மரங்கள் உழிஞை, பாலை, ஓமை. இருப்பை என்பன. இங்குள்ளார் ஆறு அலைத்தும், ஊரில் புகுந்து களவாடியும் திரிவர். இவர்கள் உடுக்கை, பாலை, யாழ் இவற்றை இசைக்கருவிகளாக உடையவர்கள். இவர்கட்குப் பஞ்சுரம் பண். இவர் போர் புரிந்தும், பகற்-சூறை ஆடியும் காலம் கழிப்பர். இவர்கட்குச் சூரியன் தெய்வமாகும். காளியும் தெய்வம் ஆவாள்.

இங்கு எல்லா நிலங்கட்கும் தெய்வம் கூறிச் சிவபெரு-மானை ஒரு நிலத்திற்கும் உரியவனாகக் கூறாது விடுத்ததன் குறிக்கோள், அவன் முழுமுதற் பரம்பொருளாய் எல்லா நிலத்துக்கும் இறைவனாய் இருத்தலின் என்க.

"தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி"

என்று மணி மொழியார் கூறியதையும் 'அங்கங்கே சிவமாகி நின்றார் தாமே'' என்று அப்பர் கூறிய அநுபவ மொழிகளையும் ஈண்டு நினைவு படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

புறம்

போர்முறைகளை ஒழுங்குறப் பேசுவது புறமாகும். இவ்வொழுங்கு முறை தமிழர்களிடத்தில் கண்ட தனிச்

சிறப்பு என்று கூட இயம்பலாம். இதனைப் புறநானூற்றில் வரும்,

" ஆவும் ஆனியல் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்
தென்புலம் வாழ்நர்க் கருங்கடன் இறுக்கும்
பொன்போல் புதல்வர் பெறாதீரும்
அம்மம்பு கடிவிடுதும் நும்அரண் சேர்மின்."

என்னும் அடிகளால் இப்போர் முறையின் பண்பைக் காணலாம்.

போர் முறையில் தழிஞ்சி என்ற ஒரு துறை பேசப்படுகிறது. அதன் இலக்கணம்,

" அழிகுநர் புறக்கொடை அயில்வேல் ஓச்சாக்
கழிதறு கண்மை காதலித் துரைத்தன்று"

என்பது. அதாவது தோற்று வெருவி ஓடுவார் முதுகில் அம்பிட்டு அவர்களை அழிக்காமை என்பது. இத்தகைய முறையில் போரிட்ட தமிழர் தம் போர்முறைகளை எங்ஙனம் கைக் கொண்டனர் எனச் சிறிது காண்போம்.

தமிழர்தம் போர் தொடக்கம் மாடுபிடி சண்டையில் தொடங்கும். அது வெட்சித் திணை எனப்பட்டது. அது போது வெட்சிப் பூவைச்சூடிச் சென்று பகைவரது பசுக்களைப் பிடித்து வருவர். இதனைத் தொல்காப்பியம் " வேற்றுப் புலக்களவின் ஆதந்து " என்கிறது. மாடு பிடிக்கச் செல்லுதற்கு முன், நிமித்தம் கேட்டே செல்வர். சென்றவர் பசுக்களைப் பிடித்து வந்தாலும், அப்பசுக்களுக்கு யாதொரு தீங்கும் இன்றிக் கொணர்ந்து காப்பர். இதனை " ஆதந்து ஓம்பல் " என்றும், " நோய் இன்றி உய்த்தல் " என்றும் கூறி வந்தனர். " புல் மேய்ந்து அசைஇப் புணர்ந்து உடன் செல்க " என்று கூறி அவற்றை அழைத்து வருவர். இங்ஙனம் கொணர்ந்த பசுக்களைத் தம்மைச் சார்ந்தார்க்குப் பங்கிட்டுக் கொடுப்பர்.

வெட்சியார் பிடித்துச் சென்ற பசுக்களை மீட்டற்குப் புறப்படுபவர் முயலும் முயற்சி கரந்தை எனப்பட்டது. அது போது கரந்தை மலரைச் சூடிக்கொண்டு சென்று

மீட்டலை "ஆபெயர்த்துத் தருதல்" எனப்பட்டது. அது போது வெட்சியாரும் கரந்தையாரும் செய்யும் போர் கடுமை-யாக இருக்கும். புலிக்கணம், சீயமா, போர்க்களிறு போன்று பொருவார். இதனைச் "செருமலைந்தார் சீற்றம் சிறந்து" என்பர் ஐயனாரிதனார்.

இங்ஙனம் போர்புரிந்து இறந்தவர்கட்குச் செய்யவேண்-டிய சிறப்பினைத் தமிழர் பெரிதும் ஆற்றியுள்ளனர். அவர்-கட்குக் கல்நட்டுப் பூசித்து வந்தனர். கல்லை இமயம், பொதிகை மலைகளினின்று கொணர்வர். பின் அதனைக் கங்கை, காவிரி ஆறுகளில் குளிப்பாட்டுவர். அதன்பின் நடுவர். கோவில் கட்டுவர். படையல் இடுவர். அக்கல்லை வாழ்த்துவர். இறந்தவர் பொருட்டுக் கல்நட்டுக் கோவில் எடுத்தலை 'இல் கொண்டு புகுதல்' என்று வழங்கினர்.

பகைவரது நாட்டைக் கைக்கொள்ள விரும்பிய தமிழர், அச்செயலை வஞ்சி என்ற பெயரால் குறித்துள்ளனர். அது போது வஞ்சி மலரைச் சூடுவர். இதனை,

> *"எஞ்சா மண்நசை வேந்தனை வேந்தன்*
> *அஞ்சுதகத் தலைச்சென்று அடல்குறித் தன்றே"*

என்பர் தொல்காப்பியர்.

> *"வாடாவஞ்சி தலைமிலைந்து*
> *கூடார்மண்கொளக் குறித்தன்று."*

என்பர் ஐயனாரிதனார். வஞ்சியர் சென்று நாட்டைக் கொளுத்துவர். வெற்றி கண்டபின் வீரர்கட்குப் பெரு விருந்து நடத்துவர். அது பெருஞ்சோற்று நிலை எனப்பட்-டது. போருக்கு எழுமுன் குடை, வாள் இவற்றை நல்ல நாளில் வெளியில் உலாவிடுவர்.

வஞ்சியார் மண் கொளவந்தபோது அவர்களொடு எதிர்க்கும் வீரர்களின் வீரத்தைக் காஞ்சி என்றனர். அது போது காஞ்சி மலரைச் சூடுவர். இதனைக் 'காஞ்சி சூடிக் கருதின்று' என்னும் புறப்பொருள் வெண்பாமாலை. இந்தப் போரில் அரசன் தன்னை ஒத்த வீரர்க்குப் படை வழங்கு-வான்.

அரசர் மதில் சூழ்ந்த அரண்களில் வாழ்வர். அந்நிலையில் பகைவர் அம்மதிலைக் கைப்பற்ற முனைவர். அம்முனைப்பு உழிஞை எனப்படும். அதுபோது உழிஞை மலரைச் சூடுவர். "முடிமிசை உழிஞை சூடி ஒன்னார், கொடிநுடங்கு ஆர்எயில் கொளக்கருதின்று" என்றது காண்க. மதிலைச் சுற்றி வளைத்தலைப் புறத்திறை என்றனர். "விறல் கொடி மதிலின் புறத்திறுத்தன்று" என்றதை நோக்குக. மதிலைச் சுற்றிக் காவல் காடு உண்டு. வீரர்கள் அதனையும் கடந்து செல்வர். அதன்பின், அகழியினை நெருங்குவர். மதில் உயரமாக இருக்கும் ஆதலின், அதில் ஏணி சாத்தி ஏறுவர். அன்றி உடும்பு உய்த்துப் பற்றியும் ஏறுவர். இங்ஙனம் எல்லாம் மதிலைக் கடந்து அரண் அகத்தோரை வெல்வர். உள்சென்று ஊரை அழித்துக் கழுதை ஏர்பூட்டி, வேல்கோலாகக் கொண்டு வரகும் கொள்ளும் விதைப்பர். இந்நிலையில் அரண் உள்ளார் திறை கொடுக்க, மீள்வர்.

உழிஞையார் மதிலை வளைத்தபோது அப்பகைவர் முற்றுகையினின்று மீள நொச்சிப் பூவைச்சூடி மதிலைக் காப்பர். அது நொச்சி எனப்பட்டது. இதனை "ஏப்புழைஞாயில் ஏந்துநிலை அரணம் காப்போர் சூடிய பூ" எனக் கூறப்பட்டது. பகைவர் முற்றுகை யிட்டபோது காவற்காடும் அகழியும் சிதையாவாறு போர்செய்து மதிலைக் காப்பர். மதில் மீதும் போர் நடக்கும். இஃது எயில் போர் எனப்பட்டது.

போரிட எதிர்த்து வந்தவரை எதிர்த்தல் தும்மை எனப்பட்டது. இதனைத் தொல்காப்பியர்,

"மைந்து பொருளாக வந்த வேந்தனைச்
சென்று தலைஅழிக்கும் சிறப்பிற் றென்ப."

என்பர். இப்போருக்குரிய அடையாளப் பூ தும்பை ஆகும். இதில் நால்வகைப் படைகளும் போர் செய்யும் ஆர்ப்பாட்டம் பெரிதாகும். ஆகவேதான் தானை மறம், குதிரை மறம், யானை மறம், தேர்மறம் என்று குறித்துள்ளனர். இருபெரு பகைவரும் எதிர்ந்து அழிவர். இதனை இருவர் தலைவர் தபுதி என்பர். படை இல்லாதபோது மல்போரும் புரிவர். படைகளைத் தாக்கிய மகிழ்வால் வேலைச்

சுழற்றி ஆடுவர். வீரர்களின் வேந்தன் வீர சுவர்க்கம் புகுந்தால், அதுபோது மறவீரன் தன்னையும் மாய்த்துக் கொள்வான். அது தன்னை வேட்டல் எனப்படும்.

> "வானம் இறைவன் படர்ந்தென வான்துடுப்பா
> மானமே நெய்யா மறம்விறகாத்—தேன்இமிரும்
> கள்அவிழ் கண்ணிக் கழல்வெய்யோன் வாள்அமர்
> ஒள்அழலுள் வேட்டான் உயிர்."

என்ற பாடலைக் காண்க.

தமிழர் போரில் வெற்றி கொண்டபோது, வெற்றிவிழா கொண்டாடுவர். அது வாகை எனப்படும். அது போது வாகைப் பூவைச் சூடிக்கொள்வர். களவேள்வி புரிவர். அதாவது வெட்டுண்ட தலைகளை அடுப்பாகவும், மண்டை ஓட்டைப் பானையாகவும், குருதியினை உலை நீராகவும், நிணம், கொழுப்பை உலை பெய்பொருளாகவும், காலைக் கட்டையாகவும், கையைத் துழாவும் கருவியாகவும் கொண்டு போர்க்களத்தில் செய்யப்படும் செயலாகும்; இப்படிச் செய்து பேய்கள் மகிழ உண்பிப்பதாகும். இதனை,

> "பிடித்தாடி அன்ன பிறழ்பல் பேய்ஆர
> கொடித்தானை மன்னன் கொடுத்தான்—முடித்தலைத்
> தோளாடு வீழ்ந்த தொடிகை துடுப்பாக
> மூளையம் சோற்றை முகந்து."

எனக் கூறப்படுதல் காண்க.

இதுவரை ஆண்மக்களது வீரமே பேசப்பட்டு வந்தது. இவ்வாறு ஆண்களது வீரம் பற்றிப் பேசப்படுவது இல்லாண் முல்லை ஆகும். பெண்களது வீரமும் புறத்தில் பேசப்படும். அது பலவாறுன துறைகளை யுடையது. ஒவ்வொன்றையும் பற்றி உணர்வோமாக. மூதின் முல்லை என்பது அவற்றுள் ஒன்று. இதனை விளக்கவந்த புறப்பொருள் வெண்பா மாலை

> "அடல்வேல் ஆடவர்க் கன்றியும் அவ்இல்
> மடவரல் மகளிர்க்கு மறம்மிகுத் தன்று."

என்று கூறுகின்றது. இம்மூதின் மடவாள் வீரத்தைக் கீழ் வரும் பாடலில் காண்க.

“வந்த படைநோனுள் வாயில் முலைபறித்து
வெந்திறல் எக்க மிறைகொளீஇ—முந்தை
முதல்வர்கல் தான்காட்டி மூதின் மடமகள்
புதல்வனைச் செல்கென்றாள் போர்க்கு.”

என்பது ஐயனாரிதனார் வாக்கு.

மூதானந்தம் என்பது ஒரு துறை. இதனைப் பார்க்கும் போது இன்பப் பொருள் தரும் தொடர் போலும் என எண்ணலாம். அற்றன்று; துன்பந்தரும் தொடரே இது. கணவன் போரில் இறக்க மனைவி இறத்தலை அறிவிப்பதே இது. “கயலேர் கண்ணி கணவனொடு முடிய” என்று கூறப்பட்டதைக் காண்க. இத்துடன் இன்றி “வேலோற்கும் வெள்வளையினாட்கும் உடனே உலந்தது உயிர்” என்றதையும் ஓர்க.

கணவன் போரில் விழுப்புண் பட்டுக் கிடக்கின்றான். அவனைத் தன் கண்களால் காண்கின்றாள் மனைவி. அந்நிலையில் அவள் கொண்ட மெய்ப்பாடு யாது? உவகைக் கண்ணீர் உகுத்ததே ஆகும். இதனை உவகைக் கலுழ்ச்சி என்றனர். இதனை விளக்கும் போது,

“வாள்வாய்த்த வடுவாழ்க்கைக்
கேள்கண்டு கலுழ்ந்து உவந்தன்று.”

என்கிறது புறப்பொருள் வெண்பாமாலை.

ஆஞ்சிக் காஞ்சி என்று ஒரு துறை காணப்படுகிறது. அதாவது கணவன் இறந்தபோது, தானும் எரியில் மூழ்கி உயிர் விடுதல். அல்லது கணவன் எந்த அம்பினால் இறந்தானோ, அவ் அம்பினையே கொண்டு குத்தி இறத்தல் ஆகும். இதனைத் தொல்காப்பியம், “நீத்த அங்கணவன் தீர்த்த வேலில் பேர்த்த மனைவி ஆஞ்சி” என்று கூறும். கணவன் இறக்க, மனைவி தன் முலையும், தலையும் இறந்த கணவன் உடல் மீது பொருந்தத் தழுவி, இறத்தலும் உண்டு. இதனை “முலையும் முகனும் சேர்த்திக் கொண்டோன் தலையொடு முடிந்த நிலை” எனத் தொல்காப்பியம் கூறுகிறது. தொல்காப்பியத்தில் இங்ஙனம் பல்லாற்றானும் தமிழ் நாட்டு மகளிரின் வீரம் சிறப்புடன் அறிவிக்கப்பட்டுள்ளன.

புறத்தில் போரும் வீரமும் பற்றிய செய்திகள் அறிவிக்கப்படுதலே அன்றி, அறமும் வீடும் பற்றிய செய்திகளையும் இதில்தான் அமைத்துக் காட்டி வாழ்ந்தனர் தமிழர்கள். பொருளைப் பெற்று அதனை அறத்து வழி செலவிட்டனர். இது குறித்தே செல்வத்துப் பயன் ஈதல் என்று கூறப்பட்டது. நடுவணது (பொருள்) எய்த இருதலையும் (அறம், இன்பம்) எய்தும் நம்பிக்கை யுடையராய் இருந்தனர் தமிழர்.

பலவகை நிலையாமையும் அறிவுரைகளும் புறத்தில் பேசப்பட்டுள்ளன. அவற்றை நன்கு ஓர்ந்து உலகில் வெறுப்புத் தோன்றி நிலையுடைய இறைவனிடத்தில் உளத்தினைச் செலுத்தி வீட்டின்பத்தையும் உணர்ந்தனர்.

இங்ஙனம் வாழ்ந்த வாழ்வே தமிழரது அகப்புற வாழ்வு என்க.

பதினெண் கீழ்க்கணக்கு

[(ii) Keelkkanakku—Eighteen Works: Ethical Works and other Literature Works: Thirukkural and Naladiar]

பத்துப்பாட்டு, எட்டுத் தொகை என்னும் தொகை நூற்களைப் போன்று விளங்குவது பதினெண் கீழ்க்கணக்கு என்பது. சங்கநூற்களாக இம் மூன்று தொகை நூற்களைச் சுட்டிக் காட்டுவர். ஆனால், ஆராய்ச்சி அறிவு படைத்தவர்கள், முதல் இரண்டு தொகை நூற்களை மட்டும் சங்க நூற்களாகக் கருதுவர். பதினெண் கீழ்க்கணக்கு நூற்களை அங்ஙனம் கூறுர். காரணம், இப்பதினெண் கீழ்க்கணக்கு நூற்களில் சிற்சில சங்க காலத்தன அல்ல. வச்சிரநந்தியால் நிறுவப்பட்ட நான்காம் சங்க காலத்து நூற்கள் என்பது ஆராய்ச்சியாளர் துணிபு. இத் தொகை நூற்களில் சில ஐந்தாம் நூற்றுண்டினை என்பர். இது நிற்க.

கணக்கு என்பது நூலைக் குறிக்கும் ஒரு சொல். இங்குப் பதினெட்டு நூல்களின் தொகுதியைச் சுட்டுதலின், இது பதினெண் கீழ்க்கணக்கு எனப்பட்டது. ஆனால், இடையே கீழ் என்னும் அடைமொழி நூலுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. ஈண்டுக் கீழ் என்பது தாழ்மை என்ற பொருளில்

குறிக்கப்பட்டதன்று. கீழ்க்கணக்கு நூற் றெருகுதியில் திருக்குறளும் இணைந்திருக்கிறது. ஈடும் எடுப்பும் அற்ற—தன்னேரில்லாத் தகவுடைய—உலகப் பெரு நூலாக விளங்கும் திருக்குறளும் கீழான நூல் என்றன்றோ ஆகிவிடும்!

"அற்றேல் கீழ்க்கணக்கு என்றதன் கருத்துத்தான் என்னே!" எனில், நூல்கள் அடிவரையறை கருதி மேற்கணக்கு என்றும், கீழ்க்கணக்கு என்றும் கூறப்படும். பத்துப்பாட்டு, எட்டுத்தொகை நூற்கள் மேற்கணக்கு நூற்கள். காரணம், அந்நூல்களில் வரும் பாடல்கள் பல அடிகளைக் கொண்டவை என்பதனால் என்க.

மேற்கணக்காவது இன்னது என்பதை விளக்கினல், அடிவரையறையின் மிக்கனவாகிய வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, மருட்பா என்னும் ஐவகைப் பாவினும் இலக்கணங்களின் மரபுபடி ஐம்பது முதல் ஐந்நூறு வரையில் செய்யுட்களைப் பாடி அமைப்பது என்று விளக்கம் பெறும். அடிவரையறையின் மிக்கன என்பது பெரும்பான்மையும் ஐந்தடியின் மிக்கன ஆதல். இம்முறை பத்துப் பாட்டு, எட்டுத் தொகை நூற்களில் அமைந்திருத்தலைக் காணலாம்.

> *"ஐம்பது முதலா ஐந்நூ றீறு*
> *ஐவகைப் பாவும் பொருள்நெறி மரபின்*
> *தொகுக்கப் படுவது மேற்கணக் காகும்."*

என்பது பன்னிருபாடல்.

கீழ்க்கணக்கு என்பது பெரிதும் அடிவரையறையில் குன்றி, வெண்பாவினலும் சிறுபான்மை அவ்வகையான வேறு செய்யுட்களானும் அறம், பொருள் இன்பங்களைக் குறித்து, முறையில் பாடப் பாடுவது. அடிவரையறையில் குறைதல் என்பது பெரும்பான்மையும் ஐந்தடியின் மிக்கு வாராமை. களவழி நாற்பதில் ஐந்தடியின் மிக்க பாடலும் உளவாலோ எனின், ஒரோ வழி இவ்வாறு அருகி வரும் என்க. இவ்வாறு வருதலைக் கமுகந்தோட்டம் என்பது போலக் கொள்க.

கீழ்க்கணக்கு இன்ன முறையில் வரும் என்பதைப் பன்னிருபடலம்.

> “அடிநிமிர் வில்லாச் செய்யுட் தொகுதி
> அறம்பொருள் இன்பம் அடுக்கி அவ்வகைத்
> திறம்பட வருவது கீழ்க்கணக் காகும்”

என்று இசைக்கிறது. கீழ்க்கணக்கு நூற்கள் மேற்கணக்கு நூற்கள் உண்டு என்பதை அப்பன்னிருபடலம்

> “மேற்கணக் கெனவும் கீழ்க்கணக் கெனவும்
> பாற்படு வகையால் பகர்ந்தனர் கொளலே”

> “வெள்ளைத் தொகையும் அவ்வகை வேண்டின்
> எள்ளறு கீழ்க்கணக் கெனவும் கொளலே.”

என்றும் கூறுதல் காண்க.

மேலும் தொல்காப்பிய உரை வழியும் கீழ்க்கணக்கைப் பற்றிய குறிப்பை நன்கு தெளியலாம்.

> “வனப்பியல் தானே வகுக்கும் காலைச்
> சின்மென் மொழியால் தாய பனுவலோ
> டம்மை தானே அடிநிமிர் பின்றே.”

என்னும் தொல்காப்பியச் செய்யுளியல் நூற் பாவிற்கு உரை கண்ட பேராசிரியர், “சிலவாக என்பது எண்ணுச் சுருங்குதல். மெல்லியவாச் சிலவாய சொற்கள் எழுத்தி-னுன் அகன்று காட்டாது சில எழுத்தினுன் வருவது; அடி நிமிராது என்றது ஐந்தடியின் ஏருது என்றவாறு. தாய பனுவலோடு என்றது அறம், பொருள், இன்பம் என்னும் மூன்றிற்கும் இலக்கணம் சொல்லுப. வேறு இடையிடை அவை அன்றியும் தாய்ச் செல்வது என்றவாறு. அஃதா வது, பதினெண் கீழ்க்கணக்கு என் உணர்க. அதனுள் இரண்டடியானும் ஐந்தடியானும் ஒரோ செய்யுள் வந்தவாறும் அவை சில வாய மெல்லிய சொற்களான் வந்தவாறும், அறம், பொருள், இன்பம் என அவ்வற்றுக்கு இலக்கணம் கூறிய பாட்டுப் பயின்று வருமாறும், கார் நாற்பது, களவழி நாற்பது முதலாயின வந்தவாறும் கண்டு கொள்க” என்று விளக்கந் தந்திருப்பதைக் காண்க.

இத்தகைய இலக்கணங்கட்கு இலக்கியமாக இருக்கும் பதினெண் கீழ்க்கணக்கு நூற்கள் நாலடியார், நான்மணிக்

கடிகை, இனியவை நாற்பது, இன்னா நாற்பது, கார் நாற்பது, களவழி நாற்பது, ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, திணை மொழி ஐம்பது, திணைமாலை நூற்றைம்பது. திருக்குறள், திரிகடுகம், ஆசாரக் கோவை, பழமொழி, சிறு பஞ்ச மூலம், கைந்நிலை, முதுமொழிக் காஞ்சி, ஏலாதி என்பன. இவற்றை உணர்த்தும் வெண்பா,

"நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப்
பால்கடுகம் கோவை பழமொழி மாமூலம்
இன்னிலைசொல் காஞ்சியுடன் ஏலாதி என்பவே
கைந்நிலைய வாங்கீழ்க் கணக்கு"

என்பது.

இவ்வெண்பா ஆய்வுக்குரியதாக உள்ளது. இதில் வரும் முப்பால் என்பது திருக்குறளைக் குறிக்கவில்லை என்றும், அது முப்பால் என்னும் பெயரையுடைய வேறு ஒரு நூலைக் குறிக்கிறது என்றும் கூறுவர். ஆனால், முப்பால் என்பது, திருகுறட்குப் பெயராதலாலும், முப்பால் என்னும் பெயரிய நூல் திருக்குறள் தவிர்த்து வேறு இல்லாமையாலும் முப்பால் என்பதைத் திருக்குறள் என்றே கூறலாம். இவ் வெண்பாவின் ஈற்றடி 'இன்நிலையவாம் கீழ்க் கணக்கு' என்ற பாட பேதமும் கொண்டது ஆதலின், கைந்நிலை என்பது கீழ்க் கணக்கு நூலைச் சாராது என்பர். மேலும், இதன் விளக்கத்தை ஈற்றில் எழுதப்பட்ட குறிப்புக்களில் காண்க.

இவற்றுள் நாலடியார், நான்மணிக்கடிகை, இனியவை நாற்பது, இன்னா நாற்பது, திரிகடுகம், ஆசாரக் கோவை, பழமொழி, சிறு பஞ்ச மூலம், முதுமொழிக் காஞ்சி, ஏலாதி ஆகியவைகள் நீதிகளைப் புகட்டும் நூற்கள். இன்னிலையும் நீதி நூலே ஆகும்.

கார் நாற்பது, ஐந்திணை ஐம்பது, ஐந்திணை யெழுபது, திணைமொழி ஐம்பது, திணைமாலை நூற்றைம்பது என்பன அகப்பொருள் தழுவிய நூற்கள். கைந்நிலையும் அகப் பொருள் நூல். களவழி நாற்பது புறப்பொருளைச் சார்ந்தது. இனி ஒவ்வொரு நூலைப் பற்றியும் ஆய்வாம்.

1. நாலடியார்: இந் நூலில் காணப்படும் வெண்பாக்கள் அனைத்தும் நான்கு அடிகளாக அமைந்திருத்தலின், இதனை நாலடியார் என வழங்கினர். ஆர் என்பது இந்நூலின் சிறப்புக் கருதிச் சேர்க்கப்பட்ட விகுதியாகும். இந்நூலைக் குறித்து வழங்கும் வரலாறு ஒன்று உண்டு. ஒரு சமயம் எண்ணுயிரச் சமணர்கள் தம்தம் ஊரில் பஞ்சம் ஏற்பட, மதுரை புகுந்த போது, பாண்டியனுல் ஆதரிக்கப்பட்டு வருகையில், பின் தம் நாட்டில் பஞ்சம் நீங்க, அதனுல் அச்சமணர்கள் தம் நாட்டை நோக்கிச் சென்றனர் எனவும், அங்ஙனம் சென்றவர்கள் ஒவ்வொரு பாட்டை எழுதி வைத்துச் சென்றனர் எனவும், அவர்கள் பாண்டி மன்னனிடம் கூருது சென்றதனுல், அவற்றை வைகையில் எறியும்படி அரசன் கட்டளை இட்டனன் எனவும், அவ்வாறு எறியப்பட்ட எண்ணுயிர வெண்பாக்களுள் நானூறு மட்டும் கரையில் ஒதுங்கின எனவும், அவற்றை ஒன்று சேரத் தொகுத்து அமைத்த நூலே நாலடியார் என்பதாகும் எனவும் கூறப்படுவதே அவ்வரலாருகும். இக் குறிப்பினை,

"மன்னன் வழுதியர்கோன் வையைப்பேர் ஆற்றின்கண்
எண்ணி இருநான்கோ டாயிரவர்—நண்ணி
எழுதியிடும் ஏட்டுக்குள் எதிரே ஏறும்
பழிதில்லா நாலடியைப் பார்."

என்னும் வெண்பாவால் அறியலாம்.

ஆராய்ச்சியாளர்கள், "இந்நூல் பலரால் பாடப்பட்ட ஒரு தொகுப்பு நூல் அன்று; ஒருவரே பாடிய நூலாகும்." என்று கூறுவர். இதனை நிறுவ ஒரே மாதிரியான தொடர்கள் நூலில் வருதலை எடுத்துக் காட்டுவர். இந் நூலில் கடவுள் வாழ்த்து நீங்கலாக நானூறு வெண்பாக்கள் உள்ளன. ஆதலின், "நாலடி நானூறு" என்று இதனைக் கூறுவர். இந் நூலுக்குக் கடவுள் வாழ்த்தைப் பாடிப் பால், இயல், அதிகாரம் முதலியவற்றை வகுத்துத் தொகுத்துக் கொடுத்தவர் பதுமனுர் என்பவர். இந் நூலுக்கு இவர் உரையும் எழுதியுள்ளனர் என்பது, "'நானூறவற்றின் நயந் தெரிந்து ஓதிய மதுமலர் தண்டார்ப் பதுமன் தெரிந்த ஐயம் இல் பொருண்மை" என்னும் பழைய ஏட்டுப் பிரதியில் காணப்படும் அடிகளால் தெரிய வருகிறது.

இந் நூலின் பெருமை இன்னது என்பதைக் கீழ்வரும் வெண்பாவால் நன்கு தெரியலாம்.

"வெள்ளாண் மரபுக்கு வேதம் எனச்சான்றோர்
எல்லாரும் கூடி எடுத்துரைத்த—சொல்ஆய்ந்த
நாலடி நானூறு நன்கினிதா என்மனத்தே
சீலமுடன் நிற்க தெளிந்து."

மேலும், இந் நூல் திருக்குறளுடன் இயைத்துப் பேசப்பட்டு வருதலையும் காணலாம். "நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி", "பழகு தமிழ்ச் சொல் அருமை நால் இரண்டில்" என்று வழங்கப்பட்டு வரும் தொடர்களைக் கொண்டு உணர்வோமாக. சிறந்த உரையாசிரியர்கள் இதனை மேற்கோள் நூலாகக் கொண்டதனாலும், இதன் பெருமை புலனாகிறது. இதன் பெருமையை உணர்ந்து Dr. G. W. Pope அவர்களும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளனர். இவர் குறளைப் பற்றியும், நாலடியாரைப் பற்றியும் குறிப்பிடும்போது, These two,—Kural, Naladiar—are great works serving as mutual commentaries and together throwing a flood of light upon the whole ethical and social philosophy of the Tamil people" என்கிறார்.

இந் நூல் நீதி நூல் வகையைப் பெரிதும் சேர்ந்தது என்றாலும், காமத்துப் பால் என்னும் பகுதியால் இன்பச் சுவை தரும் பாடல்களையும் கொண்டதாகும்.

"நல்ல குலம் என்றும் தீயகுலம் என்றும்
சொல்லள வல்லால் பொருள்இல்லை—தொல்சிறப்பின்
ஒண்பொருள் ஒன்றோ தவம்கல்வி ஆள்வினை
என்றிவற்றான் ஆகும் குலம்."

"ஊருள் எழுந்த உருகெழு செந்தீக்கு
நீருள் குளித்து முயலாகும்—நீருள்
குளிப்பினும் காமம் சுடுமே குன்றேறி
ஒளிப்பினும் காமஞ் சுடும்."

என்ற பாடலைப் போன்ற பாடல்களைப் படித்து வாழ்க்கையில் தூய்மை உறுவோமாக.

நாலடியாரில் பெருமுத்தரையர் என்னும் தொடர் 200, 296 ஆம் பாடல்களில் காணப்படுகின்றன. இம் முத்தரையர் என்பார் ஆட்சி, சிறப்புற்றிருந்த காலம் கி. பி. ஏழாம் நூற்றாண்டு என்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றமையின், இந் நூல் அக் காலத்தது என்று கூறலாம்.

2. நான்மணிக் கடிகை: கடிகை என்பதன் பொருள் துண்டு என்பது. ஈண்டு நான்கு மணிகளின் துண்டுகள் ஒன்றன்பின் ஒன்றாக இணைத்து அமைக்கப்பட்ட மாலை போன்று, ஒவ்வொரு பாடலிலும் நன்னான்கு நீதியாகிய மணித் துண்டுகளை இயைத்துப் பாடி இருத்தலின், இந் நூல் இப் பெயரினைப் பெற்றது என்க. இந் நூலில் கடவுள் வாழ்த்துச் செய்யுள் இரண்டும், நூல் செய்யுட்கள் நூற்று நான்கும் ஆக நூற்றாறு செய்யுட்கள் உள்ளன. எல்லாம் வெண்பாக்களே. இந் நூலில், நல்ல உவமைகளையும், அறிவுரைகளையும் காணலாம். புலால் உண்ணாமை, கொல்லாமை முதலிய நீதிகளை வற்புறுத்திக் கூறும் இந்நூல்.

இந் நூலை எழுதியவர் விளம்பி நாகனார் என்பவர். வேறு ஒரு குறிப்பும் இவரைப் பற்றி அறிதற்கு இல்லை. இவர் வைணவராக இருக்கலாம் என்பது, இந் நூலில் வரும் இரண்டு கடவுள் வாழ்த்துப் பாடல்களால் தெரிய வருகிறது. கல்வியின் சிறப்பைக் கூறும் பாடலைக் காணவும்.

“கற்பக் கழிமடம் அஃகும் மடம்அஃகப்
புற்கம்தீர்ந்து இவ்வுலகின் கோள்உணரும்
கோள்உணர்ந்தால்
தத்துவ மான நெறிபடரும் அந்நெறி
இப்பால் உலகத்து இசைநிறீஇ உப்பால்
உயர்ந்த உலகம் புகும்.”

3. இனியவை நாற்பது: இந் நூலில் அமைந்துள்ள வெண்பாக்கள் ஒவ்வொன்றும் இன்னின்ன இனியவை என்று எடுத்து இயம்புதலின், இந் நூல் இனியவை நாற்பது என்ற பெயரினைப் பெற்றது. இந் நூலில் காணப்படும் முதல் பாடல் கடவுள் வாழ்த்துப் பாடலாகவும், ஏனைய முப்பத்தொன்பது பாடல்கள் நீதிகளை உணர்த்துவனவாகவும் உள்ளன. இந் நூலில் கற்றலின் சிறப்பு, ஊண்

உண்ணுமையின் மேன்மை, கடன்படாமல் வாழ்தலின் மாண்பு, வருவாய்க்கு ஏற்பச் செலவு செய்தலின் இன்றியமையாமை முதலானவற்றினை எடுத்து இயம்பப்பட்டுள்ளன. இந் நூலைப் பாடியவர் மதுரைத் தமிழ் ஆசிரியர் மகனார் பூதஞ்சேந்தனார் ஆவார். இவர் தமது கடவுள் வாழ்த்தில் சிவபெருமானையும், திருமாலையும், பிரமதேவனையும் போற்றி இருப்பது கொண்டு, சமரச மனப் பண்பு உடையவர் என்பது தெரிகிறது. என்றாலும், சிவபெருமானை முதலில் வைத்துக் கூறியிருப்பதால் சைவ உணர்ச்சி மிக்கவர் என்பதும் சிந்திக்க வேண்டி இருக்கிறது.

> *"ஐவாய வேட்கை அவாஅடக்கல் முன் இனிதே*
> *கைவாய்ப் பொருள்பெறினும் கல்லார்கண் தீர்வுஇனிதே*
> *நில்லாத காட்சி நிறையில் மனிதரைப்*
> *புல்லா விடுதல் இனிது."*

4. இன்னா நாற்பது: இன்னா என்னும் சொல்லின் பொருள் தீமை என்பது. தீமை தருபவை இன்னின்ன என்பதை நாற்பது வெண்பாவில் இது பாடப்பட்டிருத்தலின், இஃது 'இன்னா நாற்பது' என்னும் பெயரினைப் பெற்றது. பற்று இல்லாது, அழகு மட்டும் இருக்கும் மனைவி கணவனுக்கு இன்னா; உழவர்கட்கு எருது இல்லைமை இன்னா; அறிஞர்கள் கூடிய இடத்தில் அறிவிலி போதல் இன்னா; அடைக்கலமாகக் கொடுத்த பொருளை வவ்வுதல் இன்னா என்பன போன்ற கருத்துக்களை இந்நூலில் காணலாம்.

> *"ஆன்றமைந்த சான்றோருள் பேதை புகல்இன்னா*
> *மான்றிருண்ட போழ்தின் வழங்கல் பெரிது இன்னா*
> *நோன்றவிந்து வாழாதார் நோன்பின்னா ஆங்கின்னா*
> *ஈன்றாளை ஓம்பா விடல்."*

என்பன போன்ற அரிய நீதிகளும் இதன்கண் உள. இந் நூலைப்பாடிய பெரியார் கபிலர் ஆவார். இவரது கடவுள் வாழ்த்தில் சிவபெருமான், பிரமன், திருமால், முருகன் ஆகிய நால்வரையும் வணங்காததும், நினையாததும் இன்னாவாகும் என்று பாடி இருத்தலின், இவர் மதச் சார்பில் சமரசப் போக்குடையார் என்பது தெரிகிறது. என்றாலும், சைவ

சமயச் சார்பில் சிவபெருமானையும், முருகனையும் குறிப்பிட்டிருப்பதால், சைவப் பற்று நிரம்பியவர் என்பது தெளிவாகிறது. ஈண்டு யாவரும் வணங்கிப் போற்றும் விநாயகப் பெருமானைக் குறிப்பிடாததை நோக்குதல் வேண்டும். சங்க காலப் பாட்டில் விநாயக வணக்கம் இல்லை.

கபிலர் பாரியின் நண்பர் என்பது புறநானூற்றுப் பாடல்களால் நன்கு தெரிய வருகின்றது. இவரது தொகை நூல் பாடல்களில் மது, ஊன் இவற்றைப் பாராட்டியவர் என்பது புலனாகிறது. ஆனால், இந் நூலில் "ஊனைத் தின்று ஊனைப் பெருக்குதல் இன்னா" என்று கூறி இருத்தலின், இவர் சங்க காலக் கபிலரினும் வேறு என்று நினைக்க இடமிருக்கிறது. மேலும், இவர் பெயரால் பாடப்பட்ட பதினோராம் திருமுறையில் சேர்க்கப்பட்ட பாடல்களில் விநாயகரைப் பற்றித் தனி நூலே பாடி இருப்பதும், இவர் சங்க காலப் புலவராம் கபிலரினும் வேறானவர் என்பதும் சிந்திக்க வேண்டி யுள்ளது.

5. கார் நாற்பது: இது நீதி நூல் அன்று. அகப் பொருள் தழுவிய இன்ப நூல். தலைவன் தலைவியைப் பிரிந்து இருந்தபோது, . தலைவி ஆற்றி இருந்த நிலையினை அழகுற எடுத்தியம்புவது. ஆற்றியிருத்தல் முல்லைத் திணைக் குரிய உரிப் பொருள். முல்லைக்குப் பொழுது கார் காலம். ஆகவே, கார்கால வர்ணனையினை அடிப்படையாகக் கொண்டு, இருத்தல் பொருளை இயம்பலின், இது கார் நாற்பது என்னும் பெயரைப் பெற்றது.

இதன்கண் தலைவி, தலைவன் கார் காலம் வந்ததும் வராதது குறித்து வருந்துதல், தோழி தேற்றல், தலைவன் தலைவியை நினைந்து தேர்ப்பாகனுடன் உரையாடிக் கொண்டு மீள்வது முதலியன அழகுறப் பாடப்பட்டுள்ளன. கார்த்திகை விளக்குப் பற்றியும் குறிப்பு உளது.

இந் நூலைப் பாடியவர் மதுரைக் கண்ணங் கூத்தனார். இவரது பெயர் திருமால் பெயராம் கண்ணனையும், இறைவன் பெயராம் கூத்தனையும் நினைப்பிக்கின்றமையின், இவர் சமயப் பொறை யுடையவர் என்பது தெரிகிறது. என்றாலும், திருமால் வணக்கம் இந் நூல் முதற் செய்யுள் ஆதலின், வைணவப் பற்றுடையார் என்றும் கொள்ளலாம்.

ஆனல், முல்லைக்குரிய தெய்வம் திருமால் ஆதலின், அக் குறிப்புத் தோன்ற அங்ஙனம் குறிப்பிட்டார் எனினும் அமையும்.

> "கல்பயில் கானம் கடந்தார் வரஆங்கே
> நல்இசை ஏறெடு வானம் நடுநிற்பச்
> செல்வர் மனம்போல் கவின்ஈன்ற நல்கூர்ந்தார்
> மேனிபோல் புல்லென்ற காடு."

6. **களவழி நாற்பது**: களம் என்பது ஈண்டுப் போர்க் களமாகும். போர்க்கள வர்ணனையினை அடிப்படையாகக் கொண்டு பாடப்பட்டமையின் இப்பெயர் பெற்றது. இதில் நாற்பத்தொரு வெண்பாக்கள் உள்ளன. இது புறப் பொருள் நூல். சோழன் செங்கணுனுக்கும், சேரன் சேர மான் கணைக்கால் இரும் பொறைக்கும் கழுமலம் என்னும் இடத்தில் போர் நடந்த போது, சோழன் வெற்றி கொண்டு சேரனைச் சிறையில் இட பொய்கையார் என்னும் புலவர் சேரனை விடுதலை செய்யப் பாடிய நூல் இது. இதன் கண் போர்க்களத்தின் இயல்பு, செங்கணுன் வீரம், கார்த்திகை விழா முதலியன சிறப்பிக்கப்பட்டுள்ளன. நல்ல உவமைகள் இதில் உண்டு. குருதி படிந்த போர்க் களம், நிலமகள் செம்போர்வை போர்த்தது போன்றதாக இருக்கிறது என்கிருர். பிணம் தின்ன வரும் கழுகுகள் சிறகை விரித்து ஓசை செய்வது, உலக முடிவு முழக்கம் போன்றது என்கிருர். சேரன் சிறை வீடு செய்கின்ற வரையில் காத்திருந்திலன்; அவன் சிறைப்பட்டிருந்தபோது, பருக நீர் கேட்டனன்; காவலாளன் உடனே ஈயாது தாழ்த்து வந்து தந்ததால், அதனைப் பருகாது உயிர் விட்டனன்.

இந்நூலாசிரியர் புறநானூற்றில் சேரமான் கோக்- கோதை மார்பனைப்பாடிய புலவர்தாஞ, அன்றி, வேரு என்று ஆய்வர் ஆராய்ச்சியாளர். மேலும், இவர் பொய்கை ஆழ்- வாரும் அல்லர்.

> "கடிகாவில் காற்றுற்று எறிய வெடிபட்டு
> வீற்றுவீற்று ஓடும் மயிலினம் நாற்றிசையும்
> கேளீர் இழந்தார் அலறுபவே செங்கண்
> சினமால் பொருத களத்து."

7. ஐந்திணை ஐம்பது: தமிழ் மொழியில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்று ஐந்து திணைகள் உண்டு. (திணை = நிலம்) இவ்வைந்தின் இயல்பைப்பற்றிப் பப்பத்து வெண்பாக்களால் இந்நூல் பாடப்பட்டிருந்தலின், இப்பெயர் பெற்றது. இதில் முதற்கண் ஒரு பாயிரப் பாடலும் உண்டு. நூலின் முதல் பாட்டில் திருமால், சிவபெருமான், முருகன் ஆகிய மூவரும் உவமையாகக் கூறப்பட்டுள்ளனர். ஆகவே, இந்நூலாசிரியர் சமரச நோக்கினர் என்பது தெரிகிறது. என்றாலும், முதற்கண் திருமாலைப்பாடுதலின் வைணவப் பற்றுடையார் என்பதையும் யூகிக்க இடன் உண்டு. இந்நூலில் உயிர் இனங்களின் காதற் செயல்கள் இன்பம் பயக்கும் வண்ணம் பாடப்பட்டுள்ளன. ஆண் யானை பெண் யானையைக் குளிப்பாட்டுதல், கலைமான் பிணைமானை நீர் உண்ணச்செய்தல் முதலியன சுவை பயப்பன. "கொல்லன் சேரியல் ஊசி விற்பதுபோல" என்னும் பழமொழி இதன் கண் உண்டு. இஃது அகப்பொருள் தழுவிய நூல்.

இதனைப்பாடிய புலவர் மாறன் பொறையனார் என்பவர். மாறன் என்னும் பெயர் பாண்டியனையும், பொறையன் என்னும் பெயர் சேரனையும் குறிக்கும். இதனால் இவர் இரு மன்னர்களின் தொடர்பு கொண்டு வாழ்ந்த புலவர் போலும்!

"சுனைவாய்ச் சிறுநீரை எய்யா தென்றெண்ணிப்
பிணைமான் இனிதுண்ண வேண்டிக்—கலைமாத்தன்
கள்ளத்தின் ஊச்சும் சுரம் என்பர் காதலர்
உள்ளம் படர்ந்த நெறி."

8. திணை மொழி ஐம்பது: இதுவும் ஐந்திணைகளைப் பற்றிக்கூறும் அகப்பொருள் நூல். ஒவ்வொரு திணைக்கும் பப்பத்தாக ஐம்பது வெண்பாக்களால் ஆனது இந்நூல். இந்நூலில் இயற்கை எழிலை இனிது காணலாம். யாழ், குழல், முழவு போன்றது அருவியின் ஒலி என்பர் ஆசிரியர். தலைவன் வருகையினைத் தலைவி எதிர் பார்த்துக்கூறும் மொழிகள் சுவைபயக்கும். "சேர்ப்பன் வருவன் கொல்! தோழி!" என்ற அடியினைக் காண்க.

இந்நூலைப் பாடிய புலவர் சாத்தந்தையார் மகனார் கண்ணன் சேந்தனார் என்பவர். இவரது பெயரில் திரு-

மாலின் பெயராம் கண்ணனும், முருகனின் பெயராம் சேந்தனும் இணைந்து பொலிதலின், இவரது முன்னோர் சமரச சமயத்தவர் என்பது தெரிகிறது. முன்னர்த் திருமால் பெயர் இருத்தலில் வைணவப்பற்று மிக்கவர் ஆதலும் கொள்ளலாம்.

"கணமுகை கையெனக் காந்தள் கவின
மணமுகை என்றெண்ணி மந்திகொண் டாடும்
விறல்மலை நாட வரவரிதாம் கொல்லோ!
புனமும் அடங்கின காப்பு."

9. ஐந்திணை எழுபது: இந்நூல் ஒவ்வொரு திணைக்கும் பதினான்கு செய்யுட்களாக எழுபது வெண்பாக்களில் பாடப்பட்டிருத்தலின், இப்பெயர் பெற்றது. அகப் பொருள் நூல் இது. காதலனைப் பிரிந்துள்ள காரிகைக்கு, மாலைக் காலம் கொல்லும் கொடுமை போன்றது என்று இந்நூல் கூறுகிறது. இதில் இயற்கை வர்ணனைகள், உயிர் இனங்களின் செயல்கள் படிக்கச் சுவைதருவனவாகும். பல்லி சொல் கேட்கும் குறிப்பும் இதில் உண்டு.

இந்நூல் கடவுள் வாழ்த்தில் விநாயகர் வணக்கம் உளது. விநாயகரைப்பற்றிய குறிப்புப் பண்டைக்காலத்தில் இல்லை. ஆகவே, இது தேவார காலத்துக்குச் சிறிது முந்திய நூல் எனலாம். இதனைப்பாடிய புலவர் மூவாதியார் என்பவர்.

"மன்றப் பலவின் சுளைவிளை தீம்பழம்
உண்டுவந்து மந்தி முலைவருடக்—கன்றமர்ந்து
ஆமா சுரக்கும் அணிமலை நாடனை
யாமாப் பிரிவது இலம்."

10. திணைமொழி நூற்றைம்பது: ஒவ்வொரு திணைக்கும் முப்பது முப்பது வெண்பாக்களால் இஃது எழுதப்பட்டமையின், இப்பெயர் பெற்றது. இதிலும் இயற்கை அழகைக் காணலாம். திடமான முயற்சி இருப்பின், அம்முயற்சியின் பயனை இப் பிறவியிலேயே பெறலாம் என்பதை இந்நூல் எடுத்து இயம்புகிறது. இஃது அகப்பொருள் நூல்.

இந் நூலைப் பாடிய புலவர் கணிமேதாவியார் ஆவார். கணி என்னும் சொல்லுக்குச் சோதிடன் என்பது பொருள்.

ஆகவே, இவர் அக்கலையில் சிறந்து விளங்கினமையால் இப்பெயரினைப் பெற்றார் போலும்! இவர் பாண்டியனை இந்நூலில் குறித்தலின், அப்பாண்டியனால் ஆதரிக்கப் பட்டிருக்கவேண்டும் என்பது தெரிகிறது. இவரது ஆசிரியர் மாக்காயனார் என்பது, மாக்காயனார் மாணக்கர் கணிமேதையார் என்று கூறப்பட்டதனால் தெரிய வருகின்றது.

> "வருக்கை வளமலையுள் மாதரும் யானும்
> இருக்கை இதண்மேலே மாகப்—பருக்கைக்
> கடாஅமால் யானை கடிந்தானை அல்லால்
> தொடாஅவால் என்தோழி தோள்."

11. திருக்குறள்: தமிழ் மொழியில் ஒப்புயர்வற்று விளங்கும் நூல் இந்நூல். குறள் என்பது வெண்பா வகையில் ஒன்று. அத்தகைய குறள் வெண்பாக்களால் ஆனநூல் ஆதலின், இப்பெயர் பெற்றது. இதன் சிறப்பு நோக்கித் திரு என்னும் அடை மொழி கொடுக்கப் பட்டுள்ளது. இதில் நூற்று முப்பத்து மூன்று அதிகாரங்கள் உள்ளன. ஒவ்வோர் அதிகாரத்தில் பப்பத்துக் குறட்-பாக்கள் உள்ளன. ஆக, ஆயிரத்து முந்நூற்றுக் குறட்-பாக்களைக் கொண்டது இந்நூல். இந்நூலில் அறத்துப் பால், பொருட் பால், காமத்துப் பால் என முப்பிரிவுகள் இருத்தலின் இது முப்பால் என்றும் கூறப்பெறும். இதன்-கண் பாயிரம், இல்லற இயல், துறவற இயல், அரசியல், அங்க இயல், ஒழிவு இயல், களவியல், கற்பியல் என்னும் உட் பிரிவுகள் உள.

இந்நூல் திருக்குறள், முப்பால், உத்தர வேதம், தெய்வ நூல், திருவள்ளுவர், பொய்யா மொழி, வாயுறை வாழ்த்து, தமிழ்மறை, பொதுமறை, திருவள்ளுவப் பயன் என்ற பத்துப் பெயர்களாலும் கூறப்படும். இவ்வரிய நூலுக்கு தருமர், மணக்குடவர், தமத்தர், நச்சர், பரிமேலழகர், திரு மலையர், மல்லர், கவிப்பெருமாள், காளிங்கர், ஆகிய பதின்மர் உரை எழுதியுள்ளனர். இவற்றுள் பரிமேலழகர் உரையே சிறந்ததாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இந்நூல் பல மொழிகளில் மொழி பெயர்க்கப்பட் டுள்ளது. டாக்டர் போப் அவர்களின் மொழி பெயர்ப்பு

ஆங்கிலத்தில் உள்ளது. இந்நூலின் பெருமையை அளவிட்டுக் கூற இயலாது. இந்நூலைப் போற்றி இதன் பொருளை எடுத்து ஆளாத புலவர்கள் இலர். சங்க நூல்களில் இவரது கருத்து விளங்கும் இடங்கள் பல. நற்றிணையில் வரும் "நஞ்சுண்பர் நனி நாகரிகர்" என்பது, "பெயக்கண்டு நஞ்சுண்டமைவர், நயத்தக்க நாகரிகம் வேண்டுபவர்" என்னும் குறளைத் தழுவியது. "ஈன்ற ஞான்றினும் பெரிதுவந் தனளே" என்னும் புறநானூற்று அடி "ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோன் எனக் கேட்டதாய்" என்ற குறளை ஒட்டியது.

சிலப்பதிகாரத்தில் வரும் "முற்பகல் செய்தான் பிறன் கேடு தன்கேடு பிற்பகல் காண்குறூஉம் பெற்றி காண்." என்பது, "பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா பிற்பகல் தாமேவரும்" என்னும் குறளின் கருத்தே ஆகும்.

மணிமேகலையில் காணப்படும், "யாம்மேல் உரைத்த பொருள்கட் கெல்லாம் காமம் வெகுளி மயக்கம் காரணம்" என்பது, "காமம் வெகுளி மயக்கம் இவை மூன்றன் நாமம் கெடக் கெடும்நோய்" என்னும் திருக்குறளை ஒட்டியதாகும்.

சமயாசிரியர்கள் பலரும் இந்நூலைத் தழுவியுள்ளனர். "கனி இருப்பக் காய்கவர்ந்த கள்வனேன்" என்பது "இனிய உளவாக இன்னாத கூறல் கனி இருப்பக் காய்கவர்ந் தற்று" என்னும் குறட்பொருளே ஆகும். நம்மாழ்வார், "கண்டு கேட்டு உற்று மோந்து உண்டு உழலும், ஐங்கருவிகண்ட இன்பம் தெரிவரிய அளவில் வரச் சிற்றின்பம்" என்று பாடியிருப்பது, அப்படியே திருக்குறளில் வரும், "கண்டு கேட்டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும் ஒண்டொடி கண்ணே, உள" என்னும் கருத்தாகும்.

புராணக்காரர்களும், காவியக்காரர்களும் திருக்குறள் கருத்தை எடுத்து ஆண்டுள்ளனர். சேக்கிழார், "மழைக் குதவும் பெருங் கற்பு" என்றது, "தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழு தெழுவாள் பெய்யெனப் பெய்யும் மழை" என்ற குறட் பொருளே ஆகும். கம்பர் "கொடுப்பது விலக்குக் கொடியோய உனது சுற்றம் உடுப்பதுவும் உண்பதுவும் இன்றி விடுகின்றாய்" என்று கூறி இருப்பது, "கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்

உண்பதூஉம் இன்றிக் கெடும்,'' என்னும் குறள் அடிகளை ஒன்றியதாகும். இவ்வாறு பலரும் தம் தம் நூல்களில் எடுத்தாண்ட பட்டியலை நீளக் காட்டிக் கொண்டே செல்லலாம்.

திருக்குறள் தனித்தமிழ் முதல்நூல். இது பிற மொழி நூல்களைத் தழுவி எழுதப்பட்டது என்று சிலர் கூறுவார் கூற்று உறுதிப்படாது. இதற்கு இரண்டொரு சான்றுகளைக் காட்டின் உண்மை தெரியவரும். சாணக்கியர் சுக்கரநீதி நூல், கட்குடியினை ஏற்று மொழிகின்றது. கட்குடிப்பதால் நுண்ணறிவும், அஞ்சாமையும் உள்ளத்திட்பமும் தரும் என்பது சுக்கரநீதியின் கருத்து. ஆனால், திருவள்ளுவர் கட்குடியை மறுத்து,

"துஞ்சினார் செத்தாரின் வேறல்லர் எஞ்ஞான்றும்
நஞ்சுண்பார் கள்ளுண் பவர்"

என்கிறார். பொய்யில் புலவராம் திருவள்ளுவர் "இன்றி அமையாச் சிறப்பின ஆயினும் குன்ற வருப விடல்'' என்று பாடிய குறட்குப் பரிமேல் அழகர் விளக்கம் தருகையில், "இறப்பவருவழி இளிவந்தன செய்தாயினும் உய்க, எனும் வடநூல் முறையை மறுத்து, உடம்பினது நிலை இன்மையையும், மானத்தினது நிலையுடைமையையும் தூக்கி அவை செய்யற்க என்பதாம்'' என்றும், "ஈன்றாள் பசி-காண்பான் ஆயினும் செய்யற்க சான்றோர் பழிக்கும் வினை'' என்னும் குறட்கு விளக்க உரை தருகையில், "இறந்த மூப்பினராய் இருமுது குரவரும், கற்புடை மனைவியும் குழவியும், பசியால் வருந்தும் எல்லைக்கண் தீயன பலவும் செய்தாயினும் புறந்தருக என்னும் அறநூல் பொதுவிதி. பொருள் நூல்வழி ஒழுகுதலும், அரசர் தொழிற்குரியர் ஆதலும் நன்கு மதிக்கற்பாடும் உடைய அமைச்சர்க்கும் எய்தாமை பற்றி, இவ்வாறு கூறினார்'' என்றும் எழுதியுள்ளார். இவ்விரு எடுத்துக்காட்டுக்களால் வடநூல் போக்கை நாயனார் ஏற்கவில்லை என்பதை நன்கு உணரலாம். மேலும், காமத்துப்பால் அமைப்பினை உற்று நோக்கின், திருக்குறள் வடநூல் போக்கைத் தழுவாது தமிழ் மரபு ஒட்டியே ஆக்கப்பட்டது என்பதை நன்கு உணரலாம்.

திருக்குறள் ஒரு சமயத்தார், ஒரு நாட்டார். ஒரு வகுப்பார் ஆகிய குறிப்பிட்டவர்கட்கு உரியது என்பதின்றி, மக்களாகப் பிறந்தவர்கள் யாவர்க்கும் எக்காலத்தும் பயன் படத்தக்க நீதிகளைக் கூறும் நூலாகும்.

இது குறித்தே கல்லாடனர் "எப்பாலவரும் இயைபவே வள்ளுவனர் முப்பால் மொழிந்த மொழி" என்றனர். 'இந்நூலை முற்றிலும் ஓதியபின் வேறு நூல் பயிற்சி வேண்டா-மன்னு தமிழ்ப்புலவராய் வீற்றிருக்கலாம்' என்கின்றனர் நத்தத்தனர். இந்நூல் தமிழ்வேதம் என்றற்குரியது என்பதை "ஓதற்கு எளிதாய் உணர்தற்கு அரிதாகி, வேதப் பொருளாய் மிக விளக்கி" என்று மாங்குடி மருதனர் கூறு-மாற்ருலும், "வேதப் பொருளை விரகால் விரித்துலகோர் ஓதத் தமிழ்நூல் உரை செய்தார்" என்று செயலூர்க்-கொடுஞ் செங்கண்ணனரும், "ஆரியம் வேதம் உடைத்து தமிழ் திருவள்ளுவனர் ஓது குறட்பா உடைத்து" என்று வண்ணக்கஞ் சாத்தனரும் கூறுமாற்ருல் தெளிக.

இந்நூலிலிருந்து எந்த நீதிகளை, இவை சிறப்புடையன என்று எடுத்துக் காட்ட இயலும்? எல்லா நீதிகளும் சிறப்புடையனவே. இந்நூல் கல்வியின் சிறப்பு, நட்பின் மாண்பு போன்ற செய்திகளை அறிவிக்கும்போது, ஒன்றுக்கு மேற்பட்ட அதிகாரங்களைக் கொண்டு விளக்குதலின், அவற்றின் சிறப்பினை நன்கு தெரிவிக்கும் முறையில் கூறப் பட்டன என்பதை உணரலாம். பிறனில் விழையாமை, அழுக்காருமை, கள்ளாமை, சிற்றினம் சேராமை, கள் உண்ணுமை முதலான அதிகாரங்களின் தலைப்புக்கள் எதிர்மறைப் பொருளில் கூறப்பட்டிருத்தலைச் சிந்திக்கும் போது, மேலே காட்டிய செயல்களைச் சொல்லாலும் வெறுக் கின்ருர் ஆசிரியர் என்பதை அறியலாம். இந்நூலில் எல்லாம் உண்டு என்பது அறிஞர் கருத்து. இதனை மதுரைத் தமிழ் நாகனர் என்பவர் "எல்லாப் பொருளும் இதன்பால் உள, இதன்பால் இல்லாத எப்பொருளும் இல்லையால்" என்று கூறியதைக் காண்க.

திருக்குறள் அறம், பொருள், இன்பம் என மூன்று பிரிவுகளாக இருப்பதன் காரணத்தை நம்பாலத்தனர்,

"அறம் தகளி ஆன்ற பொருள்திரி இன்பு
சிறந்தநெய் செஞ்சொல் தீதண்டு—குறும்பாவால்
வள்ளுவனார் ஏற்றினார் வையத்து வாழ்வார்கள்
உள்ளிருள் நீக்கும் விளக்கு."

என்றருளினார்.

திருக்குறள் பாக்களில் சில,

"கற்றதனால் ஆய பயன்என்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்."

"விசும்பின் துளிவீழின் அல்லால் மற்றுஆங்கே
பசும்புல் தலைகாண்பு அரிது."

"செயற்கரிய செய்வார் பெரியார் சிறியார்
செயற்கரிய செய்கலா தார்."

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்துஅறன்
ஆகுல நீர பிற."

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது."

"மனைத்தக்க மாண்புடையள் ஆகித் தற்கொண்டாள்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை."

"எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்."

"உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு."

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறைஎன்று வைக்கப் படும்."

"உளர்என்னும் மரத்திரையர் அல்லால் பயவாக்
களர்அனையர் கல்லா தவர்."

"தெரிதலும் தேர்ந்து செயலும் ஒருதலையாச்
சொல்லலும் வல்லது அமைச்சு."

"தம்மில் இருந்து தமதுபாத் துண்டற்றால்
அம்மா அரிவை முயக்கு."

"பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயிறு ஊறிய நீர்."

"எழுதுங்கால் கோல்காணுக் கண்ணேபோல் கொண்கன்
பழிகாணேன் கண்ட இடத்து."
"இம்மைப் பிறப்பில் பிரியலம் என்றேனக்
கண்நிறை நீர்கொண் டனள்."
"உள்ளினேன் என்றேன்மற் றென்மறந்தீர் என்றென்னைப்
புல்லாள் புலத்தக் கனள்."
"நினைந்திருந்து நோக்கினும் காயும் அனைத்தும்
யார்உள்ளி நோக்கினீர் என்று."

இத்தகைய குறட்பாக்களைப் பாடிய புலவர் கி. பி. இரண்டாம் நூற்றுண்டிற்கு முன் வாழ்ந்தவர் என்பதில் ஐயம் இல்லை. இதனை வலியுறுத்தச் சிலப்பதிகாரமே போதிய சான்ருகும். சிலம்பு இலங்கை கயவாகு கண்ணகி விழாவிற்கு வந்தனன் என்கிறது. அவன் கி. பி. 2 ஆம் நூற்ருண்டில் இருந்தவன் என்பதை இலங்கைச் சரித்திரம் இயம்புகிறது. சிலம்பு திருக்குறள் அடிகளை அப்படியே எடுத்தாண்டுள்ளது.

"தெய்வம் தொழாள் கொழுநன் தொழுவாளைத் தெய்வம்
தொழும் தகைமை திண்ண மால்."

என்பது இளங்கோ வாக்கு,

"தெய்வம் தொழாஅள் கொழுநற் ருெழு தெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை."

என்னும் திருக்குறளை ஒட்டியதாகும். ஆகவே, வள்ளுவர் கி. பி. 2 ஆம் நூற்ருண்டினர் என்பது உறுதியே.

திருவள்ளுவர் சமயத்தைப் பற்றிப் பெரிய கருத்து வேற்றுமைகள் உண்டு. இவரைச் சமணர், பௌத்தர் என்றும் கூறுவர். சமணர், பௌத்தர் கடவுள் உல-கிற்குக் காரணம் என்பதை ஒவ்வார். ஆனுல் திருவள்ளு-வர் "ஆதி பகவன் முதற்றே உலகு" என்று முதற் குறளி-லேயே கூறுதலில், இவர் சமணர், பௌத்தர் ஆகார். கிறித்-தவச் சமயத்தினர் எனக் கூற வருவாரும் உளர். இவர் கிறித்தவர்கள் ஒவ்வாத மறுபிறப்பை ஒவ்விக் குறட்பாப்-பாடி இருத்தலின், கிறித்தவரும் ஆகார். "எழுமை ஏழு பிறப்பு" என்றதைக் காண்க. இவர் வைணவர் என்ப-

தற்கு ஆதாரமாக "உலகளந்தான் தாயது எல்லாம்" என்றும், "தாமரைக் கண்ணன் உலகு" என்றும் திருக்குறளில் வரும் தொடர்களைக் காட்டுவர். இவை எடுத்துக் காட்டுகளாகக் கூறப்பட்டனவே அன்றி இறைவன் பண்பினை எடுத்துக் காட்டாமையின், வைணவர் ஆகார் என்பர். இறைவன் பண்பாக எண்குணத்தான் என்று கூறி இருப்பதனாலும், இவ்வெண் குணம் சைவ ஆகமத்தில் கூறப்பட்ட எண்குணங்கள் எனப் பரிமேலழகர் உரை கூறுதலானும், ஆதி பகவன் என அம்மை அப்பரைக் குறித்தலானும், இதுவரை இவர் சைவர்களாலேயே கோயில் அமைத்து வழிபட்டு வருதலானும் சைவர் என்று சாற்றுவர். யான் எழுதியுளள திருவள்ளுவரும் கடவுள் கொள்கையும் என்னும் கட்டுரையில் திருவள்ளுவர் சைவரே என்று தொனிக்கும் வகையில் எழுதியுள்ளேன்.

இவற்றிற் கிடையில் 'வாலறிவன்' என்ற தொடர் கொண்டு மாத்துவர்கள் "திருவள்ளுவர் நாங்கள் வழிபடும் அனுமாரைப் போற்றி யுள்ளமையின், அவர் மாத்துவ நெறியினர்" என்று கூறுதலையும் அறிதல் வேண்டும். எவர் எவ்வாறு கூறினும், அவர் சமரச மதக் கொள்கையினர் என்பதையே நாம் ஏற்றல் வேண்டும்.

12. திரிகடுகம்: திரி என்னும் வட சொல்லுக்கு மூன்று என்பது பொருள். கடுகமாவது காரமுள்ள பொருளாம். ஆக மூன்று காரமுள்ள மருந்துப் பொருள்களை ஒன்று சேர்த்து மருந்துப் பொருளாக்கி நோயாளிக்குக் கொடுத்தால் நோய் தீரும். அந்த மூன்று காரமான பொருள்கள் சுக்கு, மிளகு, திப்பிலி என்பன. இந்த மூன்று பிணிதீர்க்கும் பொருள்கள் போல, ஒவ்வொரு வெண்பாவிலும் மூன்று சீரிய நீதிகளைப் பொருத்தி மக்களது ஒழுக்க நெறியை வளர்த்தலின், இந்நூல் இப்பெயர் பெற்றது.

"அருந்ததிக் கற்பினர் தோளும் திருந்திய
தொல்குடியின் மாண்டார் தொடர்ச்சியும்—சொல்லின்
அரில்அகற்றும் கேள்வியார் நட்பும் இம்மூன்றும்
திரிகடுகம் போலும் மருந்து."

என்னும் வெண்பாவால் இக்கருத்து உறுதியாதலைக் காண்க.

இந்நூல் கடவுள் வாழ்த்துப் பாடல் ஒன்றும், நீதிகளை உணர்த்தும் பாடல்கள் நூறும் கொண்டு திகழ்கிறது. கடவுள் வாழ்த்துப் பாடலில் திருமால் வணக்கம் அமைந்துள்ளது. ஆகவே, இந்நூலாசிரியர் வைணவர் என்பது தெரிகிறது.

இந்நூல் உணர்த்தும் நீதிகளுள் சில, கடன்படாது வாழ்தல், வருவாயில் கால் பகுதியை அறத்தின் பொருட்டுச் செலவு செய்தல், நாளும் நாளும் குளித்த பின்பே உணவு கொள்ளுதல், பொய்யன், கொடுங்கோல் மன்னன், கூடா ஒழுக்கத்தினன் ஆகிய இவர்களின் காரணமாக மழை பெய்யாமை, வேள்வியின் பொருட்டும் கொலை கூடாது எனல் என்பன. இந்நூலைப்பாடியவர் நல்லாதனார் என்பவர்.

“கல்லார்க்கு இனனாய் ஒழுகலும் காழ்கொண்ட
இல்லாளைக் கோலால் புடைத்தலும்—இல்லம்
சிறியாரைக் கொண்டு புகலும்இம் மூன்றும்
அறியாமை யான்வரும் கேடு.”

13. ஆசாரக் கோவை: ஆசாரம் என்னும் சொல் ஒழுக்கம் என்னும் பொருளது. அவ்வொழுக்கம் இன்னின்ன என்பதைக் கோவை படுத்தி வெண்பாக்கள் வழி உணர்த்தலின் இந்நூல் இப்பெயர் பெற்றது. இதன்கண் பாயிரச் செய்யுள் ஒன்றும், நூல் செய்யுட்கள் நூறும் ஆக நூற்றொரு வெண்பாக்களும் உள்ளன. இது பெரிதும் சுக்ர ஸ்மிருதியிலிருந்து தொகுத்த ஆசாரங்களைக் கூறுவது. ஆகவே, இஃது ஆரியம் தழுவிய நூலாகும். இதன் ஆசிரியர் பெருவாயின் முள்ளியார்: இக் குறிப்புப் பாயிரச் செய்யுளால் அறியவருகிறது. மேலும், தௌமியர் பாண்டவர்கட்கு உபதேசித்த உபதேசங்களை ஒட்டி இந்நூல் விளங்குவதாக அறிஞர்கள் கருதுகின்றனர். “ஆரெயில் மூன்றும் அழித்தான் அடி ஏத்தி” என்னும் அடி நூலில் வருதலின் இந்நூலாசிரியர் சைவர் ஆதல் வேண்டும்.

இதில் காலை எழுதல், பெற்றோரை வணங்குதல், அரசன், ஆசிரியன், தமையன் ஆகியவரையும் தொழுதல், உண்பதற்கு முன் நீராடல், சொல்வதை விரைதல் இன்றிச்

சொல்லுதல், சொல்வதைச் சுருங்கச் சொல்லுதல் முதலான ஆசாரமாகக் கூறப்பட்டுள்ளன.

> "நன்றி அறிதல் பொறையுடைமை இன்சொல்லோ
> டின்னாத எவ்வுயிர்க்கும் செய்யாமை கல்வியோடு
> ஒப்புரவு ஆற்ற அறிதல் அறிவுடைமை
> நல்லினத் தாரோடு நட்டல் இவை எட்டும்
> சொல்லிய ஆசார வித்து."

14. பழமொழி: ஒவ்வொரு வெண்பாவிலும் ஒவ்வொரு பழமொழி அமைந்து, நானூறு பாடல்களைக் கொண்ட நூல் ஆதலின், இது பழமொழி என்ற பெயரைப் பெற்றது. பழமொழி நானூறு என்றும் இதனைக் கூறுவர். இதில் உள்ள பழமொழிகள் சில வரலாற்றுக் குறிப்பையும் கொண்டு விளங்குகின்றன. பல பழமொழிகள் இக்காலத்து வழக்கத்தில் காணப்படாதவை. இந்நூல் கல்வி, ஒழுக்கம், ஊக்கப்பாடு, ஊழ், அரசியல், இல்வாழ்க்கை முதலியனபற்றிப் பகுத்துக் கூறுகிறது. சில நச்சினார்க்கினியரால் எடுத்தாளப்பட்டுள்ளன. இந்நூற்பாடல்களில் காணப்படும் பழமொழிகள், "தனக்குக் கரியாவான் தான்," "கல்லாமல் பாகம்படும்", "அறிமடமும் சான்றோர்க்கணி," "முறைமைக்கு மூப்பு இளமை இல்" என்பன போன்றவைகள். பொற்கைப்பாண்டியன், கரிகால் சோழன், பாரி, பேகன், மனுநீதிகண்ட சோழன் வரலாற்றுக் குறிப்பினையும் இந் நூலில் காணலாம்.

'சுரம் போக்கிக் கூலி கொண்டார் இல்லை', 'மரம் போக்கிக் கூலி கொண்டார் இல்லை', 'பொருள் கொடுத்துக் கொள்ளார் இருள்,' என்பன போன்றவை அக்காலத்துப் பழமொழிகள். 'அயிலாலே போழ்ப அயில்' (Diamonds cut diamonds.), 'நிறை குடம் நீர் தளும்பல் இல்' (Empty vessels give the greatest sound.) 'திங்களை நாய் குரைத்தற்று' (The moon doesn't hear the barking of dogs.), 'தமக்கு மருத்துவர் தாம்'. (Every man is his doctor.), 'துளி ஈண்டில் வெள்ளம் தரும்.' (Drops of water make an ocean.) என்று இவ்வாறு திரு. செல்வகேசவராய முதலியார் ஆங்கிலப் பழமொழிகளை எடுத்துக் காட்டி யுள்ளனர். இந்நூலை எழுதியவர் முன்றுறை

அரையனார் என்பவர். அரையர் என்னும் சொல் அரசர் என்று பொருள்படும். முன்றுறை என்பது ஓர் ஊரின் பெயர். ஆக இவர் அரசராக இருக்கவேண்டும். இந்நூல் சிறப்புப் பாயிரத்தில், "பிண்டியின் நிழல் பெருமான் அடிவணங்கி", என்று இருப்பதால் இவர் சைன சமயத்தவர் ஆதல் தெரிகிறது.

"பொல்லாத சொல்லி மறைந்தொழுகும் பேதைதன்
சொல்லாலே தன்னைத் துயர்ப்படுக்கும்—நல்லாய்!
மணலுள் மூழ்கி மறைந்து கிடக்கும்
நுணலும்தன் வாயால் கெடும்."

15. சிறுபஞ்சமூலம்: மூலமாவது ஈண்டுவேர் எனும் பொருளது. பஞ்சமூலம் ஆவன ஐந்து வேர்கள். அவை கண்டங்கத்திரி வேர், சிறுவழுதுணை வேர், சிறு மல்லி வேர், பெருமல்லிவேர், நெருஞ்சிவேர் என்பன. இவ் வைந்தின் கூட்டுச்சரக்கு மருந்தாகப் பயன்பட்டு நோயைத் தீர்க்கும். அதுபோல இந்நூலில் அமைந்த வெண்பாக்களின் ஒவ்வொன்றிலும் ஐந்தைந்து அரிய நீதிகளை அடக்கி, மக்களுக்கு நீதி நெறிகளைப் புகட்டி, மக்களின் அறியாமையை நீக்கலின், இந்நூல் 'சிறு பஞ்சமூலம்' என்ற பெயரைப் பெற்றது. இதில் தற்சிறப்புப் பாயிரச் செய்யுள் ஒன்று, பாயிரச்செய்யுள் ஒன்று, நூல்செய்யுட்கள் நூற்று மூன்று ஆக நூற்றைந்து செய்யுட்கள் உள்ளன. இந்நூல் கொன்றுண்ணலைக் கண்டிக்கிறது. தானத்தால் போகம், தவத்தால் சுகம், ஞானத்தால் வீடு என்ற அரிய கருத்துக்களைப் போதிக்கிறது. இக்காலத்தில் தோல் கன்றைக் காட்டிப் பாலைக்கறக்கும் வழக்கமும் அக்காலத்தில் உண்டு போலும்! இக் குறிப்பு "தோல் கன்றைக் காட்டிக் கறவார்" என்னும் தொடரால் தெரிகிறது. பேதைக்கு எவ்வளவு உரைப்பினும் கேளான், வருவாய்க்குத்தக்க செலவு செய்தல், விருந்தோம்பல் முதலிய கருத்துக்களை இஃது எடுத்து இயம்புகிறது.

இதனைப் பாடியவர் தமிழ் ஆசிரியர் மகனார் காரி ஆசான் என்பவர். இவரைச் சமண சமயத்தினர் எனக்-கருதுகின்றனர். அதற்குச் சான்றாக "மூன்றொழித்து மூவாதான் பாதம் பழுதின்றி யாற்றப் பணிந்து" என்னும்

இந்நூல் பாயிர அடியைக்காட்டுவர். மூன்று ஒழித்து என்பதற்கு முப்புரங்களை எரித்து என்றும், மூவாதான் என்பதற்கு "மூத்தானை எல்லார்க்கும் முன்னே தோன்றி" எனவரும் தேவாரத்திற்கு இணங்கச் சிவபெருமான் என்றும் பொருள் தர இருத்தலின் இவர் சைவர் என்பதற்கும் இடன் உண்டு.

> "மயிர்வனப்பும் கண்கவரும் மார்பின் வனப்பும்
> உகிர்வனப்பும் காதின் வனப்பும்—செயிர்தீர்ந்த
> பல்லின் வனப்பும் வனப்பல்ல நூற்கியைந்த
> சொல்லின் வனப்பே வனப்பு."

16. இன்னிலை: இனிய நிலைகளை எடுத்து இயம்புவதால், இப்பெயர் தரப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது. திருக்குறள் முப்பாலைப் பகுத்துக் கூறி இருப்பவும், இந்நூல் அறப்பால், பொருட்பால், இன்பப்பால், வீட்டிலக்கப்பால் என நான்கு பிரிவினைக் கொண்டுள்ளது. இங்ஙனம் இந்நூலைத் தொகுத்துத் தந்தவர் மதுரை ஆசிரியர் பூதனார் என்பவர். இந்நான்கு பாலிலும் முறையே பத்து, ஒன்பது, பன்னிரண்டு, பதினான்கு வெண்பாக்களாக நாற்பத்தைந்து பாடல்களும், பாரதம் பாடிய பெருந்தேவனாரது கடவுள் வாழ்த்துச் செய்யுளும் சேர்க்க நாற்பத்தாறு பாடல்கள் உள. வீட்டிலக்கப்பால் இல்லற இயல் துறவற இயல் எனப் பிரித்திருப்பதை நோக்கின், வீட்டின்பம் எய்தற்குத் துறவறமே அன்றி, இல்லறமும் துணை செய்யும் என்ற கருத்தை வலியுறுத்தற்குப் போலும்!

இந்நூல் அறம், பொருள், இன்பம், வீடு என்ற பகுப்பினைக் கொண்டிருத்தல் கொண்டு, இந்நூற் நாற்பொருள் கருத்துக்கள் விரவிய நூல் என்பது நன்கு தெளிவாகின்றது. ஐம் பெருங்குரவரை ஓம்பல், தீய இனத்தை விட்டு விலகல், அடைக்கலம் புகுந்தவர்க்கு உணவளித்துக் காத்தல், வருந்துபவர் வருத்தத்தைப் போக்கல் கடமை என்பனவற்றை இந்நூல் வற்புறுத்துகின்றது.

இந்நூலின் பாடல்களை உரையாசிரியர்கள் எடுத்து ஆண்டுள்ளனர்.

இந்நூலைப் பாடியவர் பொய்கையார் என்பவர். இந்நூலின் முப்பதாவது பாடலில் "ஆக்கி அளித்து அழிக்கும் கந்தழியின் பேருருவே" என்ற தொடரைப் பார்க்கும் போது, இவர் சைவ சமயத்தவர் என்பது கருதப்படுகிறது. கந்தழி என்பது தீயைக் குறிக்கும். தீவண்ணனாக, தீவடிவினனாக இருப்பவன் சிவபெருமான். ஆகவே, கந்தழி இறைவனைக் குறித்தலின் சைவக் குறிப்பு அதன்கண் புலனாகிறது. இக்கருத்தைத் தொல்காப்பியர் பற்றிக் கூறப்பட்ட இடத்தில் விரிவாகக் காண்க. இவர்தாம் நாலாயிரப் பிரபந்தத்துள் முதல் திருவந்தாதியைப் பாடிய பொய்கையார் என்பாரும் உளர். ஆனால், இது மேலும் ஆய்தற்குரியது. ஏனெனில், பொய்கையார் என்ற பெயரில் பலர் இருந்துளர். களவழி பாடிய புலவரும் பொய்கையார் அல்லரோ! புறநானூற்றிலும் இப் பெயருடையார் பாடல்களும் உள அல்லவோ?

"ஒத்த உரிமையளா ஊடற் கினியளாக்
குற்றம் ஒரூஉம் குணத்தளாக்—கற்றறிஞர்ப்
பேணும் தகையளாக் கொண்கன் குறிப்பறிந்து
பேணும் தகையினாள் பெண்."

17. முதுமொழிக் காஞ்சி: இந் நூலில் காணப்படும் அடிகள் பெரிதும் ஒவ்வொரு பழமொழிபோலக் காணப்படும். காஞ்சி என்பது உலகத்தில் மக்கள் அடைய வேண்டிய அறம், பொருள், இன்பம் (வீடு இம்மையில் அறிதற்குரியது அன்று; ஆதலின் அதனைக் குறித்திலம்.) ஆகியவற்றை எடுத்து இயம்புதல் என்ற விளக்கத்தினையுடையது. இதனை

"பலர்புகழ் புலவர் பன்னின தெரியும்
உலகியல் பொருள்முடி புணரக் கூறின்று."

என்று விளக்கிக் கூறி இருத்தலின் அறிய வருகிறது. இதில் பத்துப் பிரிவுகள் உள்ளன. ஒவ்வொரு பிரிவும் பத்துப் பத்துப் பாடல்களால் அமைந்துள்ளது. அதனால் ஒவ்வொரு பிரிவும் பத்து என்னும் சொல்லியைந்து காணப்படுகிறது. சிறந்த பத்து, அறிவுப் பத்து, இல்லைப் பத்து என்ற தலைப்புக்களை இதில் காணலாம். ஒவ்வொரு பத்தின் முதல் பாடல் குறள்தாழிசை யாப்பிலும் ஏனையவை நூற்பா யாப்பினும் அமைந்துள்ளன.

இந்நூலை எழுதியவர் புலத்துறை முற்றிய கூடல்கிழார் என்பவர். கிழார் என்பவர் வேளாளர். ஆகவே, இவர் வேளாளர் என்பது தெரிகிறது. கூடல் என்பது மதுரை ஆதலின், இவர் மதுரைவாசி என்பதும் புலனாகிறது. புலத்துறையாவது அறிவுத்துறை. எனவே, இவர் அறிவுத்துறையில் முற்றியவராக இருந்திருக்கவேண்டும். அதனால் தான் புலத்துறை முற்றிய கூடல்கிழார் எனப்பட்டார். இவர் சேரமான் யானைக்கண் சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறையைப் பாடிய பாடல் புறநானூற்றில் உண்டு. இம்மன்னனது வேண்டுகோளை ஏற்று ஐங்குறுநூறு என்னும் நூலையும் தொகுத்துதவியவர். இதனால் இவர் கடைச்சங்க காலத்தவர் என்பதும் தெரிகிறது.

"சோரா நன்னட்பு உதவியின் அறிப."
"அறத்தாற்றின் ஈயாதது ஈகை அன்று."
"பொருள்நசை வேட்கையோன் முறைசெயல் பொய்."
"துன்பம் வெய்யோர்க்கு இன்பம் எளிது."
"தாம்மாணாதது வாழ்க்கை அன்று."
"இசையில் பெரியதோர் எச்சம் இல்லை."
"பேரில் பிறந்தமை ஈரத்தில் அறிப."

கல்வியைவிட ஒழுக்கமே சிறந்தது, அவாவே வறுமையாகும், கற்றதை மறத்தல் கூடாது, வாய்மையே சிறந்தது, கற்பொழுக்கமே மேன்மையானது, கற்றாரை வழிடுபதல் சிறப்புடையது என்பன போன்ற நீதிகளை இதில் காணலாம்.

18. ஏலாதி : ஏலம் முதலிய சரக்குகள் ஒன்று சேர்க்கப்பட்டுத் தூளாக்கிய பொருள் நோய் தீர்க்கும் மருந்தாகப் பயன்படும். அதுபோல இந்நூலில் அமைந்துள்ள வெண்பாக்களில் கூறப்பட்டுள்ள நீதிகள் மக்களின் அறியாமையாகிய நோயைப் போக்கி, ஒழுக்க முடையவராகச் செய்தலின் இப்பெயர் பெற்றது. ஏலாதி முதலியவைகள் ஏலம், இலவங்கப்பட்டை, தக்கோலம், மிளகு, திப்பிலி, சுக்கு ஆகிய ஆறு சரக்குகள். தக்கோலம் என்பதற்குப் பதிலாகச் சிறு நாவல் பூவைக் கூறுவதும் உண்டு. பெரிதும் இந்நூலில் வரும் பாடல்களில் ஆறு நீதிகள் அடங்கி இருக்கும். சிற்சில பாடல்களில் ஏழு நீதிகளும் உண்டு. கொல்லாமை, ஒண் பொருள் கொடுத்தல், இன்சொல் இயம்பல், ஊமையர்,

விதவையர், வாணிபத்தால் நட்ட முற்றவர், பொருளை இழந்தவர் ஆகியோர்க்கு உதவல் முதலிய அரிய நீதிகள் இந்நூலில் கூறப்பட்டுள்ளன. இந்நூலில் சிறப்புப் பாயிரச் செய்யுள் ஒன்று, கடவுள் வாழ்த்துச் செய்யுள் ஒன்று, நூற் செய்யுள் எண்பத்தொன்று ஆக எண்பத்து மூன்று செய்யுட்கள் உள.

இந்நூலைப் பாடியவர் மாக்காயனார் மகனார் கணிமேதாவியார். இவரே திணைமாலை நூற்றைம்பது என்னும் நூலையும் பாடியவர். வடமொழிப் புலமையும் உடையவர். இதனை இந்நூலில், கணவனுக்குப் பிறந்த மகனை ஔரதன், கணவன் இருக்க மற்றொருவனுக்குப் பிறந்தவன் கேசத்திரசன், மணமாகாத பெண்ணுக்குப் பிறந்தவன் கானீனன், விபசாரத்தில் பிறந்தவன் கூடன், விலைக்கு வாங்கப்பட்டவன் கிரீதன், கணவன் இறந்தபின் இரண்டாம் கணவனுக்குப் பிறந்தவன் பௌனற்பவன், சுவீகாரப் பிள்ளை தத்தன், மணமாகும் போதே கருவுற்றுப் பின் பிறந்தவன் சகோடன், கண்டெடுத்து வளர்க்கப்பட்டவன் கிருத்திரமன், மகள் வயிற்றுப் பிள்ளை புத்திரி, புத்திரன், பெற்றோர் கைவிடப் பட்டுப் பிறரால் வளர்க்கப்பட்டவன் அபலித்தன், காணிக்கைப் பொருளாக வந்தவன் கிருதன் என்று புத்திரர்களின் வகையினை விளக்கமுறக் கூறுவது கொண்டு அறியலாம்.

"கொலைபுரியான் கொல்லால் புலால்மயங்கான் கூர்த்த
அலைபுரியான் வஞ்சியான் யாதும்—நிலைதிரியான்
மண்ணவர்க்கும் அன்றி மதுமலி பூங்கோதாய்
விண்ணவர்க்கும் மேலாய் விடும்."

அரிய குறிப்பு :—பதினெண் கீழ்க்கணக்கு வகையினைச் சார்ந்த நூல்களுள் இன்னிலை என்பதைச் சேர்ப்பதா, கைந்நிலை என்பதைச் சேர்ப்பதா என்ற ஐயம் புலவர்களிடையே உண்டு. இதனால் ஒரு சிலர் இன்னிலை என்னும் நூலைச் சேர்த்தும், மற்றும் ஒரு சாரார் கைந்நிலை என்னும் நூலைச் சேர்த்தும், பதினெண் கீழ்க்கணக்கு நூலைச் சரிகட்டியுள்ளனர். இவ்வாறான ஐயத்திற்கு இடனாக உள்ளவை,

"இன்னிலைசொல் காஞ்சியுடன் ஏலாதி என்பவே
கைந்நிலைய வாம்கீழ்க் கணக்கு."

என்னும் அடிகள். இவ்வடிகளில் இன்னிலை என்னும் பெயரும், கைந்நிலை என்னும் பெயரும் ஆக இரண்டும் காணப்படுகின்றன. இப்பெயர்கள் அமைந்த இரு நூல்களும் உள்ளன. இன்னிலை என்னும் நூலை நீக்க விரும்புவார், முதுமொழிக் காஞ்சியின் சிறப்பினை விளக்க இனிய நிலைகளைச் சொல்லுகின்ற என்ற பொருள் தரும் தொடராக நின்று காஞ்சியைச் சிறப்பிக்கின்றது எனக்கூறி இன்னிலை என்பதனைக் காஞ்சிக்கு அடை ஆக்குவர். கைந்நிலையை நீக்க விரும்புவோர் கீழ்க்கணக்கு என்னும் தொடர்க்கு கைந்நிலை அடைமொழி ஆகும் என்பர். அதுபோது ஒழுக்க நிலைகளைக் கூறுவனவாகிய கீழ்க்கணக்கு நூற்கள் என்று கைந்நிலைக்குப் பொருள் கூறுவர். ஆனால், பதினென் கீழ்க்கணக்கு நூல்கள் இன்னின்ன என்று கூறும்,

> *"நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப்*
> *பால்கடுகம் கோவை பழமொழி மாமூலம்*
> *இன்னிலைசொல் காஞ்சியுடன் ஏலாதி என்பவே*
> *கைந்நிலைய வாம்கீழ்க் கணக்கு."*

என்னும் பாடலை ஆயும் போது, இந்நிலைதான் பதினெண்கீழ்க்கணக்கு வரிசையில் சேர்க்கவேண்டும் என்பது நூற்பெயர்களை வரிசையாகச் சொல்லி, "என்பவே" என்று முடித்துப் பின், "கைந்நிலையவாம் கீழ்க்கணக்கு" என்று பாடி அமைத்து இருப்பதிலிருந்து அறியலாம்.

மேலும், மேலே காட்டியுள்ள பாடலில் 'ஐந்திணைகளைப் பற்றிப் பாடியுள்ள நூற்களை ஒன்று கூட்டி அவை ஐந்திணை எனச் சுட்டி அவற்றில் அடக்கி இருப்பர். ஏனெனில் கைந்நிலை என்னும் நூலும், ஐந்திணைகளையே பாடும் நூலாதலின் என்க. ஐந்திணை நூல்கள் ஐம்பது, எழுபது, நூற்றைம்பது என்ற எண்ணிக்கையினைப் பெற்றிருப்பது போல, அறுபது பாடல்களை இதுவும் பெற்றிருப்பதாக அறிகிறோம். இங்ஙனம் இருந்தும், ஐந்திணையில் சேர்க்காது இருத்தல் கொண்டே கைந்நிலை என்பது பதினெண்கீழ்க்கணக்கு நூலில் சேராமை காண்க. 'என்றாலும், அந்நூலைப் பற்றி அறிந்து கொள்ளுதல் தவறு ஆகாது. ஆதலின் அதனைப்பற்றிய குறிப்புக்களையும் உணர்ந்து கொள்வோமாக.

கைந்நிலை : கைந்நிலை என்னும் பெயரிய நூலில் ஐவகைத் திணைகட்கும் தனித்தனிப் பன்னிரண்டு வெண்பாக்களாக அறுபது வெண்பாக்கள் இருத்தலைக் காணலாம். கை என்பது ஒழுக்கம் என்னும் பொருளது. ஐந்திணை ஒழுக்கங்களைக் கைந்நிலை கூறுதலின் இப்பெயர் பெற்றது போலும். இப்பாடல்களுள் சில சிதைந்து போயின. இதனை ஐந்திணை அறுபது என்று கூறுதற்குரிய நிலையிலும் இஃது உளது.

இந் நூலைப்பாடிய புலவர் புல்லங்கடனார் என்பவர். இவரை முழுப்பெயரால் கூறுங்கால், இவரது தந்தையார் பெயரைச் சார்த்தியும் ஊரைச் சேர்த்தும் மாறோகத்து முள்ளிநாட்டு நல்லூர்க்காவிதியார் மகனார் புல்லங்கடனார் எனப்படுவார்.

> *"பொன்னிணர் வேங்கைப் புனம்சூழ் மலைநாடன்*
> *மின்னின் அனைய வேல்ஏந்தி இரவினில்*
> *இன்னே வரும்கண்டாய் தோழி இடையாமத்து*
> *என்னை இமைபொரு மாறு."*

காவியங்கள்
Kaviyams

இரட்டைக் காவியங்கள்
Twin Epics—Silappathikaram and Manimegalai Their forms and Messages

செந்தமிழ் மொழியில் காவியங்கள் என்ற வரிசையில் சில உள. அவற்றுள் சிறப்பாகக் கூறப்படுவன பத்து. அவற்றை இரு பிரிவாகப் பிரித்து ஐம்பெருங் காப்பியம், ஐஞ்சிறு காப்பியம் என்று கூறுவர். ஐம்பெருங்காப்பியங்கள் சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை. வளையாபதி, குண்டலகேசி என்பன.

இவற்றுள் சிலம்பும் மேகலையும் காலத்தால் முந்தியன வாயினும், சிந்தாமணி முதற்கண் வைத்துக் கூறப்படுதலின் நோக்கம், அந்நூலின் சிறப்புக் கருதிப் போலும்.

'நன்னூலில் தன்மையால் பெயர் பெற்றமைக்குச் சிந்தாமணியை உவமை காட்டியுள்ளனர். இவ்வைம் பெருங்காப்பியங்களுள் பின்னைய இரண்டும், முழுநூல் வடிவில் இதுபோது இல்லை. இவற்றின் சிற்சில பாடல்களை உரையாசிரியர்கள் மேற்கோளாகக் காட்டி இருத்தலின், இத்தகைய நூல்கள் இருந்தன என்பது உறுதி ஆகிறது. ஐஞ்சிறு காப்பியங்கள், உதயணகுமாரன் காவியம், நாககுமார காவியம், யசோதர காவியம், சூடாமணி, நீலகேசி என்பன. இனி இவற்றைப் பற்றிச் சிறிது காண்போமாக.

ஈண்டு ஒரு குறிப்பினை உணர்தல் நல்லது. பாடதிட்டத்தின் முதற்கண் சிலப்பதிகாரம், மணிமேகலை என்னும் இரு காவியங்களைப் பற்றிக் குறிக்கப்பட்டுள்ளது. இவையே ஈண்டு இரட்டைக் காவியங்கள் எனப்பட்டன. கோவலனது வாழ்க்கைத் துணைவி கண்ணகி. அவனது காமக்கிழத்தி மாதவி. அவளது மகள் மணிமேகலை. கோவலனது வரலாற்றைக் கூறுவது சிலப்பதிகாரம். அவன் மகளது வரலாற்றைக் கூறுவது மணிமேகலை. இவ்விரு வரலாற்றுத் தொடர்பு பற்றி இவற்றை இரட்டைக் காவியம் என்பர்.

பொதுவாகக் காவியங்கள் என்று கூற வரும்போது, ஐம்பெருங் காவியங்கள் என்றும், ஐஞ்சிறு காப்பியங்கள் என்றும் கூறப்படுகின்றன. ஆதலின், அக்காவியங்கள் அனைத்தையும் பற்றி ஈண்டே கூறிவிடுவது நல்லதாகும் என்று எண்ணியே ஈண்டு அவற்றைப் பற்றிய குறிப்புக்களும் எழுதப்பட்டுள்ளன. இதனால் இவை அனைத்தும் சங்க காலத்தை ஒட்டிய இலக்கியங்கள் என்று கருத வேண்டா. சிலம்பும், மேகலையும் தவிர்த்து ஏனையவை சங்க காலத்தை ஒட்டிய இலக்கியங்கள் அல்ல.

பெருங்காப்பியத்தினைப் பற்றி இலக்கணம் கூறும்போது,

"பெருங்காப் பியநிலை பேசுங் காலை
வாழ்த்து வணக்கம் வருபொருள் இவற்றின்ஒன்று
ஏற்புடைத் தாகி முன்வர இயன்று
நாற்பொருள் பயக்கும் நடைநெறித் தாகி
கற்றோர் புனையும் பெற்றிய தென்ப."

என்று தண்டி அலங்காரம் கூறுகிறது. அதே நூலில் மற்றொரு நூற்பா "அறமுதல் நான்கினும் குறைபாடுடையது,காப்பியம் என்று கருதப்படு"மென்று குறிக்கப்பட்டுள்ளது. ஈண்டும் காப்பிய இலக்கணமே கூறப்பட்டுள்ளதே அன்றிச் சிறு காப்பியத்திற்கு இலக்கணம் கூறப்பட்டதாகத் தெரிந்திலது. ஆனால், பெருங் காப்பிய இலக்கணம் கூறும்போது "நாற்பொருள் பயக்கும் நடை நெறித்தாகி" என்று கூறி, ஈண்டு "அறமுதல் நான்கினும் குறைபாடுடையது" என்று கூறிய குறிப்பினுல், இவ்வாறு வருவது சிறு காப்பியம் இலக்கணம் என்று கருதி விட்டனர் போலும்! இவ்விலக்கணங்களோடு பார்க்கும்போது, குண்டலகேசி, நீலகேசி ஆகிய நூல்கள் மதவாத நூல்கள் ஆதலின், இவை வேண்டுமானுல் சிறு காப்பிய வகையைச் சார்ந்தன எனக் கூறலாம். ஏனையவை பெருங்காப்பியங்களே என்று கோடலில் இழுக்கில்லை. சிறு காப்பியத் தொகுதியில் வரும் யசோதர காவியம், நாககுமார காவியம், உதயணகுமார காவியம் என்னும் நூல்கள் காவியம் என்ற பெயராலேயே வழங்கப்பட்டு வருதலைக் காண்க. இனி ஒவ்வொன்றையும் பற்றி அறிவோமாக.

சிலப்பதிகாரம்: சிலம்பினை முதன்மையாக வைத்து இந்நூல் செய்யப்பட்டமையின், இப் பெயர் பெற்றது. இந்நூலாசிரியர் இளங்கோ அடிகளார். இவர் நெடுஞ்சேரலாதன் திருமகனுர் ஆவர். இவரது தமையன் செங்குட்டுவன். சோதிடன் இளங்கோவுக்கே அரசு புரியும் இலக்கணம் இருக்கிறது என்றதை அறிந்து, "மூத்தவன் இருக்கத் தாம் அரசு ஏற்கத் தக்கதன்று" என்று துறவு பூண்டனர். அதன்பின்பே இவர் 'இளங்கோ அடிகளார்' என்று அழைக்கப்படுவராயினர்.

இளங்கோ அடிகளார் சமயத்தைப் பற்றிக் கருத்து வேற்றுமைகள் உண்டு. இவரைச் சமண முனிவர் என்பர். அடிகள் என்ற பெயர் சமணத் துறவிகளைக் குறிக்கும் என்பர். மேலும் இக்கொள்கையினை வலியுறுத்த வருபவர், கோவலன் மதுரை நோக்கிப் புறப்பட்டபோது இடையில் வழித்துணையாகவந்து அறிவுரை கூறினவர்கள், சமணப் பெரியார்கள் என்பதைக் காட்டுவர். மற்றும்

கவுந்தி அடிகள் வாயிலாகப் பல சமணக் கருத்துக்களை அடிகள் மொழிந்திருப்பதாலும் இது வலியுறும் என்பர்.

இளங்கோ அடிகள் சைவ சமயத்தவர் என்பதற்குரிய சான்றுகளையும் இந்நூலில் காணலாம். இளங்கோ அடிகளார் கோவில்களைப் பற்றியும், தெய்வங்களைப் பற்றியும் கூற வரும் போதெல்லாம் சிவபெருமானுக்கே முதல் இடம் தந்து மொழிந்துள்ளார். சிவபெருமான் ஒருவனே இறைவன் என்பதை "நுதல் விழி நாட்டத்து இறை-யோன்" என்றும், மக்களைப் போலத் தெய்வங்களைப் போலப் பிறவாதவன் என்பதை "பிறவா யாக்கைப் பெரியோன்" என்றும் கூறிச் செல்கின்றார். இவரது தமையனும், தந்தையும் சைவசமயத்தினர் என்பதை இவரே நன்கு உணர்த்தியுள்ளனர். அவர்கள் மரபில் வந்த இவர் சைவர் என்று கொள்வதில் தடை இராது. இவர் சைவரோ, சைனரோ என்றாலும், சமயப் பொறையுடையார். திருமாலைப் பற்றிப் புகழும்போதும் சிறப்பாகவே பாடியுள்-ளார். "திருமால்சீர் கேளாத செவியென்ன் செவியே, நாராயணா என்னாநா என்ன நாவே" என்ற அடிகளைக் காண்க.

இவரது காலம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டே ஆகும். செங்குட்டுவன் கண்ணகிக்குக் கோவில் எடுத்து விழாக் கொண்டாடியபோது, இலங்கையினின்று கயவாகு என்னும் மன்னனும் வந்தனன் என்பதை இவரே, "கடல்சூழ் இலங்கைக் கயவாகு வேந்தனும் நன்னாள் செய்த நாளணி வேள்வியும்" என்று கூறியுள்ளார். அவ் வேந்தனது ஆட்சி கி. பி. 2-ஆம் நூற்றாண்டென இலங்கை சரித்திரமாம் மகாவம்சம் கூறுகிறது. கயவாகு தன் நாட்டிலும் கண்ணகிக்கு விழா எடுத்ததை இந்நூற்பதிகம் "கடல்சூழ் இலங்கைக் கயவாகு என்பான், நங்கைக்கு நாள் பலிபீடிகை கோட்டம் முந்துறுத்து ஆங்கு அரந்தை கெடுத்து வரந்தரும் இவள் என, ஆடித்திங்கள் பன்முறை எடுப்ப மழை வீற்றி-ருந்து வளம் பல பெருகிப் பிழையா விளையுள் நாடாயிற்று" என்று கூறுவதையும் ஈண்டுக் காண்க.

சிலப்பதிகாரம் முத்தமிழ்க்கோர் உறைவிடம். தமிழ் இசைக்குறிப்பும், நாடகக்கலை நுட்பமும் பெரிதும் அறிய

இது பெருந்துணையாகும். அதனால் இதனை முத்தமிழ்க் காவியம் என்பர். இதில் உரை நடையும் கலந்திருத்தலின், இதனை உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் என்பர்.

புகார்க் காண்டத்தில் இன்பச் சுவையும், மதுரைக் காண்டத்தில் அவலச் சுவையும், வஞ்சிக் காண்டத்தில் வீரச்சுவையும் மிளிர்கின்றன. மூவேந்தர்க்கும் உரியது இந்நூல் என்பதைக் காட்டவே, இங்ஙனம் மூன்று காண்டங்களாக அமைந்துள்ளது. இதில் முப்பது கதைகள் உள.

கோவலன் மாசாத்துவன் மகன். கண்ணகி மாநாய்க்கன் மகள். இருவருக்கும் திருமணம் நடந்தது. கோவலன் மாதவி என்பாளது மையலில் ஈடுபட்டுப் பொருள் அனைத்தையும் இழந்தான். அப்பொருளை மீண்டும் தேடத் தன் மனைவியின் காற்சிலம்பை விற்று வாணிபம் புரிய மதுரை அடைந்தான். மதுரை மன்னனும் நெடுஞ்செழியன் மனைவியின் காற்சிலம்பைத் திருடிய பொற்கொல்லன், தான் தப்பித்துக்கொள்ளச் சிலம்புடன் வந்த கோவலனே சிலம்பைத் திருடியவன் என்று கூற, அக்குற்றத்திற்காகக் கோவலன் கொலை செய்யப்பட்டான். இதனை அறிந்த கண்ணகி பாண்டியனை நேரில் கண்டு, தன் சிலம்பை உடைத்து, அதில் உள்ள மாணிக்கப் பரல்களைக் காட்டிக் கோவலன் கையில் இருந்தது தன் சிலம்பே என்று நிலைநாட்டி அநியாயமாகக் கொன்ற மன்னனது மாநகரை தீக்கு இரை ஆக்கினாள். மன்னனும் ஆராயாது கோவலனைக் கொன்றது பற்றி உயிர்விட்டனன். அவன் மனைவியும் உயிர் விட்டனள். பிறகு கண்ணகி சேர நாடு சென்று வேங்கை மரத்தடியில் நின்று விண்ணுலகம் சென்றாள். இச்செய்தியை அறிந்த சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்குக் கோவில் அமைத்து விழாக் கொண்டாடினான். கண்ணகியும் தெய்வவடிவில் வந்து மன்னனையும், மற்றையோரையும் வாழ்த்தி மறைந்தாள். இதுவே சிலப்பதிகார வரலாற்றுச் சுருக்கம்.

சிலப்பதிகாரத்தால் நாம் அறியும் கருத்துக்கள் பல உள்ளன. இந்நூல் அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும், உரை சால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர், ஊழ்வினை உறுத்துவந்து ஊட்டும் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு எழுந்தது. இந்நூல் முழுவதுமே

வினைப்பயனை நன்கு வற்புறுத்திச் செல்கிறது என்றும் கூறலாம். இதனைப் பல எடுத்துக்காட்டால் நன்கு தெளியலாம். கோவலன் மாதவியைத் மணந்தமைக்குக் காரணம் காட்டுகையில், "யாழிசையே வைத்துத் தன் ஊழ்வினை வந்துறுத்தது ஆதலின், உலவுற்ற திங்கள் முகத்தாளைக் கவ்வுக் கைநெகிழ்ந்தனனாகி" என்றும், பாண்டியன் கோவலனைக் கொன்று சிலம்பு கொணர்க என்று கூறினமைக்கும் காரணம் "வினைவிளை காலம் ஆதலின், யாவதும் கனை அலர் வேம்பன் தேரானாகி" என்றும், கண்ணகி தன் வழக்கைக் கூறும்போது, "ஊழ்வினை துரப்பவந்து கொலைக்களப்பட்ட கோவலன்" என்றும் "உம்மை வினைவந்து உறுத்த காலைச் செம்மையிலோர்க்குச் செய்தவம் உதவாது" என்று மதுராபுரித் தெய்வம் கண்ணகிக்குக் கூறியதும் காண்க.

அரசனது பொறுப்பு மிகுதி என்பதை,

"மழைவளம் கரப்பின் வான்பேர் அச்சம்
பிழைப்புயிர் எய்தில் பெரும்பேர் அச்சம்
குடிபுர வுண்டும் கொடுங்கோல் அஞ்சி
மன்பதை காக்கும் நன்குடிப் பிறத்தல்
துன்பம் அல்லது தொழுதகவில்."

என்ற அடிகளில் காணலாம். நல்ல கற்புடைய பெண்கள் கணவன் இறந்தபோது அவனுடன் உயிர்விடுவர் என் பதனைக் "கணவனை இழந்தோர்க்குக் காட்டுவது இல்லென்று இணையடி தொழுது வீழ்ந்தனள்." என்பதால் அறியலாம். பாண்டியன் இறந்தபோது இங்ஙனம் உயிர் விட்ட பாண்டிமா தேவியின் இறப்பைக் கூறவந்தபோது ஆசிரியர்,

"மன்னவன் செல்விழிச் செல்க யான்என
தன்னுயிர் கொண்டவன் உயிர்தேடி னள்போல்
பெருங்கோப் பெண்டு உயிருடன் மாய்ந்தனள்."

என்று குறிப்பிட்டுள்ளனர்.

பாண்டியவன் தன் தவற்றை உணர்ந்தமையால்தான் உயிரை விட்டுச் செங்கோலை நிலைநாட்டினான் என்பதை,

“வல்வினை வளைத்த கோலை மன்னவன்
செல்லுயிர் நிமிர்த்துச் செங்கோல் ஆக்கியது.”

என்றும் கூறியுள்ளனர். மூவேந்தர்களும் இமயத்தில் தம்தம் கொடி நாட்டி வடவரை வென்று வெற்றி கண்டவர் என்பது, “கயல் எழுதிய இமய நெற்றியின் அயல் எழுதிய புலியும் வில்லும்” என்ற தொடரால் புலனாகிறது. இக்காலத்தில் வீரர்கட்குப் பொன்தோடு (Medal) ஈந்து பாராட்டுதலைக் காண்கின்றோம். இந்நிகழ்ச்சி தமிழ்நாட்டிலும் உண்டு. இதனைச் சிலம்பில்

“புறம்பெற வந்த போர்வாள் மறவர்
வருக தாம்என வானகப் பொலந்தோடு
பெருநாள் அமயம் பிறக்கிடக் கொடுத்தான்.”

என இயம்பப்பட்டிருக்கிறது.

கண்ணகி இல்லம் தணந்து வெளியில் செல்லாதவளாய், இளையளாய் இருந்தாள் என்பதை “வண்ணச்சீறடி நிலமகள் அறிந்திலள்” என்றும், “முதிராக்கிளவியின் முள் எயிறு இலங்க மதுரைமூதூர் யாதென வினவினாள்” என்றும் அறிவித்தல் மூலம் அறியலாம். என்றாலும், கண்ணகி கற்புடையவள் ஆதலின், தன் துயர் காணாத் தகைசால் பூங்கொடியினாள். இவளை மன்மதன் கோவிலில் சென்று வணங்குமாறு தன் தோழி கூறியபோது சுருக்கமாக, “அது பீடு அன்று” என்று கூறியதனாலும் தெரிகிறது.

மறத்திலும் அறமே திகழ்தல் வேண்டும் என்ற கருத்தைச் சிலம்பு, கண்ணகி சினம் கொண்டு நகரை எரிக்க முற்பட்டபோது “பார்ப்பார், அறவோர், பசுபத்தினிப் பெண்டிர், மூத்தோர், குழவிஎனும் இவரைக் கைவிட்டுத் தீத்திறத்தார் பக்கமே சேர்க” என்று கூறியிருப்பதால் தெரிகிறது.

வரலாற்றுச் செய்திகட்கு இடனாய் இருப்பது சிலம்பு. நாட்டின் எல்லையைக் கூறும்போது “நெடியோன் குன்றமும் தொடியோள் பௌவமும் தமிழ் வரம் பறுத்த தண்புனல் நாடு” என்றும், நாடுகள் பலவற்றைக் கடல் கொண்டது என்பதை, “பஃறுளி ஆற்றுடன் பன்மலை அடுக்கத்துக்குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள” என்றும் கூறு-

மாற்றுல் அறியலாம். ஆடையின் மென்மையினையும். வேலைத்திறனையும் கூறும்போது,

"நூலினும், மயிரினும் நுழைநூல் பட்டினும்
பால்வகை தெரியாப் பன்னூல் அடுக்கத்து
நறுமடி செறிந்த அறுவை வீதி."

என்கிறது சிலம்பு.

தமிழ் மறைகள் இருந்தன என்பதை, "வண்தமிழ் மறையோற்கு" என்னும் சிலம்பு அடியால் அறிகிறோம். இங்ஙனம் பல அரிய கருத்துக்களை இந்நூலில் காணலாம். இறுதியில் இந்நூலில் மக்கட்குக் கூறியுள்ள அரிய அறிவுரைகளைக் காண்மின் :

"தெரிவுறக் கேட்ட திருத்தகு நல்லீர்
பரிவும் இடுக்கணும் பாங்குற நீங்குமின்
தெய்வம் தெளிமின் தெளிந்தார்ப் பேணுமின்
பொய்யுரை அஞ்சுமின் புறம்சொல் போற்றுமின்
ஊன்ஊண் துறமின் உயிர்க்கொலை நீங்குமின்
தானம் செய்ம்மின் தவம்பல தாங்குமின்
செய்ந்நன்றி கொல்லன்மின் தீநட்பு இகழ்மின்
பொய்க்கரி போகன்மின் பொருள்மொழி நீங்கல்மின்
அறவோர் அவைக்களம் அகலா தணுகுமின்
பிறவோர் அவைக்களம் பிழைத்துப் பெயர்மின்
பிறர்மனை அஞ்சுமின் பிழைஉயிர் ஓம்புமின்
அறமனை காமின் அல்லவை கடிமின்
கள்ளும் களவும் காமமும் பொய்யும்
வெள்ளைக் கோட்டியும் விரகினில் ஒழிமின்
இளமையும் செல்வமும் யாக்கையும் நிலையா
உளநாள் வரையாது ஒல்வது ஒழியாது
செல்லும் தேஎத்துக் குறுதுணை தேடுமின்
மல்லன்மா ஞாலத்து வாழ்வீர்."

மணிமேகலை : இந்நூலைப்பாடிய பெருந்தகையார் சீத்தலைச்சாத்தனார். இவர் புலவரும், வணிகரும் ஆவார். இவர் சீத்தலை என்ற ஊரில் பிறந்ததனாலும், மதுரையில் கூலமாகிய தான்ய வாணிபம் செய்ததனாலும் மதுரைக்

கூலவாணிப சீத்தலைச் சாத்தனார் எனப்பட்டார். இவர் தவறுடைய பாடல்களைக் கேட்ட போதெல்லாம் தம் எழுத்தாணியால் தலையில் குத்திக் கொண்டதன் காரண-மாகச் சீழ் ஒழுகியதால், சீத்தலைச் சாத்தனார் எனப்பட்டார் என்றும், அத்தலைக்குத்தும், குறட்பாவைக் கேட்டபின் தீர்ந்ததென்றும் மருத்துவன் தாமோதரனார் பாடலால் அறிகிறோம்.

இவரது பாடல்கள் நற்றிணை, குறுந்தொகை, அக நானூறு, புற நானூறு, திருவள்ளுவ மாலையில் உள்ளன. காவியமாக உள்ள நூல் மணிமேகலை. மணிமேகலை துறவு என்னும் இதனைக் கூறுவர். இது முப்பது காதைகளைக்-கொண்டது. இந்நூலில் பல பாலிமொழிகளும், வட-மொழிகளும் மலிந்து கிடப்பதால், இதனைச் சங்ககாலப் புலவராம் சீத்தலைச் சாத்தனாரினும் வேறு ஒரு சாத்தனார் பாடினார் என்ற கருத்தும் உண்டு. ஆனால், சிலப்பதிகாரத் தொடர்பும், இளங்கோ அடிகளார் நட்பும் இப்புலவர்க்கு இருந்ததால், இதுவும் சங்க காலத்தை ஒட்டிய நூலே ஆகும். மேலும், சீத்தலைச் சாத்தனார் இளங்கோ அடிகளார் தமையனை சேரன், செங்குட்டுவனுடன் இருந்-தனர் என்பதைச் சிலம்பில் "தண்டமிழ் ஆசான் சாத்தன் இஃது உரைக்கும்" என்ற தொடரால் விளக்கியுள்ளனர்.

இவர் செங்குட்டுவனைக் கொண்டு கண்ணகிக்குக் கோவில் எடுக்கத் துணையாக இருந்தவர். சிலப்பதிகாரத்தை இளங்கோ அடிகளார் வாயிலாக எழுதச் செய்தவர். இவர் பௌத்த மதச் சார்புடையவர்.

இவரது காலம் இளங்கோ அடிகளார் காலமே. இரு வரும் நட்பினராய் இருந்தனர் என்பது இவர்கள் நூல் வழி நாம் அறிகிறோம்.

மணிமேகலை என்பவள் கோவலனுக்கும் மாதவிக்கும் பிறந்தவள். அவள் பெயரால் இந்நூல் இப்பெயர் பெற்றது. இவள் துறவு பூண்டதால் இந்நூல், மணிமேகலை துறவு என்றும் கூறப்பெறும்.

மணிமேகலையால் அறியப்படும் செய்திகள் பல. புத்தர் பாத மங்கயமலையில் அற உபதேசம் செய்தார். இதனை

" ஆதிமுதல்வர் அறவாழி ஆள்வோன்
மாதுயர் எவ்வம் மக்களை நீக்கி
விலங்கும் தம்முள் வெரூஉப் பகைநீக்கி
உடங்குயிர் வாழ்க என்றுள்ளம் கசிந்தே
தோன்றுகா லத்து நின்றறம் உரைத்த
குன்றம் "

என்ற அடிகள் அறிவிக்கும். புத்தர் பாத படிவங்கள் காவிரிப்பூம்பட்டினத்து! உவவனத்திலும், இலங்கையில் உள்ள ஆடம்ஸ் பீக்மலையின் மீதும் இருந்தன என்பதை,

" அருளும் அன்பும் ஆருயிர் ஓம்பும்
ஒருபெரும் பூட்கையும் ஒழியா நோன்பின்
பகவன தாணையில் பன்மரம் பூக்கும்
உவவனம் என்பது ஒன்று உண்டு அதனுள்,
தாமரைப் பீடிகைதான் உண்டு "

என்றும், " இரத்தினத்தீவத்து ஓங்குயர் சமந்தத்து உச்சி-மீமிசை அறவியன் கிழவோன் அடியிணை " என்றும் கூறுதல் காண்க. இரத்தினத் தீவம்—இலங்கை, சமந்தம்—ஆடம்ஸ்-மலை. மணிமேகலை பரத்தையர் குலப்பெண்ணாயினும், துறவு பூண்டு தூயவளாகத் திகழ்ந்தனள். மாதவி கோவலன் காதற் கிழத்தி. அவள் தன் கணவன் இறந்ததும் தானும் தன் மகளும் புத்தமதத்தில் சேர்ந்து விடுகின்றனர். என்றாலும் உதயகுமரன் என்னும் அரச மகன், மணிமேகலையைக் காதலித்தான். இங்கிலையில் மணி மேகலா தெய்வம் இவளை மணிபல்லவத்திற்குக் கொண்டு செல்கிறது. அங்கு இவள் பழம்பிறப்பை அறிகிருள். அமுதசுரபி என்னும் பாத்திரம் பெறுகிருள். பின்னர்த் தன் தாயைக் கண்டு, அட்சயபாத்திரம் கொண்டு காணர், கேளார், முடவர் ஆகியோர்க்கு அன்னம் அளித்து வந்தாள். உதயகுமாரன் மீண்டும் அவளைத் தொடர்ந்தபோது, காயசண்டிகை என்பாள் வடிவுடன் சென்றனள். அங்ஙனம் சென்ற போதும் உதயகுமரன் தொடர்தலைக்கண்ட உண்மையான காய சண்டிகையின் கணவன், தன் மனைவியை அரசகுமாரன் தொடர்கின்ருன் என எண்ணி, அவனைக் கொன்றுவிடத் தன் மகன் இறக்க மணிமேகலை காரணம் என்று அவளை உதயகுமரன் தந்தை சிறைப்படுத்-

தினான். அச்சிறைச் சாலையை அறச்சாலை ஆக்கினாள் மணிமேகலை. இவள் மாண்பை உணர்ந்த அரசமா தேவி விடுதலை செய்யப் பின்பு அறவண அடிகளை அடைந்து, ஞான நெறி அறிந்து தவக்கோலம் பூண்டு வாழ்ந்தாள்.

மணிப் பல்லவத்தில் புத்த பீடிகை உண்டு என்பதும் அதனை வணங்குவோர் பழம் பிறப்பு அறிவர் என்பதும்,

"மணிப்பல் லவத்தில் என்னை யாங்குய்த்துப்
பிணிப்பறு மாதவன் பீடிகை காட்டி
என்பிறப் புணர்ந்த என்முன் தோன்றி"

என்ற அடிகள் உணர்த்துகின்றன.

புத்த தருமங்கள் பல இதில் உள.

"பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம்
பிறவார் உறுவது பெரும்பேர் இன்பம்
பற்றின் வருவது முன்னது பின்னது
அற்றோர் உறுவது."

"துன்பம் தோற்றம் பற்றே காரணம்
இன்பம் வீடே பற்றிலி காரணம்."

"கலங்களூர்த் தீவினை கடிமின் கடிந்தால்
தேவரும் மக்களும் பிரமரும் ஆகுதிர்
ஆதலின் நல்வினை அயரா தோம்புமின்."

"குலவிய குற்ற மெனக் கூறப் படுமே
அவாவே பற்றே பேதைமை என்றிவை."

"தீவினை என்பது யாதென வினவின்
ஆய்தொடி நல்லாய் ஆங்கது கேளாய்
கொலையே களவே காமத் தீவிழை
உலையா உடம்பில் தோன்றுவ மூன்றும்.
பொய்யே குறளை கடுஞ்சொல் பயனில்
சொல்லெனச் சொல்லில் தோன்றுவ நான்கும்
வெஃகல் வெகுளல் பொல்லாக் காட்சிஎன்
றுள்ளம் தன்னில் உருப்பன மூன்றும்"

எனப் பத்து.

உடம்பின் தன்மை எத்தகையது என்பதை,

“வினையின் வந்தது வினைக்கு விளைவாவது
புனைவன நீங்கில் புலால் புறந்திடுவது
மூப்புவிளி வுடையது தீப்பிணி இருக்கை
பற்றின் பற்றிடம் குற்றக் கொள்கலம்
புற்றடங் கரவின் செற்றச் சேக்கை
அவலக் கவலை கையா றழுங்கல்
தவலா உள்ளம் தன்பால் உடையது
மக்கள் யாக்கை இது.”

இயமன் உயிர்களைக் கொண்டு போதல் உண்மை. ஆதலின், அறம் செய்வதே கடன் என்பதை,

“தவத்துறை மாக்கள் மிகப்பெருஞ் செல்வர்
ஈற்றிளம் பெண்டிர் ஆற்றுப் பாலகர்
முதியோர் என்னுன் இளையோர் என்னுன்
கொடுந்தொழி லாளன் கொன்றனன் குவிப்ப
அழல்வாய்ச் சுடலை தின்னக் கண்டும்
கழிபெருஞ் செல்வக் கள்ளாட் டயர்ந்து
மிக்க நல்லறம் விரும்பாது வாழும்
மக்களில் சிறந்த மடவோர் உண்டோ.”

என்ற அடிகளில் காண்க.

அரசர் செங்கோல் தவறின் நிகழும் நிகழ்ச்சிகளை,

“கோள்நிலை திரிந்திடில் கோன்நிலை திரியும்
கோன்நிலை திரிந்திடில் மாரிவளங் குன்றும்
மாரிவளம் குன்றின் மன்னுயிர் இல்லை
மன்னுயிர் எல்லாம் மண்ணுள் வேந்தன்
தன்னுயிர் என்னும் தகுதி இன்றாகும்.”

என்று கூறுதல் அறிக.

பசியின் கொடுமையினை,

“குடிப்பிறப் பழிக்கும் விழுப்பம் கொல்லும்
பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்
நாண் அணி களையும் மாண்எழில் சிதைக்கும்

பூண்முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும்
பசிப்பிணி என்னும் பாவி."

என்று கூறிச் செல்கிறது.

உணவு கொடுப்போர் சிறப்பு,

"ஆற்றுநர்க் களிப்போர் அறவிலை பகர்வோர்
ஆற்று மாக்கள் அரும்பசி களைவோர்
மேற்றே உலகின் மெய்ந்நெறி வாழ்க்கை
மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்க்கொடுத் தோரே."

என்று இயம்பப்பட்டு இருக்கிறது.

பசுக்கொலை பாவம் என்ற குறிப்பினை,

"விடுநிலம் மருங்கில் படுபுல் ஆர்ந்து
நெடுநில மருங்கின் மக்கட் கெல்லாம்
பிறந்தநாட் டொட்டுச் சிறந்ததன் தீம்பால்
அறந்தரு நெஞ்சொடு அருள்சுரந் தூட்டும்
இதனொடு வந்த செற்றம் என்னை?"

என்ற அடிகள் உணர்த்துகின்றன.

இந்திரலோகம் என்பது எத்தகையது என்பதை,

"அறம்செய் மாக்கள் புறங்காத் தோம்பும்
நற்றவம் செய்வோர் பற்றற முயல்வோர்
யாவரும் இல்லாத் தேவர் நன்னாடு"

என்ற அடிகளில் காண்க.

புலால் உண்ணுமை, கள்ளுண்ணுமை ஆகிய தீய செயல்களை இந்நூல் நன்கு கண்டிக்கிறது. 'மயக்கும் கள்ளும் மன்னுயிர் கோறலும் கயக்கறு மாக்கள் கடிந்தனர்' என்ற அடிகளைக் காண்க. சாதுவன் என்போன், நாகர் தலைவனிடம் இவ்விரண்டு தீச்செயல்களை ஏன் கடிதல் வேண்டும் என்பதற்கு விளக்கம் தருகையில்,

"பிறந்தவர் சாதலும் இறந்தவர் பிறத்தலும்
உறங்கலும் விழித்தலும் போன்ற துண்மையினை
நல்லறம் செய்வோர் நல்லுல கடைதலும்

அல்லறம் செய்வோர் அருநர கடைதலும்
உண்டென உணர்தலின் உரவோர் களைந்தனர்.''

என்று கூறி விளக்கினர்.

மணிமேகலை வாயிலாக இக்கருத்தே.

''பிறத்தலும் மூத்தலும் பிணிபட் டிரங்கலும்
இறத்தலும் உடையது இடும்பைக் கொள்கலம்
மக்கள் யாக்கை இதுஎன உணர்ந்தும்
மிக்க நல்லறம் விரும்புதல் புரிந்தேன்.''

என்று கூறப்பட்டுள்ளது.

அறம் செய்தலை இந்நூல் பெரிதும் எடுத்து இயம்புகிறது. இதனை,

'' இளமையும் நில்லா யாக்கையும் நில்லா
வளவிய வான்பெருஞ் செல்வமும் நில்லா
புத்தேள் உலகம் புதல்வரும் தாரார்
மிக்க அறமே விழுத்துணை ஆவது.''

என்ற அடிகள் உணர்த்தும்,

அரசனது செங்கோல் ஆட்சியே தவத்திற்கும், கற்பிற்கும் காரணமாகும் என்பது,

''மாதவர் நோன்பும் மடவார் கற்பும்
காவலன் காவல் இன்றெனில் இன்றே.''

என்ற அடிகளால் தெரிகிறது.

இராசமாதேவி தன் மகன் உதயகுமரன் இறந்து போனது குறித்து வருந்தினள். அதுபோது மணிமேகலை அவளுக்கு நல்லுரை கூறி எவ்வுயிர் இடத்தும் அன்பும் இரக்கமும் காட்டுமாறு உபதேசம் செய்தாள். இதனை,

''யாங்கிருந் தழுதனை இளங்கோன் தனக்குப்
பூங்கொடி நல்லாய் பொருந்தாது செய்தனை
உடற்கழு தனையோ உயிர்க்கழு தனையோ
உயிர்க்கழு தனையேல் உயிர்புகும் புக்கில்
செயப்பாட்டு வினையால் தெரிந்துணர் வரியது

"அவ்வுயிர்க் கன்பிணை ஆயின் ஆய்தொடி
எவ்வுயிர்க் காயினும் இரங்கல் வேண்டும்."

என்னும் அடிகளில் அறியலாம்.

இன்னோரன்ன நீதிகள் அடங்கிய இவ்விரு நூற்கள் தமிழில் இருப்பது குறித்துச் சிறப்பிக்கும் முறையில், இத்தகைய நூற்கள் தெலுங்கில் இன்மையினால் தாம் பொருமைப்படுவதாகத் திரு. T. R. சேஷ அய்யங்கார் எழுதிய Ancient Dravidasthan நூலுக்கு, திரு. S. R. Reddy அவர்கள் தாம் அளித்துள்ள முகவுரையில்,

As an Andhra, I envy Tamil its possession of two such poems as Silappathigaram and Manimekalai for which I can find no equivalents in Telugu Literature.

என்று எழுதி இருப்பதைக் காண்க.

சீவக சிந்தாமணி: இந்நூல் உரை யாசிரியர்களால் மேற்கோளாக எடுத்து ஆளப்பட்டுள்ளது. இதனை மகா காவியம் என்றும் கூறுவர். இது பல சுவைகளை யுடையது. இவ்வர்ணனைகளை இவ்விவ்விதமாக வர்ணிக்க வேண்டும் என்பதை அறிவித்த முதல் நூல். சேக்கிழார், கம்பர், போன்றவர்கட்குத் தத்தம் நூல் செய்வதற்கு வழிகாட்டியாக அமைந்ததும் இதுவே.

இந்நூல் வழி, அமைச்சர் எதையும் ஆராயும் இயல் பினர் ஆதல் வேண்டும்; ஆசிரியர் சொல்படி நடத்தல் வேண்டும்; பகைவரை வெல்ல விருப்புடையோர் காலம், இடம், ஏனைய வாய்ப்பு அமையும்வரை அமைதியுடன் இருக்கவேண்டும்; பெற்றோர் சொல்லைப் பேணவேண்டும்; எண்ணிய எண்ணம் ஈடேற அறிவும் அன்பும் தேவை; இன்பமும் துன்பமும் வரினும் அதுபோது மகிழ்வும் துன்பமும் அடைதல் கூடா; தீயர் தீயவழி ஒழுகின் அவர்கட்கு அற வுரை பகர்ந்து நல்வழிப்படுத்த வேண்டும்; எப்பொழுதும் எல்லா உயிரிடத்தும் அருள் காட்டுதல் வேண்டும்; நன்றி மறத்தல் கூடாது என்பன போன்ற அரிய குறிப்புக்களை அறியலாம்.

இந்நூலுக்கு க்ஷத்திர சூடாமணி முதல் நூல் என்பர். இந்நூலுக்கு உரை கண்டவர் நச்சினர்க்கினியர். தெய்வ லோகச் சிந்தாமணிக்கல் போல நினைத்ததைத் தரவல்லது

இந்நூல் என்ற காரணத்தால் சிந்தாமணி என்ற பெயர் பெற்றது என்றும், இந்நூல் கதாநாயகன் பிறந்தபோது அவனது தாய் "சிந்தாமணியே" என்றதால் இப்பெயர் பெற்றது என்றும் கூறுவர். இதற்கு மணநூல் என்ற பெயரும் உண்டு. இதில் 13 இலம்பகங்கள் உள. 3, 4, 5, 6, 7. 8, 9, 12 இலம்பகங்கள் சீவகனது திருமணத்தைப் பற்றியும், 2 ஆம் இலம்பகம் சீவகன் தோழன் பதுமுகன் திருமணம் பற்றியும் 1, 10, 11, 13 ஆம் இலம்பகங்கள் நாமகள், மண்மகள், பூமகள், முத்தி மகள் ஆகியோரை மணந்ததைப் பற்றியும் கூறுவன. கல்வி, அரசு, முடி, மோட்சம் பெற்றதையும் உருவகப்படுத்தப்பட்டு இவ்வாறு கூறப்பட்டது என்க. இலம்பகமாவது படலம் என்பதாகும்.

ஏமாங்கத நாட்டுச் சச்சந்தனுக்கும் விசையைக்கும் பிறந்த மகன் சீவகன். அமைச்சன் கட்டியங்காரன், சச்சந்தனைக் கொல்லச் சதி செய்ததை அறிந்த அரசன், விசையை கருவுற்றிருந்தபோது மயிற்பொறியில் ஏற்றி அனுப்பிவிட்டனன். அது சுடலையில் இறங்கியபோது அங்குப் பிறந்தனன் சீவகன். அக்குழந்தையைக் கந்துக்கடன் எடுத்து வளர்த்தனன். சீவகன் கல்வி, கேள்விகளில் தேறினன். இவற்றை எல்லாம் கூறுவது நாமகள் இலம்பகம்.

சீவகன் தோழன் பதுமுகனது மணத்தையும், சீவகன் மாடு பிடி சண்டையில் தன் வீரத்தைத் தோற்றுவித்ததையும் கூறுவது, கோவிந்தையார் இலம்பகம். வித்தியாதர மகளை வீணை வாசிப்பில் வென்றதைக் கூறுவது காந்தருவதத்தையார் இலம்பகம். மதயானையை அடக்கிக் குணமாலை என்பாளை மணந்ததைக் குணமாலையார் இலம்பகம் அறிவிக்கும். பாம்பு கடித்து இறந்த பதுமையாரை அதைத் தீர்த்து மணந்ததைப் பதுமையார் இலம்பகம் உணர்த்தும்.

கேமமாபுரத்தில் கேமசரியை மணந்ததைக் கேமசரி இலம்பகம் தெரிவிக்கும். ஏமமாபுரத்து மன்னனது பிள்ளைகட்கு வில்வித்தை கற்பித்துக் கனகமாலையை மணந்ததைக் கனகமாலையார் இலம்பகம் தெரிவிக்கும். துறவுக்கோலத்தில் இருந்த தன் தாயைக் கண்டது, விமலை என்பாளை

மணந்தது விமலையார் இலம்பகத்தில் கூறப்பட்டுள்ளன. ஆடவரைப் பேணுத விரதம் பூண்ட சுரமஞ்சரியை மாறுவேடம் பூண்டு, அவளை இசையால் மயக்கி மணந்தது சுரமஞ்சரியார் இலம்பகத்தில் உளது. கட்டியங்காரனை வென்றது மண்மகள் இலம்பகத்திலும், முடிசூட்டிக்கொண்டது பூமகள் இலம்பகத்திலும், மாமன் மகளான இலக்கணையை மணந்தது இலக்கணையார் இலம்பகத்திலும், சின்னுள் ஆட்சி செய்து பிள்ளைப்பேற்றை அடைந்து, உலக நிலையாமை உணர்ந்து, பலர்க்கு நல்லுபதேசம் செய்து, முத்திபெற்றது, முத்தி இலம்பகத்திலும் கூறப்பட்டுள்ளன. சீவகன் முக்தி எய்திய நிலையினை ஆசிரியர் பின்வருமாறு கூறியுள்ளனர்.

"கேவல மடந்தை என்னும் கேழ்கிளர் நெடிய வாட்கண்
பூவலர் முல்லைக் கண்ணிப் பொன்னெரு பாக மாகக்
காவலன் தான்ஓர் கூருக் கண்ணிமை யாது புல்லி
மூவுல குச்சி இன்பக் கடலினுள் மூழ்கி ஞனே."

இந்நூலில் வீட்டு இன்பம் சிவகதி என்று கூறப்பட்டுள்ளது.

"இன்பமற் றென்னும் பேரால் எழுந்த புற்கற்றைத் தீற்றித்
துன்பத்தைச் சுரக்கும் நான்கு கதியெனும் தொழுவில் தோன்றி
நின்றபற் றூர்வம்நீக்கி நிருமலன் பாதம்சேரின்
அன்புவிற் றுண்டு போகிச் சிவகதி அடைய யாமே."

இத்தகைய நூலை Dr. G. W. Pope, "This is the greatest existing Tamil Literature monument." என்றும், "One of the great epics of the world," என்றும் புகழ்ந்துள்ளனர்.

இத்தகைய அரிய நூலாசிரியராம் திருத்தக்கதேவர், வீரமாமுனிவரால் "He is a prince among the Tamil Poets" என்று சிறப்பிக்கப்பட்டவர். இவரது மரபு சோழர் மரபு என்பதும், சமயம் சைனம் என்பதும் தெரிய வருகின்றன. இவர் இந்நூலை அன்றி, இவரது ஆசிரியரின் ஆணைக்கிணங்க நரிவிருத்தம் என்னும் நூலையும் பாடியுள்ளனர். இதில் இளமை, யாக்கை, செல்வம் முதலியன நிலையா என்பதும், கொலை, புலால் புசிப்பு, சினம், பொய் கூறல்

முதலான தீய பண்புகள் கூடா என்பதும் கூறப்பட்டுள்ளன. நரி விருத்தமாவது நரியின் வரலாறுகும். இதில் அடங்கிய வரலாறு: ஒரு வேடன் ஒரு யானையைக் கண்டான். அதனை எய்ய எறும்புப் புற்றண்டை நின்று குறி பார்த்து அம்பு எய்தான். யானை இறந்தது. அதுபோது அப்புற்றிலிருந்த பாம்பு வெளி வந்து வேடனைக் கடித்தது. வேடன் அந்நிலையிலும் அதனையும் கொன்றான். அவனும் இறந்தான். அங்கு ஒரு நரி வந்தது. மூவரும் இறந்து கிடப்பதைக் கண்டு மகிழ்ந்து தனக்குப் பன்னாட்களுக்கு உணவுக் குறை இல்லை என மகிழ்ந்து, யானையின் மீதுள்ள அம்பை அசைத்து எடுக்க முயன்றது. அந்த வேகத்தில் அந்த அம்பு நரியைத் தாக்க நரியும் இறந்தது. இப்படிப் பல வரலாறுகள் இதில் கூறப்பட்டுள்ளன.

சீவக சிந்தாமணியின் பாயிரத்துள் "பொய்யாமொழி புகழ்மை அறுகாட்சித் திருத்தகு முனிவன்" என்று கூறப்பட்டிருப்பதில் பொய்யா மொழி என்பான் மைசூர்க் கங்கா மன்னனும் சத்திய வாக்கியன் என்று யூகிக்கப்படுதலின், அவனது காலம் கி. பி. 10-ஆம் நூற்றாண்டின் முற்பகுதி எனவரலாறு கூறுதலின், இவரது காலமும் அதுவே என்க.

வளையாபதி: இதில் கீழ்வரும் கதைக்குறிப்புக் காணப்படுகிறது. நவகோடி நாராயணன் என்பவன் ஒரு வைர வியாபாரி; பெருஞ்செல்வன். இவன் தன் மரபில் ஒருத்தியையும், வேற்று மரபில் ஒருத்தியையும் மணந்தவன். இதனால் இவனது உறவினர் இரண்டாம் மனைவியை விட்டுவிட வற்புறுத்தினர். அவனும் இரண்டாம் மனைவியைத் துரத்தி விட்டனன். இவள் வெளியேறியபோது கருவுற்றிருந்தனள். பின் ஓர் ஆண்மகவை ஈன்றனள். இவன் வளர்ந்து வயது வந்தபோது, இவனது தோழர்கள் "இவன் தந்தை இன்னான் என்று அறியாதவன்" எனக்கூறிச் சிறுமை செய்தனர். இவன் தனது தாயினைத் "தன் தந்தை யார்?" என வினவினான். அவள் தந்தை இன்னான் என்று கூறச் சிறுவன் நவகோடி நாராயணனை அடைந்தான்; அடைந்ததும் மகன் என்பதை அறிவித்தனன். அதனைத் தந்தை ஏற்றிலன். அந்நிலையில் காளிதேவி துணையால் இச்சிறுவன் வைர வாணிகன் மகனே என்பதை நிறுவியதும், வணிகன் அம்மகனுக்கு அழகாபுரியை ஈந்து அதற்கு அவனைத்

தலைவனுக்குப் பெரும் பொருள் தந்து வாணிபம் செய்ய விடுத்தனன். இதுவே அக்கதை.

இந்நூலின் பாடல்கள் மேற்கோளாக எடுத்து ஆளப்பட்டதால், இந்நூல் இருந்தது என்பது தெரிகிறது. இது ஒரு சமண நூல். இந்நூலாசிரியர் யார், காலம் யாது என்பன போன்ற குறிப்புக்கள் தெரியவரவில்லை. பிள்ளைப்பேற்றின் மாண்பை இந்நூல்,

"பொறைஇலா அறிவு போகப் புணர்விலா இளமை மேவத்
துறையிலா வனச வாவி துகிலிலாக் கோலத் தூய்மை
நிறையிலா மாலை கல்வி நலமிலாப் புலமை நன்னர்ச்
சிறையிலா நகரம் போலும் சேயிலாச் செல்வம் அன்றே."

என்று கூறுகிறது.

குண்டலகேசி : இந்நூலில் அமைந்த வரலாறு : குண்டலகேசி செல்வ வணிகன் மகள். இவளது கூந்தல் குண்டலம் போல இருந்தமையின், இவள் இப்பெயர் பெற்றனள். இவள் தன் மாளிகையின் நிலா முற்றத்தில் பந்தாடிக்கொண்டிருக்கையில், ஓர் இளைஞன் திருடன் என்ற குற்றத்திற்காக நகர்க் காவலாளிகள் பிடித்துக்கொண்டு போவதைக் கண்டாள். அவனது அழகில் ஈடுபட்டு அவனையே மணக்கத் தீர்மானித்தாள். அத்திருடன் ஓர் அரசனின் அமைச்சன் மகன் என்பதும் தெரியவந்தது. ஆகவே மணமும் முடிந்தது.

ஒருநாள் செட்டிமகள் விளையாட்டாகத் தன் காதலனை, "நீ ஒரு திருடன் அல்லனோ?" என்று வினவினாள். இஃது அவனுக்குச் சிறுமையாகக் காணப்பட்டது. ஆகவே, திருடன் என்ற பெயர் தனக்கு நிலைத்தபோது, ஏன் இவள் அணிகலன்களை எல்லாம் திருடிக் கொள்ளக்கூடாது என எண்ணினான். எனவே, அவன் ஒருநாள் தன்மனைவியை நன்கு ஆடை அணிகலன்களால் அலங்கரித்துக்கொண்டு, ஒரு மலையின் உச்சிக்கு அழைத்துச்சென்றான். சென்றதும் தன்மனைவியை நோக்கி, "உனது நகைகள் அனைத்தையும் கொடுத்துவிடு; இன்றேல் உன்னை இங்குக் கொன்று விடுவேன்" என்றனன். இதனைக் கேட்டதும் அவள் அவனைச் சிறிதும் சிந்தியாமல் கீழே தள்ளிவிட்டனள். பின் துறவு பூண்டாள். இவளது குரு அருக்கச் சந்திரன் ஆவார்.

இந்நூல் பௌத்த சமயத்தைச் சார்ந்தது. இதனை எழுதியவர் நாகுதத்தனார் என்பவர். இவரது காலத்தையும் பிறவற்றையும் அறிதற்கு இல்லை.

நமது வாழ்நாள் பற்றி இந்நூல்,

"பாலையாம் தன்மை செத்தும் பாலனும் தன்மை செத்தும்
காலையாம் தன்மை செத்தும் காமுறும் இளமை செத்தும்
மீளும்இவ் வியல்பு பின்னே மேல்வரும் மூப்பும் ஆகி
நாளும்நாள் சாகின் றமால் நமக்குநாம் அழாத தென்னே."

என்று எடுத்து இயம்புகிறது.

இதுவரை ஐம்பெருங் காப்பியங்களைப் பற்றிக் கூறப்பட்டன. இனி ஐஞ்சிறு காப்பியங்களையும் ஈண்டே அறிவோமாக.

ஐஞ்சிறு காப்பியங்கள்

உதயண குமார காவியம்: இதனை உதயணன் கதை எனவும் கூறுவர். இதனை எழுதியவர் கொங்குவேள் என்பவர். ஆதலின், இதனை கொங்குவேள் மாக்கதை என்றும் பெருங்கதை என்றும் கூறுவர். இது வடமொழி பிருக்த்கதா என்பதைத் தழுவி எழுதப்பட்டது. இப்பெருங் கதை உரையாசிரியர்களால் மேற்கோளாக எடுத்து ஆளப் பட்டுள்ளது.

இந்நூலில் உஞ்சைக்காண்டம், இலாவாணகாண்டம், மகதகாண்டம், வத்தவகாண்டம், நரவாணகாண்டம் துறவுக்காண்டம் என ஆறு காண்டங்கள் உள. ஒவ்வொரு காண்டமும் பல காதைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. நூல் முழுவதும் ஆசிரியப் பாவால் அமைந்துள்ளது. இதன் கதைச் சுருக்கம் பின்வருமாறு:

வத்தவ நாட்டில் கௌசம்பி நகரத்தரசன் சதானிகன் மிருகாபதி என்பாளை மணந்தனன். அவர்கள் மகனே உதயகுமரன். இவன் யாழில் வல்லவன். இவ்யாழ் வயப்பட்டு ஒரு தெய்வயானை இவனுக்குப் பணிந்தது. இதன் உதவியால் இவனது மாமன், தந்தையின் அரசைப் பெற்றுத் திகழ்ந்தான். இவன் உச்சயினி மன்னனால் சிறைப்பட்-

டனன். பின் இவனது நண்பன் யூகியினால் விடுதலை அடைந்-தனன். சிறையிட்டவன் மகளாகிய வாசவத்தையினை மணந்தனன். பின்னர் பதுமையின் மகனுக்கு முடிசூட்டித் தவம் செய்யலாயினன்.

இந்நூலால் ஊழின் வன்மை, அமைச்சர்களின் சூழ்ச்சித் திறன், நட்பின் கடமை, சமண சமயக் கொள்கை முதலியனவற்றைச் சிறப்பாக அறியலாம். இந்நூலாசிரியர் கொங்குவேள் என்பவர் வேளாள மரபினர்; ஊர் வசய மங்கை. இவர் இந்நூலை எழுதி முடித்தற்காக இல்லறத்தி-லிருந்து வானப்பிரஸ்த நிலையினையும், பின் துறவற நிலையினையும் மேற்கொண்டவர். இவரிடம் இருந்தவர்களும் கல்வி கேள்விகளில் தலைசிறந்தவர்கள் என்பது இவரது பணிப்பெண் வாயிலாகத் தமிழ்ச்சங்கப் புலவர் கேட்ட கேள்விகட்கு விடை கூறும்படி செய்தது கொண்டு தெரிய-வருகிறது.

இந்நூல், கி. பி. ஆறுவது நூற்றுண்டில் கங்கை நாட்டை ஆண்ட துர்விநீதன் என்போன் வடமொழியில் மொழி பெயர்த்த நூல் வழி, எழுதப்பட்டதாகத் தெரிதலின், இதுவும் கி.பி. 6-ஆம் நூற்றுண்டு என்பது தெரிகிறது. அறச்சாலைச் சிறப்பினை,

"அமுதின் அன்ன அறுசுவை அடிசில்
நெய்ச்சூட் டமைந்த சிற்றூண் பந்தரோ
டெப்பொழு தாயினும் அப்பொழு தீயும்
தூமம் நவின்ற நாமக் கைவினை
மடைத்தொழில் வழாஅ வாழ்க்கையர் பயின்ற
அறச்சோற் றட்டில்."

என்னும் அடிகளால் அறியலாம்.

நாவிதர் தம் பணியினைத் தொடங்கும்போது செய்யும் செயல்களும், செய்யக்கூடாத செயல்களும் இன்ன என்பனவற்றை,

"இலக்கணம் பிழையா எஃகமை இருப்பின்
நீர் அமைந் தூட்டிய நிறைஅமை வாளினைப்
பஞ்சிப் பட்டொடு துரூஉக்கிழி நீக்கிப்
பைங்கதிர் அவிர்மதி பாகத் தன்ன

அங்கேழ்க் கல்மிசை சிறந்து பாராட்டி
வெங்கேழ்க் கையில் சிறந்து பாராட்டி
ஆசறு நறுநீர் பூசனை கொளீஇ
வாள்தொழில் பொலிந்த திருமுகக் கேற்ப
மூரிக் கொள்ளான் முனிதல் செல்லான்
ஆவிக் கொள்ளான் அயர்ந்து பிறர்நோக்கான்
சீர்கெழு நெடுந்தகை செவ்வியில் திரியான்
கண்ணினும் மனத்தினும் கையினும் அமைத்த
மண்ணுவினை மயிர்த்தொழில் நன்னல நாவிதன்."

என்னும் அடிகளில் காண்க.

நாக குமார காவியம்: இதுபற்றி ஒன்றும் அறிதற்கு இல்லை. இந்நூலாசிரியரைச் சமணர் என்பர். இது மறைந்துபோன நூல்களுள் ஒன்று.

யசோதர காவியம்: இது விருத்த யாப்பில் அமைந்த நூல். இதில் 5 சருக்கங்களும், 320 பாக்களும் இருக்கின்றன. இந்நூலாசிரியர் சைனர். இந்நூல் ஆசிரியர் யாவர் என்பது அறிதற்கில்லை. இந்நூல் வடமொழி நூலைத் தழுவி எழுதப்பட்டது. அந்நூலின் காலம் கி. பி. 1025 ஆதலின், அக்காலத்திலேனும், அதற்குப் பிற்பட்ட காலத்திலேனும் எழுதி இருக்கவேண்டும் என எண்ண வேண்டியிருக்கிறது. இராசமாபுரத்து மன்னன் மாரிதத்தன் உயிர்ப்பலி செய்து வந்தான். அது தீது என்பதை எடுத்துக் கூறுவது இது. மேலும், யசோதரனது பல பிறப்புக்களையும் எடுத்து மொழிவது இது. உயிர்க்கொலை தீது, சிற்றின்பத்தின் இழிவு, பேர் இன்ப உயர்வு, இதை அடைய நல்லொழுக்கமே சிறந்தது என்பன போன்ற அரிய கருத்துக்களை இஃது உணர்த்துகிறது.

"ஆக்குவ தேதெனில் அறத்தை ஆக்குக
போக்குவ தேதெனில் வெகுளி போக்குக
நோக்குவ தேதெனில் ஞானம் நோக்குக
காக்குவ தேதெனில் விரதம் காக்கவே."

என்ற பாடலைக் காண்க,

நீலகேசி: இதனை நீலகேசித் தெருட்டு என்றும் கூறுவர். இந்நூலாசிரியர் யாவர் என்பது தெரியவில்லை.

இது குண்டலகேசிக்கு எதிர்ப்பு நூலான சமண நூல். இந்நூலுக்குச் சமண திவாகர வாமன முனிவர் உரை எழுதியிருக்கின்றனர். இதில் பத்துச் சருக்கங்களும், 894 விருத்தப் பாடல்களும் உள. இந்நூல் அச்சில் வெளிவந்துளது. இது கி. பி. ஐந்தாம் நூற்றுண்டு நூல் என்பது சிலர் கருத்து. இந்நூலின் சருக்கப் பெயர்களைக் காணும்போது, சமணசமய மேம்பாட்டை நிறுவப் பல சமயங்களுடன் வாதிட்ட செய்தி தெரியவருகிறது.

சூளாமணி: இந்நூலை எழுதியவர் தோலாமொழித் தேவர். இந்நூலின் கதாநாயகன் முடிமணியாய் விளங்கினுன் என்பதை ஆசிரியர் "உலகின் முடிக்கோர் சூளாமணி யாயினுன்" என்று கூறியிருத்தலின், சூளாமணி என்றே இது வழங்கப்படுவதாயிற்று. தோலாமொழித் தேவர் குணபத்திரர் என்னும் சைன ஆசிரியர் காலத்தவர். குணபத்திரர் காலம் கி. பி. 10-ஆம் நூற்றுண்டு. ஆகவே, இந்நூலின் காலமும் இக்காலமே. இந்நூலாசிரியரை ஆதரித்தவன் கார் வேட்டி நகர் மன்னன் விசயன் ஆவான்.

சூளாமணி 12 சருக்கங்களையும் 2,131 விருத்தப் பாடல்களையும் கொண்டது. இது மகாபுராண நூலைத்தழுவி எழுதப்பட்டது.

சுரமை நாட்டு மன்னன் திவிட்டன் என்பவன் அசுவக்கிரீவன் ஏவிய சிங்கத்தை வென்றுன். இதனுல் இரத நூபுர நகரத்து மன்னன் தன் மகள் சுயம்பிரபையை மணம் செய்து கொடுத்தான். இவனது தம்பி விசயன் என்பவன். இதுவே கதையின் சுருக்கம். இது சைனநீதிகளையும், ஒழுக்கங்களையும் கூறும் நூல். இதன்கண் மோட்சம் உற்ற நிலையினைப் பேசுகையில் சிவகதி யுறுதலாக மொழியப் பட்டிருக்கிறது.

"அலகில்பெருங் குணத்தோன் ஆவரம் நீக்கி
உலக மலோக முடனே விழுங்கிப்
புலவன் முடிவென்னும் பூங்கொடி யும்தானும்
நிலவு சிவகதியுள் நீங்காது நின்றுன்."

மானுடர் இன்பம் எத்தகையது என்பதை,

"ஆனை துரப்ப அரவுறை ஆழ்குழி
நானவிர் பற்றுபு நாலும் ஒருவன்ஓர்
தேனின் அழிதுளி நக்கும் திறத்தது
மானுடன் இன்பம் மதித்தனை கொள்நீ."

என்று பாடப்பட்டுள்ளது.

2. இடைக்கால இலக்கியங்கள்

(Mediaeval Literature)

சமயப் பாடல்கள்

Religious Hymns

ஈண்டுச் சமயப் பாடல்கள் என்று குறிக்கப் படுவன சைவ சமயாசாரியர்களான நால்வர்களும், வைணவ ஆசாரியர்களான ஆழ்வார்கள் பன்னிருவரும், சைவத் திருமுறைகளில் வரப்பெறும் ஆசிரியர்களும் பாடிய பாடல் களைப் பற்றியே ஆகும்.

இச் சமயாசாரியர்களும், ஏனையவர்களும் பாடிய பாடல்கள், இறைவனைப் போற்றும் முறையிலும், அடியார்களைத் துதிக்கும் முறையிலும் அமைந்திருந்தாலும், அப் பாடல்களில் இலக்கியச் சுவையும், வரலாற்றுக் குறிப்புக்களும், செய்யுளின் பல வகைகளும் இருத்தலின், இலக்கியம் என்று போற்றத்தக்க நிலையில் இருக்கின்றன. ஆகவே, சமயத்தை மறந்து, தமிழ்க் கவியின் சுவையினைத் துய்க்க அவர்களின் பாடல்களை எச்சமயத்தவர்களும் படித்து இன்புற வேண்டியது இன்றியமையாத கடமை ஆகும். இனி அந்தச் சமயப்பாடல்களைப் பற்றியும் அவற்றைப் பாடிய ஆசிரியர்களைப் பற்றியும் அறிவோமாக.

ஒன்றுமுதல் எட்டுத் திருமுறைகள்

One to Eight Thirumurais

1. **சமயத் துதிப் பாடல்கள்:** சங்க காலத்தில் எழுந்த இலக்கியங்களில் துதிப்பாடல்களாகப் பல இல்லை. ஒரு

வேளைத் திருமுருகாற்றுப்படையும், பரி பாடலில் வரும் செவ்வேளுக்கும். திருமாலுக்கும் உரிய பாடல்களும் இப்பகுப்பைச் சேர்ந்தன என்று ஒருவாறு கொள்ளலாம். ஆகவே, இடைப்பட்ட காலத்தில்தான் சைவ, வைணவ சமயங்களில் துதிப்பாடல்கள் தோன்றியுள்ளன. சைவ சமயத் துதிப் பாடல்களாகச் சிறப்பாகக் கொள்ளப் படுபவை சைவத் திருமுறைகள் பன்னிரண்டும், வைணவத் துதிப் பாடல்களாகக் கருதப்படுபவை நாலாயிரத் திவ்வியப் பிரபந்தங்களும் ஆகும். பன்னிரண்டாம் திருமுறை அடியார்களின் வரலாற்றைப் பெரிதும் கூறுவதாயினும், இடையிடையே துதிப்பாடல்களும் இருத்தலின் துதிப்பாடல் நூல்களில் இணைத்துக் கூறப்பட்டது.

திருஞானசம்பந்தர் பாடிய திருமுறைகள் முதல் மூன்று. திருநாவுக்கரசர் பாடிய திருமுறைகள் நான்கு முதல் ஆறு. சுந்தர மூர்த்தி சுவாமிகள் பாடிய திருமுறை ஏழாவது. மாணிக்க வாசகர் பாடிய திருவாசகம், திருக்கோவையார் எட்டாவது திருமுறை. சேந்தனர் முதலியோர் பாடிய திருவிசைப்பா, திருப்பல்லாண்டு ஒன்பதாம் திருமுறை. திருமூலர் பாடிய திருமந்திரம் பத்தாம் திருமுறை. திருவாலவாயுடையார், காரைக்கால் அம்மையார் முதலியோர் பாடியவை பதினோராம் திரு முறை. சேக்கிழார் பெருமானர் பாடிய பெரிய புராணம் பன்னிரண்டாம் திருமுறை. இவையே பன்னிரண்டு திருமுறைகள்.

நாலாயிர திவ்விய பிரபந்தம் பன்னிரண்டு ஆழ்வார்களால் பாடப்பட்டது. பன்னிரு ஆழ்வார்களாவார் பொய்கை ஆழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், திரு மழிசை ஆழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள் அம்மையார், திருமங்கை ஆழ்வார், தொண்டரடிப்பொடி ஆழ்வார், திருப்பாணழ்வார், குலசேகர ஆழ்வார், நம்மாழ்வார், மதுர கவி ஆழ்வார் என்போர். இவ்வைணவ அன்பர்கள் திருமாலின் கல்யாண குணங்களில் ஆழ்ந்து இருந்தமையின், ஆழ்வார்கள் எனப்பட்டனர். இவர்களுள் மதுரகவி ஆழ்வார் திருமால் மீது பாடல்களைப் பாடாமல், நம்மாழ்வாரைத் தமது ஞான குருவாகக் கொண்டு அவரையே பாடியதனல் அவரையும், திரு ஆண்டாள் அம்மையார் திருமால் மீது பாடி இருப்பினும், பெண்பாலார் என்றதனல் அவரையும்

நீக்கி, ஆழ்வார்கள் பத்துப்பேர்கள் என்ற கொள்கையும் வைணவர்களிடை உண்டு.

> " மலர்தலை யுலகத்துப் புலமை சான்ற
> பதின்மரும் பணித்த பாடல்."

என்று பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் பாடியிருப்பதால் இவ்வுண்மை புலனாகிறது.

இனி, பன்னிரு திருமுறைகளின் ஆசிரியர்கள், நாலாயிரப் பிரபந்த ஆசிரியர்கள் ஆகிய இவர்களின் வரலாற்றையும், காலத்தையும் சிறிது ஆராய்வோமாக.

சோழ நாட்டைச்சார்ந்த சீர்காழி என்னும் திருப்பதியில் அந்தணர் மரபினரான சிவபாத இருதயர், பகவதி அம்மையார் என்னும் இவ்விருவருக்கும் ஒரு குழந்தை பிறந்தது. வழக்கப்படி தந்தையார் கோவில் குளத்தில் குளிக்கப் போனார். அது போது தமது மூன்று வயதுடைய குழந்தையையும் உடன் அழைத்துச் சென்றனர். குழந்தை குளக்கரையில் இருந்தபோது பசியாலும், தந்தையாரைக் காணாமையாலும் அழத்தொடங்கியது. அதனைக்கேட்ட சீர்காழிப்பரமனும், பார்வதியும் அங்கு வந்தனர். பார்வதி தேவியார் பொன் கிண்ணத்தில் பாலைச் சுரந்து, அதனுடன் ஞானத்தையும் சேர்த்துக் குழந்தையைப் பருகுமாறு செய்தனள். தந்தையார், யாரோ கொடுத்த பாலைக் குழந்தை பருகுகிறது என்று சினந்து கோல் கொண்டு, " யார் தந்த பாலைப் பருகினாய் " என்று அச்சுறுத்திய நிலையில், மூவாண்டுக் குழந்தை,

> " தோடுடைய செவியன் விடைஏறி ஓர்தூவெண் மதிசூடி
> காடுடைய சுடலைப்பொடி பூசிஎன் உள்ளம் கவர்கள்வன்
> ஏடுடைய மலரான் முனைநாள் பணிந்தேத்த அருள்செய்த
> பீடுடைய பிரமா புரமேவிய பெம்மான் இவன்அன்றே."

என்று பாடித் தமக்குப் பால் கொடுத்தவர் இன்னார் தாம் என்று இறைவனையும், இறைவியையும் சுட்டிக் காட்டியது. மேலும், இறைவர் தமக்கு ஞானப்பால் தந்ததை மற்றோரிடத்தில்,

> " போதையார் பொற்கிண்ணத் தடிசில் பொல்லாதெனத்
> தாதையார் முனிவுறத் தான்எனை ஆண்டவன்."

என்று நன்கு குறிப்பிட்டுள்ளார். குழந்தை ஞானப் பால் உண்டு ஞான சம்பந்தம் உற்றதனுல், ஞான சம்பந்தர் என்ற பெயரால் குறிக்கப்படுவதாயிற்று.

தந்தையார் தோளில் அமர்ந்து சென்று இறைவனுறை விடங்களைக் கையால் தாளம் இட்டுப்பாடி வருவாராயினர். திருக்கோலக்காத் தலத்தைக் கைத்தாளம் இட்டுப் பாடுகையில், இறைவர் பொன்னுல் தாளம் கொடுக்க, அதற்கு ஓசையினை உமையாள் தர, அதைப் பெற்றனர். இவர் தந்தையார் தோளில் அமர்ந்து பாடினர் என்பதை "அத்தர்பியல் மீது இருந்து இன்னிசையால் உரைத்த பநுவல்" என்று இவரே பாடி இருத்தலால் அறியலாம். இவருக்கு உபநயனம் செய்து காயத்திரி மந்திரத்தை உபதேசிக்க வந்தவர்கட்கு, ஒப்புயர்வற்ற பஞ்சாட்சர மந்திரத்தை உபதேசித்தனர்.

இறைவர் இவர்க்குத் திருவாயில் அறத்துறையில் முத்துப்பல்லக்கு ஈந்தனர். திருப்பட்டீச்சுரத்தில் முத்துப் பந்தரும், திருவாவடுதுறையில் பொற்கிழியையும், திருவீழி மிழலையில் படிக்காசையும் தந்தனர்.

திருஞான சம்பந்தர் தம் வாழ்க்கையில் பல அற்புதங்களைச் செய்துள்ளனர். திருப்பாச்சிலாச்சிரமத்தில் கொல்லி மழவன் மகள் முயலகன் என்னும் நோயால் வாடியபோது, அதனைத் தீர்த்தனர். தம் அடியார்கள் குளிர் நோயால் திருக்கொடிமாடச் செங்குன்றூரில் நலிந்தபோது, அதனைப் போக்கினர். திருமருகல் என்னும் பதியில் வணிகன் பாம்பு தீண்டி மயங்கிய நிலையில் அத் தீவிடத்தை நீக்கினர். திருமறைக் காட்டில் வேதங்களால் பூசிக்கப்பட்டுச் சாத்தப்பட்ட கதவினை அப்பர் திறக்கப் பாட, இவர் மூடப்பாடினர். அன்று முதல் இன்றுவரை அக்கதவுகள் திறக்கவும் மூடவும் பட்டு வருகின்றன.

பாண்டிய நாட்டில் சமணர் தம் திருமடத்தில் தீவைத்ததை அறிந்து, அத்தீ கூன் பாண்டியனை வெப்பு நோயாக அணுகச் செய்தனர். பின்னர் அந்நோயை அம்மன்னனது மனைவியார், மந்திரியார் மீது வைத்த அன்பால் திருநீறு பூசித் தணித்தனர். சமணர்களுடன் வாதிட்டபோது, நெருப்பில் தாம் பாடிய பதிகத்தை இட்டு எரிந்து சாம்ப-

ராகா வண்ணம் செய்தனர். அவ்வாறே வைகையில் இட்டு ஆற்றுப் போக்கில் போகா வண்ணம் எதிர்த்து வரச் செய்தனர். பாண்டியனது கூனையும் நீறு பூசி நிமிர்த்தினர். காவிரியின் எதிர்க்கரையில் இருந்த திருக்கொள்ளம்பூதுரை ஓடக்காரன் ஓடக்கோல் இல்லாமல் நடத்திச் சென்று அக்கரையை அடைந்தனர். தம்மையும் தம் அடியாரையும் வாதுக் கழைத்த புத்த நந்தியின் தலை துண்டிக்குமாறு பஞ்சாட்சரம் ஓதினர். "வித்தக நீறணிவார்க்கு அத்திரமாவன ஐந்தெழுத்துமே" என்பது அப்பாடல்.

தொண்டை நாட்டில் திருவோத்தூரில் இருந்த ஆண் பனையினைப் பெண்பனை ஆக்கினர். மயிலையில் பாம்பு கடித்து இறந்து, எலும்பும் சாம்பருமாக இருந்த மாதரானை எழுப்பி அங்கம் பூம்பாவையாகச் செய்தனர்.

திருஞானசம்பந்தர்க்குத் திருமணம் செய்தபோது, தீயைவலம் வரக்கூற, அருட்பெருஞ் சோதியாகிய இறைவனைத்தான் வலம் வரவேண்டுமென்று கூறித் திருநல்லூர்ப் பெருமணத்தை அடைய, அத்தலத்தில் பேரொளிப் பிழம்பு தோன்ற, அதில் புகுந்து இறைவனுடன் ஒன்றுயினர். அந்த நாள் வைகாசி மூல நட்சத்திரமாகும். நில உலகில் வாழ்ந்த காலம் பதினறு ஆண்டுகள்.

இவரது பதிகங்களின் மொத்தத் தொகை, பதினருயிரம் பதிகங்கள் ஆகும். ஆனல், இதுபோது இருப்பவை முதல் திருமுறையில் 136ம், இரண்டாம் திருமுறையில் 122ம் மூன்ரும் திருமுறையில் 125ம் ஆக 383 திருப்பதிகங்களே உள்ளன. பின்னர்க் கல் வெட்டின் மூலம் கிடைத்த பதிகம் ஒன்று உண்டு. எனவே 384 பதிகங்கள் உள. பதிகம் என்பது பத்து அல்லது பதிெனுரு பாடல்களின் தொகுதி ஆகும். இது போதுள்ள பாடல்களின் தொகை 4181. இந்த 384 திருப்பதிகங்களும் தமிழ் இசைப் பண்களுள் 23 பண்களால் பாடப்பட்டு வந்துள்ளன.

சம்பந்தர் பாடல்களில் மொழிமாற்று, மாலை மாற்று, யமகம் (மடக்கு) ஏகபாதம், இருக்குக் குறள், எழுகூற்றிருக்கை, ஈரடி, ஈரடி மேல் வைப்பு, நாலடிமேல் வைப்பு, திரு இராகம், வழிமொழித்திரு இராகம், சக்கரமாற்று, திருத்தாளச் சதி, யாழ்மூரி என்ற தலைப்பின் கீழ் அமைந்த

பதிகங்கள் உண்டு. இம்முறையில் இவர் முதல் முதலில் பாடி இருத்தலின் இப்பாடல்களை மூல இலக்கியங்கள் என்ற பெயர் தந்து சிறப்பித்துள்ளனர் சேக்கிழார். இவை களே அன்றிக் கோமூத்திரி, திருமுக்கால் என்ற தலைப்பிலும் இவரது பாடல்கள் உண்டு. ஆகவே, யாப்புக்கும் அணிக் கும் சிறந்த எடுத்துக் காட்டுகளாக இவரது பாடல்கள் இருப்பதைக் காண்க.

திருஞானசம்பந்தர் பாடலில் பல அரிய குறிப்புக்கள் உண்டு. தமிழிலும் வடமொழியிலும் அர்ச்சனை செய்த குறிப்பினை "அடியவர் பரவத் தமிழ்ச் சொலும் வடசொலும் தாள் நிழல் சேர" என்று அச்சிறுப்பாக்கப் பதிகத்தில் குறித்துள்ளனர். அகப்பொருள் பாடல்களும் பல உண்டு. "சிறையாகும் மடக்கிளியே" என்று தொடங்கும் பாடல்களைக் காண்க.

உபதேச மொழிகள் பற்பலவாக இவர் வாக்கில் உண்டு. "சித்தம் தெளிவீர்காள் அத்தன் ஆரூரைப், பத்திமலர் தூவ முத்தி எளிதாமே", "மறவாது ஏத்துமின் துறவி ஆகுமே", "செய்ய மலர் தூவ வையம் உமதாமே" என்ற தொடர்-களை நோக்குக.

இசைக் கருவிகளாக இவர் குறித்திருப்பவற்றுள் கல்லவடம், கத்திரிகை, கொக்கரை, துத்திரி முதலியன. இவை நமக்குப் புதுமையானவை. இயற்கையைப் பற்றிப் பாடிய பாடல்கள் பல. "வாவிதொறும் வண்கமலம் முகம் காட்டச் செங்குமுதம் வாய்கள் காட்டக் காவி இருள் குவளை கரு நெய்தல் கண்காட்டும் கழுமலமே," என்ற அடிகள் இயற்கை இன்பத்தினை இனிது காட்டுகின்றன. சோதிட நூல் கருத்தும் இவரது பாடலில் உண்டு." "புயல் மறந்து மீன் சனிபுக்கு ஊன் சலிக்கும் காலம்" என்ற தொடர் இதனை வலியுறுத்தும். "ஒன்பதோ டொன்றொடேழு பதினெட்-டொடுஆறும் உடனாய நாள்கள்" என்ற அடியில் பயணத்-திற்கு ஆகாத நாட்களைக் குறித்துள்ளதனை அறியவும்.

திருஞானசம்பந்தர் காலம் கி. பி. ஏழாம் நூற்றாண்டின் இடைப் பகுதியாகும். திருஞானசம்பந்தர் சிறுத்தொண்ட ரால் தம் இல்லத்திற்கு வரவேற்கப்பட்டவர். அச்சிறுத் தொண்டர் பல்லவ மன்னனும் இரண்டாம் நரசிம்மவர்மனது

படைத்தலைவர். அவர் இரண்டாம் நரசிம்மவர்மன் பகைவனை சாளுக்கிய மரபினனும் இரண்டாம் புலிகேசியை வென்றவர். அப்புலிகேசியின் காலம் கி. பி. ஏழாம் நூற்றுண்டின் இடைப்பகுதியாகும்.

திருநாவுக்கரசர்

சோழநாடு, தொண்டைநாடு ஆகிய இவற்றின் நடுப் பகுதியாகிய நடுநாட்டில் திருமுனைப்பாடி என்னும் நாட்டைச் சார்ந்த திருவாமூரில் குறுக்கையர் குடியில் வேளாளர் மரபில் புகழனர் மாதினியார் என்பவருக்குப் பிறந்தவர்களே திலகவதி யாரும், திருநாவுக்கரசரும். திருநாவுக்கரசருக்குப் பெற்றோர் இட்ட பெயர் மருள் நீக்கியார் என்பது. பெற்றோர் இறக்கவே திருநாவுக்கரசர் சைவ சமயம் நீத்துச் சமண் சமயம் புகுந்தனர். தமக்கையாரான திலகவதியார் சிவத்தொண்டில் ஈடுபட்டனர். அவ்வம்மையார் தம் இளவல் மீண்டும் சைவசமயம் புகுமாறு இறைவரை வேண்டினர். அவ் வேண்டுகோட்கு இரங்கிய இறைவர், மருள் நீக்கியார்க்குச் சூலைநோய் உண்டாக்க, அது தீர அவர் தமக்கையாரை அடைந்தனர். அவ்வம்மையார் திருநீறு அளித்து ஐந்தெழுத்து ஓத, அந்நோய் நீங்கப் பெற்றுப் பதிகம் பாடினர். அச்சூலை நோயால் இவர் வருந்திய வருத்தத்தை,

“கூற்ருயினவாறு விலக்ககிலீர் கொடுமைபல செய்தனன்
நான் அறியேன்
ஏற்ருய் அடிக்கே இரவும்பகலும் பிரியாது வணங்குவன்
எப்பொழுதும்
தோற்ருதென் வயிற்றின் அகம்படியே குடரோடு
தொடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடியேன் அதிகைக் கெடில வீரட்டானத்
துறைஅம்மானே.”

என்ற பாடலைப்பாடி இருப்பதைக் காண்க. அவர் சமண சமயத்தில் இருந்த காலை, தருமசேனர் என்று பெயரைப் பெற்ருர்; பின்னர் சைவசமயம் புகுந்ததைப் பொருது சமணர்கள் அரசன் கட்டளைப் பெற்று இவரை அழைத்து வர ஆளைப் போக்கினர். அது போது இவர் “நாமார்க்கும் குடி அல்லோம்” என்று தம் உரிமைப் பண்பைக் கூறினர். என்ருலும், வந்த பணியாளர் பெரிதும் இரக்க, அவர்கள்

பின் சென்றனர். அதுபோது சமணர்கள் அரசன் கட்டளை பெற்று, யானையை ஏவிக் கொல்ல முயன்றனர். கொல்ல வந்த யானை குனிந்து சென்றது. நீற்றறையில் அடைத்தனர். அடைத்தும் ஒருவித தீங்குமின்றி அதில் ஏழ்நாட்கள் இருந்தனர். கல்லொடு கட்டிக் கடலில் எறிந்தனர். "நற்றுணையாவது நமச்சிவாயவே" என்று ஐந்தெழுத்து ஓதிக் கல்லைத் தெப்பமாகக்கொண்டு கரை ஏறினர். அதுவே கரை ஏறவிட்ட குப்பம் எனக் கடலூரில் இன்றும் உள்ளது.

இவர் சமணசமயம் புக்கமையால் உண்டான மாசு நீங்கத் தம் உடம்பில் இரடபம், சூலம் ஆகிய இவற்றினைப் பொறிக்கப் பெண்ணுகட இறைவரை வேண்டினர். இறைவர் அங்ஙனமே செய்தனர். திருச்சத்திமுற்றத்தில் இறைவரைத் திருவடி சூட்டுமாறு வேண்ட, அதனையும் பெற்றனர்.

திருநாவுக்கரசருக்கு மற்றொரு பெயர் வாகீசர் என்பதாகும். இறைவர் தந்த பெயர் திருநாவுக்கரசர் என்பது. வாகீசர் திங்களூர் வந்து சேர்ந்தார். அப்பூதி அடிகளார் தம்மாட்டுக் கொண்டிருந்த அன்பினால் அவர் தம் இல்லத்தில் உணவுகொள்ள உவந்தபோது, அப்பூதியார் திருமகன் பாம்பு கடித்து இறந்தனன். அவனைப் பதிகம் பாடி நீறு சாத்தி எழுப்பினர்.

வாகீசர் திருமறைக்காடு (வேதாரண்யம்) சென்றபோது கதவு அடைக்கப்பட்டிருந்ததை அறிந்து அப்பர் பதிகம் பாடிக் கதவைத் திறந்தனர். வாகீசருக்கு 'அப்பர்' என்னும் திருநாமத்தைத் தந்தவர் திருஞானசம்பந்தர் ஆவர். பின்னர்த் திருப்பழையாறை வடதளியை அடைந்தபோது, அத்தலத்துச் சிவலிங்கம் சமணரால் மறைக்கப் பட்டிருந்ததை அறிந்து, பாடு கிடந்து (சத்தியாக்கிரகம்) இருந்தபோது, இறைவர் மன்னர் கனவில் மறைப்பை அகற்றக் கூற அவனும் வியந்து, மறைப்பை நீக்க, மகிழ்ந்த அப்பர் இறைவரை வணங்கிவிட்டு, திருப்பைஞ்ஞீலியினை நோக்கி வருகையில் களைப்புற்றிருந்தனர். இறைவர் அறிந்து அவர்க்குக் கட்டுச்சோறு அளிக்க, அதனை யுண்டு கயிலை காணப் புறப்பட்டபோது, இறைவர் தடுத்து அக்காட்சியினைத் திருவையாற்றில் காணுமாறு பணிக்க, அவ்வாறே அங்குக் கயிலைக் காட்சியினைக் கண்டு, திருப்புகலூரை

அடைந்து திருத்தொண்டு செய்து கொண்டிருந்தனர். அது போது இவரது உள்ளத் தூய்மையினை உலகர் அறியப் பொன், மணிகளை எதிரில் குவித்துக் காட்ட, அவற்றை ஒரு பொருட்டாக மதியாமல், குப்பையோடு குப்பையாகக் கூட்டி வெளியில் எறிந்தனர். இவரது துறவு நிலையை மாற்ற தேவமாதர்கள் எவ்வளவோ முயன்று, தகாத குறிப்பைக் காட்டவும் அவர்களைக் கண்ணெடுத்துப் பாராது இருந்தனர்.

இதன்பின் அத்திருப்பதியிலேயே இறைவர் திருமேனியில் இரண்டறக் கலந்தனர். இவர் கலந்தநாள் சித்திரை மாதம் சதயநட்சத்திரமாகும். இவரது வயது எண்பத்தொன்று.

அப்பர் பாடிய பதிகங்கள் மொத்தம் 4,900 ஆகும். அவற்றுள் 312 பதிகங்களே இப்போது கிடைத்துள்ளன. இவற்றிற்குரிய பாடல்களின் எண்ணிக்கை 3,066 ஆகும். இப்பாடல்களே நான்கு, ஐந்து, ஆறு திருமுறைகளாகக் குறிக்கப்பட்டுள்ளன. நான்காம் திருமுறையில் உள்ள பாடல்கள் பத்துவகைப் பண்களில் பாடப்பட்டனவாக அறிய வருகின்றன. ஐந்தாம் திருமுறை முற்றிலும் குறுந்தொகை என்றும், ஆறும் திருமுறை முற்றிலும் திருத்தாண்டகம் என்றும் கூறப்பட்டும் வருகின்றன. தாண்டகம் பாடியதனுல் அப்பர் 'தாண்டக வேந்தர்' என்று அழைக்கப்படுவாராயினர். நான்காம் திருமுறையில் திருநேரிசை, திருவிருத்தம் என்ற இருதலைப்பின்கீழ் பாடல்கள் உண்டு. அப்பர் பாடல்களால் பல அரிய குறிப்புக்களை உணரலாம். சிவபெருமானே எல்லாச் சமயங்கட்கு இறைவன் என்பதை "விரிவிலா அறிவிஞேர்கள் வேறொரு சமயம் செய்து எரிவினல் சொன்னுரேனும் எம்பிராற்கு ஏற்றதாகும்" என்னும் அடிகளான் அறியலாம்.

இறைவர் தென்மொழி வடமொழியாய் இருப்பவர் என்பதைச் "செந்தமிழோடு ஆரியனை" என்றனர். அகப்பொருள் பாடல்களும் இவர் வாக்கில் உண்டு "பொன்மாலை மார்பன் என் புது நலனுண்டு இகழ்வானே" என்ற அடியினைக் காண்க. பழமொழிகள் பலவற்றை இவர் பாடலில் காணலாம். "பாம்பின் வாய்த் தேரைபோலப்

பலபல நினைக்கின்றேனே" என்ற பழமொழியைக் காண்க. இறைவரைப் பிறரது துணை இன்றி நாமே பூசிக்கலாம் என்பதை "எம்போலிகள் பறித்திட்ட இலையும் முகையும் எல்லாம் அம்போது எனக் கொள்ளும் ஐயன்" என்று குறிப்பிட்டதை அறியவும். சீர்திருத்தக் கருத்துக்கள் பலவும் இவர் வாக்கில் உள. "சாத்திரம் பல பேசும் சழக்கர்கள் கோத்திரமும் குலமும் கொண்டு என் செய்வீர்" என்ற அடிகளை நோக்குக.

இசைக் கருவிகளுள் தக்கை, மொந்தை, பறண்டை, என்பனவற்றையும் குறித்துள்ளனர். கும்பகோண மாமாங்கக் குளத்தில் ஏழு நதிகள் வந்து படிதலை "தாவிமுதல் காவிரி, நல் யமுனை கங்கை சரசுவதி பொற்றாமரை புட்கரணி தெண்ணீர்க் கோலியொடு குமரி வரும் தீர்த்தம் சூழ்ந்த, குடந்தைக் கீழ்க்கோட்டத் தெம் கூத்தனாரே" என்று பாடி யருளியுள்ளனர்.

இலக்கியச் சுவைப் பாடல்களையும் இவர் பாடலில் காணலாம். "பாகத்தில் நிமிர்தல் செய்யாத் திங்களை மின்னென்று அஞ்சி, ஆகத்தில் கிடந்த நாகம் அடங்கும் ஆரூ ரனார்க்கு" என்ற அடியினைக் காண்க. இயற்கை வர்ணனைகளை "அருகெலாம் குவளை செங்நெல் அகஇலை ஆம்பல் நெய்தல், தெருவெலாம் தெங்கும் மாவும் பழம்விழும் படப்பை எங்கும்" என்ற அடிகளில் காணலாம். உபதேச மொழிகள் பலவும் இவர் பாக்களில் உண்டு.

"மனித்தர்காள் இங்கே வம்மொன்று சொல்லுகேன்
கனிதந் தால்கனி உண்ணவும் வல்லீரே".

"புனிதன் பொற்கழல் ஈசன் எனும்கனி
இனிது சாலவும் ஏசற் றவர்கட்கே."

என்ற அரிய உபதேசத்தைக் காண்க.

திருநாவுக்கரசர் முதலாம் மகேந்திரவர்மன் காலத்தவர் என்பது திருச்சிராப்பள்ளிச் சிவன் கோவில் கல்வெட்டால் அறிந்த ஒன்று. அதில் அப்பர் அவனைச் சைவனாக்கிய குறிப்புக் காணப்படுகிறது. அம்மன்னன் வாழ்ந்த காலம் கி. பி. ஏழாம் நூற்றாண்டின் முற்பகுதி. ஆகவே, அப்பர் காலம் கி. பி. ஏழாம் நூற்றாண்டாகும்.

சுந்தரர்

திருக்கயிலையில் இறைவர்க்கு மலர்த்தொண்டு புரிந்து வந்தவர் ஆலால சுந்தரர் என்பவர். இவ்வாறே இறைவி-யார்க்குப் பூத்தொண்டு செய்தவர்கள் அனிந்திதை, கமிலினி என்பவர்கள். இவர்கள்மீது ஆலால சுந்தரர்க்கு விருப்பம் சென்றது. இதை அறிந்த இறைவர் இம்மூவரையும் மண்ணுலகில் பிறந்து, விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்ளும் வகையில் திருவுள்ளம் கொண்டனர். இங்கிலையில் ஆலால சுந்தரர் இறைவனிடம் தாம் மண்ணுலகில் மயங்கா-வண்ணம் ஆட்கொள்ளுமாறு வேண்ட, இறைவரும் அதற்கு இசைந்தனர்.

சுந்தரர் நடுநாட்டில் திருமுனைப்பாடி நாட்டைச் சார்ந்த திருநாவலூரில் வாழ்ந்த ஆதிசைவ அந்தணராம் சடைய-னார்க்கும், இசைஞானியார்க்கும் திருமகனாராகப் பிறந்தருளி-னர். அதுபோது இவர்தம் திருப்பெயர் ஆரூரர் என்பது. இவரது அழகைக்கண்ட நரசிங்கமுனை அரையர் இவரை வளர்ப்பு மகவாக ஏற்று வளர்த்தனர்.

சுந்தரர் திருநாவலூரில் பிறந்த காரணத்தால் திருநாவ-லூரார் என்று பெயர் கொண்டனர். அவர் மணப்பருவம் உற்றுத் திருமணம் நடத்திக் கொள்ளும்போது, இறைவர் திருமணப் பந்தலில் கிழப்பருவத்தோடு வந்து, மணமகன் தம் அடிமை என்று கூறித் தடுத்துவிட்டனர். இதுபற்றி வழக்குத் தொடுத்தபோது நம்பி ஆரூரர் தோற்றுப்-போயினர். பின்னர் இறைவர்க்கு அடிமை ஆயினர். இறைவரால் வலிந்து தொண்டராக்கப் பெற்றமையால் சுந்தரருக்கு 'வன்றொண்டர்' என்றுபெயர் அமைந்தது. அதனை ஒவ்வி அவர்,

"பித்தா பிறைசூடி பெருமானே அருளாளா
எத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை
வைத்தாய்ப் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்
நல்லூர் அருள் துறையுள்
அத்தா உனக்கு ஆளாய் இனி அல்லேன் எனல் ஆமே."

என்று பாடி யருளினர்.

இவர் பேரழகு காரணமாகவும், திருக்கயிலையில் ஆலாலசுந்தரர் என்றிருந்த காரணமாகவும் 'சுந்தரர்' என்று

பெயர் பெற்றார். இவர் இறைவ னுறைவிடங்களைக் கண்டு இன்புறப் புறப்பட்டபோது, திருவதிகையில், ஒருமடத்தில் தங்கி உறங்கும்சமயம் இறைவர் இவர் தலையில் பாதம் சூட்டி அருளினர். பின்பு சிதம்பர தரிசனம் செய்தபோது, இறைவர், இவரைத் தம் தோழராக ஏற்றருளித் திருவாரூர் வருமாறு பணித்தனர். இதனால் 'தம்பிரான் தோழர்' என்ற பெயரும் இவர்க்கு உண்டு.

திருவாரூரில் கமலினியார், பரத்தையர் குடியில் பரவையார் என்ற பெயருடன் வாழ்ந்து வருகையில், அவரைச் சுந்தரர் இறைவர் திருவருளால் மணந்தனர். அவ்வம்மையாருடன் திருவாரூர்த் தியாகேசனை வணங்கச் சென்றபோது, அங்குத் தேவாசிரியர் மண்டபத்தில் இருந்த அடியார்களைக் கண்டு வணங்கி அவர்கட்கெல்லாம் தாம் அடிமை என்று குறிப்பிடும் பதிகம் பாடினார். இதுவே திருத்தொண்டத் தொகை என்பது.

குண்டையூர்கிழார் சுந்தரர்பால் அன்பு கொண்டு நெற்குவியலைத்தர, வன்தொண்டர் இறைவரை ஆட்களை அனுப்புமாறு செய்து, அக்குவியலைத் தம்மாளிகையில் சேர்ப்பித்தனர். திருப்புகலூரை அடைந்து அங்குள்ள செங்கல்லைத் தலையணையாக வைத்துப் படுத்து உறங்கி எழுந்தபோது, அவை பொன்கல்லாக இருக்கக்கண்டு வியந்து பதிகம் பாடினார். திருமுதுகுன்றர் பன்னிராயிரம் பொன்தர, அதனை மணிமுத்தாற்றில் இட்டு, திருவாரூர் கமலாலயக் குளத்தில் எடுத்தருளினார்.

திருக்குருகாவூர் வருகையில் இவரது களைப்புக்கண்டு இறைவர் தண்ணீர்ப்பந்தல் அமைத்து உணவு தந்தனர். திருக்கச்சூரில் உச்சிப்போதில் வந்ததைக் கண்ட சிவபெருமான் , அவ்வூரில் உள்ள வீடுகளில் இரந்து பெற்ற சோற்றை உண்பித்தனர்.

சுந்தரர் திருவொற்றியூரை அடைந்தபோது, அங்கு அநிந்திதையார் வேளாளமரபில் பிறந்து வளர்ந்து சங்கிலியார் என்ற பெயருடன் இருந்த அவ் வம்மையாரை மணக்க இறைவரை வேண்ட அவரும் அதனை நிறைவேற்றினர்.

பின்னர் சுந்தரர் திருவாரூர் செல்ல விருப்பம் கொண்டபோது, திருஒற்றியூர் எல்லையைத் தாண்டினதும், அவர்தம்

இருகண்களும் பார்வை இழந்தன. இதற்குக் காரணம், திருவொற்றியூரைப் பிரிவதில்லை என்று சூள் உரைத்து அதனைத் தவறி வெளியேறியது ஆகும். இறைவர் தம் கண்ணொளியை மறைத்ததை "சங்கிலிக்கா என்கண் கொண்ட பண்பா" என்று பாடி அருளினர். என்றாலும், புறப்பட்டவர் காஞ்சியம் பதியுற்று இறைவரைப் பாடி ஒரு கண்பார்வை பெற்றனர். திருவாரூரை அடைந்து, அங்கு இறைவரை வேண்டி மற்றொரு கண்பார்வை அடைந்தனர்.

பரவையார், சுந்தரர் சங்கிலியாரை மணந்ததால் ஊடல்கொள்ள, அதனை இறைவர் மூலம் தீர்த்துக் கொண்டனர். இந்நிலையில் இவர்க்கும் சேரமான் பெருமாள் நாயனாருக்கும் நட்பு ஏற்பட்டது. இருவரும் புறப்பட்டு வருகையில் காவிரியாறு வெள்ளத்தால் மிக்கு ஓட, அதுபோது, காவிரி வழி விடுமாறு இறைவரை வேண்ட, காவிரி இரு பிரிவாக ஒதுங்கி நிற்க, திருவையாற்றை அடைந்து வணங்கினர்.

சுந்தரர் தம் நண்பரைக் காணச் சேரநாடு செல்கையில், திருப்புக்கொளியூர் அவிநாசியில் முதலையுண்ட பாலகனைப் பதிகம் பாடி எழுப்பினர். இதன்பின் உலக வாழ்வில் வெறுப்புற்றுக் கயிலைக்கு, இறைவர் தந்த வெள்ளை யானையில் இவர்ந்து சென்றனர். இவரைத் தேவர்கள் வெள்ளை யானையுடன் வந்து வரவேற்றனர் என்பதை இவரே,

"இந்திரன் மால்பிரமன் எழிலார்மிகு தேவர்எல்லாம்
வந்தெதிர் கொள்ளஎன்னை மத்தயானை அருள்புரிந்து
மந்திர மாமுனிவர் இவன்ஆர் எனஎம் பெருமான்
நந்தம் ஆரூரன் என்றான் நொடித்தான்மலை உத்தமனே."

என்றே பாடியுள்ளனர். இவர் கயிலைக்கு இறைவனுடன் கலந்த நாள் ஆடி சுவாதி நட்சத்திரமாகும். நிலவுலகில் வாழ்ந்த காலம் பதினெட்டாண்டென்க.

சுந்தரர் பாடிய பதிகங்கள் 38,000. ஆனால், இதுபோதுள்ள பதிகங்கள் 100 மட்டுமே. இந்நூறு பதிகங்கட்குரிய பாடல்களாக இதுபோது உள்ளவை 1026. இவரது பதிகங்கள் 18 பண்களைக் கொண்டு பாடப்பட்டு

வந்துள்ளன. இவரது பாடல்கள் ஏழாம் திருமுறையைச் சேர்ந்தவை.

நம்பி ஆரூரர் பாடல்களில் பற்பல இனிய குறிப்புக்கள் உண்டு. இவரது பாடல்களைப் பற்றி ஒருவர் குறிப்பிடுகையில், "நயத்துக்குச் சுந்தரனுர்" என்றே குறிப்பிட்டுள்ளனர்.

"மகத்தில் புக்கதோர் சனியெனக் கானுய் மைந்தனே
மணியே மணவாளா
அகத்தில் பெண்டுகள் நான்ஒன்று சொன்னல் அழையேல்
போகுருடா எனத் தரியேன்
முகத்தில் கண்ணிழந்து எங்ஙனம் வாழ்கேன் முக்கணு
முறையோ மறையோதி
உகைக்கும் தண்கடல்ஓதம் வந்துலவும் ஒற்றியூர் எனும்ஊர்
உறைவானே."

என்ற ஒரு பாடலே இவர் தம் நயத்துக்குப் போதுமான சான்ருகும்.

பழமொழிகள் பலவற்றை இவர் பாடலில் காணலாம். "பேயோடாயினும் பிரிவு ஒன்று இன்னுது" "கழுதை குங்குமந்தான் சுமந்து எய்த்தால்" என்பனவற்றைக் காண்க. தமிழ்மொழி மாட்டுள்ள அன்பை, "பண்ணிடைத் தமிழ் ஒப்பாய்" "பண்ணுர் இன்தமிழாய்" என்ற தொடரில் காணலாம்.

அகப்பொருட் பாடல்களுக்கும் இவர் பாடல்கள் இடம் தரும். "குரவம் நாறிய குழலினுர் வளைகொள்வதே தொழிலாகி நீர் இரவும் இம்மனை அறிதிரே-இங்கே நடந்துபோகவும் வல்லீரே" என்ற அடிகளில் இக்கருத்தைக் காண்க.

சுந்தரர் காலத்தில் முடியுடை மூவேந்தர் செழித்து வாழ்ந்திருந்தனர் என்பதை "முடியால் உலகாண்ட மூவேந்தர் முன்னே மொழிந்த ஆறும் ஓர்நான்கும்" என்று அவர் பாடி இருப்பதால் காணலாம்.

பல்லவர்கள் ஆட்சியும் நிலவியதை "மண்ணுலகம் காவல் பூண்ட உரிமையால் பல்லவர்க்குத் திறைகொடா மன்னவரை மறுக்கம் செய்யும்" என்று பாடியுள்ளதாலும், "உலகெலாம் கார்க்கின்ற பெருமான் காடவர்கோன் கழற்சிங்கன்" என்று பாடியிருத்தலாலும் அறியலாம். "பாரூர்

பல்லவனூர் மதில்காஞ்சி" என்ற தொடர்கள் பல்லவரை உணர்த்துவதாலும் பல்லவர்களைப் பற்றிய குறிப்புக்களை அறியலாம். இவை வரலாற்றினைச் செம்மைப்படுத்தற்கேற்ற வரலாற்றுக் குறிப்புக்களாகும். "மகத்தில் புக்கதோர் சனி எனக்கானாய்" என்று பாடியதைப் பார்க்கும்போது இதில் அமைந்த சோதிடக் குறிப்பை உணர்ந்து கொள்ளலாம். இயற்கை வர்ணனைகள் மிகுதியும் இவர் பாடலில் உண்டு.

"அரும்பருகே சுரும்பருவ அறுபதம் பண்பாட
அணிமயில்கள் நடமாடும் அணிபொழில் சூழ் அயலின்
கரும்பருகே கருங்குவளை கண்வளரும் கழனிக்
கமலங்கள் முகம்மலரும் கலயநல்லூர் காணே."

என்ற கவி ஓவியத்தைக் காண்க. ஆற்றை வர்ணிக்கையில் "தையல் மடவார்கள் உடைஅவிழக் குழல்அவிழக் கோதை குடைந்தாடக் குங்குமங்கள் உந்திவரும் கொள்ளிடம்" என்று வர்ணித்திருப்பதைப் பார்க்கலாம். உபதேசங்கள் பல இவர் பாடலில் உண்டு.

"செத்தபோதில் ஆரும்இல்லை சிந்தையுள் வைம்மின்கள்."

"பொய்மையாளரைப் பாடாதே எந்தைபுகலூர் பாடுமின் புலவீர்காள்."

"தாழாது அறம் செய்யுமின்."

"வாழ்வாவது மாயம்."

"மண்ணாவது திண்ணம்."

என்பனவற்றைக் காண்க.

சுந்தரர் தமது திருத்தொண்டத் தொகையில் "கடல் சூழ்ந்த உலகெலாம் காக்கின்ற பெருமான் காடவர் கோன் கழற்சிங்கன்" என்று காடவர்கோன் கழற்சிங்கர் தம் காலத்தவர் என்பதைக் காக்கின்ற என நிகழ்காலத்தில் கூறுதலின், இவர் அம்மன்னர் காலத்தவர் என்பது தெளிவு. அம்மன்னர் கி. பி. எட்டாம் நூற்றாண்டின் இறுதியில் இருந்தனர் என்பது வரலாறு கூறும் முடிபு. ஆகவே, சுந்தரர் காலம் கி. பி. 8-ஆம் நூற்றாண்டு என்க.

அப்பர், சம்பந்தர், சுந்தரர் பாடிய பாடல்கள் முதல் ஏழு திருமுறைகள் என்பதை இதுவரையில் அறிந்தோம். இவற்றை 'அடங்கன்முறை' என்றும் கூறுவர். இவையே

இதுபோது தேவாரம் என்று குறிப்பிடப்பட்டு வருகிறது. சிவபெருமான் மீது தோத்திர வடிவில் பாமாலையாக இது பாடப்பட்டிருத்தலின் தே+ஆரம் எனக்கொண்டு இப்பெயர் தரப்பட்டதாகத் தெரிகிறது. தேவாரம் என்பது கிரு-கார்ச்சை. அதாவது வீட்டில் வைத்துப் பூசிக்கத் தக்கது என்ற பொருள் தரும். இது வீட்டில் பூசித்து வந்ததையும் அறிகிறோம். ஆனால், மூவர் பாடல்களுக்கும் தேவாரம் என்ற பெயர் முதல் முதல் வழங்கியதாகத் தெரிந்திலது. மூவர் பாடலையும் பட்டினத்தடிகள், "வித்தகப் பாடல்" என்றனர். தாயுமானவர் "மூவர் சொலும் தமிழ்" என்றனர். சிதம்பர சுவாமிகள் சம்பந்தர் பாடலைத் திருக்கடைக்காப்பு என்றும், சுந்தரர் பாடலைத் திருப்பாட்டு என்றும், அப்பர் பாடலைத் தேவாரம் என்றும் கூறினர். மூவர் பாடிய பாடல்களையும் தேவாரம் என்று முதல் முதல் குறிப்பிட்ட இடம், இரட்டையர் பாடிய ஏகாம்பரநாதர் உலாவில் வரும் "மூவாத பேர் அன்பின் மூவர் முதலிகளும், தேவாரம் செய்த திருப்பாட்டும்" என்ற இடமேயாகும். இம்மூவர் பாடல்களைப் பற்றி இறைவர் கொண்ட கருத்தாக, "சம்பந்தன் தன்னைப் பாடினான். அப்பன் என்னைப் பாடினான். சுந்தரன் பொன்னுக்குப் பாடினான்" என்று கூறுவர்.

மாணிக்கவாசகர்

பாண்டிய நாட்டைச் சார்ந்த திருவாதவூரில் சம்புபாதா சாரியார், சிவஞானவதியார் ஆகிய இருவர்க்கும் பிறந்த பிள்ளையே திருவாதவூரர். இவர் நன்கு வளர்ந்து கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினர். அதனால், இவரை அக்காலத்துப் பாண்டியன் அரிமர்த்தனன் தன் முதல் அமைச்சராக அமர்த்தித் "தென்னவன் பிரமராயன்" என்ற பட்டமும் ஈந்தனன்.

பாண்டியனது குதிரைப் படை குறைந்திருந்ததினால், அதனை நிறைவுபடுத்த பெருவாரியான பொருள் கொண்டு புறப்பட்ட திருவாதவூரர், குதிரை வாங்குதற்குரிய இடத்தைச் சாராது, திருப்பெருந்துறை என்னும் தலத்தை அடைந்து, ஆங்கு இவர் பொருட்டு வந்திருந்த இறைவராம் ஆசாரியரைக் குருந்தமரத்தடியில் கண்டு, உபதேசம் பெற்று, கொண்டுவந்த பணத்தைக் கோவில் கட்டிவிட்ட

னர். இவரை இறைவர் குருபரனாக வந்து ஆட்கொண்டதை "அருபரத்தொருவன் அவனியில் வந்து, குருபரனாகி அருளிய பெருமையும்" என்று திருவாதவூரரே பாடியுள்ளனர்.

குதிரை வராததைக் கண்ட பாண்டியன், இவரை அழைத்துத் தண்டித்தபோது, இறைவர் காட்டில் உள்ள நரிகளைக் குதிரைகளாக்கிக் கொணர்ந்து அரசனிடம் ஒப்படைத்துச் செல்ல, அந்நரிக் குதிரைகள் பழைய வடிவெடுத்து நரிகளாகக் காட்டிற்குச் சென்றுவிட்டன. இதனை மணிமொழியாரே "நரியைக் குதிரைப் பரியாக்கி" என்று குறிப்பிட்டுள்ளார். இதனால் மனம் பொறுத மன்னன் மேலும் தண்டித்தபோது, சிவபெருமான் வைகையில் வெள்ளப் பெருக்கை உண்டாக்கினார். அதனால் உடைப்புக்கள் ஏற்பட, அவற்றை அடைக்க ஊராருக்கு மன்னன் கட்டளையிட யாவரும் முனைந்து அடைக்கலுற்றனர்.

இந்நிலையில் பழுத்த கிழவியாகிய வந்தி என்பாள் ஆள் இல்லாது வருந்துகையில், இறைவர் அப்பணியை ஏற்று அதற்குக் கூலியாகப் பிட்டினைப் பெற்றனர். கூலியாளாக வந்த இறைவர் வேலை செய்யாத காரணத்தால் பாண்டியன் அவரைப் பிரம்பால் அடித்ததும், ஒரு கூடை மண்ணை உடைப்பில் கொட்டி மறைந்தனர். இதனையும் மணிமொழியார் "மண் சுமந்து கூலிகொண்டு அக்கோலால் மொத்துண்டு புண் சுமந்த பொன்மேனி பாடுதும்காண் அம்மானாய்" என்று பாடியுள்ளனர். புத்தரை வாதில் வென்றும், ஊமை பெண்ணைப் பேசவைத்தும், தில்லையில் நிட்டைகூடி இருந்தனர். ஊமைப் பெண்ணைப் பேசவைத்த போது பாடிய பாடலே திருச்சாழல் எனப்படும்.

இறைவன் இவரது பாடல்கள் மாணிக்கம் போன்று இருந்தமையின் மாணிக்கவாசகர் என்று பெயர் ஈந்தனர். இவர் தில்லையில் நிட்டைகூடி இருந்தனர். கூத்தப் பெருமான் இவரது வாசகங்களைத் தம் திருக்கரத்தால் எழுதினார். பின்பு இறைவர் பாவை பாடிய வாயால் (திருவாசகத்தில் ஒரு பகுதியாகிய திருவெம்பாவை) ஒரு கோவை பாடுக, என்று கட்டளை பிறப்பிக்க, அவ்வாறே அதனையும் பாடினர். அதனையும் இறைவர் எழுதிக் கையில் கொண்டு பொன்னம்பலத்தில் வைக்க, அவற்றைக் கண்ட தில்லைவாழ் அந்தணர்கள் திருவாதவூரரை அண்டி உரைகூற வேண்டிய

போது மணிமொழியார் உரை கூறுவதாக அவர்களே அழைத்து வந்து நடராசப் பெருமானைக் காட்டி "இவரே இதற்குப் பொருளாவார்" என்று கூறி அப்பெருமான் திருவுருவில் கலந்தருளினர். அங்ஙனம் கலந்த நாள் ஆனி மாதம் மக நட்சத்திரம் ஆகும். மாணிக்கவாசகர் நிலவுலகில் வாழ்ந்த காலம் 32 ஆண்டுகள்.

திருவாதவூரர் பாடிய தோத்திரப் பாடல்கள் திருவாசகம் எனப்படும். திருக்கோவையாரும் இவரால் பாடப்பட்ட நூலாகும். திருவாசகம் உள்ளத்தை உருக்கும் பாடல் ஆதலின், "திருவாசகத்திற்கு உருகாதார் ஒருவாசகத்திற்கும் உருகார்" என்ற பழமொழியும் எழுந்தது.

இவ்விரு நூல்களும் சைவத் திருமுறைகள் எட்டாம் திருமுறையைச் சார்ந்தவை. திருவாசகம் 51 தலைப்புக்களுடன் 656 செய்யுள்களுடன் திகழ்வது. திருக்கோவையார் நானூறு கட்டளைக் கலித்துறைகளைக் கொண்டது.

திருவாசகத்தில் நாம் அறியக்கூடிய அரிய கருத்துக்கள் பல உண்டு. போற்றித் திருவகவல் தமிழால் அர்ச்சனை புரிதற்கேற்ற வழியில் அமைந்திருக்கிறது.

"கைதர வல்ல கடவுள் போற்றி
ஆடக மதுரை அரசே போற்றி
கூடல் இலங்கும் குருமணி போற்றி
தென்தில்லை மன்றினுள் ஆடி போற்றி
இன்றெனக் காரமு தானாய் போற்றி
மூவா நான்மறை முதல்வா போற்றி."

என்பது முதலான அடிகளே இதற்குப் போதுமானவை,

திருவாசகத்திலும் அகப் பொருட் பாடல்கள் உண்டு. "சிவன்திரள் தோள், கூடுவேன் கூடி முயங்கி மயங்கி நின்று ஊடுவேன் செவ்வாய்க்கு உருகுவேன்" என்ற அடிகளைக் காண்க.

உபதேசப் பாடல்கள் பல உள. "காலமுண்டாகவே காதல் செய்து உய்மின்" "விடுமின் வெகுளி" "புகழ்மின் தொழுமின் பூப்புனைமின்" என்ற அடிகளும் தொடர்களும் சொற்களும் இக் கருத்துக்கு ஏற்றன ஆகும்.

மாதர்கள் பாடும் பாடல்களாக அம்மானை, திருப் பூவல்லி, திருப்பொற்சுண்ணம், திருவுந்தியார் முதலியன உண்டு. திருப்பள்ளி எழுச்சி தினம் காலையில் பாடுதற்கு ஏற்றது. திருவெம்பாவை மார்கழி மாதம் காலையில் ஓது தற்குரியது.

நகைச் சுவை ததும்பும் பாடல்களும் திருவாசகத்தில் உண்டு.

"உழைதரு நோக்கியர் கொங்கைப் பலாப்பழத்து ஈயின்
ஒப்பாய்
விழைதரு வேனை விடுதிகண் டாய்விடில் வேலைநஞ்சுண்
மழைதரு கண்டன் குணமிலி மானிடன் தேய்மதியன்
பழைதரு மாபரன் என்றென் றறைவன் பழிப்பினையே."

என்ற பாடலைக் காணவும்.

கோவை நூல்களுள் முதல் முதல் தோன்றிய கோவை திருக்கோவையாராகும். ஏனைய கோவைகள் பாட்டுடைத் தலைவன் பெயரையோ தலத்தின் பெயரையோ சார்ந்த பெயராகவே இருக்கும். ஆனால், கோவை என்ற பெயரா லேயே இந் நூல் வழங்கப்பட்டு வருவது இதன் சிறப்பை உணர்த்துவதாகும். திரு என்னும் அடைமொழி முன்னும், ஆர் என்னும் சிறப்பு விகுதி பின்னும் அமைந்திருப்பதே இதன் மாண்பைக் காட்டுவதாகும். திருச்சிற்றம்பலக் கோவை என்ற பெயரும் இதற்குண்டு. இந்நூலால் உணரக் கிடைக்கும் கருத்துக்கள் பற்பல. காக்கையிரு கண்களைப் பெற்றும், ஒன்று சேரப் பார்க்க இயலாது. ஒவ்வொன்றால் தான் பார்க்கும் இயல்பினது. இதனை "காகத் திருக்-கண்ணிற்கு ஒன்றே மணிகலந்தாங்கு" என்று கூறிய நுட்பத்தைக் காண்க. பழமொழிகளும் எடுத்தாளப் பட்டதை, "வைகொண்ட ஊசி கொல் சேரியில் விற்று" என்ற தொடரில் பார்க்கலாம். இலக்கியச் சுவைக்கு எடுத்துக் காட்டாக "பலாவின்சுளை பைந்தேனொடும் கடுவன், மந்தியின் வாய்க் கொடுத் தோம்பும்" என்ற தொடரை எடுத்துக் காட்டலாம்.

சிதம்பரத்தில் இதுபோதுள்ள கோவிந்தராசப் பெரு மான் நடராஜப் பெருமான் சந்நிதிக்கு நேரே கால் நீட்டி உறங்கும் நிலையில் உள்ளார். ஆனால், வாதவூரர் காலத்தில்

தலைப்பக்கமே இறைவர் திருவடிப் பக்கம் வைத்த கோலத்தில் இருந்தார். இந்த அரிய குறிப்பு, திருக்கோவையாரில் உண்டு. இதனை "வரங் கிடந்தான் தில்லை அம்பலமுன்றில் அம்மாயவனே" என்று குறித்திருப்பதால் உணரலாம்.

தலைவி தன் கண்களைத் தன் கரத்தால் மூடிக்கொண்டனள். தலைவன் அதுகண்டு உன் கண்களை மட்டும் மூடிப் பயனில்லை. உன்னை முற்றும் மறைப்பதே தக்கது, என்ற பொருள் படும்படி

"தாழச்செய் தான் முடி தன்னடிக்கீழ் வைத்த வரைவிண்ணோர்
சூழச்செய் தான்அம் பலம்கை தொழாரின் உள்ளம்துளங்கப்
போழச்செய் யாமல்வை வேல்கண் புதைத்துப்பொன்னே என்னைநீ
வாழச்செய் தாய்சுற்றும் முற்றும் புதைநின்னை வாணுதலே"

என்றபாடலைப் படிக்கும்போது இன்பச் சுவை ததும்புதலைக் காணவும்.

ஒரு சிலர், "திருக்கோவையார் மாணிக்கவாசகரால் பாடப்பட்டதன்று. திருவாசகம் ஒன்றே அவரால் பாடப்பட்டது. திருக்கோவையாரைப் பாடியவர் வாதவூர் சிவபாத்தியன்" என்று கூறி நம்பியாண்டார் நம்பிகள் வாக்காகிய "வாதவூர் சிவபாத்தியன் செய் திருச்சிற்றம்பலப் பொருளார் தரு திருக்கோவை" என்ற அடிகளை எடுத்துக் காட்டுவர். "திருக்கோவை நானூறும் மொழிந்தருளும் மாணிக்கவாசகனை" என்றும் "சிற்றம்பலக் கோவைத் தேன்சொரியும் திருவாதவூரனை", என்றும், முறையே செவ்வந்திபுராணமும், திருவெண்காட்டுப் புராணமும் கூறுவதாலும், "தன்சீர் அடியார்குலம் பணிகொள்ள எனைக் கொடுத்தோன்" என்னும் கோவை அடி, வாசகத்தில் "இணங்கத்தன் சீர் அடியார் கூட்டமும்" என்றும், இவ்வாறே, "அருளார் தொழியின் ஒழியாதழியும் என் ஆருயிரே", என்னும் கோவை அடி, "அருளா தொழிந்தால் அடியேனை அஞ்சேல் என்பார் ஆர்" என்று வாசகத்திலும், மேலும், "நாயில் கடையாய்க் கிடந்த அடியேற்கு" என்னும் திருவாசக அடி, கோவையில் "நாய்வயின் உள்ள குணமும் இல்லேனை" என்று வருமாற்றுலும் திருக்கோவையார் மணிமொழியாரால் பாடப்பட்ட தென்பதே முடிந்த முடிபு.

திருவாதவூரர் காலம், மூவர் முதலிகட்கும் முந்திய-தாகும். இதற்குரிய காரணங்கள் பலவாகும். விநாயகரைப் பற்றிய குறிப்புச்சங்க நூல்களில் இல்லை. திருவாசகத்திலோ திருக்கோவையாரிலோ இக்குறிப்புக் காணப்பட்டிலது. சேர சோழ பாண்டியர் குறிப்பே சங்கநூலில் உண்டு. இந்தக் குறிப்பே வாதவூரர் வாக்கில் உளது. "தென்னவன் சேரலன் சோழன் சீர்ப்புயங்கன் வரக்கூவாய்" என்ற அடியினைக் காண்க. அப்பர் காலம் கி. பி. ஏழாம் நூற்றாண்டு என்பதை முன்னர் நிறுவினோம். அவ்வப்பரே "நரியை குதிரை செய்-வானும்" என்று மணிமொழியர் காரணமாக இறைவர் நரி பரியாக்கியதையும், இவ்வாறே மணிமொழியாரை வையை யாற்றில் நிறுத்தியபோது, வெள்ளம் பெருகச் செய்து உடைப்புக்களை உண்டாக்கி, அதுபோது வந்தியின் பங்கை அடைக்க இறைவர் கூலியாளாக வந்து வைகையில் நின்ற நிலையினை, "மணியார் வையைத் திருக்கோட்டில் நின்ற-தோர் திறமும்" என்றும், "குடமுழா நந்தீசனை வாசகனுக் கொண்டார்" என்று கூறுமாற்றால் மணிமொழியார் அப்பருக்கு முற்பட்டவர் என்பதும் தெளிவாதல் காண்க. அப்பர், சம்பந்தர் காலத்தவர். சுந்தரர் இவ்விருவர்க்கும் பிற்பட்டவர். இந்த விளக்கம் முன்பே விளக்கப்பட்டது. ஆகவே, மூவர் முதலிகட்கும் முந்தியவர் என்பது தேற்றம். மூவரும் தம்வாக்கில் பற்பல அடியார்களைக் குறிப்பிட்டுள்-ளனர். மணிமொழியார் மிகப் பழைய அடியார்களாகக் கண்ணப்பரையும், சண்டேசுரரையும் மட்டுமே குறிப்பிட்டுள்-ளனர். ஆனால், மூவர்க்கும் பிந்தியவர் மணிமொழியார் எனப் பலர் கூறுவதன் பொருள்தான் என்னே? எனில், அன்னர் கூறும் கூற்றுகட்கெல்லாம் விடையாக, யான் எழுதியுள்ள "பொய்யடிமை இல்லாத புலவர் யார்?" என்ற ஆய்வு நூலில் பரக்கக் காண்க. அற்றேல், சுந்தரர் எல்லா அடியார்களையும் குறிப்பிட்டதுபோல, தமக்குமுன்பிருந்த திருவாதவூரரை ஏன் குறிப்பிட்டிலர், என்ற வினு எழும்பில் அதற்கு விடை, அவர் குறிப்பிடாமல் இலர், என்பதே. அவர் பொய்யடிமை இல்லாத புலவர் என்ற தொடரால் மணிமொழியாரைக் குறிப்பிட்டனா. பொய்யடிமை இல்லாத புலவர் திருவாதவூரரே என்ற விளக்கத்தையும், அவ்வாய்வு நூலில் காணவும். இன்னோரன்ன காரணங்களால் மணி-மொழியார் காலம் சங்க காலத்திற்குப் பிற்பட்டும், மூவர் முதலிகட்கு முற்பட்டும் இடையே யுள்ள கி. பி. நான்காம் ஐந்தாம் நூற்றாண்டாகும்.

ஒன்பது முதல் பன்னிரு திருமுறைகள்

திருவிசைப்பா ஆசிரியர்கள்: ஒன்பதாம் திருமுறையினைப் பாடியுள்ள பெரியவர்கள் ஒன்பதின்மர். அவர்கள் திருமாளிகைத்தேவர், சேந்தனார், கருவூர்த்தேவர், பூந்துருத்தி நம்பிகாடநம்பி, கண்டராதித்தர், வேணாட்டடிகள், திருவாலி அமுதனார், புருடோத்தமநம்பி, சேதிராயர் என்பவர்கள். இவ்வொன்பதின்மர் பாடல்களும் திருவிசைப்பா எனப்படும். இது திருவிசைப்பாமாலை என்றும் வழங்கப்பட்டது. சேந்தனார் பாடிய திருப்பல்லாண்டும் இந்த ஒன்பதாம் திருமுறையில் உண்டு.

திருவிசைப்பாவில் உள்ள மிகுதியான பாடல்கள் சிதம்பரத்தைப் பற்றியனவாகும். இத்திருவிசைப்பாப் பாடல்கள் முதலாம் இராசராசன் காலத்தே சிறப்புற்றிருந்தன என்பது கோயிலில் பணிபுரியும் பெண்கள் திருவிசைப்பாப் பாடல்களின் தொடர்களின் பெயர்களைக் கொண்டிருத்தலால் தெரிய வருகிறது. அப்பெயர்கள் நீறணிபவளக்குன்றம், எடுத்தபாதம், மழலைச்சிலம்பு என்பன. முருகன்மீது பாடப்பட்ட பதிகம் ஒன்று திருவிசைப்பாவில் உண்டு. தேவாரத்தில் காணப்படாத சாளரபாணி என்னும் பண் திருவிசைப்பாவில் உளது. இனி இவ்வாசிரியர்கள் வரலாற்றைப் பார்ப்போமாக.

திருமாளிகைத் தேவர்: இவர் போகர் என்னும் சித்தரின் மாணவர். இவர் திருவாவடுதுறையில் வாழ்ந்தவர். இவரது திருவுருவம் திருவாவடுதுறை திருமடத்தில் வைத்துப் பூசிக்கப்படுகிறது. திருவாவடுதுறைக் கோயில் மதில்களின்மீது இடப உருவங்களே இதுபோது இல்லாமல் இருப்பதைக் காணலாம். அதற்குக் காரணம் நரசிங்கமன்னனைக் கொல்லத் திருமாளிகைத்தேவர் அம்மதில் மீது இருந்த இடபங்களை ஓர் உருவாக்கி ஏவிக் கொன்றனராம். இவர் சிவபூசையினைச் சிறப்பாகச் செய்தவர். இவர் காலத்தில் கருவூர்த்தேவரும், சேந்தனாரும் இருந்தனர். தேவர் செய்த அற்புதங்கள் பல. இவர் ஆகாயத்தில் குடிசையையும், குடத்தையும் நிறுவினர். பிணத்தை நடக்கச் செய்தனர். வடம் (கயறு) இல்லாமல் தேரை நடத்தினர். மதில் நந்திகளை ஓர் உருவாக்கினர். வெந்த பயற்றை முளையாகச் செய்தனர்.

இவரது பதிகங்கள் நான்கு. இவை சிதம்பரத்தின்மீது பாடப்பட்டவை. மூன்றும் பதிகம் அகப்பொருளைத் தழுவியது. இவரது பாடல் தொகை 45. இவரது காலம் கி. பி. 10 ஆம் நூற்றுண்டு இறுதியும் 11 ஆம் நூற்றுண்டு தொடக்கமும் ஆகும்.

"எட்டுரு விரவி என்னை ஆண்டவன் ஈண்டு சோதி
விட்டிலங் கலங்கல் தில்லை வேந்தனைச் சேர்ந்தி லாதே
துட்டரைத் தூர்த்த வார்த்தைத் தொழும்பரைப்
பிழம்பு பேசும்
பிட்டரைக் காணு கண்வாய் பேசாதப் பேங்க ளோடே."

சேந்தனுர்: இவர் திருவீழிமிழலையில் இருந்தவர் என்பர். இவர் பட்டினத்தடிகளார் இல்லறத்தில் ஈடுபட்டிருந்தகாலை, அவரது காரியத்தராக இருந்தனர் என்றும், அவர் துறவுநிலை மேற்கொண்டபோது, அவரது செல்வத்தைப் பலர்க்கும் தானம் செய்தனர் என்றும், அதன் காரணமாக அக்காலத்து மன்னன் இவரைச் சிறை இட்டனன் என்றும் கூறுவர். இதனை அறிந்த பட்டினத்தடிகள் இறைவனை நோக்கி "நாங்கூர்ச் சேந்தனை வேந்தன் இட்ட கைத்தளை நீக்கி என்முன் காட்டுவெண் காட்டுளானே" என்று வேண்டிச் சிறை நீக்கம் செய்தார் என்பர். இதனுல் நாங்கூர் நாட்டினைச் சார்ந்தவர் சேந்தனுர் என்பாரும் உளர். இவ்வூர் திருவெண்காட்டிற்கு அண்மையில் உளது. அதன் பின் விறகு விற்று வாழ்ந்து, அவ்வாழ்க்கையிலும் ஒரு சிவனடியாரைத் தினமும் உண்பித்துத் தம்மனைவியாருடன் வாழ்ந்தனர். சிவபெருமான் ஒருநாள் இவர் இல்லம் சார்ந்து கூழ் உண்டு, இங்ஙனம் உண்ட குறிப்பினைத் தம் திருமேனியில் காண்பித்தனராம். நடராசப் பெருமானுக்குத் தவிட்டை நிவேதனம் செய்ததாகவும் கூறுவர். திருவாதிரையின்போது களிசெய்து படைத்தல் உண்டு. அங்ஙனம் முதல் முதல் படைத்தவர் சேந்தனுரே என்ற வழக்கு உண்டு.

சேந்தனுர் பாடிய திருவிசைப்பாப் பதிகங்கள் மூன்று. அவை முறையே திருவீழிமிழலை, திருவாவடுதுறை, திருவிடைக்கழி ஆகிய தலத்தின்மீது பாடப்பட்டவை. திருப்பல்லாண்டும் இவரால் பாடப்பட்டது. அது சிதம்பரத்-

தில் தேர் ஓட்டம் நடக்கப் பாடப்பட்டதாகும். ஆக, நாலு பதிகங்கள் இவரால் பாடப்பட்டன. பாடப்பட்ட பாடல் தொகை 47. திருவிடைக்கழித்தலத்தின் மீது பாடப்பட்ட பதிகம் முருகனைப் பற்றியது. அகப்பொருள் தழுவியது. அந்தாதித் தொடையால் அமைந்தது. ஏனைய மூன்று பதிகங்கள் சிவபெருமானைப் பற்றியவை. இவற்றுள் திருவாவடுதுறைப் பதிகம் அந்தாதித் தொடையால் ஆனது.

சேந்தனார் திருமாளிகைத்தேவருடன் சிதம்பரம் சென்றனர் என அறியப்படுதலின், இவரது காலம் கி. பி. 10 அல்லது 11 ஆம் நூற்றாண்டு என்பது புலனாகிறது.

"கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமாக் கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎம் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக்கண்டு கண்டு உள்ளம்
குளிரஎன் கண்குளிர்ந் தனவே."

"மிண்டு மனத்தவர் போமின் மெய்யடி யார்கள்
விரைந்து வம்மின்
கொண்டும் கொடுத்தும் குடிகுடி ஈசற்கு ஆட்செய்ம்மின்
குழாம்புகுந்து
அண்டம் கடந்த பொருள்அள வில்லதோர் ஆனந்த
வெள்ளப்பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ள பொருள்என்றே
பல்லாண்டு கூறுதுமே."

கருவூர்த் தேவர்: கருவூரில் இருந்தவர் இவர். இக்கருவூர் கொங்கு நாட்டைச் சார்ந்தது. இவர் கருவூர் சித்தர் என்றும் கூறப்படுவர். போகர் மாணாக்கரும் ஆவார். கொங்கு நாட்டுக் கருவூரே அன்றிச் சோழநாட்டிலும் ஒரு கருவூர் உண்டு. ஆகவே, சோழநாட்டுக் கருவூரில் இருந்தவர் என்றும் கூறுவர். இவரது உருவம் இச்சோழ நாட்டுக் கருவூர் ஆனிலைத் திருக்கோயிலில் உளது. இவரைக்

கருவூர்ப்பிரான் என்றும் கூறுவர். தஞ்சாவூர், மூலட்டான இலிங்கம் நிறுவப்பட்டபோது பயன்படுத்தப்படும் மருந்து இளகிய காரணத்தால் நிறுவனம் சரிவர அமையாத நிலையில் இவரது சித்துக் காரணமாக அம்மருந்தைச் சரிப்படுத்தி அச்சிவலிங்கத் தாபனம் செய்தனர். இவரது பதிகங்கள் பத்தாகும். அவை, சிதம்பரம், திருக்களந்தையாதித்தேச்சரம், திருக்கீழ்க்கோட்டூர்மணி அம்பலம், திருமுகத்தலை, திரைலோக்கிய சுந்தரம், கங்கைகொண்ட சோளேச்சரம், திருப்பூவணம், திருச்சாட்டியக்குடி, தஞ்சை இராசராசேச்சரம், திருவிடைமருதூர் என்னும் தலங்கள்மீது பாடப்பட்டவை. பாடல்தொகை 105 ஆகும். இவர் திருமாளிகைத் தேவர் காலத்தவர். ஆகவே, இவரது காலம் கி. பி. 10 அல்லது 11 ஆம் நூற்றுண்டு.

இவரது திரைலோக்கிய சுந்தரப் பதிகம் அகப்பொருட் குறிப்பினைத் தன்னகத்துக் கொண்டது.

"நையாத மனத்தினனை நைவிப்பான்இத் தெருவழியே
ஐயா நீஉலாப் போந்த அன்றுமுதல் இன்றுவரை
கையாரத் தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள்கோடைத் திரைலோக்கிய சுந்தரனே."

பூந்துருத்தி நம்பி காடநம்பி: இவரது பெயரால் இவர் திருப்பூந்துருத்தியில் வாழ்ந்தவர் என்பது தெரிகிறது. கடநம்பி என்பதால் பல்லவ மரபினர் என்று துணியவும் இடம் உளது. இவரை ஆதி சைவ மரபினர் என்றும் கூறுவர். இவர் ஆத்திரேய கோத்திரத்தினர் என்று கூறப்படுவதும் உண்டு. முதல் இராசராசன் காலத்துச் சாசனம் ஒன்றில் நம்பி காட நம்பி என்ற பெயர் காணப்படுதலின், இவர் முதல் இராசராசன் காலமாகிய 10 அல்லது 11 ஆம் நூற்றுண்டினராக இருக்க வேண்டும்.

இவர் பாடியனவாக இரு பதிகங்கள் உள. ஒன்று திருவாரூர்மீதும், மற்றொன்று கோயில் (சிதம்பரம்) மீதும் பாடப்பட்டவை. முன்னது இரு பாடல்களையும் பின்னது பத்துப் பாடல்களையும் கொண்டவை. இவரது பதிகங்களில்தான் சாளரபாணிப்பண் காணப்படுகிறது.

"பத்தியாய் உணர்வோர் அருளை வாய்மடுத்துப்
பருகுதோறு முதமொத்த தவர்க்கே
தித்தியா இருக்கும் தேவர்காள் இவர்தம்
திருவுரு விருந்தவா பாரீர்
சத்தியாய்ச் சிவமாய் உலகெலாம் படைத்த
தனிமுழு முதலுமாய் அதற்கோர்
வித்துமாய் ஆரூர் ஆதியாய்வீதி
விடங்க ராய் நடங் குலாவினரே."

கண்டராதித்தர் : இவர் கண்டராதித்த பெருமான் என்றும் கூறப்படுவர். சோழமரபினர்; முதல் பாரந்தகன் திருமகனுர். இதனை இவரது வாக்காகிய, "காரார் சோலைக் கோழி வேந்தன் தஞ்சையர் கோன்கலந்த, ஆரா இன்சொல் கண்டராதித்தன்" என்பதால் அறிய வருகின்றது. மேலும், இவரது தந்தையாரான முதல் பராந்தக சோழன் தில்லைச் சிற்றம்பலத்திற்குப் பொன்வேடு வேய்ந்ததையும், "செங்கோல் சோழன் கோழி வேந்தன் செம்பியன் பொன் அணிந்த, அங்கோல் வளையார் பாடி ஆடும் அணிதில்லை" என்றும் பாடியுள்ளார். இவர் சிவஞான கண்டராதித்தர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளார். இவரது காலம் கி. பி. 10 ஆம் நூற்றுண்டு. இவரது மனைவியார் செம்பியன்மா தேவியார். இவ்விருவரது வடிவங்களை இராசராசன் அமைத்து வணங்கியுள்ளான்.

இவரது பதிகம் ஒன்றே. அது தில்லைமீது பாடப்பட்டது. பத்துப் பாடல்களைக் கொண்டது.

"மூத்தீ யாளர்நான் மறையர் மூவாயிரவர் நின்னே
டொத்தே வாழும் தன்மையாளர் ஓதியநான் மறையைத்
தெத்தே என்று வண்டுபாடும் தென்தில்லை அம்பலத்துள்
அத்தா உன்தன் ஆடல்காண அணைவதும் என்றுகொலோ."

வேணுட்டடிகள் : இவர் வேணுட்டைச் சார்ந்தவர். இந்நாடு கொடுந்தமிழ் நாட்டைச் சார்ந்தது. வேணுடு என்பது தென்திருவாங்கூர் ஆகும். ஆகவே, இது சேரநாட்டைச் சார்ந்தது. இவர் அச்சேர அரசருள் ஒருவராக இருக்கலாம். இவரது காலமும் கி. பி. பத்தாம் நூற்றுண்டாகும் என்பர். இவரது பதிகம் ஒன்றே. அது தில்லைமீது பாடப்பட்டது. பத்துப்பாடல்களைக் கொண்டது.

"நின்று நினைந்து இருந்து கிடந்து எழுந்து தொழுந்
தொழும்பனேன்
ஒன்றி ஒருகால் நினையா திருந்தாலும் இருக்க ஒட்டாய்
கன்று பிரிவகற்றுப்போல் கதறு வித்திவரவு நில்லாய்
நின்றிதுவோ திருத்தில்லை நடம்பயிலும் நம்பரனே."

திருவாலி அமுதனார்: திருவாலி என்பது வைணவ தலங்களில் ஒன்று. அது சோழநாட்டைச் சார்ந்தது. ஆனால், இப்பெரியார் தம்மைப்பற்றிக் கூறிக்கொள்ளும்போது, "மயிலையர் மன்னவன் மறைவல திருவாலி" என்றும், "மயிலை மறைவல வாலி" என்றும் கூறியிருப்பதால், இவர் மயிலையில் வாழ்ந்தவராக இருக்கவேண்டும். இங்ஙனம் இருக்க இவர் திருவாலி அமுதனார் என்றதன் கருத்து, இவரது பெற்றோர்கள் திருவாலி அமுதனாராம் திருமாலிடத்துப் பேரன்பு கொண்டிருந்த காரணத்தால் அப்பெயரைச் சூட்டினர் போலும்! இவர் சிவபெருமானிடத்து அன்பு கொண்டவராய் இருந்தனர். இவர் தம்மை "மறைவல்" என்று அடைகொடுத்துப்பாடி இருத்தலின், இவர் வேதம் ஓதும் குலத்தவராக இருக்கவேண்டும். இவர் மயிலையில் சிறந்த தலைவராக இருந்திருக்கலாம் என்பதும் இவரது வாக்காம், "மயிலையில் மன்னன்" என்ற தொடரால் தெரிகிறது. இவர் பாடியுள்ள தில்லைப் பதிகங்கள் நான்கனுள் ஒன்றில் மட்டும்தான் "அமுதன்" என்ற குறிப்பு உளது. ஏனைய மூன்று பதிகங்களிலும் "ஆலி" என்ற பெயரே காணப்படுகிறது.

இவரது பாடல் தொகை 42. இவரது இரண்டாம் பதிகம், நான்காம் பதிகம் அகப்பொருள் தழுவியவை. அந்தாதித் தொடையாலும் அமைந்தவை. இவர் சுந்தரரைத் தம் பதிகத்துள் குறித்துள்ளமையின் அவரது காலத்திற்குப் பிற்பட்டவர் ஆவார். ஆக இவரை கி. பி. 10 ஆம் நூற்றாண்டு என்னலாம். இவரது முதல் பதிகம் இறைவரை அவரது பாதம் தொடங்கி முடிவரையில் புகழ்ந்து கூறுகிறது. இதனைப் பாதாதி கேசப் புகழ்ச்சி என்பர்.

"மையல் மாதொரு கூறன்மால் விடையேறி மான்மறி
ஏந்திய தடம்
கையன் கார்புரையும் கறைக்கண்டன் கனல்மழுவன்

ஐயன்ஆர் அழல் ஆடுவான் அணிநீர் வயல்தில்லை
அம்பலத்தார்
செய்யபாதம் வந்தென் சிந்தையுள் இடம் கொண்டனவே."

புருடோத்தம நம்பி : நம்பி என்னும் பெயர்க்கு என்ன பொருளோ, அப்பொருளே புருடோத்தமன் என்பதற்கும். ஆக ஒரு பொருளே கொண்ட இருசொல்லால் பெயர் பெற்ற இச்சிவனடியார் ஊர்பற்றி நாம் அறிதற்கில்லை. ஆனால், இவர் வேதியர் மரபினர் என்பதை, இவரே "மாசிலா மறைபல ஓது நாவன்வண் புருடோத்தமன்" என்று கூறுவதால் அறியலாம். புருடோத்தமன் என்று மட்டும் இவர் வழங்கப்பட்டார் என்பதையும் இத்தொடர்வழி உணரலாம். புருடோத்தமன் என்பது திருமால் பெயர்களில் ஒன்று. இவரது பெற்றோர்கள் திருமால் நெறியினராக இருந்த காரணத்தால், தம்பிள்ளைக்கு இப்பெயர் இட்டிருக்கலாம் என்பது யூகிக்கப்படுகிறது.

இவரது திருவிசைப்பாப் பதிகம் இரண்டு ; கோயிலைப் (சிதம்பரம்) பற்றியதாகும். அகப்பொருள் தழுவினவாகவும் உள்ளன. பாடல் தொகை 22. இவரது காலத்தைப் பற்றி யாதும் கூற இயலவில்லை. நம்பியாண்டார் நம்பிகட்கு முற்பட்ட காலமாக இருக்கவேண்டும். அதாவது கி. பி. 10 ஆம் நூற்றாண்டு என்னலாம்.

"முத்தர் முதுபகலே வந்து என்தன் இல்புகுந்து
பத்தர் பலிஇடுக என்றெங்கும் பார்க்கின்றார்
சித்தர் கணம்பயிலும் தில்லைச் சிற்றம்பலவர்
கைத்தலங்கள் வீசிநின் றாடுங்கால் நோக்காரே."

சேதிராயர் : இவர் சேதிநாட்டு மன்னர் மரபினராதல், இவரது பெயரால் தெரியவருகிறது. சேதிநாடு திருக்கோவலூர் பக்கம் உள்ளது. இவரே தாம் மன்னர் மரபினர் என்ற குறிப்பினை, "எழில் சேதிபர் கோன்" என்று பாடியுள்ளனர். சேதியர்பிரான் என்றும் கூறப்பட்டனர். சேதிபர்கோன் என்று பாடி அறிவித்துள்ளனர். மற்றப்படி வேறு செய்திகளை நாம் அறிவதற்கில்லை. இவரது காலமும் நம்பியாண்டவர் நம்பிக்கு முற்பட்டதாகும்.

இவர் பாடிய பதிகம் ஒன்றே. அது தில்லைமீது பாடப்பட்டது; அகப்பொருள் தழுவியது.

"மாதொர் கூறன் வண்டார்கொன்றை மார்பன்என்று
ஓதில் உய்வன் ஒண்பைங் கிளியேஎனும்
சேதித்தீர் சிரம்நான் முகனைத் தில்லை
வாதித் தீர்என் மடக்கொடி யையே."

திருவிசைப்பாவில் உள்ள பதிகங்கள் மொத்தம் 28. திருப்பல்லாண்டுப் பதிகம் ஒன்று ஆக 29 பதிகங்கட்குரிய பாடல்கள் 301. திருவிசைப்பாவில் பாடப்பட்ட தலங்கள் 14. மிகுதியான பதிகங்களைப் பெற்ற தலம் (கோயில்) சிதம்பரமாகும். 29 பதிகங்களுள் 16 பதிகங்கள் சிதம்பரத்திற்குரியன. இத்தொகுப்பு நூலின் காலத்தைத் தொகுத்துக் கூறினுல், ஆதித்தசோழன் காலம் முதல், கங்கை கொண்ட சோழன் காலம் வரை என்று சுருங்கக் கூறலாம்.

திருமூலர்

பத்தாம் திருமுறையினைப் பற்றி இனி ஆராய்வோம். பத்தாம் திருமுறையாவது திருமந்திரம் என்னும் நூலாகும். இதனைத் 'திருமந்திரமாலை' என்றும் 'தமிழ் மூவாயிரம்' என்றும் கூறுவர். இதனுல் திருமந்திர நூலில் மூவாயிரம் பாடல்கள் இருந்தன என்பதை உணர்கிறோம். இந்நூலாசிரியரே "மூலன் உரை செய்த மூவாயிர மந்திரம்" என்பதனுலும் இவ்வுண்மை விளங்குகிறது. ஆனுல் இதுபோதுள்ள பாடல்கள் மூவாயிரத்திற்கு மேற்பட்டவை.

இந்நூல் ஒன்பது தந்திரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு தந்திரமும் ஒவ்வோர் சைவ ஆகமக் கருத்தைக் கொண்டது என்பது சைவ மரபாகும். தந்திரம் என்பதன் பொருள் ஆகமம் என்பது. ஒன்பது தந்திரங்களே அன்றிப் பாயிரம் என்ற ஒரு பிரிவும் இதன்கண் உண்டு.

பாயிரத்தில் கடவுள் வணக்கம், அவை அடக்கம், ஆகமச் சிறப்பு, குருபாரம்பரியம், திருமூலர் வரலாறு வேதச்சிறப்பு, மும்மூர்த்திகளின் முறைமை, முதலியன பேசப்படுகின்றன. இந்நூலில் தலைப்புக்களின் அமைப்பு முறை பலவாருக அமைந்துள்ளது. இந்நூல் சிவ சக்தி வழிபாட்டையும், பஞ்சாட்சர மாண்பையும் வற்புறுத்திப் பேசுகிறது.

"தானே இருநிலம் தாங்கிவிண் ணாய்நிற்கும்
தானே சுடும்அங்கி ஞாயிறும் திங்களும்

தானே மழைபொழி தையலு மாய்நிற்கும்
தானே தடவரை தண்கட லாமே."

முதல் தந்திரம் அறத்தைப்பற்றி அடிப்படையான கருத்துக்களை மொழிகின்றது. இதில் உள்ள கருத்துக்கள் திருக்குறள் கருத்துக்களை முற்றிலும் கொண்டு விளங்குகின்றன. எச்சமயத்தவரும் மேற்கொள்ளும் அறங்களே இத்தந்திரத்தில் கூறப்பட்டுள்ளன.

"தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுரு சிந்தித்தல் தேனே."

இன்னோரன்ன அரும்பெருங் கருத்துக்களைத் தன்னகத்தே கொண்ட நூலையாத்த பெரியார் ஒரு யோகியார். இவர் தென்னாட்டுத் தலங்களைத் தரிசிக்கப் புறப்பட்டனர். வரும்வழியில் திருவாவடுதுறைக்கு அருகில் உள்ள சாத்தனூரைக் கடக்கையில், மாடுமேய்க்கும் இடையன் இறந்து கிடப்பதையும், அவனைச்சுற்றி ஆடுமாடுகள் சூழ்ந்து வருந்தும் காட்சியையும் கண்டு இரக்கம் கொண்டு, அவனது உடலில் தம் உயிரைப் புகுத்தி அவன் வடிவில் இருந்து ஆடுமாடுகளின் துயரைப்போக்கி மாலையானதும், அவை அவை சேரவேண்டிய இடங்களில் சேர்த்துத் திருவாவடுதுறையில் அரசமரத்தடியில் யோகமிருந்து ஆண்டுக்கொருமுறை விழித்து மூவாயிர மந்திரங்களை மொழிந்து வீடு பெற்றனர். இறந்த இடையன் மூலன் என்ற பெயரினன். அவன் உடலில் புகுந்திருந்தமையின் இவர் மூலர் என்றே அழைக்கப்பெற்றனர். இவர் மூவாயிரம் ஆண்டுகள் இருந்தனர் என்றதை இவரே, "இருந்தேன் இக்காயத்தே எண்ணிலி கோடி" என்று கூறியதால் அறியலாம். இவரது திருவுருவம் இன்றும் திருவாவடுதுறையில் உட்பிரகாரத்தில் உள்ளது. சேக்கிழாரும், "தமிழ் மூவாயிரம் சாத்தி மன்னிய மூவாயிரத்தாண்டு இப்புவியில், மகிழ்ந்திருந்து" எனக் கூறிப் போந்தார்.

இவரது காலத்தைப் பற்றிய கருத்து வேற்றுமை பல உண்டு. ஆனால், இவர் மூவர் முதலிகட்கு முற்பட்டவர்

என்பது தெளிவு. திருஞான சம்பந்தர்தாம் திருவாவடு-துறையில் பலிபீடத்தின்கீழ் இருந்த திருமந்திரத்தை வெளிப்படுத்தினர் என்பர். திருஞானசம்பந்தர் காலம் கி. பி. ஏழாம் நூற்றுண்டு. ஆகவே, அவருக்கும் முற்பட்ட-வர் இவர் என்க. மேலும், திருமந்திரம் முழுவதிலும் விநாய-கரைப் பற்றிய குறிப்பு யாதும் இல்லை. சங்க நூற்களிலும் இக்குறிப்பு இல்லை. ஆகவே, இவரது காலம் சங்ககாலத்-திற்கும் பின்னும் மூவர் முதலிகட்கு முன்னும் உள்ள காலம் என்பது தெளிவு.

ஆனுல், ஒரு சிலர் திருமந்திர நூலில் முதல்பாடல் "ஐந்து கரத்தனை யானை முகத்தனை" என்று காணப்-படுகிறதே. அது விநாயகரைப் பற்றிய பாடல்தானே?" என்ற சங்கையினைக் கிளப்புவர். அப்பாடல் பிற்காலத்து யாரோ ஒருவரால் பாடிச் சேர்க்கப்பட்டது. திருமூலரது முதல் பாடல் "ஒன்றவன்தானே" என்னும் சிவபெரு-மானைப் பற்றியதாகும். இந்த உண்மையினைச் சேக்கிழார் "ஓர் ஆண்டுக்கொன்ருகப் பரம்பொருளாம் ஏன எயிறு அணிந்தாரை, 'ஒன்றவன் தான்' என எடுத்து முன்னிய அப்பொருள் மாலைத்தமிழ் மூவாயிரம் சாத்தி" என்று கூறுமாற்ருல் புலனுகின்றது.

இரண்டாம் தந்திரத்தில் இறைவர் அன்பர்கட்கு அருள் புரிந்தமை, அவரது ஐந்தொழில், அட்டவீரட்டம், சில புராணகதைகள் முதலான செய்திகள் கூறப்பட்டுள்ளன.

"முன்னவனூர் கோயில் பூசைகள் முட்டிடின்
மன்னர்க்குத் தீங்குள வாரிவளம் குன்றும்
கன்னம் களவு மிகுத்திடும் காசினி
என்னரும் நந்தி எடுத்துரைத் தானே."

மூன்ரும் தந்திரத்தில் அட்டாங்கயோகம், அட்டமா-சித்தி, சோதிடம் முதலியவைற்றைப் பற்றிய விளக்கங்-களைக் காணலாம்.

"கொல்லான் பொய்கூருன் களவிலான் எண்குண
நல்லான் அடக்கம் உடையான் நடுச்செய்ய
வல்லான் பகுத்துண்பான் மாசிலான் கட்காமம்
இல்லான் இயமத் திடையில் நின்ருனே."

நான்காம் தந்திரத்தில் மந்திரநூல் கருத்துக்கள் அறிவிக்கப்படுகின்றன. பலவகைத் தெய்வச் சக்கரங்களைப் பற்றிய குறிப்புக்களே காணப்படுகின்றன.

"எய்தி வழிப்படில் எய்தாதன இல்லை
எய்தி வழிப்படில் இந்திரன் செல்வமும்
எய்தி வழிப்படில் வண்சித்தி உண்டாகும்
எய்தி வழிப்படில் எய்திடும் முத்தியே."

ஐந்தாம் தந்திரத்தில் சைவ சமய பேதங்களையும், புறச்சமய பேதங்களையும் சரியை, கிரியை, யோக, ஞான மார்க்கங்களையும் பற்றிய குறிப்புக்களைக் காணலாம்.

"ஒன்றது பேரூர் வழியா றதற்குள
என்றது போல இருமுச் சமயமும்
நன்றிது தீதிது என்றுரை நீதர்கள்
குன்று குரைத்தெழு நாயைஒத் தார்களே."

ஆறும் தந்திரமானது சிவகுரு தரிசனம், திருவடிப்பேறு, துறவு, தவம், நீறு, பக்குவன், அபக்குவன் முதலியன வற்றைத் தெளிவு படுத்துகிறது.

"குருட்டினை நீக்கும் குருவினைக் கொள்ளார்
குருட்டினை நீக்காக் குருவினைக் கொள்வார்
குருடும் குருடும் குருட்டாட் டம்ஆடிக்
குருடும் குருடும் குழிவிழும் ஆறே."

ஏழாம் தந்திரம் சிவபூசை, குருபூசை, மகேசுர பூசை, அடியார் பெருமை, போசன விதி, இந்திரிய அடக்கம், சற்குரு, அசற்குரு பற்றிய குறிப்புக்களை எடுத்துக் கூறுகின்றது.

"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமன்இல்லை நாணுமே
சென்றே புகும்கதி இல்லைநும் சித்தத்து
நின்றே நிலைபெற நீர்நினைந் துய்ம்மினே."

எட்டாம் தந்திரத்தில் அவா அறுத்தல், ஞானி செயல், தத்துவ மசிவாக்கியம். (அது நீயாய் இருக்கிறாய் என்னும் உபதேசமொழி.) பக்தியுடைமை, புறங் கூறாமை, முக்குற்றம் முதலியன மொழியப்பட்டுள்ளன.

“ஆய பதிதான் அருட்சிவ லிங்கமாம்
ஆய பசுவும்அட லேறென நிற்கும்
ஆய பலிபீடம் ஆகும்நற் பாசமாம்
ஆய அரன்நிலை ஆய்ந்துகொள் வார்க்கே.”

ஒன்பதாம் தந்திரமானது தன்னகத்தே பஞ்சாட்சரத்தின் பேதங்கள், சிவதரிசனம், திருக்கூத்துத் தரிசனம் முதலியன பற்றிய குறிப்புக்களைக் கொண்டுள்ளது.

“அரன்துடித் தோற்றம் அமைத்தல் திதியாம்
அரன்அங்கி தன்னில் அறையில் சங்காரம்
அரன்உற்று அணைப்பில் அமரும் திரோதாயி
அரனடி என்றும் அனுக்கிரகம் என்னே.”

பதினோராம் திருமுறை ஆசிரியர்கள்

பதினோராம் திருமுறை: இந்நூலும் ஒரு தொகுப்பு நூல். இந்நூலில் காணப்படும் பாடல்களைப் பாடிய பெரியவர்கள் பன்னிருவர்கள். இந்நூலில் உள்ள நூற்கள் மொத்தம் நாற்பது.

இந்நூலின் முதல் பாடல் திருவாலவாயுடையார் திருமுகப்பாசுரமாகும், இதனை மதுரை சொக்கலிங்கப் பெருமாள் பாண பத்திரரது வறுமை தீரப் பொருள் வழங்குமாறு சேரமான் ஒருவருக்கு எழுதியதாகும். இப்பாசுரம் சீட்டுக் கவியாகும். இதன் வழி பண்டைக்கால முதலே, கடிதம் எழுதும் முறை யாது என்பதை நன்கு அறிந்த ஒன்றுகும் என்பது தெரிகிறது. ஒரு கடிதம் யாருக்கு எழுதப்படுகிறது? எங்கிருந்து வருகிறது? கூறப்படும் செய்திகள் இன்ன? என்பன போன்ற அமைப்புக்கள் இதன்கண் உள. இது, கி. பி. ஆரும் நூற்றுண்டில் எழுதப்பட்டதாகும் என ஆய்வாளர்கள் கூறுவர்.

“ஆலவாயில் மன்னிய சிவன்யான்,
மொழிதரும் மாற்றம், செருமா உகைக்கும் சேரலன் காண்க,
பாணபத்திரன் காண்பது கருதிப் போந்தனன்
மாண்பொருள் கொடுத்து வரவிடுப்பதுவே.”

என்பன அப்பாடலில் காணப்படும் சில தொடர்கள்.

இரண்டாவது அமைப்புக் காரைக்கால் அம்மையாரின் பாடல்களின் தொகுதி. அவை திருவாலங்காட்டைப் பற்றிய மூத்த திருப்பதிகங்கள் இரண்டு, திருவிரட்டை மணிமாலை ஒன்று, அற்புதத் திருவந்தாதி ஒன்று ஆக மூன்று தலைப்புக்களில் காணப்படுகின்றன. மொத்தப் பாடல்களின் தொகை. 143.

இவ்வம்மையாரது பிள்ளைத் திருநாமம் புனிதவதியார் என்பது. இவர் காரைக்காலில் பிறந்தது கொண்டு காரைக்கால் அம்மையார் என அழைக்கப்படலாயினர். இவர் நாகை பரமதத்தனுக்கு வாழ்க்கைப்பட்டனர். பரமதத்தன் அனுப்பிவைத்த இரு மாங்கனிகளில் ஒன்றை அடியார்க்குப் படைத்துவிட்டனர். பரமதத்தன் தன் உணவுடன் ஒருபழம் உண்டு, மற்றொரு பழத்தையும் படைக்கக் கூறினன். அம்மையார் இறைவரை வேண்டி ஒரு மாங்கனி பெற்றுப் படைத்தனர். அது சுவை மிகக் கொண்டிருந்ததால், அப்பழம் ஏது என்று அவன் வினவினன். அம்மையார் உண்மை கூறினர். “அற்றேல் மற்றும் ஒரு பழம் வரவழை” என, அவ்வாறே இறைவரை வேண்டி வரவழைத்தனர். அதுமுதல் பரமதத்தன் அம்மையாரைத் தெய்வமெனக் கருதிவிட்டனன்.

பரமதத்தன் வாணிபம் செய்யப் போவதாகக் கூறி அம்மையாரைப் பிரிந்து, மதுரையில் வேறு ஒருத்தியை மணந்து வாழ்ந்தனன். இதனை அறிந்த அம்மையார் சுற்றத்துடன் மதுரைக்கு ஏக, அதுபோது பரமதத்தன் அம்மையர் காலில் விழுந்து வணங்கினன். இந்நிலையினைக் கண்ட அம்மையார் இறைவனை வேண்டிப் பேய் வடிவு பெற்றுக் கயிலை நோக்கிப் புறப்பட்டனர். இவர் பேய் வடிவு கொண்டு பாடினர் என்பது “காரைக்கால் பேய் தன் பாடல்” என்றும், “காரைக்கால் பேய் செப்பிய செந்தமிழ்” என்றும், “காரைக்கால் பேய் சொல்” என்றும் இவ்வம்மையாரே கூறும் ஆற்றல் தெரிகிறது.

இவரது காலம் திருஞான சம்பந்தரது காலத்துக்கு முற்பட்டது. திருஞானசம்பந்தர் திருவாலங்காட்டிற்குச் சென்றபோது, அப்பதி அம்மையாரால் தலையால் நடந்து சென்ற பதி என்று உணர்ந்து, அப்பெருமானர் அத்தலத்தில் புகாமல் பழையனூரில் தங்கினர். இவ்வாறு

சேக்கிழார் கூறுதலின், அம்மையார் சம்பந்தர் காலத்துக்கு முற்பட்டவர் என்பது தெளிவு. அதாவது கி. பி. 7-ஆம் நூற்றுண்டுக்கு முற்பட்டவர். இவரது பாடல்கள் மூத்த திருப்பதிகம் என்றிருப்பதும் இதனை நிலைநிறுத்தும்.

இவ்வம்மையார் அறுபான் மும்மை நாயன்மாருள் ஒருவர். இவரது பெருமை இவர் அமர்ந்த கோலத்தில் ஆலயந்தோறும் அமர்த்தப்படிருத்தல் மூலம் நன்கு உணரலாம். ஏனைய நாயன்மார்கள் நின்ற கோலத்தில் அமைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வம்மையாரது பாடல்களில் சுடலை வர்ணனை பெரிதும் உளது. கூத்தப் பெருமான் கூத்தின் சிறப்பும் அவரது பெருமையும் பெரிதும் பேசப்படுகின்றன.

> “ *இனிவார் சடையினில் கங்கைஎன் பாளைஅங் கத்திருந்த*
> *கனிவாய் மலைமங்கை காணில் என்செய் திகையில் சிலையால்*
> *முனிவார் திரிபுரம் மூன்றும் வெந்தன்று செந்தீயில் மூழ்கத்*
> *தனிவார் கணைஒன்றி ஞல்மிக்க கோத்தளம் சங்கரனே.* ”

ஐயடிகள் காடவர்கோன்: இவர் அறுபான்மும்மை நாயன்மார்களுள் ஒருவர். காடவர் என்பார் பல்லவ மரபினர். கோன் என்பது அரசன் என்னும் பொருள் தரும் சொல். ஆகவே, இவர் பல்லவ மரபினர் என்பது தெளிவு. இவர் அரசராக இருந்த காலத்தில் சைவம் தழைத்திருந்தது. கலைகளும் வளர்ந்தன. பின் தம் புதல்வர்க்குத் தம் அரசை நல்கித் தலயாத்திரை செய்யப் புறப்பட்டனர்.

இவரது நூல் இத்திருமுறையில் க்ஷேத்திர திருவெண்பாவாகும். பாடல் தொகை 24. ஒவ்வொரு வெண்பாவிலும் இறைவன் உறைவிடமான க்ஷேத்திரம் ஒன்றை அமைத்துப் பாடியுள்ளார். இவர் எடுத்துக்கொண்ட தலங்கள் சிதம்பரம், தென் குடந்தைக் கீழ்க்கோட்டம். திருவையாறு, திருவாரூர், திருத்துருத்தி, திருக்கோடிகா தென் இடைவாய், திருநெடுங்களம், குழித்தண்டலை, திருவானைக்கா, திருமயிலை, உஞ்சேனை மாகாளம், வளைபுரம், திருச்சாய்க்காடு, திருவாச்சிராமம், திருச்சிராமலை, திருமழபாடி, திரு ஆய்ப்பாடி, திருவேகம்பம், திருப்பனந்தாள், திருவொற்றியூர், திருமயானம் என்பன.

இருபத்துநான்கு பாடல்களுள் க்ஷேத்திரம் பெயர் அமையாத வெண்பாக்கள் இரண்டு. 10 ஆம், 20 ஆம் வெண்பாக்கள். பதினெருவது வெண்பாவில் குறிப்பிடப்பட்ட தலம் திருப்பாச்சிலாச்சிராமமாக இருக்கலாம் என யூகிக்கப்படுகிறது.

இந்நூலாசிரியர் சுந்தரரால் திருத்தொண்டத் தொகையில் குறிப்பிடப்பட்டிருத்தலின், இவரது காலம் கி.பி. 8-ஆம் நூற்றுண்டு என்னலாம்.

"குந்தி நடந்து குனிந்துஒருகை கோலூன்றி
நொந்திருமி ஏங்கி நுரைத்தேறி—வந்துந்தி
ஐயாறு வாயாறு பாயாமுன் நெஞ்சமே
ஐயாறு வாயால் அழை."

சேரமான் பெருமாள் நாயனுர் : இவர் அறுபான் மும்மை நாயன்மாருள் ஒருவர். இவரது பெயர் பெருமாக் கோதை யார் என்பது. மலை நாட்டில் கொடுங்கோளூரில் சேரர் மரபில் பிறந்தவர். திருவஞ்சைக் களத்தில் இறைவனை வழி பட்டவர். சேரநாட்டு மன்னன் செங்கோல் பொறையன் தவமேற்கொள்ள, அமைச்சர்கள் இவரை அணுகி அரசு ஏற்க வேண்டினர். அதுபோது இறைவரை வேண்டி எல்லா உயிர்களின் எண்ணத்தையும் அறிந்து அரசு புரிய வேண்டும் என்று விண்ணப்பித்துக்கொள்ள, இறைவர் திருவருளால் எல்லா உயிர்களும் பேசுவனவற்றை அறியும் ஆற்றலையும் பெற்றுர். இதனுல் இவர் கழறிற்று அறிவார் என்றும், சேரர் மன்னர் ஆதலின் சேரமான் பெருமாள் என்றும், நாயனுர் ஆதலின் சேரமான் பெருமாள் நாயனுர் என்றும் குறிக்கப்பட்டனர். திருநீறு அணிந்தவரிடத்து அன்பு கொண்டவர். ஒரு முறை வண்ணுன் உழமண் உடலுடன் தூரத்தில் வரக்கண்டு, அவனைக் கண்டதும் சிவனடியார் எனக் கருதி யானையை விட்டிறங்கி வணங்கினுர். சுந்தரர் நட்புக் கொண்டவர். கூத்தப் பெருமானிடம் அன்பு கொண்டு அவர் மீது பாடியதே பொன்வண்ணத் தந்தாதி. திருவாரூர்ப் பெருமான்மீது திருவாரூர் மும்மணிக்கோவை பாடினுர். இவர் சுந்தரருடன் குதிரைமீது கயிலை அடைந்தார். அங்குத் திருக்கைலாய ஞான உலா என்ற நூலைப் பாடினுர். இது தமிழில் முதல் உலாவாதலின் இது ஆதி உலா எனப்படும். இம்

மூன்றுமே பதினோராம் திருமுறையில் உள்ளவை. இவையே அன்றித் திருமறைக் காட்டில் அந்தாதி ஒன்று பாடினார் எனச் சேக்கிழார் கூறுகின்றனர். அது கிடைத்திலது. இவரும் சுந்தரரும் ஒரு காலத்தவர் ஆதலின், இவரது காலம் கி. பி. 9 ஆம் நூற்றாண்டு.

பொன்வண்ணத் தந்தாதியில் 100 கட்டளைக் கலித்துறைகள் உள. 101 வது பாட்டு இந்நூலின் சிறப்புப் பாயிரம் போல உள்ளது. முதல்பா பொன்வண்ணம் எனத் தொடங்கலிற் அந்தாதித் தொடையில் அமைந்தமையின் இப்பெயர் பெற்றது.

திருவாரூர் மும்மணிக் கோவையில் முப்பது பாடல்கள் உள. ஆதி உலா கலிவெண்பாவால் 394 அடிகளைக் கொண்டது. இதன் ஈற்றில் ஓர் வெண்பாவும் உளது. இவரது பாடல்கள் பெரிதும் அகப்பொருள் தழுவினவையே.

"பொய்யா நரகம்புகினும் துறக்கம் புகினும் புக்கிங்
குய்யா உடம்பினோ டூர்வ நடப்ப பறப்பஎன்று
நையா விளியினும் நானிலம் ஆளினும் நான்மறைசேர்
மையார் மிடற்றான் அடிமற வாவரம் வேண்டுவனே."

நக்கீரதேவ நாயனார்: இவர் பாடியனவாகப் பதினோராம் திருமுறையுள் உள்ள நூல்கள் 10. அவற்றை முறையே காண்போம்.

கயிலை பாதி காளத்தி பாதி: இதில் 100 வெண்பாக்கள் உள. கயிலையும் காளத்தியும் மாறி மாறி வரப் பாடப்பட்டுள்ளது. இதில் ஐந்தெழுத்து மாண்பு, சண்டேசுர நாயனார் குறிப்பு, அகப்பொருள் முதலான குறிப்புக்கள் காணப்படுகின்றன. நக்கீரர் இறைவருடன் வாதாடித் தோற்றுக் குட்டநோய் கொள்ள, அதனைத் தீர்க்கக் கயிலை செல்லவேண்டுமென்ற கட்டளை பிறந்தபோது, காளத்தி சென்று அங்கிருந்தே கயிலையைப் பாடினார் என்பதாகக் கருதலாம்.

திரு ஈங்கோய் மலை எழுபது: திரு ஈங்கோய்மலை இறைவன் உறைவிடங்களில் ஒன்று. இத்தலத்தின் மீது

பாடப்பட்ட எழுபது வெண்பாக்களைக் கொண்ட நூல். இதுபோது வெளிவந்துள்ள பதினோராம் திருமுறைகளில் எல்லாம் 55 பாடல்களே உள. ஆனால், நான் இந்நூலுக்கு உரை விளக்கம் எழுதிய ஆய்வு நூலில் 70 பாடல்களையும் பதிப்பித்துள்ளேன். மேலும், இது சங்ககால நூல் என்பதையும் நன்கு காட்டியுள்ளேன். விளக்கம் ஆண்டுக் காண்க. இஃது இயற்கை அழகு இனிது மிளிறும் நூல்.

திருவலஞ்சுழி மும்மணிக்கோவை: திருவலஞ்சுழி கும்பகோணத்துக்கருகில் உள்ள தலம். இதில் 15 பாடல்களே உள. முப்பது பாடல்களே இருக்கவேண்டியது. ஆனால், 15 பாடல்கள் காணப்படவில்லை. மும்மணிக்கோவை அந்தாதி முறையில் பாடப்படுதல் வேண்டும். இவ்வமைப்பு ஒன்று முதல், பதின்மூன்று வரையில் ஒழுங்காக உளது. பின்னர் உள்ள பாடல்களில் அவ்வந்தாதித் தொடை இல்லாதிருத்தலின், இடையில் உள்ள பாடல்கள் சிதறுண்டன போலும்! ஈற்றுச் செய்யுளும் அதற்கு முன்னுள்ள செய்யுளும் அந்தாதி அமைப்புப் பொருந்தியவை. எனவே, இடைப்பட்ட பாடல்கள் சிதறுண்டவைகள் என்பதில் ஐயமில்லை. இந்நூலிலும் அகப்பொருள் வாடை உண்டு.

திரு எழுகூற்றிருக்கை: இஃது ஏழு கூறுகளால் தேர் போல் அமைத்து ஒன்று முதல் ஏழுவரை ஒவ்வோர் எண் மிகுத்தும் குறைத்தும் எண் அழகு பொருந்த இணைக்குறள் ஆசிரியப் பாவால் பாடப்பெறும் பாடல். இங்குள்ள இப்பாடல் 55 அடிகளைக் கொண்டது. இதன் ஈற்றிலும் ஓர் வெண்பா உளது. இறைவன் நடனக் குறிப்பை இதில் காணலாம். இதில் தொகைச் சொற்களின் பொருட்செறிவு மிகுதி.

பெருந்தேவபாணி: இஃது இறைவன் மீது பாடப்பட்ட பாட்ல் என்ற குறிப்பில் தேவபாணி என்ற பெயரினைப் பெற்றுள்ளது. இதுவும் இணைக்குறள் ஆசிரியப் பாவாகும். 67 அடிகளைக் கொண்டுளது. இதன் வழி நக்கீரர் ஆலவாய்ச் சொக்கனுடன் எதிர்த்த குற்றத்திற்கு ஆளானதை அறியலாம். "கூடல் ஆலவாய்க் குழகன் ஆவது அறியாது, அருந்தமிழ் பழித்தனன்" என்ற அடிகளிலும், இப்பாட்டின் இறுதியில் காணப்படும் வெண்பாவில் குற்றத்-

திற்கு ஆளாகிய தம்மை மன்னிக்கும்படி இறைவரை வேண்டிய குறிப்பும் உள. "இகழ்ந்தேன் பிழைத்தேன் சீற்றத்தைத் தீர்த்தருளு தேவாதி தேவனே" என்ற தொடர்களைக் காணவும். தமக்குக் குட்டம் வந்த குறிப்பினை; திரு எழுகூற்றிருக்கை ஈற்றில் உள்ள வெண்பாவும் குறிக்கிறது. இதனை "என்மேல் மெய் எரிவு தீரப் பணித்தருள்" என்ற அடியால் அறியலாம்.

கோபப் பிரசாதம்: இறைவன், நக்கீரரது செருக்கை அடக்கச் சினந்தபோது, அது தணியும்வகையில் பிரசாதம் போல் இதனை நக்கீரர் பாடினார் போலும்! இஃது இணைக்குறள் ஆசிரியப்பாவால் அமைந்து 99 அடிகளைக் கொண்டு இலங்குகின்றது. இதில் கண்ணப்பர், சண்டேசுரர், சாக்கிய நாயனார் குறிக்கப்பெற்றுள்ளனர். பழமொழிகளும் இதில் உண்டு. புராணக்கதைகளும் உண்டு. எண்ணலங்காரத்தொகைச் சொற்களும் உண்டு.

கார் எட்டு: இதில் மேகத்தைப்பற்றிய எட்டுப்பாடல்கள் உள. இது வெண்பாவால் ஆன நூல். இந்நூலின் மின்னலுக்கு இறைவன் சடையும், கருமைக்கு அவனது நீலகண்டமும் உவமைகளாகக் கூறப்பட்டு உள்ளன.

"காந்தள் மலரக் கமழ்கொன்றை பொன்சொரியும்
பூந்தளவம் ஆரம் புகுந்தன்றே—ஏந்தொளிசேர்
அண்டம்போல் மீதிருண்ட ஆதியான் ஆய்மணிசேர்
கண்டம்போல் மீதிருண்ட கார்."

போற்றித் திருக்கலி வெண்பா: இது 90 அடிகளைக்கொண்ட கலிவெண்பா. இதில் பிரமன் கழுகுருவாய்ச் சென்று இறைவன் முடியைத் தேடலுற்றான் என்ற அரிய குறிப்புளது. பிரமன் அன்னமாய்ச் சென்று முடிதேடலுற்றான் என்பது, எல்லா நூற்களில் கூறப்பட்டுள்ளது. சண்டேசுரர், கண்ணப்பர் வரலாறுகள் காணப்படுகின்றன. இதில் இறைவன் முருகனைச் சேனாதிபதியாக்கி வாழ வைத்த செய்தி காணப்படுகிறது.

திருமுருகாற்றுப்படை: இதனைப் பற்றிப் பத்துப்பாட்டுக் குறிப்பில் காண்க.

திருக்கண்ணப்ப தேவர் திருமறம்: இறைவனுக்குத் தொண்டு செய்தவர்கள் மென்தொண்டர், வன்தொண்டர்

என இருவகையாகப் பிரிக்கப்படுவர். இவர்களுள் திண்ணனாராம் கண்ணப்பர் தம் கண்ணை இடந்து தொண்டராயினமையின் வன்தொண்டர் ஆயினர். இது மறச்செயல். அம்மறச்செயலைப் பாடலுற்ற காரணத்தால் இந்நூல் மறமாயிற்று. தொண்டர் மறம் ஆதலின் திருமறம் ஆயிற்று. இதில் கண்ணப்ப நாயனார் வரலாறு செம்மையாகக் கூறப்பட்டுள்ளது.

இறைவனைப் பூசை செய்யும் சிவகோசாரியார் மறைந்து நின்று திண்ணனார் செயலைப் பார்த்துக் கவன்று சென்றதாக இந்நூல் கூறுகிறது. ஆனால், பெரிய புராணத்தில் இறைவன் கனவில் சென்று கூறிய பிறகே மறைந்து நின்று திண்ணனார் செயலைக் கண்டதாகக் கூறப்படுகிறது.

இன்னோரன்ன நூல்களின் ஆசிரியர் சங்ககால நக்கீரர் அல்லர். அவை பிற்காலத்தில் நக்கீரர் என்னும் பெயர் பெற்ற ஒருவரால் பாடப்பட்டவை என்பர். இஃது ஆய்தற்குரியது. டாக்டர் சாமிநாதய்யர் கருத்துச் சங்ககால நக்கீரரே இந்நூற்களுக்கும் ஆசிரியர் என்பது.

கல்லாடதேவ நாயனார்: இவர் பாடிய நூல் திருக்கண்ணப்பதேவர் திருமறம். இத்திருமறை நூலில் கண்ணப்பநாயனார் வரலாறு உணர்த்தப்பட்டிருக்கிறது. இஃது இணைக்குறள் ஆசிரியப் பாவால் அமைந்து 38 அடிகள் கொண்டது. இவர் கண்ணப்பரிடத்துக் கொண்டிருந்த அன்பு,

"திருவேட் டுவர்தம் திருவடி கைதொழக்
கருவேட் டுழல்வினைக் காரியம் கெடுமே."

என்று, பாடியிருத்தலால் புலனாகும். இவரது நடையினை நோக்கும்போது, இவர் சங்ககாலப்புலவர் போலக் காணப்படுகிறார். இவரது காலம் கி. பி. ஆறும் நூற்றாண்டு என ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். இந்நூலின் ஆய்வுக் கட்டுரை டெல்லி தமிழ்ச் சங்கத் திரு. வி. க. மலரில் என்னால் எழுதப் பட்டுள்ளது. ,விழைவார் ஆண்டுக் காணலாம்.

இவரது வரலாற்றிலும் சிக்கல் உண்டு. ஒரு சிலர் சங்ககாலக் கல்லாடர் வேறு, திருமுறையில் பாடியுள்ள பாடலின் ஆசிரியர் வேறு என்பர். கல்லாடம் என்பது

மலையாள தேசத்தைச் சார்ந்தது. ஆகவே, அவ்வூரடியாகப் பெயர் பெற்றவர் இவர். இவரது பாடல்கள் புறநானூற்றில் உள்ளன. இவர் தொல்காப்பியத்திற்கு உரை கண்டவர். பன்னிருபாட்டியலில் சில நூற்பாக்களைப் பாடியதாகவும் கூறுவர். இவர் பாடிய பாட்டியல் நூல் ஒன்று இருந்ததாக-வும் செப்புகின்றனர். கபில பரணர் என்னும் தொடர்போலக் கல்லாட மாமூலர் என்னும் தொடரும் காணப்படுதலின், இவர் மாமூலரின் நெருங்கிய நண்பர் என்பது புலப்படுகிறது. இவரது பாடல்கள் அகநானூற்றிலும், குறுந்தொகையிலும், திருவள்ளுவ மாலையிலும், புறநானூற்றிலும் உள.

கல்லாடம் என்னும் நூலைச் செய்த கல்லாடர் ஒருவர் உளர். அவர் திருக்கோவையார் பாடல்களில் சிலவற்றைத் தேர்ந்தெடுத்து அப்பாடல்களின் பொருளை விளக்கும் முறையில் அகவல் பாக்களால் ஆன நூலைப் பாடியவர். அதுவே கல்லாடம். கல்லாடத்தில் கற்பனை மிகுதி.

இந்நூலில் விநாயக வணக்கம் இருத்தலின், இது சங்க-கால நூலாக ஏற்றற்கு இல்லை. இந்நூலுக்கு மயிலேறும் பிள்ளை உரை எழுதினர். ஆனால், முற்றுப்பெறவில்லை. முற்றுப்பெறாத பாடல்களுக்குப் புதுவை சுப்பராய முதலியார் உரை எழுதி முடித்தனர். "கல்லாடம் படித்த-வனோடு மல்லாடாதே" என்ற பழமொழியினாலும், இந்நூல் மதுரை சொக்கேசப் பெருமான் முன், ஆசிரியர் பாடிய-போது, ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும் தலை அசைத்தார் என்பதனாலும் இதன் ஏற்றத்தை இனிதின் உணரலாம்.

"கல்லாடர் செய்பனுவல் கல்லாட நூறுநூல்
வல்லார்சங் கத்தில் வதிந்தருளிச்—சொல்லாய
மாமதுரை ஈசர்மனம் உவந்து கேட்டுமுடி
தாமசைத்தார் நூறு தரம்."

இதில் சுந்தரரது தோழர் சேரமான் பெருமாள் நாயனார் குறிப்பு, "குடக் கோச் சேரன்" என்று வருதலின், இந்நூலாசிரியர் காலம் கி. பி. 9 ஆம் நூற்றாண்டிற்குப் பின் என்பது தெரிகிறது.

"கல்லாக் கயவர்க்கு அருநூல் கிளைமறை
சொல்லினர் தோம்எனத் துணைமுலை பெருத்தன."

—கல்லாடம்.

கபிலதேவ நாயனுர்: இவர் பாடியுள்ள நூல்களாக இத்தொகுப்பு நூலில் உள்ளவை, மூத்தநாயனுர் இரட்டை மணிமாலை, சிவபெருமான் திரு இரட்டை மணிமாலை, சிவபெருமான் திருவந்தாதி என்பன. இப்பெரியார் சங்க-காலத்துக் கபிலர் அல்லர் என்பதற்குச் சான்ருக இவர் மூத்தநாயனுர் இரட்டை மணிமாலை பாடியிருத்தலைக்-கொண்டு நிறுவுவர்.

இவரது வாக்காகச் சிவபெருமான் திரு இரட்டை மணிமாலையில் "வளர் சடையாய்நின் போல பெரிய-ராவாரோ பிறர்" என்னும் கருத்தும், "கருத்துடையேன் கையுடையேன் கூம்பப்பெரிதும் பிறதிறத்துப் பேசேன்" என்றும் இருத்தலை நோக்கும்போது, மூத்தநாயனுர் திருஇரட்டை மணிமாலையில், "விநாயகனே விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனும் ஆம்" என்று கூறுவாரோ? இக் கருத்துக்களைக் கருதும்போது, விநாயகரையும் வேறு எவரே னும் பாடிச்சேர்த்து இருக்கலாம் என்று எண்ண இடமிருக்-கிறது. இவர் சங்க காலத்தவர் என்ற குறிப்பு, சங்ககாலப் புலவர்கள் தலைவன் காதலியைப் புணர்ந்து பின் அவளுக்கு நோய் தருதலைப் பாடுவது போல, இவரும் "இடுமணல் மேல் என்னலங் கொண்டு இன்னுநோய் செய்தான்" என்ற கருத்துடைய அடிகளால் அறிவித்தலால் தெரிகிறது. இவரது பாடல்களில் பல தலங்களும், அகப்பொருள் செய்திகளும் உள. மூத்தநாயனுர் திரு இரட்டை மணி மாலையில் இருபது பாடல்களும், சிவபெருமான் திரு இரட்டை மணிமாலையில் 37 பாடல்களும் உள. மேலும் இவ்விரட்டை மணிமாலை இலக்கண மரபுபடி இல்லை. இரட்டை மணிமாலை இருபது பாடல்களைக் கொண்டே வரும். ஆனல், இதில் 37 பாடல்கள் உள. மேலும், இரட்டை மணிமாலை அந்தாதித் தொடையில் அமைந்து முதல் பாட்டின் முதல் சீர், சொல், இறுதிப்பாட்டின் இறுதிச்சீர், சொல்லாக அமைந்து அந்தாதித் தொடையின் இயல்பை நன்கு பொருந்திக் காணப்படும். இவ்வமைப்பும் சிவபெருமான் திரு இரட்டை மணிமாலையில் இல்லை. ஆகவே, இதுவும் இவர் வாக்கு அன்று என்று கொள்ள இடம் இருக்கிறது. சிவபெருமான் திருவந்தாதி செம்மை யாக அமைந்துள்ளது. அதில் விநாயகர் குறிப்பு இல்லை.

இவர் சங்க காலத்தவர் அல்லர் என்பர். இவரைக் கி. பி. 11 ஆம் நூற்றுண்டினர் என்பர். ஐயர் அவர்கள் வாக்கில் இவர் சங்ககாலத்தவர் என்பது தொனிக்கிறது.

அதிரா அடிகள்: அடிகள் என்ற சொல், இவர் துறவு பூண்டவர் என்ற குறிப்பைத் தோற்றுவிக்கின்றது. அதிரா என்னும் அடைமொழி இவர் எதற்கும் கலங்காத உள்ளத்தவர் ஆதல் வேண்டும் என்பதைக் காட்டுகிறது. இவர் பாடினதாகப் பதினேராம் திருமுறையில் காணப்படுவது மூத்தபிள்ளையார் திரு மும்மணிக் கோவை ஆகும். மும்மணிக் கோவை நூல் முப்பது பாடல்களைக் கொண்டு இலகுதல் வேண்டும். ஆனால், இவரது நூலில் 23 பாடல்களே உள்ளன. 24 முதல் 30 வரையுள்ள பாடல்கள் சிதறுண்டன போலும்!

மூத்தபிள்ளையார் ஆவார் விநாயகப் பெருமான். விநாயகப் பெருமானைப் பற்றிய குறிப்புக்கள் தேவார காலத்தும் அதற்கும் பிற்பட்ட காலத்தும் ஆகும். ஆகவே, இவ்வாசிரியர் கி. பி. ஏழாம் நூற்றுண்டிலோ அதற்கும் பிற்பட்டார் காலத்திலோ இருந்தவர் ஆதல்வேண்டும்.

"நிலம்துளங்க மேரு துளங்க நெடுவான்
தலம்துளங்கச் சப்பாணி கொட்டும்—கலந்துளங்கொள்
காமாரி ஈன்ற கருங்கைக் கடதடத்து
மாமாரி ஈன்ற மணி."

இளம்பெருமான் அடிகள்: இவரும் துறவிக்கோலம் பூண்டவர் போலும்! இளம்பெருமான் என்பது முருகனைக் குறிக்கும் பெயர் என்னலாம். அப்பெருமான் பெயரைத் தாங்கியவர் இவர். இவர் பாடிய நூல் சிவபெருமான் திருமும்மணிக்கோவையாகும். முப்பது பாடல்களும் இதன்கண் உள. இவரது காலம் நம்பியாண்டார் நம்பி-கட்கு முற்பட்டது என்பது மட்டும் கூறலாம்.

"உளர்ஒளிய கங்கை ஒலிதிரைகள் மோத
வளர்ஒலி தேய்ந்துள் வளைந்தொக்கும்—கிளர்ஒளிய
பேதைக் கருங்கண் பிணாவின் மணாளனார்
கோதைப் பிறையின் கொழுந்து."

பரணதேவ நாயனுர் : இவர் பாடியநூல் சிவபெருமான் திருவந்தாதியாகும். இதில் 101 பாடல்கள் உள. அனைத்தும் வெண்பாக்கள். ஈற்றுப்பாடல் இந்நூலின் சிறப்பினைக் கூறுவதாக அமைந்துளது. ஐந்தாவது பதினுலாவது பாடல்கள் முழு வடிவில் இல்லை; சிதைந்து உள்ளன. இந்நூலில் நெஞ்சுக்கு அறிவுறுத்தலும், அகப்பொருள் கருத்தும் அமைந்த பாடல்கள் உள. பல தலங்களைப் பற்றிய குறிப்பும் உண்டு. பழ அடியாராகிய கண்ணப்பரைப் பற்றிய வரலாறும் இதில் உண்டு.

இவரது பாடலில் விநாயகரைப் பற்றிய குறிப்பு இல்லை. சங்க காலத்திலும் இக்குறிப்புக் காணப்பட்டிலது என்பது முன்னும் கூறப்பட்டது. ஆகவே, இந்நூலாசிரியர் சங்ககாலப் பரணராக இருக்க வொண்ணுமோ என்ற ஐயம் எழுகின்றது. இவர் இயற்கையையும், ஐந்திணை வளனையும் பாடியவராக இருந்து, பின் இறைபணியில் ஈடுபட்டு அதனுல் தேவர் என்றும், நாயனுர் என்றும் கூறப்பட்டனரோ என்னவோ அறியோம். இவரைச் சங்க காலத்தவர் எனச் சிலர் ஒவ்வார். பின்னவராயின் இவர் கி. பி. பத்தாம் நூற்ருண்டவராக இருக்கலாம். டாக்டர் ஐயர் அவர்களின் கருத்துச் சங்க காலப் புலவர் என்பது.

"சென்றுசெருப் புக்காலால் செல்ல மலர்நீக்கிச்
சென்று திருமுடிவாய் நீர்வார்த்துச்—சென்றுதன்
கண்ணிடந்தன் றப்பும் கருத்தற்குக் காட்டினன்
கண்ணிடந்தன் றப்பாமை பார்த்து."

பட்டினத்தடிகள் : இவர் காவிரிப்பூம் பட்டினத்தில் வணிகவேளாண் மரபில் பெருஞ் செல்வக்குடியில் பிறந்தவர். இவரை ஆட்கொள்ள மருதவாணரே மகவாக வந்தனர் என்பர். இவரிடமே சேந்தனுர் கணக்கராக இருந்தனர்.

இவர் பாடியுள்ள நூற்கள் கோயில் நான்மணிமாலை, திருக்கழுமல மும்மணிக்கோவை, திருவிடைமருதூர் மும்மணிக்கோவை, திருவேகம்பமுடையார் திருவந்தாதி, திருவொற்றியூர் ஒரு பா ஒருபஃது என்பன.

கோயில் நான்மணிமாலையில் மக்கள் வாழ்க்கையினைக் கடலில் செல்லும் கப்பலாகக் காட்டி, முத்திக் கரையில் சேர்க்கும்படி பாடிய பாடலைக் காணலாம். சிறுத்தொண்டர், சண்டேசுரர் பற்றிய குறிப்புக்கள் உள. திருக்கழுமல-மும்மணிக்கோவையில் திருஞானசம்பந்தர் குறிப்பும், தம் உள்ளத்தினைச் செம்மையாக வைத்திருத்தலின், அம்மை அப்பனை வருமாறு வேண்டும் கருத்தும் உள்ளன. திருவிடை மருதூர் மும்மணிக் கோவையில் வரகுண பாண்டியன் அன்பின் பெருக்கைப் பெரிதும் போற்றிய கருத்தையும், உமையின் சிறப்பும், தவம் செய்வார் நிலையும், இல்லறத்தி-லிருந்தே முத்தி பெறலாம் என்ற கருத்தும் சிவவாக்கியர் குறிப்பும் காணப்படுகின்றன. திருவேகம்பமுடையார் திருவந்தாதி காஞ்சி ஏகம்பர்மீது பாடப்பட்ட 100 கட்டளைக் கலித்துறைப்பாடல் கொண்ட நூல். பலதலங்கள் இதில் இயைத்துப் பாடப்பட்டுள்ளன.

திருவொற்றியூர் ஒருபா ஒரு பஃது : இது திருவொற்றியூர் தியாகேசன்மீது ஆசிரியப்பாவால் 10 பாடல் கொண்ட நூல். இஃது அந்தாதித் தொடையால் ஆயது. இறைவனது பெருமை, அவனது அநாதி முறைமை முதலியனவும் உலகப் படைப்பில் உள்ள இயற்கைப் பொருள்கள் அவனது திருவுருவாகத் திகழ்கின்றன என்பதும் கூறப்பட்டுள்ளன.

இவரது காலம் கி. பி. பத்தாம் நூற்றுண்டின் முற்பகுதி. நம்பி ஆண்டார் நம்பிக்கும் முற்பட்டவர்.

பட்டினத்தார் என்ற பெயரால் வேறு ஒரு நூலும் உளது. அது திருவேகம்ப பாமாலை என்பது. அது திருமுறைப் பட்டி-னத்தடிகளால் பாடப்பட்டதன்று. இதற்குரிய காரணம் “குலாமருக்கு என் சொல்வேன் கச்சி யேகம்பனே!” என்ற தொடர் அதில் காணப்படுவதாகும். குலாம் என்பது முஸ்-லீம்கள் தென்னிந்தியாவில் புகுந்த பின்னர் நுழைந்த மொழி யாகும். முதல் முதல் இங்குப் படையுடன் வந்தவர் மலிக்கபூர் என்பவர். அப்படை எடுப்பு கி. பி. 16 ஆம் நூற்றுண்டு நிகழ்ந்தது. மேலும் திருவேகம்ப மாலையில் பெண்களையும், மக்கட் பிறப்பையும் இழித்துப் பேசும் பாடல்கள் மிகுதியும் உண்டு. இங்ஙனம் திருமுறைப் பட்டினத்தடிகள் பாடல்களில் இல்லை.

இவ்விருவர்களும் வேறு வேருவர் என்பது தெளிவு.

"மதிஎன மாசறு வதனம் விளங்கப்
புதுவிரை அலங்கல் குழல்மிசைப் பொலியும்
அம்சொல் மடந்தையர் ஆகம் தோய்ந்தும்
சின்னம் பரப்பிய பொன்னின் கலத்தின்
அறுசுவை அடிசில் வறிதினி தருந்தா
தாடினர்க் கென்றும் பாடினர்க் கென்றும்
வாடினர்க் கென்றும் வரையாது கொடுத்தும்
பூசுவன பூசியும் புனைவன புனைந்தும்
தூசு நல்லன தொடையில் சேர்த்தியும்
ஐந்து புலன்களும் ஆர ஆர்ந்து
மைந்தரும் ஒக்கலும் மகிழ மனமகிழ்ந்து
இவ்வகை இருந்தோம் ஆயினும் அவ்வகை
மந்திர எழுத்தைந்தும் வாயிடை மறவாது
சிந்தை நின்வழி செலுத்தலின் அந்த
முத்தியும் இழந்திலம் முதல்வ."

என்பது திருவிடைமருதூர் மும்மணிக் கோவை,

நம்பியாண்டார் நம்பிகள் : சோழ நாட்டில் சிதம்பரத்திற் கருகில் திருநாரையூர் என்ற ஊர் உளது. இங்குள்ள விநாயகர் பொள்ளாப் பிள்ளையார் என்ற பெயரினர். இவரைப் பூசிக்கும் பேறு நம்பி ஆண்டார்க்குக் கிடைத்தது. இவர் ஆதி சைவ பிராமணர். இவர் பிள்ளையாரைத் தாம் கொண்டு செல்லும் நைவேத்திய உணவை உண்மையி-லேயே உண்ணச் செய்தவர்.

இவர் காலத்தில் இருந்த இராசராச அனபாய குலசேகரன் பலர் தேவாரத் திருப்பதிகங்கள் ஓதக் கேட்டு வந்தான். அவை நூலாக எங்கும் இல்லாமையால் அந்நூலை எங்கிருந்தாகிலும் தேடிக் காணக் கங்கணம் கட்டிக்கொண்டனன். இவனுக்கு நம்பி ஆண்டார் துணை கிட்டியது. அவரை எப்படியாகிலும் தேவாரம் உள்ள இடத்தை உணர்த்துமாறு வேண்டினன். அவர் பிள்ளையார் திருவருளால் அது சிதம்பரத்தின் நடராசப் பெருமானுள்ள அறையில் உள்ளது என்பதை அறிந்து, மன்னனுக்குச் சொல்ல, அரசன் மகிழ்ந்து அவருடன் சென்று

தில்லைவாழ் அந்தணர்களை அவ்வறையில் உள்ள தேவார ஏடுகளை எடுத்துத் தருமாறு கூற, அவர்கள் மூவர் முதலிகள் வந்தால்தான் அறை திறக்கப்படும் என்ன, அரசரும் நம்பியும் ஒரு யுக்தி புரிந்து, மூவர் திருவுருவங்களை அலங்காரம் செய்து அறை முன் கொணர்ந்து நிறுத்த, அறை திறக்கப்பட்டது. அவ்வேடுகள் கறையான் அரித்துப் பெரிதும் பாழ் அடைந்து இருந்தன. அழிந்தன போக எஞ்சியவற்றை எடுத்து நம்பியாண்டார் அவர்களையே முறைப்படுத்த வேண்டினன் மன்னன். அவரே திருமுறைகளைப் பதினொன்ருக முறைப்படுத்தினர். வியாசர் எப்படி வேதங்களை ஒரு ஒழுங்கு படுத்தினரோ அதுபோல இவரும் திரு முறைகளை ஒழுங்கு முறைப்படுத்தியதால் இவர் தமிழ் வியாசர் எனப்பட்டனர். "இவர் முதல் ஏழு திருமுறைகளை மட்டுமே தொகுத்தார், ஏனைய திருமுறைகளைத் தொகுத்திலர்" என்னும் கருத்தும் நாட்டில் உண்டு. இவர் பாடினவாக உள்ள நூல்கள் விநாயகர் இரட்டை மணி மாலை, கோயில் பண்ணியர் விருத்தம், திருச்சண்பை விருத்தம், திருமும்மணிக் கோவை, திருவுலா மாலை, திருக்கலம்பகம், திருத்தொகை, திருநாவுக்கரசர் திரு ஏகாதச மாலை, திருத்தொண்டர் திருவந்தாதி என்பன. இவற்றையும் பதினேரும் திருமுறையில் அரசனது வேண்டுகோளுக்கு இணங்கச் சேர்த்துவிட்டனர்.

விநாயகர் இரட்டை மணிமாலை பொள்ளாப் பிள்ளையார் மீது வெண்பாவும் விருத்தமும் மாறி மாறிவரப் பாடப்பட்ட 20 பாடல் கொண்ட நூல். இதில் விநாயகர் சிவபெருமானை வணங்கி மாங்கனி பெற்ற வரலாறு கூறப்பட்டுள்ளது.

"மலம்செய்த வல்வினை நோக்கி உலகை வலம்வரும்அப்
புலம்செய்த காட்சிக் குமரற்கு முன்னே புரிசடைமேல்
சலம்செய்த நாரைப் பதிஅரன் தன்னைக் கனிதரவே
வலம்செய்து கொண்ட மதக்களி றேஉன்னை
வாழ்த்துவனே."

திருப்பண்ணியர் விருத்தம்: இது சிதம்பர நடராசப் பெருமான்மீது பாடப்பட்ட 70 பாடல் கொண்ட நூல். இது நமக்குத் திருவைச் செய்கின்றவர் என்ற கருத்தினை அறி

விப்பது. இது குறித்தே இது திருப்பண்ணியர் என்ற பெயருடன் திகழ்கிறது. இக் கருத்தினை,

"கைச்செல்வம் எய்திட லாம்என்று பின்சென்று கண்குழித்தல்
பொய்ச்செல்வர் செய்திடும் புன்மைகட் கேஎன்றும் பொன்றல்இல்லா
அச்செல்வம் எய்திட வேண்டுதி யேல்தில்லை அம்பலத்துள்
இச்செல்வன் பாதம் கருதிரந் தேன்உன்னை என் நெஞ்சமே."

என்ற பாடலில் காண்க.

ஆளுடை பிள்ளையார் திருவந்தாதி, திருச்சண்பை விருத்தம், மும்மணிக் கோவை, திருவுலாமாலை, திருக்கலம்பகம், திருத்தொகை என்பன திருஞான சம்பந்தர் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புக்களையும், அவரது மாண்பையும், அவரது பாடல்களின் பெருமைகளையும் அறிவிப்பன. இவற்றில் அகப் பொருட் கருத்திலும் பாடப்பட்ட பாடல்களும் உண்டு. இவை திருஞானசம்பந்தர் அற்புதங்கள் அனைத்தையும் அறிவிப்பன.

திருஞானசம்பந்தர் பாலை நிலத்தை நெய்தல் ஆக்கிய குறிப்பு அவர் பாடலில் உண்டு. ஆனால், திருஞானசம்பந்தர் திருநனிப்பள்ளி நகரைக் கானகமாக்கிப் பின் மருதமாக்கினார் என்ற குறிப்பை "நாதன் நனி பள்ளி சூழ்நகர் கானகமாக்கி அஃதே போதின் மலி வயலாக்கிய கோன்" என்ற குறிப்புக் காணப்படுகிறது. இவ்வரிய குறிப்புச் சம்பந்தர் வாக்கிலோ சேக்கிழார் வாக்கிலோ இல்லை.

திருத்தொண்டர் திருவந்தாதி: இது திருத்தொண்டத் தொகையில் காணப்படும் அடியார்களைப் பற்றிப் பாடப் பட்ட நூல். இதில், சுந்தரர்க்குப் பதினொன்றும் அப்பர், சம்பந்தர், சேரர், கோச்செங்கணார்க்குத் தனித் தனி இரண்டும், ஏனைய நாயன்மார்கட்கு ஒவ்வொன்றும் ஆக 86 பாடல்கள் உள. இந் நூலே சேக்கிழார்க்குத் திருத்தொண்டர் வரலாற்றைப் பாட இரண்டாவது துணை நூலாக அமைந்தது. இந்நூலில் சுந்தரர் கூன் குருடாய் இருந்தவர்கட்கு அருள் புரிந்து அவற்றை ஒழித்தவர் என்ற குறிப்புக் காணப்

படுகிறது. இவ் வற்புதத்தைச் சேக்கிழார் அன்றி வேறு எவரும் சுட்டியதாகத் தெரியவில்லை.

நம்பி ஆண்டார் காலத்தை ஒருவாறு உறுதிப்படுத்தற்கு ஏற்ற குறிப்புக்களும் இவ்வந்தாதியில் உண்டு.

"புலமன்னிய மன்னைச் சிங்கள நாடு பொடிபடுத்த
குலமன் னியபுகழ்க் கோகனக நாதன் குலமுதலோன்."

என்றும்,

"சிங்கத் துருவனைச் செற்றவன் சிற்றம் பலமுகடு
கொங்கில் கனக மணிந்தஆ தித்தன் குலமுதலோன்."

என்றும்,

"செம்பொன் அணிந்துசிற் றம்பலத் தேசிவ லோகம் எய்தி
நம்பன் கழற்கீழ் இருந்தோன் குலமுதல் என்பர்."

என்றும் குறிப்பிட்டிருப்பதை அறிக. இங்கு ஆதித்தன் சிதம்பரத்தில் பொன்வேய்ந்த குறிப்பும், அவன் சிங்கள நாட்டை வென்ற குறிப்பும் காணப்படுகின்றன. இவனே நம்பியாண்டாரைத் திருமுறைகளைத் தொகுக்க வேண்டியவன். இராசராசன் என்றும் அபயன் குலசேகரன் என்றும் கூறப்படுபவன். இவனை இரண்டாம் ஆதித்தன் என்றும், இவனைத் திருமுறை கண்டவன் என்றும், ஆதித்த கரிகாலன் என்றும் கூறுவர். இவன் கி. பி. 966 முதல் 970 வரை அரசாண்டவன் ஆதலின், நம்பிகள் காலம் கி. பி. 10 ஆம் நூற்றுண்டாகும்.

இராசராசன் என்ற பெயர் ஒற்றுமையால் இராசராச சோழன் திருமுறை வகுத்தவன் என்பர் சிலர்.

திருநாவுக்கரையர் ஏகாதசமாலை : இதில் 11 திரு விருத்தங்கள் உள. அப்பர் வரலாறு முழுவதையும் இதில் காணலாம்.

இவர் திருநாவுக்கரசரிடம் கொண்டிருந்த அன்பு இப் பதினொரு பாடலில் துலங்குகின்றது. திருநாவுக்கரசு என்னும் திருப் பெயரின் மூலம் அப்பர் பெருமானரின் பெருமையினைப் பெரிதும் பாராட்டியுள்ளனர்.

இலைமாடு என்றுஇடர் பரியார், இந்திர
னேஒத் துறுகுறை வற்றாலும்
நிலையாதிச் செல்வம் எனவே கருதுவர்
நீள்சன் மக்கடல் இடையில்புக்
கலையார் சென்றரன் நெறியா கும்கரை
அண்ணப் பெறுவர்கள் வண்ணத்தின்
சிலைமா டந்திகழ் புகழ்ஆ மூர்உறை
திருநாவுக் கரசென் போரே."

சேக்கிழார் : இவர் தொண்டை நாட்டில் சென்னைக்கு அடுத்த குன்றத்தூரில் வேளாளர் குடியில் சேக்கிழார் மரபில் பிறந்தவர். இவரது பிள்ளைத் திருநாமம் அருண்மொழித் தேவர் என்பது. பன்னிரண்டாம் திருமுறையாம் பெரிய புராண ஆசிரியர். இவர் காலத்தே மன்னன் மூன்று வினாக்கள் விடுத்தனன். அவை மலையினும் பெரிது எது, கடலினும் பெரிது எது, உலகில் பெரிது எது என்பனவாம். அவற்றிற்கு முறையே,

"நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது."
"பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலின் பெரிது."
"காலத்தி னால்செய்த உதவிக்கு வையகமும்
வானகமு மாற்றல் அரிது."

என்ற குறட்பாக்களை விடையாக எழுதி அனுப்பி அவனுக்கு முதல் அமைச்சராக அமைந்தவர். அதுபோது இவரது பெயர் உத்தமச் சோழ பல்லவர் என்பது.

இவர் காலத்து மன்னனான அநபாயன் சீவக சிந்தாமணியில் ஈடுபட்டிருந்ததை உணர்ந்து அவனுக்குச் சிவனடியார் வரலாற்றைப் புகட்டியவர். அவ் வரலாறுகளைப் புராணமாகப் பாடித் தரவேண்டியதனால்தான், இவர் சிதம்பரம் சென்று நடராசரைப் பணிந்து, அவர், "உலகெலாம்" என்ற தொடரைக் கொடுக்க அதனை முதலாகக் கொண்டு பெரிய புராணமாம் திருத்தொண்டர் புராணம் பாடினார். இதனால் 'தொண்டர் சீர்பரவுவார்' என்ற பட்டத்தையும் பெற்றவர்.

இவர் தெய்வப் புலவர் என்ற பெயரையும் பெற்றவர். இப் பெயர் பெற்ற மற்றொருவர் திருவள்ளுவர். இவரது கவியின் மாண்பு சொல்லொணாதது. இம் மாண்பைக் காணவிழைவார் சேக்கிழார் பிள்ளைத் தமிழ் நூலில் பரக்கக் காணலாம். பல்லாற்றாலும் இவரது மாண்பையும், நூலின் பெருமையும் காணவிழைவார் யான் எழுதியுள்ள சேக்கிழார் பிள்ளைத் தமிழ்ப் பேருரை விளக்கத்தில் காணலாம்.

இவர் எழுதியுள்ள பெரிய புராணம் ஒரு வரலாற்று நூல், சீர்திருத்த நூல், சாத்திர நூல், தோத்திர நூல் பத்திச் சுவை நனி சொட்டச் சொட்ட பாடப்பட்ட நூல். இதில் நாயன்மார்களின் வரலாறுகள் கூறப்பட்டனவாயினும், முதலிலிருந்து இறுதி வரையில் ஊடுருவிச் செல்லும் வரலாறு சுந்தரரது வரலாறாகும். அவர் வாழ்ந்த பதியாகிய திருவாரூரே நகர்ச் சிறப்பாகவும், சோழ நாடே நாட்டுச் சிறப்பாகவும், காவிரியே ஆற்றுச் சிறப்பாகவும் கொண்டு அமைந்துளது. தடுத்தாட்கொண்ட புராணத்தில் சுந்தரர் பிறப்பும் அவரது திருமண நிகழ்ச்சிகளும், ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணத்தில் சங்கிலியார் திருமணமும், சேரமான் பெருமாள் நாயனார் புராணத்துள் இவரை நட்புக் கொண்டதும், இறுதியில் வெள்ளையானைச் சருக்கத்தில் இவர் முத்தி பெற்றதும் பாடப்பட்டு முடித்திருத்தலின், இஃது ஒரு பெருங் காப்பியமாகத் திகழ்கிறது. கலப்பு மணம், சமபந்தி உணவு, சாதி ஒழிப்பு, விதவை மணம் போன்ற சீர்திருத்தக் கொள்கைகட்கு இடந்தரும் நூல் இதுவே. கல்வெட்டுக்களில் காணப்படும் வரலாற்றுக் குறிப்புக்களுக்கு இஃது ஓர் எடுத்துக்காட்டாகும். இன்பச் சுவைக்கும், இயற்கையழகை எடுத்துரைத்தற்கும் இஃது ஏற்ற நூல்.

“கற்பகத்தின் பூங்கொம்போ காமன்தன் பெருவாழ்வோ
பொற்புடைய புண்ணியத்தின் புண்ணியமோ புயல்சுமந்து
விற்குவளை பவளமலர் மதிபூத்த விரைக்கொடியோ
அற்புதமோ சிவனருளோ அறியேன்என் றதிசயித்தார்.”

“முன்னேவந்து எதிர்தோன்றும் முருகனோ பெருகொளியால்
தன்னேரில் மாரனோ தார்மார்பின் விஞ்சையனோ
மின்னேர் செஞ்சடை அண்ணல் மெய்யருள் பெற்றுடைய வனோ
என்னேஎன் மனம்திரித்த இவன்யாரோ எனநினைந்தார்.”

பெரிய புராணத்தில் பாயிரமும், பதின்மூன்று சருக்கங்களும், 4286 பாடல்களும் உள.

சேக்கிழார் அநபாய சோழன் காலத்தவர். இவன் இரண்டாம் குலத்துங்கன் ஆவான். இக் கருத்துக் குலோத்துங்கன் சோழன் உலா, கல்வெட்டுக்கள் இவற்றால் அறியப்படுவன. இவன் திருமுன் பெரிய புராணம் அரங்கேற்றப்பட்டதைச் சேக்கிழார் "சோழ நீடுபாராய சீர் அநபாயன் அரசவை" என்றே குறிப்பிடுகின்றார். இவன் காலம் 1123—1148. ஆகவே, இக் காலமே சேக்கிழார் காலமாகும்.

பெரிய புராணம் சிறந்த இலக்கியச் சுவையும், வரலாற்று உண்மையும் அடங்கிய தலை சிறந்த நூல். உவமை நயங்களும் இதில் மிகுதி. இந்நூலாசிரியர் இருந்த இடத்தில் இருந்துகொண்டு தம் நூலைப் பாடியவர் அல்லர். தல யாத்திரையினை மேற்கொண்டு, அவ்வக் கோயில்களின் கல் வெட்டுக்களையும், சிற்ப ஓவியங்களையும் அறிந்த பின்பே நூலைப் பாடியவர். இக் குறிப்புக்களை இவரது நூலில் பரக்கக் காணலாம்.

கங்கை கொண்ட சோழபுரச் சிற்பங்களில் இறைவர் சண்டீசர்க்குத் தலைமாலை சூட்டிய காட்சி காணப்படுகிறது. அதனைச் சேக்கிழார்.

"சண்டீசனுமாம் பதம்தந்தோம் என்றங்கவர் பொன்
தடமுடிக்குத்
துண்டமதிசேர் சடைக்கொன்றை மாலைவாங்கிச்
சூட்டினார்."

என்று பாடியுள்ளனர்.

பழையாறை வடதளியில் அமர்நீதி நாயனார் தராசுத் தட்டில் ஏறியபோது, தம் மனைவியருடனும், தம் குழந்தையுடனும் ஏறிய காட்சி காணப்படுகிறது. அக்காட்சியினை அப்படியே சேக்கிழார், "புனைமலர்க் குழல் மனைவியார் தம்மொடு புதல்வன்தனை இடக்கொடு தனித் துலைவலம் கொண்டு தகவால் இனைய செய்கையில் ஏறுவார்" என்று பாடியுள்ளனர். இவற்றை நேரில் காணமல் இம்முறையில் பாட இயலுமோ?

வரலாற்றுக்குரிய பல சான்றுகளைப் பெரிய புராணத்துள் காணலாம். ஞானசம்பந்தர் காலத்தை நிறுதற்குத் துணையாக உள்ளது பெரிய புராணமே. சிறுத்தொண்டராம் பரஞ்சோதியார் திருஞானசம்பந்தரை வரவேற்றவர். அப் பரஞ்சோதியார் தம் மன்னன் பொருட்டு வாதாபி நகரத்து இரண்டாம் புலிகேசியுடன் போரிட்டு வென்றவர். இதனைச் சேக்கிழார்,

"மன்னவர்க்குத் தண்டுபோய் வடபுலத்து வாதாபித்
தொன்னகரம் துகளாகத் துளைநெடுங்கை வரையுகைத்து."

என்று பாடியுள்ளனர்.

சுந்தரர் தலை மயிரின் ஈரத்தைப் போக்க ஆடை கொண்டு துடைத்ததை நல்ல உவமையுடன் "முகில் நுழை மதியம் போலக் கைவலான் முன்கை சூழ்ந்த துகில் கொடு குஞ்சி ஈரம்புலர்த்தி" என்றனர்.

சுந்தரர் தமக்கு இரண்டாவது திருமணத்தையும் முடிக்கவேண்டும் என்று இறைவரை வேண்டும் நிலையிலே எம்முறையில் வேண்டினால் இறைவர் இணங்குவார் என்பதைப் பாடும்போது,

"மங்கை ஒருபால் மகிழ்ந்ததுவும் அன்றி மணிநீள் முடியின்கண்
கங்கை தன்னைக் கரந்தருளும் காதல் உடையீர் அடியேனுக்
கிங்கு நுமக்குத் திருமாலை தொடுத்தென் உள்ளத் தொடை அவிழ்த்த
திங்கள் வதனச் சங்கிலியைத் தந்தென் வருத்தம் தீரும்என."

என்று பாடிய பாட்டு இலக்கியச் சுவைக்கு ஏற்றதன்றோ!

இக்காலத்தில் மரம் செடி நடுதல், வளர்த்தல், செயல்கள் அக்காலத்திலும் இருந்தன என்பதைப் பெரியபுராணம் நன்கு எடுத்துக் காட்டுகிறது.

"நாளிகேரம் செருந்தி நறுமலர் நரந்தம் எங்கும்
கோளிசா லந்தமாலம் குளிர்மலர்க் குரவம் எங்கும்
தாளிரும் போந்து சந்து தண்மலர் நாகம் எங்கும்
நீளிலை வஞ்சி காஞ்சி நிறைமலர் கோங்கம் எங்கும்."

என்று மரங்களின் வளத்தைப் பாடுதல் காண்க.

கீரை கறியினை எப்படிப் பக்குவம் செய்து சமைத்தல் வேண்டும்; வாழை இலையினை எப்படிப் பரப்பல் வேண்டும் என்ற நுண்ணிய செயல்களையும் பெரியபுராணம் விழிப்புடன் அறிவித்துச் செல்கிறது. இதனை "ஆய்ந்து புனலிடைக் கழுவித் தக்க புனித பாத்திரத்துக் கைம்மை வினையினால் வேறு வேறு கறி அமுதாக்கி" என்றும், "கதலி நீண்ட குருத்தினை விரித்து நீரால் மகிழ்ந்துடன் விளக்கி ஈர்வாய் வலம் பெற மரபின் வைத்தார்" என்றும் முறையே கூறுதல் காண்க.

ஒவ்வொரு மரபினர்களின் வாழ்ந்த இடங்களை நாம் நேரில் காண்பது போல் இந்நூல் பாடிக் காட்டுகிறது.

"குன்றவர் அதனில் வாழ்வார் கொடுஞ்செவி ஞமலிஆர்த்து
வன்திறள் விளவின் கோட்டு வார்வலை மருங்கு தூங்கல்."

என்பது வேடர் சேரி வர்ணனை.

"பற்றியபைங் கொடிச்சுரைமேல் படர்ந்தபழங் கூரையுடைப்
புற்குரம்பைச் சிற்றில்பல நிலத்துளதோர் புலைப்பாடி"

என்பது பறையர் சேரி வர்ணனை.

நுளையர் சேரியை வர்ணிக்கையில்

"அலைகடல் விளிம்பில்
பல்நெடுந்திரை நுரைதவழ் பாங்கரின் ஞாங்கர்
மன்னுதொன்மையின் வளைவளத் துணவினின் மலிந்த
தன்மைவாழ் குடிமிடைந்தது தடநுளைப் பாடி"

என்று வர்ணிக்கப்பட்டுள்ளது. இங்ஙனம் பல நுண்ணிய குறிப்புக்களைப் பன்னிரண்டாம் திருமுறையாகிய பெரிய புராணத்தில் காணலாம்.

ஆழ்வார்களின் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்
(Alwars' Sacred Four Thousand Hymns)

சைவப் பெருமக்களுக்குத் தோத்திர நூலாக அமைந்த திருமுறைத் தொகுப்பைப் போல, வைணவ சமயத்தவர்க்குத் தோத்திர நூல் தொகுப்பாக அமைந்த தொரு

நூலே நாலாயிரத் திவ்வியப் பிரபந்தமாகும். இத் தொகுப்பு நூல் வழி திருமாலின் பெருமைகளையும், திருமால் அடியார்களின் பெருமைகளையும் உணரலாம்.

இந்நூல் முதலாயிரம், பெரிய திருமொழி, இயற்பா, திருவாய் மொழி என்ற நான்கு பெரும் பிரிவுகளாகத் திகழ்கிறது. முதலாயிரத்தில் திருப்பல்லாண்டு, பெரியாழ்வார் திரு மொழி, திருப்பாவை, நாச்சியார் திருமொழி, பெருமாள் திருமொழி, திருச்சந்த விருத்தம், திருமாலை, திருப்பள்ளி எழுச்சி, அமலநாதி பிரான், கண்ணினுள் சிறுத்தாம்பு என்ற உட்பிரிவுகள் உள. பெரிய திரு மொழி என்னும் பகுதியுள், பெரிய திருமொழி, திருக்குறுந் தாண்டகம், திரு நெடுந்தாண்டகம் என்னும் உட்பிரிவுகள் உள. இயற்பா என்னும் பிரிவில் முதல் திருவந்தாதி, இரண்டாம் திருவந்தாதி, மூன்றும் திருவந்தாதி, நான்முகன் திருவந்தாதி, திரு விருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திரு எழு கூற்றிருக்கை, சிறிய திரு மடல், பெரிய திரு மடல் என்னும் தலைப்புக்கள் உள்ளன. திருவாய் மொழி என்ற பகுதி வேறு உட்பிரிகள் இன்றித் திருவாய் மொழி என்ற ஒரே பிரிவாகத் திகழ்கிறது.

இங்ஙனம் பல பிரிவுகள் அமைந்த நூல்களைப் பாடியவர்கள் பன்னிரு ஆழ்வார்கள் ஆவார். இவர்களே பெரியாழ்வார், ஸ்ரீ ஆண்டாள், திருமழிசைப் பெருமாள், தொண்டரடிப்பொடியார், திருப்பாணர், குலசேகரர், மதுரகவியார், திருமங்கை மன்னர், பொய்கையார், பூதத்தார், பேயார், நம்மாழ்வர் ஆவர். இப்பன்னிருவருள் நம்மாழ்வாரைத் தெய்வமாகக் கொண்டு பாடியவர் மதுர கவி ஆழ்வார். ஆதலின் இவரையும், பெண்பால் ஆழ்வாரான ஸ்ரீ ஆண்டாள் அம்மையாரையும் விடுத்து ஆழ்வார்கள் பதின்மர் என்ற கொள்கையும் வைணவரிடையே உண்டு. பிள்ளைப் பெருமாள் ஐயங்கார், "பதின்மரும் பணித்த பாடல்," என்று குறித்துள்ளனர். மேலும், ஐயங்கார் மதுரகவியாரை இணைத்து ஸ்ரீ ஆண்டாள் அம்மையாரை மட்டும் பிரித்துத் தாம்பாடிய சீரங்க நாயகர் ஊசல் காப்புப் பாடலில் பதினொருவரை மட்டும் குறித்துள்ளனர். ஆழ்வார்கள் ஆவார் திருமாலின் கல்யாண குணங்களில் ஆழ்ந்திருப்பவர்கள். ஆழ்வார்களின் வைப்பு முறை பலவாருக

உள்ளது. ஆகவே, நாம் ஒரு முறை கொண்டு ஆழ்வார்களைப் பற்றி ஆய்வோமாக. ஆழ்வார்களுள் முதல் ஆழ்வார்கள் என்ற தொடரால் அழைக்கப்படுபவர்கள் பொய்கையார், பூதத்தார், பேயார் ஆவர்.

பொய்கையாழ்வார்: இவர் காஞ்சியம் பதியில் திருவெஃகா என்னும் தலத்தில் வடபுறத்துள்ள பொற்றாமரைத் தடாகத்தில் ஐப்பசி மாதம் திருவோண நட்சத்திரத்தில் திருமாலின் பாஞ்ச சந்நியமாகிய திருச் சங்கின் அம்சமாகத் தோன்றினார். இவர் குளத்தில் தோன்றினமையின் பொய்கையார் எனப்பட்டார்.

பூதத்தாழ்வார்: இவர் இதுபோது மகாபலிபுரம் எனப்படும் திருக்கடல் மல்லை என்னும் தலத்தில் குருக்கத்திப் பந்தரில் குருக்கத்தி மலரிலே பெருமாளின் கதாயுதத்தின் அம்சமாகத் தோன்றினார். ஐப்பசி மாதம் அவிட்ட நட்சத்திரம், இவர் பிறந்தநாள். இவர் திருமாலைக் கடல் வண்ணன் பூதம், மறுத்திரு மார்பன் அவன் தன் பூதம் என்று பாடி இருத்தலால் இவர் பூதத்தாழ்வார் எனப்பட்டனர் போலும்.

பேயாழ்வார்: இவர் திருவல்லிக்கேணியின் தென் திசையில் உள்ள திருமயிலை ஆதிகேசவப் பெருமாள் கோவில் கிணற்றிலே செவ்வல்லிப் பூவிலே, திருமாலின் கதாயுத அம்சமாக ஐப்பசி மாதம் சதய நட்சத்திரத்தில் பிறந்தனர். இவரது ஒழுக்கம் உலக நடையில் மாறுபட்டு, அடிக்கடி சிரித்தல், அழுதல், ஆடுதல், பாடுதல், அலறுதல், தொழுதல், மகிழ்தல் முதலான செயல்களைத் தம்மளவில் செய்து வந்ததால் இவர் ஒரு பேய் பிடித்தவர்போலும் எனக் கருதிப் பேயார் எனப்பட்டனர் போலும்! உலகர் இங்ஙனம் ஞானியர்களை மொழிவது உண்மையே. மணிவாசகப் பெருமானே "சகம் பேய் என்று தம்மைச் சிரிப்ப" என்றே பாடியுள்ளனர்.

மூவர் பிறப்பிலும் சில ஒற்றுமைகள் காணப்படுகின்றன. அவை இவர்கள் மக்கள் பிறப்பது போல இன்றித் தோன்றியவர்கள் என்பதும், ஐப்பசி மாதத்தில் அடுத்தடுத்த நட்சத்திரங்களில் பிறந்தவர்கள் என்பதும் ஆகும். இதனால் இவர்கள் மூவரும் ஒரே காலத்தவர் ஆவர். இவர்கள் தனித் தனியே வாழ்ந்து வந்தனர். ஒருநாள் பொய்கையார்

திருக்கோவலூரை அடைந்து ஒரு வீட்டின் இடைகழியில் உறங்கிக் கொண்டிருந்தனர். அதுபோது பூதத்தாழ்வார் அங்கு வந்தனர். அவரைக் கண்ட பொய்கையார் "இந்த இடத்தில் ஒருவர் படுக்கலாம்; இருவர் இருக்கலாம்" என்று கூறி, இருக்க இடம் தர இருவரும் இருந்தனர். அதன்பின் பேயாழ்வார் அங்கு வந்தனர்; அதுபோது முன்னிருந்த இருவர்களும் இவரை நோக்கி. "இங்கு ஒருவர் படுக்கலாம்; இருவர் இருக்கலாம்; மூவர் நிற்கலாம்" என்று கூற அவ்வாறே மூவரும் நின்று கொண்டே திருமாலின் பெருமைகளைக் குறித்து அளவளாவி இன்புற்றிருந்தனர். இந்நிலையில் திருமால் பெருமழையினை யுண்டாக்கி, அவர்கள் அறியாவண்ணம் உருக் கொண்டு அவர்களை நெறுக்கி நின்றனர். அதுபோது மூவரும் முன்பு இல்லாத நெறுக்கம் அதுபோது உண்டாதலை உணர்ந்து, எவரேனும் புகுந்திருக்க வேண்டும் என்று ஐயம் கொண்டபோது, திருமாலின் திரு வுருவம் தோன்றக் கண்டு களி கூர்ந்தவர்களாய் வாய்திறந்து,

"*வையம் தகளியா வார்கடலே நெய்யாக*
வெய்ய கதிரோன் விளக்காக—செய்ய
சுடராழி யான்அடிக்கே சூட்டினேன் சொல்மாலை
இடர்ஆழி நீங்குகவே என்று."

என்று பொய்கையாழ்வாரும்,

"*அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக*
இன்புருகு சிந்தை இடுதிரியா—நன்புருகி
ஞானச் சுடர்விளக் கேற்றினேன் நாரணற்கு
ஞானத் தமிழ்புரிந்த நான்."

என்று பூதத்தாழ்வாரும்,

"*திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் திகழும்*
அருக்கன் அணிநிறமும் கண்டேன்—செருக்கிளரும்
பொன்ஆழி கண்டேன் புரிசங்கம் கைக்கண்டேன்
என்ஆழி வண்ணன்பால் இன்று."

என்று பேயாழ்வாரும் பாடினர். இம்மூவரும் பாடிய பாடல்களின் தொகுதி முறையே முதல் திருவந்தாதி, இரண்டாம் திருவந்தாதி, மூன்றும் திருவந்தாதி எனப்படுகிறது. ஒவ்வொன்றிலும் தனித்தனி நூறு வெண்பாக்கள் உள.

இம்மூன்றும் திருவந்தாதி முதல் திருவந்தாதி என்று ஆதற்குரியதாகத் திகழ்கிறது, மூவர்க்கிடையே திருமால் இருந்தபோது "கண்டேன்" என்ற வாக்குப் பேயார் வாக்கில் எழுவதனுல் அவர் திருமாலை முதலில் கண்டது உண்மை ஆகிறது. பொய்கையார், பேயார் திருமாலைச் சிவபெருமானுடன் சேர்த்துக் காண்கிருர்கள்.

"அரன்நா ரணன்நாமம் ஆன்விடைப் புள்ளூர்தி
உரைநூல் மறைஉறையுள் கோவில்—வரைநீர்
கருமம் அழிப்புஅளிப்புக் கையது வேல்நேமி
உருவம்எரி கார்மேனி ஒன்று."

என்பது பொய்கையார் வாக்கு.

"தாழ்சடையும் நீள்முடியும் ஒண்மழுவும் சக்கரமும்
சூழ்அரவும் பொன்நாணும் தோன்றுமால்—சூழும்
திரண்டருவி பாயும் திருமலைமேல் எந்தைக்கு
இரண்டுருவம் ஒன்ருய் இசைந்து."

என்பது பேயார் வாக்கு. இதுபோலப் பூதத்தார் வாக்கில் வெளிப்படையாகக் கூறப்படாவிட்டாலும்

"ஒருவனல்லை ஒளிஉருவம் நின்னுருவம்
ஈருருவம் என்பர் இருநிலத்தோர்."

என்னும் குறிப்புக் காணப்படுதலால், இருவர் கருத்துக்கு இவரும், உடன்பட்டவர் என்பது தெரிகிறது.

திருமழிசை ஆழ்வார்: இவர் பூவிருந்தவல்லிக்கு அருகில் உள்ள திருமழிசை என்னும் ஊரில் தைமாதம் மகநட்சத்திரத்தில் சுதரிசனம் என்னும் சக்கரத்தின் அம்சமாகத் தோன்றினுர். இவர் திருவாளன் என்னும் வேளாளனுல் வளர்க்கப்பட்டவர் என்பர். இவர் பல மதங்களையும் ஆய்ந்தவர் என்பது இவரது வாக்காகிய

"சாக்கியம் கற்ருேம் சமணம் கற்ருேம் சங்கரனுர்
ஆக்கிய ஆகமநூல் ஆராய்ந்தோம்."

என்பதைக் காட்டுவர். இஃது இவர் பாடியுள்ள பாடல்களில் காணப்படவில்லை. இதனை இவர் பாடினுராகக் கொண்டாலும், இவர் இச்சமயங்களில் ஈடுபட்டவர் என்று சொல்ல

முடியாது. பன்மத ஆராய்ச்சிக்காக அவ்வச் சமய நூல்களை ஆராய்ந்தார் என்று கோடல் பொருத்தம் ஆகும். இங்ஙனம் இருக்க, "இவரே சைவசமயத்தில் இருந்தார். அதுபோது இவருக்குச் சிவவாக்கியர் என்பது பெயர்" என்றும் கூறுவர். அது பொருத்தமாகக் காணப்படவில்லை. இவர் ஆழ்ந்த வைணவப் பற்று உடையவர். இதனை இவரது வாக்காகிய

"அறியார் சமணர் அயர்ந்தார் பவுத்தர்
சிறியார் சிவப்பட்டார்."

என்று கூறுமாற்றால் தெரியலாம். இவருக்குப் பேயாழ்வார் தத்துவ உபதேசம் செய்தார். இதனைப் பேயாழ்வார் சிறப்புரைக்கும் திருவிருத்தத்தில் வரும் "பெருக்க முடன் திருமழிசைப் பிரான் தொழுவோன் வாழியே" எனவரும் தொடரால் உறுதிப்படுத்தலாம். திருமழிசையார்க்குக் கணிகண்ணன் என்ற பெயரினர் சீடர் ஆவர்.

சீடரும் ஆழ்வாரும் காஞ்சியம் பதியில் இருந்தபோது, அக்காலத்து அரசன் கணிகண்ணனிடம், அவர் குருவான ஆழ்வாரை அரண்மனைக்கு எழுந்தருளக் கேட்டனன். கணிகண்ணன், "எம் ஆசாரியர் எங்கும் வாரார்" என்ன, பின் தன் மீது பாடல் பாடும்படி கணிகண்ணரை வேண்டினன். "நாராயணனைப் பாடுவேனே அன்றி, நரனைப் பாடேன்" என்றனர். அதனால் கோபம் கொண்ட மன்னன் கணிகண்ணரை ஊரை விட்டுப் போகும்படி உத்தரவிட்டனன். கணிகண்ணர் தம் குருவிடம் இச் செய்தியைக் கூற அவர், "நீ போகும் போது எனக்கும் பெருமாளுக்கும் இங்கு என்ன வேலை?" என்று கூறிப் பெருமாளிடம்,

"கணிகண்ணன் போகின்றான் காமருபூங் கச்சி
மணிவண்ணா நீகிடக்க வேண்டா—துணிவுடைய
செந்நாப் புலவனும் போகின்றேன் நீயும்உன்றன்
பைந்நாகப் பாய்சுருட்டிக் கொள்."

என்று பாட, இதனை அறிந்த மன்னன் கணிகண்ணரும் ஆழ்வாரும் புறப்பட்டுச் சென்று தங்கிய இடத்தை அறிந்து தம் பிழையைப் பொறுக்க வேண்டக் கணிகண்ணன்

ஆழ்வாரை வேண்ட ஆழ்வாரும் இசைந்து பெருமானை நோக்கி,

"கணிகண்ணன் போக்கொழிந்தான் காமருபூங் கச்சி
மணிவண்ணா நீகிடக்க வேண்டும்—துணிவுடைய
செந்நாப் புலவனும் போக்கொழிந்தேன் நீயும்உன்றன்
பைந்நாகப் பாய்விரித்துக் கொள்."

என்று பாடப் பெருமாளும் பண்டுபோல் கிடந்த கோலத்தில் விளங்குவாராயினர். இது முதல் கொண்டு அப்பெருமானைச் சொன்ன வண்ணம் செய்த பெருமாள் என்று அழைக்கலாயினர். வடமொழியாளர் "யதோக்தகாரி" எனக் கூறி மகிழ்வாராயினர். இத்தலம் இது போது சின்ன காஞ்சிக்குச் செல்லும் வழியில் உளது. பெருமாள் ஆழ்வார் மாணவர் ஆகிய இம்மூவரும் தங்கிய இடம் ஓர் இரவு இருக்கை என்று இன்றும் கூறப்படுகிறது. பெருமாள் ஆழ்வார்பின் சென்றதைக் குமர குருபரர் "பைந்தமிழ்ப் பின்சென்ற பச்சைப் பசுங் கொண்டலே" என்று புகழ்ந்துள்ளனர்.

ஆழ்வார் பாடிய நூல்கள் திருச்சந்த விருத்தம், நான்முகன் திருவந்தாதி என்பன.

ஆழ்வார்தம் நான்முகன் திருவந்தாதியில் திருமாலை "ஆக்கை கொடுத்தளித்த கோனே குணப்பரனே" என்று குறிப்பிட்டுள்ளனர். இக் குணப்பரன் என்பது மகேந்திரவர்மனுக்குரிய பெயர்களுள் ஒன்று. அவன் காலம் கி. மு. 7 ஆம் நூற்றுண்டின் முற்பகுதி. ஆகவே, ஆழ்வார் காலம் இதுவே. இவருக்குப் பேயார் ஞானேபதேசம் செய்தார் என்று முன்பு கண்டோம். ஆகவே, பேயார் காலமும் இதுவே. இவருடன் வாழ்ந்த பூதத்தார் பொய்கையார் காலமும் இதுவே எனக் கொள்க.

"அத்த ஞகிஅன்னை யாகி ஆளும் எம்பி ரானுமாய்
ஒத்தொவ் வாத பல்பிறப்பு ஒழித்து நம்மை ஆட்கொள்வான்
முத்தனார் முகுந்தனார் புகுந்து நம்முள் மேவினார்
எத்திஞல் இடர்க்கடல் கிடத்தி ஏழை நெஞ்சமே."

பெரியாழ்வார்: இவர் வில்லிபுத்தூரில் ஆனிமாதம் சுவாதி நட்சத்திரத்தில் கருடாம்சமாகத் தோன்றினார். இவரது குலம் வேயர் குலமாகும். இது பிராமண குலத்தில்

ஒரு பிரிவு போலும்! இவர் பிராமணர் என்பதையும், வேயர் குலத்தர் என்பதையும், விட்டுசித்தர் என்ற பெயருடையர் என்பதையும் "வேயர் புகழ் விட்டு சித்தன் திருவில் பொலி மறைவாணர் புத்தூர் திகழ் பட்டர்பிரான்" என்று வரும் தொடரால் தெளிக. இவர் திருமாலுக்குப் பூத்தொண்டு செய்து வந்தவர். இவர் திருப்பல்லாண்டு, பெரிய திருமொழி என்ற இரு நூல்களைப் பாடியுள்ளார்.

இவரது திருமொழியில் கண்ணபிரானது பிறப்பு, வளர்ப்பு அழகுறப் பாடப்பட்டுள்ளன. இவற்றின் பின் அகப்பொருள் தழுவிய பாடல்களும், இராமபிரான்மீது ஈடுபட்டுப்பாடிய பாடல்களும், மக்கட்குரிய நல்லுபதேசப் பாடல்களும், திருவரங்கம், கும்பகோணம், திருவேங்கடம் முதலான தலங்கள் மீது பாடப்பட்ட பாடல்களும் உள.

"மாணிக்கம் கட்டி வயிரம் இடைகட்டி
ஆணிப்பொன் னல்செய்த வண்ணச் சிறுதொட்டில்
பேணி உனக்குப் பிரமன் விடுதந்தானே
மாணிக் குறளனே தாலேலோ
வையம்அளந் தானே தாலேலோ."

ஸ்ரீ ஆண்டாள்: இவர் பெரியாழ்வார் அமைத்த துளசிப் பாத்தியில் ஆடிமாதம் பூர நட்சத்திரத்தில் பூமி தேவி அமிசமாய்த் தோன்றியவர். இவ்வம்மையாரைப் பெரியாழ்வார் வளர்த்து வந்தனர். இவரது திருநாமம் கோதை என்பது. இவ்வம்மையார் வளர்ந்து மணப்பருவம் உற்றுத் திருவரங்கனையே மணக்கும் விருப்புடன் இருந்தார். இவ்வம்மையார் தம் வளர்ப்புத் தந்தையார் திருமாலுக்கெனக் கட்டிய மாலையை அவர் அறியாது சூட்டித் தம் அழகைக் கண்ணுடியில்கண்டு, பின்கழற்றி வைத்து விடுவர். ஒருநாள் இதனை ஆழ்வார் கண்டு அன்று பெருமாளுக்குப் பூமாலை சூட்டிலர். திருமால் அன்று இரவு ஆழ்வார் கனவில் கோதை சூடிய மாலையே தமக்கு விருப்பம் என்று கூற, ஆழ்வார் விழித்து, கோதை தம்மை ஆண்டவள் என்ற காரணத்தால் 'ஆண்டாள்' என்றும், மலரைச் சூடிக் கொடுத்ததால் 'சூடிக்கொடுத்த நாச்சியார்' என்றும் அழைக்கலாயினர். அவ்வாறே அம்மையார் சூடிக் கொடுத்ததையே திருமாலுக்குச் சாத்தி வந்தனர்.

ஸ்ரீ ஆண்டாள் அம்மையார் தாம் விரும்பியவண்ணம் திருவரங்கனையே கூடிப்பிரியா நிலை எயதினர்.

இவ்வம்மையார் பாடிய நூல்கள் திருப்பாவை, நாச்சியார் திருமொழி என்பன. திருப்பாவை, ஆய்ச்சியர் பாவை நோன்பு நோற்பது போலப் பாவனை செய்து பாடப்பட்ட நூல்; முப்பது பாடல்களையுடையது. இதில் இயற்கை இன்பம் செழித்துக் காணப்படுகிறது. பெண்கள் ஒருவரை ஒருவர் துயில் எழுப்பி, நீராடப்போகும் நிலைகள் கவிகளில் கவினுற விளங்குகின்றன. மார்கழி மாதத்தில் இது விடியற்காலையில் வைணவர்களால் பெரிதும் பாடப்பட்டு வருவது.

நாச்சியார் திருமொழியில் பத்துப் பாடல் கொண்ட 14 திருமொழிகள் உள. இவற்றிலும் இடைப்பெண்கள் பாடும் முறையில் கண்ணனைப் பற்றிய செய்திகளே உள. அகப்பொருட் கருத்துப் பெரிதும் காணப்படுகிறது. கண்ணனைக்கூட்டும்படி மன்மதனை வேண்டல், கண்ணனிடம் விடும்படி சுற்றத்தாரை வேண்டல், குயிலைக் கண்ணனைப் பற்றிக் கூவும்படி வேண்டல் முதலான பகுதிகள் உண்டு. திருமாலிருஞ் சோலைப் பெருமாள் பற்றிய திருமொழி ஒன்று உண்டு. மாயவனை மணப்பதாகக் கனவு கண்ட செய்தியைத் தோழிக்கும் கூறும் முறையில் அமைந்த திருமொழி மிக இன்பம் தருவதாகும்.

பெரியாழ்வார் ஸ்ரீவல்லபதேவன் என்பான் காலம் எனக் குரு பரம்பரை நூல் கூறுகிறது. அவன் பாண்டிய நாட்டை ஆண்ட மன்னன். அவன் கி. பி. 9 ஆம் நூற்றுண்டினன். ஆகவே, ஆழ்வார் 9 ஆம் நூற்றுண்டினர். இதனுல் ஆண்டாள் அம்மையார் காலமும் இதுவே.

" மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத
முத்துடைத் தாமம் நிரைதாழ்ந்த பந்தர்க்கீழ்
மைத்துனன் நம்பி மதுசூதன் வந்துஎன்னைக்
கைத்தலம் பற்றக் கனக்கண்டேன் தோழிநான்.'

தொண்டரடிப்பொடி ஆழ்வார்: இவர் சோழநாட்டைச் சார்ந்த திருமண்டங்குடி என்னும் இடத்தில் மார்கழி மாதம் கேட்டை நட்சத்திரத்தில் திருமாலின் வநமாலை அம்சமாகத்

தோன்றினர். இவர் சோழிய பிராமண மரபினர். இவரது இயற்பெயர் விப்ரநாராயணர் என்பது. திருவரங்கத்தில் பெரிய பெருமாளுக்கு மலர்த்தொண்டு புரிந்து வந்தனர். இவர் தேவதேவி என்பாளைக் காதலித்து, அவள் வயத்தராக இருந்து பகவத் கைங்கரியத்தை மறக்க, அதனால் சிறையும் புகுந்தனர். திருமால் தம்பக்தனைக் காத்துச் சிறை நீக்கமும் செய்தனர். அதன்பின் தம் குற்றத்தை உணர்ந்து அதனால் ஏற்பட்ட பாபத்தைப் போக்கத் தொண்டர் அடிப்பொடியை உட்கொண்டு தூயார் ஆயினர். அதனால், இவர் தொண்டர் அடிப்பொடி ஆழ்வார் ஆயினர். இவர் பாடிய நூல்கள் திருமாலை, திருப்பள்ளி எழுச்சி என்பன.

திருப்பள்ளி எழுச்சி அரங்கனைக் காலையில் பள்ளியினின்று எழுந்தருளுமாறு வேண்டும் முறையில் அமைந்தது. இதில் காலை வர்ணனைகள் கவினுற மொழியப்பட்டுள்ளன. இது பத்துப் பாடல்கள் கொண்டது.

திருமாலை என்பது 45 பாடல்களைக் கொண்டு திகழ்கிறது. இதில் திருமால் திருப்பெயரில் சுவையும், பிறப்பினால் பல துன்பம் இருத்தலின் அதன்மீது வெறுப்பும், அணில் இராமனுக்குச் செய்த தொண்டும், கங்கையினும் காவிரி சிறப்புடையது என்பது போன்ற கருத்துக்களும் உள்ளன.

“ஊரிலேன் காணி இல்லை உறவுமற் றொருவர் இல்லை
பாரில் நின்பாத மூலம் பற்றிலேன் பரம மூர்த்தி
காரொளி வண்ண னேஎன் கண்ணனே கதறு கின்றேன்
ஆருளர் களைகண் அம்மா அரங்கமா நகரு ளானே.”

திருமங்கை ஆழ்வார்: இவர் சோழ நாட்டில் திருமங்கை என்னும் நாட்டில் திருவாலி திருநகரிக்கு அருகில் உள்ள திருக்குறையலூரிலே கள்ளர் மரபில் தோன்றியவர். இவர் நளவருடம் கார்த்திகை மாதம் திருமாலின் வில்லின் அம்சமாகத் தோன்றினர். இவரது நிறம் நீலமாக இருந்தமையின், நீலன் என்று அழைக்கப்பட்டனர். இவர் காலத்து இருந்த சோழ மன்னனிடம் தானைத் தலைவராய் இருந்து, அவனது பகைவரை வென்று, பரகாலன் என்ற பெயரையும் பெற்றனர். இதனால் மகிழ்ந்த மன்னன், மங்கை நாட்டுக்கு

மன்னனுகும் பெருமையும் தந்தனன். அதனுல் இவர் மங்கை மன்னர் ஆயினர். இவர் குமுதவல்லி என்பாளை மணந்து அம்மாதராள் காரணமாகப் பாகவதராகிய வைணவ அடியார்கட்கு அன்னதானம் செய்தனர். அதனுல் பொருள் முட்டுப்பாடு நேரக் களவாடவும் தொடங்கினர். திருமால் தேவியுடன் வந்தபோது அவரையும் வழி மறித்தனர். அதுபோது திருமால் அவருக்கு மந்திரஉபதேசம் செய்தனர். இதனுல் நாற்கவியும் பாடும் ஆற்றல் பெற்றனர். இவர் பாடிய நூல்கள் பெரிய திருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், திருஎழுகூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல்களாகும்.

இவர் திருவரங்கப் பெருமான் மதிலினை நாகபட்டினத்திலிருந்து பொன்வடிவமான பௌத்த விக்கிரத்தைக் கொணர்ந்து அதனை விற்றுக் கட்டினர்.

திருஞான சம்பந்தரை இவர் சந்தித்தார் எனவும், அவர் இவருக்குத் தம் கையிலிருந்த வேலாயுதத்தை தந்தனர் எனவும் கூறுவர். திருஞானசம்பந்தர் பாடியுள்ள திருக்காடைக் காப்பில் ஓர் இடத்திலாவது தம் கையில் வேல் இருந்ததாகக் கூறவில்லை. ஆகவே, சம்பந்தரை இவர் சந்தித்தது இல்லை என்னலாம்.

திருமங்கை ஆழ்வார் "தொண்டையர் கோன்வணங்கு நீள் முடிமாலை வயிர மேகன்" என்று பாடியுள்ளமையின், அவ்வயிரமேகன் என்பான் நந்திவர்மனது பட்டப்பெயர் ஆதலின், அவனது ஆட்சி கி.பி. 8 ஆம் நூற்றுண்டின் பிற்பகுதி என்பதால் இவரது காலம் கி. பி. 9 ஆம் நூற்றுண்டு என்க. இவ்வாழ்வார் காலத்தில் தொண்டரடிப்பொடி ஆழ்வார், திருவரங்கத்தில் தொண்டு செய்து வந்தார் எனத் தெரிவதால் அவர் காலமும் இதுவே.

பெரிய திருமொழியின் பதிகங்களின் தலைப்பில் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு தலங்களின் பெயரும் அப்பெயர் அவ்வப்பதிகத்திலும் காணப்படுதலின், இவர் செய்த தலயாத்திரையின்போது அவை பாடப்பட்டனவாகத் தெரிகிறது. இவர் திருமொழியில் இயற்கை அழகு மிளிர்கிறது. தாண்டகங்கள் உள்ளம் உருக்கும் தகையன.

திருமடல்கள் அகப்பொருள் தழுவியன. இவர் சித்திரகவி வல்லார் என்பதை காட்டுவது திருஎழு கூற்றிருக்கை.

"வாடினேன் வாடி வருந்தினேன் மனத்தால்
பெருந்துயர் இடும்பையில் பிறந்து
கூடினேன் கூடி இளையவர் தம்மொடும்
அவர்தரும் கலவியே கருதி
ஓடினேன் ஓடி உய்வதோர் பொருளால்
உணர்வெனும் பெரும்பதம் தெரிந்து
நாடினேன் நாடி நான் கண்டு கொண்டேன்
நாராயணா என்னும் நாமம்."

திருப்பாணாழ்வார்: இவர் சோழ நாட்டில் உறையூரில் துன்மதி வருடம் ரோகிணி நட்சத்திரத்தில் கார்த்திகை மாதம் நெற்பயிர்க் கதிர்க் கழனியில் தோன்றினார். பாணர் குடியினரால் வளர்க்கப்பட்டனர். அதனால் இவர் திருப்பாணாழ்வார் ஆயினார்.

இவர் திருவரங்கநாதனிடத்து அன்பு கொண்டு காவிரிக் கரையில் நின்று பாடி வருவார். ஒருநாள் அக்கோவில் அர்ச்சகர் பெருமாளுக்கு நீர் கொண்டு செல்ல வந்தவர், இவரை எட்டச் செல்லுமாறு கூறவும் கேளாது பாடுகையில் கல்லால் எறிந்து அப்புறப்படுத்த முயன்றனர். அதனால், திருமேனி புண்ணுண்டது. பெருமாள் இதனைச் சகியாராய் லோகசாரங்கர் என்னும் அவ்வர்ச்சகரையே ஆழ்வாரைத் தோளில் சுமந்து, தம் சந்நிதி முன் கொணரப் பணித்தனர். அவரும் அவ்வாறே செய்தனர். பெருமாள் முன்னின்று அமலனாதிபிரான் என்று தொடங்கிப் பத்துப் பாடல்களைப் பாடினார். இப்பத்துப் பாடல்களே பிரபந்தத்தில் "அமலனாதி பிரான்" என்ற பெயருடன் திகழ்கின்றன. இது திருவரங்-கரனது பாத முதல் கண் வரையில் சிறப்பித்துக் கூறுகிறது. இவ்வாறு கூறுவதைப் பாதாதி கேச வர்ணனை என்பர்.

இவ்வாழ்வார் திருமங்கை மன்னன் காலத்தவர் ஆதலின், இவரும் கி. பி. 9 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி ஆகும்.

"கொண்டல் வண்ணனைக் கோவலனாய் வெண்ணெய்
உண்ட வாயன் என்னுள்ளம் கவர்ந்தானை
அண்டர்கோன் அணிஅரங்கன் என் அமுதினைக்
கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே."

குலசேகராழ்வார்: இவர் சேரநாட்டில் திருவஞ்சைக் களத்தில் திருமாலின் கௌத்துப அம்சமாய் மாசி மாதம் புனர்பூச நட்சத்திரத்தில் பவ வருடம் பிறந்தார். இவர் இராம பிரானிடத்திலும், திருவேங்கடமுடையானிடத்தும் அளவு கடந்த அன்புடையவர். இவர் வடமொழியும் தென் மொழியும் நன்கு அறிந்தவர். பெருமாள் என்ற பெயரையும் உடையவர். இவர் இராமாயணத்தினைத் தம் முன்னிலையில் பிரசங்கம் செய்யுமாறு செய்யக் கேட்டு உவந்தவர். ஒரு முறை இராமாயணச் சொற்பொழிவில் இராமன் தனித்து நின்று கரதூடணர்களுடன் போர் செய்தனன் என்ற கட்டத்தைப் புராணிகர் சொன்னபோது, அந்நிகழ்ச்சி அப்பொழுதே நடப்பதாக எண்ணி, உடனே இராமனுக்குத் துணைசெய்யத் தம் சேனையுடன் சென்றனர். அந்நிலையில் புராணிகர் சமத்காரமாக "இராமன் அவர்களை வென்றான்" என்றதும் திரும்பினர்.

குலசேகரர் பகவானிடத்தில் அன்புடையார்போல் பாகவதர்களிடமும் அன்பு காட்டியவர். இதனைப் பொறுத-வர்கள் பெருமாளுக்குச் சார்த்தும் இரத்தின ஆபரணத்தை மறைத்து, அதனை ஒரு பாகவதர் திருடிவிட்டனர் என்று கூற, ஆழ்வார் பாகவதர்கள் அது செய்யார் என்பதைக் குடத்தில் பாம்பை இடச்செய்து, 'பாகவதர் திருடி இருந்தால், பாம்பு என்னைக் கடிக்கட்டும்' என்று கூறிக் கையிட்டு அது கடிக்கா நிலையினை உணர்த்தினர்.

இவர் பாடிய நூல்கள் தமிழில் பெருமாள் திருமொழி என்பதும், வடமொழியில் முகுந்தமாலை என்பதும் ஆகும். இவரது பாடலில் கூடலர் கோன் என்று தம்மைக் கூறி இருப்பதால் பாண்டியரை வென்று மதுரையினை ஆண்டார் என்பது தெரிகிறது.

பெருமாள் திருமொழியில் திருவரங்கம், திருவேங்கடம், திருவிற்றுவக்கோடு ஆகிய தலங்களில் பாடப்பட்ட

பாடல்கள் உள. இவர் பாடியனவாக இத்திருமொழியில் பத்துப் பதிகங்களே உள. இராமனிடத்தும் திருவேங்கடமுடையானிடத்தும் அன்பு கொண்டு பாடியதுபோலக் கண்ணபிரானிடத்தும் அன்பு கொண்டு பாடியுள்ளனர்.

"செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே
நெடியானே வேங்கடவா நின்கோயிலின் வாசலிலே
அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்தியங்கும்
படியாய்க் கிடந்துஉன்பவள வாய் காண்பேனே."

என்று பாடியுள்ளார். இதனால் இன்றும் அப்படிகள் குலசேகரன்படி எனப்படுகின்றன.

விற்றுவக் கோட்டம்மான் மீது பாடிய பாடல்களில் நல்ல அரிய உவமைகள் உள்ளன.

"கண்டார் இகழ்வனவே காதலன்தான் செய்திடினும்
கொண்டானை அல்லால் அறியாக் குலமகள்போல்
விண்தோய் மதில்புடைசூழ் விற்றுவக்கோட் டம்மாநீ
கொண்டாளா யாகிலும்உன் குரைகழலே கூறுவனே."

என்ற பாடலைக் காண்க. குலசேகரரும் திருவரங்கத்தில் மூன்றுவது மதிலைக் கட்டினர் என்பது குரு பரம்பரை வரலாறு. அம்மதில் இடைவெளிச் சுற்றுக் குலசேகரன் வீதி என்று இப்போதும் கூறப்படுகிறது. மேலும், இவர் "ஆடிப்பாடி அரங்கவோ என்றழைக்கும் தொண்டரடிப் பொடி" என்று தொண்டரடிப்பொடி ஆழ்வாரைக் குறித்தலின், இவர் அவருக்குப் பிற்பட்டவர். ஆகவே இவரை கி. பி. 9 ஆம் நூற்றுண்டினர் என்பர்.

நம்மாழ்வார்: இவர் பாண்டிய நாட்டில் திருக்குருகூரில் வேளாண் மரபில் காரியார்க்கும் உடைய நங்கையார்க்கும் திருமகனுராகத் திருமாலின் அம்சமும், ஸ்ரீகௌத்துபத்தின் அம்சமும், சேனை முதலியார் அம்சமுமாகப் பிரமாதி வருடம் வைகாசி மாதம் பௌர்ணமி திதியில் பிறந்தனர்.

இவர் சடம் என்னும் வாயுவைக் கோபித்தவர் ஆதலின் சடகோபர் என்றும், திருவரங்கனுல், "நம் சடகோபன்" என்றதனுல் நம்ஆழ்வார் என்றும், உலகப் போக்குக்கு மாருக இருந்தமையின் மாறர் என்றும், வகுளமாலை

(மகிழம்பூ) தரித்திருந்தமையின் வகுளாபரணர் என்றும், பிறசமயமாம் யானைகட்கு அங்குசமாக இருந்தார் என்ற கருத்தில் பராங்குசர் என்றும் பெயர் பெற்றனர். இவர் ஆழ்வார்களில் தலைசிறந்து விளங்கியவராக இருக்கின்றனர். இவரை அவயவியாகவும், ஏனைய ஆழ்வார்களை அவயவமாகவும் வைணவர்கள் கருதுவதால் இது தெரிகிறது.

இவர் பாடியுள்ள நூல்கள் திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய் மொழி என்பன. இவை வடமொழியில் உள்ள நான்கு வேதங்களைப் போன்றவை என்பர்.

திருவாய்மொழி திராவிடவேதம் எனப்படும். இதில் பல உபதேச மொழிகளையும், நாரை, அன்றில் முதலானவற்றோடு தாம் திருமால் மீது காதல் உற்ற காரணத்தால், பசலையுற்றதையும், துளவம் இச்சித்ததையும், திருமால் திருநீறு அணிந்துள்ளமையினையும், திருநீறு ரட்சையாகும் (காப்பு) என்பதையும் அறிவிக்கப்பட்டுள்ளன.

“கரிய மேனிமிசை வெளியநீறு சிறிதே இடும்பெரிய
கோலத் தடங்கண்ணன் விண்ணோர் பெருமான் தன்னை
உரிய சொல்லால் இசைமாலைகள் ஏத்தி உள்ளம்
பெற்றேற்கு
அரியதுண்டோ எனக்கு இன்று தொட்டும் இனிஎன்றுமே.”

பெரிய திருவந்தாதி: இது வெண்பாவால் இயைந்த நூல். இதில் நெஞ்சுக்கு அறிவுறுத்தும் அறவுரைகள் மலிந்துள்ளன. இதில் 87 பாடல்களே உள. இதில் இவர் தம் பெயரைச் சுட்டிப் பயன்கூறும் பாடல் இல்லை.

“அதுவேநன் றென்றுஅங் கமருலகோர் வேண்டில்
அதுவோ பொருள்இல்லை அன்றே—அது ஒழிந்து
மண் இன்றுஆள் வேன்எனினும் கூடும் மடநெஞ்சே
கண்ணன்தாள் வாழ்த்துவதே கல்.”

திருவிருத்தம்: விருத்தம் என்ற பெயர் பெற்றும் கட்டளைக்கலித்துறை யாப்பால், அமைந்து 100 பாடல்களைக் கொண்டது. அனைத்தும் அகப்பொருள் தழுவிய பாடல்கள். கட்டளைக் கலித்துறைக்குத் திருவிருத்தம் என்னும் பெயரும்

உண்டு போலும். அப்பர் பாடலிலும் உள்ள திருவிருத்தங்களும் கட்டளைக் கலித்துறைகளே.

திருவாசிரியம்: ஆசிரியப்பாவால் அமைந்த ஏழு பாக்களைக் கொண்டது. திருமாலே மும்மூர்த்திகளில் சிறந்ததேவர் என்பதை அறிவித்துச் செல்கிறது.

நம்மாழ்வார் வாக்கில் சீவரமங்கை என்னும் தலக் குறிப்புள்ளது. அது மாறன் நெடுஞ்சடையனுக்குப் பின்னால் உண்டானது. நம்மாழ்வார் தந்தையாரான காரியார் அவனிடம் மந்திரியாக இருந்தவர். பாண்டியன் நிலவிய காலம் கி. பி. எட்டாம் நூற்றுண்டின் இறுதி. ஆகவே இவர் கி. பி. 9 ஆம் நூற்றுண்டின் தொடக்கத்தினர் என்க.

மதுரகவி யாழ்வார்: இவர் திருக்குருகூருக்கு அருகில் உள்ள திருக்கோளூரிலே ஈசுர வருடம், சித்திரை நட்சத்திரம் கருடாழ்வார் அம்சமாகத் தோன்றினர். இவர் செவிக்கினிய கவிகளைப் பாடினமையின், மதுரகவியார் எனப்பட்டார். இவர் திருக்கோளூர்ப் பெருமானை நோக்கித் தொழ ஒரு பேர் ஒளிப் பிழம்பு தோன்ற, அத்திசை நோக்கி வந்து நம்மாழ்வாரைக் கண்டனர். அதுபோது நம்மாழ்வார் யோக நிலையில் இருந்தனர். அந்நிலையிலும் அவரைப் பல கேள்விகள் கேட்க, அவர் யோக நிலையிலிருந்து கண் விழித்துத் தக்க விடையளிக்க, அது முதல் அவரையே தம் ஞானசிரியராகக் கொண்டார்.

இவர் பாடிய பாடல்கள் நம்மாழ்வார்மீது பாடப்பட்டவை. அப்பாடல்கள் பதினொன்கே ஆகும். முதல் பாடல், **கண்ணிநுள் சிறுத் தாம்பு** என்று தொடங்குவதால் அந்நூல், அப் பெயராலேயே வழங்கப்படுகிறது.

மதுரகவியார் நம்மாழ்வார் மாணவர் ஆதலின், இவர் காலம், அவர் காலமாகும்.

“கண்ணி நுள்சிறுத் தாம்பினால் கட்டுண்ணப்
பண்ணி யபெருமா யன்என் னப்பனில்
நண்ணித் தென்குரு கூர்நம்பி என்றக்கால்
அண்ணிக்கும் அமுதூறும் என்நா வுக்கே”

சமணர்களின் தமிழ்த் தொண்டு

சைவர்களும், வைணவர்களும் தமிழ் மொழிக்குச் செய்த தொண்டுகளைப் போலச் சமணர்களும், தமிழ் இலக்கண இலக்கிய வளர்ச்சிக்குப் பெரிதும் தொண்டு புரிந்தவர்கள். சமணர்கள் என்பவர்கள் சைன சமய ஒழுக்கத்தைக் கடைப்பிடித்துத் துறவிகளாய் இருந்தவர்கள். சமண சமயம் வட நாட்டில் கிளைத்த புதுச் சமயமாகும். இச் சைன சமயம் வடநாட்டில், சைன சமயம் என்றும், தென்னாட்டில் சமண சமயம் என்றும் வழங்கப்பட்டது. இச் சமயத்தைச் சார்ந்தவர்கள் இல்லற நெறியினர் ஆயின், சிராவகர் என்றும், துறவு நிலையினராயின் சமணர் என்றும் கருதப்பட்டனர்.

தமிழ் நாட்டில் வாழ்ந்த தமிழ் மக்கள் தனித் தமிழ் நூல் அறிவில் சிறந்து விளங்கினர். வட நாட்டு மக்கள் கூட்டுறவால் தமிழில் வடமொழிக் கலப்பு உளதாயிற்று. இதனை உணர்ந்து தமிழ் நாடு புகுந்த சமணரும் தமிழர்களைத் தம்வசப் படுத்தத் தமிழையும் வடமொழியையும் இளஞ்சிறுர்களுக்கு இலவசமாகத் தமது சமணப் பள்ளிகளில் போதிப்பார் ஆயினர். தமது அறங்களை மெல்ல மெல்லத் தமிழர்கட்கு உணர்த்துவாராயினர். இதற்குச் சான்றாக அவர்கள் எழுதிய பதினெண் கீழ்க் கணக்கு நூல்களில் நாலடியார், திரிகடுகம், பழமொழிநானூறு, ஏலாதி, சிறு பஞ்சமூலம் முதலானவற்றைக் காட்டலாம். காப்பியங்களில் சிந்தாமணி, சூளாமணி, வளையாபதி, நீலகேசி, யசோதர காவியங்களும், புராணங்களில் ஸ்ரீபுராணம், மேரு மந்திரபுராணம், மல்லிநாதர் புராணம், சாந்த புராணங்களும், சிற்றிலக்கியங்களில் நரிவிருத்தம், திருக்கலம்பகம், திருநூற்றந்தாதிகளும், இலக்கணங்களில் நன்னூல், நேமிநாதம், நம்பி அகப்பொருள், வீர சோழியம், யாப்பருங்கலம், நிகண்டுகள் சிலவும் இவர் தந்த நூல்களாகும். தமிழ்க் கணித நூல்களாக நெல் இலக்க வாய்பாடு, சிறு குழி வாய்பாடு எழுதி உதவினர். அறநெறிச்சாரம் என்னும் நூல் சமண சமயத்தவரான முனைப் பாடியார் பாடிய நீதி நூல் ஆகும்.

ஸ்ரீ புராணம் : இது வடமொழி தென் மொழி கலந்து எழுதப்பட்ட மணிப் பிரவவாள நடைநூல். சமண மதத்

தீர்த்தங்கர், இருபத்து நால்வர் சரித்திரங்களைக் கூறும் நூல். இதன் ஆசிரியர் யாவர் என்பது தெரியவில்லை. இதனைச் சமண சமயத்தவர் தினந்தோறும் பூசித்துப் பாராயணம் செய்வர்.

மேரு மந்திர புராணம்: இதற்கு முதல் நூல் ஸ்ரீ புராணம். இதனை எழுதியவர் வாமன முனிவர். இவரை மல்லிசேண வாமன முனி என்றும் கூறுவர். இவர் காஞ்சிபுரப் பருத்திக் குன்றத்தில் வாழ்ந்தவர். நீலகேசித் திரட்டிற்கு உரை எழுதியவர். இவரது காலம் கி. பி. 14-ஆம் நூற்றுண்டு. இவர் செய்த இந்நூலில் மேரு, மந்திரன் என்ற இருவர் சரித்திரம் கூறப்பட்டுள்ளது. இவ்விருவர் விமல தீர்த்தங்கரது கணநாதர்கள். இவர்கள் முறையே அநந்த வீரியன் மனைவிமாராகிய மேரு மாலினி, அமிர்த மாமதி என்பவர்களின் புதல்வர்கள். இவர்கள் இளமையிலேயே சைன அறங்களை மேற்கொண்டு முத்தி பெற்றவர்கள்.

இவ்வாறு மேரு மந்திரன் என்பவர் வரலாற்றை உணர்த்துவதுடன், இந்நூல் உயிர் பல பிறவிகள் எடுக்கும் என்பதையும், நல்வினை தீவினைகட் கேற்ப உயர்வையும் தாழ்வையும் அடையும் என்பதையும், நரகங்களின் இயல்பு இன்னின்ன என்பதையும் கூறுகிறது. சமணத் தத்துவங்களையும் இதில் காணலாம். பெண்களுக்கு வீடு பேறு இல்லை என்பதை இந்நூல்,

"விதியினுல் கதிகள் நான்கில் மேவினின் ருர்கள் தம்முள்
மதியினுல் பெரிய நீரார் மக்களாய் வந்து தோன்றி
விதியினுல் தானம் பூசை மெய்த்தவம் செய்து வீட்டைக்
கதிகளைக் கடந்து செல்வார் காரிகை யார்கள் செல்லார்."

என்று கூறுகிறது.

திருநூற்றந்தாதி: இது இருபத்திரண்டாவது தீர்த்தங்காராகிய நேமிநாதரை நூறு பாடல்களை அந்தாதித் தொடையில் துதித்த நூலாகும். இதனை எழுதியவர் அவிரோதி நாதர். காலம் 14 ஆம் நூற்றுண்டு. இந்நூலாசிரியர் முன்னர் வைணவராக இருந்து பின்னர்ச் சமணராக மாறினுர் என்பர்.

"மறமே முனிந்து மயிலாபுரி தன்னுரி மன்னுயிர்கட்
கறமே பொழியும் அருள்கொண்ட லேஅத ரஞ்சிவந்த

நிறமே கரியதொண் மாணிக்க மேநெடு நாள்ஒளித்துப்
புறமே திரிந்த பிழையடி யேனைப் பொறுத்தருளே."

திருவெம்பாவை: திருவெம்பாவை, திருப்பாவை அமைப்பில் பாடவேண்டும் என்ற குறிக்கோளுடன் பாடப்பட்டதாகத் தெரிகிறது. இதன் ஆசிரியர் யாவர் என அறிதற்கு இல்லை.

"கோழியும் கூவின குக்கில் அழைத்தன
தாழியுள் நீலத் தடம்கணீர் போதுமினோ
ஆழிசூழ் வையத் தறிவரடி ஏத்திக்
கூழை நனையக் குடைந்து குளிர்புனல்
ஊழியுள் மன்னுவோம் என்றேலோர் எம்பாவை."

திருக்கலம்பகம்: அருகப் பெருமான்மீது பாடப்பட்ட நூல். அருகப் பெருமான் பற்றிய சிறப்புக்கள், சிவபெருமான் செயல்களாகக் கூறப்பட்டிருப்பது வியத்தற்குரியதாக இருக்கிறது. அவ்வாறு குறிக்கும் சிற்சில அடிகள் கீழ் வருவன.

"மாக்கயிலை நாப்பண், மூளயிலின்முரண்
முருக்கி, கருப்பு நாண்வில்லிபட,
கொடுங்கூற்றைத் தாள்வலியிண் விழ
உதைத்தனை, பரிவில் கேவலம் கிழத்தி பிரிவிலா
ஒருபாகனை மூன்றுகண் முனித்தலைவனை, ஆலநெடுநிழல்
அமர்ந்தனை"

அறநெறிச்சாரம்: இஃது அருங்கலச் செப்பு என்னும் நூலைத் தழுவி எழுதப்பட்டது, இது காட்சி, ஒழுக்கம், ஞானம் என்ற முப்பெரும் பகுதிகளில் அறநெறியின் சாரமானவற்றைக் கூறும் நூல். இதில் 222 வெண்பாக்கள் உள. அருகனைச் சிவனாகப் பாடிய பாட்டை இதில் காணலாம்.

"அவன்கொல் இவன்கொல்என் றையப் படாதே
சிவன்கண்ணே செய்ம்மின்கள் சிந்தை–சிவன்தானும்
நின்றுகால் சீக்கும் நிழல்திகழும் பிண்டிக்கீழ்
வென்றிச்சீர் முக்குடையான் வேந்து."

என்பது அப்பாடல். ஒருவனுக்கு வரும் ஆக்கமும் கேடும் அவனாலேயே ஏற்படுகின்றன என்பதை,

"*தானே தனக்குப் பகைவனும் நட்டானும்*
தானே தனக்கு மறுமையும் இம்மையும்
தானேதான் செய்த வினைப்பயன் துய்த்தலால்
தானே தனக்குக் கரி."

என்ற பாடலில் காண்க. காலம் 13 ஆம் நூற்றுண்டு. சிலர் 15 ஆம் நூற்றுண்டாகும் என்பர். இந் நூலைச் செய்தவர் முனைப்பாடியார். இவரைப் பற்றி ஒன்றும் அறிதற்கில்லை.

அருங்கலச்செப்பு: இஃது அறநெறிச் சாரத்திற்கு முதல் நூலாகக் கருதப்படுகிறது. இது நல்ல நீதிகளை அறிவிக்கின்றது. இதனைத் தீபங் குடியில் இருந்த அருங் கலான் வயத்தர் என்பவர் பாடியுள்ளனர். வேறு இவரைப் பற்றி அறிதற்கு இல்லை.

"*பறையன் மகன்என்னும் காட்சி யுடையான்*
இறைவன் எனஉணரல் பாற்று."

பௌத்தர்களின் தமிழ்த் தொண்டு

சமணர்கள் தங்கள் சமயத்தைப் பரவச் செய்வதற்கு அவர்களின் சமயக் கொள்கைகளை நூல் வடிவில் தமிழ் நூல்கள் பலவற்றை எழுதினர். இத்துடன் நில்லாமல் தமிழ் வளர்ச்சிக்காக இலக்கணங்களையும் எழுதினர். ஆனுல், பௌத்தர்கள் தங்கள் சமயக் கொள்கைகள் தமிழ் நாட்டில் பரவச் செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் சமய நூல்களையே பெரிதும் எழுதியுள்ளனர். வீர சோழியம் என்பது பௌத்த சமயத்தவர் செய்த இலக்கண நூலாக உளது.

மணிமேகலை, குண்டலகேசி, வளையாபதி (வளையாபதி சமண காப்பியம் என்பாரும் உளர்.) சித்தாந்தத் தொகை, திருப்பதிகம், விம்பசார கதை போன்றவையும் (அபிதர்மாவ தாரம் என்பதும்) பௌத்த இலக்கியங்களாக அறியக் கிடக் கின்றன.

பௌத்த மதம் தமிழ் நாட்டில் பரவத் தொடங்கிய காலம் அசோக மன்னர் ஆட்சியில் என்னலாம். அதாவது கி. பி. 3 ஆம் நூற்றுண்டு. பௌத்த மதத்தவர் தம் கொள்கைகளைப் பரவச் செய்யப் பல விகாரங்களையும்,

பள்ளிகளையும், ஆசிரமங்களையும் ஏற்படுத்திக் கொண்டனர். காஞ்சிபுரமே அவர்கட்குத் தம் மதம் பரவத் தலைமை இடமாக இருந்தது என்னலாம். இத்துடன் இன்றிப் பூதமங்கலம் போதி மங்கை, பொன்பற்றி, புகார், நாகை போன்ற இடங்களில் பெரிதும் பௌத்தர்கள் வாழலாயினர். இனி அவர்கள் உதவிய நூற்களைப் பார்ப்போம்.

சித்தாந்தத் தொகை: இது பௌத்த சமயக்கொள்கைகளைத் தொகுத்துக் கூறும் நூல். இதைச் செய்தவரைப் பற்றி அறிதற்கு இல்லை.

" அருள்நெறியால் பாரமிதை அறைந்துன் உடன்அடக்கிப்
பொருள்முழுதும் போதியின்கீழ் முழுதுணர்ந்த முனி வரன்தன்
அருள்மொழியால் நல்வாய்மை அறிந்தவரே பிறப்பறுப்பர்
மருள்நெறியாம் பிறநூலும் மயக்கறுக்கும் ஆறுளதோ."

என்பது இந்நூலில் ஒரு பாடல். இந்நூல் முழுவதும் கிடைத்திலது.

திருப்பதிகம்: பதிகம் என்பது பத்துப் பாடல் கொண்ட ஒரு நூலாகும். ஆகவே, இது புத்தப் பெருமான் சிறப்பை வழுத்தும் முறையில் பத்துப் பாடல்கள் கொண்ட ஒரு துதி நூல். இதன் ஆசிரியரைப் பற்றி ஒன்றும் அறிதற்கு இல்லை.

" எண்ணிகந்த காலங்கள் எம்பொருட்டால் மிகஉழன்
றெண்ணிகந்த உலகங்கள் இருள்தீர ஒருங்குணர்ந்
தெண்ணிகந்த தானமும் சீலமும் இவையாக்கி
எண்ணிகந்த குணத்தினன் எம்பெருமான் அல்லனே."

பிம்பசார காதை: இது கௌதம புத்தரின் மாணவரான பிம்பசாரர் வரலாற்றைக் கூறும் பௌத்த சமயத் தமிழ் நூல். இவர் இராசக் கிருக நகரத்து அரசர். இதை எழுதியவர் யாவர் என்பதற்குச் சான்றுகள் கிடைத்தில. இதில் ஒரு செய்யுள்,

" உலும்பினி வனத்துள் ஒண்குழைத் தேவி
வலம்படு மருங்குல் வடுநோய் உறுமல்
ஆன்றோன் அவ்வழித் தோன்றினன் ஆதலின்
ஈன்றாள் ஏழ்நாள் இன்னுயிர் வைத்தாள்."

என்பது.

சைவமடங்களின் தமிழ்த் தொண்டு

சைன, பௌத்த சமயங்கள் தமிழ் மொழிக்குச் செய்த தொண்டுகளைப் போலவே, சைவ ஆதீனங்களாகிய மடங்கள் பொதுவாகத் தமிழ் மொழிக்கும், சிறப்பாகச் சைவ சமயத்திற்கும் அரும்பெரும் தொண்டுகளைச் செய்துள்ளன; செய்து வருகின்றன; செய்துகொண்டும் வரும். பல பழைய ஓலைச் சுவடிகளையும் பாதுகாத்து வருகின்றன. இனி அத்தகைய மடங்களைப் பற்றிச் சிறிது ஆராய்வோமாக.

திருவாவடுதுறை ஆதீனம் : இது மாயவரம் கும்பகோண இரயில் மார்க்கத்தில் நரசிங்கன் பேட்டை இரயில் அடியிலிருந்து ஏறக்குறைய ஒரு கல் தொலைவில் உள்ளது. பேருந்தி பஸ் மூலமும் இவ்வாதினத்தை அடையலாம். இத்திரு மடத்தைச் சார்ந்து பாடல் பெற்ற சைவத் தலமும் உளது. இதுபோது இவ்வாதீனத்து 21-வது குரு மகா சந்நிதானமாக இருந்து அருட் செங்கோல் செலுத்தி வரும் பரமாசாரியார் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகள் ஆவார். இவர்கள் கல்வி, சமயம், மருத்துவம் முதலான துறைகளின் முன்னேற்றத்திற்குப் பெரும் பொருள் செலவிட்டுக் கொண்டு வருகிறார். பல்வேறு இடங்களில் நூல் நிலையங்களை அமைத்துள்ளனர். விவசாய அபிவிருத்திக்காக நீர் நிலயங்களைச் செம்மை செய்துள்ளனர். தேவார பாடசாலைகளைப் பல இடங்களில் ஏற்படுத்தியுள்ளனர். பல அறிஞர்களைச் சமயப் பிரசாரச் சொற்பொழிவாளராக நியமித்துள்ளனர். ஆண்டு தோறும் ஆதீனத்தில் திருமந்திர மாநாட்டை நடத்தித் திருமந்திரத்தின் பெருமையினை அனைவர்க்கும் அறிவித்து வருகின்றனர். இவையே அன்றித் திருமந்திர விளக்கத்தினை உரை நடையில் எழுதுவித்து வினியோகித்து வருகின்றனர். மந்திரங்கட்கு உரையினையும் எழுதச் செய்து வெளியிட்டு வருகின்றனர். திருவெண்ணெய் நல்லூரில் சிவஞான போத மாநாட்டை நடத்திச் சித்தாந்த அறிவைப் பரப்பி வருகின்றனர். தேவார பாடசாலைகள் உள்ள இடங்களில் திருமுறை மாநாடுகளை நடத்தி வருகின்றார். தமக்கு முன்பு அருட் செங்கோல் நடாத்திய குரு மகா சந்நிதானங்களின் நினைவு நாட்களில் ஒவ்வோர் அரிய நூல்களைப் பதிப்பித்து வெளியிட்டு வருகிறார். இம்மகா சந்நிதான அருட் செங்கோல் ஆட்சியில்

கணபதி, முருகன் நவமணிகள் என்னும் நூல்கள் பெரும் பொருட் செலவில் கண்கவர் வனப்பினவாக வெளி வந்துள்ளன.

இவர்கள் புலவர்கட்கு அளிக்கும் கொடை அளவிட்டுச் சொல்ல முடியாதது. சொற்பொழிவாளராக வருகின்றவர் உள்ளம் பெரிதும் உவக்கும் முறையில் பெரும் பொருள் தந்து வாழ்த்துகின்றனர். இவர்கட்கு முன்னிருந்த ஆதீன கர்த்தர்களும் தமிழ்க்கும் சைவத்திற்கும் பெருந் தொண்டை செய்துள்ளனர். அவர்களைப் பற்றிச் சிறிது அறிவோமாக.

சித்தர் சிவப்பிரகாசர் திருவாவடுதுறைக்கு வரும் வழியில், மூவலூர் வேளாளர் வைத்தியநாதர் இவண் அடைந்து சிவஞான உபதேசம் செய்ய வேண்டினர். அவர் அங்ஙனமே செய்து நமசிவாயர் என்ற தீட்சா நாமம் சூட்டினர். நமசிவாய தேசிகர் திருவாவடுதுறையில் ஆதீனத்தை நிலை நிறுத்தினர். இதனால் திருவாவடுதுறை ஆதீனம் பஞ்சாட்சர தேசிகர் ஆதீனம் எனப்படும். இவ்வாதீனத்தில் கொற்றவங்குடி உமாபதி சிவாசாரியார் பூசித்த நடராசர் உருவம் பூசிக்கப்பட்டு வருகிறது.

பஞ்சாட்சர தேசிகருக்குப் பிறகு ஸ்ரீ மறைஞான தேசிகரும், இவர் மாணவர் ஸ்ரீ மெய்ஞ்ஞான முனிவரும் ஆதீனத்திற்குரியர் ஆயினர்.

ஸ்ரீ மெய்ஞ்ஞான முனிவர் திருவீழிமிழலை புராணம் இயற்றினர். இதன்பின் "ஸ்ரீ தட்சணாமூர்த்தி தேசிகர் தசகாரியம், உபதேசப் பஃறொடை" என்னும் நூலை இயற்றினர். இவருக்குப்பின் ஸ்ரீ அம்பலவாண தேசிகர் தச காரியம், சன்மார்க்க சித்தியார், சிவாச்சிரம தெளிவு, சித்தாந்தப் பஃறொடை, சித்தாந்தப் சிகாமணி, உபய நிட்டை வெண்பா, உபதேச வெண்பா, நிட்டை விளக்கம் அதிசய மாலை, நமச்சிவாய மாலை என்னும் நூல்களை இயற்றினர். சிவஞான போத சிந்தனை என்னும் உரை நூலையும் பூப் பிள்ளை அட்டவணை என்னும் சிறு நூலையும் இயற்றினர்.

ஸ்ரீ மாசிலாமணி தேசிகர் திருஞான சம்பந்தர் பிள்ளைத் தமிழ் நூலைச் செய்தருளினர். ஸ்ரீ வேலப்ப தேசிகர் காலத்தில் ஸ்ரீ சாமிநாத முனிவர் திருவாவடுதுறை

புராணத்தையும், திருப்பெருந்துறைப் புராணத்தையும் செய்தனர். பேரூர் ஸ்ரீ வேலப்ப தேசிகர் 'பஞ்சாக்கரப் பஃறொடை என்னும் நூலை இயற்றினர். திருச்சிற்றம்பல தேசிகரின் சீடராகிய ஸ்ரீ சுந்தர லிங்க முனிவர் ஆதின கைலாய மான்மியம் (திருப்பெருந்துறை புராணம்) என்னும் நூலைப் பாடினர். திருச்சிற்றம்பல தேசிகரும் அருட் கவி ஆவார். அவர் மழை பொழியுமாறு பாடிய பாடல்,

"சைவ சமயம் சமயம்எனில் அச்சமயத்
தெய்வம்பிறை சூடும் தெய்வமெனில்—ஐவரைவென்
றுனந்த இன்பில் அழுந்துவது முத்திஎனில்
வானங்காள் பெய்ம்மின் மழை."

என்பது.

ஸ்ரீ அம்பலவாண தேசிகர் குருமூர்த்தத்தால் ஆதரிக்கப்பட்டவரே, மகாவித்துவான் திருசிரபுரம் மீனாட்சி சுந்தரம்பிள்ளை ஆவார். இவர் குருமூர்த்தியின் பெயரால் பிள்ளைத்தமிழும் கலம்பகமும் பாடியுள்ளனர்.

மெய்கண்ட சாத்திரம், சிவஞான போதம் முதலாகப் பதினான்கு. இவற்றிற்குத் துணையாக இருப்பவை பண்டார சாத்திரம் பதினான்காகும். திருவாவடுதுறைப் பண்டார சாத்திரங்கள் ஸ்ரீ தட்சிணாமூர்த்தி தேசிகர் எழுதிய இரு நூல்களும் பெரிய பட்டத்து ஸ்ரீ அம்பலவாண தேசிகர் இயற்றிய பத்து நூல்களும், ஸ்ரீ ஈசான தேசிகர் செய்தருளிய தசகாரியமும், பின் வேலப்ப தேசிகர் எழுதிய பஞ்சாக்காப் பஃறொடையும் ஆகும். திருவாவடுதுறை மடம் தோன்றிய காலம் கி. பி. 14 ஆம் நூற்றாண்டு.

தருமபுர ஆதீனம்: இது மாயூரத்தினின்று மூன்றுகல் தொலைவில் உள்ளது. இங்குச் செல்ல பேருந்தி (Bus) வசதி உண்டு. இங்கு இதுபோது அருட்செங்கோல் செலுத்தி வருபவர்கள் 25வது குரு மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஆவார். இவர்கள் பட்டம் ஏற்ற நாள் முதலாகத் தமிழ் மொழிக்கும், சைவ சமயத்திற்கும் செய்து வரும் தொண்டுகள் பலவாகும். சைவசமய நூல்கள் பலவற்றை வெளியிட்டுள்ளார்கள். தேவாரத் திருமுறைகளில் முதல் நான்கு திருமுறைகட்கு உரை எழுதுமாறு செய்து வெளி

யிட்ட பெருமை இவர்களையே சாரும். திருக்குறள் வளம் என்ற நூலையும் வெளியிட்ட சிறப்பும் இவர்க்குண்டு. இதில் குறட்கு இதுவரை வெளிவந்துள்ள உரைகள் எல்லாம் வெளி வந்துள்ளன. ஆண்டுதோறும் திருநெறித்தமிழ் மாநாட்டினைத் திருமடத்தில் கூட்டித் திருமுறைகளையும், சித்தாந்த சாத்திரங்களையும் தக்க அறிஞர்களைக் கொண்டு சொற்பொழிவு ஆற்றுமாறு செய்து தக்க சன்மானமும் புரிந்து வாழ்த்தி அனுப்புகின்றார். திருமடத்தின் தொடர்புடைய திருக்கோயில்களின் பெருவிழாவின் போதும் சொற்பொழிவுகளை ஏற்படுத்தித் தமிழையும் சைவத்தையும் வளர்த்து வருகிறார். தமிழ் வித்துவான் கல்லூரியினை நடத்தி வருகின்றார். இவ்வாறே வடமொழித் தேர்வுக்கும் பயிற்சி அளிக்குமாறு செய்து வருகிறார். ஞானசம்பந்தம் என்னும் மாத வெளியீட்டின் வாயிலாக, இலக்கிய, சமயக் கட்டுரைகளை எழுதுவித்து வெளியிட்டு வருகிறார். மருத்துவ வசதி, குடிநீர் வசதி முதலான பொதுப் பணிகளையும் ஏற்படுத்தியிருக்கிறார். திருக்கயிலாய யாத்திரை செய்து அதன் காரணமாகக் கயிலை குருமகா சந்நிதானம் என்ற சிறப்புப் பெயருடன் திகழ்ந்து வருகிறார். அன்பர்கள் இவர்க்குக் கனகாபிஷேகம் நடத்திப் பெருமைக்கும் உரியவர்கள் ஆயினர்.

ஸ்ரீலஸ்ரீ கயிலை குரு மகாசந்நிதானத்தின் முன்னிருந்த ஆதீன கர்த்தர்கள் தமிழுக்குச் செய்த தொண்டுகளையும் நாம் அறிதல் வேண்டும்.

திருத்தரும ஆதீன ஆதி பரமாசாரிய சுவாமிகள் ஸ்ரீ குரு ஞானசம்பந்தர். இவர்க்கு மதுரைச் சொக்கலிங்கப் பெருமானே சிவலிங்க வடிவில் வர, அப்பெருமானையே பூசித்துப் பேறு பெற்றவர். அதுவே இதுபோது தரும ஆதீனத்தில் பூசிக்கப்பட்டு வருகிறது. இச்சிவலிங்கப் பேறு கிடைத்தமைக்காக,

" கண்ணுக்கினிய பொருளாகி யேஎன் கரத்தில்வந்தாய்
விண்ணும் பரவிடும் அற்புத மேஎன்ன விஞ்சையிதால்
மண்ணும் புகழ்ந்திட என்னையும் பூரண வாரியுள்ளே
நண்ணும் படிசெய் மதுரா புரிச்சொக்க நாயகனே."

என்னும் பாடலைப் பாடிள்ளார். சொக்கநாதர் கலித்துறையையும் சொக்கநாத வெண்பாவையும் இறைவன் மீதும், தம்

ஞானசாரியர் மீது ஞானப் பிரகாச மாலையையும், சிவ போக சாரம், முத்தி நிச்சயம், தசகாரிய அகவல் முதலான நூல் களையும் பாடியுள்ளனர்.

" ஆசைஅறுய் பாசம்விடாய் ஆனசிவ பூசைபண்ணுய்
நேசமுடன் ஐங்தெழுத்தை நீ நினையாய்—சீசீ
சினமே தவிராய் திருமுறைகள் ஓதாய்
மனமே! உனக்கென்ன வாய்."

சிவபோகசாரம்

ஸ்ரீலஸ்ரீ திருவம்பல தேசிகர் வருணச்சிரம சந்திரிகை என்னும் நூலை இயற்றினர். இதில் சந்நியாசம் பெற எச்சாதியினரும் உரியவர் என்ற உண்மை விளக்கப்பட் டுளது. இவர் பட்டத்தில் இருந்தபோது திருவையாற்றுப் புராணம் இயற்றுவிக்கப்பட்டது. ஸ்ரீலஸ்ரீ திருநாவுக்கரசு தேசிகர் சித்தாந்த நிச்சயம் என்னும் நூலை இயற்றினர்.

தரும ஆதீனத்தைச் சார்ந்தவர்களும் தமிழ் மொழிக் குச் செய்த தொண்டுகள் அனந்தம்.

ஆபத்தாரணர் என்பவர் ஸ்ரீகுரு ஞானசம்பந்தரின் சீடர். பூகோள விலாசம் என்னும் நூலை எழுதியுள்ளார். வெள்ளியம்பலத் தம்பிரான் ஸ்ரீ குரு ஞானசம்பந்தர் மீது சமூக மாலை, தாலாட்டு, திருப்பள்ளி எழுச்சியும், முத்தி நிச்சய நூலுக்குப் பேருரை, சிற்றுரையும், சிவஞான சித்தி யாருக்குப் பாடியமும் எழுதியுள்ளார். சம்பந்த சரணலயர் கந்தபுராண சுருக்கம், சிகர ரத்தின மாலை என்னும் நூல் களைப் பாடியுள்ளனர். படிக் காசுத் தம்பிரான் புள்ளிருக்கு வேளூர் கலம்பகம் பாடியுள்ளனர். காவை அம்பலவாணத் தம்பிரான் திருவருட் பயன் என்னும் நூலின் பொருளைக் கலித்துறைப் பாடல்களில் 100 பாடல்களாகப் பாடினர். தமிழாகர முனிவர் குருராய அட்டகம், சந்திரகலாமாலை, நீதி சாரம், நெல்லையப்பர் நான்மணி மாலை, திருப்பணி மாலை, கலைமகள் இரட்டை மணி மாலை முதலான நூல்களைச் செய்தனர். புன்கூர் சிவப்பிரகாச முனிவர், சிவப்பிரகாசக் கட்டளை எழுதியுள்ளனர். சங்கரகுமார் முனிவர் தருமபுர தலபுராணம், சச்சிதாநந்த விநாயகர் பிள்ளைத் தமிழ் என்னும் நூற்களின் ஆசிரியர். சிவானந்த முனிவர் சிவா-

நந்த மாலை, சிவாநந்த போதசாரம், சம்பிரதாய தீபம், நூல்களின் ஆசிரியர். அட்சய விடங்க சுவாமிகள், வடுகநாத தேசிகரைக் கொண்டு புள்ளிருக்கும் வேளூர் தல புராணத்தை இயற்றுமாறு செய்தனர். சிதம்பரநாத முனிவர் திருப்பதிக மாலை, நித்திய கன்ம நெறி, சீகாழிப் பள்ளு, (இதன் பிற்பகுதி அருணாசலக் கவிராயரால் பாடப் பட்டது. இவரே சீர்காழித் தல புராண ஆசிரியர்.) ஆகிய நூல்களை இயற்றினர். பரமசிவ சுவாமிகள் பனசை (திருப்பனந்தாள்) மும்மணிக் கோவை, காசி விஸ்வேஸ்வரர் அந்தாதி, சிவானுபவவிசாரம் நூற்களையும் குமர குருபரர் மீது தோத்திரம் பாமாலையும் பாடியவர். சட்டைநாத தம்பிரான் சுவாமிகள் பண்டார மும்மணிக்கோவைக்குக் குறிப்புரை எழுதியுள்ளார்.

மெய் கண்ட சாத்திரங்களின் உண்மைப் பொருளை விளக்கும் முகத்தால் ஆதீனங்கள் பண்டார சாத்திரங்கள் எனப்படும் நூல்களையும் பாடியுள்ளன என்பதை முன்பு அறிந்தோம். திருத்தரும ஆதீன பண்டாரச் சாத்திரங்கள் சிவ போக சாரம், சொக்கநாத வெண்பா, முத்தி நிச்சயம், கோடச கலாப்பிரசாத சட்கம், திரி பதார்த்தம், ரூபாதி தச கார அகவல், சொக்கநாதக் கலித்துறை, பண்டாரக் கலித் துறை, நவரத்தின மாலை, வருணாசிரம சந்திரிகை, சமாதி லிங்கம் பிரதிட்டாவிதி, சித்தாந்த நிச்சயம் என்பன. இவ் வாதீனம் வாயிலாகப் பல தோத்திர அருள் நூல்களும் பாடப்பட்டுள்ளன. தரும புரம் மடம் தோன்றிய காலம் கி. பி. 14-ஆம் நூற்றாண்டு.

திருப்பனந்தாள் காசி மடம்: இஃது ஆடுதுறை இரயில் அடியிலிருந்து ஏழு கல் தொலைவிலும், கும்பகோணத்திலிருந்து பதினைந்து கல் தொலைவிலும் உளது. போகவரப் பஸ் வசதிகள் உள. இம்மடம் கி. பி. 1720-ல் ஸ்ரீ காசி வாசி தில்லைநாயக சுவாமிகளால் நிறுவப்பட்டது. இவரும் இவருக்கு முன்னிருந்தவர்களான ஐவரும் ஸ்ரீ குமரகுருபரர் காசியில் நிறுவிய குமாரசாமி மடத்தில் இருந்தவர்கள். அம்மடம் காசி மடம் எனப்படும். அம் மடத்துத் தொடர்புடையாராகிய ஸ்ரீ காசி வாசி தில்லை நாயக சுவாமிகள் திருப்பனந்தாளில் ஒரு மடத்தைத் தாபித்ததால் திருப்பனந்தாள் காசி மடம் என்ற பெயர் பெற்றது. ஸ்ரீலஸ்ரீ

மாசிலாமணி தேசிகரின் திருவருள் பெற்ற குமரகுருபரர் தொடர்பு இம் மடத்திற்கு இருப்பதால், இது தருமபுரத்தின் சிஷ்ய மடம் என்றும் கூறப்பெறும். இன்னும் தரும ஆதீன கர்த்தர் அவர்களே, இம் மடத்திற்குரிய தலைவரை நியமிக்கும் பொறுப்புடையவர்கள். தருமபுர ஆதீன கர்த்தரின் குரு பூசையின்போது, அதுபோதுள்ள குரு மகா சந்நிதானத்திற்கு வழிபாடாற்றும் மரபு, திருப்பனந்தாள் அதிபரையே சார்ந்து வருவதை இன்றும் காணலாம்.

இதுபோது இம் மடத் தலைவராக இலங்குபவர்கள் ஸ்ரீலஸ்ரீ அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் ஆவார். இவர் இப் பொறுப்பை ஏற்ற நாள் முதலாகத் தமிழ் மொழிக்கும் சைவத்திற்கும் செய்துள்ள தொண்டுகள் அளவிட முடியாதவை. சைவ நூல்களை வெளியிட்டு வருகின்றார். உயர்நிலைப்பள்ளி, கல்லூரிகளை நிறுவியுள்ளார். மருத்துவச் சாலை, தேவார வகுப்புக்களை ஏற்படுத்தி யுள்ளார். காசிக்குச் சென்று வழிபடுபவர்கட்குப் பண வசதிகளைத் தந்து வருகிறார். கோவில்களில் தேவாரத் திருமுறைகளைச் சலவைக் கற்களில் பொதித்துப் பதித்துள்ளார். இவையே அன்றி மற்றும் பல பாடல்களையும் இம்முறையில் அமைத்துள்ளார். சிவ சிவ என்ற மின் விளக்குகளைப் பல கோவில்களில் அமைத்துள்ளனர். குமரகுருபர சுவாமிகளின் குரு பூசையின்போது புலவர்களுக்குச் சன்மானம் ஈந்து இன்புறுகிறார். சைவ சமயப் பெரியார்களின் திரு நட்சத்திரங்களில் ஆங்காங்கு மகேஸ்வரப் பூசை நடத்த ஏற்பாடு செய்துள்ளார். உயர்நிலைப் பள்ளிக்கூட மாணவர்களில் தமிழில் முதன்மையாக வரும் மாணவர்களுக்குப் பரிசு தருகிறார். சிவபோகசார நூலைக் கல்லூரி மாணவர்கள் பயிலுமாறு செய்து, தேர்வு வைக்கச் செய்து முதன்மையாகத் தேர்பவருக்குப் பரிசு நல்கி வருகிறார். குமரகுருபரன் என்னும் பத்திரிகையினை இம்மடத்தின் சார்பில் வெளி வருதற்கு ஏற்பாடுகள் செய்துள்ளார். இதன்கண் சைவம், தமிழ் பற்றிய கட்டுரைகள் தக்க அறிஞர்களால் எழுதப் பட்டு வெளி வருகின்றன. இதனைத் திறம்பட நடத்துபவர் ஸ்ரீவைகுண்ட பிரபல வழக்குரைஞர் T. M. குமரகுருபரன் பிள்ளை, B.A.B.L. ஆவார். ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சாமிநாத சுவாமிகள் வித்துவான் பரீட்சையில் முதன்மையாக

வருபவர், ஆயிரம் ரூபாய் பரிசு பெறுமாறு நிரந்தர ஏற்பாடுகளைச் செய்துள்ளார். இவர் தம் ஆட்சிக் காலத்தில் குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத் திரட்டு, ஸ்ரீ சிவக்கொழுந்து தேசிகர் பிரபந்தங்கள் டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் அவர்களால் ஆராய்ச்சிக் குறிப்புக்களுடன் வெளிவர உதவி செய்துள்ளார்.

மதுரை ஆதீனம்: இது திருஞான சம்பந்தர் திரு மடம் என்றும் கூறப்பெறும். மதுரை மீனாட்சி அம்மன் கோவில் அருகில் உள்ளது. இது மிக மிகப் பழம் பெரும் மடம் என்று கருதப்படுகிறது. இதுபோதுள்ள பரமசாரிய சுவாமிகள் 291 வது குரு மகா சந்நிதானம் எனில், இதன் பழமையினை அறியலாம். இதனைத் திருஞான சம்பந்தர் தங்கிய மடம் என்றும் கூறுவர்.

இதுபோது இங்குக் குருமகா சந்நிதானமாக விளங்குபவர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஸ்ரீ ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஆவார். இவர் இறந்தவர்களுடன் பேசுதல், சிவலிங்க தத்துவம் முதலான நூல்களை எழுதியுள்ளார். இவர் ஆங்காங்குச் சென்று சைவ சமயச் சொற்பொழிவுகள் செய்து, பிற மதங்களில் மக்கள் சேராதவாறு, திருத்தொண்டு புரிந்து வருகிறார். பலருக்குச் சிவ தீட்சை செய்துள்ளார். அருள் நெறிக் கழகம் ஆங்காங்கு நிறுவித் தமிழ்த் தொண்டு, சைவத் தொண்டு செய்யுமாறு செய்த அரும் பெருஞ் செயல், இக் குருமகா சந்நிதானத்தையே சாரும். இவர்கள் உதவியினால்தான் காஞ்சிபுரம் சித்தாந்த வித்தகர் திரு. வச்சிரவேலு முதலியார் எழுதியுள்ள திருவள்ளுவர் சைவரே என்றும், திருக்குறட் கருத்துக்கள் சைவ சித்தார்த்தக் கருத்துக்களே என்றும் பொருள் பொதிந்த நூல் வெளி வருவதாயிற்று.

வீரசைவ மடங்கள்: இம் மடங்கள் பல உள. அவற்றுள் ஸ்ரீ மயிலம் மடம், பேரூர் சாந்தலிங்க சுவாமிகள் மடம், ஸ்ரீ ஞானியன் மடம், திருப்போரூர் சிதம்பர சுவாமிகள் மடம் ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

மயிலம் மடம்: இது விழுப்புரம் செல்லும் இரயில் பாதையில் அமைந்த மயிலம் இரயில் அடியில் இருந்து மூன்று கல் தொலைவில் உள்ளது. மயில மடம் முருகப் பெருமான் சந்நிதியை அடுத்துள்ளது. சிறு குன்றில் மேல்

இருப்பது. இங்கு இதுபோது பதினெட்டாம் பட்ட ஆதீன பரம்பரைத் தர்மகர்த்தத்துவமாக விளங்கும் குருமூர்த்தம் ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள். இவர்கள் பட்டம் ஏற்ற பிறகு தமிழ்மொழிக்கும், சைவ சமயத்திற்கும் செய்துள்ள தொண்டுகள் பல. திரு மடத்தின் சார்பில் மயிலத்தில் தமிழ் வித்துவான் கல்லூரியினை ஏற்படுத்தி நடத்தி வருகிறார்கள். சிவப்பிரகாச சுவாமிகள் நூல்களை வெளியிட்டுள்ளார். பிரபுலிங்க லீலைக்கு வித்துவான் துரைசாமி ஐயர் அவர்களைக் கொண்டு உரை எழுதுமாறு செய்து வெளியிட்டனர். தமிழ்ப் புலவர்கட்கு வேண்டிய உதவி செய்து வருகின்றனர். சிந்தாந்த மகா நாடுகளுக்குத் தலைமை வகித்துச் சமயத்தைப் பரப்பி வருகின்றனர்.

திருப்போரூர் சிதம்பர சுவாமிகள் மடம் : இம் மடத்தை முதல் முதல் தோற்றுவித்தவர் ஸ்ரீலஸ்ரீ சிதம்பர சுவாமிகளே. அவர் பேரூர் சாந்தலிங்க சுவாமிகள் இயற்றிய வைராக்கிய சதகம், வைராக்கிய தீபம், அவிரோத உந்தியார், கொலை மறுத்தல் முதலான நூல்களுக்கு உரை கண்டனர். தாமே மதுரை மீனாட்சி அம்மன் கலி வெண்பா என்னும் நூலையும், திருப்போரூர் சந்நிதி முறை என்னும் நூலையும் செய்தருளியவர். திருப்போரூர் பலமுறை மறைந்துபோக அவ்வாறு மறையாது இன்றும் நல்முறையில் எவரும் வணங்கும் நிலையில் நிறுவனம் செய்தவர் இவரே. இதுபோது மயிலம் ஆதீனகர்த்தர் திருமகனார் இம்மடத்துத் தலைவராக அமைந்து அரிய நூற்களை வெளியிட்டிருக்கிறார்.

திருவண்ணாமலை வீர சைவ மடம் : இம்மடத்தின் தமிழ்த் தொண்டும் சிறந்ததாகும். குகை நமச்சிவாயர் சோணகிரி மாலை, அருணகிரி அந்தாதி இயற்றினர். இவரது மாணவர் குரு நமச்சிவாயர். இவர் சிதம்பர வெண்பா, அண்ணாமலை வெண்பா, பரம ரகசிய மாலை ஆகிய நூல்களை இயற்றியுள்ளனர். மற்றொரு மாணவர் நிட்டானுபூதி என்னும் நூலை இயற்றினர்.

ஞானியார் மடம் : இது திருப்பாதிரிப்புலியூர் இரயில் அடியில் ஒரு பர்லாங் தூரத்தில் ‘சந்நிதித் தெருவில் உள்ளது. இதன் தலைவர் திருப் பெயரே ஸ்ரீலஸ்ரீ ஞானியார் ஆவார். இவர்களே சைவ சித்தாந்த சமாஜம் உண்டாதற்குக் காரணர். இவர்கள் வடமொழியில் ஈடில்லாப் பேரறிஞர். தென் தமிழ், இலக்கண இலக்கியம், சாத்திரம் ஆகிய

வற்றை உணர்ந்த பேரறிஞர். இவர் நூல் ஒன்றும் செய்யாமல் போயினும், தமிழ் நாடு எங்கும் சென்று சொற்பொழிவாற்றித் தமிழையும் சைவத்தையும் வளர்த்தனர். இவர் சொற்பொழிவுகள் நடத்தியபோது குறிப்பெடுத்தவர்களின் உதவியால் ஞானியார் நினைவு மலர் என்ற பெயரால் சைவசித்தாந்த சமாஜம் வெளியிட்டுள்ளது. அதன்கண் பல கட்டுரைகளைக் காணலாம். இவரது கந்தர் சஷ்டிச் சொற்பொழிவுகளைச் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் வெளியிட்டுள்ளது. இதனைத் தொகுத்து எழுதியவர் ஞானியார் மாணவர் இராசாக் கண்ணனார் M. A. அவர்கள். இவர் இதுபோது உதகமண்டல அரசினர் கல்லூரியில் முதல்வராக இருந்து வருகின்றார்.

சங்கராச்சாரியர் மடம்: இம் மடத்தில் இதுபோது குருமகா சந்நிதானமாக விளங்கி வரும் ஸ்ரீலஸ்ரீ காமகோடி பீடம் ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள் வடமொழிக்கு அரும்பெரும்தொண்டு செய்வதோடு, தமிழ் மொழிக்கும் பெருந்தொண்டு செய்து வருகிறார். புல்வர்கட்குத் தக்க சன்மானங்களையும் செய்து வருகின்றனர். இவர்களது திருவருள் காரணமாகவே கடந்த ஐந்தாறு ஆண்டுகளாகப் பெருவாரியாகத் திருவெம்பாவை, திருப்பாவை மாநாடுகள் நடந்து வருகின்றன. இவ்விரு நூற்களுக்கும் உரை எழுதப்பட்டு இப்பெரியாரால் மக்களிடையே பரப்பப்பட்டுள்ளன. தவத்திரு மறைமலை அடிகளார் மொழி பெயர்த்த சாகுந்தல நாடகத்தை ஆய்ந்து கட்டுரை எழுதுபவர்கட்கு ஆண்டுதோறும் பரிசளிக்கத் திட்டம் செய்துள்ளார்.

சைவ சித்தாந்த நூல்கள்

சமயநிலையங்கள் தமிழ்மொழிக்கு ஆக்கம் தேடியது போலச் சாத்திர நூல்களையும் தமிழ் மொழியில் இயற்றித் தத்துவ வளர்ச்சியையும் செய்துள்ளனர் ஒரு சில அறிஞர்கள். இம்முறையில் இயற்றப்பட்ட நூற்களைச் சைவ சித்தாந்த நூற்கள் எனக்குறிப்பிடலாம். அல்லது சித்தாந்த சாத்திரம் என்னலாம். •இவை பதினான்கு. இவை பதி பசு பாசங்களைபற்றி அறிவிப்பன. பதியாவது இறைவன். அவனை அடைந்து இன்புற விழைவது பசு. அதாவது, சீவான்மா. அங்ஙனம் பதியைப் பரமாத்மாவை அடைய ஒட்டாது தடுப்பது பாசம்; அதாவது மாயை.

"பதிபசு பாசம் எனப்பகர் மூன்றில்
பதியினைப் போல்பசு பாசம் அநாதி
பதியினைச் சென்றணு காபசு பாசம்
பதியினைச்சென் றணுகிடின் பசுபாசம் நில்லாவே."

என்று திருமந்திரம் கூறுதல் காண்க.

இவற்றின் விளக்கங்களைச் சீரிய முறையில் உணர்த்தும் சாத்திரங்களும், தமிழ் இலக்கியம் பகுப்பில் இடம் பெறுதலின், அவையும் ஈண்டுக் குறிக்கப்பெறு-கின்றன. இவ்வாறே சித்தர்கள் நூற்களும் இப்பகுதியில் இணைந்து வருகின்றன.

சைவ சமயம் மிகப்பழைய சமயம். இது குறித்து டாக்டர் போப் "Saivaisam is the old prehistorical religion," என்றனர். இச்சமயம் சைவ சித்தாந்த சமயம் என்றும் கூறப்படும். சித்தாந்தம் என்பது பதி, பசு பாசங்களை ஆய்ந்து முடிந்த முடிபைக் கூறுவது. இதன் நுண்பொருள்களை ஆய்ந்தறிந்தவர்கள் ஒரு சிலரே என்பது குமரகுருபர சுவாமிகளின் கருத்தாகும். அவர் "ஓரும் வேதாந்தத் துச்சியில் பழுத்த ஆரா இன்ப அருங்கனி பிழிந்து சாரங்கொண்ட சைவ சித்தாந்தத் தேன் அமுது அருந்தினர் சிலரே" என்று கூறியுள்ளனர். இச் சித்தாந்தப் பெருமையினைக் குறித்து Dr. G. W. Pope அவர்கள், "It is the choicest produce of the Dravidian intellect and undoubtedly the more intrinsically valuable of all the religions of India," என்று குறித்துள்ளனர். இதன் திரண்ட பொருள் சைவ சித்தாந்த சாத்திரம் திராவிடர்களின் அறிவாற்றலினுல் அமைத்துக் கொண்ட பெரும் விளைவு ஆகும். மேலும், இந்தியாவில் உள்ள சமயங்களினும் விரிவானது. இச்சிறப்பு மட்டுமே அன்றிச் செல்வாக்கும் மதிப்பும் பெற்றது என்பது.

இன்றும் இச்சைவ சித்தாந்தத்தின் மாண்பை Rev. Gowdie என்பவர், கிறித்தவச் சமயப் பாதிரியாராக இருந்தும், "There is no school of thought, and no system of faith or worship that comes to us with anything like the claims of Saiva Siddhantha. The system possesses the merits of great antiquity. In the religious world

the Saiva system is the heir to all that is most ancient in South India. It is the religion of the Tamil people by the side of which every other form is comparatively foreign and recent origin. As a system of religious thought as an expression of faith and life the Saiva Siddthantha is by far the best that South India possesses' என்று இதனை இந்த அளவுக்குப் புகழ்ந்துள்ளனர். இதில் கூறப்பட்ட பொருள் "சைவ சித்தாந்தக் கொள்கை கருத்துச் சிறப்பும், வழிபாட்டு முறையும் அமைந்தது. இது போன்ற தன்மை வாய்ந்தது வேறு கிடையாது. இச்சித்தாந்தக் கொள்கை மிகப் பழமையானது. தென்னிந்தியாவில் இச்சமயமே பிறசமயங்களுக்கு வழிகாட்டியாக உள்ளது. இதுவே தென்னிந்திய மக்களின் சமயம். ஏனையவை இச்சமயத்திற்குப் புறம்பானவை. மேலும் சமீப காலத்தில் தோன்றியவை. தென் இந்தியர்கள் சமய உணர்வு, உண்மை, வாழ்வு, முதலானவற்றை வெளிப்படுத்தும் தன்மை கொண்டு இச்சித்தாந்த சமயம் விளங்குகிறது" என்பது.

இத்தகைய ஈடும் எடுப்பும் அற்ற சமயத்தின் சிறப்பை விளக்கும் நூல்களைப் பற்றி ஈண்டு ஆய்வோமாக.

ஞானமிர்தம்: இது பிரம்மானந்தரது அருளைப் பெற்ற வாகீசர் என்பவரால் இயற்றப்பட்டது. வாகீசர் ஈண்டுத் திருநாவுக்கரசர் அல்லர். இதில் 75 அகவல் பாடல்கள் உள்ளன. பதி, பசு, பாசங்களைப் பற்றிய இலக்கணங்களைத் தருக்க முறையில் எடுத்து இனிது விளக்குவது. பாக்கள் சங்க நூல் நடையில் உள்ளன. சைவ ஆகம கருத்துக்களை நன்கு ஆராய்ந்த நூல் இது. சிவஞான முனிவர் தாம் இயற்றிய சிவஞான போத மாபாடியத்தில் இந்நூலிலிருந்து பல மேற்கோள்களைக் காட்டியுள்ளனர். இதன் காலம் கி. பி. 13 ஆம் நூற்றுண்டு. ஆறும் நூற்றுண்டு என்றும் கூறுவர்.

"ஆணவம் மாயை கருமம் ஆங்கவை
பேணில் செம்பில் பெருகிருந் துகள்என
அறிவினை மறைத்தல் அணிமலம்."

சிவதருமோத்திரம்: இதனை இயற்றியவர் மறைஞான சம்பந்தர். இதற்கு முதல் நூல் வடமொழி சிவதருமோத்திரமே. இஃது ஓர் உப ஆகமம். இதனை முருகப் பெருமான் அகத்தியர்க்கு உபதேசம் செய்தார். இதில் சிவதருமம் பற்றியும், சுவர்க்க, நரகங்களைப் பற்றியும், பாபங்கள் இன்னின்ன என்பதைப் பற்றியும், பிறப்பு இறப்புக்களைப் பற்றியும், சிவஞான போதத்தைப் பற்றியும் கூறப்பட்டுள்ளன. இதில் பன்னிரண்டு இயல்கள் உள.

"*பரமன் திருமுன் அழல்முன்னும் பரம குரவன் திருமுன்னும்*
ஒருமை உறவே வறுமையினும் உதவா தவரும் சிறிதேதும்
அரிது பொருள்தான் பச்சிலையும் அரிதோ அஃதும் அரிதாயின்
திருணம் அதனைத் திருமுன்னே மாற்றல் அரிதோ செயலாலே."

சைவ சமய நெறி: இதனையும் மறை ஞான சம்பந்தரே இயற்றினர். இதில் ஆசாரிய இலக்கணம், மாணவ இலக்கணங்களும், கிரியை, சரியை, யோகம், ஞானம் பற்றியும் கூறப்பட்டுள்ளன. இந்நூலாசிரியர் சிதம்பரத்தில் வாழ்ந்தவர். துறவை மேற்கொண்டவர். வேளாண் மரபினர். இவர் கமலாலய புராணம், பதிபசு பாசமோசப் பனுவல், சங்கற்ப நிராகரணம், பரமோபதேசம், முத்திநிலை, அருணகிரி புராணம், பரமத திமிரிபானு, இறைவன் நூற்பயன், சகலாகம சாரம், மகா சிவராத்திரி கற்பம், சோமவார கற்பம், வருத்தமற உய்யும் வழி, உருத்திராக்க விசிட்டம், திருக்கோயில் குற்றம், சிற்றம்பலநாடி மாலை, சிற்றம்பல நாடி வெண்பா முதலியன இயற்றி யுள்ளார். இவை சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கைச் சேர்ந்தன அல்ல. ஆயினும், சைவ சிந்தாத்தக் கருத்துக்களைக் கூறுதலின் இங்குச் சேர்க்கப் பட்டன.

திருவுந்தியார்: திருவியலூர் உய்யவந்த தேவநாயனர் அருளிய நூல். சிவஞானபோத நூலுக்கு முன்னர் தோன்றியது. உந்தீபற என்று ஒவ்வோர் பாட்டிலும் கூறப்பட்டிருத்தலின், உந்தியார் எனச் சிறப்பு விகுதியாகிய ஆர்விகுதி கொடுத்து கூறப்பட்டது. உந்தீபற என்பது மகளிர் விளையாட்டுக்களில் ஒன்று. இதன்கண் நடராச தரிசனச் சிறப்பு, இல்லற நெறியில் இன்பம் உற்றிருப்பவர்க்

கும் பேர் இன்பப்பேறு கிடைக்கும், இறைவன் மானிட உருத்தாங்கி வந்து அருளுவான், உள்ளம் உருகினால் இறைவனைப் பெறலாம், பற்றற்ற பரம்பொருளைப் பற்றினால் அன்றி, உலகப்பற்றை ஒழிக்க முடியாது என்பன போன்ற கருத்துக்கள் உள. இதில் 45 உந்தியார் பாடல்கள் உண்டு. இவை தாழிசையால் ஆனவை.

> "உழவாது உணர்கின்ற யோகிகள் ஒன்றோடும்
> தழுவாமல் நிற்பர் என்று உந்தீபற
> தாழ்மணி நாவே போல் உந்தீபற."

இந்நூலாசிரியர் திருவியலூரில் பிறந்தவர். காலம் கி. பி. 12 ஆம் நூற்றாண்டு.

திருக்களிற்றுப் படியார்: இதனை இயற்றியவர் திருக்கடவூர் உய்யவந்த தேவ நாயனார். இவர் இந்நூலைப்பாடிச் சிதம்பர நடராசர் சந்நிதியின் முன் உள்ள திருக்களிற்றுப் படியில் (யானைமுகப்படி) வைத்தபோது, அப்படியில் அமைந்த யானைமுகம் உண்மை உருப்பெற்றுத் தனது துதிக்கையால் எடுத்து நடராசப் பெருமான் திருவடியில் வைத்ததனால், இந்நூல் ஆர் என்னும் சிறப்பு விதி பெற்றுக் திருக்களிற்றுப்படியார் என்னும் பெயருடன் திகழ்ந்து விளங்குகிறது. இது வெண்பாவால் ஆன நூல். இந்நூலைத் திருவுந்தியாரின் வழி நூலாகக் கொள்ளலாம். இதில் அடியார்களின் பெருமை இனிது எடுத்து இயம்பப்பட்டுள்ளது. கண்ணப்பர், சிறுத்தொண்டர், அரிவாள் தாய நாயனார் போன்றோர் தொண்டு வல்வினைத் தொண்டு என்றும், திருநீலகண்டர், அமர் நீதியார் போன்றவர்களின் தொண்டு மெல்வினைத் தொண்டு என்றும் குறிப்பிட்டுள்ளனர் இந்நூலாசிரியர். மேலும், திருக்குறளை நன்காண்டுள்ளனர். இதில் 101 வெண்பாக்கள் உள. இந்நூலாசிரியர் காலம் கி. பி. 12 ஆம் நூற்றாண்டு. இந்நூலுக்கும் சிவப்பிரகாசர் உரை எழுதியுள்ளார்.

> "கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை என்றமையால்
> கண்ணப்பன் ஒப்பதோர் அன்பதனைக்—கண்ணப்பர்
> தாம்அறிதல் காளத்தி யார்அறிதல் அல்லதுமற்று
> யாம்அறியும் அன்பன் றது."

சிவஞான போதம்: சைவ ஆகமத்தில் ஞானபாதம் ஒரு பகுதி. அதனை ஆராயும் ஆராய்ச்சியே இதன்கண் உளது. இதில் முப்பொருளின் உண்மையையும், இலக்கணத்தையும், வீட்டிற்குரிய ஞானநெறியையும், அந்த ஞானநெறியில் நின்றார் பெறும் பயனையும் கூறப்பட்டுள்ளன. இறைவன் ஞானாசாரியனாக வந்து ஆன்மாவை அருள் நெறிக்குக் கொண்டு செல்லுதலையும், ஐந்தெழுத்து ஓதியே அருள்பெற முடியும் என்பதையும், சிவம் என்பதன் உண்மைப் பொருள் இன்னது என்பதையும், இலக்கணம் என்ன என்பதையும், சிவனடியாரையும் இறைவன் உறைவிடங்களாகிய திருக்கோயில்களையும் சிவபெருமானாகவே எண்ணி வணங்க வேண்டும் என்பதையும் தெளிவாக்கும் நூல்.

இந்நூல் விநாயக வணக்கப் பாடல் ஒன்றையும், அவையடக்கச் செய்யுள் ஒன்றையும், பன்னிரண்டு சூத்திரங்களையும், 12 சூத்திரங்களை விளக்கும் எடுத்துக்காட்டாக 81 வெண்பாக்களையும் கொண்டது. சிவஞான போதம் என்னும் தொடர் உணர்த்தும் பொருள் இன்னது என்பதை வாதவூர்ப் புராணம்,

"நின்றசிவம் ஒன்றுஅதனைத் தேர்தல் ஞானம் நிகழ்போதம்
தேர்ந்துஅதனைத் தெளிதலாம்."

என்று கூறுதல் காண்க.

"செம்மலர் நோன்தாள் சேறல் ஒட்டா
அம்மலம் கழீஇ அன்பரொடு மரீஇ
மாலற நேயமும் மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானும் அரன்எனத் தொழுமே."

என்னும் அடிகளையும் காண்க.

இந்நூல் வடமொழியில் உள்ள ரௌரவ ஆகமத்தின் பாவ விமோசனப் படலத்தின் மொழிபெயர்ப்பு என்பர் ஒரு சிலர். அது முடிந்த முடிபன்று. இது தமிழில் எழுதப்பட்ட முதல் நூலே. இதனை விளக்கத் தமிழ் சிவஞான போத முதற் சூத்திரத்தை ஆய்வோமாக. முதல் சூத்திரம் "அவன் அவள் அது எனும்" என்று தொடங்குகிறது. வடமொழிச் சூத்திரம் பெண் ஆண் அலியன் என்ற பொருளில் தொடங்குகிறது. "மலத்து உளது ஆம்" என்பது தமிழ்ச் சிவஞான போத முதற் சூத்திரத்தில் காணப்படும் தொடர். இதற்கு நேரான சொல்லோ, தொடரோ வடமொழி

சுலோகத்தில் இல்லை. "மூவினைமையின்" என்ற சொற்றொடர்க்கு நேராக "காரியம்" என்ற சொல்லே வடமொழிச் சிவஞான போதத்தில் உளது. 'என்மனார் புலவர்' என்று மெய்கண்டார் கூறிய தொடர்க்கு நேர், வடமொழி சுலோகத்தில் இல்லை. இப்படியே ஏனைய பதினொரு சூத்திரங்களும் தனித்தமிழ் முதல் நூல் அமைப்பாகவே அமைந்துள்ளன. இவ்வுண்மை, சிவஞானபோத வடமொழிச் சுலோகங்களுடன் ஒத்து ஆய்கிறபோது வெளிப்படுவ-தாகும். இவ்வாறு இருமொழிகளையும் அறிந்த புலவர்கள் எடுத்துக் காட்டலின், சிவஞானபோதம் தமிழ்மொழியில் உண்டான முதல் நூலே என்க. இத்தகைய அரிய நூலுக்குச் சிவஞான முனிவர் சிற்றுரையும், பேருரையாகிய மாபாடிய மும் வரைந்துள்ளார். இவரே அன்றி, மற்றும் பல அறிஞர் களும் உரை வகுத்துள்ளனர். இச்சிவஞானபோத உள் ளுறை வசன வடிவிலும் வந்துள்ளது.

இத்தகைய அரிய நூலை யாத்த பெரியார் மெய்கண்டார் என்பவர். இவர் கம்பரை ஆதரித்த சடையப்ப வள்ளல் பரம்பரையினர். இவரது தந்தையார் அச்சுத களப்பாளர். இவரது பெற்றோர் இவருக்கு இட்டபெயர் சுவேதவனப் பெருமாள் என்பது. இவரது பெற்றோர்கள் பிள்ளைப்பேறு இல்லா நிலையில் தம் குலகுருவின் ஆணைப்படி தேவாரத் திருமுறையினைக் கயிறுசாத்திப் பார்க்கும் போது, திருவெண் காட்டுப் பதிகம் வரப் பெற்றோர்கள் திருவெண்காடு சென்று, அங்குள்ள முக்குளங்களில் தினமும் நீராடி வழிபட்டு இந்த ஞான மகனாரைப் பெற்றெடுத்தனர். இவர் பரஞ்சோதி முனிவர்பால் ஞானோபதேசம் பெற்றவர். காலம் கி. பி. 13 ஆம் நூற்றாண்டு.

சிவஞான சித்தியார்: சிவஞான சித்தி என்னும் இந்நூலின் சிறப்பு நோக்கி ஆர் விகுதி சேர்த்து சிவஞான சித்தியார் என இது வழங்கப்படுவதாயிற்று. இது விருத்தப் பாவால் ஆன நூல். இதனில் இரண்டு பிரிவுகள் உள்ளன. ஒன்று சுபக்கம் என்பது. மற்றொன்று பரபக்கம் என்பது. இவ்விருபகுதிகளின் மொத்த விருத்தங்கள் 629. சுபக்கம் என்ற பகுதி சிவஞான போதத்தின் பொருள், பாட்டால் விளக்குவது என்றும் கொள்ளலாம். பரப்க்கம் என்பது சுத்தாத்துவித சைவ சமயம் தவிர்த்து, ஏனைய சமயங்கள்

கூறும் தத்துவங்கள் இன்னின்ன என்பதை எடுத்துக் காட்டுவன. அவை ஆன்மா ஈடேறவோ, முழுமுதல் பரம்பொருளை அறியவோ, துணைசெய்யா. அச்சமயங்களில் கூறப்படும் தெய்வங்கள் பிறந்து இறப்பன போன்ற மறுப்புக்களைக் கூறுவது. இந்நூலின் பெருமையினைத் தாயுமானவர் கூறும்போது, இதில் பாதி விருத்தம் தெரிந்தாலே ஞானம்பெறலாம் என்பதை,

"பாதி விருத்தத்தால் இப்பார்விருத்தம் ஆகஉண்மை
சாதித்தார் பொன்னடியைத் தான்பணிவது எந்நாளோ."

என்று சிறப்பித்துக் கூறியிருப்பதால் உணரலாம்.

இவரே அன்றிச் சிவபோகசார ஆசிரியர் திருஞான சம்பந்த தேசிகரும் "பார்விருத்த நூல் எல்லாம் பார்த்தறியச் சித்தியிலே ஓர் விருத்தப் பா போதும்" என்று கூறியுள்ளனர்.

இறைவன் ஆன்மாக்களை ஒறுத்து ஆட்கொள்ளுதலை,

"தந்தைதாய் பெற்ற தத்தம் புதல்வர்கள் தம்சொல் ஆற்றின்
வந்திடா விடின் உறுக்கி வளாரினல் அடித்துத் தீய
பந்தமும் இடுவர் எல்லாம் பார்த்திடில் பரிவே ஆகும்,
இந்தநீர் முறைமை அன்றோ ஈசனார் முனிவும் என்றும்."

என்று இந்நூல் சுபக்கத்தில் கூறுதல் காண்க.

இந்நூலைப் பற்றி வழங்கும் பழமொழி "சிவத்தின்மேல் தெய்வம் இல்லை. சிவஞான சித்திக்குமேல் சாத்திரம் இல்லை" என்பது.

இந்நூலுக்குப் பொழிப்புரை வரைந்தவர் சிவஞான முனிவர். திருவாவடுதுறை சுப்பிரமணிய தேசிகர் பதவுரை எழுதியுள்ளனர். சிவஞான சித்தியாரின் ஆசிரியர் மெய்கண்டாரின் முதல் மாணவர் அருணந்தி சிவாசாரியார். இவர் திருந்துறையூர் அந்தணர் மரபில் தோன்றியவர். இவரது ஆகமப் பயிற்சி காரணமாக இவர் சகலாகம பண்டிதர் என்னும் பெயரையும் பெற்றவர். காலம் கி. பி. 13 ஆம் நூற்றாண்டு.

இருபா இருபஃது: இதுவெண்பா, அகவற்பா என்ற இருபாக்கள் மாறி மாறி வர இருபது பாக்களால் ஆன நூல்.

இந்நூல் மெய்கண்டதேவரைச் சிறப்பித்துக் கூறுவதுடன் அவரை விளித்து ஐயமாக இருந்த பொருள்களைப் பற்றி வினவி, அவ்வினாவிற்கு ஆசிரியர் விடை அளிப்பது போல அமைந்தது. இவ்வினா விடைவழி சைவசித்தாந்த நுண்பொருள் பலவும் விளக்கப்படுகின்றன. இந்நூலையும் இயற்றியவர் அருணந்தி சிவாசாரியர்.

உண்மை விளக்கம்: இந்நூற்கு அமைந்துள்ள பெயரைக் கொண்டே இந்நூலின் பெருமையினை உணரலாம். இதுவும் மெய்கண்டாரை ஐயவினா கேட்கும் முறையிலும், அதற்கு அவர் கூறும் விடை முறையிலும் வெண்பாவால் அமைந்த நூல். இதன் வழி ஞானேந்திரியம், கன்மேந்திரியம், கரணம் முதலானவை இன்ன என்பதையும் நடராசப்பெருமான் நடனத்தின் சிறப்பும் காரணமும், தத்துவமும், ஐந்தெழுத்தின் உள்பொருளும் ஆகிய இவற்றை நன்கு அறியலாம்.

" அறிவறி யாமை இரண்டும் அடியேன்
செறிதலான் மெய்கண்ட தேவே—அறிவோ
அறியேனோ யாதொன்று கூறுகேன் ஆய்ந்த
குறிமாறு கொள்ளாமல் கூறு."

" மாயைதனை உதறி வல்வினையைச் சுட்டுமலம்
சாய அமுக்கிஅருள் தான்எடுத்து-நேயத்தால்
ஆனந்த வாரிதியில் ஆன்மாவைத் தான்அழுத்தல்
தானெந்தை யார்பரதம் தான்."

இந்நூலை இயற்றியவர் மெய்கண்டதேவர் மாணவர்களில் ஒருவரான திருவதிகை மனவாசகம் கடந்தார் என்பவர். இவர், குரு மொழி வினா அகவல் ஒன்றை இயற்றி இருப்பதாகவும் தெரிகிறது. காலம் கி. பி. 13 ஆம் நூற்றாண்டு.

சிவப்பிரகாசம்: சிவபெருமானது விளக்கத்தைக் கூறுவது என்னும் பொருளைத் தருவதே இப்பெயரின் பொருளாகும். சிவஞான போதம் முதல் நூலாகவும், சிவஞான சித்தியார் வழி நூலாகவும் திகழ, இந்நூல் சார்பு நூலாக விளங்கி வருகிறது. இந்நூலும் சிவஞானம்

போதத்தில் கூறப்பட்ட பன்னிரண்டு சூத்திரங்களை விளக்கும் முறையில் அமைந்துள்ளது. தன்னை ஓதி உணர்ந்த பக்குவர் அறிவில் சிவம் பிரகாசிக்கச்செய்தலின், இது சிவப்பிரகாசம் எனப்பெயர் பெற்றதாகக் கூறுவர். இந்நூலில் சிவதீட்சை வகைகளும் கூறப்பட்டுள்ளன.

"தொன்மைய வாம்எனும் எவையும் நன்றாகா இன்று
தோன்றிய நூல்எனும் எவையும் தீதாகா துணிந்த
நன்மையினர் நலங்கொள் மணிபொதியும் அதன்களங்கம்
நவைஆகா தெனஉண்மை நயந்திடுவர் நடுவாம்
தன்மையினர் பழமைஅழ கராய்ந்து தரிப்பர்
தவறுநலம் பொருளின்கண் சார்வா ராய்ந்தறிதல்
இன்மையினர் பலர்புகழில் ஏத்துவர் ஏதிலருற்
றிகழ்ந்தனரேல் இகழ்ந்திடுவர் தமக்கென ஒன்றிலரே."

என்று கூறிய அவையடக்கச் செய்யுளை இந்நூலில் காண்க.

இந்நூலைப் பாடியவர் சிவஞானச் செல்வர் உமாபதி சிவாசாரியார். இவர் சிதம்பரத்திற்கு அருகில் உள்ள கொற்றவர் குடியில் தில்லைவாழ் அந்தணர் மரபில் பிறந்தவர். இவர் மறை ஞானசம்பந்த சிவாசாரியாரிடம் உபதேசம் பெற்றவர். இவர் முள்ளிச் செடிக்கும், பெற்றான் சாம்பான் என்னும் தாழ்த்தப்பட்ட மரபினன் என ஒதுக்கப்பட்டவனுக்கும் தீட்சை புரிந்து முத்தி கொடுத்தவர். இவரது காலம் கி. பி. 14 ஆம் நூற்றாண்டு.

திருவருட் பயன்: இந்நூல் கரு இருள் பந்தம் தீர்ந்து, உலகம் திருவருள் பயனை அடைய இயற்றப்பட்ட நூல். குறள் வெண்பாவால் ஆனது. இதில் பத்து அதிகாரங்கள் உள. ஒவ்வொன்றும் பத்துப் பத்துக் குறட்பாக்களை உடையது. பதிமுது நிலை, உயிர் அவை நிலை, இருள் மலநிலை, அருளது நிலை, அரனுரு நிலை, அறிவு நெறி, உயிர் விளக்கம், இன்புறு நிலை, ஐந்தெழுத்தருள் நிலை, அணைந்தோர் தன்மை, என்பன அவ்வதிகாரங்கள். இந்நூலை எழுதிய வரும் உமாபதி சிவாசாரியரே.

"அகர உயிர்போல் அறிவாகி எங்கும்
நிகரில் இறைநிற்கும் நிறைந்து."

வினா வெண்பா: உமாபதி சிவாசாரியார் தம் ஆசிரியரை முன் நிறுத்தி வினவும் முகத்தால் பாசம் நீங்கவும், வீட்டின்பம் எய்தவும், திருவருள் நேசம் கூடவும் செய்தருளிய நூல். 13 வெண்பாக்களை உடையது.

" நீடு ஒளியும் நிறைஇருளும் ஓர்இடத்து
கூடல் அரிது கொடுவினையேன்—பாடிதன்முன்
ஒன்றவார் சோலை உயர்மருதச் சம்பந்தா
நின்றவா றெவ்வாறு நீ."

போற்றிப் பஃறொடை: இந்நூல் கலிவெண்பாவால் ஆயது. இதன்கண் இடை இடையே போற்றி போற்றி என்று அமைந்திருத்தலின், இஃது இப்பெயர் பெற்றது. இறைவன் திருவருளால் பந்த பாசங்களும், வீட்டின்பமும் நிகழும் முறையினை உலகோர் உணர அருளப்பட்ட நூல். இதனைப் பாடியவரும் உமாபதி சிவாசாரியரே.

ஆணவ மலம் மட்டும் உடைய உயிரையும், ஆணவம், கன்மம் என்னும் இரு மலங்களை மட்டும் உடைய உயிர்களையும், ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களையும் உடைய உயிர்களையும் இறைவன் அருள் செய்து தன்னடி கூட்டும் முறைமையினை,

" நன்னெறிவிஞ் ஞானகலர் நாடுமலம் என்றனையும்
அந்நிலையே உள்நின் றறுத்தருளிப்—பின் அன்பு
மேவா விளங்கும் பிரளயாக லருக்குத்
தேவாய் மலகன்மம் தீர்த்தருளிப்—பூவலயம்
தன்னின்று நீங்காச் சகலர்க் கவர்போல
முன்னின்று மும்மலம்தீர்த் தாட்கொள்கை."

என்று இந்நூலில் கூறி இருப்பதைக் காண்க.

கொடிக் கவி: தில்லை நடராசப் பெருமானது பெரு விழாவில் கொடிக் கம்பத்தில் கொடி ஏற்றியபோது, அது மேலே நிற்காமல் அற்று, அற்று வீழ்ந்தது. அதுபோது தில்லை வாழ் அந்தணர்கள் உமாபதி சிவத்தை வேண்ட, அவர் கொடிக் கவி என்ற பெயரால் நான்கு பாடல்களைப் பாடிக் கொடியை ஏற்றினர். ஆகவே, இது கொடிக் கவி எனப் பட்டது. இதில் ஒரு கட்டளைக் கலித்துறைப் பாடலும்,

மூன்று வெண்பாக்களும் உள. இதில் ஐந்தெழுத்தின் வகைகள், பதி, பசு, பாகங்களின் தன்மைகள் முதலியன பேசப்பட்டுள்ளன.

> "ஒளிக்கும் இருளுக்கும் ஒன்றே இடம்ஒன்று மேலிடில் ஒன்று
> ஒளிக்கும் எனினும் இருள் அட ராதுஉள் உயிர்க்குயிராத்
> தெளிக்கும் அறிவு திகழ்ந்துள தேனும் திரிமலத்தே
> குளிக்கும் உயிர் அருள் கூடும் படிகொடி கட்டினமே."

நெஞ்சு விடு தூது: உமாபதி சிவாசாரியார் தமது ஞானசாரியராம் திருக்கடந்தை மறை ஞானசம்பந்தர்பால் தம் மனத்தைத் தூது போக்கிக் தையலார் வருத்தம் தீரத் திருவடித் தாமரை தருக எனக் கூறிப் பூங்கொன்றையினை வாங்கி வருக என்று சொல்லி அனுப்பிய முறையில் பாடப்பட்ட கலிவெண்பாவாகும். இதில் தமது ஞானசாரியாரைச் சிவபெருமானாகவே பாடி யுள்ளனர். இதில் தசாங்க அமைப்பும் உளது. மற்றும் இறைவன் இயல்பு, பாசபந்தம், இறைவன் பெருமை, மலநீக்கம் முதலியனவும் பேசப் பட்டுள்ளன. நெஞ்சுக்கும் கூறிய உபதேசமாக,

> "ஆதிமறை ஓதி அதன்பயன் ஒன்றும் அறியா
> வேதியர்சொல் மெய்என்று மேவாதே—ஆதியின்மேல்
> உற்ற திருநீறும் சிவாலயமும் உள்ளத்துச்
> செற்ற புலையர்பால் செல்லாதே—நற்றவஞ்சேர்
> வேடமுடன் பூசைஅருள் மெய்ஞ்ஞானம் இல்லாத
> மூடருடன் கூடி முயங்காதே—நீட
> அழித்துப் பிறப்ப தறியா தரனைப்
> பழித்துத் திரிபவனைப் பாராதே."

என்று கூறினவற்றைக் காண்க.

உண்மை நெறி விளக்கம்: இதில் ஆறு பாடல்கள் உள. இந்நூல் தத்துவ ரூபம், தத்துவ தரிசனம், தத்துவ சுத்தி, ஆன்ம ரூபம், சிவ ரூபம், சிவ தரிசனம், சிவயோகம், சிவ போகம் ஆகிய இவற்றை உணர்ந்தால் சிவானுபவம் கூடலாம் என்பதை அறிவிக்கிறது.

> "பாயிருள் நீங்கி ஞானம் தனைக் காண்டல் ஆன்ம ரூபம்
> நீயும்நின் செயலொன் றின்றி நிற்றலே தெரிசனம் தான்

போய்இவன் தன்மை கெட்டுப் பொருளில் போய்
அங்குத் தோன்று
தாய்விடில் ஆன்மசுத்தி அருள் நூலின் விதித்த வாறே."

என்பது இதில் ஒரு பாடல்.

இந்நூலை இயற்றியவரும் உமாபதி சிவம். ஆனால், இதில் வரும் பாயிரப் பாடல் காழிதத்துவனார் மாணவர் தத்துவநாதன் என்று அறிவிக்கிறது.

சங்கற்ப நிராகரணம்: இந்நூல் மாயாவாதி, ஐக்கிய வாதி, போத வாதி முதலான வாதிகளின் தத்துவக் கொள்கைகளைத் தருக்க முறைப்படி கண்டித்துச் சுத்தாத்துவித சைவ சித்தாந்தத் தெளிவை நிலைநிறுத்துவது.

சங்கற்பம் = கொள்கை, நிராகரணம் = மறுப்பு. ஆகப் பிற மதக் கொள்கைகளை மறுத்துக் கூறுவது என்பது சங்கற்ப நிராகரணம் என்பதன் பொருளாம்.

" எவ்வம் இல்லாச் சைவநற் சமயத்து
அலகில் ஆகமம் நிலவுதல் உள அவை
கனகம் இரணியம் காஞ்சனம் ஈழம்
தனம்நிதி ஆடகம் தமனியம் என்றிப்
பலபெயர் பயப்பதோர் பொருளே போலப்
பதிபசு பாச விதிமுறை கிளக்கும்."

இப்பதினான்கு சாத்திரங்களும் மெய்கண்ட சாத்திரம் எனப்படும்.

சித்தர்கள்

சித்து என்பது ஞானம், அறிவு என்னும் பொருள் தரும் சொல்லாகும். ஆகவே, அறிவுடைப் பெருமக்களை அறிவர் என்றும் சித்தர் என்றும் கூறுவர். இவர்கள் தமது அறிவின் பெருக்கால் மக்களால் செய்தற்கரிய செயல்களை எளிதில் செய்து முடிப்பர். இவர்களின் ஆற்றல் இன்னது என்பதைக் கலம்பக நூல்களில் சித்து என்னும் தலைப்பின் கீழ்க்காணலாம்.

" குரும்பை வெம்முலை சேர்மது ரேசர்பொன்
கோபுரத்தில் கொடிகட்டு சித்தர்யாம்
கரும்பை முன்புகல் லானைக் கிடும்சித்தர்
கையில் செங்கல் பசும்பொன்ன தாக்கினேம்

இருந்த வீடும் வெறும்பாழ தாம்அவர்க்கு
எடுத்துத் கொட்டிரம் பொன்வேய்ந் திடச்செய்தேம்
அருந்தனம்நமக் கோதனமே அப்பா
ஆட கத்துமற் றுசைஅவ் வையர்க்கே.''

—மதுரைக் கலம்பகம்.

இவ்வாறு அரிய செயல் புரியும் சித்தர்கள் தமிழ்க்குச் செய்துள்ள அரும் செயல்களும் அளவிடற் கரியன. சோதிட நூற்கள், மருத்துவ நூற்கள், ஞான நூற்கள், யோக நூற்கள் முதலிய நூற்களை இவர்கள் செய்துள்ளனர். அவைகள் எளிய இனிய நடைகள், கொச்சை மொழிகள் பயின்றும், வடசொற்கள் அமைந்தும் காணப்படும். ஆனால், உள்பொருள் மறைமுகமாகவே இருக்கும். இவர்களது மருத்துவ நூற்களின் உள்பொருளை நன்கு உணர்ந்தால் எத்தகைய தீரா நோய்களையும் தீர்த்து விடலாம். இவர்கள் மருத்துவமே, சித்த மருத்துவம் என்று வழங்கப்படுகிறது. இவர்களின் மருத்துவ முறையின் சிறப்பை உணர்ந்த நமது அரசாங்கமும் பெரும் பொருள் உதவிக் கல்லூரி நடத்தவும், மருந்துகளைத் தயார் செய்யவும் தூண்டி வருகின்றது. சித்தமுறைக் கூட்டுமருந்து தயார் செய்யும் நிலையம் அடையாற்றில் அமைந்து அருமருந்துகளைச் செய்து வருகின்றது. சித்தர்கள் பதின் எண்மர் என்றும் கூறுவர்.

அகத்தியர்: இவர் தமிழ் இலக்கண ஆசிரியரே அல்லாமல், வைத்தியம், யோகம், இரசவாதம் பற்றிய நூல்களைச் செய்துள்ளனர். அம்மை சூத்திரம், ஆருதாரம் எட்டு, இரத்தினச் சுருக்கம், உட்கருவு சூத்திரம், கர்ம காண்டம், குண வாகடம், சகல கலை ஞானச்சுருக்கம், சரக்கு நூறு, சூத்திர நிகண்டு, செந்தூரம் முந்நூறு, தீட்சை நாடி சூத்திரம், நயன வீதி, பச்சைப்பதினாறு, பஸ்ப முறை இருநூற்றைந்து, மூப்பு, லேகியவகை, வாகட சூத்திரம், வாதம் முந்நூறு, வாலைவாகடம், வைத்திய ரத்தினச் சுருக்கம், வைத்தியச் செந்தூரம் முதலான மற்றும் பல வைத்திய நூல்களைச் செய்துள்ளனர்.

இரசமணி, யோகம் ஆறு, யோக நிதி, முதலானவை யோக நூற்கள்.

கற்ப முறைச்சூத்திரம், காயசித்திவழலைச் சூத்திரம், ஞானஉலா, புட்பமாலிகை, பூரண சூத்திரம் வழலைப் பதினாறு, வாத சூத்திரம் நூறு, வெண்கார மெழுகு என்பன இரசவாத நூல்கள். இரசவாதமாவது ஒன்றை வேறொன்றாக மாற்றும் கலை. இரும்பைப் பொன்னாக்குவது போன்றது. சரீரத்தையும் நீண்ட ஆண்டுகள் வரை நிலை நிறுத்தச் செய்வது போன்றது.

உபதேச ஞானம், ஞானகாவிய சூத்திரம், ஞான காவியம் ஆயிரம், பரிபூரணம் ஐம்பத்தொன்று என்பன ஞான நூற்கள்.

சாலத்திரட்டு, சால நூல், பஞ்சபட்ச முதலியன சோதிட நூல்கள். இங்ஙனம் பல துறை நூல்கள் அகத்தியர் பெயரால் வழங்கும் சித்தர் நூல்களாம்.

இத்தனை நூல்களையும் அகத்தியர் ஒருவரே செய்தனரா என்பதில் ஐயம் உண்டு. அகத்தியர் என்ற பெயரால் பற்பலர் செய்தனராகச் சிலர் எண்ணுவதை நாம் மறத்தல் கூடாது.

"மனமது செம்மை யானால் மந்திரம் செபிக்க வேண்டா
மனமது செம்மை யானால் வாயுவை உயர்த்த வேண்டா
மனமது செம்மை யானால் வாசியை நிறுத்த வேண்டா
மனமது செம்மை யானால் மந்திரம் செம்மை யாமே."

அகத்தியர் ஞானம்.

திருமூலர் : இவர் திருத்தொண்டரே அல்லாமல், சித்தரும் ஆவார். அகத்தியர்க்கு அடுத்த சித்தர் இவர் எனப்படுகிறார். இவர் சைவ ஆகம கருத்துக்கள் அடங்கிய திருமந்திர நூல் செய்த தோடின்றி, மருத்துவச் சார்பாகச் திருமூலர் எண்ணாயிரம், திருமந்திர வைத்தியம், திருமூலர் கருக்கிடை அறு நூறு என்ற நூல்களையும் செய்தனர் எனக் கூறுவார். திருமூலர் திருவாவடு துறையில் யோக நிலையில் அமர்ந்துள்ளனர். ஆகவே, அத்தலம் நவ கோடி சித்தபுரம் என்றும் கூறப்படுகிறது. மேகநோய் தீரத் திருமூலர் சொல்லும் மருந்தை கீழ்வரும் அடிகளில் காணலாம்.

*"பார்த்திடும் மேகம் பகர் இரு பத்தொன்றும்
போற்றிடும் அபரேகப் பொலிவான சிந்துரம்
சேர்ந்திடும் சீந்தில் செவ்வாஞ் சருக்கரை
மாற்றிடு வெண்ணெயில் மாமேகம் போகுமே."*

போகர்: காலாங்கி நாதர் மாணவர். இவர் யோகம் எழு நூறு, வைத்தியம் ஏழாயிரம், போகர் திரு மந்திரம் என்ற நூல்களை எழுதியுள்ளனர். இவரது சமாதி இன்றும் பழனி மலை மீது உள்ளது. பழனி ஆண்டவர் திருவுருவம் இவரால் நவ பாஷாணங்களைக் கொண்டு அமைக்கப்பட்ட தாகச் செவிமரபு செய்தியும் உளது.

புலிப்பாணி: இவர் போகர் மாணவர். பழனி அடிவாரத்தில் உள்ள வைகாவூரிலும், பாண்டிய நாட்டுச் சதுர கிரியிலும், சிவகிரியிலும் வாழ்ந்தவர் என்பர். முருகனிடத்துப் பேரன்பு கொண்டவர். இவர் வைத்தியம் ஐந்நூறு, சிதம்பரம் இருபத்தைந்து, ஆகிய நூல்களைச் செய்தனர்.

கொங்கணர்: இவர் சிறந்த ரசவாதி. கொங்கு நாட்டு ஊதியூர் மலையில் வாழ்ந்தவர். இதனைக் கொங்கண மலை என்றும் கூறுவர். இவரைத் திருமழிசை ஆழ்வார் காலத்தவர் என்பாரும் உளர். சிலர் இவரது காலத்தை கி. பி. 15 ஆம் நூற்றுண்டென்பர். இவர் தம் மீது எச்சமிட்ட கொக்கை விழித்துப் பார்த்து எரித்தவர். இவர் தஞ்சையில் சிவலிங்க வழி பாடாற்றி முத்தி பெற்றவர். இவரது நூற்கள் கடைக்காண்டம், திரிகாண்டம், கொங்கணர் ஞானம், குணவாகடம் என்பன.

இடைக்காடர்: இவர் புலிப்பாணியின் மாணவர். (கடைச்சங்கப் புலவர் வேறு.) இவர் ஊசி முறி, அறுபது வருட வெண்பா, மூவடி முப்பது, என்ற நூல்களைப் பாடினர்.

*"சினம்என்னும் பாம்பிறந்த தாண்டவக் கோனே-யாவும்
சித்திஎன்றே நினையேடா தாண்டவக் கோனே."*

இடைக்காட்டுச் சித்தர்.

சட்டை முனி: இவரும் போகர் மாணவர். இவர் மரபால் சேணியர். சட்டை முனி ஞானம் இரு நூறு, சட்டை முனி ஆயிரத்து இரு நூறு, சரக்குவைப்பு, நவரத்தின வைப்பு, சடாட்சரக் கோவை, கற்பம் நூறு, வாத நிகண்டு, வாத வெப்பு என்பன இவரது நூல்கள்.

"காணப்பா பூசை செய்யும் முறையைக் கேளாய்
கைம்முறையாய்ச் சுவடிவைத்துப் பூசை செய்வர்
பூணப்பா சிலபேர்தாம் தீபம் வைத்துப்
புகழாகப் பூசை செய்வர் பெண்ணை வைத்தும்."

சட்டை முனி.

மச்ச முனிவரும்: போகர் மாணவர். இவர் மீன் பிடிக்கும் செம்படவர் மரபினர். இவர் திராவகம் எண்ணூறு, வைத்தியம் எண்ணூறு, கலை ஞானம் எண்ணூறு, பெருநூல் எண்ணூறு, முப்புதீட்சை விதி, குலாலபுராணம், கடைக்-காண்டம் எண்ணூறு முதலானவற்றை எழுதினர் எனக் கூறுவர்.

உரோம முனி: இவர் சட்டை முனிவர் காலத்தவர் என்பர். சிலர் கி. பி. 15 ஆம் நூற்றுண்டினர் என்பர். இவரது தந்தையார் புசுண்டர் உரோம முனிவர். பஞ்சபட்சி சாத்திரம், உரோம முனி நூறு ஆகிய நூல்களை இயற்றினர்.

"ஓம்மென் கேட்ட புத்தி மாறு கேளே
உலகத்தில் மானிடர்க்காம் ஆண்டு நூறே
ஆம்என்றே இருபத்தோர் ஆயி ரத்தோ
டறுநூறு சுவாசம் அல்லோ ஒருநாளைக்குப்
போமென்று போனதனால் நாள்குறைந்து
பேச்சுதுபோ காவிட்டால் போவ தில்லை
தாமொன்று நினைக்கையிலே தெய்வம் ஒன்று
தானினைந்த தன்மைஅல்லோ விதிகள் தாமே."

உரோம முனி.

தேரையர்: இவர் அகத்தியர் மாணவர்களுள் ஒருவர் என்பர். ஒரு சிலர் தரும சௌபியரது மாணவர் என்பர். இவர் ஒருவரது மண்டையில் தேரை இருப்பது அறிந்து, அம்-மண்டையைத் திறந்து தேரையை வெளியில் எடுத்தது

பற்றி இப்பெயர் பெற்றவர் என்பர். இவர் செய்த நூற்கள் நோய் அணுகாவிதி, பதார்த்தகுண சிந்தாமணி, நீர்க்குறி, நெய்க்குறி சாத்திரம், தைலவருக்கச் சூத்திரம், வைத்திய யமக வெண்பா, மணி வெண்பா, மருத்துவப் பாரதம், வைத்-தியக் கரிசல்கள், நாடிக் கொத்து, சிகிச்சை ஆயிரம் என்பன.

> *" நீர்கருக்கி மோர்பெருக்கி நெய்உருக்கி உண்பவர்தம்*
> *பேர்உரைக்கில் போமே பிணி."*

தேரையர்.

யூகி முனிவர்: இவர் தேரையர் மாணவர். இவரது நூல் வைத்திய சிந்தாமணி என்பது. இவர் தாம் செய்த வீர சூரணத்தால் காக்கையை வெண்ணிறம் ஆக்கியதாகக் கூறுவர்.

கோரக்கர்: இவர் மச்சேந்திரர் மாணவர். கஞ்சா என்னும் சரக்குக் கொண்டே பல மருந்துகளைச் செய்தவர் என்பர். இவர் செய்த நூல் கோரக்கர் வைப்பு என்பது. இவரைக் கஞ்சா கோரக்க முனி என்றும் கூறுவர். இவரது பெயர் சிவப்பிரகாசர் அருளிய பிரபுலிங்க லீலையில் வரு-கின்றது. அவர் அல்லமாப் பிரபு தேவர் காலத்தவர். ஆகவே, அல்லம தேவர் காலமாகிய கி. பி. 10 ஆம் நூற்றாண்டு கோரக்கர் காலம் என்னலாம்.

தன்வந்திரி: இப்பெயருடையார் இருவர் உளர். ஒருவர் ஆயுர் வேத மருத்துவர். மற்றவர் சித்த மருத்துவர். இங்குக் கூறப்படுபவர் சித்தர் தன்வந்திரி ஆவார். இவர் நூற்கள் வைத்திய சிந்தாமணி, தன்வந்திரி நிகண்டு, செய நீர், கலைஞானம், தன்வந்திரி, பச்சை வெட்டு என்பன. இவரது மருத்துவம் பெரிதும் யாழ்ப்பாணத்தில் கையாளப் பட்டு வருகின்றது.

பாம்பாட்டிச் சித்தர்: இவர் பாண்டிய நாட்டினர். சட்டை முனியிடம் தீட்சை பெற்றவர். கொங்கு நாட்டு மருதமலை-யிலும் வாழ்ந்தனர். பல தனிப்பாடல்களைப் பாடியவர். இவரது முழு நூல் சித்தராரூடம் என்பது. இவர் பாடல்-களில் ஆடு பாம்பே என்ற தொடர் காணப்படுதலின் இப்பெயர் பெற்றார்.

"பூசைசெய்த தாலேசுத்த போதம் வருமோ
பூமிவலம் செய்ததனால் புண்ணியம் உண்டோ
ஆசையற்ற காலத் தாலே ஆதி வத்துவை
அடையலாம் என்றுதுணிந் தாடு பாம்பே."

பாம்பாட்டிச் சித்தர்.

அகப்பேய்ச் சித்தர்: இவர் தம் மனம் பேய் போல அலைவதாகப் பாடியவர். ஆதலின், இவர் இப்பெயர் பெற்றவர். காலம் கி. பி. 15 ஆம் நூற்றாண்டு என்பர்.

"சைவம் ஆருக்கடி—அகப்பேய்—தன்னை அறிந்தவர்க்கே
சைவம் ஆன இடம்—அகப்பேய்—சற்குரு பாதம்அடி"

அகப்பேய்ச் சித்தர்.

குதம்பேய்ச் சித்தர்: இவர் தமது பாடல்களைக் குதம்பாய் குதம்பாய் என்று மகடூஉ முன்னிலையில் அமைத்துப் பாடினமையின் இப்பெயர் வாய்ந்தவர். குதம்பை மாதர் காதணி. இவரது கருத்துப் பெண்கள் பேய் என்பது. இக்கருத்தைத் தம் பாடல்களில் அமைத்துள்ளனர். காலம் கி. பி. 15ஆம் நூற்றாண்டு. குதம்பேய்ச் சித்தர் என்னும் பெயர், குதம்பைச் சித்தர் என மருவியது

"முத்தமிழ் கற்று முயங்கும்மெய்ஞ் ஞானிக்கு
சத்தங்கள் ஏதுக்கடி—குதம்பாய்
சத்தங்கள் ஏதுக்கடி."

குதம்பைச் சித்தர்.

இங்குக் கூறப்பட்ட சித்தர்களே அன்றி, வேறு பல சித்தர்களும் உளர். பதினெண் சித்தர் என்னும் தொகுப்பிலும் சில மாறுதல்கள் உள. ஒருசாரார் ஒருவகைப் பதின் எண்மரையும், மற்றொரு சாரார் வேறுவகைப் பதின் எண்மரையும் கூறுவர். எவர் எங்ஙனம் கூறினும் இவர்கள் செய்துள்ள நூற்கள், இக்காலத்தில் மருத்துவம், கணிதம், வான நூல் முதலான கலைகளைத் தமிழில் கற்பிக்கப் படுதல் வேண்டும் என்று கூறியும், செயல் படுத்தியும் வரும் இக் கருத்துக்குப் பெருந்துணை செய்யவல்லன என்பதை உணர்தல் வேண்டும். ஆகவே, அந்நூற்களைச்

செம்மையான முறையில் பதிப்பித்து விளக்கம் காணுதல் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கும், கலை வளர்ச்சிக்கும் பெருந் தொண்டாகும்.

இலக்கண நூற்கள்
(Grammars)

மக்களுக்கும் மாக்களுக்கும் உள்ள வேறுபாடு, மக்கள் பேச்சாற்றல் உடைமையும், மாக்கள் அதனைப் பெருமையும் ஆகும். பேசும் ஆற்றல் மொழியினால் அமைவது. அத்தகைய மொழியைச் செம்மையுறப் பேசுதலும், எழுதுதலும் மாண்புறு செயலாகும். மொழி செம்மையாக இருக்க வேண்டும் என்பதை எவரும் ஒவ்வுவர். கன்பூசியஸ் என்னும் சீன நாட்டுச் சீர்திருத்தப் பெரியாரை ஒருவர், "பெரியீர், சமூகப் பொறுப்பு உம் கையதாகில் முதற்கண் யாது செய்வீர் ?" என்று வினவியபோது அவர், கூறிய விடை "I would correct language"; என்பதாகும். இங்ஙனம் செய்தற்கு இலக்கண அறிவு மிகுந்தால் அன்றிச் செய்ய முடியுமோ ? இவர் மட்டும் அல்லர். டாக்டர் ஜான்சனும், "மொழியானது மூளைக்கு ஆடை உடுத்த சேவகன் ; கருத்தின் உடை" என்றனர். அவர், "The brain's livery servant; the dress of thought" என்றும், பாபு ரூஸோ என்னும் பிரஞ்சு மொழிப் புலவர் விஞ்ஞானங்களுக்குரிய திறவு கோல் என்னும் பொருளில், "The Key to the Sciences" என்றும், டாக்டர் மெக்காலே "புலவனது பொறி" (இயந்திரம்) என்ற பொருளில் "The machine of the poet" என்றும் கூறியுள்ளனர்.

இவ்வாறு சிறப்பித்துக் கூறப்பட்ட மொழியின் செம்மைக்கு அடிப்படை, இலக்கண அமைப்பாகும். ஆகவே, இலக்கண அறிவு மக்கட்கு இன்றி யமையாதது. இலக்கணம் எழுத்து என்னும் சொல்லால் தமிழ் மொழியில் குறிக்கப்பட்டு வருகிறது. இவ்வெழுத்தாகிய இலக்கணத்தைப் பயில்வதால் இழிதகைமை தீரும் என்றும், மொழித் திறத்தின் முட்டறுக்க முடியும் என்றும், வீட்டின்பம் பெறலாம் என்றும் நம் முன்னோர் கருதினர். இதனை

"எழுத்தறிய தீரும் இழிதகமை தீர்ந்தான்
மொழித்திறத்தின் முட்டறுப்பான் ஆகும்-மொழித்திறத்தின்
முட்டறுத்த நல்லோன் முதல்நூல் பொருள்உணர்ந்து
கட்டறுத்து வீடு பெறும்."

என்னும் பழம் பாடலால் உணரலாம்.

இலக்கணம் அறியாதவர் எவ்வளவு இலக்கிய அறிவு பெற்றிருந்தாலும், இலக்கணம் அறிந்தவர் முன் நிற்க முடியாது என்னும் கருத்தில் சிவப்பிரகாசர் "எழுத்தறியார் கல்விப் பெருக்கம் அனைத்தும், எழுத்தறிவார் காணின் இலையாம்" என்று அறுதியிட்டு உறுதியாகக் கூறியது உண்மை என்பதில் எள்ளளவும் ஐயம் இல்லை. இல்க்கண அறிவின் சிறப்பை மேற்கு நாட்டவர்களும் வியந்து கூறியுள்ளார். Horn Took என்னும் ஆங்கிலப் புலவர் "Grammar, though a difficult study, is absolutely necessary" என்றும் கூறியுள்ளதைக் காண்க: ஆகவே தான் ஔவையார் "எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்" என்றனர். திருவள்ளுவரும்,

"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு"

என்றனர்.

மேலும், தமிழ் இலக்கண அமைப்பு, வேறு எந்த மொழிக்கும் இல்லை என்ற குறிப்பினைப் பரஞ்சோதி முனிவர் "ஏனை மண்ணிடைச் சில இலக்கண வரம்பிலா மொழிபோல் எண்ணிடப்படக் கிடந்ததா எண்ணவும் படுமோ?" என்று அறை கூவி அறிவிப்பாராயினர். இனி, அவ்விலக்கண நூல்களின் சிலவற்றைப் பற்றி அறிவோமாக.

தமிழ் மொழியின் இலக்கணம் ஐந்து வகைப்படும். அவை எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்பன. எழுத்து இலக்கணம் எழுத்தின் வகை, பிறப்பிடம் முதலியவற்றையும், சொல் இலக்கணம் பெயர், வினை, இடை, உரி, யாகிய சொற்களிள் இலக்கணங்களையும், பொருள் இலக்கணம், அகப் பொருள், புறப் பொருள் பற்றிய இலக்கணங்களையும், யாப்பு இலக்கணம், செய்யுளை எங்ஙனம் யாத்தல்

வேண்டும் என்பதைப் பற்றியும், அணி இலக்கணம் உவமை, உருவக முதலான அணிகளைப் பற்றியும் அறிவிக்கும்.

நன்னூல்: இஃது எழுத்திலக்கணம், சொல் இலக்கணம், இரண்டையும் தெளிவுறக் கூறும் நூல். இந்நூலில் உள்ள சிறப்புப் பாயிரத்தால், இதில் ஐந்திலக்கணமும் இருக்க வேண்டும் என்னும் குறிப்புள்ளது. இஃது "அரும் பொருள் ஐந்தையும் யாவரும் உணர" என்ற தொடரில் தெரிகிறது. ஆனல், பின்னைய மூன்று இலக்கணங்களும் காணப்படவில்லை. இடைக் காலத்தில் இது பலராலும் படிக்கப்பட்டு வந்ததாகத் தெரிகிறது. இது தன்மையால் பெயர் பெற்றமைக்கு உதாரணமாகக் கொடுக்கப்பட்டதன் மூலம், இதன் சிறப்பை அறியலாம். தொல்காப்பியத்தை நோக்க இது வழி நூலாகும். என்றாலும், இது தொல்காப்பியர் கருத்துக்கள் பலவற்றில் மாறுபட்டுச் செல்கிறது. 'உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே' என்று தொல்காப்பியம் கூற, நன்னூல், "மக்கள், தேவர், நரகர் உயர்திணை" என்கிறது.

இத்தகைய நூலை இயற்றியவர் பவணந்தி முனிவர். இவர் தொண்டை நாட்டுச் சன்மதி முனிவர் புதல்வர். கோலாரில் ஆட்சி புரிந்த சீயகங்கன் வேண்டுகோளுக் கிணங்கி இந் நூலைச் செய்தனர். அவன் காலம் கி. பி. 13 ஆம் நூற்றாண்டு. ஆக இவர் காலமும் கி. பி. 13 ஆம் நூற்றாண்டாகும். இவரைப் "பல் கலைக்குரிசில் பவணந்தி என்னும் நன்னூலாருக்கு எந்நூலாரும் இணையோ?" என்று புலவர்கள் போற்றி யுள்ளனர்.

இந் நூலுக்கு மயிலை நாதர் என்னும் சைனப் புலவரும், சங்கர நமச்சிவாயர் என்னும் சைவப் புலவரும், ராமானுஜ கவிராயர் என்னும் வைணவப் புலவரும் சிறந்த உரைகளை எழுதியுள்ளனர். சிவஞான முனிவர் சங்கர நமச்சிவாயர் உரையில் சில திருத்தங்கள் செய்து உரை வகுத்துள்ளனர். பின்னர் ஆறுமுக நாவலர், கிருஷ்ணமாச்சாரியர், நமச்சிவாய முதலியார், பவானந்தம் பிள்ளை போன்ரோரும் உரை எழுதி யுள்ளனர்.

மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்கள் இன்ன என்பதை,

"பன்னீர் உயிரும் கசதந பமவய
ஞஙஈர் ஐந்துயிர் மெய்யும் மொழிமுதல்"

என்னும் சூத்திரம் அறிவிக்கும்.

பன்னிரு படலம்: இது புறப்பொருள் பற்றிய இலக்கண நூல். இந்நூல் அகத்தியர் மாணவர்கள் பன்னிருவரால் இயற்றப்பட்டது. தொல்காப்பியர் அகம், புறம் என்று பிரித்த பாகுபாட்டினை இந்நூல் அகம், அகப்புறம், புறம், புறப்புறம் என்று கூறுகிறது. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய இயற்கை நிலங்களும், பாலையாகிய செயற்கை நிலமும் அகம் என்பதும், கைக்கிளை, பெருந்திணை அகப்புறம் என்பதும், வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை புறம் என்பதும், வாகை, காஞ்சி, பாடாண்திணை புறப்புறம் என்பதும் இந்நூலின் கொள்கை.

"வெட்சி நிரைகவர்தல் மீட்டல் கரந்தையாம்
வட்கார்மேல் செல்வது வஞ்சியாம்— உட்கா
தெதிர்ஊன்றல் காஞ்சி எயில்காத்தல் நொச்சி
அதுவளைத்தல் ஆகும் உழிஞை—அதிரப்
பொருவது தும்மையாம் போர்களத்து மிக்கோர்
செருவென் றதுவாகை யாம்."

பன்னிரு படலம்.

இறையனார் அகப்பொருள்: இஃது இறையனார் களவியல் என்றும் கூறப்பெறும். இஃது அகப்பொருள் பற்றிய இலக்கண நூல். ஒருமுறை பாண்டிய நாட்டில் பஞ்சம் தோன்ற, அதனால் பாண்டிய மன்னன் புலவர்களை வேற்றுத் தேயம் புகுந்து பிழைக்குமாறு செய்யப் பின் நாடு பஞ்சம் நீங்கிச் செழிப்புற்ற காலத்தில் புலவர்களைக் கூட்டியபோது, கூடிய புலவர்கட்கு எழுத்தும், சொல்லும் ஆகிய இவ்விரு இலக்கணப் புலமையே நிரம்ப இருத்தலைக் கண்டு பாண்டியன் வருத்தம் கொண்டனன். அவனது வருத்தம் நீங்க ஆலவாய் அவிர் சடைக்கடவுள் எழுதித் தந்த நூலே களவியல் ஆகும்.

இந்நூலுக்கு உரை காணச் சங்கப்புலவர் தொடங்கிய போது, உப்பூரி குடிகிழார் மகனார் உருத்திரசன்மரை வரவழைத்து அவர்முன் உரை கண்டனர். உருத்திரசன்மர்

ஊமையர். ஆகவே, வாயால் எவர் உரை சிறந்தது என்பதை உணர்த்த முடியாத நிலையில், மதுரை மருதன் இளநாகனுர் உரையினைக் கேட்டபோது, கண்ணீர் வார்ந்து மெய்ம் மயிர் பொடிப்ப நிறுத்தினுர். ஆனுல், கணக்காயனுர் மகனுர் நக்கீரர் உரை கூறும் போது, பதம்தோறும் சுவைத்துக் கண்ணீர் பொழிந்து மெய்ம்மயிர் சிலிர்த்துக் காட்டினுர். அது கொண்டு நக்கீரர் உரையே சிறந்தது என்பது உறுதிப் படுத்தப்பட்டது. நக்கீரர் வழிவந்த உரை தம் மகனுர் கீரங் கொற்றனுர் முதல், முசிறி ஆசிரியர் நீலகண்டனுர் வரை வந்து நின்று விட்டது.

இவ்வுரையில் முச்சங்க வரலாற்றை அறியலாம். தூய தமிழ் நடையில் இவ்வுரை உளது. படிக்கப் படிக்கச் சுவை தருவது. இந்நூலில் அறுபது நூற்பாக்கள் உள. இதில் கற்பொழுக்கமும் கூறப்பட்டிருப்பினும், களவொழுக்கமே மிகுதியும் கூறப்பட்டிருக்கிறது.

> *" அல்லகுறிப் படுதலும் அவ்வயின் உரித்தே*
> *அவன்வர வறியும் குறிப்பின் ஆன."*

புறப்பொருள் வெண்பா மாலை : இந்நூல் புறப்பொருளைப் பற்றியது. இந்நூலுக்கு முதல் நூல் பன்னிரு படலம். இந்நூல் புறப்பொருள் பற்றிய இலக்கணச் சூத்திரங்களையும், சூத்திரங்களுக்கு உதாரண வெண்பாக்களையும், அவ்வெண்பாக்களின் கருத்தை அறிவிக்கும் கொளுக்களையும் (கொளு-கருத்து) கொண்டு திகழ்வது. பன்னிரு படலங்களைக் கொண்டது. கைக்கிளைப் படலத்தில் உள்ள பாடல்கள் மருட்பாக்கள்.

ஒழிபியலில் உள்ள வெண்பாக்களுக்குக் கொளுக்கள் காணப்படவில்லை. புறப்பொருளை வெண்பாக்களினுல் விளக்கியதால் இது புறப்பொருள் வெண்பா மாலை எனப் பெயர் பெற்றது. இதனை வெண்பா மாலை என்றும் கூறுவர். இந்நூல் வழி பண்டைக் காலத்தில் அரசர்கள் மேற்கொண்ட போர்முறைகளைக் காணலாம். இதில் வரும் பன்னிரு படலங்கள் கீழ்வருவன.

வெட்சித் திணை : பகைவர்களின் பசுக்களைக் கவர-வெட்கி மலர் அணிந்து புறப்படுதலை அறிவிப்பது.

கரந்தைத் திணை: கவர்ந்த பசுக்களை மீட்கக் கரந்தை மலரை அணிந்து புறப்படுதலை உணர்த்துவது.

வஞ்சித் திணை: பகைவர் நாட்டைக் கொள்ள வஞ்சிப் பூவைச் சூடிப் புறப்படுதலைத் தெரிவிப்பது.

காஞ்சித் திணை: நாடு கொள்ள வந்த பகைவரை எதிர்க்கக் காஞ்சி மலர் சூடிப் புறப்படலைக் குறிப்பது.

நொச்சித் திணை: நொச்சி மலரைச் சூடித் தம் மதிலைக் காத்தலைக் கணிப்பது.

உழிஞைத் திணை: பகைவர்களுடைய மதிலை உழிஞை மலர் சூடி வளைத்தல் ஆகும்.

தும்பைத் திணை: தும்பை மலரைச் சூடிப் போர்புரிதல் ஆகும்.

வாகைத் திணை: பகைவரை வாகை சூடி வெல்லுதலைக் குறிக்கும்.

பாடாண் திணை: ஒருவனது புகழ், கல்வி, ஈகை, வன்மை, தண்ணளி முதலியவற்றை ஆய்ந்து கூறுதல் என்க. பாடப்படுவோனது ஒழுகலாற்றைக் கூறுதல் என்பதே இதன் பொருள்.

பொதுவியல்: புறத்திணைகளுள் கூறப்படாதனவற்றையும், பொதுவாய் உள்ளன பற்றியும் கூறும்பகுதி ஆகும். இதில் மூவேந்தர்களின் மாலைகள் இன்ன என்பதையும், கல் எடுப்பு முதலான செய்திகளும், நிலையாமை பற்றிய் உபதேசங்களும், உடன் கட்டை ஏறலும் முதலானவை கூறப்பட்டுள்ளன.

“அருஞ்சுரத்தும் அகல்கானத்தும்
வருந்தாமல் நிரைஉய்த்தன்று.”

இது கொளு,

“தாமரைமேல் வைகிய தையல்கொல் தாழ்தளிரில்
காமருவும் வானோர்கள் காதலிகொல்—தேமொழி
மைஅமர் உண்கண் மடந்தைகண்
ஐயம் ஒழியா தாழும்என் நெஞ்சே.”

இது மருட்பா.

கைக்கிளைத்திணை : கைக்கிளை என்பதன் பொருள் ஒரு மருங்கு பற்றிய கேண்மை என்பது. இதில் ஆண்பால் கூற்றும், பெண்பால் கூற்றும், அசுரம், இராக்கதம், பைசாசம் ஆகிய மணம் பற்றியும் கூறப்பெறும்.

பெருந்திணை : இது பொருந்தாக் காமம் பற்றிக் கூறப்படுவது. இது பிரம்மம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம் என்னும் மண முறைகளைப் பற்றியது.

பிரம்மம் : இது நாற்பத்தெட்டியாண்டு பிரமசரியம் காத்தாற்குப் பன்னிரண்டு ஆட்டைப் பிராயத்தாளை அணிகள் அணிந்து கொடுப்பது என்பது. இது தமிழில் அறநிலை எனப்படும்.

பிரசாபத்தியம் : இது மைத்துன கோத்திரத்தான் மகள் வேண்டிச் சென்றால் மறுது கொடுப்பது என்பது. இஃது ஒப்பு எனப்படும்.

ஆரிடம் : இது ஆவும் ஆனேறும் பொற்கோட்டுப் பொற்குளம்பினவாகச் செய்து அவற்றிடை நீர்வார்த்துக் கொடுப்பது என்பது. இது பொருள் எனப்படும்.

தெய்வம் : இது வேள்வி ஆசிரியர்க்கு வேள்வித் தீ முன் வைத்துக் கொடுப்பது என்பது.

இப்பன்னிரு படலங்களே அன்றி, ஒழிபு என்னும் படலமும் இதில் உண்டு. இதில் வணிகர், உழவர், இயல்புகள், ஆடல் பாடல் வென்றிகள், முதலியன கூறப்பட்டுள்ளன.

இந்நூலை எழுதியவர் சேரர் பரம்பரையினைச் சார்ந்த ஐயனாரிதனார் ஆவார். இவர் சைவ சமயத்தவர். இவரது காலம் கி. பி. 8 ஆம் நூற்றாண்டு. இந்நூலுக்கு உரை கண்டவர் சாமுண்டிதேவநாயனார் ஆவர். புறப்பொருள் வெண்பா மாலை நூலைத் தழுவி என்றால் எழுதப்பட்ட தமிழர் போர்முறை என்னும் நூலைப் பயின்றால், இந்நூலின் பொருள் அமைதியினை நன்கு தெரிந்து கொள்ளலாம்.

அகப்பொருள் விளக்கம் : இஃது அகப்பொருள் தழுவியது. இதனை நம்பி அகப்பொருள் என்றும் கூறுவர்

இதன்கண், அகத்திணை இயல், புறத்திணை இயல், களவியல், வரைவியல், ஒழிபியல் என ஐந்து பிரிவுகள் உள. இதில் உள்ள ஐந்திணைகளில் கருப்பொருள்கள் இன்னின்ன எனக் கூறும் பகுதிகள் பூகோளப் பாடத்தை நன்கு நமக்கு நினைவூட்டும் நிலையில் இருக்கும். இந்நூலுக்கு உதாரணச் செய்யுட்களாகப் பொய்யாமொழிப் புலவர் இயற்றிய தஞ்சை வாணன் கோவைச் செய்யுட்கள் காட்டப்பட்டுள்ளன. இந் நூலை எழுதியவர் நாற்கவி ராசநம்பி என்பவர். இவர் சைன சமயத்தவர். பிறப்பிடம் தொண்டை நாட்டுப் புளியங்குடி என்பது. இவர் தந்தையார் உய்யவந்தார் என்பவர். இவர் குலசேகர பாண்டியன் காலத்தவர். அதாவது கி. பி. 12 ஆம் நூற்றாண்டு. சிறு பொழுதுகள் இன்ன என்பதை இந்நூல்,

"மாலை யாமம் வைகறை எற்படு
காலை வெங்கதிர் காயுநண் பகல்எனக்
கைவகைச் சிறுபொழு தைவகைத் தாகும்."

என்கிறது.

யாப்பருங்கலம்: இதனை யாப்பருங்கலவிருத்தி என்றும் கூறுவர். இது சூத்திர யாப்பால் அமைந்தது. இவ் யாப்பு இலக்கண நூலில் சந்தம், தாண்டகம் முதலான பாடல்களுக்குரிய இலக்கணங்களைக் காணலாம், இதற்குச் சைவர் ஒருவர் உரை எழுதினர் என்று அறிஞர் கருதுகின்றனர்.

இந்நூலாசிரியரைப் பற்றிக் கருத்து வேற்றுமையுண்டு. இதனை அமித சாகரர் எழுதினர் என்பர் ஒரு சிலர். குணசாகரர் எழுதினர் என்பர் மற்றொரு சாரார். இருவரும் சைன சமயத்தவர்களே. அமிதசாகரர் திருவாரூருக்கடுத்த தீபம் குடியைச் சார்ந்தவர். குலோத்துங்க கல்வெட்டைக் கொண்டு இவரது காலம் 11 ஆம் நூற்றாண்டு எனலாம்.

யாப்பருங்கலக்காரிகை: இந்நூலை இயற்றியவரும் அமிதசாகரரே. இது கட்டளைக் கலித்துறைப் பாடல்களால் ஆனது. செய்யுள் இலக்கணம் பயில்வார்க்குப் பெரிதும் பயன் பட்டுவருகிறது. இவ்வளவு சிறந்த நூலைப் பற்றி "காரிகை கற்றுக் கவிபாடுவதிலும், பேரிகை கொட்டிப்

பிழைப்பது நன்று' என்ற பழமொழி எழுந்திருப்பது ஏன் என்பது புலனாக வில்லை. இதற்கு உரை கண்டவர் குணசாகரர்.''

''கடைஅயல் பாதமுச் சீர்வரின் நேர்இசை காமருசீர்
இடைபல குன்றின் இணைக்குறள் எல்லா அடியும்ஒத்து
நடைபெறு மாயின் நிலைமண்டலம் நடு ஆதிஅந்தத்
தடைதரு பாதத் தகவல் அடிமறி மண்டலமே.''

என்பது அகவல்பாவின் வகையைக் கூறுவது.

வெண்பாப் பாட்டியல்: இதில் மொழி இயல், செய்யுள் இயல், பொதுவியல் என மூன்று பிரிவுகள் உள. இதில் செய்யுளைப்பாடும் போது அமைய வேண்டிய மங்கல எழுத்து, சொல் முதலான பொருத்தங்களும் 96 வகைப் பிரபந்த இலக்கணங்களும் கூறப்பட்டுள்ளன. இந்நூலாசிரியர் குணவீர பண்டிதர். காலம் 12 ஆம் நூற்றாண்டு. இவரது ஆசிரியர் வச்சணந்தி முனிவர்: இவர் பெயரால் குறிப்பிட்ட வெண்பாப் பாட்டியல் வச்சணந்தி மாலை எனப்படுகிறது.

நேமி நாதம்: இது வெண்பாவால் அமைந்த இலக்கண நூல். இதில் எழுத்தும், சொல்லும் பற்றிய இலக்கணம் கூறப்பட்டுள்ளது. இதனைச் சின்னூல் என்றும் கூறுவர். இதனை இயற்றியவர் குணவீர பண்டிதர். நேமி நாத அடிகள் என்றும் இவரைக் கூறுவர். இவர் தொண்டை நாட்டுக் களந்தை என்னும் ஊரில் பிறந்தவர். இரண்டாம் குலோத்துங்க மன்னன் காலமான 12 ஆம் நூற்றாண்டினர். தமிழ் எழுத்து முப்பத்தொன்று என்பதை இந்நூல்.

''ஆவி அகரமுதல் ஆறிரண்டாம் ஆய்தம்இடை
மேவும் ககரமுதல் மெய்களா—மூவாறும்
கண்ணும் முறைமையால் காட்டியமும் பத்தொன்று
நண்ணுமுதல் வைப்பாகும் நன்கு''

என்று காட்டுகிறது.

தண்டி அலங்காரம்: இது தண்டி என்னும் வடமொழி ஆசிரியரால் இயற்றப்பட்டது. இது வடமொழி காவிய தர்சம் என்னும் நூலை ஒட்டியது. இந் நூலில் பொது வியல், பொருளணி இயல், சொல்லணி இயல், என்ற முப்

பிரிவுகள் உள. இந்நூல் சூத்திரப் பாவால் அமைந்தது. இதற்கு உரை கண்டவரும் உதாரணச் செய்யுட்களைப் பாடியவரும் இவரே என்பர். உதாரணப் பாடல்களில் அநபாயன் சிறப்பே காணப்படுகிறது. இதனால் இவர் அவன் காலத்தவர் போலும்! மேலும், அவனால் ஆதரிக்கப் பெற்றவர் போலும்! ஆக இவர் கி. பி. 12 ஆம் நூற்றுண்டினர். இந்நூலாசிரியர் காஞ்சிபுர வாசியாவர். இவர் அம்பிகாபதியின் மகனார் என்றும் கூறுவர். அதனை ஏற்றற்கு இல்லை. இவர் வட நூல் புலவராக இருந்தும், இவருக்கு இருந்த தமிழ்ப் பற்று எத்தன்மைத்து என்பதனை,

"ஓங்க லிடைவந்து உயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலி நீர்ஞாலத் திருள்அகற்றும் - ஆங்காற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிர்ஒன் றேனையது
தன்னேரி லாத தமிழ்."

இவர் பாடிய வெண்பாவினால் அறியலாம்.

இந்நூலில் சிறு காப்பியம், பெருங் காப்பிய இலக்கணங்களையும், செய்யுளில் வரக்கூடாத வழுக்களையும், உவமை உருவகம், முதலான முப்பத்தைந்து வகை அணிகளையும், அவற்றின் பிரிவுகளையும் காணலாம். முத்தகச் செய்யுள், குளகச் செய்யுள் எங்ஙனம் வரும் என்பதை,

"முத்தகச் செய்யுள் தனிநின்று முடியும்
குளகம் பலபாட் டொருவினை கொள்ளும்"

என்று இந்நூல் கூறுகிறது.

வீர சோழியம்: இங் நூல் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய ஐந்தின் இலக்கணங்களையும் உணர்த்தும் இலக்கண நூல். இங் நூல் வடநூல் மரபை ஒட்டிய இலக்கணங்களையும் கூறுகிறது. தொல்காப்பியத்திற்குப் பின் ஐந்திலக்கணம் கூறும் சிறு நூல் இதுவே ஆகும், கந்த புராணத்தில் வரும் 'திகட சக்கரம்' என்னும் தொடர் திகழ் + தச + கரம் + என்று பிரிக்கப்படுதற்குரிய இலக்கணம் இவ்வீரசோழியத்தில் இருந்துதான் எடுத்துக் காட்டப்பட்டது என்று கூறப்பட்டு வருகிறது.

இந்நூலை எழுதியவர் புத்தமித்திரர் என்பவர். புத்தப் பெருமானிடம் அன்பு பூண்டவர். மாபொன் பற்று என்னும்

ஊரினர். இது வீர சோழன் என்னும் மன்னன் பெயரால் இயற்றப்பட்டமையின், இப்பெயர் பெற்றது. இம்மன்னனால் இவர் ஆதரிக்கப்பட்டவர். இந் நூலுக்குப் பெருந்தேவனார் உரை எழுதியுள்ளனர். இவர் பாரதம் பாடிய பெருந் தேவனாரினும் வேறுவார். வீர சோழியம் காலம் கி. பி. 11 ஆம் நூற்றாண்டு.

இலக்கண விளக்கம்: இந் நூல் எழுத்து, சொல், பொருள் என்னும் மூன்று அதிகாரங்களைக் கொண்டு திகழ்வது. பொருளதிகாரம் அகத்திணை இயல், புறத்திணை இயல், அணியியல், செய்யுள் இயல், பாட்டியல் என்ற ஐந்தியல்களைக் கொண்டு விளங்குகிறது. ஐந்து இலக்கணங்களும் அமைந்த நூல் இது. இதன்கண் பெரிதும் தொல்காப்பியச் சூத்திரங்கள், நன்னூல் சூத்திரங்கள், புறப்பொருள் வெண்பா மாலை, நம்பி அகப் பொருள், தண்டி யலங்காரம், யாப்பருங் கலம், வெண்பாப் பாட்டியல் இவற்றில் கூறப்பட்ட இலக்கண விதிகள் அப் படியே திகழ்கின்றன. இவற்றுடன் இந் நூலாசிரியர் செய்த சூத்திரங்களும் இடையிடையே உண்டு. ஆகவே, இது பழைய இலக்கண நூல் திரட்டு எனக் கூறப்படும் தகுதி வாய்ந்தது. இதனைக்குட்டித் தொல்காப்பியம் என்றும் கூறுவர். இதன்கண் நன்னூல், தண்டி யலங்காரம் இவற்றில் உள்ள இலக்கணங்கள் சிலவற்றைத் தள்ளப் பட்டிருப்பதைக் காணலாம். இந்நூலுக்கு இந்நூலாசிரியரே உரை எழுதியுள்ளனர்.

இந்நூலை இயற்றியவர் வைத்திய நாத தேசிகர்; திரு வாரூர் சைவ வேளாள மரபினர். இவரை அகோர முனிவர் என்பார் ஆதரித்தனர். அவரே ஆசிரியராகவும் அமைந்தனர். தேசிகர் வடமொழி தென்மொழிகளில் நல்ல புலமை வாய்ந்தவர்.

தேசிகர் திருமலை நாய்க்கர் காரியத்தர் திருவேங்கட நாதையர் மக்களுக்கு இலக்கணம் கற்பிக்கையில், நன் னூல் கருத்துக்களைத் திருத்திப் பாடம் கற்பித்தார். அதுவே இவ்விலக்கணம் விளக்கமாக அமையக் காரணம் என்பர். இவர் சிவஞான பாலைய சுவாமிகள் மீது பாசவதைப் பரணி என்னும் நூலையும், திருமயிலம் முருகப்பெருமான் மீது

பிள்ளைத் தமிழும் பாடினர். திருவாரூரில் இருந்தபோது திருவாரூர்ப் பன்மணிமாலை, கமலாலய அம்மன் பிள்ளைத் தமிழையும், வாட்போக்கிப் புராணம், நல்லூர்ப் புராணம் என்ற நூல்களையும் பாடியுள்ளனர். இவர் பாடம் சொல்வதில் வல்லவர்.

இவரது மாணுக்கர் படிக்காசுப் புலவரும், குடந்தைப் புராணம் பாடிய சொக்கப் புலவரும் ஆவர். இலக்கணக் கொத்துச் சுவாமிநாத தேசிகர், அந்தகக் கவி வீரராகவ முதலியார் போன்ருேர் இவரைப் பெரிதும் பாராட்டிப் பேசியுள்ளனர்.

இந்நூலாசிரியர் காலம் கி. பி. 17 ஆம் நூற்ருண்டு. இவரை வைத்திய நாத நாவலர் என்றும் கூறுவர்.

ஆசு கவி பாடும் முறையை.

"எழுத்துச் சொற்பொருள் அணியாப் பிவையின்
விழுத்தக ஒருவன் விளம்பிய உள்ளுறை
அப்பொழு துரைப்பது ஆசு கவியே."

என்று கூறுகிறது.

இலக்கணக் கொத்து: இது தொல்காப்பிய இலக்கண நூலில் அருகிக்கிடந்த இலக்கண விதிகளையும், வடமொழி இலக்கண வழக்கையும் தழுவி எழுதப்பட்ட இலக்கண நூலாகும். இதன்கண் வேற்றுமை இயல், வினையியல், ஒழிபியல் என முப்பிரிவுகள் உள. இம்முப் பிரிவினுல் இது சொல் இலக்கண நுட்பங்களைத் தெள்ளிதில் உணர்த்தும் ஒரு சிறந்த நூல்.

இந்நூலை இயற்றியவர் சுவாமிநாத தேசிகர். இவர் கல்லாடத்திற்கு உரை எழுதிய மயிலேறும் பிள்ளையிடம் தமிழ் இலக்கண இலக்கியங்களையும், செப்பறை கனக சபாபதி சிவாசாரியாரிடம் வடநூல்களையும் பயின்றவர். திருவாவடுதுறை ஞான தேசிகராம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிகரிடம் ஞான நூல்களை உணர்ந்து ஈசான தேசிகர் என்னும் தீட்சா நாமம் பெற்றவர். இவரது தலைசிறந்த மாணவர் நன்னூலுக்கு விருத்தி உரைகண்ட சங்கர நமச்சிவாயப் புலவர் ஆவார்.

சுவாமிநாத தேசிகர் "தசகாரியம், திருச்செந்தில் கலம்பகம், நீதிசதகம், சிருங்காரசதகம், வைராக்கிய

சதகம், சிவ ஞானபோதச் சூர்ணிக் கொத்து முதலான நூல்களைச் செய்தவர். இவர் இத்துணைத் தமிழ் நூல்களைச் செய்தும், இவருக்கு இருந்த வடமொழிப் பற்றால் "ஐந் தெழுத் தால்ஒரு பாடை யறையவே நாணுவர்" என்று கூறியிருப்பது தமிழர்கட்கு துன்பம் தருவதாக உள்ளது. இவர் காலம் கி. பி. 17 ஆம் நூற்றாண்டு. இவர் எட்டாம் வேற்றுமைக்கு இலக்கணம் கூறுகையில்,

"அழைத்தல் என்றுஒன்று அன்றிவே றின்மையின்
விளிக்குச் சூத்திரம் விளம்பிலம் என்க."

என்றனர்.

பிரயோக விவேகம்: இந்நூல் வடமொழியில் உள்ள சத்த சாத்திரத்தைத் தழுவியது. இதில் தாரகபடலம், சமரச படலம், தத்தித படலம், திங்ஙுவுப் படலம் என நான்கு பிரிவுகள் உள. இந்நான்கு பிரிவுகளின் மூலம் வடமொழிக்கும், தென் மொழிக்கும் உள்ள இலக்கண ஒற்றுமையைக் கூறும் முறையில் இந்நூல் அமைந்துள்ளது. இது வடமொழி வல்லார் தென்மொழி இலக்கணம் அறிதற்கும், தென்மொழி வல்லார் வடமொழி இலக்கணம் அறிதற்கும் துணையாய் உள்ள நூல். இது கட்டளைக் கலித்துறையால் அமைந்தது. இதன் ஆசிரியர் சுப்பிரமணிய தீட்சிதர். இவர் திருக்குருகூரில் பிறந்து ஆழ்வார் திருநகரியில் வாழ்ந்தவர். காலம் கி. பி. 17 ஆம் நூற்றாண்டு. இந்நூல் எழுவாய் வேற்றுமை இலக்கணத்தை "தேற்றும் தமிழுக்கு எழுவாய் வியத்தி (ரூப பேதம் இல்லாமல்) திரிபில் பெயர்" என்று கூறுகிறது.

பண்டைக் காலத்தில் இலக்கண விதிகள் நூற்பா யாப்பால் (அதாவது சூத்திர வடிவில்) கூறப்பட்டன. ஆனால், பிற்காலத்தில் வெண்பா, கட்டளைக் கலித்துறை, விருத்தம் ஆகியவற்றிலும் யாக்கப்பட்டன என்பதையும் ஈண்டு உளத்தில் கொள்ள வேண்டும். சூத்திரம் என்பது யாது என்பதை,

"மேல்கிளந் தெடுத்த யாப்பினுள் பொருளொடு
சில்வகை எழுத்தின் செய்யுட் டாகிச்
சொல்லும் காலை உரைஅகத் தடக்கி
நுண்மையொடு புணர்ந்த உண்மைத் தாகித்

துளக்க லாகாத் துணைமை எய்தி
அளக்க லாகா அரும்பொருட் டாகிப்
பலவகை யானும் பயன்தெரி புடையது
சூத்திரத் தியல்பென யாத்தனர் புலவர்."

என்று தொல்காப்பியம் கூறுகிறது.

நிகண்டுகள்

தமிழ் மொழியினைக் கற்பார்க்கு இலக்கணம் எவ்வளவு இன்றியமையாததோ, அவ்வளவு இன்றியமையாதது நிகண்டும் ஆகும். இவை தமிழ் கற்பார்க்குக் கருவி நூல் என்க.

நிகண்டு நூல்கள் பல தமிழ் மொழியில் உண்டு. நிகண்டு நூல்களே தமிழ் மொழியில் உள்ள சொற்களின் பொருளையும், தொடர்களின் பொருள்களையும் நன்கு விளக்க வல்லன. ஆனால், தொல்காப்பியத்தில் உள்ள உரியியல் பல சொற்களின் பொருள்களைத் தெரிவித்து நிற்கிறது. பண்டைக் காலத்தில் தமிழ் பயில்வோர் முதற் கண் நிகண்டு நூற்களில் உள்ளனவற்றை மனனம் செய்து விட வேண்டும். இதற்காகவே நிகண்டு நூற்கள் செய்யுள் வடிவிலும், சூத்திர அமைப்பிலும் அமைக்கப்பட்டன. ஆனால், இக்காலத்தில் இந்நிகண்டில் உள்ளனவற்றை அகர வரிசைப் படுத்தப்பட்டு அகராதி என்ற பெயரால் பல வெளிவரலாயின. இந்நிலையினை முதல் முதல் அமைத்துக்காட்டியவர்கள் தமிழ் அறிந்த மேற்கு நாட்டவர் ஆவர். இனித் தமிழில் உள்ள நிகண்டுகளைக் காண்போம்.

திவாகரம்: இது சேந்தன் என்னும் அரசன் வேண்டு-கோளால் இயற்றப்பட்டமையின், சேந்தன் திவாகரம் என்றும் கூறப்பெறும். இதில் பத்துத் தொகுதிகள் உள்ளன. 2,250 நூற்பாக்கள் இருக்கின்றன. இதனை இயற்றியவர் திவாகர முனிவர். அம்பர் என்னும் ஊரில் வாழ்ந்தவர். காலம் கி. பி. 8 ஆம் நூற்றுண்டு.

பிங்கலம்: இதனைப் பிங்கல நிகண்டு என்பர். காரணம் பிங்கல முனிவர் இயற்றியதனுல் என்க. இவர் திவாகர முனிவர் மகனுர்.

இது "திவாகரன் பயற்ற பிங்கல முனிவன்" என்ற தொடரால் விளங்குகிறது. ஆனல், ஒரு சிலர் திவாகரருக்குப் பின்னுல் பல ஆண்டுகள் கழிந்த பின் இஃது இயற்றப் பட்டதென்று உட்கொண்டு இதனைப் பதினேராம் நூற்றுண்டு என்பர்.

சூடாமணி நிகண்டு: இதனை இயற்றியவர் மண்டல புருடர். இவரை வீர மண்டல புருடர் என்றும் கூறுவர். இவரது ஆசிரியர் மகாபுராணம் பாடிய குணபத்திர முனிவர் ஆவார். குணபத்திரன் காலத்தில் அரசாண்டவன் அகால வருஷன் என்பவன். அவன் காலம் கி. பி. 874 முதல் 914 வரையாகும். ஆகவே, மண்டல புருடர் காலம் 10 ஆம் நூற்றுண்டென்பர்.

சூடாமணி நிகண்டின் பாயிரத்தில் கிருஷ்ண தேவன் காலத்தில் இயற்றப்பட்டதென்ற குறிப்புக் காணப்படுதலின், இந் நிகண்டின் காலம் கிருஷ்ண தேவராயன் காலமான கி. பி. 16 ஆம் நூற்றுண்டு என்று கூறுவாறும் உளர்.

களத்தூர் வேதகிரி முதலியார் சூடாமணியின் பதினேராம் நிகண்டினைப் புதுக்கி 600 செய்யுட்களில் ஒரு தனி நூல் செய்தார் என்றும், உரையும் எழுதினர் என்றும் திரு. வையாபுரி பிள்ளை கூறியுள்ளனர்.

உரிச்சொல் நிகண்டு: இது வெண்பாவால் அமைந்தது. இதனை இயற்றியவர் காங்கேயர். தொண்டை மண்டலத்தைச் சார்ந்த செங்குந்த மரபினர். காலம் 17 ஆம் நூற்றுண்டு. இதில் சலாம் என்னும் சொல் காணப்படுகிறது.

கயாதர நிகண்டு: இது கயாதர முனிவரால் இயற்றப்பட்டது. இது கட்டளைக் கலித்துறையால் அமைந்தது. இந்நூலாசிரியர் இராமேசுவரத்தில் வாழ்ந்தவர். இவர் பிராம்மண வகுப்பினர். இதனைக் கெயாதரம் என்றும் கூறுவர். இந்நூல் அந்தாதித் தொடையால் ஆனது. காலம் கி. பி. 17 ஆம் நூற்றுண்டு.

பாரதி தீபம்: இது திரு. வேங்கட பாரதி என்பவரால் இயற்றப்பட்டது. இவர் தென்கடம்பை ஊரினர். இதுவும்

கட்டளைக் கலித்துறையால் அமைந்தது. இந்நூலில் உள்ள செய்யுட்களின் பெயர்கள் பெரிதும் அடைமொழி கொடாமல் அமைந்திருப்பது கவனித்தற்குரியது. காலம் கி. பி. 18 ஆம் நூற்றுண்டு.

ஆசிரிய நிகண்டு: இஃது எளிய நடையில் அமைந்து உள்ளது. ஆசிரிய விருத்தத்தால் ஆனது. இதனைத் தொண்டை நாட்டு ஊற்றங்கால் ஆண்டிப்புலவர் இயற்றி-யுள்ளார். இவரது தந்தையார் பாவாடை வாத்தியார். சங்க-றுக்கும் மரபினர். இவரது ஆசிரியர் ஞானப்பிரகாசர். இவர்க்கு நக்கீரர் என்ற பெயரும் உண்டு. காலம் கி. பி. 17 ஆம் நூற்றுண்டு.

அகராதி நிகண்டு: இது சிதம்பர இரேவண சித்தரால் இயற்றப்பட்டது. இஃது அகராதி முறையில் அமைந்த நிகண்டு நூல். இங்கு அகராதி முறை என்றது, மொழிக்கு முதலாகும் எழுத்துக்களின் முறைப்படி அமைந்த முறை-யாகும். இந்நூலாசிரியர் பேரளத்தில் பிறந்தவர். சிதம்-பரத்தில் வாழ்ந்தவர். வேளாள மரபினர். இவர் சிவஞான தீபம், பட்டீச்சர புராணம், திருவலஞ்சுழிப் புராணம் திரு-மேற்றளிப் புராணம் முதலான நூல்களையும் இயற்றியவர். காலம் 16 ஆம் நூற்றுண்டு. இவர் கோடம்பாக்கத்தில் உள்ள புலியூரில் வாழ்ந்தார் எனவும் கூறுவர்.

கைலாச நிகண்டு: இதன் ஆசிரியர் யாவர் என அறி-தற்கு இல்லை. ஆனல், கைலாசம் என்ற பெயரினராக இருக்கலாம் என யூகிக்கப்படுகிறது. இவர் சைவராக இருக்க வேண்டும் என்பதையும் உணரக் கிடக்கிறது. காலம் 300 வருடங்களுக்கு முற்பட்டது. இந்நிகண்டு. சூத்திர யாப்பால் அமைந்தது.

பொதிகை நிகண்டு: இது சூத்திரத்தால் ஆன நிகண்டு. இதனை இயற்றியவர் சாமிநாத கவிராயர். கல்-லிடை நகரினர். காலம் 19 ஆம் நூற்றுண்டு.

இந்நிகண்டுகளே அன்றிப் பொதிய நிகண்டு, ஔவை நிகண்டு, அரும்பொருள் விளக்க நிகண்டு, நானார்த்த தீபிகை, சிந்தாமணி நிகண்டு, விரிவு நிகண்டு முதலான நிகண்டுகள் இருந்தனவாக அறிகிறேம்.

கீழ் வருவன நிகண்டுகள் எவ்வாறு அமைந்துள்ளன என்பனவற்றிற்கு உதாரணமாகும்.

"மேற்குப் பச்சிமம் குடக்கிவை மேற்கே" என்பது, மேற்குத் திசைக்குரிய பெயர் இன்ன என்பதை அறிவிப்பது. இது பிங்கல நிகண்டு.

"பகவனே ஈசன் மாயோன் பங்கயன் சினனே புத்தன்
பகலேநாள் ஒருமு கூர்த்தம் பகலவன் நடுவே தேசு
மகரமே சுருப்பூங் தாதாம் வசிகூர்மை வசியம் வாளே
அகம்மனம் மனையே பாவம் அகலிடம் உள்ளும் ஆமே."

என்பது சூடாமணி நிகண்டு. இப்பாட்டுப் பகவன், பகல், மகரம், அகம் ஆகியவற்றிற்குரிய பொருளை விளக்கிக் காட்டுகிறது.

கம்பரது காவியம்

தமிழ் நாட்டில் இடைக்காலத்தில் சிறந்து விளங்கிய புலவர்களுள் ஒருவர் கம்பர். இவரது வரலாறு பலவாறு கூறப்படும். இவர் பிறந்த ஊர் திருவழுந்தூர் என்று சோழமண்டல சதகமும், தமிழ் நாவலர் சரிதமும் கூறுகின்றன. இவரது தந்தையார் உவச்சர் குலத்தைச் சார்ந்த ஆதித்தர் என்பார். உவச்சர் ஆவார் மாரி அம்மன் கோவில் பூசாரிகள். இவரது பெயரைப் பற்றியும் பல கருத்துக்கள் உண்டு. கம்பங் கொல்லையைக் காத்திருந்தமையின் கம்பர் என்றும், கையில் கம்பு கொண்டு இருந்தமையின் கம்பர் என்றும், கம்ப நாடு இவர்க்கு உரிமையாக இருந்த காரணத்தால் கம்ப நாடர் என்றும் கூறப்பட்டதாகக் கூறுவர். இவரது பெற்றோர்கள் இவருக்கு ஏகாம்பர நாதரது பெயராகிய கம்பர் என்ற பெயரைச் சூட்டியதாகவும் கூறப் படுகிறது. காஞ்சி ஏகாம்பரநாதர் கம்பன் என்று அழைக்கப்பட்டதை "கம்பன் எம்மானை" என்று சுந்தரர் பாடலால் அறியலாம்.

இவர் சடையப்ப வள்ளலால் ஆதரிக்கப்பட்ட காரணத்தால், கல்வி கேள்விகளில் சிறந்து, சோழனது அவைப் புலவராக இருந்தவர். ஒட்டக்கூத்தரும் அச்சபைப் புலவரே. சோழ மன்னன் இவ்விரு புலவர்களையும் இராமாயணத்தைத்

தமிழில் பாடும்படி கேட்டனன். ஒட்டக்கூத்தர் உடனே பாடத் தொடங்கிச் சின்னாட்களில் முடித்து விட்டனர். ஆனால், கம்பர் ஒரு பாடலையும் பாடாதிருந்தனர். இங்கிலையில் சோழன் இருவரும் ஒருங்கிருந்த நிலையில் "இராமாயணம் எங்நிலையில் உளது?" என்று கேட்டபோது ஒட்டக்கூத்தர், தாம் பாடி முடித்து விட்டதாக் கூறினர். கம்பர் தாம் ஒரு பாடலும் பாடாதிருந்தும் சமத்காரமாகத் தாம் யுத்த காண்டத்தில் கடல் அணைப்படலம் வரையில் பாடி விட்டதாகக்கூறி, அப்பாடல்களில் ஒன்றாகக்,

"குமுதன் இட்ட குலவரை கூத்தரில்
திமித மிட்டுத் திரியும் திரைகடல்
துமிதம் ஊர்ப்புக வானவர் துள்ளினர்
அமுதம் இன்றும் எழும்எனும் ஆசையால்."

என்ற பாடலைப் பாடிக் காட்டினர். இதன் பொருளைச் சுவைத்த யாவரும் கம்பரை வியந்தனர்.

ஒட்டக்கூத்தர் கம்பரது பாடலின் சுவையினை உணர்ந்து, தம் கவி கம்பர் கவிமுன் சிறக்காது என்று தாம் பாடிய பாடல்களைக் காவிரியாற்றில் கிழித்து எறியத் தொடங்கினர். கம்பர் அதனைக் கண்டு அவர் கையைப் பிடித்துக் கொண்டு, "இஃது என்ன? இவ்வாறு செய்து விட்டீர்களே! உண்மையில் நான் அவையில் கூறிய ஒரு பாட்டைத் தவிர, வேறு ஒரு பாட்டையும் இன்னமும் பாடவில்லையே" என்று அறிவித்துக் கிழிக்கப்படாமல் எஞ்சி இருந்த உத்தர காண்டத்தினை அவரிட மிருந்து பெற்று ஏனைய ஆறு காண்டங்களாகிய பாலகாண்டம், அயோத்தியா காண்டம், ஆரண்ய காண்டம், கிட்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டங்களை விரைவில் பாடி அவற்றோடு ஒட்டக்கூத்தர் பாடிய உத்தர காண்டத்தை ஏழாவது காண்டமாக இணைத்து இராமாயணத்தைப் பாடி முடித்தனர். கம்பரது பாடல்கள் மட்டும் 10,500 விருத்தப்பாவாகும்.

கம்பர் தாம் பாடிய இராமாயணத்தை அரங்கேற்றத் திருவரங்கம் சென்றபோது, அரங்கர் "நந்தம் சடகோபனைப் பாடினையோ" என்று வினவியபோது சடகோபர் அந்தாதியினைப்பாடினர். இந்நூலே அன்றிக் கலைமகள் மீது சரஸ்வதி அந்தாதியினையும் பாடியுள்ளனர். இவர் சடையப்ப

வள்ளலால் ஆதரிக்கப்பட்ட காரணத்தால், அவர் வேளாளர் ஆதலால், வேளாளர் மாண்பை உணர்த்த ஏர் எழுபது, திருக்கை வழக்கம் என்னும் இரு நூல்களையும் இயற்றி யுள்ளனர். சிலை எழுபது என்பதும் இவர் பாடிய நூல் என்பர். வில்லின் மாண்பைக் கூறுவது இது.

கம்பருடைய பெருமை குறித்து வழங்கும் தொடர்கள், "கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவி பாடும்" என்பதும், "கல்வியில் பெரியவன் கம்பன்" என்பதும், "விருத்த-மெனும் ஒண்பாவிற்கு உயர் கம்பன்" என்பதும் ஆகும். கம்பனது கவிகளின் சிறப்பை, "கம்ப நாடன் கவிதையைப்-போல் கற்றோர்க்கு இதயம் களியாதே" என்ற தொடரால் தெளியலாம்.

கம்பர் உவச்சர் மரபினர் என்பதால், உவச்சர்கள் பெரிதும் சைவமரபினர் ஆதலால், இவர் சைவமரபினராக இருக்கவேண்டும் என்று கொள்ளலாம். இவரது பெயரும் கம்பர் என்ற பெயராக இருப்பதும், இவரது திருமகனாரது பெயரும் அம்பிகாபதி என்று வழங்கப்படுதலும் இதற்குச் சான்றாகக் காட்டலாம். மேலும், தமது நூலில் சிவபெரு-மானைக் குறித்துப் பேசும் இடங்களில் மிக உயர்த்தியே புகழ்ந்து பேசியுள்ளார். "பெருமையால் எய்தற் கருமை-யால் ஈசனை ஒக்கும்" என்றும் "ஈறிலான் இருந்த குன்றம்" என்றும், "கண்ணுதற்கன்றி வேறு அரிது" என்றும் பலவாறு பாடுதல் கொண்டு உணரலாம். என்றாலும், இவர் வைணவப் பற்றில் சிறிதேனும் குறைந்தவர் அல்லர்.

திருமாலின் திருநாமமாகிய ஓம் நமோ நாராயணாய என்பதன் பெருமையினைக் கூற வந்த இடத்து, "நின்ற பேர் இருளை நீக்கி நீள் நெறி சென்று மீளாக் குறி சேரச்சேர்த்தி-டும் தன் திருநாமம்" என்றும், இராம நாமச் சிறப்பைக் கூறும்போது,

> "*மும்மைசால் உலகுக் கெல்லாம் மூலமந் திரத்தை முற்றும்*
> *தம்மையே தமர்க்கு நல்கும் தனிப்பெரும் பதத்தைத் தானே*
> *இம்மையே எழுமை நோய்க்கும் மருந்தினை இராமன் என்னும்*
> *செம்மைசேர் நாமம்.*"

என்று வாயார, உளமாரப் பாடி இருத்தலைக் காண்க.

கம்பர் தம்மை ஆதரித்த சடையப்ப வள்ளலாரைத் தமது நூலில் பத்து இடங்களில் சிறப்பித்துக் கூறி யுள்ள-னர். "மன்னவர் வறுமை நோய்க்கு மருந்தன சடையன் வெண்ணை அண்ணல்" என்றும், "வெண்ணைச் சடையன் தன் புகழ் போல் எங்கும் பரந்துளது" என்றும், "சடையன் வெண்ணையில் தஞ்சம் என்றோர்களைத் தாங்கும் தன்மை போல்" என்றும் "வெண்ணை வாழ் சடையன் வண்மை மரபுளோர்" என்றும், "அருள் வெண்ணைச் சடையன் வாழி" என்றும் கூறியனவற்றைக் காண்க. இதனால் இவரது செய்ந்நன்றி அறிதலாகிய பண்பு நன்கு புலனாகிறது.

இவர் இராமாயணத்தைப் பாடியதன் காரணம் சோழன் கேட்டனன் என்பதற்காக என்பது ஒரு புறமிருக்க, இவரே தம் வாக்கில், "ஆசைபற்றி அறையலுற்றேன் மற்றிக் காசில் கொற்றத்து இராமன் கதை அரோ" என்று கூறி-யுள்ளமையின், அவாவே இவரை இராமாயணம் பாடும்படி செய்தது என்பது புலனாகிறது.

கம்பரது காலம் சேக்கிழாரது காலத்துக்குப் பிந்தியது என்பது வரலாற்று அறிஞர்களது துணிபு. அதாவது இரண்டாம் இராஜ ராஜ சோழன் காலமாகிய கி. பி. 1117 என்பர். மேலும், இதனைச் சேக்கிழார் வரலாற்று நிகழ்ச்சிகளில் ஒன்றாகிய ஒரு குறிப்பினை இவர் பாடியுள்ள திருக்கை வழக்கத்தில் வரும் "காவலன் மண்ணில் கடலில் மலையில் பெரிது என் என எண்ணி எழுதிக்கொடுத்த ஏற்றக்கை" என்பதையும் சான்றாகக் காட்டுவர்.

இதில் அடங்கிய வரலாறு, ஒரு முறை சோழன் தன் அவைக்களப் புலவர்களை நோக்கி, "உலகைவிடப் பெரியது எது? கடலைவிடப் பெரியது எது? வானத்தைவிடப் பெரியது எது?" என்று கேட்டபோது, இவற்றிற்கு விடை காணாது புலவர்கள் திகைக்கச் சோழன் தொண்டை நாட்டு மன்னனுக்கு இவ்வினாக்களுக் குரிய விடைகளை அந் நாட்டுப் புலவர்களைக் கொண்டு விடை எழுதி அனுப்புமாறு வேண்ட, அது போது சேக்கிழார் இம்மூன்று வினாக்களுக்கும் முறையே,

"காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது."

"பயன் தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலில் பெரிது."
"நிலையில் திரியா தடங்கியான் தோற்றம்
மலையின் மாணப் பெரிது."

என்று எழுதி அனுப்பினர் என்பது.

கம்பர், கவி எவ்வாறு இருக்கவேண்டும் என்பதை நதி மேல் ஏற்றி,

"புவியினுக் கணியாய் ஆன்ற பொருள்தந்து புலத்திற் ருகி
அவியகத் துறைகள் தாங்கி ஐந்திணை நெறிஅ ளாவிச்
சவியுறத் தெளிந்து தண்ணென் றொழுக்கமும் தழுவிச்
சான்றோர்
கவியெனக் கிடந்த கோதா வரியினை வீரர் கண்டார்."

என்று பாடியுள்ளனர்.

பெரியோர்கள் சிறியோரைச் சேரின், சிறியோர்தம் சிறுமையை மாற்றித் தம் மயமாக்குவர் என்பதை,

"தெருண்ட மேலவர் சிறியவர்ச் சேரினும் அவர்தம்
மருண்ட தன்மையை மாற்றுவர் எனும்இது வழக்கே
உருண்டவாய் தோறும் பொன்னுருள் உரைத்துரைத் தோடி
இருண்ட கல்லையும் தந்நிறம் ஆக்கிய இரதம்."

என்று கூறியுள்ளனர்.

இரட்டுற மொழிதல் இவரது கவியில் ஒரு தனியிடம் பெற்றதாகும். இதனை,

"பாகத்தில் ஒருவன் வைத்தான் பங்கயத் திருந்த பொன்னை
ஆகத்தில் ஒருவன் வைத்தான் அந்தணன் நாவில் வைத்தான்
மேகத்தின் மின்னை முன்னே வென்றதுண் இடையை நீயும்
மாகத்தோள் வீர பெற்றால் எங்ஙனம் வைத்து வாழ்தி."

என்ற பாடலில் காண்க.

இராமனும் சீதையும் காட்டில் இன்பமாக இருந்தனர் என்பதை,

"ஓதிமம் ஒதுங்கக் கண்ட உத்தமன் உழைய ளாகும்
சீதைதன் நடையை நோக்கிச் சிறியதோர் முறுவல் செய்தான்

மாதவள் தானும் ஆண்டு வந்துநீர் உண்டு மீளும்
போதகம் நடப்ப நோக்கிப் புதியதோர் முறுவல்செய்தாள்."

என்ற செய்யுளில் காணலாம்.

அம்பிகாபதி: இவர் கம்பருடைய மகனார் என்பது பலர் கருத்து. இவரும் ஒரு பெரும் புலவர். இவர் பல தனிப்-பாடல்களே அன்றித் தம் பெயரால் அம்பிகாபதி கோவை என்னும் நூலையும் பாடியவர்.

அம்பிகாபதி கோவைக்கும் தமிழில் உலவும் ஏனைய கோவைகளுக்கும் பெரிதும் வேறுபாடு உண்டு. தமிழில் உள்ள ஏனைய கோவைகள் நம்பி அகப்பொருள் கூறும் அகப்பொருள் துறைகளை அப்படியே தழுவிப் பாடப்பட்டுள்-ளன. நானூறு கட்டளைக் கலித்துறைப் பாடல்களைக் கொண்டு திகழ்வன. ஆனால், மணிமொழியார் பாடியுள்ள திருக்கோவையார் நானூறு பாடல்களைக் கொண்டிருப்பி னும், நம்பி அகப்பொருள் கூறும் துறைகளை முற்றிலும் தழுவாமல் பல வேறுபாடுடன் காணப்படுகின்றது. மேலும், ஏனைய கோவைகள் யார் மீது பாடப்பட்டு இருக்கின்ற-னவோ, அவர்களின் பெயருடன் வழங்கப்படுவதோடு, அப்பாட்டுடைத் தலைவர் சிறப்பு முதலியன அறிவிக்கும் முறையில் ஒரு பாட்டில் ஏறக்குறைய பாதி அடிகள் அமைந்து கிடக்கும். எஞ்சிய பாதியடிகளில்தாம், அகப்-பொருள் துறைவிளக்கம் காணப்படும். ஆனால், அம்பிகா-பதியின் கோவை இங்ஙனம் அமையாது, பல பல புதிய துறைகளைக் கொண்டு இலங்குவது. இதில் உள்ள பாடல்-கள் 563. மேலும். இக்கோவை, ஆசிரியர் பெயராலேயே குறிக்கப்பட்டு வருகின்றது. ஒவ்வொரு துறையும் பாட்-டுடைத் தலைவன் இன்னான் என்று கூறப்பெறாமல், கிளவித் தலைவன் சிறப்பையும் துறைவிளக்கத்தையுமே முற்றிலும் அமையப்பெற்று விளங்குகிறது.

"ஆடும் துறையில் அருவினை யேன்கை அகன்றரிவை
ஓடும் புனலில் ஒழுகிய நாள்எம் அழுகுரல்கேட்
டேடொன்று பூந்தொடை ஏந்தல்முன் நீந்தி எடுத்தணைத்து
நீடும் தடங்கரை நில்லும் என்றான் எம்மை நேரிழையே."

என்பது இந்நூலில் ஒரு பாட்டு.

அம்பிகாபதி சோழனுடைய மகளைக் காதலித்து வந்தார். அதனால் இவரைக் கொல்வதாகவும் அரசன் கூறினன். கம்பர் சோழனிடம் தம் மகனை மன்னிக்கும்படி வேண்ட, அதுபோது சோழன் இறைவன் மீது பாடும் பாடலாக நூறு பாடல்களைப் பாடினால் தான் மன்னித்து விடுவதாகக் கூறினான். அம்பிகாபதியும் அவ்வாறே காப்புப்பாடல் ஒன்றை முதலில் பாடி, இறைவன் பரமாகத் தொண்ணூற்றொன்பது பாடல்களைப்பாடி முடித்ததும், சோழன் மகள் நூறுபாடல்களையும் அம்பிகாபதி பாடி முடித்ததாக எண்ணிச் சபையில் வந்தபோது அம்பிகாபதி உடனே,

" இட்டடி நோவ எடுத்தடி கொப்பளிக்க
வட்டில் சுமந்து மருங்கசையக்."

என்று தாம் காதலித்திருந்த அரசகுமாரியின் வருகையை வர்ணிக்கும் போது, கம்பர் தம்மகனைக் காக்க,

—கொட்டிக்

" கிழங்கோ கிழங்கென்று வருவாள் நாவில்
வழங்கோசை வையம் பெறும்."

என்று முடித்து விட்டனர். என்றாலும், அரசன் அம்பிகாபதி நூறுபாடலைக் கட்டளைப்படி முடிக்கவில்லை என்று கொன்று விட்டனன்.

இந்தச் சந்தர்ப்பத்தில் ராஜ குமாரி தன் தலையை காட்டிய போது,

" சற்றே பருத்த தனமே இலங்கத் தரளநடைந்
துற்றே அசையக் குழைஊசல் ஆடத் துவர்கொள்செவ்வாய்
நற்றேன் ஒழுக நடனசிங் கார நடைஅழகின்
பொற்றேர் இருக்கத் தலைஅலங் காரம் புறப்பட்டதே."

என்ற பாடலைப் பாடியதாகவும் கூறுவர். அம்பிகாபதியின் காலம் கம்பர் காலம்.

புராணங்கள்

கந்த புராணம் : இது முருகக் கடவுளின் வரலாற்றைக் கூறுவது. வடமொழிக் கந்த புராணத்தின் ஒரு பகுதியாகிய சங்கர சங்கிதையினைத் தனக்கு முதல் நூலாகக்கொண்டு

திகழ்வது. இந்நூல் பெருங்காப்பிய இலக்கண அமைப்பினை முற்றிலும் பெற்றது. இதன் நடை முக்கனி போன்றது என்பர் பரிதிமாற் கலைஞர்.

இந்நூல் முருகப் பெருமானின் வரலாற்றைக் கூறும் முகத்தால் சிவபரத்துவத்தையும், சைவசித்தாந்த நுட்பங்களையும், திருமுறைகளின் பெருமைகளையும் உணர்த்தும். இலக்கியச் சுவையினையும் இதன் கண் மிகுதியும் காணலாம். சிவபெருமானே முருகனாகத் தோற்றம் அளித்தான் என்பதைப் பல இடங்களில் இந்நூல் கூறும். இதனை “அந்திக்கு நிகர் மெய் அண்ணல் அருள் புரிந்து அறிஞராயோர் சிந்திக்கும் தனது தொல்லைத் திருமுகம் ஆறும் கொண்டார்.” என்ற இப்புராண அடிகளால் தெரிந்துகொள்ளலாம்.

இக்காலத்தில் காதலர்கள் உலாவும்போது ஒருவரை ஒருவர் தழுவிப்போதலைப் பார்க்கின்றோம். இவ்வாறே அக்காலத்து தழுவிச் சென்றதைக் காவியச் சுவைபட,

> “ஏமரும் கலாப மஞ்ஞை இனமெனச் செல்லும் மாதர்
> மாமருங் குல்இறும் இற்றால் மதன்அர சிழக்கும் என்றே
> காமரும் கவற்சி கொள்ளக் கரத்தினால் அவரைப் புல்லித்
> தாமருங் காகப் போனார் தார்முடி இளைய ரானோர்.”

என்று இந்நூல் எடுத்து மொழிகிறது.

முருகப்பெருமான் வள்ளியம்மையாரிடம் கெஞ்சிக் கொஞ்சிப் பேசியதை இந்நூலில் கண்டு காவியச் சுவையினை நன்கு துய்க்கலாம். முருகன் வள்ளியை நோக்கி,

> “ஆகத்தை வருத்துகின்ற அரும்பசி அவித்தாய். தெண்ணீர்த்
> தாகத்தை அவித்தாய் இன்னும் தவிர்ந்திலன் தளர்ச்சி மன்னோ
> மேகத்தை அனைய கூந்தல் மெல்லியல் வினையேன் கொண்ட
> மோகத்தைத் தணித்தி யாகில் முடிந்துஎன் குறைய தென்றான்.”

என்று கெஞ்சிக் கெஞ்சிக் கேட்டதைக் காண்க.

இத்தகைய சிறப்புடைய நூலின் ஆசிரியர் கச்சியப்ப சிவாசாரியார். இவர் வடமொழி, தென்மொழி, சமயசாத்திரம்

முதலியன நன்குணர்ந்தவர். இவர் முருகப் பெருமானிடத்து அன்புடையவர். ஆகவே, முருகனே கனவில் தோன்றித்-தன் வரலாற்றைப் பாடுமாறு கூறினன். அத்துடன் "திகட சக்கரம்" என்ற தொடரையும் எடுத்துத் தந்தனன். இத்-திருவருள் துணைக் கொண்டு திகட சக்கரம் என்பதையே மகுடமாக வைத்து விநாயக வணக்கம் பாடி, நூலை இனிது முடித்தனர். இந்நூலில் உற்பத்திக் காண்டம், அசுர-காண்டம், மகேந்திர காண்டம், யுத்தகாண்டம், தேவ-காண்டம், தட்சகாண்டம் என ஆறு காண்டங்கள் உள. ஒவ்வொரு காண்டமும் பற்பல படலங்களைக் கொண்டது. ஆறு காண்டங்களும் 10,340, திருவிருத்தங்களை யுடையன.

இந்நூலைக் காஞ்சிக் குமர கோட்டத்தில் அரங்கேற்றும் போது, திகட சக்கரம் என்பதை திகழ்+தச+கரம் என்று பிரித்துப்பொருள் கூறுகையில் "அங்ஙனம் பிரித்தற்கு இலக்கணம் யாது?" என்று அவையில் ஒருவர் கேட்க "இதற்கு விடை நாளை கூறுதும்" என்று கச்சியப்ப சிவாசாரியார் கூறி, இச்செய்தியினை முருகப் பெருமானிடம் முறையிட்டுக் கொண்டு அடுத்த நாள் தம் உரையினைத் தொடங்கும் போது, முன் வினவியவர் மீண்டும் எழுந்து விடை கேட்க, அச்சபையில் புலவர் போல வேடம் பூண்டுவந்த முருகன், அத்தொடர் அங்ஙனம் பிரிந்து புணர்தற்குரிய இலக்-கணத்தை, வீரசோழியம் என்னும் இலக்கண நூலில் காட்டி மறைந்தனர். அதுபோது யாவரும் சிவாசாரியரைப் புகழ்ந்து கொண்டாடினர். புலவரது காலம் கி. பி. பதினோ-ராம் நூற்றுண்டின் இறுதியும், பன்னிரண்டாம் நூற்-றுண்டின் முதலும் ஆகும்.

கந்தபுராணத்தின் ஏழாவது காண்டம் உபதேச காண்டம் என்பது. இதனை இயற்றியவர் கோனேரியப்ப நாவலர். இவரைக் கச்சியப்ப சிவாசாரியரின் மாணவர் என்பர். இந்நூலில் திருநீற்றின் மாண்பு, உருத்திராக்கப் பெருமை, முதலானவை கூறப்பட்டுள்ளன. இதில் 4,350 பாடல்கள் உள.

இறைவன் உறைவிடங்கள் தலங்கள் எனப்படும். அவ்வத்தலங்களின் மாண்பை அறிவிக்கும் வகையில் எழுந்த நூல்களே தல புராணங்கள், தலமான்மியங்கள்

என்றும் கூறப்படும். அத்தகைய புராணங்கள் சிலவற்றையும் ஈண்டுக் காண்போமாக.

திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம்: இது வேம்பத்தூரர் திருவிளையாடல், பழைய திருவிளையாடல், திருவிளையாடல் எனவும் கூறப்படும். இதனை எழுதியவர் செல்லிநகர் பெரும்பற்றப் புலியூர் நம்பி என்பவர். இவர் வேம்பத்தூர்ச் சோழிய பிராம்மணர்; கௌணிய மரபினர். இவர் தில்லை நம்பி என்றும் வழங்கப்பட்டவர். இந்நூலைப் பாண்டியன் ஒருவன் யாக்கும்படி வேண்டினான். அவன் இதனை அரங்கேற்றுவித்துப் புலவருக்குப் பல்லக்கு இரத்தினாபரணம், விருதுகள், இவர் பிறந்த செல்லிநகர், அதனைச் சார்ந்த ஊர்கள் இவற்றை இவரும் இவரது பரம்பரையாரும் துய்க்கும்படி ஈந்து சிறப்பித்தான். இவரது காலம் கி. பி. 13 ஆம் நூற்றாண்டு. இவரது ஞானாசாரியர் விநாயகர் என்பவர்.

இந்நூலாசிரியர் தென்மொழி, வடமொழிகளை நன்கு உணர்ந்தவர். வேதாகமங்களில் மிக்க அன்புடையவர். தேவாரம் முதலான திருமுறை, திவ்விய பிரபந்தங்கள் இவற்றின்பால் அளவுகடந்த பற்றுடையவர். அடியார் பக்தி, திருநீற்றன்பு வாய்ந்தவர்.

இப்பழைய திருவிளையாடற் புராணம் மதுரை சொக்கலிங்கப் பெருமான் மதுரையில் செய்த திருவிளையாடல்களைக் கூறுவது. இந்நூலால் சில அரிய குறிப்புக்கள் அறிய வருகின்றன. இறைவர் வைகையின் வெள்ளப் பெருக்கை அடைக்க மணல் சுமந்தபோது, பாண்டியன் ஏவலாளர்கள் அவரை அடித்தார்கள் என்பதையும், நீலமணியின் குற்றங்கள் இன்னின்ன எனக்கூறுது, "வந்த வழிக் காண்க" என்று அடியார்க்கு நல்லார் விடுத்ததை இவர் நிலமணிக் குற்றங்கள் பன்னிரண்டெனக் கூறுவதையும் இந்நூலில் காணலாம். சில பழைய வழக்கங்களையும் இதில் காணலாம். ஒருவர் சொன்னதை மறவாதிருக்க ஆடையின் தலைப்பை முடிந்து கொள்ளுதல், தும்மும்போது சிவ சிவா எனல் முதலான பல அரிய செய்திகள் இந்நூலில் உள.

"மானிலம் காப்போர் வேள்வி மறையவர் தேத்தும் தூய
ஆனிரை மாட்டும் ஈசன் அளவிலும் அடியார் கண்ணும்

ஈனமில் அன்பு பூண்டாண் டினியன செய்வரேல்மற்
றூனமேல் வருமோ வாரா துண்மையீ துண்மை யீதால்.”

கடம்பவன புராணம் : கடம்பவனம் என்பது மதுரை யாகும். இந்நூலை எழுதியவர் வீமநாத பண்டிதர். இந்நூலுக்கு மூலநூல் நீபாரண்ய மகாத்மியம் என்னும் வடமொழி நூல். இதனைக் கதம்பவன புராணம் என்றும் கூறுவர். கடம்பவனப் புராணத்தில் லீலா சங்கிரக அத்தியாயம் ஒன்று உளது. அதில் வேம்பத்தூரரார் திருவிளையாடலில் கூறப்பட்ட வரலாறுகள் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு பாடல் அமைந்துள்ளது. இதனால் பழைய திருவிளையாடற்குப் பின் இது பாடப்பட்டதாகத் தெரிகிறது.

சுந்தர பாண்டியம் : மதுரைச் சொக்கலிங்கப் பெருமான் சௌந்தர பாண்டியன் என்னும் பெயரை யுடையவன். இப் பெருமானது திருவிளையாடல்களைப் கூறுவதே சுந்தர பாண்டியன் எனப்படும். இந்நூலின் மூலநூலும் சுந்தர பாண்டியம் எனப்படும். தமிழ்நூலை இயற்றியவர் அனதாரி என்பவர். இவர் புலவர்களால் பாராட்டப்பட்டவர். கம்பர், ஒட்டக் கூத்தர் முதலியோர் காலத்தில் அனதாரியப்பப் புலவர் இருந்திருந்தால், அவர்கள் புகழ் பெறமுடியாது என்பதை ஒரு வெண்பா கூறுகிறது. இதன் காலம் கி. பி. 16 ஆம் நூற்றுண்டு,

திருவிளையாடற் புராணம் : இதனை எழுதியவர் பரஞ்சோதி முனிவர். இதுவும் மதுரைச் சொக்கலிங்கப் பெருமானின் திருவிளையாடல்களைக் கூறுவது. திருவிளையாடற் புராணம் என்றதும் பரஞ்சோதியார் திருவிளையாடல் புராணமே எவர்க்கும் நினைவில் வரும். இந்நூலும் ஸ்ரீ ஹாலாஸ்ய மகாத்மிய மொழி பெயர்ப்பே ஆகும். இத் திருவிளையாடற் புராணம் எழுந்தபின் பழைய திருவிளையாடற் புராணம் சிறப்புறத் தமிழ் நாட்டில் நிலவி வரவில்லை. இந்நூலால் பல அரிய குறிப்புக்களை அறியலாம். சைவ சித்தாந்த கருத்துக்களைப் பல இடங்களில் விளக்கிச் சொல்லும். இதனுல் நவரத்தினங்களைப் பற்றிய குறிப்புக்களையும் நன்கு உணரலாம். இதன்கண் பெருங்காப்பிய இலக்கணம் முற்றும் அடங்கியுள்ளது. சோதிடக் குறிப்பு, குதிரை இலக்கணம் முதலியவற்றையும் தெரியலாம். இந்நூலையும்

பெரிய புராணத்தையும் சிவஞான முனிவர் எப்போதும் தம் படுக்கையின் இரு புறங்களில் வைத்துக்கொண்டே இருப்பாராம்.

" கண்ணு தற்பெருங் கடவுளும் கழகமோ டமர்ந்து
பண்ணு றத்தெரிந் தாய்ந்தஇப் பசுந்தமிழ் ஏனை
மண்ணி டைச்சில இலக்கண வரம்பிலா மொழிபோல்
எண்ணி டப்படக் கிடந்ததா எண்ணவும் படுமோ ?"

என்று பெருமிதத்துடன் பாடப்படும் பாடல் இந்நூலில் தான் உளது.

இந் நூலாசிரியரான பரஞ்சோதியார், திருமறைக் காட்டில் (வேதாரண்யம்) சைவ வேளாள மரபில் மீனாட்சி சுந்தர தேசிகர் மகனாராகப் பிறந்தவர். தென்மொழி, வடமொழிகளையும், திருமுறைகளையும், சித்தாந்த சாத்திரங்களையும் நன்கு கற்றவர். இவர் தேவியின் திருவருள் பெற்றவர். இவர் மதுரையில் இருந்தபோது மீனாட்சி அம்மையார் இவரது கனவில் " சுந்தரேசப் பெருமான் திருவிளையாடல்களைப் பாடுக " என்ற கட்டளை பிறந்த காரணத்தால் இந்நூலைப் பாடினார்.

இவர் இந்நூலே அன்றித் திருவிளையாடல் போற்றிக் கலிவெண்பா, மதுரைப் பதிற்றுப் பத்தந்தாதி, வேதாரண்ய புராணம் ஆகிய நூல்களையும் பாடினார். காலம் கி. பி. 17 ஆம் நூற்றாண்டு.

பரஞ்சோதியார் என்ற வேறு ஒருவர் இப் பெயருடன் இருந்தனர். அவர் சிதம்பரத்தில் பிறந்தவர். சிதம்பரப் பாட்டியல், மதுரையுலா பாடியவர்.

தணிகைப் புராணம் : இது முருகப் பெருமான் எழுந்தருளியுள்ள திருத்தணிகைத் தலத்தைப் பற்றிய புராணம். முருகன், சூரன் முதலிய அசுரர்களை வென்று தம் சினம் தணிந்த இடம் ஆதலின், இப்பெயர் பெற்றது. இந்நூல் காவிய இலக்கணத்திற்கேற்ற அமைப்புடன் விளங்குவது. இது சங்க நூல் நடை போன்றது. தொல்காப்பியம் கூறும் உரிச்சொற்கள் பலவற்றையும் இதன்கண் காணலாம். இது சைவ சாத்திரக் கருத்துக்களைக் கொண்டு மிளிர்வது. திருத்தணிகைக்குரிய சீபூரணகிரி, கணிக வெற்பு முதலான

பெயர்களை இதன்கண் காணலாம். இங்குக் குமார தீர்த்தம், விஷ்ணு தீர்த்தம் முதலான ஏழு தீர்த்தங்கள் உள்ளன என்பதையும் அறியலாம்.

இந்நூலால் பல அரிய குறிப்புக்களை உணரலாம். மயில், மீன், ஆமை இவை அடைகிடந்தும், சினைகளை நோக்கியும், சிந்தித்திருந்தும், தம்தம் இனத்தை உயிர்ப்பிக்கின்றன என்பதையும், எவ்வளவு கற்பினும் ஆசிரியரிடம் உபதேசம் பெற வேண்டும் என்பதையும், அதிமரத் தடியில் யானை செல்லின் மயக்கம் கொள்ளும் என்பதையும் "வெஞ்சினம் மூண்டுழி வகுத்தறியார் போல," "வேலியே பயிரை மேயின் வேறொரு காப்பு முண்டோ" என்பன போன்ற பழமொழிகளையும், பெருமை, கல்வி, தவம் முதலியன காமத்தால் அழியும் என்பன போன்ற நீதிகளையும் காணலாம். ஒரே பாடல் ஆறு பொருள்களைக் கொண்டு இருத்தலையும் இதில் காணலாம். வடமொழி நூல்களின் கருத்தும், வேதம் "சுப்பிரமண்யோம்" என்று முடிதலும் இதில் கூறப்பட்டுள்ளன. களவுப் படலத்தில் அகப்பொருட் கோவை அமைப்பு அமைந்துள்ளது. விநாயக வணக்கச் செய்யுளின் அமைப்பைக் காண்க.

> *"பண்ணியம் ஏந்தும் கரம்தனக் காக்கிப்*
> *பால்நிலா மருப்பமர் திருக்கை*
> *விண்ணவர்க் காக்கி அரதனக் கலச*
> *வியன்கரம் தந்தைதாய்க் காக்கிச்*
> *கண்ணிலா ணவவெங் கரிபிணித் தடக்கிக்*
> *கரிசினேற் கிருகையும் ஆக்கும்*
> *அண்ணலைத் தணிகை வரைவளர் ஆபச்*
> *சகாயனை அகம்தழீஇக் களிப்பாம்."*

இத்தகைய அரிய நூலைச் செய்தவர் கவிராசர் திரு. கச்சியப்ப முனிவர். இவர் திருத்தணிகையில் சைவ வேளாளர் மரபில் பிறந்தனர். தென்மொழி, வடமொழி இலக்கண இலக்கியங்களையும், திருமுறை, சித்தாந்த நூல்களையும் பயின்றவர். இவரது வித்தியா குரு திரு. சிவஞான முனிவர். ஸ்ரீ அம்பலவாண தேசிகரிடம் தீட்சை பெற்றவர்.

இவர் திருவானைக்கா சென்றபோது திருவானைக்கா புராணத்தையும், பூவாளூர்ப் புராணத்தையும் பாடினார்.

கோவைக்கருகில் உள்ள பேரூர் மீது பேரூர் புராணத்தை-யும், துறைசை அம்பலவாணர் மீது ஒரு பிரபந்தத்தையும் பாடியுள்ளனர். தம் மாணவர் கந்தப்பய்யர் குன்ம நோயால் துன்புறல் கண்டு, அதனை நீக்கத் தணிகை ஆற்றும் படை-யினையும், திருத்தணிகைப் பதிற்றுப்பத்தந்தாதியையும் செய்-தருளினர்.

இவர் சென்னையில் இருந்தபோது விநாயக புராணம், சென்னை விநாயகர் பிள்ளைத் தமிழ் நூல்களைப் பாடினர். விநாயக புராணம் அரங்கேற்றும் சமயம், ஐயாப்பிள்ளை என்-பவரையும் பிரசங்கத்திற்கு வருமாறு சில அன்பர்கள் வேண்-டினர். இவர் பெயர் கொண்ட தெருவும் இதுபோது உளது. அப்போது "விநாயக புராணம் என்ன கம்ப ராமாயணமா?" என்று அசட்டையாக அவர் பேசினர். இதனை அறிந்த முனிவர் கம்பராமாயணச் செய்யுட்களில் உள்ள குற்றங்-களை எடுத்துப் பிரசங்கம் செய்தனர். அதனை அறிந்த ஐயாப்பிள்ளை ஓடோடியும் வந்து முனிவர் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டனர்.

காஞ்சியில் இருந்தபோது, காஞ்சி புராண இரண்டாங் காண்டத்தையும், கச்சி ஆனந்தருத்திரேசுரர் வண்டுவிடு தூது, கச்சி ஆனந்தருத்திரேசுரர் பதிற்றுப்பத்தந்தாதி, பஞ்சாக்கர-தேசிகர் அந்தாதி ஆகிய நூல்களையும் இயற்றினர். இவரது காலம் கி. பி. 1790.

காஞ்சிப் புராணம்: காஞ்சி என்பது காஞ்சிபுரம். இது "முத்திதரும் நகரேழுள் முக்கியமாம் காஞ்சி," என்ற பெருமைக்குரியது. இதன் சிறப்பைக் கூறும் நூல்கள் கச்சிக்கச்சாலை தேசிகர் இயற்றிய காஞ்சிப் புராணம், காமாட்சி கல்யாணம் எனப்படும் கலித்துறைக் காஞ்சிப் புராணம், (ஆசிரியர் யாவர் என்பது அறிதற்கில்லை.) காஞ்சிப் புராணம், காமக் கோட்ட புராணம். (தேவியின் பெருமையினைக் கூறுவது ஆசிரியர் தெரிந்திலது.) இத்தனை நூல்களிலும் காஞ்சிப் புராணம் என்னும் பெயரிய நூலே எவராலும் போற்றப்படும் பெருமை சான்றது. இந்நூலின் முதல் காண்டம் சிவஞான முனிவராலும், இரண்டாவது காண்டம் இவரது மாணவரான கச்சியப்ப முனிவராலும் பாடப்பட்டுள்ளன.

இந்நூல் வடநூல் மொழிபெயர்ப்பாகும். காஞ்சியம்பதியைச் சுற்றியுள்ள தலங்களைப்பற்றியும், காஞ்சியில் உள்ள திருக்கோயில்களின் வரலாற்றைப் பற்றியும் இதில் கூறப்பட்டுள்ளன. பசு தருமம், சிவதரும விசேடங்கள், சிவாகமப் பொருள்கள், சைவ சமயத்தின் ஈடும் எடுப்பும் அற்ற சிறப்பு முதலியன இதன்பால் கூறப்பட்ட பொருள்களாகும்.

அணிகள் பல இதில் உள. கமலபந்தம், முரசபந்தம், நாகபந்தம் முதலான சித்திரக் கவிகள் இதில் உண்டு. இலக்கியச் சுவையினை விரும்புவோர்கள் எவராயினும் இதனைப் படித்து இன்புறலாம். தொண்டை நாட்டின் சிறப்பு இதன்கண் சிறப்புறப் பேசப்பட்டுள்ளது. இந்நூலுக்கு உரையுண்டு.

"வறுமை உற்றுழியும் தொண்டை வளமலி நாட்டோர் தங்கள்
இறும்உடல் வருத்தி யேனும் ஈவதற் கொல்கார் அற்றே
தெறுகதிர் கனற்றும் வேனில் பருவத்தும் சீர்மை குன்று
துறுமணல் அகடு கீண்டும் ஒண்புனல் உதவும் பாலி."

கோயில் புராணம்: கோயில் என்பது சிதம்பரம். அதன் மாண்பைக் கூறுவது இந்நூல். சிங்கவன்மன் என்பவன் இங்குள்ள சிவகங்கைத் திருக்குளத்தில் மூழ்கி இரண்யவர்மன் என்ற பெயர் பெற்றமையும் (பொன்வடிவாய்த் திகழ்ந்தவன்) அவன் சிதம்பரக் கோயிலைச் செம்மையுறக் கட்டித் திருவிழா, நாள் வழிபாடு முதலியவற்றிற்கு ஏற்பாடு செய்ததையும், சைவ சித்தாந்த நுண் பொருள்களையும் இதில் காணலாம். தில்லையில் ஆடும் நடனம் ஆனந்த நடனம் என்பதும், இதனைப் புலிக்கால் முனியும், பதஞ்சலி யாரும் கண்டு இன்புறுகின்றனர் என்பதும், நடராஜர் தத்துவம் இன்னது என்பதும் இதன்கண் உள.

"எண்ணரும் காதல் கூறும் இருவரும் காண ஞானக்
கண்ணினை நல்க முன்னைக் காரிருள் கழிவுற் றன்ன
எண்ணம்என் றறிய வாரா வளரொளி மன்னும் மாதோ
டண்ணல்நின் றுடுகின்ற ஆனந்த நிருத்தம் கண்டார்."

இத்தைய நூலை எழுதியவர் கொற்றவங்குடி உமாபதி சிவாச்சாரியார் ஆவர். இவரது வரலாறு முன்பே கூறப்பட்டது. காலம் கி. பி. 14 ஆம் நூற்றுண்டு.

குற்றாலத் தல புராணம்: இந்நூல் குற்றாலத்தில் உள்ள அருவிகளின் பெருமையினையும், தலத்தின் மாண்பினையும், குற்றாலநாதர் சிறப்பையும், சித்திர சபையில் எழுந்தருளி இருக்கும் நடராசப் பெருமானின் மாண்பையும், மற்றும் பல குறிப்புக்களையும் கூறுவது. இந்நூலில் அமைந்த சிலேடைப் பாடல்களும், மலைவரிப் பாடல்களும், நாட்டு வளம் நகர் வளப் பாடல்களும் படிக்கச் சுவை பயப்பனவாகும். அருவியின் பெருமையினைக் கீழ்வரும் பாடலில் காண்க.

“ மேலேறிச் சுவர்க்கப்பதம் புகுவார்க்கும் பிரமபதம்
மேவு வார்க்கும்
மாலேறு வைகுந்தம் பரமபதம் சேர்வார்க்கும்
வரம்பில் காலம்
காலேறிச் செலவரிய பதந்தோறும் செலுத்துதலால்
கதிகட் கெல்லாம்
நூலேணி நிறுத்தியதாம் திரிகூட வடஅருவி நுவலும் காலே.”

இந்நூலை எழுதியவர் திரிகூடராசப்பக் கவிராயர். இவர் தென்காசிக்கு அருகே மேலகரம் என்னும் ஊரில் வேளாள மரபில் பிறந்தவர். இவரை முத்து விசயரங்கநாத நாயக்கர் குற்றாலத்தைப் புகழ்ந்து ஒரு குறவஞ்சிப் பாடும்படி கேட்க அவ்வாறே பாடி அவ்வரசர் முன்பு அரங்கேற்றி அம்மன்னரால் விளைபுலன்களையும், பொன் ஆபரணங்களையும், ஆடை, அணிகலன்களையும் பெற்றவர். இவர் பெற்ற பூமி குறவஞ்சிமேடு என்று இதுபோதும், அங்கு வழங்கப்பட்டு வருகிறது. மலைவளம் பாடியவர்களில் இவரைப்போல எவரும் இலர் என்னலாம். இவரது புலமையால் இன்னும் இவரது மரபில் வித்துவான்களாக வருபவர் இங்குக் கோயிலில் மரியாதையையும் பெற்று வருகின்றனர். இவரது காலம் கி. பி. 18 ஆம் நூற்றாண்டு.

இவர் குற்றாலத்தைப் பற்றியே எல்லா நூல்களையும் பாடியுள்ளனர். இத்தலப் பெயரால் மாலை, வெண்பா, அந்தாதி, உலா, ஊடல், கோவை, பிள்ளைத்தமிழ் முதலியன உள. இவர் பாடிய நூல்கள் பதினான்கு. இவற்றுள் குற்றாலத் தல புராணமும், குற்றாலக் குறவஞ்சியுமே தலை சிறந்து விளங்குகின்றன.

குற்ருலக் குறவஞ்சி என்னும் நூல் நாடக அமைப்பில் உள்ளது. இதில் குற்ருல மலைவர்ணனை, குறத்தி தன் வரலாற்றைக் கூறுதல், குறிசொல்லும் முறைமை, சிங்கன் சிங்கி உரையாடல் போன்றவை படிக்கப் படிக்கச் சுவைமிக பயப்பன ஆகும்.

அருணசலப் புராணம்: அருணசலம் என்பது திருவண்ணுமலை. இத்தலத்தின் மான்மியம் கூறும் நூல் இந்நூல். இந்நூலில் மலைவளம் வருதலின் பலன், கார்த்திகை தீபத்தின் காரணம், வல்லாள மகாராசனுக்கு இறைவன் பிள்ளையாகக் காட்சி தந்து ஆண்டுதோறும் அம்மன்னனுக்குத் திவசம் செய்தல் போன்ற செய்திகளைக் காணலாம்.

“வஞ்சம்என் றிகழ்ந்திடேல் வருந்தினுர்க் குயிர்க்குயிர்த்
தஞ்சமாம் எனில்பெரும் பொய்யும் சாற்றலாம்
அஞ்சியே சொலத்தகா மொழியும் அன்றிது
நஞ்சமுண்ட மைவரே நண்பு வேண்டினுர்.”

என்பது இந்நூலில் ஒரு பாடல்.

இத்தகைய நூலை எழுதியவர் சைவ எல்லப்ப நாவலர். இவரது இயற்பெயர் எல்லப்பர் என்பது. இவரது நாவன்மையாலும், சைவப் பற்றினுலும் சைவ எல்லப்ப நாவலர் ஆயினர். “சைவத்தின் மேற் சமயம் வேறில்லை” என்பது இவரது வாக்கு. இவரது பிறப்பிடத்தைப் பற்றிப் பலவேறு கருத்துக்கள் உண்டு. இவரது பிறப்பிடத்தைத் திருவண்ணுமலை தாழங்காடு என்றும், திருவெண்காடு என்றும், யாழ்ப்பாணம் என்றும், காவிரிப்பூம்பட்டின இராத நல்லூர் என்றும் கூறுவர். இவர் கல்வி கேள்விகளில் தலைசிறந்தவர். தருமபுர ஆதீனத்தை அடைந்து சிவதீட்சை பெற்றவர். இவர் எழுதிய நூற்கள் செவ்வந்திப் புராணம், திருவிரிஞ்சைப் புராணம், திருவெண்காட்டுப் புராணம், திருவருணை அந்தாதி, திருவருணைக்கலம்பகம் என்பன.

செவ்வந்திப் புராணம்: இது திருச்சிராப்பள்ளி மான்மியத்தைக் கூறுவது. ஒரு செட்டிப் பெண் கருவுற்றுத் துன்புறுகையில், தன் தாயின் வருகை நோக்கி இருந்தனள். தாய் வருவதற்கு இடையூருய்க் காவிரி ஆறு கரை கடந்து ஓடியது. அதனுல் அத்தாய் வருதற்குத் தடை ஏற்பட்டது.

இறைவர் அவளது தாய் வடிவில் அப்பெண் அருகில் இருந்து, குழந்தை பெறுமளவும் சிகிச்சை செய்தனர். அதன்பின் உண்மைத்தாய் வந்து "மகளே, கருவுயிர்க்கையில் எங்ஙனம் வருந்தினையோ?" என்று கேட்க, அப்பெண், "நீ தான் அருகில் இருந்தனையே" என்றதும் "நான் இதுபோதுதானே வந்தேன்" என்று தாய்கூற, இருவரும் மலைக்கோட்டை இறைவரே வந்தனர் என்று அறிந்து இறைவரைப் போற்றினர். இதனால் இறைவர் 'தாயும் ஆனவர்' என்ற பெயர் பெற்றனர். இவ் வரலாற்றை இந்நூலில் காணலாம்.

திருவிரிஞ்சைப் புராணம்: இது வேலூர்க்கு அடுத்தாற்போல் உள்ள ஊர். இறைவர், தம்மை வழிப்பட்ட பிராம்மணச் சிறுவன் எட்டித் திருமஞ்சனநீரை கொட்ட இயலாது தத்தளித்தபோது, தம் முடியைச் சாய்த்து நீரை ஏற்ற வரலாறு, கார்த்திகைக் கடை நாயிறு விழா போன்ற சிறப்பு இவற்றைக் கூறும் நூல் இது.

இங்குள்ள சிவலிங்கம் சாய்ந்திருப்பதற்குரிய காரணத்தை கீழ்வரும் அம்மானைப் பாடல் அறிவிப்பது படிக்கச் சுவை தருவதாகும்.

"மாசிலாத் தென்விரிஞ்சை மார்க்க சகாயலிங்கர்
வேசியர்பால் தூதுசொல்லி மீண்டனர்காண் அம்மானை
வேசியர்பால் தூதுசொல்லி மீண்டனரே யாமாயின்
வீசைமுனே வெட்கம் அவர்க்கிலையே அம்மானை
இல்லாமல் தலைஇறக்கம் ஏன்வந்த தம்மானை."

திருவிரிஞ்சைக் கலம்பகம்.

திருவெண்காட்டுப் புராணம்: இது வடமொழியாளர் சுவேதாரண்யம் என்று கூறிக் கொள்ளும் அரியபதி. இங்குள்ள முக்குளநீர் என்னும் மூன்று குளங்களில் மூழ்கின், பிள்ளைப் பேறு கிடைக்கும் என்பதும், வீரபத்திரர் திருவுருவ மாண்பு இத்தகையது என்பதும், சிதம்பர ரகசியமும் இந்நூலால் அறியப்படுவன. இத்தலத்தில் சிதம்பர ரகசியக் காட்சியை நன்கு கண்ணாரக் கண்டு களிக்கலாம். இங்குள்ள முக்குள நீரில் மூழ்கின பயனே மெய்கண்டார் பிறக்கும் பேறு கிடைத்தது.

திருஅருணை அந்தாதி: இது நூறு கட்டளைக் கலித்துறையால் அமைந்தது. அருணகிரி அந்தாதி வேறு. அது வெண்பாவால் இயன்றது. அதனைப் பாடியவர் குகை நமசிவாய தேவர்.

திருவருணைக் கலம்பகம்: இந்நூல் தமிழ் கற்க விழைவோர் யாவரும் படிக்கவேண்டிய நூல். இதில் பல கற்பனை நயங்கள், சிலேடைகள் அமைந்துள்ளன. அரிய கருத்துக்கள் அடங்கிய குறிப்புக்களும் இதில் உள.

"எல்லா உயிர்க்கும் உயிர்அரு ணேசர் இவர்அசையின்
அல்லா தணுவும் அசையா தென்ப தறிந்தனமே
வில்லாடன் மாறன் இருக்கவும் யோகம் விளைத்தஅந்நாள்
புல்லா திருந்தன எல்லா வுயிரும்தம் போகத்தையே."

என்பது ஒரு பாடல். இவரது காலம் கி. பி. 17 ஆம் நூற்றுண்டு. இவரது மனைவியாரும் ஒரு பெரும் புலவர்:

திருக்கழுக்குன்ற புராணம்: இந் நூலால் இன்றும் இரண்டு கழுகுகள் உணவு கொள்வதன் காரணத்தையும், சஞ்சீவி மலையின் மாண்பையும், சங்கு தீர்த்தம், நந்தி தீர்த்தம் என்ற பெயரின் காரணங்களையும் மற்றும் பல குறிப்புக்களையும், காக்கை மலை என்ற பெயர்க் காரணத்தையும் அறியலாம். இந்நூலைப் பாடியவர் அந்தகக் கவிவீரராகவ முதலியார்.

இவர் காஞ்சிப் பூதலூரில் பிறவிக் குருடராய்ப் பிறந்தவர். இவரது அண்ணியார் காரணமாக வெளியேறி, தம் முதுகில் எழுத்துக்களை எழுதுமாறு செய்து எழுத்துக்களையும், பிறர் படிக்குமாறு செய்து பல நூல்களையும் பயின்று, தாம் நேரில்லாப் புலவராய்த் திகழ்ந்தவர். இதனை அவரே, "ஏடாயிரம் கோடி எழுதாது தம்மனத்தே எழுதிப் படித்த விரகர், இமசேது பரியந்தம் எதிரிலாக் கவி வீரராகவன்" என்று பாடி அறிவித்துள்ளனர். இவர் பாடிய தனிப்பாடல்கள் பல. இவர் இலங்கைப் பரராச சேகரிடம் பரிசு பெற்றவர். இவர் காலம் கி. பி. 17 ஆம் நூற்றுண்டு. இவர் செய்த ஏனைய நூல்கள் கழுக்குன்ற மாலை, சேயூர் முருகன் பிள்ளைத் தமிழ், சேயூர்க் கலம்பகம், திருவாரூர் உலா, சந்திரவாணன் கோவை, கயத்தாற்றரசன் உலா என்பன.

"பொய்யருக்குப் பொய்யுரைத்தால் வெற்றியாம்
அவருக்குப் பொய்ஆ காத
மெய்யருக்குப் பொய்யுரைத்தால் தேய்பிறைபோல்
தவம்குறையும் மிடியுண் டாகும்
துய்யதாய் தந்தையர்க்குப் பொய்யுரைத்தால்
வறுமைபிணி தொலையா என்றும்
உய்ய அருள் தேசிகர்க்குப் பொய்யுரைத்தால்
நரகமது உண்மை தானே."

சீகாளத்திப் புராணம்: சிலந்தி, பாம்பு, யானை பூசித்த பதியே சீகாளத்தி எனப்படும். இந்நூலைப் பாடியவர்கள் மூவர். மூவர்களும் சகோதரர்கள். இதன் முதல் பகுதி பாயிரம் உள்படச் சீகாளத்திச் சருக்கம் வரையில் பாடியவர் கருணைப் பிரகாச சுவாமிகள். இப்பகுதியில் திருக்காளத்தி மலையின் தோற்றம், பொன் முகலி ஆற்றின் சிறப்பு முதலானவற்றை அறியலாம். இரண்டாவது பகுதியிலுள்ள கண்ணப்பர் சருக்கம், நக்கீரர் சருக்கம் இவற்றைச் சிவப்பிரகாசர் பாடினர். கண்ணப்ப நாயனார் வரலாறு, நக்கீரர் குட்ட நோய் உற்ற காரணம், அது நீங்கிய நிலை முதலியவற்றை இதில் காணலாம். மூன்றாவது பகுதியில் உள்ள கன்னியர் சருக்கம், சிலந்தி, பாம்பு, யானை மூன்றும் பூசை புரிந்து மோட்சம் உற்ற முற்கதைச் சருக்கம் ஆகியவற்றை வேலைய சுவாமிகள் பாடினர். கன்னியர் சருக்கத்தில் வேசையர் குலத்தில் பிறந்த இரு சகோதரிகள், தம் தாய் தமது மரபுத் தொழிலை ஏற்குமாறு எவ்வளவு கூறியும், அதனை ஏற்காது இறை அன்பு, அடியார் அன்பு கொண்டு பேறு பெற்றதைக் கூறப்படும். இவர்கள் தாம் தாய்க்கு உருத்திராக்கப் பெருமையினைக் கூறியதை,

"ஆயிரம் கலனுடம் பணைத்தும் தாங்கினும்
மாயிரும் பொறைஅலால் வருவ துண்டுகொல்
நாயகன் விழிமணி யொன்றோர் நாளுடன்
மீயணிந் திடில்வினை யாவும் வீயுமே."

என்ற பாடலில் காண்க. இந் நூலின் காலம் கி. பி. 18ஆம் நூற்றாண்டு.

சிதம்பர புராணம்: இதனைப் பாடியவர் திருமலைநாதர். சைவ வேளாளர். சிதம்பரத்தில் பிறந்தவர். இவர் சொக்க நாதர் உலாவையும் பாடியவர். இதனை வீரபாண்டியன்

அவையில் அரங்கேற்றினுர். இவர் புராணப் பிரசங்கம் செய்வதில் வல்லவர். ஆதலின், புராணத் திருமலையார் என்றும் கூறப்பட்டவர். காலம் கி. பி. 16 ஆம் நூற்ருண்டு

சிதம்பர சபாநாதர் புராணம்: இதனைப் பாடியவர் சபாபதி நாவலர். இவர் ஆறுமுக நாவலரின் மாணவர். யாழ்ப்பாணத்தவர். எழுத்தாற்றலும், பேச்சாற்றலும் வாய்ந்தவர். இவர் இந்நூலே அன்றி, ஏசுமத சங்கற்ப நிராகரணம், *சிவகர்ணுமிர்தம், பாரத ராமாயணத் தாற்பரிய சங்கிரகம்,* திருச்சிற்றம்பல யமக அந்தாதி, திருவிடைமருதூர்ப் பதிற்றுப்பத்தந்தாதி, தில்லைச் சுப்பிரமணியக் கடவுள் பதிகம், இலக்கண விளக்கப் பதிப்புரை மறுப்பு, வைதிக காவிய தூஷண மறுப்பு, திராவிடப் பிரகாசிகை என்பன. திராவிடப் பிரகாசிகை என்பது இக்காலத்து வெளிவரும் கலைக்களஞ்சியம் போன்றது. ஆனுல், இதில் புலவர்களைப்பற்றிய குறிப்புக்களும், நூல்களைப் பற்றிய குறிப்புக்களும், தமிழ்மொழியின் சிறப்பும் தொன்மையும் பற்றிய குறிப்புக்களும் மட்டுமே ஆய்வு முறையில் அமைந்துள்ளன. காலம் 19 ஆம் நூற்ருண்டு.

பாகவத புராணம்: கிருஷ்ண பகவானது முழு வரலாற்றைக் கூறுவது. இப்பெயரால் மூவர் நூல் இயற்றியுள்ளனர். ஒருவர் ஆரியப்பப் புலவர். மற்ருெருவர் அருளாளதாசர். மற்றவர் செவ்வைச் சூடுவார்.

ஆரியப்பப் புலவர்: கும்பகோணத்தில் பிறந்தவர். வேளாள மரபினர். வடமொழி பாகவத நூலைத் தழுவி 4,970 விருத்தப் பாக்களில் தமிழ்ப் பாகவத புராணம் பாடினுர். இவரது காலம் கி. பி. 18 ஆம் நூற்ருண்டு.

அருளாளதாசர்: இவர் நெல்லி நகரில் பிறந்தவர். இவரது நூல் வாசுதேவ கதை என்று பெயர் பெறும். இதில் 9,151 விருத்தப் பாக்கள் உண்டு. காலம் கி. பி. 16 ஆம் நூற்ருண்டு.

"யாதவர் குலத்துள் தோன்றி இமயவர்க் கிடர்கள் செய்யும்
பாதகர் மடிய வேபார் பாரம தொருவப் பார்த்தன்
தூதனுய் ஐந்தூர் வேண்டிச் சூதனுய்த் தேரும் ஊரும்
சீதரன் ஆன வாசு தேவனை வணக்கம் செய்வாம்."

அருளாளதாசர்.

செவ்வைச் சூடுவார்: இவர் நிம்பை என்னும் வேப்பத்தூரில் வைணவ பிராம்மண மரபினர். இவரது பாகவதம் விண்டு பாகவதம் என்று கூறப்பெறும். இவரது காலம் கி. பி. 16 ஆம் நூற்றுண்டு. வைணவர்களால் இந்நூல் பெரிதும் போற்றப்பட்டு வருகிறது.

3. பிற்கால இலக்கியங்கள்

தமிழ் மொழியில் தொண்ணூற்ருறு வகைப் பிரபந்தங்கள் என ஒரு பிரிவு உண்டு. இவற்றைச் சிற்றிலக்கியங்கள் என்றும் கூறுவர். இப்பிரபந்தங்களாகக் கூறப்படுவனவற்றுள் சில பிள்ளைத் தமிழ், கலம்பகம், மும்மணிக்கோவை, அகப்பொருள் கோவை, இரட்டைமணி மாலை, நான்மணி மாலை, பரணி, குறவஞ்சி, பள்ளு, உலா, தூது, அந்தாதி என்பன. இவை பிற்கால இலக்கியங்கள் என்று கூறமுடியா. தொல்காப்பியர் காலத்தும் இவ்வகை இலக்கியங்கள் இருந்திருக்கவேண்டும். இல்லை எனில்,

“*குழவி மருங்கினும் கிழவதாகும்*”

எனவும்,

“*ஊரொடு தோற்றமும் உரித்தென மொழிப*”

எனவும் நூற்பாக்களை இயற்றுமல் இருப்பர். இலக்கியங் கண்டதற்கு இலக்கணம் இயம்புதல் தமிழ் மரபு ஆதலின் இவ்வாறு சூத்திரம் செய்யலாயினர். இவ்விரு சூத்திரங்கள் வழி, பிள்ளைத் தமிழ், உலா போன்ற பிரபந்தங்கள் இருந்திருக்க வேண்டும் என யூகிக்கவேண்டி இருக்கிறது. இது கொண்டு ஏனைய பிரபந்தங்களையும் ஏற்கவேண்டி யுள்ளது. இனி ஒவ்வொன்றையும் பற்றிய விளக்கங்களைக் காணலாம்.

பிள்ளைத் தமிழ்: இதனைப் பிள்ளைப்பாட்டு எனவும் கூறுவர். புலவர்கள் தாம் விரும்பும் தெய்வங்களையோ, வழிபடும் தெய்வங்களையோ, அன்றித் தம்மை ஆதரித்த வள்ளல்களையோ, தாம் விரும்பும் புலவர்களையோ குழந்தையாக எண்ணி அக்குழந்தையின் மூன்ரும் மாதம் முதல் இருபத்தோராம் மாதம் வரையில் உள்ள மாதங்களைப் பத்துப் பருவங்களாக வகுத்துக்கொண்டு ஒவ்வொரு

பருவத்திற்கும் பப்பத்து விருத்தப் பாடல்களை அமைத்துப்-பாடப்படுவது பிள்ளைத் தமிழ் ஆகும்.

அப்பருவங்களாவன காப்பு, செங்கீரை, தால், சப்-பாணி, முத்தம், வருகை, அம்புலி, சிற்றில் சிதைத்தல், சிறுபறை முழக்கல், சிறுதேர் உருட்டல் என்பன. இவை ஆண்பால் பிள்ளைத் தமிழ்ப் பருவங்களாகும். இவற்றுள் முன்னேழு பருவங்கள் அங்ஙனமே அமைய, பின் மூன்று பருவங்களுக்கு நேராக நீராடல், அம்மானை ஆடல், ஊசல் ஆடல் அமைத்துப் பாடப்படுவது பெண்பால் பிள்ளைத் தமிழ் ஆகும்.

காப்புப் பருவம்: இது பாட்டுடைத் தலைவனையோ தலை-வியையோ காப்பாற்றி அருளும்படி தெய்வங்களை வேண்டும் பருவமாகும்.

செங்கீரைப் பருவம்: இது செம்மையான மொழிகளைப் பேசுமாறு குழந்தையை வேண்டுதலாகும். கீர் என்பது சொல் எனப் பொருள்படும். ஈண்டுச் செங்கீரை என்றது குழந்தை ங்குவா, ங்குவா என்று கூறுதல். குழந்தை தன் தலையைத் தூக்கிக்கொண்டு இரண்டு கைகளைத் தரையில் ஊன்றி, ஒரு காலை முட்டியிட்டுப் பூமியில் பதித்து ஒரு காலை பின்னல் நீட்டிக்கொண்டு உடல் அசைந்து ஆடும் பருவத்தைச் செங்கீரை ஆடல் என்றும் கூறுவர். இதனை முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழில்,

"ஒருதாள் உந்தி எழுந்து இருகையும்
ஒருங்கு பதிந்து நிமிர்ந்து
அருள்பொழி திருமுகம் அசைய அசைந்தினிது
ஆடுக செங்கீரை."

என வரும் அடிகளால் அறியலாம்.

தாலப் பருவம்: தால் என்னும் மொழி நாக்கைக்-குறிக்கும். நாக்கை அசைத்து ஒலி எழுப்பிக் குழந்தையை உறங்க வைக்கும் பருவம் தாலாட்டாகும்.

சப்பாணிப் பருவம்: இது குழந்தையை இருகைகளையும் சேர்த்து ஓசை எழக்கொட்டும்படி கேட்கும் பருவம் ஆகும். சப்பாணி என்பதன் பொருள் கையொடு கை சேர்த்தல் ஆகும்.

முத்தப் பருவம்: இது குழந்தையை முத்தம் தரும்படி வேண்டும் பருவம்.

வருகைப் பருவம்: இது வாரானைப் பருவம் என்றும் கூறப்படும். குழந்தையை வருமாறு வேண்டும் பருவமே இது.

அம்புலிப் பருவம்: இது சந்திரனை நோக்கிக் குழந்தையுடன் வந்து விளையாடுமாறு வேண்டும் பருவம். சந்திரனைச்சாம, பேத, தான, தண்ட முறையில் அழைக்கும் முறை அவ்வப்புலவர்கள் பாடும் வன்மையினைப் பொருத்ததாகும். இப்பருவத்தில்தான் புலவனது புலமையினை நன்கு காணலாம். இதனால்தான் "பிள்ளைக் கவிக்கு அம்புலியாம்" என்றும் கூறப்பட்டது.

சிற்றிலிழைத்தல்: இது சிறு பெண்கள் மணலை சிறுசிறு ஓடுகளைக் கற்களைக்கொண்டு வீடு கட்டி விளையாடும்போது, குழந்தை அவற்றைக் காலால் உதைத்துக் கலைத்தலைச் செய்யவேண்டாம் என்று வேண்டுதலை அறிவிக்கும் பருவம்.

சிறுபறை முழக்கல்: இது குழந்தையைத் தன் கையில் சிறுபறை என்னும் இசைக்கருவி கொண்டு முழக்குமாறு வேண்டலை உணர்த்தும் பருவம்.

சிறுதேர் உருட்டல்: இது குழந்தையை மரத்தால் ஆன சிறிய தேரை உருட்டும்படி வேண்டலைக் குறிக்கும் பருவம் ஆகும்.

நீராடல்: இது பெண் குழந்தையை நீரில் குளிக்கும்படி வேண்டலை அறிவிக்கும் பருவம் ஆகும்.

அம்மானை: இது பெண் குழந்தையைக் கழங்கினை மேலே வீசி ஆடும்படி வேண்டலை அறிவிக்கும் பருவம்.

ஊசல்: இஃது ஊஞ்சலில் குழந்தையை ஆடும்படி வேண்டலை உணர்த்தும் பருவம்.

"விள்ளு மலரா தனத்தானும் வெய்ய சுதரி சனத்தானும்
விரும்பும் அதிகா ரக்கதையா விளம்பா நின்ற கோல்
கொள்ள
நள்ளும் பிரம சரியர்எலாம் நாடும் பலாசக் கோல்கொள்ள
நான்காம் ஆச்சி ரமத்தமைந்தார் நயந்து முந்தூழ்க்
கோல்கொள்ளத்

தெள்ளும் வணிகர் குலம்எல்லாம் தேற்றும் துலாக்கோல்
அதுகொள்ளச்
செம்பொன் மோலி அரசரெலாம் செங்கோல் கொள்ளச்
சிறுகோல்கைக்
கொள்ளும் குலத்தில் உதித்தஅருள் கொண்டல் வருக
வருகவே
குன்றைப் பொருமா ளிகைக்குன்றைக் கோமான் வருக
வருகவே.''

சேக்கிழார் பிள்ளைத்தமிழ்.

குறிப்பு: சிவபெருமான் பிறவா யாக்கைப் பெரியோன் ஆதலின், அப்பெருமான்மீது இதுவரையில் பிள்ளைத் தமிழ் பாடப் பட்டிலது என்பதை ஈண்டு அறியவும்.

கலம்பகம்: பல மலர்களின் தொகுப்பு மாலையைக் கதம்பம் என்பர். அதுபோலப் பலவகைப்பாக்கள், பா இனங்கள் அமையப் பாடப்படும் நூல் கலம்பகம் ஆகும். இது புயவகுப்பு, அம்மானை, ஊசல், களி, மறம், சித்து, தவம், கார், தூது, ஊசல் முதலான தலைப்புடன் கூடிய பாடல்களைக் கொண்டு திகழும். இவ்வாறு பதினெண் உறுப்புக்களைப் பெற்றுவரும். இந்தப் பிரபந்தத்தில் சிறப்புடைய உறுப்பு அம்மானை ஆகும். இந்நூல் அந்தாதி அமைப்பில் அமைந்திருக்கும்.

'' அம்புலியூர் என்னும் அணிகொள் சிதம்பரத்தே
வெம்புலியொன் றெந்நாளும் மேவும்காண் அம்மானை
வெம்புலியொன் றெந்நாளும் மேவுமே யாமாயின்
அம்பலத்தைத் தான்விட் டகலாதோ அம்மானை
ஆட்டைவிட்டு வேங்கை அகலுமோ அம்மானை.''

தில்லைக் கலம்பகம்.

மும்மணிக் கோவை: இது அகவல்பா, வெண்பா, கட்டளைக் கலித்துறை மாறி மாறி வர முப்பது பாடல்களைக் கொண்டு அந்தாதித் தொடை அமையப் பாடப்படுவது.

''எம்ஆர் உயிராம் எழில்மா சிலாமணியை
அம்மா பெறுதற் கர்தன்றே—சும்மா
இருந்தாரே பெற்றார்மற் றெவ்வுலகில் யாரே
வருந்தாது பெற்றார் மணி.''

அகப்பொருட் கோவை : இஃது அகப்பொருள் இலக்கணத்தில் கூறப்பெறும் முதல், கரு, உரிப்பொருள்களை அடிப்படையாகக் கொண்டு களவு, கற்பு என்ற பாகுபாட்டில் நானூறு கட்டளைக் கலித்துறைப் பாக்களில் திரு, உரு முதலான ஒப்புமை யுடைய தலைவன், தலைவி, தெய்வத்துணையால் எதிர்ப்பட்டுக் கூடி நிகழ்த்தும் நிகழ்ச்சிகளை ஒரு கோவைபடப் பாடப்படும் நூல். இறைவனையோ, வள்ளலையோ பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு இது செய்யப்படும்.

"அளகம் திருத்தி மதிநுதல் நீவி அணிஅகற்றிப்
புளகம்செய் தோளில் புரிவளை ஏற்றிப் புதியதென்றல்
கிளரும் கொழுந்தளிர் மெல்லடி தைவந்த இன்பமுறக்
களபம் செறிதனத் தாய்பெற்ற வாளன் கரதலமே.';

தஞ்சைவாணன் கோவை.

இரட்டை மணிமாலை : இது வெண்பாவும் கட்டளைக்கலித்துறையும் மாறி மாறி அந்தாதித் தொடையில் இருபது பாடல்களைக் கொண்டு விளங்குவது.

"பிரான்என்று தன்னைப்பன் னாள்பர வித்தொழு வார்இடர்கண்
டிரான்என்ன நிற்கின்ற ஈசன்கண் டீர்எனவண்டுகிண்டிப்
பொராநின்ற கொன்றைப் பொதும்பர்க் கிடந்து பொம் பென்றுரைவாய்
அராநின் றிரைக்கும் சடைச்செம்பொன் நீள்முடி அந்தணனே."

காரைக்கால் அம்மையார் திரு. இரட்டைமணிமாலை.

நான்மணிமாலை : இது வெண்பா, கட்டளைக்கலித்துறை ஆசிரிய விருத்தம், அகவல்பா மாறி, மாறி அந்தாதித் தொடையில் அமைந்து நாற்பது பாடல்களைக் கொண்டு வருவது.

"கொள்ளைக் கதிர்முத்தின் பந்தரும் சின்னமும் கொள்ளும் ஒரு
பிள்ளைக் கதுதகும் நாவர சாய பெருந்தகையோய்
கள்ளைக்குவளை உமிழ்வீ ழியில்படிக் காசொன்று
வள்ளைக் குழைஉமை பங்காளர் கையில்என் வாங்கினையே."

நால்வர் நான்மணிமாலை.

பரணி: இது போர் நடக்கையில், பரண்மேல் இருந்து பாடப்படுதலின், பரணி எனப்பட்டது. பரணி வெற்றிதரும் கொற்றவையைக் குறித்ததாதலின், அவ்வெற்றியினை பெற்ற மன்னன் மீது பாடப்படுவது பரணி என்றும் கூறுவர். "ஆனை ஆயிரம் அமரில் வென்ற மன்னவனுக்கு வகுப்பது பரணி" என்னும் விதிப்படி போரில் ஆயிரம் யானைகளைக் கொன்ற வீரன் மீது பாடப்படுவது பரணி என்றும் கூறுதல் உண்டு. இது கலித்தாழிசை என்னும் கலிப்பாவின் இனத்தால் பாடப்படும்.

இப்பரணியில் கடவுள் வாழ்த்து, கடை திறப்பு, காடு பாடியது, கோயில் பாடியது, இந்திரசாலம், இராசபரம்பரியம், பேய் முறையீடு, அவதாரம், காளிக்குக் கூளி கூறியது, போர் பாடியது, களம் பாடியது, கூழ் அடுதல் என்னும் தலைப்புக்கள் அமைய இது பாடப்படும்.

"தரைமகளும் தன்கொழுநன் உடலம்தன்னைத்
தாங்காமல் தன்கரத்தால் தாங்கி விண்ணுட்டு
அரமகளிர் அவ்வுயிரைப் புணரா முன்னம்
ஆவி ஒக்க விடுவாளைக் காண்மின் காண்மின்"

கலிங்கத்துப் பரணி.

குறவஞ்சி: இது நாடக வகையைச் சார்ந்த நூல். இதனைக் குறவஞ்சி நாட்டியம் என்றும் கூறி வந்தனர். குறத்தி குறிசொல்லுதல் மட்டும் கூறப்படுவது. இதனை குறத்தி பாட்டு என்றும், குறவஞ்சி என்றும் கூறுவர். இஃது இசைப் பாட்டுக் கலந்தது. "குறம்" என்னும் நாடக முறையில் அமைந்தது.

குறவஞ்சியில் கணபதி வருதல், கட்டியங்காரன் வருதல், மோகினியும், மோகனராஜனும் வருதல். தலைவன் உலாவருகையில் தலைவி ஒருத்தி அவனைக் கண்டு காமுறுதல், குறத்தி வருதல், அவளைத் தலைவி அழைத்தல், குறத்தி தான்வாழ் மலைகளையும், உறவினர் சிறப்புக்களையும், தான் குறிசொல்லும் பெருமையினையும் கூறுதல். இது குறத்தியின் கணவனான குறவன் தன்வேலையாளான குளுவனுடன் புறப்பட்டு வருதல், அவன் பறவைகளை வேட்டை ஆடுதல், குறத்தியை நினைந்து அவன் வருந்துதல், பின் அவன்

அவள் இருக்கும் இடத்தைத் தேடிக்கண்டு பிடித்தல், பின் இருவரும் கூடி இன்புற்றுத் தலைவனை வாழ்த்தல் ஆகியவை கோவையாகப் பாடப்படும்.

பல்லவி

"கட்டியங் காரன் வந்தானே—ஒய்யாரமாகக்
கட்டியங் காரன் வந்தானே

அனுபல்லவி

கட்டிய கொண்டை வனப்புறு சென்னியில்
கட்டழ குருமாலை கட்டிக்கொண்டு நல்ல (கட்டி)

சரணம்

மிகஎழில் உற்றிடு காவிச் சல்லடம்
மிசைசுற்றிக் கச்சை இறுக்கியே
தகதிமிதிக்கிட என்னத்
தருக்குடன் மேல்மீசை முறுக்கியே." (கட்டி)

சாபேந்திரபூபாலக் குறவஞ்சி.

பள்ளு : இந்நூல் உழத்தியர்பாட்டு என்றும் கூறப் படும். இப்பள்ளுகள் பள்ளர்களின் வாழ்க்கை நிகழ்ச்சி களைப் புனைந்துரைப்பது. இதுவும் நாடக நூல் வகையுள் ஒன்றாகும். ஆகவே, இதன்கண் இசைப்பாடல்களும் வரும். பள்ளுப்பாடல்கள், நம்நாட்டில் பல இருந்திருக்கவேண்டும் என்பது "நெல்லுவகையை எண்ணிலும் பள்ளுவகையை எண்ண முடியாது" என்னும் பழமொழியினால் அறியக் கிடக்கிறது. இந்நூற்களால் தமிழ் நாட்டின் வரலாற்றை நன்கு உணரலாம். இத்தகைய நூல்களுக்கு இலக்கண மாகத் தொல்காப்பியர் கூறிய விருந்து என்பதைக் காட்டலாம்.

பள்ளுநூல் வழி, பண்டைத்தமிழ் அரசர்கள், வேளிர் கள், குறுநில மன்னர்கள், வள்ளல்கள் பற்றிய வரலாற்றுக் குறிப்புக்களையும், நவரசப்பாங்கையும் காணலாம். பள்ளர் பெருமை, மழைக்குறி, ஆற்று வெள்ளம். பள்ளன் பள்ளத் தியர் பேச்சு, நெல்வகை, மாட்டுவகை, ஏர்க்கால்வகை முதலானவற்றை அறியவேண்டிய குறிப்புக்களும் இதில் உள.

"ஆற்றுவெள்ளம்நாளைவரத் தோற்றுதே குறி—மலையாள
மின்னல்ஈழ மின்னல் சூழமின்னுதே
நேற்றும் இன்றும் கொம்பு முற்றிக் காற்றடிக்குதே—கேணி
நீர்ப்படு சொரித்த வளைகூப்பிடுதே
சேற்றுநண்டு சேற்றில்வளை ஏற்றடைக்குதே—மழை
தேடிஒரு கொடிவானம் பாடி ஆடுதே
போற்றுதிருமால்அழகர்க் கேற்றமாம் பண்ணைச்
சேரிப்புள்ளிப் பள்ளர்ஆடிப் பாடித்துள்ளிக்
கொள்வமே."

முக்கூடற்பள்ளு.

உலா : இது தெருவில் பவனிவரும் தெய்வத்தையோ, சிறந்த புருடனையோ கண்டு பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை அரிவை, தெரிவை, பேரிளம் பெண் என்னும் ஏழு வகைப் பருவ மகளிர் கண்டு காதல்கூறும் வகையினைக் கலிவெண்பாவால் பாடப்படும். இதனை "ஊரொடு தோற்ற-மும் உரித்தெனமொழி" என்று தொல்காப்பியர் கூறிய இலக்கணத்தில் அடக்க வேண்டும். இந்நூல் உலாப்புறம் என்றும் கூறப்படும். இதுவே அன்றித் திரு உலாமாலை, பவனி உலா, உலாமாலை, பவனி உலாமாலை எனவும் வழங்கப்பட்டதாகத் தெரிகிறது.

இவ்வுலாப் பிரபந்தத்தினைத் தெய்வங்கள் மீதும், அரசர்கள் மீதும், வள்ளல்கள் மீதும் பாடி வந்துள்ளனர். திருக்கைலாய ஞானஉலா, இராசராச சோழன் உலா, ஆளுடைய பிள்ளையார் திருஉலாமாலை, திருஞான பாலைய தேசிகர் உலா, சிவந்தெழுந்த பல்லவராயன் உலாக்களை உதாரணமாகக் காட்டலாம். இப் பிரபந்தத்தில் புலவனது திறன் விளங்கும் இடம் பெதும்பைப் பருவத்தவள் நிலை-யினைப் பாடுதலே ஆகும். இதனால்தான் "பேசும் உலாவில் பெதும்பைப் புலி" என்ற தொடர் நிலவி வருகிறது.

பேதைப் பருவத்தாள் கண்களை,

"உலக மயக்கம் ஒழிந்தோர் மனம்போல்
கலகம் சிறிதறியாக் கண்ணாள்."

என்று சொக்கநாதர் உலாவிலும்,

பெதும்பைப் பருவத்தாள் கண்களை,

"வேட்டவர்தம் புந்திகவர் வஞ்சனையும் பொய்யும்
கொலையும் இடம்வந்து வந்துபார்க்கும் மதர்விழியாள்."

என்று ஏகாம்பர நாதர் உலாவிலும்,

மங்கைப் பருவத்தாள் கண்களை,

"வாட்கைக் குமரருக்கு மையல் பிணிகொடுத்து
மீட்கத் தெரியும் விழியினாள்."

என்று திருப்பூவண நாதர் உலாவிலும்,

மடந்தைப் பருவத்தாள் கண்களை,

"செங்கோல் ஒழித்தெவர்க்கும் தீங்கு புரிவேந்தர்
வெங்கோ லினும்கொடிய வேற்கண்ணாள்."

என்று மதுரைச் சொக்கநாதர் உலாவிலும்,

அரிவையின் கண்களை,

"குழலிலே கண்ணி வைத்தாள் கொங்கையில் வார்இட்டாள்
விழியை வலைஆய்த் திரைய வீசினாள்."

என்று திருக்காளத்தி நாதர் உலாவிலும்,

தெரிவை எத்தகையவள் என்பதை

"ஒருத்தி தெரிவை உலகு பதினாலும்
வருத்தி மனம்கவர வல்லாள்."

என்று திருக்கழுக்குன்ற உலாவிலும்,

பேரிளம் பெண் தன் கண்ணுக்கு மையும் இட்டுக்கொள்ளாமைக்குரிய காரணத்தை,

"மேலாம் சிவன்வெள்ளை மேனியும்—நீலக்
களமானும் எய்தினெனக் கண்டொளித்த தென்ன
வளமான் விழிக்கெழுதா மையாள்."

என்று திருக்கழுக்குன்ற உலாவிலும் பாடப்பட்டிருத்தலைப் படிக்கும்போது இன்பச்சுவை இலங்குதலைக் காணலாம்.

தூது : இந்நூல் தலைவன் தலைவியர்கள் காதல் காரணமாகத் துன்புற்றபோது, ஒருவர் மற்றொருவரிடம் தம் வருத்

தத்தைத் தெரிவிக்கும்படி உயர்திணைப் பொருள்களையே னும், அஃறிணைப் பொருள்களையேனும் தூது விடுப்பதாகப் பல கற்பனை நயம் தோன்றப் பாடப்படுவதாகும். இதனைக் கலிவெண்பா என்னும் செய்யுளில் பாடுதல் மரபு. இதனால் பாட்டுடைத் தலைவன் தூது செல்லும் பொருள்களின் வரலாற்றையும் பெருமையினையும், அணி வகைகளையும் அறியலாம். இப் பிரபந்தத்தில் புலவர் தாம் எந்தப் பொருளைத் தூது விடுப்பதாகக் கூறுகின்றனரோ, அந்தப் பொருளே தூது போதற்கு எல்லாப் படியாலும் தக்கது, ஏனையவை தக்கவை அல்ல என்று காரணம் காட்டிக் கூறும் திறன் சுவைமிக்கதாக இருக்கும்.

“அன்னந்தனை விடுப்பேன் அன்னந்தான் அங்கவரை
இன்னம்தான் கண்டறியா தென்பரே—மன்எந்தாய்
அப்பாலோர் வண்டை அனுப்பின் அவர்காமம்
செப்பாதே என்றால் திகைக்குமே—தப்பாது
மானைப்போய்த் தூதுசொல்லி வாஎன்பேன் வல்லியம்பூந்
தானைப் பரமர்பால் சாராதே—ஏனைப்பூங்
கோகிலத்தை நான்விடுப்பேன் கோகிலமும் காக்கையினம்
ஆகி வலியானுக் கஞ்சுமே—ஆகையினால்
இந்தமனத்தைத் தூதாய் ஏகுஎன்பேன் இம்மனமும்
அந்த மனோதீதர்பால் அண்டாதே—எந்தவிதம்
என்றென் றிரங்கினேன் என்கவலை எல்லாம்
குன்ற னையாய் உன்னுடனே கூறுகேன்
இருந்தமிழே உன்னால் இருந்தேன் இமையோர்
விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன் ஆனமையால்
துறவாதே சேர்ந்து சுகாநந்தம் நல்க
மறவாதே தூது சொல்லி வார்.”

தமிழ் விடுதூது.

அந்தாதி: என்பது முன் பாடலின் ஈற்றடியோ, ஈற்றுச்சீரோ, ஈற்றசையோ, ஈற்றெழுத்தோ, பின்வரும் செய்யுளுக்கு முதலாக அமையப் பாடுவது இப்பிரபந்த மாகும். அந்தம் ஆதியாகப் பாடுவது என்பதே அந்தாதி என்பதன் பொருள். இப்பிரபந்தம் வெண்பாவிலேனும் கட்டளைக்கலித்துறை யாப்பிலேனும் பாடப்படும்.

"தாழ்சடையும் நீள்முடியும் ஒள்மழுவும் சக்கரமும்
சூழ்அரவும் பொன்னும் தோன்றுமால்—சூழும்
திரண்டருவி பாயும் திருமலைமேல் எந்தைக்கு
இரண்டுருவும் ஒன்ருய் இசைந்து."

"இசைந்த அரவமும் வெற்பும் கடலும்
பசைந்தங் கமுது படுப்ப—அசைந்து
கடைந்த வருத்தமோ கச்சிவெஃகாவில்
கிடந்திருந்து நின்றதுவும் அங்கு."

இங்கு எடுத்துக் கூறப்பட்ட ஒவ்வொரு பிரபந்த வகையிலும் பல பிரபந்தங்கள் உண்டு. மேலும், இங்குத் தொண்ணூற்ருறு வகைப் பிரபந்தங்களில் சிலவே எடுத்து விளக்கப் பட்டன. ஏனையவற்றையும் நீங்கள் அறிந்து கொள்ளுதல் சாலவும் நல்லது.

உரையாசிரியர்கள்

மூல நூல் ஆசிரியர்களின் கருத்தறிந்து உரை எழுதக் கூடியவர்களே உரை ஆசிரியர்கள் எனப்படுவர். அவர்கட்குப் பன்னூல் பயிற்சி இருந்தால் அன்றி, உரை எழுத இயலாது. உரை எழுதும் போதும் நடு நிலையிலிருந்து உரை கூறுதல் வேண்டும். ஒருசார் நின்று உரை எழுதுதல் ஆகாது. இது நீதி நூல்கட்கும், இலக்கணங்கட்கும், இலக்கியங்கட்கும் உரை எழுத வரும் உரையாசிரியர்கட் கமைந்த பொதுவிதி என்க. ஆனல், சமய நூல்களுக்கு உரை எழுதும்போது அவ்வச்சமயக் கருத்துக்கு இயைய உரை எழுதுவது பண்புடைமை என்க. இன்னேரன்ன பண்புகட்கு இலக்கியமாய்த் திகழ்பவர்களே இங்கு எடுத்து எழுதப்படுபவர்கள் ஆவார். இவர்கள் உரை எழுதிலர் எனில், மூல நூல்களின் உண்மைப் பொருளை அறிதல் பெரிதும் கடினமே.

இளம்பூரணர்: இவரே தொல்காப்பியத்திற்கு முதல் முதல் உரை எழுதியவர். இதனல் இவரை உரையாசிரியர் என்றும் கூறுவர். இவரை "மயிலை நாதர் உளங்கூர்க் கேள்வி இளம்பூரணர்" என்றும், "ஏதமில் மாதவன்" என்றும், இலக்கணக் கொத்தாசிரியர் "உளங்கூர் உரை

ஆய் இளம்பூரணர் ” என்றும் சிறப்பித்துக் கூறியுள்ளனர். இவரது உரை எளிமையும், தெளிவும், சுருக்கமும் அமையப் பெற்றது. இளம்பூரணன் என்னும் பெயர் முருகப் பெருமானுக்கு உரியது. ஆகவே, இவர் சைவராக இருக்க வேண்டுமென்று எண்ணம் எழுகின்றது. ஆனால், மயிலை நாதர் உரையின் மூலம், இவர் சைனர் என்பது தெரிகிறது. இவர் தமது உரையில் சிவபெருமானைப் பற்றிக் குறிக்கும் இடங்களில், “ இறைவன் ” என்று குறித்துச் சொல்லுதல் கவனித்தற்குரியது. இவரது காலம் கி. பி. 12 ஆம் நூற்றாண்டு.

பேராசிரியர் : இவரது இயற் பெயர் இன்னது என்பதை அறிதற்கில்லை. இவரது பேரறிவின் திறத்தை வியந்து போலும், இவரைப் பேராசிரியர் என்று குறிக்கலாயினர். இவரும் தொல்காப்பியத்திற்கு உரை கண்டவர். ஆனால், இவரது உரை முற்றிலும் கிடைத்திலது. பொருளதிகாரத்தில் மெய்ப்பாட்டியல், உவமையியல், செய்யுளியல், மரபியல் இவற்றிற்கே உரைகள் காணப்படுகின்றன. இவரது உரையில் வரலாற்றுக் குறிப்புக்களையும், முச்சங்கத்தைப் பற்றிய குறிப்புக்களையும் காணலாம். இவரை மதுரை ஆசிரியர் என்று கூறுவாரும் உளர்.

இவர் மாணிக்கவாசக சுவாமிகள் திருவாய் மலர்ந்த திருக்கோவையாருக்கும் உரை எழுதியுள்ளார். இந்நூலில் இவரது நுண்ணறிவுத் திறனை முற்றிலும் உணரலாம். இந்நூலில் முதற் செய்யுளுக்கு இவர் எழுதியுள்ள உரையினை நோக்கின் இவ்வுண்மை உறுதி ஆகும்.

குறுந்தொகைக்கும் இவரது உரை உண்டு என்பர். இவரது சமயம் சைவம். இவர் தண்டியலங்கார உதாரணச் செய்யுள்களை தமது உரையில் மேற்கோள் காட்டுகின்றார். அச் செய்யுட்கள் இரண்டாம் குலோத்துங்கனைக் குறிப்பதால் அவனது காலத்துக்கும் பிற்பட்டவர் என்று கருத வேண்டி இருத்தலின், இவரது காலம் கி. பி. 13 ஆம் நூற்றாண்டென்க.

சேனாவரையர் : இவர் வடமொழியில் நல்ல புலமை பெற்றவர் என்பது இவரது உரை நமக்கு நன்கு புலப்படுத்துகின்றது. இவர் தொல்காப்பியச் சொல்லதிகாரத்-

திற்குச் சிறந்த உரை எழுதியவர். "ஆனு இயல்பில் சேனுவரையர்" என்று இவரைச் சான்றோர் சிறப்பிப்பர்.

சாஸனத்தில் ஆற்றூர்ச் சேனுவரையர் என்று காணப் படுதலால், இவர் ஆற்றூரில் பிறந்தவர் என ஒருவாறு அறியலாம். இவ்வூர் மதுரையைச் சார்ந்தது. இவரது பெயரான சேனு அரையர் என்பதை உற்று நோக்கும்போது இவர் ஒரு வேளை சேனைக்குத் தலைவராக இருந்திருக்க வேண்டும் என்பதும் யூகிக்கப்படுகிறது. இவர் எழுத்ததிகாரத்திற்கு உரை எழுதவில்லையே என்ற கருத்தில் "வட நூற்கடலை நிலைகண்டறிந்த சேனுவரையர், எழுத்ததிகாரத்திற்கு உரை செய்வாராயின் இன்னோரன்ன பொருள் அனைத்தும் தோன்ற ஆசிரியர் கருத்துணர்ந் துரைப்பர்" என்று சிவ ஞான முனிவர் எழுதியுள்ளார். இவரது காலம் கி.பி. 13ஆம் நூற்றாண்டு.

நச்சினர்க்கினியர் : இவர் பாண்டிய நாட்டில் மதுரைமா நகரில் பாரத்துவாச கோத்திரத்தில் பிராமண மரபில் தோன்றியவர். இவர் சைவ சமயத்தினர் என்பது இவரது பெயரால் தெரியவருகிறது. அப்பர் இறைவரை, "நச்சு வார்க்கினியர் போலும், நாக வீச்சரவனுரே" என்றும், காஞ்சிபுராணம், "நச்சினர்க் கினியாய் போற்றி" என்றும் இறைவரைக் குறித்துப் பாடி இருத்தலாலும் இவர் சைவப் பெரியர் என்பது தெளிவு. மேலும், இவரை உரைச் சிறப்புப் பாயிரம் "சிவச்சுடர்தானே ஆய தன்மை யாளன்" என்றும் குறிப்பிடுகிறது. இவர் காட்டும் உதாரணங்கள் திருச்சிற்றம்பலம், பெரும்பற்றப்புலியூர் என்று எடுத்துக் காட்டுவதாலும், திருவாசகம், திருக்கோவையார், ஆதி உலா முதலிய சைவ நூல்களினின்றும் மேற்கோள்களை எடுத்து மொழிதலாலும் இவர் சைவர் என்பதை நிலைநாட்டலாம்.

இவர் இன்றியமையாத இடங்களில் பதப் பொருளையும், இலக்கணக் குறிப்பையும் எழுதுவர். கொண்டு கூட்டுப் பொருள்கோள் இவரிடம் மிகுதி. இவர், இவருக்கு முன்னிருந்த உரையாசிரியரின் உரைகளைச் சிற்சில இடங்களில் கண்டித்து எழுதும் தன்மையர். இவர் "உச்சிமேல் புலவர் கொள் நச்சினர்க்கினியர்" என்று சிறப்பித்துக் கூறத்தகும் பெருமைக்குரியர். இவரை மேற்கு நாட்டவரும்கூடப் பெரிதும் புகழ்ந்துள்ளார். Rew. Dr. Bower என்பவர்,

"Nachinarkiniar's comments are very much on the plan of European annotations. He paraphrases the text, and points out grammatical peculiarities; his style is condensed and his language pedantic" என்று பாராட்டி எழுதியுள்ளார்.

இவர் தொல்காப்பியம், பத்துப் பாட்டு, கலித்தொகை, சீவக சிந்தாமணி ஆகிய நூற்களுக்கு உரை எழுதியுள்ளனர். பேராசிரியர் எழுதாது விட்டிருந்த குறுந்தொகை இருபது செய்யுட்களுக்கும் உரை எழுதினர் என்பர். இப்போதுள்ள திருக்கோவையார் உரை இவரால் எழுதப்பட்ட தென்ற கருத்தும் உண்டு. இவரது காலம் கி. பி. 14 ஆம் நூற்றாண்டு.

கல்லாடனார்: இவரும் தொல்காப்பியத்திற்கு உரை எழுதினார் எனக் கூறுவர். "ஒல்காப்பெருமைத் தொல்காப்பியத்திற்கு உரையிட்ட விரகர் கல்லாடர்" என்ற தொடர் இதனை வலியுறுத்தும். ஆனால், இதுபோது சொல்லதிகாரத்திற்கு மட்டும் அவர் உரை உளது. இவர் கல்லாடம் என்ற ஊரினர் ஆதலின், இப்பெயர் பெற்றனர். வேறு குறிப்பு இவரைப்பற்றி அறிதற்கு இல்லை. காலம் கி.பி. 9 ஆம் நூற்றாண்டென்பர். கல்லாடம் சைவத்தலம். ஆதலின் இவர் சைவராக இருக்கலாம். இவரைப்பற்றிய குறிப்பைப் பதினோராம் திருமுறையில் எழுதப்பட்டுள்ளது. ஆண்டும் காண்க.

தெய்வச் சிலையார்: இவரைப் பற்றிய குறிப்புக்கள் ஒன்றும் தெரியவரவில்லை. இவரும் தொல்காப்பியத்திற்கு உரை கண்டவர் என்பர்.

பரிமேலழகர்: இவர் காஞ்சிபுரத்தில் உலகளந்தப் பெருமாள் கோவில் அர்ச்சக மரபினர். இதனால் இவர் வைணவ மரபினர் என்பது தெளிவு. இவர் வடமொழியும், செந்தமிழும் செவ்வனே பயின்றவர். இதனை இவரது திருக்குறள் உரையில் நன்கு காணலாம். இவர் திருக்குறளுக்குச் செய்த உரையே எல்லாராலும் ஒருங்கே புகழப்பட்டு வருகிறது. கொற்றவங்குடி உமாபதி சிவாசாரியார் இவரது உரையை "தெள்ளு பரிமேலழகர் செய்த உரை" எனச் சிறப்பித்துக் கூறியுள்ளனர். இவர் பரிபாடலுக்கும் உரை

எழுதியுள்ளனர். இவரது உரை தருக்க அமைப்பில் அமைந்து காணப்படும். மேற்கோட் பாடல்களை உரைநடையிலேயே எழுதிவிடுவார். இவரது உரைச் சிறப்பைத் தொண்டை மண்டலச் சதகச் செய்யுள், "பரித்து உரை எல்லாம் பரிமேலழகர் தெரித்த உரையாமோ தெளி" என்று கூறுகிறது. இவர் கி. பி. 13 ஆம் நூற்றுண்டினர்.

பரிமேலழகர் என்பது மதுரைச் சொக்கலிங்கப் பெருமானையும் குறிக்கும். அவர் மணிமொழியார் பொருட்டுக் குதிரைமேல் வந்தனர். ஆதலின் அவர் பரிமேலழகர் என்ற பெயர்க்கும் உரியர் என்ற காரணத்தால், இப்பெயரைச் சூடிய பரிமேலழகரைச் சைவர் எனவும் கூறுவர். இவர் திருமுருகாற்றுப் படைக்கும் உரை எழுதியதாகவும் தெரிகிறது.

பரிமேலழகர் உரையே திருக்குறளுக்குச் சிறந்து இருந்தது என்பதன் கருத்து, இந்நூலுக்கு உரை வகுத்த தருமர், மணக்குடவர், தாமத்தர், நச்சர், பரிமேல் அழகர் திருமலையர், மல்லர், கவிப் பெருமாள், காளிங்கர் என்னும் பதின்மருள் இவர் செய்த உரயையின் சிறப்பை உற்று நோக்கியே ஆகும். இப்பதின்மருள் மணக்குடவர் உரையும் போற்றுதற்குரியதே. சுருங்கிய அளவில் இவரது உரை உளது. இப்பதின்மர் உரைகளும் நமக்குக் கிடைத்தில. திருக்குறள் நூலுக்கு எழுதிய உரைகள் இப்போது கிடைத்துள்ளவற்றைக் காணவிழையின், திருத்தருமை ஆதீன வெளியீடாகிய திருக்குறள் உரை வளம் என்னும் நூலில் காணவும்.

அடியார்க்கு நல்லார்: இவர் நிரம்பையர் காவலர் என்ற பெயரையுமுடையவர். இவர் சிலப்பதிகாரத்திற்கு ஒப்புயர்வற்ற உரையினை எழுதியுள்ளனர். இவரது உரை எதுகை மோனைகளுடன் கூடியது. இவர் உரையால் முச்சங்க வரலாற்றையும் அறியலாம். இவரது உரையால் தமிழ் இசையின் மாண்பும் அறிய வருகின்றன. இவரால் தமிழ் இசை நாடகங்களைப்பற்றிப் பல நூல்கள் தமிழில் இருந்தன என்பதை அறிகிறோம்.

இவர் உரை முற்றிலும் கிடைத்திலது. சிலப்பதிகாரப் பிற்பகுதிக்கு உரையே இல்லை. இவரை ஆதரித்தவர் பொப்பண்ண காங்கேயன் என்னும் கன்னட அரசனுவான். இவனது ஆதரவே சிலம்பிற்கு உரைகாணச் செய்தது

என்பதை, "பொப்பண்ண காங்கேயர் கோன் அளித்த சோற்றுச் செருக்கல்லவோ தமிழ் மூன்று உரை செய்வித்ததே" என்ற பாடலால் அறியலாம். இவர் இன்றியமையாத இடங்களில் இலக்கணக் குறிப்பினைக் காட்டுவர். பல நூற்களினின்று மேற்கோள் காட்டி இருத்தலின், இவரது பரந்த புலமையினை அறியலாம்.

இவர் பிறந்த ஊர் நிரம்பையூர். இவர் வாழ்ந்த இடம் தீபங்குடி என்பர். இவர் கலிங்கத்துப் பரணியிலிருந்தும் மேற்கோள் காட்டியுள்ளமையின், இவரது காலம் கி. பி. 12 ஆம் நூற்றுண்டிற்குப் பிற்பட்டதாகும்.

புறநானூறு, அகநானூறு, பதிற்றுப் பத்து ஆகிய நூல்களுக்கு உரைகளும், குறிப்பு உரைகளும் உள. ஆனால், அவற்றை எழுதிய ஆசிரியர்கள் இன்னுர் என்று அறிதற்கு இல்லை.

வைணவ நூல் உரையாசிரியர்கள்

தேவாரம், திருவாசகம் ஆகிய திருமுறைகட்கு இத்காலத்தில் உரைகள் எழுந்தன என்றுலும், பண்டைக் காலத்தில் இவற்றிற்கு உரைகள் இல்லை. ஆனுல், சைவசித்தாந்த நூற்களுக்குப் பின்னுல், சிவஞான முனிவர் போன்ற சித்தாந்தப் பேரறிஞர்கள் சிறந்த உரை எழுதியுள்ளனர் என்பதைமட்டும் இங்கு நினைவில் கொள்ளலாம். நாலாயிர திவ்விய பிரபந்தத்திற்கு அரிய உரையினை வைணவப் பேரறிஞர்கள் பண்டைக் காலத்திலே எழுதியுள்ளனர். அவர்கள் யாவர், அவர்கள் உரை எவ்வெவற்றிற்கு உண்டு, என்பன போன்றவற்றை ஈண்டு அறிதல் சிறப்புடையதாகும். இவர்கள் தமிழ் மொழியினையும், வட மொழியினையும் நன்கு கற்றவர்கள். ஆகவே, இவர்கள் உரையில் இவ்விரு மொழிகளும் நன்கு கலந்து காணப்படும். இதனுல் இவ்வுரைகள் மணிப்பிரவாள நடை எனப்படும். மணியும் முத்தும் கலந்தாற் போன்ற உரை என்பதே இத்தொடரின் பொருள். இவர்கள் உரைகளை வியாக்கியானம் என்று கூறுதல் வைணவர் மரபு.

ஆளவந்தார் : இவர்தாம் திருவாய் மொழிக்கு முதல் முதல் உரை எழுதினர் என்பர். இவர் எழுதிய வேறு நூல்கள்

ஆகமப் பிரமாணம். ஆத்ம சித்தி, ஈச்சுரசித்தி, கீதார்த்த சங்கிரகம், ஸ்ரீ தோத்திரம் என்பன. இவர் வீர நாராயண புரத்தில் பிறந்தார்; நாதமுனிகளின் பேரர். இவரது தந்தை-யார் ஈசுர முனிவர். ஆளவந்தார், யமுனைத்துறைவர், யமுனா சாரியார் என்றும் கூறப்படுவார். இவரது காலம் கி. பி. 11 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி.

திருக்குருகைப் பெருமாள் பிள்ளான்: இவர் இராமானு சாசாரியார் மாணவர். இவர் திருவாய் மொழிக்கு ஆறாயிரப் படி என்ற உரையினை எழுதியவர். இவர் திருக்குருகைப் பிள்ளான் பரம இரகசியம் என்னும் நூலையும் இயற்றியுள்-ளார். காலம் கி. பி. 13 ஆம் நூற்றாண்டு. படி என்பது அளவு என்னும் பொருளுடையது. ஆக, ஆறாயிரப்படி என்பது ஆறாயிரக் கிரந்தங்களையுடைய அளவினை உடையதாகும். ஒரு கிரந்தம் என்பது மெய்யெழுத்துக்களை நீக்கிய பின் உள்ள முப்பத்திரண்டு எழுத்துக்களால் ஆகியது.

நஞ்சீயர்: இவர் திரு நாராயணபுரத்தில் பிறந்தவர். இவருக்குச் சீரங்கநாதர் என்ற பெயரும் உண்டு. இவரது ஆசிரியர் ஸ்ரீ பட்டர். இவர் திருவாய்மொழிக்கு ஒன்பதினா-யிரப்படி உரையும், பெரிய திருமொழிக்கு வியாக்கி யானமும், கண்ணினுட்சிறுத்தாம்பு உரை, திருப்பள்ளி எழுச்சி உரை ஆகியவற்றையும் எழுதியவர். அஞ்ஞான, ஞான அவத்தைகள் என்னும் நூலையும் இயற்றியவர். காலம் கி. பி. பதினாறும் நூற்றாண்டு.

நம்பிள்ளை: இவர் நம்பூரில் பிறந்தவர். இவருக்கு வரதராசர் என்ற பெயரும் உண்டு. இவர் திருவாய் மொழிக்கு ஒன்பதினாயிரப்படி உரை, திருப்பள்ளி எழுச்சி, திருவிருத்தம், பெரிய திருமொழி இவற்றிற்கு வியாக்கி யானங்களை எழுதியுள்ளனர். நம்பிள்ளை ரகசியம் என்னும் நூலையும் இயற்றியுள்ளனர். காலம் கி. பி. 14 ஆம் நூற்-றாண்டு. இவர் நஞ்சீயர் மாணவர். பிள்ளை என்ற பட்டம் அக் காலத்தில் பிராம்மணர்கட்கு இருந்த பட்டமாகக் காணப்-படுகிறது. ஞானசம்பந்தப்பிள்ளை என்று திருஞானசம்பந்-தரும் அழைக்கப்பட்டதை ஈண்டு நினைவு கொள்ளலாம்.

அழகிய மணவாள ஜீயர்: இவர் திருவிருத்த வியாக்கி-யானம், திருவாய்மொழி வியாக்கியானம், பன்னீராயிரப்

படி, தத்துவதீபப் பிரகாசம், பகவத்கீதை வெண்பா முதலிய நூல்களை இயற்றியவர். காலம் கி. பி. 15 ஆம் நூற்றுண்டு.

பெரியவாச்சான் பிள்ளை : இவர் நம்பிள்ளையின் மாணவர். நாலாயிரப் பிரபந்தத்திற்கு 24000 படி உரை எழுதியவர். இவர் அமலநாதிப்பிரான் வியாக்கியானம் வரைந்துள்ளார். இவரது உரையினைத் தென்கலையார் பெரிதும் பாராட்டுவர். இவர் இயற்றிய நூல்கள் கலியன் அருளிப்பாடு, பரந்த படி, திரி மத சித்தாந்த சாரசங்கிரகம் முதலியன. காலம் கி. பி. 15 ஆம் நூற்றுண்டு.

வடக்குத் திருவீதிப் பிள்ளை : இவ்ரும் நம்பிள்ளையின் மாணவர். இவரது திருமகனுரே பிள்ளைலோகாசார்யர். இவர் திருவாய்மொழிக்கு 36000 படி உரை எழுதியவர். காலம் கி. பி. 15ஆம் நூற்றுண்டு.

அழகிய மணவாள நாயனுர் : இவர் வடக்குத் திருவீதிப் பிள்ளையின் திருமகனுர். பிள்ளை லோகாசார்யரின் இளவல். இவர் திருப்பாவைக்கு ஆருயிரப்படி உரையும், அமலநாதப் பிரான் கண்ணினுள் சிறுத்தாம்பு ஆகியவற்றிற்கு வியாக்கியானமும் இயற்றியவர். இவரது நூல்கள் மாணிக்கமாலை, ஆசார்ய இருதய அருளிச் செயல், இரகசியம் என்பன. காலம். கி. பி. 10 ஆம் நூற்றுண்டு.

மணவாள முனிவர் : இவர் பெரிய ஜீயர் என்றும் கூறப்படுவார். இவர் தென்கலையார்க்குத் தலைவர். இவர் பாண்டிய நாட்டுச் சிக்கில் கிடாரம் என்னும் ஊரில் பிறந்தவர். இவர் அரச வேலையில் சில காலம் இருந்து, பின் துறவு பூண்டவர். இவரை யதிந்திரப் பிரணவர் என்றும் அழைப்பர். இவரது ஆசிரியர் திருவாய் மொழிப்பிள்ளை என்பவர். மணவாள முனிவர் 36000 படி உரையினைப் பலருக்கும் உபதேசம் செய்தவர். இராமானுஜர் நூற்றந்தாதி உரை, ஸ்ரீவசனபூஷண வியாக்கியானம், திருவாய் மொழி வியாக்கியானம், முமூட்சுப்படி வியாக்கியானம் ஆகிய பேருரைகளை எழுதியுள்ளார். இவர் இயற்றிய நூல்கள் உபதேசரத்தின மாலை, திருவாய் மொழி நூற்றந்தாதி, திருவாராதனைக் கிரமம், கீதா தாத்பரிய தீபம், ஆகிய உரை

நடை நூல்களையும் எழுதியுள்ளார். இவரது காலம், கி. பி. 15 ஆம் நூற்றாண்டு.

வைணவ நூலாசிரியர்கள்

இதுவரை வைணவ நூல்களுக்கு உரை எழுதியவர்களைப்பற்றிப் பார்த்தோம். உரையாசிரியர்களே அன்றிப் பல நூலாசிரியர்களும் வைணவ சமயத்தில் தோன்றிப் பல நூல்களை இயற்றியுள்ளனர்.

நாதமுனிகள்: இவர் வீர நாராயணபுரத்தில் வாழ்ந்தவர். இவர் நம்மாழ்வார் திருவாய்மொழியினை யாவரும் கைக் கொள்ளும் வகையில் பாராயணத்தில் ஈடுபடச் செய்தவர். இவர் யோக ரகசியம், நியாயதத்துவம் என்னும் நூல்களை எழுதியவர். இவரது காலம் கி. பி. 11 ஆம் நூற்றாண்டு. திருமுறைகளை நம்பி ஆண்டார் நம்பிகள் தொகுத்து தந்ததுபோல், இவர் ஆழ்வார்களின் பாடல்களைத் தொகுத்த பெரியார் ஆவார்.

இராமானுசர்: இவர் வைணவச் சமயத்திற்குத் தலைமை பூண்ட பெரியார். இவரை உடையவர் என்றும், எம்பெருமானார் என்றும் வைணவர் கூறுவர். ஸ்ரீபெரும்புதூரில் பிறந்தவர். காலம் கி. பி. 12 ஆம் நூற்றாண்டு. இவர் சிறந்த சீர்திருத்தக்காரர் என்றும் கூறப்படுபவர். இவரது ஆசிரியர் பிறர்க்குக் கூற ஒண்ணாது என்று கூறிய மந்திரத்தைத் தாம் பெற்ற இன்பம் எவரும் பெற வேண்டும் என்ற பரந்த நோக்கத்தால், அம்மந்திரத்தைத் ஸ்ரீ பெரும்புதூர் ஆலயக் கோபுரத்தில் ஏறி நின்று, எல்லோரும் கேட்கும்படி அம்மந்திரத்தை உபதேசித்தவர் என்பர். இவர் சோழ நாட்டில் தமது வைணவ சமயத்தைப் பரப்ப முற்பட்டபோது, இவர் காலத்து அரசன் இரண்டாம் குலோத்துங்கன், அதற்கு இடம் கொடாது, இவரைச் சோழ நாட்டில் இருக்க இயலாதபடி செய்து விட்டனன் என்பர்.

திருவரங்கத்தமுதனார்: இவர் கூரத்தாழ்வாரின் மாணவர். இராமானுஜ நூற்றந்தாதியினை இயற்றியவர். காலம் கி. பி. 13 ஆம் நூற்றாண்டு.

ஸ்ரீ பட்டர்: இவர் கூரத்தாழ்வார் திருமகனுர். இவரைப் பராசரபட்டர் என்றும் கூறுவர். வேதாந்தாச்சாரியார் என்ற பெயரும் இவருக்குண்டு. இவர் சகஸ்ரநாம பாஷ்யம், பட்டர் பத்தார்த்த மைவண்ணனுர் நறுங்குஞ்சி உரை, அட்ட சுலோகி வியாக்கியானம் முதலியவற்றைச் செய்தவர். காலம் கி. பி. 13 ஆம் நூற்றுண்டு. இவர் காலத்து மன்னன் திரிபுவன வீரதேவன் என்பவன்.

வேதாந்த தேசிகர்: இவர் வடகலை ஆசிரியர். இவர் காஞ்சிபுரத்தில் பிறந்தவர். வடமொழி, தென்மொழி இரண்டிலும் வல்லவர். இவர்க்கு இவரது பெற்ருேர் இட்ட பெயர் திருவேங்கட முடையான் என்பது. இவர் இல்லறத்தை மேற்கொண்டவர். திருவகீந்திரபுரத்தில் நோன்பு இருந்து பெரிய திருவடியைக் (கருடாழ்வாரை) கண்டு தரிசித்து அவரால் அயக்கிரிவ மந்திர உபதேசம் பெற்றவர். இவர் அழகிய மணவாள நாயனுரையும், வித்தியாரண்யரையும் வாதத்தில் வென்றவர். இவர் நில உலகில் நூறு ஆண்டு வாழ்ந்தவர். இவர் வடமொழியிலும், தென் மொழியிலும் பல நூல்களைச் செய்தனர். இவர் இயற்றிய நூல்கள் பாதுகா சகஸ்திரம், கஞ்சி வரதர் மான்மியம் கூறும் அத்தி கிரி மான்மியம், புறச்சமய கண்டனம் கூறும் பரமத பங்கம், வைணவர் நாள்தோறும் செய்யவேண்டிய கடமைகளைக் கூறும் ஸ்ரீ வைஷ்ணவ தினசரி அடைக்கலப்பத்து, நவரத்தினமாலை, திருச்சின்னமாலை, கீதார்த்த சங்கிரகம், பிரபந்தசாரம், மும்மணிக் கோவை, அர்த்த பஞ்சகம், பரமபத சோபானம், திருமந்திரச் சுருக்கு, பன்னிருநாமம், பதினேழு ரகசியம், அமிருதரஞ்சினி முதலியன. காலம் கி. பி. 13 ஆம் நூற்றுண்டு.

பின்பழகிய பெருமாள் சீயர்: இவர் குரு பரம்பரைப் பிரபாவம் என்னும் நூலை வகுத்தவர். ஆருயிரப்படி உரை எழுதியவர். காலம் கி. பி. 10 ஆம் நூற்றுண்டு.

பிள்ளை லோகாசார்யார்: இவர் அஷ்டதச ரகசியம் என்னும் 18 தத்துவ நூல்களை இயற்றியவர். ஸ்ரீ வைஷ்ணவ பூஷணம் இவற்றுள் ஒன்று. இவர் வடக்குத் திருவீதிப் பிள்ளையின் குமாரர் ஆதலின் அவரது காலத்தவர். அதாவது கி. பி. 15 வது நூற்றுண்டு. நவரத்தினமாலை,

முமுட்சுப்படி, பரந்தபடி, ஸ்ரீயப்பதிபடி, அர்த்த பஞ்சரம் முதலியன இவரது நூல்கள்.

பிள்ளை லோகார்ய சீயர் : இவரைப் பற்றிய வரலாற்றுக் குறிப்பு அறிதற்கு இல்லை. ஆனால், இவர் இயற்றியனவாகப் பல நூல்கள் உள. இராமானுச திவ்விய சூரிசரிதை, உபதேசத் திருநாமம், யதீந்திரப் பிரணவப் பிரபாவம், அந்தாதிப் பிரபந்த உரை, இராமானுச நூற்றந்தாதி உரை, முமுட்சுப் படி உரை, திருமந்திரார்த்த உரை, நாலாயிரத் தனியன்கள் உரை, திருவாய்மொழி நூற்றந்தாதி உரை முதலியன.

தனிப்பாடல் திரட்டு
Thanippadal Thirattu

தமிழ் மொழியில் பல தொகுப்பு நூல்கள் உண்டு என்பதை முன்பே அறிந்துள்ளோம். இம்முறை இடையறாது வந்து கொண்டே இருக்கிறது. இம்முறையில் பிற்காலத்தில் உண்டான நூலே தனிப்பாடல் திரட்டு என்பது. இந்நூல், பல்வேறு சமயங்களில், பல்வேறு புலவர்கள் தனித்தனியே பாடிய பாடல்களின் தொகுப்பே ஆகும். இது பல் சுவை களும் பாங்குற அமைந்த நூல். இந்நூலை ஒருவன் முற்றிலும் படிப்பின், பல புலவர்களின் அறிவு, ஆற்றல்களை நன்கு அறியலாம். பல அரிய செய்திகளை எளிய முறை யில் உணர்ந்து கொள்ளலாம். இது படிக்கப் படிக்க சுவை தரும் நூல். ஆங்கிலம் பயின்றவர்கள் தமிழ் மொழியினைக் குறை கூற வருமிடத்துத் தமிழ் மொழியில் எளிய இலக்கியங்கள் இல்லை என்றும், நகைச்சுவை ததும்பும் பாடல்கள் இல்லை என்றும் கூறுவர். அத்தகையவர்கள் இத்தனிப்பாடல் திரட்டைப் படித்துப் பார்ப்பார்களானால், தமிழின் எளியநடைப் பாட்டின் மேம்பாட்டையும், நகைச் சுவைப் பாடல்களின் சிறப்புக்களையும் தெள்ளத் தெளிய அறிந்து கொள்ளுவர். இப்பகுதியில் இந்நூலில் கண்ட எல்லாப் புலவர்களைப் பற்றியும் எடுத்துக் காட்ட இயலாது. பானை சோற்றிற்கு ஒரு சோறு பதம் என்னும் பழமொழிக் கிணங்க, இதில் ஒரு சிலரைப்பற்றியே அறிவோமாக.

காளமேகப் புலவர் : இவர் கும்ப கோணத்தில் அய்யங் கார் மரபில் உதித்தவர். இவரது இயற்பெயர் வரதன் என்பது.

திருவானைக்காவல் தேவியார் அகிலாண்ட நாயகியின் திருவருளால் காளமேகப் புலவர் என்னும் பெயருக்கு உரியவர் ஆயினர். இவர் ஸ்ரீ ரங்கநாதர் கோயிலில் மடப் பள்ளியில் பணி புரிந்தவர். இவரது காதலி திருவானைக்காக் கோவில் தாசி. ஆகவே, அவளது காதற்பொருட்டுச் சைவர் ஆனவர். இவர் நாற்கவிபாடும் நற்கவியே ஆயினும், ஆசு கவி பாடுதலில் தனிச் சிறப்புடையவர். இவர் திருமலை நாய்க்கன் காலத்தவர். ஆகவே, இவர் கி. பி. 15 ஆம் நூற்றுண்டினர். திருவானைக்கா சரசுவதிமாலை, பரப்பிரம்ம விளக்கம், சித்திரமடல், கடல் விலாசம் முதலிய நூல் களையும், பல தனிப்பாடல்களையும் பாடியவர்.

திருப்பாற்கடலை உபமன்ய முனிவருக்குச் சிவனுர் கொடுத்து விட்டனர் என்பதை அறிந்து, திருமால் சிதம்பரம் வந்தார். அவரே கோவிந்தராசப் பெருமாள் என்பதைச் சுவைபட,

“ *தடக்கட லில்பள்ளி கொள்வோம் அதனைநற் சங்கரனுர்*
அடர்புலிக் குட்டிக் களித்தன ராம்அது கேட்டுநெஞ்சில்
நடுக்கம் வந்துற்றது கைகால் எழாநளி நத்திஎன்னை
இடுக்கடி பாயைச் சுருட்டடி யேகடி அம்பலத்தே.”

என்று பாடியுள்ளனர்.

முருகனுக்குள்ள பெருமை எத்தகையது என்பதை

“ *அப்பன் இரந்துண்ணி ஆத்தாள் மலைநீலி*
ஒப்பறிய மாமன் உறிதிருடன்—சப்பைக்கால்
அண்ணன் பெருவயிறன் ஆறுமுகத் தானுக்கிங்
கெண்ணும் பெருமை இவை.”

என்று பாடப்பட்டுள்ளதை அறியலாம்,

படிக்காசுப் புலவர்: இவர் தொண்டை நாட்டில் பொற் களந்தைப் பகுதியில் பிறந்தவர். இவர் இராமநாத புரத்து இரகு நாதசேதுபதிகளிடத்து அவைப்புலவராக இருந்தனர். செங்குந்த மரபினர். இவரது காலம் கி. பி. 18 ஆம் நூற்றுண்டு. இவர் மாவண்டூர் கத்தூரி முதலியார் வேண்டு கோளுக்கு இணங்கித் தொண்டை மண்டல சதகம், புள்ளி ருக்கு வேளூர்க் கலம்பகம் பாடியவர். இவர்க்குத் தில்லைக்

கூத்தப்பிரான் தினமும் படிக்காசு ஈந்தமையின் இவர் படிக்காசுப் புலவர் என்ற பெயர் பெற்றனர் என்பர்.

இவர் தேவியிடம் முறையிட்ட செய்யுள்,

"வேல்கொடுத் தாய்திருச் செந்தூரர்க்கு அம்மியின் மீது வைக்கக்
கால்கொடுத் தாய்நின் மணவா ளனுக்குக் கவுணியர்க்கும்
பால்கொடுத் தாய்மத வேளுக்கு மூவர் பயப்படச்செய்
கோல்கொடுத் தாய்அன் னையேஎனக் கேதும் கொடுத் திலையே."

என்பது.

இவர் காலத்தில் அறிவற்றவர்கள் கவி பாடித் திரிந்தமைக்குக் காரணம் இன்னது என்பதைப்பற்றிக் கூறிய செயயுள்,

"குட்டுதற் கோபிள்ளைப் பாண்டியன் இங்கில்லைக்
குறும்பி அளவாக் காதைக் குடைந்து தோண்டி
எட்டினமட் டறுப்பதற்கோ வில்லி யில்லை
இரண்டொன்ருய் முடித்துதலை இறங்கப் போட்டு
வெட்டுதற்கோ கவிஒட்டக் கூத்தன் இல்லை
விளையாட்டாக் கவிதைதனை விரைந்து பாடித்
தெட்டுதற்கோ அறிவில்லாத் துரைகள் உண்டு
தேசம்எங்கும் புலவர் எனத்திரிய லாமே."

என்பது.

இரட்டையர்கள்: இவர்களுள் ஒருவர் முடவர்; மற்ருெருவர் குருடர். இருவரும் சேர்ந்தே பாடுவர். இவர்கள் ஒருவர்க்கொருவர் உறவினர். மாமன் மைத் துனர்கள். இவர்களை இளஞ்சூரியர், முதுசூரியர் என்பர். முடவரைக் குருடர் சுமந்து செல்வர். இவர்கள் சேர்ந்து பாடிய தனிப்பாடல்கள் சுவை மிக்கனவாக இருக்கும். ஒரு முறை இவர்கள் திருவிதாங்கூர் திருக்கோயிலுக்குச் சென்ருர்கள். கோயிலுக்குச் சென்ருல் பிரசாதம் கிடைக் கும் என்பது இவர்கள் கருத்து. ஆனல், அக்கோவில் குருக்கள் சுவாமிக்கு நைவேத்திய மாகச் செங்கல்லை அடுப்பில் இட்டு, எடுத்துத் தாம்பாளத்தில் வைத்து, ஈரத்

துணியால் அதை மூடி அதனின்று வரும் ஆவியை ஆண்டவனுக்குக் காட்டி வந்தார். இதனை எப்படியோ அறிந்து கொண்ட இரட்டையர்கள், குருக்களின் வஞ்சகத்தை வெளிப்படுத்த,

"தேங்குபுகழ் ஆங்கூர்ச் சிவனேவல் வாளிஅப்பா
நாங்கள் பசித்திருக்க ஞாயமோ—போங்காணும்
கூறுசங்கு தோல்முரசு கொட்டோசை அல்லால்
சோறுகண்ட மூளியார் சொல்."

என்று பாடினர்.

ஒரு முறை திருவண்ணுமலைச் சம்பந்தாண்டான் என்பானைக் காணச் சென்றார்கள். அவன் இவர்களை வரவேற்றிலன். அதுபோது தலைச்சவரம் பண்ணிக்கொண்டிருந்தான். இவனை ஏளனம் செய்யக்கருதிய இவர்கள்,

"மன்னுதிரு அண்ணு மலைச்சம்பந் தாண்டாற்குப்
பன்னும் தலைச்சவரம் பண்ணுவதேன்—மின்னின்
இளைத்தஇடை மாதர் இவன்குடுமி பற்றி
வளைத்திழுத்துக் குட்டா மலுக்கு."

என்று பாடினர். இங்ஙனம் பல பாடல்கள் உள்ளன.

இவர்கள் திருவக்கை ஆட்கொண்டானுலும், கத்திச் சம்பராயனுலும் போற்றப்பட்டவர்கள். இவர்கள் வில்லியார், காளமேகம், அருணகிரியார் காலத்தவர்கள். இவர்கள் பாடிய நூற்கள் திருவாமாத்தூர்க் கலம்பகம், திருக்கச்சித் தெய்வீக உலா, மாதைக் கலம்பகம், தில்லைக் கலம்பகம், என்பன. இவர்கள் கலம்பகம் பாடுதலில் வல்லவர்கள் என்ற குறிப்பு "பண்பாய கலம்பகத்திற்கு இரட்டையர்கள்" என்பதால் தெரிகிறது.

பலபட்டைச் சொக்கநாதப் புலவர்: இவர் தொண்டை நாட்டில் வாழ்ந்தவர். பின் மதுரை திருமலை நாயகர் காலத்தில் இருந்தவராகவும் கூறுவர். ஒரு சிலர் இவர் 18 ஆம் நூற்றுண்டினர் என்பர். இவரது ஏனைய குறிப்புக்கள் அறிதற்கில்லை. இவர் அழகர் கிள்ளை விடுதூதைப் பாடியவர். இவர் படிக்காசுப்புலவர் பாடலைத் "தொட்டாலும் கைம்மணக்கும் சொன்னுலும் வாய்மணக்கும்" என்று

புகழ்ந்து பாடியவர். சண்பக நல்லூர்ச் சிவபெருமான் மீது வண்டு விடுதூது பாடியதாகவும் கூறுவர். வண்டு விடு தூதில் சண்பகமலரில் வண்டுகள் மொய்ப்பதாகப் பாடியதைச் சுப்பிரதீபக் கவிராயர் மறுக்கவே, உடனே வண்டுகளை வேண்ட இறைவர் அருளால் சண்பக மலரில் வண்டு மொய்ப்பதைக் காட்டியவர் என்பர். இவர் பாடிய தனிப் பாடல்கள் பல.

இறைவன் பாம்பாபரணம் புனைந்தமைக்குக் கூறிய காரணம்,

> *" ஒட்டாக ஒட்டியும் காற்பொன்னின் மாப்பொன் உபாய மதாத்*
> *தெட்டா திரான்பணி செய்யா திரான்செம்பொன் மேருவினைக்*
> *கட்டாகக் கட்டிக் கடுகள வாநிறை காட்டவல்ல*
> *தட்டானுக் கஞ்சிஅல் லோஅணிந் தான்சிவன் சர்ப்பத்தையே."*

என்பது.

மதுரைச் சொக்கேசர் ஞானம், செல்வம் முதலிய சிறப்புடன் இருப்பதற்குக் காரணம், மீனாட்சியம்மையார் தம் திருமணத்தில், மணப்பானை பிடித்ததால் ஆகும் என்பதை,

> *" ஆனை உரித்தும் அதளதனைப் போர்த்திட் டடியும்பட்டு*
> *மானம் அழிந்தங் கிரந்தே திரிந்த மதுரைச்சொக்கர்*
> *ஞானம் மிகப்பெற்று வாழ்வதெல்லாம் சொக்க நாயகியார்*
> *பானை பிடித்த முகூர்த்தத்தி னால்வந்த பாக்கியமே."*

என்று பாடியுள்ளார்.

சொக்கநாதப் புலவர் : இவர் முன் குறிப்பிட்டவரினும் வேறானவர். இவரும் தொண்டை நாட்டினர். காலம் கி. பி. 17 ஆம் நூற்றாண்டு என்பர். தனிப் பாடல்களே அன்றித் தனி நூல் எதுவும் இவரால் பாடப்பட்டதாகத் தெரிந்திலது.

இறைவனை நிந்தாத் துதியாகப் பாடிய பாட்டு,

> *" அடிபட்டீர் கல்லாலும் எறிபட்டீர் அத்தனைக்கும் ஆளாய் அந்தப்*
> *படிபட்டுப் போதாமல் உதைபட்டீர் இப்படியும் படுவார் உண்டோ*

முடிபட்ட சடையுடையீர் கழுக்குன்றீர் முதல்கோணல்
முட்டக் கோணல்
இடிபட்டும் பொறுத்திருந்தீர் சிவசிவ உமைத்தெய்வம்
என்ன லாமே."

என்பது.

அந்தகக் கவி வீரராகவ முதலியார்: இவர் தொண்டை மண்டலம் பொன் விளைந்த களத்தூருக்கு அருகில் புதூரில் வடுகநாத முதலியாருக்குத் திருமகனாராகப் பிறந்தவர். இவர் பிறவிக் குருடர். இங்ஙிலையிலும் இவர் தமிழ் அறிவில் தலை சிறந்து விளங்கினர். இதனை இவரே, "ஏடாயிரம் கோடி எழுதாமல் தன் மனத்தே எழுதிப் படித்தவிரகன், இமசேது பரியந்தம் எதிரிலாக்கவி வீரராகவன்" என்று பாடி இருத்த-லால் அறியலாம். யாழ் வாசிப்பதிலும் சிறந்தவர். இவர் திருக்கழுக்குன்ற புராணம், திருவாரூர் உலா, சந்திரவாணன் கோவை, கயத்தாற்றரசன் உலா, சேயூர் முருகன் பிள்ளைத் தமிழ், செய்யூர்க் கலம்பகம். திருக்கழுக்குன்ற மாலை, திருக்கழுக்குன்றத்து உலா முதலான நூல்களையும், தனிப்-பாடல்கள் பலவற்றையும் பாடியவர்.

விநாயகர் திருமணம் இன்றி இருப்பதற்குரிய காரணம் இன்னது என்பதை நகைச்சுவைப் படும்படி,

"வீரம் சொரிகின்ற பிள்ளாய் உனக்குப்பெண் வேண்டும்
என்றால்
ஆரும் கொடார்உங்கள் அப்பன் கபாலிஅம் மான்திருடன்
ஊருஞ்செங் காடு திருமுகம் யானை உனக்கிளையோன்
பேரும் கடம்பன்உன் தாய்நீலி நிற்கும் பெருவயிறே."

என்று பாடியுள்ளார். இப்புலவர் கி. பி. 17 ஆம் நூற்றாண்-டினர்.

சீர்காழி அருணாசலக் கவிராயர்: இவர் சோழநாட்டில் தரங்கம் பாடியினைச் சார்ந்த தில்லைஆடியில் வேளாள மரபில் பிறந்தவர். இவர் சீர்காழியில் பின்னர் வாழ்ந்தமை யின் இப்பெயர் பெற்றனர். தருமபுர ஆதின ஸ்ரீலஸ்ரீ அம் பலவாண தேசிகரிடம் இலக்கண இலக்கியம் பயின்றவர். வடமொழி, தெலுங்கு மொழியையும் அறிந்தவர். இவர் இராமாயண கீர்த்தனை, சீகாழித் தல புராணம், சீகாழிக்

கோவை, அனுமார் பிள்ளைத்தமிழ், அசோமுகி நாடகம் முதலிய நூல்களைப் பாடியவர். தனிப் பாடல்களும் இவரால் பாடப்பட்டுள்ளன. இவரது காலம் கி. பி. 18 ஆம் நூற்றுண்டு.

" தன்னைப் புகழ்வானும் சாட்சிசொல்லி நிற்பானும்
பொன்னை மிகத்தேடிப் புதைப்பானும்—ஒன்னலர்தம்
தன்புத்தி கேட்பானும் நாணம்இல் லாதானும்
பெண்புத்தி கேட்பானும் பேய்."

இராமச் சந்திரக் கவிராயர் : இவர் தொண்டை மண்டலத்தில் தோன்றியவர். இராசு மரபினர். இராச நல்லூரினர். சென்னையில் வாழ்ந்தவர். இவர் நாடக ஆசிரியரும் ஆவார். சகுந்தலை விலாசம், பாரத விலாசம், தாருகா விலாசம், இரங்கோன் சண்டை நாடகம் என்பன இவரது நாடகங்கள். இவரது காலம் கி. பி. 19 ஆம் நூற்றுண்டு. இவரது தனிப்பாடல்களில் ஒன்று கீழ் வருவது.

" கல்லாத ஒருவனைநான் கற்றுய் என்றேன்
காடறியும் மறவனைநா டாள்வாய் என்றேன்
பொல்லாத ஒருவனைநான் நல்லாய் என்றேன்
போர்முகத்தை அறியானைப் புலியே றென்றேன்
மல்லாரும் புயம்என்றேன் சூம்பல் தோளை
வழங்காத கையினைநான் வள்ளல் என்றேன்
இல்லாது சொன்னேனுக்கு இல்லை என்றுன்
யானும்என் றன் குற்றத்தால் ஏகின் றேனே."

அட்டாவதானம் சரவணப் பெருமாள் கவிராயர் : இவர் பாண்டிய நாட்டில் முதுகுளத்தூரில் வேளாள மரபில் பிறந்தவர். அட்டாவதானம் புரிந்தவர். இராமநாதபுர சமத்தானப் புலவர். சிவஞான சுவாமிகள் மாணவரான சோமசுந்தரம் பிள்ளையிடம் இலக்கண இலக்கியம் பயின்றவர். இவர் 19 ஆம் நூற்றுண்டினர். இவர் பணவிடு தூது, தருமர் அசுவமேதயாக புராணம், விநாயகர் திருமுக விலாசம் ஆகிய நூல்களைப் பாடியவர். இவர் பாடியுள்ள சீட்டுக் கவிகள் மூலம் இவரது கல்வி கேள்விகளின் மேம்பாடு, சொல்லாற்றல் முதலியன நன்கு தெரிய வருகின்றன. இவர் ஈயா லோபியர்களிடம் செல்லாத நிலையினை அருள இறைவனை வேண்டுதல் மிக உருக்கமானதாகும்.

"ஆரடி வீதியில்ஓர் ஏடுகொண் டோடியே அவசரம தாய்வரு கின்றார்
ஐயையோ புலவன்மார் போலேஇ ருக்கின்ற-
தியார்என்று மெள்ளஎட்டிப்
பாரடி தலைமறைய நின்றுகொண் டவர்நெடும் பாதைவழி போகி றதுதான்
பரண்மேல் எனைத்தூக்கி விட்டுவிடு தாளையடை பழிகாரி கதவுபோடு
கூர்மைமொழி கேட்டுஅதிக சீக்கிரம் வந்திடுவர் குதிருக் குள்ளே ஒளித்துக்
கொள்ளடி எனப்புகலும் லோபியர்கள் மேல்தமிழ் கொண்டுபோய் அலையாமலே
சீரடிது தித்துநற் பாமாலை சாற்றியே தெரிசிக்க முத்தி தருவாய்
தேசிகம் பூத்தஉமை நேசபொன் அம்பலவ தேசிக சிரோரத்னமே."

சுப்பிரதீபக் கவிராயர் : இவர் பொற்கொல்லர் மரபினர். மதுரை திருமங்கலத் தாலுக்காவில் பிறந்தவர். வைணவ சமயத்தவர். நிலக்கோட்டைச் சமீன்தார் கூழப்ப நாயக்கர் மீது காதல், விறலிவிடு தூது முதலிய நூல்களைச் செய்தவர்.

விறலிவிடு தூது : இதனில் வேசையர் சாகசம், அலங்கரிப்பு, இவர்கள் வயப்பட்டோர் நோய்கண்டு துன்புறல் முதலியன நன்கு விளக்கப்பட்டதோடு, படிக்கச் சுவை தரவல்லதாய் விளங்கும். தெருவில் குறிசொல்லித் திரியும் மாதராள் ஒருத்தியிடம் தம் கைக் குறியைப் பார்க்கும்படி வேண்டிய பாடல் சுவை மிக்கதாக இருக்கும்.

இராமானுச கவிராயர் : இவரை இயற்றமிழ் ஆசிரியர் என்றும் கூறுவர். இவர் இராமநாதபுரத்தில் பிறந்தார். வடுக மரபினர். வைணவ சமயத்தினர். பின்னர்ச் சென்னையில் வாழ்ந்தவர். இவர் திருவாவடுதுறை சோமசுந்தர தேசிகரிடம் இலக்கண இலக்கியம் பயின்றவர். இவர் 19 ஆம் நூற்றுண்டினர். இயற்றிய நூல்கள் பார்த்தசாரதி மாலை, திருவேங்கட சதக அனுபூதி, வரதராசப் பெருமாள் பதிற்றுப் பத்தந்தாதி, இலக்கண விவேக விபூதிகை என்பன. இவர் சிறந்த உரையாசிரியரும் ஆவார். திருக்குறட் புத்துரை,

நன்னூற் காண்டிகையுரை, ஆத்திசூடி, கொன்றை வேந்தன் இவற்றிற்கும் உரை எழுதியவர். இவர் வடமொழியிலும் வல்லவர். ஆத்மபோத பிரகாசிகை என்னும் நூலைத் தமிழில் மொழி பெயர்த்தவர். பச்சையப்ப முதலியார், நாட்டன் துரை இவர்கள் மீது பாடல்களைப் பாடியுள்ளார். சங்கராசாரியார் மீது பாடிய பாடல்களும் உண்டு. இவரது திருமால் சமயப் பற்றினை,

"சீர்பூத்த வுந்தித் திருமால் அடியவர் தேசிகர்தாள்
ஏர்பூத்த நன்மலர் நீரினர் உச்சித் திறைஞ்சிஎன்றும்
ஓர்பூத்த தாரின்எம் சென்னிஎல் லாம்புனைந் தூக்குகிற்பாம்
பார்பூத்த இன்பமும் வான்பூத் தனவுங்கைப் பற்றுதற்கே."

என்ற பாடலில் காணலாம்.

அழகிய சொக்கநாதப் பிள்ளை: இவர் திருநெல்வேலி சைவ வேளாளர் மரபினர். தச்சநல்லூர் என்னும் ஊரினர். இவர் நெல்லை காந்திமதி அம்மையார் மீது பிள்ளைத் தமிழ், அந்தாதி மாலை ஆகிய நூல்களையும், தனிப் பாடல்கள் பலவற்றையும் பாடியவர். சிலேடைக் கவிபாட வல்லவர் என்பது தனிப்பாடல்களால் தெரிகிறது. ஒருமுறை இவரை காய் என்று தொடங்கி இலை என்று முடித்துப் பாடும்படி கேட்டபோது,

"காய்சினம்இல் லாதான் கருணைமுத்து சாமிவள்ளல்
வாய்மையுளான் பாடி வருவோர்க்குத்—தாய்நிகர்வான்
எல்லைஇல்லா மாண்பொருளை ஈவான் இவனிடத்தின்
இல்லைஎன்ற சொல்லே இலை."

என்று பாடிக் காட்டினார்.

தண்டபாணி சுவாமிகள்: இவரைத் திருப்புகழ் சுவாமிகள் என்றும் கூறுவர். இவர் திருநெல்வேலி சைவ வேளாளர் மரபினர். இவர் தில்லைத் திருவாயிரம், திருவரங்கத் திருவாயிரம், ஒலியல் அந்தாதி, திருவாமாத்தூர் புராணம், திரு மயிலைக் கலம்பகம், சென்னைக் கலம்பகம், புலவர் புராணம் ஆகிய நூல்களை இயற்றியுள்ளார். அறுவகை இலக்கணம் என்ற பெயரிய நூலையும் இயற்றியவர். இவரை முருகதாச சுவாமிகள் என்றும் அழைப்பர். வண்ணங்கள்

பாடுதலில் வல்லவர். அதனுல் வண்ணச் சரபம் என்றும் கூறப்படுவர். மேலே குறிப்பிட்ட நூல்களே அன்றி, திருச்செந்தூர்க் கோவை, திருவாயிரம், ஏழாயிரப் பிரபந்தம், திருச்செந்தூர்த் திருப்புகழ், வண்ணத்திலக்கணம், திருவையாற்றந்தாதி, தமிழ்த் திருப்பதிகம் என்ற நூல்களையும் பாடியவராகக் கூறுவர். இவர் 19 ஆம் நூற்ருண்டின் இறுதியில் வாழ்ந்தவர். இவர் நெய்தல் தொழிலைச் சிறப்பித்துப் பாடிய பாடல்,

"செய்யும் தொழில்அனைத்தும் சீர்தூக்கிப் பார்க்குங்கால்
நெய்யும் தொழிற்கு நிகரில்லை—வையகத்தில்
தெள்ளு தமிழ்வேதம் செப்பியநாள் சீர்படுத்தும்
வள்ளுவனர் கொண்டதல்ல வா."

என்பது.

அண்ணுமலை ரெட்டியார்: இவர் திருநெல்வேலியைச் சார்ந்த கரிவலம் வந்த நல்லூரில் பிறந்தவர். ஊற்றுமலைச் சமத்தானத்திலும், சேற்றூர்ச் சமத்தானத்திலும் வித்துவாஞக இருந்தார். 19 ஆம் நூற்ருண்டினர். திரிபு, யமகம் பாடுவதில் வல்லவர். இவர் பாடிய நூல்கள் நவநீத கிருட்டினன் பிள்ளைத் தமிழ், சங்கர நாராயணன் கோவில் திரிபந்தாதி, காவடிச் சிந்து முதலியன. காவடிச் சிந்து பல வண்ணங்களுடனும், சந்தங்களுடனும் இன்பச்சுவை ததும்பும் நிலையில் இருக்கும். மோனை எதுகைகளோடு கூடிய அடுக்கு மொழிகளை இதில் காணலாம்.

"சென்னிக் குளநகர் வாசன் —தமிழ்
தேறும்அண் ணுமலை தாசன்—செப்பும்
செகம் மெச்சிய மதுரக்கவி அதனைப் புயவரையில்புனை
தீரன் அயில் வீரன்."

நெற்குன்றவாணர்: இவர் தொண்டை நாட்டினர். நெற்குன்ற ஊரினர். செல்வக் குடியினர். பெருவள்ளலும் ஆவார். சைவ வேளாள முதலியார் மரபினர். இவர் திருப்புகலூர் அந்தாதி பாடியுள்ளனர். இவர் எங்ஙனம் புலவர்களிடம் அன்புகொண்டு பரிசளித்து வந்தனரோ, அங்ஙனமே இவரது பணியாளர்களும் புலவர்கள்மாட்டு

அன்புடையவர்கள். ஒருமுறை காளமேகம் இவர் இல்லத்திற்குச் சென்றபோது, ஒரு பணிப்பெண் பரிசளித்தனள் என்பது தெரிகிறது. இவர் காளமேகப் புலவர் காலத்தினர்.

" கற்கும் கவிவல்லை அந்தணர் கோன்நம்பி காளிக்கியான்
விற்கும் பரிசனம் ஆகிவிட் டோம்வட வேங்கடமும்
பொற்குன் றமும்புகழ்க் கங்கா நதியும் பொதியமும்போல்
நெற்குன் றமும்நம் மரபும்எந் நாளும் நிலைநிற்கவே."

அதிமதுரகவி: இவரது வரலாற்றை அறிதற்கு இல்லை. இவர் திருமலைராயன் சமத்தானத்துப் புலவராக இருந்தார் என்பது மட்டும் அறியப்படுகிறது. இவர் 64 புலவர்களுடன் பல்லக்கேறிப் பவனி வருவது வழக்கம். இவர் காளமேகத்தை எதிர்த்தவர். இவர் தமது பெருமையினைக் காளமேகப்புலவர்முன்,

" மூச்சு விடுமுன்னே மூந்நூறு நானூறும்
ஆச்சென்றால் ஆயிரம்பாட் டாகாதோ—பேச்சென்ன
வெள்ளைக் கவிகாள மேகமே நின்னுடைய
கள்ளக் கவிக்கடையைக் கட்டு."

என்று பாடினார். இங்ஙனம் பாடியபோது காளமேகம்,

" இம்மென்னும் முன்னே எழுநூறும் எண்ணூறும்
அம்மென்றால் ஆயிரம்பாட் டாகாதோ—சும்மா
இருந்தால் இருந்தேன் எழுந்தேனே ஆயின்
பெரும்காள மேகம்பிள் ளாய்."

என்று பாடினர்.

தனிப்பாடல் திரட்டைப் படிப்பதை ஒரு காலப்போக்காகவும் கொள்ளலாம். காரணம் அத்திரட்டில் உள்ள பாடல்கள் அவ்வளவு சுவை தரவல்லன. பேராசிரியர் மறைமலை அடிகளார் முதல் முதல் பாடங்கேட்ட நூல் இத் தனிப்பாடல் திரட்டு என்றும் நான் கேள்விப் பட்டதுண்டு. தனிப்பாடல் திரட்டில் உள்ள பாக்களில் சிலவற்றைக் கீழே காண்க.

" வண்தமிழைத் தேர்ந்த வழுதி கலியாணத்
துண்ட பெருக்கம் உரைக்கக்கேள்—அண்டி
நெருக்குண்டேன் தள்ளுண்டேன் நீள்பசியினலே
சுருக்குண்டேன் சோறுண்டி லேன்."

" இட்டமுடன் முதலியார் வாங்கி வந்த
காளைதினம் இருபோர் தின்னும்.
சட்டமுடன் கொள்ளுண்ணும் புல்லுண்ணும்
அதைப்பண்டி தன்னில் பூட்டக்
கிட்டவரின் முட்டவரும் தொட்டவர்மே
லேகழியும் கீழே வீழும்
எட்டாள்கள் தூரத்தினும் தடிகொண்டு
தாக்கிடினும் எழுந்தி ராதே."

" எட்டேகால் லட்சணமே எமனேறும் பரியே
மட்டில் பெரியம்மை வாகனமே—முட்டைமேல்
கூரையில்லா வீடே குலராமன் தூதுவனே
ஆரையடா சொன்ன யடா."

" முத்துக் கறுப்பன்என்று முன்உனக்குப் பேர்அமைத்த
பித்தன்ஆர் என்னிடத்தில் பேசுவாய்—முத்துக்
கறுக்குமா மூடாநீ கற்றிருந்தும் பேரைத்
திருத்திவைக்க லாகாதோ சீ.";

" சுருக்கவிழ்ந்த முன்குடுமிச் சோழியா சோற்றுப்
பொருக்குலர்ந்த வாயா புலையா—திருக்குடந்தைக்
கோட்டானே நாயே குரங்கே உனையொருத்தி
போட்டாளே வேலையற்றுப் போய்."

" புட்டவல் பட்டாணி பொரிதேங் குழல்அப்பம்
மட்டவிழும் தோசை வடையுடனே—சட்டமுடன்
ஓயாமல் சோறுகறி உண்டையுண்டை யாய்அடைக்கும்
வாயா நமச்சிவா யா."

தனிப்பாடல் திரட்டு.

குமரகுருபரர்
Kumaraguruparar

திருநெல்வேலித் தாம்பிரபரணி நதியின் வடகரையில் ஸ்ரீவைகுண்டம் என்று வழங்கும் திருப்பதிக்கு வடக்கே ஸ்ரீ கைலாசம் என்ற திருப்பதியில் சைவ வேளாள சண்முக சிகாமணி கவிராயர் என்பவர் சிவகாமசுந்தரி என்னும் மனைவியாருடன் வாழ்ந்து வந்தனர். இவர்கள் பிள்ளையே குமரகுருபரர் என்பவர். இவரது இளவல் குமாரசுவாமிக் கவிராயர். குமரகுருபரர் இறைவன் திருவருளால் இலக்கணங் களையும், இலக்கியங்களையும், சைவத் திருமுறைகள், சைவ சித்தாந்த சாத்திரங்களையும் ஐயம் திரிபற ஓதி உணர்ந்தனர். இவர் தருமையாதீன ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிகர்பால் ஞானோபதேசம் பெற்றுக் காவி வாங்கிக் குமரகுருபர முனிவர் என்ற பெயரைப் பெற்றனர். காசிக்குச் சென்று பாதுஷா வின் அன்பினைப் பெற்று, அங்கு ஒரு மடத்தை நிறுவினவர். அஃது இன்றும் கேதாரக் கட்டத்தில் உளது. கேதாரக் கட்டத்தில் முகம்மதியர்களால் மறைக்கப்பட்டிருந்த ஸ்ரீ விசுவலிங்கப் பெருமானை வெளிப்படுத்தி ஆலயங் கட்டுவித்தவர். இதற்கு நித்திய நைமித்தியங்களும், திருவிழாக்களும் நடத்தற்கு ஆவன செய்தவர். குமரகுருபரர் இருந்த மடம் குமாரசாமி மடம் என்ற பெயருடன் இன்றும் அங்கு உள்ளது. இவர் காசியில் இருந்தபோது, சைவசமயப் பிரசங் கங்களை இந்துஸ்தானி, தமிழ் ஆகிய மொழிகளிலும் செய்து சமயத் தொண்டு செய்து வந்தவர்.

கம்பராமாயணப் பிரசங்கத்தையும் இவர் செய்தனர். இவரது இராமாயணப் பிரசங்கத்தைக் கேட்டே துளசிதாஸர் தாம் இயற்றிய இராமாயணத்தில் கம்பருடைய கருத்துக்களையும் சேர்த்துக் கொண்டனர் என்பர். இவர் திருமலை நாய்க்கன் சபையில் சிலகாலம் இருந்தவர். ஆக, இவர், கி.பி. 17 ஆம் நூற்றுண்டினர். அதுபோது நாய்க்க மன்னர் தமது நாணயத்தில் எந்த உருவத்தை அமைக்கலாம் என்று கேட்டபோது, அச் சபையில் பிள்ளைப் பெருமாள் அய்யங் காரும் இருந்ததனல் அவர், "கருட உருவை அமைத்தால் அது வட்டம் இட்டுப் பறக்கும்" என்றதாகவும், குமரகுருபரர் ,'இரடப உருவத்தை அமைத்தால், அது முட்ட முட்டப்

பாயும்'' என்று கூறியதாகவும் கூறுவர். இவர் செய்த நூல்கள் கீழ்வருவன :

கந்தர் கலிவெண்பா: குமரகுருபரர் பிறந்து ஐந்து வருடங்களாகியும் பேசாது ஊமையாய் இருந்தனர். அதனால் வருந்திய பெற்றோர் குழந்தையுடன் திருச்செந்தூருக்குச் சென்று முருகனிடம் ஊமை நீங்க வேண்டினர். செந்தில் பெருமான், குமரகுருபரர் உறங்குகையில் அவரது நாவில் குமாராய நம என்ற மந்திரத்தை எழுதிச் செல்ல, உறக்கத்தினின்று எழுந்த குமரகுருபரர் இந்நூலைப் பாடினர். இந்நூலில் முருகன் வரலாறும், சித்தாந்த சாத்திரக் குறிப்பும், குமரகுருபரர் வேண்டும் வரம் முதலானவும் குறிக்கப்பட்டுள்ளன. இது தினமும் பாராயணம் பண்ணுதற்குரிய நூல்.

"எழுத்துமுதல் ஆம்ஐந் திலக்கணமும் தோய்ந்து
பழுத்த தமிழ்ப் புலமை பாலித்து,
கடியேற்கும் பூங்கமலக் கால்காட்டி ஆட்கொண்டு
அடியேற்கும் முன்னின்று அருள்."

மீனாட்சி அம்மை பிள்ளைத் தமிழ்: குமரகுருபரர் மதுரையில் தங்கி இருந்தபோது இதனைப் பாடினர். இவர் இந்நூலைத் திருமலைநாய்க்கன் அவையில் அரங்கேற்றினர். இங்ஙனம் அரங்கேற்றுகையில் மீனாட்சி அம்மையாரே திருமலைநாய்க்க மன்னர் மகள் போல் உருவுடன் வந்து, இந்நூலின் சொற்பொருள் நயத்தைத் துய்த்தவர். இந்நூலில் வருகைப் பருவத்தில் வரும், "தொடுக்கும் கடவுட் பழம்பாடல் தொடையின் பயனே'' என்று தொடங்கும் பாடலைப் பாடியபோது, குழந்தை வடிவில் வந்த மீனாட்சி அம்மையார் தமது கழுத்து முத்துமாலையினை முனிவர்க்குச் சூட்டினர்.

மதுரைக் கலம்பகம்: இதுவும் மதுரையில் இருந்தபோது, சோமசுந்தரப் பெருமான் மீது பாடிய நூல். இவர் இந்நூலில் தமிழின் சுவையை மாந்தவே இறைவன், இறைவி குமரன் ஆகிய மூவரும் மதுரையில் வந்து குடியேறினர் என்பதை,

" தமரநீர்ப் புவன முழுதொருங் கீன்றருள்
தடாதகா தேவிஎன் றொருபேர்
தரிக்கவந் ததுவும் தனிமுதல் ஒருநீ
சவுந்தர மாறன் ஆனதுவும்
குமரவேள் வழுதி உக்கிர னெனப்பேர்
கொண்டதும் தண்டமிழ் மதுரம்
கூட்டுண எழுந்த வேட்கையால் எனில்இக்
கொழிதமிழ்ப் பெருமையார் அறிவார்."

என்று பாடியுள்ளனர்.

நீதிநெறி விளக்கம் : திருமலைநாய்க்கன் குமரகுருபரரிடம் திருக்குறள் நீதிகளைச் சுருக்கிச் சிறு நீதி நூல் இயற்றி தருமாறு கேட்க, அவ்வேண்டுகோளுக் கிணங்க இந்நூல் செய்யப்பட்டது.

" கலைமகள் வாழ்க்கை முகத்த தெனினும்
மலரவன் வண்டமிழோர்க் கொவ்வான்—மலரவன்செய்
வெற்றுடம்பு மாய்வனபோல் மாயா புகழ்கொண்டு
மற்றிவர் செய்யும் உடம்பு."

திருவாரூர் நான்மணி மாலை : குமரகுருபரர் திருவாரூர்த் தியாகேசப் பெருமானை வணங்கச் சென்றபோது இந்நூலைப் பாடினர். இந்நூலில் தியாகர் என்று இறைவர் பெயர் பெற்றிருப்பதன் காரணத்தையும், இறைவன் இறைவி வேறல்லர் என்ற கருத்தையும் மற்றும் பல அரிய சைவ-சமயக் குறிப்புக்களையும் கூறியுள்ளனர்.

முத்துக் குமாரசுவாமி பிள்ளைத் தமிழ் : முனிவர் வைதீஸ்-வரன் கோவிலுக்குச் சென்ற போது, அங்கு வீற்றிருக்-கும் முருகப்பெருமானாகிய முத்துக் குமரன் மீது இந்நூலைப் பாடினர். இதன்கண் சோழநாட்டின் வர்ணனைகளையும், கற்பனையின் உச்சநிலையினையும் காணலாம். இதில் தமிழின் மாண்பு மிகுதியும் கூறப்பட்டுள்ளது.

சிதம்பர மும்மணிக்கோவை : முனிவர் சிதம்பர தரிசனம் செய்யச் சென்றபோது, இந்நூலைப் பாடினர். இதில் இறைவனது ஐந்தொழில், மக்கள் இல்லறத்தோடு வாழ வேண்டிய முறை, துறவற நிலை, தில்லையின் சிறப்பு,

முதலியன கூறப்பட்டுள்ளன. "செல்வம் என்பது சிந்தை-யின் நிறைவே, அல்லல் நல்குரவு அவா எனப்படுமே" என்று செல்வ நிலை, வறுமை நிலை ஆகிய இவ்விரண்டின் நிலைகளை நன்கு விளக்கினர் ஆசிரியர்.

சிதம்பரச் செய்யுட் கோவை : யாப்பிலக்கணத்தில் வரும் மேற்கோள்கள் பெரிதும் சமணசமயப் பாடல்களாகவே உள்ளன. இவ்விலக்கணத்திற்கேற்ற மேற்கோள்பாடல்கள் சைவசமயப் பாடலாக இருந்தால் சிறப்பாக இருக்கும் என்று சைவப் பெருமக்கள் இவரிடம் வேண்டிக்-கொள்ள அவ்வேண்டுகோட் கிணங்க யாப்பிலக்கணத்திற்கு வேண்டிய உதாரணப் பாடல்களாகவே இந்நூலைப் பாடினர்.

" தீர்த்தம் என்பது சிவகங் கையே
ஏத்த ரும்தலம் எழில்புலி யூரே
மூர்த்தி அம்பலக் கூத்தன துருவே."

கைலைக் கலம்பகம் : இந்நூல் முனிவரது பிறப்பிடமாகிய ஸ்ரீ கைலாசம் என்னும் ஊரில் எழுந்தருளிய இறைவர் மீது பாடப்பட்டதாகும்.

பண்டார மும்மணிக்கோவை : முருகப்பெருமானை நோக்கி, " குமரப்பெருமானே ! எனக்கு ஞானசாரியர் எப்போது அமைவர் " என்று வினவினர். அதுபோது, குமரன் " உன் வாக்கு எவரிடம் தடைப்படுகிறதோ, அவரே உனது ஞான சாரியர் ஆவார் " என்றருளினர். பின்பு இவர் தருமை ஆதீன ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிகரைக் கண்டு வணங்கியபோது, திருத்தேசிகர் இவரது புலமையை ஆராயப் பெரியபுராணச் செய்யுளாகிய, " ஐந்து பேர் அறிவும் கண்களே கொள்ள " என்று தொடங்கும் பாடற்கு அனுபவப் பொருள் கூறுக என்று பணித்தனர். குமரகுருபரர் அப்பாவிற்கு அனுபவப் பொருளைக் கூற இயலாது வாக்குத் தடைப்பட்டு நின்று உடனே அவரது திருவடியில் வீழ்ந்து பணிந்து " இன்று முதல் நீரே எனது ஞானசாரியர்" என்று கூறி அவர்பால் உபதேசமும் பெற்றார். அதன்பின்பே இந்நூலையும் அவர் மீது பாடினர். இதில் தமது தேசிகரைச் சிவபெருமானாகப் பாடிப் பரவினர். சைவசித்தாந்த மாண்பு இத்தகையது என்பது

போன்ற சீரிய கருத்துக்களையும் பாடியுள்ளார். "ஒரும் வேதாந்தத்து உச்சியில் பழுத்த ஆரா இன்ப அருங்கனி பிழிந்து சாரங்கொண்ட சைவசித்தாந்தம்" என்று சைவ சித்தாந்த பெருமையைப் பாடிய இடங்களில் இதுவும் ஒன்று.

காசிக் கலம்பகம்: முனிவர் காசியில் இருந்தபோது, விசுவலிங்கப் பெருமான் மீது இந்நூலைப் பாடினர்.

காசித் துண்டி விநாயகர் பதிகமும் இங்குப் பாடப் பட்டது.

சகல கலாவல்லி மாலை: சகல கலா வல்லி என்பவள் சரசுவதி. இந்நூல் அவள் மீது பாடப்பட்டது. குமரகுருபரர் டில்லி பாதுஷாவைக் காணவும், அவருடன் இந்துஸ்தானி மொழியில் உரையாடவும் வேண்டி, அம்மொழியினைத் தமக்கு உணர்த்துமாறு கலைமகளை வேண்டித் துதித்துப் பாடிய நூலாகும்.

"மண்கண்ட வெண்குடைக் கீழ்ஆக மேற்பட்ட மன்னரும்என்
பண்கண் டளவில் பணியச்செய் வாய்படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடிஉண் டேனும், விளம்பில்உன்போல்
கண்கண்ட தெய்வம் உளதோ சகல கலாவல்லியே."

இந்த அளவில் குமரகுருபரர் பாடியுள்ள பிரபந்தங்கள் முடிவடைந்தனவாகக் கருதப்படுகிறது. ஆனால், இவர் பாடியனவாக மீனாட்சி அம்மை இரட்டை மணிமாலை, மதுரை மீனாட்சி அம்மைக் குறம், தில்லைச் சிவகாமி அம்மை இரட்டை மணிமாலை என்னும் மூன்று நூல்களையும் கூறுவர். இந்நூல்களும் இறைவியின் திருவருளைப் பெறுதற்கு மிகச் சிறந்தவையாகும். குறத்தில் குறத்தி குறி சொல்லும் இயல்பு, மலைவளம் முதலியன நன்கு விளக்கப்பட்டுள்ளன.

"பொற்றொடிவள் ளிக்கிளைய பூங்கொடி என்பாட்டி
பூமகள்மா யவன்மார்பில் பொலிவள்என்று சொன்னாள்
மற்றவள்பெண் களில்எங்கள் பெரியதாய் கலைமான்
மலர்அயனார் திருநாவில் வாழ்வள் என்றுசொன்னாள்

பெற்றளங்கள் நற்றுயும் சுந்தரிஇந் திரன்தோள்
பெறும்என்றுள் பின்எங்கள் சிறியதாய் அம்மே
சொற்றகுறிக் களவிலேஎம் கன்னிமார் அறியச்
சொன்னேன்பொய் அலநாங்கள் சொன்னதுசொன்
னதுவே.''

மீனுட்சியம்மைக் குறம்.

சிவப்பிரகாசர்
Sivappragasar

காஞ்சியம்பதியில் குமாரசுவாமி தேசிகர் என்பவர் வாழ்ந்து வந்தனர். இவருக்கு அண்ணுமலையார் அருளால் நான்கு குழந்தைகள் பிறந்தன. மூவர் ஆண்கள், ஒருவர் பெண் பாலார். இவர்களுள் ஒருவரே சிவப்பிரகாசர். இவர் கல்வி கேள்விகளில், இலக்கண இலக்கியங்களில், தர்க்க வேதாந்த சித்தாந்த நூல்களில் நல்ல பயிற்சி பெற்று விளங்கினர். இவர் துறைமங்கலத்தில் அண்ணுமலை ரெட்டியார் வேண்டுகோளுக்கு இணங்கி அங்கு அவர் கட்டித்தந்த மடத்தில் வாழ்ந்து வந்தனர். பின்னர்த் திருநெல்வேலிச் சிந்து பூந்துறையில் இருந்த திருத்தருமை ஆதீன வெள்ளி அம்பலத் தம்பிரானிடம் இலக்கண இலக்கியங்களைக் கற்றனர். இவரது சகோதரர்களும் இவரிடமே இலக்கண இலக்கியங்களைக் கற்றனர். இவரைத் திருமணம் செய்துகொள்ளும்படி ரெட்டியார் வேண்டியபோது, இவருக்கிருந்த துறவு வேட்கையால்,

"சேய்கொண்டா ருங்கமலச் செம்ம லுடனேஅரவப்
பாய்கொண்டா னும்பரவும் பட்டீச் சுரத்தானே
நோய்கொண்டா லும்கொளலாம் நூறுவய் தளவும்
பேய்கொண்டா லும் கொளலாம் பெண்கொள்ள
லாகாதே."

என்று பாடி மணத்தலை வெறுத்தனர். ஆனல், தம் தம்பிமார்களுக்குத் திருமணம் முடித்து வாழ்த்துப் பாக்களையும் பாடினர். இவ் வாழ்த்துப் பாக்கள் மிகமிகச் சுவை பயக்கும் முறையில் அமைந்துள்ளன. இவற்றைத் தனிப்பாடல் திரட்டில் காண்க. திருக்காட்டுப் பள்ளியில் உப்பு விற்பவளது புலமையினைப் பிறர் அறிய அவளைப் பாடும் திறன் பெறும்

அளவுக்கு அருள் செய்தனர். ஞானம்பிகையாராம் தம் தங்கையாரைச் சாந்தலிங்க சுவாமிகளுக்கு மணம் செய்து கொடுத்தனர். சிவப்பிரகாசரது ஞானசிரியர் சிவஞான பாலைய்ய சுவாமிகள் ஆவார். பாடல் பெற்ற தலங்களைத் தரிசித்துக் கொண்டு ஒவ்வொன்றின் மீது இவ்விரண்டு பாடல்களைப் பாடினர். அவை இது போது இல. நல்லாற்றூரில் தங்கி யிருந்தபோது தமது முப்பத்திரண்டாம் வயதில் இறைவன் திருவடியுற்றனர். இவரது காலம் கி.பி. 17 ஆம் நூற்றாண்டு. இவர் வீர சைவ மரபினர். இவர் கற்பனைக் களஞ்சியம் என்றும், கற்பனைக்கு ஊற்று என்றும் போற்றப் படுபவர்.

இவர் பாடிய நூற்கள் பின் வருவன:

சோண சைல மாலை: இது திருவண்ணாமலையார் மீது பாடப்பட்ட நூல். இதனை இவர் இத்தலத்தைத் தரிசித்து மலையை வலம் வரும்போது பாடினர். தவசிகள் தவமாகிய கப்பலை நடத்தற்குத் திருவண்ணாமலை கலங்கரை விளக்க-மாகத் திகழ்கிறது என்பதை

"தவக்கலம் நடத்த உயர்ந்தெழு சோண சைலனே."

என்பது போன்ற கற்பனைகள் பல இதனுள் உண்டு.

திருச்செந்தில் நிரோட்டக யமகஅந்தாதி: இவர் வெள்ளி-யம்பலத் தம்பிரானிடம் இலக்கண இலக்கியங்களைக் கற்று முடித்தபின், திருச்செந்தூரில் கல்வியில் தம்மினும் மிக்கார் இலர் என்று தருக்குற்றிருந்த புலவர் செருக்கை அடக்கு மாறு இவரது போதகாசிரியர் கட்டளை இட, அக்கட்டளைப்-படி அவரைத் திருச்செந்தூரில் கண்டு நிரோட்டகயமக அந்தாதி பாடும்படி கூற, (மேல் உதடும், கீழ் உதடும் ஒன்றை ஒன்று தொட்டுக் கொள்ளாத முறையில் எழுத்-துக்களை அமைத்துப் பாடப்படும் பாடல்கள் அடங்கிய அந்தாதி) அவரால் ஒரு பாடலும் பாட முடியாது திகைத்-துத் தம் செருக்கு அற்று, இவரைப் பணிந்தனர். அது போது இவர் 30 பாடல்களைக் கொண்ட இந்நூலைத் திருச்-செந்தூர் முருகன் மீது பாடினர்.

திருவெங்கைக் கோவை: வெங்கனூர் என்பதே புலவ-ரால் வெங்கை என்று மரூஉ வழக்கப்படி அமைத்துக்

கொள்ளப்பட்டது. இத் தலத்து இறைவர் இறைவியர் பழமலைநாதர், பெரியநாயகி எனப்படுவார். இங்குள்ள பழமலைநாதர் மீது பாடப்பட்ட நூலே இந்நூல். இஃது அகப்பொருள் தழுவிய நூல். ஆசிரியர் துறவியாரே ஆனாலும் இன்பச் சுவையினை இதில் இனிமையாகப் பாடியுள்ளனர்.

திருவெங்கைக் கலம்பகம்: இந்நூலில் இறைவனது திருவடிகட்குத் திருக்குறளின் இரண்டடிகள் உவமையாகும் என்று கூறியிருக்கும் கற்பனை இதுவரையில் எவரும் கூறாத ஒரு சீரிய கருத்தாகும்.

திருவெங்கையுலா: இந்நூலில் இவரிடம் அன்பு கொண்ட அண்ணாமலை ரெட்டியார் குருலிங்க சங்கம பத்தியினையும், அவரது தொண்டையும் மிகுதியும் பாராட்டிப் பாடியுள்ளார். மணிமுத்தா நதியின் சிறப்பு இதில் உண்டு. காரைக்கால் அம்மையாரை இறைவர் அம்மா என்று அழைத்த குறிப்பினை இந்நூல் சுவைபடக் சுட்டுகிறது.

திருவெங்கை அலங்காரம்: இந்நூல் கிடைத்திலது. திருவெங்கையைப் பற்றிய இந் நான்கு நூல்களும் அண்ணாமலை ரெட்டியார் வேண்டுகோளுக்கு இணங்கப் பாடப்பட்டவை.

சிவப்பிரகாச விகாசம்: இது சைவ சித்தாந்த கருத்தை விளக்கும் நூல். அதாவது பதி பசு பாசங்களைப் பற்றிய விளக்கங்களைக் கூறுவது.

தருக்கப் பரிபாஷை: இது தருக்க நூல் பயில்வார்க்குப் பால பாடமாக உதவும் நூல். இஃது உரை நடையில் எழுதப்பட்ட நூல்.

நால்வர் நான்மணி மாலை: திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்திகள், மாணிக்கவாசகர் ஆகிய நால்வரைப்பற்றியும், அவர்கள் பாடல்களைப் பற்றியும் சிறப்பித்துப் பாடப்பட்ட நூல். இந்நூலால் நால்வர் பெருமைகளையும், தேவாரம், திருவாசகம் இவற்றின் மாண்பையும் நன்கு தெரியலாம். இதனைச் சிவஞான முனிவர் தமது சடை முடியில் வைத்துக்கொண்டே இருப்பர் என்றும் கூறுவர்.

" திருவார் பெருந்துறைச் செழுமலர்க் குருந்தின்
நிழல்வாய் உண்ட நிகரில்ஆ னந்தத்
தேன்தேக் கெறியும் செய்யமா ணிக்க
வாசகன் புகன்ற மதுர வாசகம்
யாவரும் ஓதும் இயற்கைத் தாதலின்
பொற்கலம் நிகர்க்கும் பூசுரர் நான்மறை
மட்கலம் நிகர்க்கும் மதுர வாசகம்
ஓதின் முத்தி உறுபயன்
வேதம் ஓதின் மெய்ப்பயன் அறமே."

சதமணி மாலை: வட மொழியில் சைவ சித்தாந்த ஆகமச் சூத்திரங்கள் உள. அவற்றின் மொழி பெயர்ப்புப் போல ஆகம சித்தாந்த கருத்துக்களைக் கூறுவது. இந்த நான்கு நூல்களைச் சிதம்பரத்தில் இருந்த போது பாடினர்.

சிவஞான பாலய்ய சுவாமிகள் நெஞ்சு விடு தூது: இந் நூலில் தசாங்கமும், புறச் சமய கண்டனங்களும் தெளிவு படக் கூறப்பட்டுள்ளன.

தாலாட்டு: ஷை சுவாமிகள் மீது பாடப்பட்டது. வீர சைவ சித்தாந்தத் தெளிவை இந் நூலில் காணலாம்.

பிள்ளைத் தமிழ்: இதுவும் மேற்படி சுவாமிகள் மீது பாடப்பட்டதே. இதில் தாம் சிவஞான பாலய்ய சுவாமி களிடம் பெற்ற உபதேசங்களைப் பற்றிக் கூறப்பட்டிருப் பதைக் காணலாம். தம் குருநாதர் புகழை எந்நாவும் ஓதும், எக்காதும் கேட்கும் என்றும், புகழாதவை மணியின் நாவும், கேட்காதவை ஊசியின் காதும் என்றும் சுவைபட இதில் கூறியிருப்பது இவரது ஞானசிரியர் பெருமை யைக் காட்டுவதாகும்.

கலம்பகம்: இதுவும் ஷை சுவாமிகள்மீது பாடப்பட்டது. இதில் இலக்கணங்களை உவமை காட்டிப் பாடி இருக்கும் நயம் மிகவும் பாராட்டற்பாலது.

திருப்பள்ளி எழுச்சி: இதுவும் ஷை சுவாமிகள் மீது பாடப்பட்டது.

சாந்தலிங்க சுவாமிகளும், சிவப்பிரகாசரும் பொம்மையப் பாளையத்துக்கு அருகில் புத்துப்பட்டு என்னும் ஊரில் தங்கி இருந்தபோது, சாந்தலிங்கர் சிவப்பிரகாசரைச் சிவஞான பாலய்ய சுவாமிகள்மீது தோத்திரப் பாடல்களைப் பாட வேண்டினர். இவர் அது செய்ய மறுத்தனர். அன்று இரவு முருகப் பெருமான் இவர் கனவில், விடு மலர்களைத் தந்து, இவற்றை மாலையாகத் தொடுத்து எனக்களிக்க என்று கட்டளை இட, இதனைச் சாந்தலிங்கரிடம் கூற, அவர் "சிவஞான பாலய்ய தேசிகர் முருகர் அன்பர் ஆதலின், அவர் மீது பாடுக என்ற குறிப்பே இதுவாகும்" என்று கூற அதன் பின் சுவாமிகள் மீது தாலாட்டையும், நெஞ்சு விடு தூதையும், கலம்பகத்தையும் பொம்மையப் பாளையத்தில் பாடினர். திருபள்ளி எழுச்சி, பிள்ளைத் தமிழ் காஞ்சிபுரத்தில் இருந்தபோது பாடப்பட்டன.

திருக்கூவப் புராணம்: இஃது இவ்வூரார் வேண்டு கோளுக்கிணங்கிப் பாடப்பட்ட நூல்.

பிரபுலிங்க லீலை: இது கன்னட மொழியில் உள்ள நூல். இதனை இப் பெயரால் சுவாமிகள் தமிழில் மொழி பெயர்த்துள்ளனர். இஃது அல்லம தேவரின் விளையாட்டைக் கூறும் நூல். படிக்கப் படிக்கச் சுவை தரும் நூல். அல்லம தேவன் என்பார் இறைவரே. அவரே ஈண்டுப் பிரபு எனப்பட்டவர். அதாவது இலிங்க வடிவினர். அவரது லீலைகளைக் கூறுதலின் இப்பெயர் பெற்றது. இதில் திருக்குறள் கருத்து, பெரிய புராணக் கருத்துப் பொலிவு, கம்பராமாயண வாடை, சிந்தாமணிக் கவியின்பம் ஆகிய வைகள் கலந்துள்ளன. கற்பனைக் கவிகளை இதில் காண லாம். மாயை அல்லமரை மயக்கப் பலவாறு முயன்றும், அஃது இயலாமல் இளைத்த நிலைகளை அழகாகப் புனைந்து கூறும் நூல். அல்லமர் இதில் மத்தளக்காரராக நடிக் கிறார். மாயை அரசகுமாரியாகப் பிறந்து, இம் மத்தளக் காரரைக் காதலிக்கிறாள். அவள் காதல் முற்றுப் பெறுமல் கவலையுறுகிறாள். அல்லமர் அன்பர்கட்கு அருட் புரிகிறார். இவ்வாறான பல செய்திகள் இதில் கூறப்பட்டுள்ளன. அல்லமரைக் காதலால் தழுவியபோது, அத்தழுவலுக்கு அவர் இணங்காத நிலையில் மாயை உற்ற நிலையினை இந்நூல்,

"நாடிய ஆடி நிழல்என அணைமேல்
நண்ணுறத் தோன்றிய இறையை
ஓடினள் விழுந்து தழுவுறத் தழுவ
உருமையால் அணைமிசை விழுந்தே
ஆடியின் நிழலைப் பற்றநீட் டியகை
ஆடியில் தாக்க நின்றழுது
வாடுறு மழலைப் பேதையே போல
வருந்தினள் மதர்விழி மாயை."

என்று கூறுகிறது.

வேதாந்த சூடாமணி: இது வேதாந்த மதத்தைப் பற்றிய நூல். இதன் முதல் நூல் நிஜ குணயோகியரால் கன்னட பாஷையில் எழுதப்பட்டது.

சித்தாந்த சிகாமணி: வட மொழியில் சித்தாந்த சிகாமணி என்னும் நூல் உளது. இஃது அதன் கருத்தைத் தழுவி எழுதப்பட்டது. இந்த நூலின் முதல் நூல் இரேணுகர் என்னும் கணத்தலைவரால் அகத்திய மாமுனிவருக்கு உபதேசிக்கப்பட்டதாம். இம் மூன்று நூற்களைக் காஞ்சியில் இருந்தபோது எழுதினர்.

பழமலை அந்தாதி: விருத்தாசலம் என்பதே பழமலை என்பது. இத் தலத்து இறைவர் மீது பாடப்பட்ட நூலே பழமலை அந்தாதி என்பது.

பிட்சாடண நவமணி மாலை: இஃது இறைவர் பிட்சாடண மூர்த்தியாகக் காட்சி அளிக்கும் நிலையினைப்பற்றிப் பாடப்பட்ட நூல். இன்பச் சுவையினை இதில் காணலாம்.

கொச்சகக் கலிப்பா: இந் நூல் கிடைத்திலது.

பெரிய நாயகி அம்மைக் கலித்துறை: இது விருத்தாசலத்தில் எழுந்தருளி இருக்கும் பெரிய நாயகியாகிய விருத்தாம்பிகை மீது பாடப்பட்ட தோத்திர நூல். இதில் தேவியின் மாண்பும், கற்பின் சிறப்பும், மற்றும் பலவும் பாராட்டப்பட்டுள்ளன. இறைவி அலைமகளையும், கலைமகளையும் கண்ணாக உடையாள் என்பதை நயம் தோன்ற,

"தண்ணார் இதழி புனைவான் விழியிணை தம்மனைகள்
பண்ணா அழிக்கும்என் றேநின் திருமுகப் பங்கயத்தில்
கண்ணா யினார்உனக் கவ்வலை மாதும் கலைமகளும்
பெண்ணார் அமுதனை யாய்குன்றை வாழும் பெரியம்மையே"

என்று பாடியுள்ளனர்.

பெரிய நாயகி நெடுவிருத்தம்: இதுவும் அம்மையார் மீது பாடப்பட்ட தோத்திர நூல். இந்நூலில் இறைவி ஞான வடிவினள் என்பதைத் திருஞான சம்பந்தருக்கு ஞானப்பால் ஈந்து ஞான சம்பந்தராக்கினமையால் விளங்கும் என்றும், அருள் வடிவினள் இறைவி என்பது உண்மையாக இருந்தும் இறைவர் சிறுத்தொண்டர் இல்லத்திற்கு மகனை அரிந்து சமைத்துப் படைக்கக் கேட்கப் புறப்பட்ட போது தடுக்காதது என்னே என்று வினவும் வினாவும், மணிமுத்தா நதியின் சிறப்பும் முதலானவை பாடப்பட்டுள்ளன.

இந் நான்கு நூற்களும் சிதம்பர பூபதி கட்டிக்கொடுத்த திருமுதுகுன்றத்து மடத்தில் இருந்த போது பாடியவை.

ஏசுமத நிராகரணம்: ரெவரண்டு பெஸ்கி என்பவர் தமது கிறித்தவ மதத்தின் மேன்மையைக் கூறிப் பலரைத் தம் மதத்தில் ஈடுபடுமாறு செய்து வருவதைக் கண்ட சிவப்பிரகாசர், அவரைக் கண்டிக்கப் புகும் பொருட்டு, இந்நூலைப் பாடினர். இந்நூலின் மூன்று செய்யுட்களே இதுபோது கிடைத்துள்ளன.

நன்னெறி: இதுமாணவர்கள் இளமையில் அறிந்து கொள்ள வேண்டிய நீதிகளை அமைத்துப் பாடிய நூல். இதனை இவர் கடற்கரையில் உலாவியபோது மணலில் எழுதினர். இதனை இவரது தம்பியர்கள் ஏட்டில் எழுதிக் கொண்டனர்.

சிவநாம மகிமை: சிவநாம மந்திரத்தின் மாண்பைக் கூறி, மக்களை ஓதி உய்யுமாறு பாடப்பட்ட நூல்.

"தீய நாளொடு கோளின் செயிர்தபு
நோய கன்றிடும் நூறெனக் கூறிய
ஆயுள் பங்கும் அறம்வளர்ந் தோங்குறும்
தீய தீரும் சிவசிவ என்மினே."

தலவெண்பா: இந்நூல் கிடைத்திலது. இஷ்டலிங்க அபிடேகமாலை, நெடுங்கழி நெடில், குறுங்கழி நெடில், நிரஞ்சன மாலை, கைத்தல மாலை ஆகிய நூல்களையும் செய்துள்ளார். இவை நல்லாற்றூரில் இருந்தபோது பாடப்பட்டவை. இவை வீரசைவ மதக் குறிப்புக்கள், இறைவன் தம் மார்பில், கையில் இலங்க வீற்றிருக்கும் சிறப்புக் கூறுவன.

திருக்காளத்திப் புராணம்: இந்நூலில் உள்ள நக்கீரர் சருக்கமும், கண்ணப்பர் சுருக்கமும் இவரால் பாடப் பட்டவை.

"என்றினி மதுரை காண்பேன் எப்பகல் சவுந்தரேசன்
தன்திரு வடிகள் காண்பேன் தாயைஎஞ் ஞான்று காண்பேன்
வென்றிவேல் தருமவேந்தர் வேந்தனை எந்நாள் காண்பேன்
ஒன்றுயிர்த் துணையாம் சங்கத் துறைவைஎப் பொழுது காண்பேன்."

நக்கீரச் சருக்கம்.

சிவப்பிரகாசரால் பாடப்பட்ட தனிப்பாடல்களும் பல உள. அவற்றைத் தனிப்பாடல் திரட்டில் காண்க.

குமர குருபரர், சிவப்பிரகாசர் ஆகிய இருவர்களைப் போல மற்றும் பல அரும்பெரும் புலவர்கள் அரிய பெரிய நூல்களைச் செய்துள்ளனர். அவர்களைப்பற்றியும் ஈண்டு அறிதல் மிக மிக இன்றியமையாதது.

அருணகிரி நாதர்: இவர் திருவண்ணுமலையில் பிறந்தவர். இவர் பரத்தையர் மரபில் தோன்றினர். இளமையில் இவர் பெரிதும் சிற்றின்பத்தில் மூழ்கிப் பல நோய்கள் உற்று வாடினர். இதனை இவரது திருப்புகழில் பரக்கக் காணலாம். இவர் தம் வாழ்க்கையில் வெறுப்புற்றுத் தற்கொலை புரியத் துணிந்தபோது, முருகன் இவருக்கு ஊறு ஒன்றும் விளைவிக்காமல் இவரது நாவில் "சும்மா இரு" என்று எழுத, அதன்பின் திருப்புகழ்ப் பாடல்களைக் கடல் மடை திறந்தாற்போல் பாடலாயினர். முருகன் தன்னைப் பாடுமாறு கட்டளை இட, நான் எங்ஙனம் பாடுவேன் என்று கேட்க அதுபோது "முத்தைத் தருபத்தித் திருநகை"

என்ற அடி எடுத்துக் கொடுக்கத் திருப்புகழ்களைப் பாடத் தொடங்கினார் என்றும் கூறுவர்.

இவர் வயலூரில் முருகனது மயில் வாகனக் காட்சியினையும், தீட்சையினையும் பெற்றனர். இதனை இவர் "வயலி நகரியில் அருள் பெற மயில்மிசை உதவு பரிமள மதுரகர வெகுவித விசை மலரடி கனவிலும் நனவிலும் மறவேனே" என்று பாடியுள்ளார். திருவண்ணாமலையில் ஆட்கொண்டதையும், "அருணை நகர்மிசை கருணை யொடருளிய மவுன வசனமும் இரு சரணமும் மறவேனே" என்றும், பாடியுள்ளனர். முருகன் இவரை விராலி மலைக்கு வருமாறு அழைத்ததை அருணகிரி நாதர், "விராலி மாமலையின் நிற்பம் நீ கருதியுற்று வா என அழைத்து" என்று தம் திருப்புகழில் சுட்டியுள்ளனர்.

அருணகிரி நாதர் திருச்செந்தூரில் முருகனது நடனக் காட்சியினையும், திருவேரகத்தில் பாத தரிசனத்தையும் பெற்றனர். இவ்வருமைப் பாட்டை, "செந்திலிலும் என்றன்முன் கொஞ்சி நடனம் கொளும் கந்தவேளே" என்றும், "தகையா தெனக்குன் அடிகாண வைத்த தனிஏரகத்தில் முருகோனே" என்றும் பாடிக் களித்துள்ளனர்.

வில்லிபுத்தூரார் தம் கல்விப் பெருக்கால் தம்மோடு வாதிட்டவர்கள் தோல்வி உறுவாராயின், அவர்கள் காதை அறுத்து வந்தனர். ஆகவே, அருணகிரியாருடன் வாதம் இடும் வாய்ப்பு ஏற்பட்ட போது, அருணகிரியார் பாடிய கந்தர் அந்தாதிக்கு உரை கூற நேர்ந்தது. அங்ஙனம் கூறி வருகையில் "திதத்தத்த" என்று தொடங்கும் பாடலுக்கு உரை கூறத் தெரியாது, திகைத்துத் தோற்றனர். பிறகு அருணகிரியாரே அப் பாடலுக்கு உரைகூறினர். தோல்வியுற்ற வில்லிபுத்தூரர் தம் காதை அறுக்கும்படி கூற, அருணகிரியார் அங்ஙனம் செய்யாது விடுத்தனர். இதனைத் தனிப் பாடல் ஒன்று "காசுக்குக் கம்பன் கருணைக்கு அருணகிரி" என்று கூறுகிறது.

அருணகிரியார் சுகவடிவம் (கிளிரூபம்) பெற்று முருகன் புகழையே பேச விரும்பினர். அவ்விருப்பத்தை முருகன் திரு-

வருளால் பெற்ருர். இது, "துகளில் சாயுச்சியக் கதியை யீறற்ற சொற்சுக சொரூபத்தையுற் றடைவேனே" என்றும், "மவுன பஞ்சரம் பயில் தருஞ்சுக பதம் அடைந்திருந் தருள் பொருந்தும்" என்றும் இவர் பாடி இருப்பதால் அறிய வருகிறது.

இவர் பிரபுடதேவன் காலத்தவர். அவன் காலம் கி. பி. 15 ஆம் நூற்ருண்டு. அவனது சபையில் சம்பந்தாண்டான் என்பவன் ஒருவன் இருந்தான். அவன் தேவியை வழிபடுபவன். இவன் அருணகிரியாரை, முருகன் அரசன் அவைக்களம் வருமாறு பாடவேண்டும் என்றும், தான் தேவியை வருமாறு பாடுவதாகவும் அறை கூவினன். அருணகிரிநாதர் "அதல சேடஞர்" என்று தொடங்கும் திருப்புகழ் பாடி அதில் "வனசமாமியார் ஆட நெடிய மாமஞராட மயிலும் ஆடி நீயாடி வரவேணும்" என்று வேண்ட, முருகன் அவ்வாறே வந்துற்றனன். இந்தப் பாட்டில்,

"உதயதாம மார்பான பிரபுட தேவமாராசன்
உளமும் ஆட வாழ்தேவர் பெருமாளே."

என்றும் பாடியிருப்பதால், அவன் காலமே சுவாமிகள் காலமாகும். சம்பந்தாண்டான் தேவியாரைப் பாடியும் அம்மையார் வந்திலர்.

"வாக்கிற்கு அருணகிரி" என்றும் "ஐயா அருணகிரி அப்பா" என்றும் இவரைப் புகழும் பாக்களும் உள. இவர் "அறிவை அறிவது பொருள்" என்று கூறிய உட் பொருளைத் தாயுமானவர்"

"அறிவை அறிவதுவே ஆகும்பொருள் என்றுறுதி
சொன்ன உண்மையினை ஓரும்நாள் எந்நாளோ."

என்று பாடிப் பரவியுள்ளார்.

இவர் பாடிய நூல்கள் திருப்புகழ் 16,000. கிடைத்தவை 1304. கந்தர் அலங்காரம், திருவகுப்பு, கந்தர் அந்தாதி, கந்தர் அநுபூதி என்பனவும் இவர் பாடியவையே. இவைகளே அன்றி வேல் விருத்தம், மயில் விருத்தம் திருவெழு கூற்றிருக்கையும் பாடினராகக் கூறுவர். இவை அச்சில் உள.

"நீலங்கொள் மேகத்தின் மயில்மீதே நீவந்த வாழ்வைக்கண்ட
தனுலே
மால்கொண்ட பேதைக்குன் மணநாறும் மார்தங்கு
தாரைத்தந் தருள்வாயே
வேல்கொண்டு வேலைப்பண் டெறிவோனே வீரங்கொள்
சூரர்க்குங் குலகாலா
நாலங்க வேதத்தின் பொருளோனே நானென்று மார்தட்டும்
பெருமாளே."

திருப்புகழ்.

"மொய்தார் அணிகுழல் வள்ளியை வேட்டவன் முத்தமிழால்
வைதா ரையும்அங்கு வாழவைப் போன்வெய்ய வாரணம்
போல்
கைதான் இருப துடையான் தலைபத்தும் கத்தரிக்க
எய்தான் மருகன் உமையாள் பயந்த இலஞ்சியமே."

கந்தர் அலங்காரம்.

"துதிக்கும் அடியார்க் கொருவர் கெடுக்கஇடர்
நினைக்கின் அவர் குலத்தைமுதல் அறக்களையும்
எனக்கோர் துணை ஆகும்." வேல்வகுப்பு.

"செம்மான் மகளைத் திருடும் திருடன்
பெம்மான் முருகன் பிறவான் இறவான்
சும்மா இருசொல் அறவென் றலுமே
அம்மா பொருள்ஒன் றும்அறிந் திலனே."

கந்தர் அநுபூதி.

வில்லிபுத்தூரார் : இவர் பெண்ணையாறு பாயும் நடு நாட்டில் திருமுனைப்பாடி என்னும் நாட்டைச் சார்ந்த சனியூரில் பிறந்தார். இவரது தந்தையார் வீரராகவாச்சாரியார். தந்தையார், வில்லிபுத்தூர் ஆழ்வார் மீது பற்று மிகுதியும் கொண்டிருந்ததால், தம் பிள்ளைக்கு அவர் பெயரையே இட்டனர். வில்லிபுத்தூரார் தென்மொழி வடமொழி நூல்களை நன்கு கற்றவர். இவரது கல்வித் திறத்தைக் கண்ட இவர் காலத்துத் திருமுனைப்பாடி நாட்டு மன்னனும் கொங்கர் குலாதிபதியான வக்கபாகை வரபதி ஆட்கொண்டான், இவரைத் தக்க மரியாதையுடன் வரவழைத்து, மகா பாரதத்-

தைத் தமிழில் பாடுமாறு கேட்க, இவர் தமிழ் மகா பாரதம் பாடினர்.

இத்தமிழ் மகாபாரதம் பாடியதற்கு வேறு காரணங்களும் கூறப்பெறும். வில்லியாருக்கும் இவருடன் பிறந்த சகோதரருக்கும் தாயபாகம் காரணமாகச் சச்சரவு நேர, அதனைத் தீர்க்க வரபதி ஆட்கொண்டானிடம் செல்ல, அதுபோது அவன் பாரதம் பாடித் தந்தால் வழக்கைத் தீர்ப்பதாகக் கூற இந்நூலைப் பாடினர் என்றும் கூறுவர்.

ஒருமுறை வில்லியார் திருவண்ணுமலையில் தங்கிய போது, அண்ணுமலையார் கோபுரம் தெரிய, அதை மறைக்கத் துணியை விரித்தபோது, இரு கண்களும் பார்வை இழந்தன என்றும், சுய பார்வை எந்தச் சிகிச்சையாலும் தீரா நிலையில் அருணகிரியாரைப் பார்வை தெரிய வழிவகைகளைக் கேட்டபோது, சிவபெருமான் மீது பாடல்களைப் பாடினுல் பார்வை தெரியவரும் என்று கூறத் தாம் மறந்தும் புறந்தொழா நிலமையினைச் சொல்ல, அற்றேல் "பாரதம் பாடும். அதில் சிவபெருமான் பற்றிய குறிப்புக்களும் வரும். அவற்றைக் குறிப்பதனுல் உம் பார்வை செம்மையுறும்" என, அவ்வாறே பாடினர் என்றும் கூறுவர். பாரதத்தில் சிவ பெருமானைக் கூறும் இடங்களில் உளமாரச் சிறப்பாகவே கூறியுள்ளனர்.

"போகமாய் விரிந்தும் போகியாய்ப் பரந்தும்
புலன்களின் வழிமனம் செலுத்தா
யோகியாய் இருந்தும் யோகிகள் முதலா
உரைப்பரும் பலபொரு ளாகியும்
ஏகமாய் நின்றும் தத்துவ மறைக்கும்
எட்டுதற் கரியதன் வடிவில்
பாகமாய் விளங்கும் பைந்தொடி யுடனே
பரிவுடன் இன்மொழி பகர்வான்."

என்பது சிவபெருமானைப் பற்றிப் பாடிய பாடல்களில் ஒன்று.

வில்லியார் திருமாலிடத்தில் அளவற்ற பற்றுடையார் என்பது பாரதம் முற்றும் காணப்பட்டாலும், ஒவ்வொரு சருக்கத்தையும் பாடத் தொடங்கும் போதும் திருமாலை வணங்கியே பாடிச் செல்வது கொண்டும் அறியலாம்.

“அருமறை முதல்வனை ஆழி மாயனை
கருமுகில் வண்ணனைக் கமலக் கண்ணனைக்
திருமகள் தலைவனைத் தேவ தேவனை
இருபத முளரிகள் இறைஞ்சி ஏத்துவாம்.”

வில்லியார் நன்றி மறவாதவர். தம்மைப் பாராட்டிய வரபதி ஆட்கொண்டானைத் தம் நூலில் நான்கு இடங்களில் அமைத்துப் பாடியுள்ளனர். அவற்றுள் ஓர் இடம்,

“சொல்மழை பொழிந்து நாள்தொறும் தனது
தோள்வலி துதிக்கும் நாவலர்க்குப்
பொன்மழை பொழியும் கொங்கர் பூபதிதன்
பொற்பதம் பொருந்தலர் போல்.”

என்பது.

இவர் தம்முடன் வாதிட்டுத் தோற்றவர் காதை அறுத்து வந்தனர். என்பது, “குறும்பி அளவாக் கதைக் குடைந்து தோண்டி எட்டின மட்டு அறுப்பதற்குகோ வில்லி இல்லை” என்று கூறும் தனிப்பாடல் ஒன்றால் தெரிகிறது. இவரது காலம் கி. பி. 15 ஆம் நூற்றாண்டு. வரபதி ஆட்கொண்டான் காலமே. இவரது குமாரர் வரந்தருவார் என்பவர். அவரும் சிறந்த புலவர் என்பது வில்லியார் பாரதத்திற்குச் சிறப்புப் பாயிரம் பாடியிருப்பதால் தெரிகிறது. இது பல அரிய குறிப்புக்களையும் வரலாற்றுச் செய்திகளையும் கொண்டு திகழ்கின்றது. அவற்றுள் தமிழின் சிறப்பைக் கூறும் பாடல்,

“பொருப்பிலே பிறந்து தென்னன் புகழிலே கிடந்து சங்கத்
திருப்பிலே இருந்து வைகை ஏட்டிலே தவழ்ந்த பேதை
நெருப்பிலே நின்று கற்றோர் நினைவிலே நடந்து ஓர்எனை
மருப்பிலே பயின்ற பாவை மருங்கிலே வளருகின்றாள்.”

என்பது.

வில்லியார் பாரதத்திற்கு முதல் நூல் வியாசர் வடமொழி பாரதமே என்றாலும், ஆதிபருவம் முதல் சௌப்திக பருவம் வரை பத்தே பருவங்கள் உள. ஏனைய பருவங்கள் கிடைத்தில.

தாயுமான சுவாமிகள்: இவர் திருமறைக் காட்டில் சைவ வேளாளர் குலத்தில் தோன்றியவர். வடமொழி தென்மொழியில் வல்லுநர். சமய நூல் அறிவு பெரிதும் உடையவர். இவரது ஞானசாரியர் மௌனகுரு. இவர் திருமணம் முடித்து ஒரு குழந்தை பிறந்ததும் துறவு பூண்டவர். இவரது பாடல்களின் தொகுதியே தாயுமானவர் பாடல் என்பது. இது சிறந்த வேதாந்த சித்தாந்த கருத்துக்களைக் கொண்டது. "அங்கிங் கெனுதபடி" என்ற பாடல் இவருடையதே. இறைவன்மீதும், இறைவிமீதும், அடியார் மீதும், குருமூர்த்தி மீதும் இவர் பாடியுள்ளனர். ஆனந்தக் களிப்பு என்னும் பாடல் ஆனந்தமாகவே இருக்கும்.

"வேண்டா விருப்பும் வெறுப்பும்—அந்த
வில்லங்கத் தாலே விளையும் சனனம்
ஆண்டான் உரைத்த படியே—சற்றும்
அசையா திருந்துகொள் அறிவாகி நெஞ்சே
சங்கர சங்கர சம்பு—சிவ—
சங்கர சங்கர சம்பு

ஆநந்தக் களிப்பு.

இவர் காலம் கி. பி. 18 ஆம் நூற்றுண்டு.

சிவஞான முனிவர்: குமர குருபரர், சிவப்பிரகாசர், பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் ஆகியோர் பல பிரபந்தங்களைப் பாடியவர்கள். அவர்களைப் போலப் பல பிரபந்தங்களைப் பாடியவர் சிவஞான முனிவர்.

சிவஞான முனிவர் பாண்டிய நாட்டைச் சார்ந்த பாபநாச ஊருக்கு அருகில் உள்ள விக்கிரம சிங்கபுரத்தில் சைவ வேளாள மரபில் ஆனந்தக் கூத்தர், மயிலம்மையார் ஆகிய பெற்றோர்கட்குப் பிள்ளையாகத் தோன்றினர். இவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் முக்களாலிங்கர் என்பது. இவருக்கு இளமையிலேயே சிவ வேடப் புனிதர்களிடம் அன்பு மிகுந்திருந்தது.

முக்களாலிங்கர் தம் தந்தையாரிடம், தாம் துறவு பூண்டு திருவாவடுதுறையில் மெய்ந் நூல் ஓதி நன்னெறி உய்ய விடை தருமாறு வேண்டினர். தந்தையார் திருமகனரது உயர் நோக்கத்தைக் கண்டு, பிள்ளையைப்

பிரிவது தமக்கு இன்னு தருவதாயினும் உயர்ந்த நோக்கத்தைக் கண்டு, தம் மகனுரை அம் மடத்திலிருந்து தம் இல்லம் வந்து உணவு கொண்டு வாழ்த்திய முனிவரிடம் ஒப்படைத்தனர். முனிவர் முக்களாலிங்கரை அழைத்துச் சென்று சுசீந்திரத்தில் நமச்சிவாய முனிவரின் திருவுருவத்தை வணங்கச் செய்து, பின் அதுபோது திருவாவடுதுறை ஆதினச் சின்னப் பட்டத்துத் தம்பிரானுராகிய ஸ்ரீலஸ்ரீ வேலப்பதேசிகரை வணங்குமாறு செய்ய, வேலப்ப தேசிகர், முக்களாலிங்கரது அன்பினையும், அடக்கத்தையும் கண்டு மகிழ்ந்து சமய தீட்சை புரிந்து, காவி கொடுத்துத் துறவுநிலை மேற்கொள்ளச் செய்தனர். பின்பு சிவஞானம் என்ற தீட்சா நாமமும் ஈந்தனர். சிவஞான முனிவர் வடமொழி தென் மொழிகளில் நன்கு தேர்ந்து விளங்கினுர். இதனுல் இவர் தென்னூற் கடலையும் வடநூற் கடலையும் நிலை கண்டுணர்ந்தவர் எனப் போற்றப்பட்டவர். இலக்கண இலக்கியங்கள் தருக்க சாத்திரம் முதலியவற்றில் சிறந்து விளங்கினுர். ஸ்ரீலஸ்ரீ வேலப்ப தேசிகர் மெய்கண்ட சாத்திரங்களையும், பண்டார சாத்திரங்களையும் உபதேசித்தனர். ஆகவே, தேசிகர் இவர்க்கு ஞானுசாரியராக அமைந்தனர்.

முனிவர் பல தலயாத்திரை புரிந்தனர். இவரது தல யாத்திரையில் திருப்பாதிரிப் புலியூரில் ஒரு செல்வர் நூறு பொன் அடங்கிய ஒரு முடிப்பை வைத்து "கரை ஏறவிட்ட முதல்வா உன்னை யன்றியும் ஓர் கதியுண்டாமோ" என்ற ஈற்றடியை அமைத்து ஒரு செய்யுளைப் பாடுபவர் இம் முடிப்பைப் பெறலாம்," என்று ஏற்பாடு செய்திருந்ததை ஏழைப் பார்ப்பனர் ஒருவர் முனிவரிடம் விண்ணப்பிக்க முனிவர் "ஏறவிட்ட" என்று தொடங்கும் பாடலைப் பாடி அதில் அவ் ஈற்றடியை அமைத்து அவ் வேழை பொன் முடிப்புப் பெறச் செய்தனர்.

சிவஞான முனிவர் காஞ்சியம்பதியில் பல நாட்கள் வாழ்ந்திருந்தனர். இங்கு இருந்து செய்த நூல்கள் பல. பின்பு திருவாவடுதுறைக்குச் சென்று தம் ஞானுசாரியரை வணங்கிக் கொண்டு, கி. பி. 1785 ல் இறைவன் திருவடியுற்றனர். இவர் இயற்றிய நூல்கள் இலக்கணம், இலக்கியம், மொழி பெயர்ப்பு, சமயம், கண்டனம் ஆகிய பல வகையில் அமைந்துள்ளன. இனி அவற்றைக் காண்போம்.

தொல்காப்பியச் சூத்திர விருத்தி: இதில் தொல்காப்பியப் பாயிர விருத்தியும், எழுத்ததிகார முதற் சூத்திர விருத்தியும் அடங்கியுள்ளன. இவ் விருத்தியில் தொல்காப்பிய உரையாசிரியர்களின் உரைகளைக் காரணங் காட்டிச் சிற்சில இடங்களில் மறுத்துத் தம் உரையினைக் கூறியுள்ளனர். சேனாவரையர் உரையினைப் புகழ்கிறார். என்றாலும், அவரையும் ஆகு பெயர், அன்மொழித் தொகை இரண்டும் ஒன்றே என்று கூறியதை மறுத்துள்ளனர். இவ் விருத்தியில் வடமொழி தென்மொழிகட்கும் உள்ள வேறுபாட்டையும் எடுத்துக் காட்டியுள்ளனர். இவ் விருத்தியால் தொல்காப்பிய நுண் பொருட் சிறப்பினை நன்கு உணரலாம்.

நன்னூல் விருத்தியுரை திருத்தம்: நன்னூலுக்கு விருத்தியுரை எழுதியவர் சங்கர நமச்சிவாயப் புலவர். அவ்விருத்தியுரையினையே திருத்தம் செய்து இந் நூலை எழுதினர். "ஆறன் உருபும் ஏற்கும் அவ்வுருபே" என்பது நன்னூல். அதற்குச் சங்கர நமச்சிவாயர் ஆறும் வேற்றுமை உருபு எண்வகை உருபுகளையும் பெற்றுவரும் என்று உரை கூறினார். இவ் வுரையினை மறுத்து, உருபேற்றல் பெயரே அன்றி, இடைச் சொல் உருபு ஏலாது என்று திருத்தி உரை வகுத்தனர். இவ்வாறு பல திருத்தம் இதில் உள.

அகிலாண்டேசுவரி பதிகம்: முனிவர் இராசவல்லி புரத்தை ஞானாசிரியருடன் சென்று வணங்கிய போது, தம் ஆசிரியர் கட்டளைக்கு இணங்க இது பாடப்பட்டது. இது சைவ சித்தாந்த கருத்துக்கள் அமைந்த நூல். இதனைத் தம் ஆசிரியர் முன் அரங்கேற்றினார்.

இளசைப் பதிற்றுப்பத்தந்தாதி: இது முனிவர் இளங்காடு என்னும் திருப்பதியினை வணங்கிய போது பாடிய நூல்.

கச்சி ஆனந்த ருத்திரேசர் பதிகம்: இது காஞ்சியம் பதியில் இருந்தபோது பாடப்பட்ட நூல்.

கலசைச் செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத் தமிழ்: கலசை என்பது தொட்டிக்கலை என்னும் ஊராகும். அவ்வூர்ப் பிள்ளையார் மீது பாடப்பட்ட நூல் இது. இதனை அவ்வூர் கேசவ முதலியார் விருப்பத்திற்கு இணங்கப் பாடப்பட்டது

கலசைப் பதிற்றுப்பத்தந்தாதி: இதுவும் தொட்டிக்கலைச் சிதம்பரேசுரர்மீது பாடப்பட்டது. இதனையும் ஷை முதலியார் வேண்டுகோட்கு இணங்கப் பாடினர்.

குளத்தூர் அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ்: முனிவர் வடதிரு முல்லை வாயிலை வணங்கி இப்பதிக்கு அருகில் உள்ள குளத்தூர்க்குச் சென்று ஆண்டு எழுந்தருளியுள்ள அம்பிகையின் மீது இந்நூலைப் பாடினர். இதில் இறைவி திருஞான சம்பந்தருக்கு ஞானப்பாலை வள்ளத்தில் கறந்து கொடுத்ததன் காரணம், இது இதுவாக இருக்கலாமோ என்று வினவும் பாடல் மிகுந்த சுவை தருவதாகும். இது போன்ற சுவைமிக்க பாடல்கள் பலவுள.

தெய்வச் சுருதி தமிழிக்கன்றித் தீட்டா
நிலைமைத்தென உலகில்
தெறிக்கும் காழிச் சிவஞானச் செம்மல் குழவிக் கருள் ஞானம்
பெய்து கொடுக்கவோ முலையாம் பெரிய மலைவாய்
உறுத்தும் என்றே
பெருமான் தனையும் குழைத்தவலிப் பெற்றி அறிந்து
தடுத்தோபூங்
கையிலகு நகக்குறிபல் கதுவநோம் என்றே தீம்பால்
கறந்து கொடுத்தாய் எனச்சகி மார்கனிந்து பாட நகை முகிழ்க்கும்
வைவைத் தமைத்த மதர்வேல்கண் வாழ்வே வருக வருகவே
வளங்கூர் குளந்தைப்பதி அமுதவல்லி வருக வருகவே

குளத்தூர்ப் பதிற்றுப்பத்தந்தாதி: இது குளத்தூர் சோமேசர் மீது பாடப்பட்ட நூல்.

சோமேசர் முதுமொழி வெண்பா: இந்நூல் ஒவ்வொரு வெண்பாவின் ஈற்றிலும் ஒவ்வொரு குறட்பா அமைய அக்குறட் பாவின் பொருட்கேற்ற உதாரணமாக ஒவ்வொரு வரலாற்றுக் குறிப்பும் முதல் இரண்டடிகளில் அமையப் பாடப்பட்ட நூலாகும். இதுவும் குளத்தூர் சோமேசர் மீது பாடப்பட்டது.

திருத்தொண்டர் திருநாமக் கோவை: மார்கழி மாதத்தில் வரும் திருவாதிரை விழா பத்து நாட்களில், திருவெம்பாவை

தவிர, வேறு திருமுறைகளை ஓதுதல் கூடாது என்பது சைவ மரபு. அதுபோது திருத்தொண்டர் திருப்பெயர்களை மந்திரமாக ஓதலாம் என்ற முறை பற்றி, இந்நூலைப் பாடினர். இது காஞ்சியில் இருந்தபோது பாடப்பட்டது.

திருமுல்லை வாயில் அந்தாதி: முனிவர் வடதிருமுல்லை வாயிலில் இருந்தபோது, அங்கு வீற்றிருக்கும் திரு மாசிலாமணி ஈஸ்வரர்மீது பாடப்பட்டது.

திருவேகம்பர் அந்தாதி: காஞ்சி ஏகாம்பரநாதர் மீது பாடப்பட்ட நூல்.

திருவேகம்பர் ஆனந்தக் களிப்பு: இதுவும் அப்பெருமான் மீது பாடப்பட்ட நூல்.

காஞ்சிப் புராணம்: இதன் சிறப்பைத் தல புராணம் என்ற இடத்துக் காண்க.

பஞ்சாக்கர தேசிகர் மாலை: திருவாவடுதுறை ஆதினத்தில் திருக்கோயில் கொண்டு அன்பர்கட்கு வேண்டும் வரங்களை ஈந்து திருவருள் பாலிக்கும் நமச்சிவாய மூர்த்தி மீது பாடப்பட்ட நூல்.

சித்தாந்த பிரகாசிகை: இது வடமொழியில் சர்வான்ம சம்பு சிவாசாரியார் எழுதிய நூல். இதனைத் தமிழில் முனிவர் மொழிபெயர்த்து எழுதினர்.

சிவதத்துவ விவேகம்: இறைவனது திருப்பெயராம் சிவநாமத்தின் உண்மையினை உணர்த்தும் நூல். இதன் முதல் நூல் அப்பய்ய தீட்சதரால் வடமொழியில் இயற்றப்பட்டது. அதன் மொழிபெயர்ப்பே இந்நூல்.

சுலோகப் பஞ்சகம்: இதனை அரதத்தாசாரியார் வடமொழியில் இயற்றியுள்ளனர். அதன் மொழிபெயர்ப்பு இந்நூல். அகவலால் அமைந்தது.

தருக்க சங்கிரக அன்னப் பட்டியம்: இது தமிழில் அமைந்த உரைநடைத் தருக்க நூல். தருக்க சாத்திரம் பயில்வார்க்குப் பெருந் துணையாக அமைந்தது.

சிவஞான சித்தியார் பொழிப்புரை: சிவஞானபோதம் சுபக்கம், பரபக்கம் எனும் இருபிரிவுகளை யுடையது.

அவற்றுள் இது சுபக்கப் பிரிவுக்கு மட்டும் எழுதப்பட்டபொழிப்புரை ஆகும்.

சிவஞானபோத சிற்றுரை: சிவஞான போதத்திற்கு முனிவர் இரு உரைகள் எழுதினர். ஒன்று பேருரை. அது மாபாடியம் எனப்படுவது. இது சுருக்க முறையில் எழுதப்பட்ட சிற்றுரையாகும்.

சிவஞான மாபாடியம்: இதுவே சிவஞான போதப் பேருரையாகும். இதன் மூலம் சிவஞானபோத உள்ளுறை உண்மைக் கருத்துக்களை நாடிக் கண்டு ஐயம் திரிபுஅற உணர்ந்து கொள்ளலாம். இந்நூலில் தடைகளை எழுப்பி, அவற்றிற்கு விடைகள் எழுதி இருக்கும் இடங்கள் எவரும் மறுக்க முடியாதவை. இலக்கணக் குறிப்பை மிகுதியும் இதில் காணலாம். பல் கலைநூல் நுண்பொருள்களையும் தத்துவப் பொருள்களையும் இதில் தெளியலாம். இந்நூல் வழி முனிவரது வடமொழி, தருக்கப் புலமை எத்தகையன என்பதை நன்கு உணரலாம்.

இலக்கண விளக்கச் சூறாவளி: இந்நூல் வழி இலக்கண விளக்கம் என்னும் நூலில் உள்ள குற்றங்கள் இன்னின்ன என முனிவர் எடுத்துக் காட்டியுள்ளனர். இலக்கண விளக்கத்தில் 'மலைமகள் ஒருபால்மணந்து' என்ற தொடர் மலையும் மகள் என்ற அமங்கலப் பொருள் தருதற்கு இடம் உள்ளது என்று மறுத்துக் கூறிய உரையின் திறத்தைக் காணலாம்.

எடுத்து என்னும் சொல்லுக்கு இட்ட வைரக் குப்பாயம்: சிவஞான சித்தியார் என்னும் நூலில் "என்னை இப்பவத்தில் சேராவகை எடுத்து" என்னும் தொடர், நூல்வழி என்ற தலைப்பின்கீழ் உள்ள பாடலின் முதல் அடியில் அமைந்த-தாகும். இதில் எடுத்து என்னும் சொல்லுக்குப் பொருள் யாது என்று திருவண்ணாமலை ஞானப்பிரகாச முனிவரின் ஆதின பண்டாரசந்நிதி ஒருவர் தமது மாணவரை அனுப்பி வினவுமாறு செய்தபோது, அச்சொல்லின் பொருட் சிறப்பை எடுத்துக் கூறிய பொருளே இந்நூலாகும். குப்பாயம் என்பது மேல் அங்கி. அவ்வங்கிபோல அச்சொல்லைத் தழுவிய பொருளே வைரக் குப்பாயம் என்பது.

என்னை இப்பவத்தில் என்னும் செய்யுட் சிவசமயவாத உரை மறுப்பு: திருவண்ணுமலை ஞானப் பிரகாச முனிவர், சிவஞான சித்தியார்க்குச் சிவசமயவாதக் கொள்கையைத் தழுவி உரை எழுதினர். அவ்வுரையில், "என்னை இப்பவத்தில் சேரா வகை எடுத்து" என்ற தொடருக்கு எழுதிய உரை தவறு என மறுத்தற்கு இந்நூலை எழுதினர்.

சிவசமயவாத உரை மறுப்பு: இது ஞானப் பிரகாச முனிவர் சிவஞான சித்தியார்க்கு எழுதிய உரையினை முற்றிலும் கண்டித்து எழுதிய மறுப்புரை.

சித்தாந்த மரபுக் கண்டனக் கண்டனம்: திருவாவடு-துறையில் மரபு அட்டவணை எழுதப்பட்டது. அதனை மறுத்துத் தருமை ஆதினத்தார் சித்தாந்த மரபுக் கண்டனம் என்னும் நூலை எழுதினுர். அக்கண்டன நூலை மறுத்து எழுதப்பட்டதே "சித்தாந்த மரபுக் கண்டனக் கண்டனம்" என்பது.

கம்பராமாயண முதற் செய்யுள் சங்கோத்திர விருத்தி: கம்பராமாயணத்தைக் காஞ்சி வாசிகள் அளவு கடந்து புகழ்ந்து பேசிக் கம்பரது புலமையினையும் வியந்து சிவஞான முனிவரிடம் கூறினர். முனிவர்க்குக் கம்பராமாயணத்தில் நிரம்பிய ஈடுபாடு உண்டு. என்ருலும், கம்பரைப் புகழ்ந்தவர்களின் செருக்கை, அடக்க வேண்டுமென்ற எண்ணத்தால் கம்பரது புலமையினை இகழ்வார் போலக் கம்பராமாயணத்தில் வரும் "நாடிய பொருள் கைகூடும்" என்று தொடங்கும் செய்யுளை எடுத்துக் கொண்டு, அதில் அமைந்த பொருட் குற்றம் இன்னின்ன, சொற் குற்றம் இன்னின்ன என்பனவற்றை எடுத்துக் காட்டிக் கம்பன் பெரும் புலவன் ஆகான் என்பதை நிலைநாட்டி விளக்கினர். அதனைக் கேட்ட காஞ்சிபுரக் கம்பர் அன்பர்கள், இப்படி ஒவ்வொரு பாடலுக்கும் குற்றம் காட்டினுல் நம்மால் கம்பருக்கு இருக்கிற புகழும் போய்விடுமே என்று அஞ்சிச் சிவஞான முனிவர் காலில் விழுந்து, நாங்கள் கூறியது தவறு என்று விண்ணப்பித்து மன்னிப்பு வேண்டினர். அதன் பின் முனிவர், காஞ்சிபுர வாசிகள் தம் குற்றத்தை உணர்ந்ததனுல், அவர்களை மன்னித்துத் தாமே தாம் எடுத்துக் குற்றங்காட்டிய செய்யுளில் இன்னின்ன

சீரிய பொருள்கள் நிரம்பி இருக்கின்றன என்று எடுத்துக் கூறினர். எதிரிகளும் மகிழ்ந்தனர். இன்னோரன்ன காரணங்களால் எழுதப்பட்டதே இந்நூல்.

இவ்வாறு சிவஞான முனிவர் பல்லாற்றுனும் தமிழ் மொழிக்கும், சைவ சமயத்திற்கும் எழுத்துவாயிலாக அரும் பெரும் தொண்டுகளைப் புரிந்துள்ளனர். இவர் தனிச் செய்யுள் உரை என்னும் உரையும் எழுதி யுள்ளனர். இவரை ஸ்ரீ மாதவச்சிவஞானயோகிகள் என்றும், சிவஞான முனிவர் என்றும் சிறப்பித்துக் கூறுவர். இவரது காலம் கி. பி. 1785 ஆம் ஆண்டு

பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் : இவர் அழகியமணவாள தாசர் என்றும், பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் என்றும் கூறப்படுபவர். திருமங்கையில் வாழ்ந்தவர் என்பர். ஐயங்கார் மரபினர். வீரவைஷ்ணவர். இவர் பட்டரிடம் அருங்கலை பயின்றவர். திருமலை நாய்க்கர் அரசவையில் ஓர் அலுவராக இருந்தவர். இவர் திருவரங்கநாதனிடம் மிகுதியும் ஈடுபாடுடையவர். இவர் திருவரங்கநாதன் மீது திருவரங்கக்கலம்பகம், திருவரங்கத்து அந்தாதி, சீரங்க நாயகர் ஊசல், திருநாமம் ஆகிய நூல்களைப் பாடியவர். ஒரு முறை திரு வேங்கிடமுடையான் இவரது கனவில் தோன்றித் தம் மீதும் பாடல்களைப் பாடும்படி கேட்டபோது "அரங்கனைப் பாடிய வாயால் குரங்கனைப் பாடேன்" என்று கூறியதாகவும் கூறுவர். பிறகு இவர்க்கு நோய் வரத் திருவேங்கட முடையானைத் துதித்தால் அன்றி, இது தீராது என்று அறிந்து, அதன்பின் திருவேங்கடமாலை, திருவேங்கடத்தந்தாதி ஆகிய இருநூல்களைப் பாடினர் என்பர். திருமாலிருஞ் சோலைப் பெருமாள் மீது அழகர் அந்தாதியையும், நூற்றெட்டுத் திருப்பதிகள் மீது நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதியையும் பாடியுள்ளனர். இந்த எட்டு நூல்களும் அஷ்டப்பிரபந்தம் எனப்படும். இந்நூலின் பெருமை நோக்கி, "அஷ்டப்பிரபந்தம் படித்தவன் அரைப் பண்டிதன்" என்னும் அரியதொடரும் நாட்டில் வழங்கி வருகின்றது. இப்பிரபந்தம் "சொல்நோக்கும் பொருள் நோக்கும் தொடை நோக்கும் நடைநோக்கும் துறையின் நோக்கோடு என்னேக்கும் காண இலக்கியமாவது" என்று சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது. திருவரங்கக்கலம்பகத்தில்

அம்மானைப் பாடலில் சிலேடை அமைக்குங்கால் "சானகியைக் கொண்டதும் ஓர் சாபத்தால் அம்மானை" என்று பாடிவிட்டமையினுல் ஒரு சிலர் "அய்யங்கார் அம்மானையில் அடிசரக்கினர்" என்றும் கூறுவர்.

இவர் திருநறையூர் நம்பி மேக விடுதூது, எதிராசர் அந்தாதி என்னும் நூற்களையும் பாடியவர். திருமலைநாயகர் காலமான கி. பி. 17 ஆம் நூற்றுண்டு இவரது காலம். இவர் நாயகர் சபையில் வீற்றிருந்தபோது, திடீரென்று தமது மேலாடையைக் கையால் 'கிருஷ்ண கிருஷ்ண' என்று கூறிக் கசக்கினர். "ஏன் இவ்வாறு செய்தீர்?" என்று அரசர் கேட்டபோது, "திருவரங்கன் தேரில் பவனி வரும் போது தீப்பந்தம் அவரது திரைச்சீலையைக் கொளுத்திவிட்டமையின், அதனை அணைக்க இவ்வாறு செய்தேன்," என்று கூற, நாயக மன்னர் இதன் உண்மை தெரிய ஆளை அனுப்பி உசாவ அங்கிருந்தவர்கள், "ஆம் தீப்பற்றியது. அதனை அய்யங்கார்தாம் அணைத்தார்" என்று கூற, அதனை அரசருக்கு அறிவிக்க, அரசர் அய்யங்காரது பெருமை உணர்ந்து போற்றினர். அவரை அன்று முதல் அலுவலகத்திலிருந்து விடுதலை செய்து, திருவரங்கத்திலேயே வாழ ஏற்பாடு செய்தனர். அய்யங்காரும் திருவரங்கக் கோயில் சலவைக்கல் மண்டபப் பிரகார வடமேற்கு மூலையில் ஓர் அறையில் இருந்து பெருமாள் தளிகைப் பிரசாதம் உண்டு, தொண்டு செய்து வாழ்ந்து வந்தார்.

ஒருநாள் இவர் திருக்கோயில் முன்பு வணங்கிக் கொண்டிருக்கையில், அக்கோயில் பசு இடறி இவர்மேல் விழ, இவரும் கீழே விழுந்தார். காயம் மிகுதியும் உண்டாயது. தாம் இறப்பது நிச்சயம் என்று அறிந்தும் தாம் இறப்பது குறித்துத் தாம் வருந்தவில்லை என்றும், ஆனல் துளவ, துளவ எனச் சொல்லும் சொல் போச்சே என்பதற்கும், அளவில் பெருமூச்சு ஆச்சே என்பதற்கும் வருந்துவதாகப் பாடித் திருமால் திருவடி உற்றனர். ஈண்டு ஒரு குறிப்பினைக் குறிப்பிடுதல் வேண்டும். அதாவது மணவாளதாசர் என்ற பெயர் பெற்றவர் பலர் இருந்தனர் என்றும், அவரவர்கள் செய்த நூல்களைத் தொகுத்து அஷ்டப் பிரபந்தம் என்ற பெயர் ஈந்தனர் என்றும், இக்கருத்தினை வெளியிட்டவர்

திரிசிரபுரம் கோவிந்தப்பிள்ளை என்றும் கூறப்படுவது. இக்கருத்தை நாம் ஏற்றுக் கொள்ளுதற்கு இல்லை. அஷ்டப் பிரபந்த ஆசிரியர் ஒருவரே. அவரே பிள்ளைப்பெருமாள் அய்யங்கார்.

"பாதியாய் அழுகியகால் கைய ரேனும்
பழிதொழிலும் இழிகுலமும் படைத்தா ரேனும்
ஆதியாய் அரவணையாய் என்பா ராகில்
அவர்அன்றோ யாம்வணங்கும் அடிக ளாவார்
சாதியால் ஒழுக்கத்தால் மிக்கோ ரேனும்
சதுர்மறையால் வேள்வியால் தக்கோ ரேனும்
போதில்நான் முகன்பணியப் பள்ளி கொள்வான்
பொன்அரங்கம் போற்றுதார் புலையர் தாமே."

திருவரங்கக் கலம்பகம்.

"மாண்டு பிறந்துழன்று வைகுந்தம் புக்கவரும்
மீண்டுதொழக் காதலிக்கும் வேங்கடமே-பாண்டுமகன்
ஏறிரதப் பாகனூர் ஏத்தும்அடி யார்நாவில்
ஊறிரதப் பாகனூர் ஊர்.

திருவேங்கட மாலை.

தத்துவப் பிரகாசர்: இவர் கும்பகோணம் சிவபுரம் என்ற ஊரில் வேளாளர் மரபில் கி. பி. 16 ஆம் நூற்றுண்டில் தோன்றியவர். இவர் இயற்றிய நூல் தத்துவப் பிரகாசம் என்பது. அது விருத்தப்பாவால் ஆயது. சிவஞான சித்தியார் பரபக்கத்துக்கு உரை கண்டவர் வேறு; இவர் வேறு.

இவருக்கு ஒருவன் படுக்கை, அறை கொடுத்தது பற்றி,

"மூட்டைகலம் புழுதி முக்கலம் சுத்தப்பாழ்
வீட்டை விடுதியா விட்டாயே—போட்ட
தடுக்கெல்லாம் பீறல் தலைஅணையோ வைக்கோல்
படுக்கலா மோசொல்லப் பா."

என்று பாடிய பாட்டைக் காண்க.

ஒப்பிலாமணிப் புலவர்: இவரைப்பற்றி ஒன்றும் அறிதற்கில்லை. ஆனால், இவர் குமணன்மீது பாடிய பாடல் ஒன்று

காணப்படுகின்றது. அது பெரிதும் சங்ககாலப் புலவரான பெருந்தலைச் சாத்தனுர் பாடலை அடி ஒற்றியதாகும். பெருந்தலைச் சாத்தனுர், "சுவைத்தோ றழூஉம் தன்மகத்து முகம் நோக்கி" என்பர். இவர் "சுவைத்தொறும் சுவைத் தொறும் பால் காணுமல் குழவி தாய் முகம் நோக்க" என்பர். "மனையோள் எவ்வம் நோக்கி நினைஇ நிற்படர்ந் திசினே" என்பது சாத்தனுர் வாக்கு. இவர் "மனைவி என்முகம் நோக்க யாமும் உன்முகம் நோக்கி வந்தனம் குமண" என்பது. இவரைச் சங்க காலத்தவராகக் கருதுதவதற்கு இல்லை.

மற்றும் ஒரு புலவர் இப்பெயரால் இருந்தார். அவர் தஞ்சை சரபோஜி மன்னன் காலத்தவர். கி. பி. 18 ஆம் நூற்றுண்டினர். அவர் இலக்கண விளக்க வைத்தியநாத தேசிகர் மாணவர். இவர் சிவரகசியம் என்னும் நூலை இயற்றினுர். திருவாரூரில் பிறந்தவர். இவரைத் தமிழ் மொழிப் பண்டாரம் என்றும் கூறுவர்.

சத்திமுற்றப் புலவர்: இவர் திருச்சத்தி முற்றம் என்னும் ஊரினர். இவரது வரலாறு தெரிந்திலது. இவர் வறுமையால் பெரிதும் வருந்தியவர் என்பது, இவர் பாடிய பாடல் ஒன்ருல் தெரிகிறது. இவர் ஆடையின்றிக் குளிரால் நடுங்கியதை,

> *"ஆடை யின்றி வாடையில் மெலிந்து*
> *கையது கொண்டு மெய்யது பொத்தி*
> *காலது கொண்டு மேலது தழீஇ."*

என்று பாடியுள்ளனர். ஆனுல், பின்னர் இவர் குடிதாங்கி என்பானை அடுத்து, யானை வைத்து வாழும் நிலையினை அடைந்தார் என்பது அவர் வாக்காகிய "இருங்கலியாம் இடும்பைத் தவிர்த்த குடிதாங்கியைச் சென்று கூடியபின் தெறும் புற்கையானை கவளம் கொள்ளாமல் தெவிட்டியதே" என்பதால் தெரிகிறது. காலம் கி. பி. 13 ஆம் நூற்றுண்டு.

சாந்தலிங்கக் கவிராயர்: இவர் சோழநாட்டுத் தண்டலை என்னும் ஊரினர். இவர் பாடிய நூல் தண்டலையார் சதகம் என்பது. இது பழமொழி விளக்கம் என்றும் கூறப்படும். இது சிறந்த நீதி நூல். காலம் கி. பி. 18 ஆம் நூற்றுண்டு.

சதகம் பாடியவர்களுள் சிறந்தவர்கள் அறப்பளீச்சுரர் சதகம் பாடிய அம்பலவாணக் கவிராயர், குமரேச சதகம்

பாடிய குருபாததாசர், திருவேங்கட சதகம் பாடிய நாராயண பாரதி. இவரே கோவிந்த சதகமும் பாடியுள்ளனர். நாராயணசதகம் பாடியவர் திவ்வியகவி நாராயணதாசர். எம்பிரான் சதகம் பாடியவர் கோபாலகிருஷ்ண தாசர். சதகம் நூறு பாடல்களைக் கொண்ட நூல். இதில் நீதிகள் பெரிதும் கூறப்பட்டிருக்கும்.

சாந்தலிங்க சுவாமிகள்: இவர் கோவையில் உள்ள பேரூரில் ஒரு மடம் நிறுவினவர். இவர் வீரசைவ மரபினர். இவர் எழுதிய நூற்கள் வைராக்கிய சதகம், வைராக்கிய தீபம், அவிரோத உந்தியார், கொலை மறுத்தல், நெஞ்சுவிடு தூது ஆகியவைகள். இவற்றிற்குத் திருப்போரூர் சிதம்பர சுவாமிகள் உரை எழுதியுள்ளனர். இவற்றில் பல நூல்களிலிருந்து மேற்கோள் காட்டப்பட்டுள்ளன.

அரிதாசர்: இவர் வைணவப் புலவர். இவர் இருசமய விளக்கம் என்னும் தத்துவ நூல் ஆசிரியர். இதில் சைவ, சுமார்த்த, வைஷ்ணவம் பற்றிய விளக்கம் உண்டு.

குருகைப் பெருமாள் கவிராயர்: இவர் ஆழ்வார் திருநகரில் பிறந்தவர். அணி இலக்கணமாக மாறன் அலங்காரம் என்னும் நூலை எழுதி உரையும் வகுத்தனர். மாறன்கிளவி மாலை என்னும் நூலையும் எழுதியவர். மாறன் பாப் பா இனம் என்னும் யாப்பு இலக்கண நூலையும் இயற்றியவர். மாறன் அகப்பொருள் என்னும் அகப்பொருள் இலக்கண நூலையும் பாடியவர். கி. பி. 16 ஆம் நூற்றுண்டினர்.

அமிர்த கவிராயர்: இவர் வேளாள மரபினர். சேதுபதி அவர்களின் அவைக்களப் புலவர். ஒருமுறை சேதுபதி அவர்கள் அகப்பொருள் கோவையில் வரும் துறைகள் ஒவ்வொன்றிற்கும் பல பாடல்களைப் பாட முடியுமோ என்றனர். அதுபோது இவர் "நானூறு பாடுவேன்" என்றனர். அங்கிருந்தார் "நான் என்பதைத் தன்மைப் பெயராக கொள்ளாமல் நான்கு என்ற பொருளில் கொண்டு, "இவர் நான்கு நூறு பாடுகின்றேன் என்கிறார்!" என்று ஏளனம் செய்தனர். அவ்வேளன மொழியை உண்மை எனவே கொண்டு, நாணிக்கண் புதைத்தல்

என்னும் ஒரு துறைக்கே வேறுவேறு பொருள் தோன்ற நானூறு பாடல்களைப் பாடினர். அதுவே ஒருதுறைக் கோவை என்பது.

நல்லாப் பிள்ளை: இவரும் ஒரு பாரதம் பாடியுள்ளனர். அது நல்லப்பிள்ளை பாரதம் எனப்படும். இந்நூலை இடையிடையே வடமொழிக் கதைகள் பலவற்றையும் சேர்த்து 14,728 பாடல்களால் தம்நூலை முடித்தனர். இவர் தெய்வயானை புராணம் என்னும் நூலைச் செய்தாரெனத் தெரிகிறது. இவர் தொண்டை மண்டலத்தில் தோன்றிய கணக்கர் மரபினர். வடமொழி, தமிழ், தெலுங்கு அறிந்தவர். இவரது காலம் 18 ஆம் நூற்றுண்டு.

பெருந்தேவனார்: இப்பெயருடையார் மூவர் என்பது தெரிகிறது. பாரதம் பாடிய பெருந்தேவனார், சங்ககாலத்தில் இருந்தவர் என்பர். அப்பாரதம் கிடைத்திலது. வேள்விக் குடிச் சாசனம் இப்பாரதம் இருந்ததை அறிவிக்கின்றது. பாரதவெண்பா என்ற பெயரில் ஒரு நூல் உளது. அதனைப் பாடியவர் பெயரும் பெருந்தேவனார் என்பது. அவர் பிற்காலத்தவர் எனக் கருதப்படுகின்றனர். அதாவது எட்டாவது அல்லது ஒன்பதாம் நூற்றுண்டினர். வீரசோழிய இலக்கண நூலுக்கு உரை கண்டவரும் ஒரு பெருந்தேவனார். அவரது காலம் கி. பி. 11 ஆம் நூற்றுண்டு. சங்ககாலம் பெருந்தேவனார் எட்டுத்தொகை நூல்களுள் பரிபாடல், கலித்தொகை நீங்கலாக ஏனைய தொகை நூல்கட்குத் கடவுள் வாழ்த்தைப் பாடியவர் ஆவார்.

வீரகவிராயர்: இவர் திருநெல்வேலியைச் சார்ந்த நல்லூரில் தோன்றியவர். ஆகவே, இவர் நல்லூர் வீரகவிராயர் எனப்பட்டனர். இவர் காளிதேவியின் உபாசகர். பொற்கொல்லர் மரபினர். இவர் ஆசுகவி பாடுதலினும் வல்லவராய் இருந்தனர். அதனால், ஆசுகவி-ராயர் என்றும் கூறப்பட்டு வந்தனர். இவர் எழுதிய நூல் அரிச்சந்திர புராணம். இதனைத் திருப்புல்லணைத் திருமால் கோவிலில் அரங்கேற்றினர் என்பர். அங்ஙனம் அரங்-கேற்றிய காலம் கி. பி. 1524. ஆகவே, இவரது காலமும் இதுவே. அரிச்சந்திர புராணத்தில் பாயிரம், நாட்டுச் சிறப்பு, நகரச்சிறப்புப் பிரிவுகளுடன், விவாக காண்டம் முதல்

உத்தர காண்டம் ஈருகப் பத்துக் காண்டங்கள் உள. பாடல்கள் 1,315. இந்நூலில் அமைந்த சந்திரமதி புலம்பல் கல்லான நெஞ்சையும் கரையச் செய்யவல்லது. அவள் தன்மகன் இறந்தபோது பலவாறு கூறிப் புலம்பினுள். அவற்றுள் ஒன்று,

"நல்லோர் வகுத்த முறையாம் அறங்கள் நால்எட்டில்
ஒன்றும் குறையோம்
இல்லோரை அற்பம் இகழோம் இறுக்கும் இறைஅன்றி ஏற
உகவேம்
சொல்லோ மறுத்தும் உரையோம் உரைத்த துறவோர்கள்
புத்தி கடவோம்
எல்லார் தமக்கும் இனிதே விளைப்பம் ஏதாக வந்த திதுவே."

என்பது.

வரதுங்கராம பாண்டியர்: இவர் பிற்காலப் பாண்டியர் மரபில் கவி அரங்கேறிய புலவருள் ஒருவர். அதிவீரராம பாண்டியரின் தமையனுர். இவர் பாடிய நூல்கள் பிரமோத்தர காண்டம், கொக்கோகம் முதலியன. பிரமோத்தர காண்டம், பஞ்சாட்சரம், திருநீறு, சிவதானம் இவற்றின் மாண்பையும், சிவராத்திரி வரலாறு, சோமவார விரத சிறப்பையும், சனி பிரதோஷம் பற்றியும் மற்றும் பல விடயங்களையும் கூறுகிறது. சோமவார மகிமையை

"இல்லறத்தின் கிழமைதனைப் பூணுமாந்த
ரியல்புடன்இல் லறக்கிழமை பூண்ட மாதர்
தொல்லறத்தின் கொழுநருடன வாழும்மாதர்
துணைவர்தமை இழந்துதுய ருழக்கும் மாதர்
புல்லறத்தை ஒருவிஅரன் சோமவாரப்
பூசனையே புரிவர்எனில் புவன மீதில்
அல்லல்அறுத் தன்னவர்உள் நினைந்த எல்லாம்
அவர்நினைவின் படியேவந் தடையு மன்றே."

என்று பாடுகிறது பிரம்மோத்திர காண்டம்.

அதிவீரராம பாண்டியர்: இவரது இயற்பெயர் அழகர் பெருமாள் என்பது. இவர் கொற்கையில் அரசாண்டவர். தென்காசியும் இவரது ஆட்சியில் இருந்தது. தென்காசியில் சிவனுர் கோவிலையும் கட்டியவர். இவர் சிறந்த கவிஞர்.

ஆதலின், தவறுகப் பாடிய புலவர்களின் தலையில் குட்டி அவர்களைத் திருத்தி வந்தனர். இது "குட்டுதற்கோ பிள்ளைப் பாண்டியன் ஈங்கில்லை" என்னும் தனிப் பாடலால் தெரிகிறது. இவர் பாடிய நூற்கள் காசி காண்டம், கூர்ம புராணம், மகா புராணம், இலிங்க புராணம், வாயு சங்கிதை திருக்கருவைப் பதிற்றுப்பத் தந்தாதி, நைடதம், வெற்றி வேற்கை என்பன.

இவர் செய்த நூல்களுள் நைடதம் எல்லோராலும் படிக்கப்பட்டு வரும் காவியமாகும். வடமொழியில் உள்ள நளனது சரித்திரம், தமிழில் இவரால் விருத்தப்பாவில் பாடப்பட்டது. நளவெண்பா வேறு. "நைடதம் புலவர்க்கு ஔடதம்" என்று வழங்கும் தொடரால் இதன் பெருமை நன்கு தெரியவரும். இதில் அமைந்த வர்ணனைகள் மிக்க சுவை பயப்பனவாகும்.

"மழைக்கண் மங்கையர் பயில்தர மரகத மணியின்
இழைத்த செய்குன்றின் பைங்கதிர் பொன்னிலத் தெய்தக்
குழைத்த ஐந்தரு நீழலில் குலவும்ஆன் இனங்கள்
தழைத்த புல்லெனை விரைவொடு தனித்தனி கறிக்கும்."

வெற்றி வேற்கை: இது சிறந்த நீதி நூல். இளஞ்சிறுர்கட்கு இளமையில் கற்பிக்கப்படும் நீதி நூல். இது நறுந்தொகை என்றும், சுந்தர பாண்டியன் தொகுதி என்றும் கூறப்பெறும்.

திருக்கருவைப் பதிற்றுப்பத் தந்தாதி: இது பாண்டிய நாட்டுக் கரிவலம் வந்த நல்லூர் இறைவன்மீது பாடப்பட்டதாகும். இது மிக்க உருக்கமான கவிகளைக் கொண்டது. இதனைக் குட்டித் திருவாசகம் என்றும் கூறுவர்.

"சிந்தனை நினக்குத் தந்தேன் திருவருள் எனக்குத் தந்தாய்
வந்தனை உனக்குத் தந்தேன் மலரடி எனக்குத் தந்தாய்
பைந்துணர் உனக்குத் தந்தேன் பரகதி எனக்குத் தந்தாய்
கந்தனைப் பயந்த நாதா கருவையில் இருக்கும் கோனே."

என்பது ஒரு பாடல்.

இவ்விரு பாண்டியர்கள் காலம் கி. பி. 16 ஆம் நூற்றுண்டு ஆகும். வரதுங்கரும், அதிவீரராமரும் தமிழ் மொழிக்கு அரும் பெரும் தொண்டு செய்தமையாலும்,

சிவஞான முனிவரும் இவரது மாணவர் கச்சியப்ப முனிவரும் தமிழ் நூற்கள் பல செய்தமையாலும், "பாண்டியரில் இருவர், பட்டரில் இருவர்" என்ற பழமொழியும் வழங்கலாயிற்று. பாண்டியரில் இருவர் வரதுங்கரும் அதிவீரராமரும் ஆவர். பட்டரில் இருவர் சிவஞான முனிவரும் கச்சியப்ப முனிவரும் ஆவர்.

சிவக்கொழுந்து தேசிகர்: இவர் கும்பகோணத்திற்கு அருகேயுள்ள கொட்டையூரில் தேசிக மரபில் பிறந்தவர். கொட்டையூர் என்பது கோடீச்சுரம் என்னும் பாடல் பெற்ற தலம். இவர் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினமையால், இவர் காலத்துச் சரபோஜி மன்னர் இவரைத் தம் அரண்மனை வித்துவானாக அமைத்துக் கொண்டனர். அங்கு இருந்தபோது சரபேந்திர வைத்திய முறைகள், சன்னிரோக சிகிச்சைகள், சரபேந்திர வைத்தியம் என்னும் மூன்று நூல்களை இயற்றினர். இவ்வைத்திய நூல்களுக்கும் இப்போதுலவும் வைத்திய நூல்களுக்கும் வேறுபாடு உண்டு. இவரது நூல்கள் நல்ல தமிழ் நடையால் அமைந்தவை.

இவர் 90 ஆண்டுகள் வாழ்ந்தவர். இவரது பேரர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிநாத சுவாமிகள். திருப்பனந்தாள் திருமடத் தலைவராக இருந்தவர். தேசிகர் அவர்கள் கோடீசுர கோவையினையும், தஞ்சைப் பெருவுடையார் உலா, சரபேந்திர பூபாலக் குறவஞ்சி நாடகம் என்பவைகளையும், கொட்டையூர் உலா என்னும் நூலையும் பாடினர் என்ப. திருவிடை மருதூர்ப் புராணம், திருப்பெருமணநல்லூர் புராணம் என்ற இருபுராணங்களையும் பாடியுள்ளார். சரசக்கழி நெடில் என்னும் பாடல்களையும் இவர் பாடியனவாகக் கூறுவர். அவை பல தலங்களைப் பற்றியனவாகவும், அகப்பொருள் தழுவினவாகவும் உள்ளன என்பர்.

பல்லவி (எடுப்பு)

இந்த மட்டும் செய்யடி சகியே நீ
இந்த மட்டும் செய்யடி

அனுபல்லவி (தொடுப்பு)

சந்தம் வளரும் தஞ்சைச் சரபோஜி மன்னர் தம்பால்
சார்ந்தென் விரகமெல்லாம் ஓர்ந்திடச் சொல்ல வேண்டும்
(இந்த)

சரணம் (முடிப்பு)
மனத்தினைத் தூதுவிட்டேன் அதன்செய்தி ஓராமல்
மகிழ்ந்தவர் இடத்தில் இருந்தது வாராமல்
அனத்தினை அனுப்பலாம் அதுசெல்லும் சோராமல்
அதுநிற்க நீயேசெல் வருத்தத்தைப் பாராமல் (இந்த)

சரபேந்திர பூபாலக் குறவஞ்சி.

கிறித்தவர் தமிழ்த்தொண்டு

பண்டைக் காலத் தமிழ் இலக்கியங்கள் பெரிதும் செய்யுளால் யாக்கப்பட்டவை. உரைநடை நூல்களாக ஒரு சிலவே தோற்றம் அளித்தன. இறையனார் களவியல் உரை, சிலப்பதிகாரம், அதன் உரை போன்ற நூல்களைச் சொல்லலாம். இவைகள் கூட முற்றிலும் உரை நடை நூலாக அமைந்தவை எனல் இயலாது. இடையிடையே உரை நடை அமைந்த நூற்கள். இது குறித்தே சிலப்பதிகாரம் உரை நடை யிட்ட பாட்டுடைச் செய்யுள் என்ற பெயரையும் பெற்றுள்ளது. இங்ஙிலையில் உரை நடை வளத்தைப் பெருக்கியவர்கள் கிறித்து மதப் பெரியார்களான ஐரோப்பியர்களே. உரை நடைகளை மட்டும் இவர்கள் எழுதி வழி காட்டியவர்கள் அல்லர். தமிழ் அன்னைக்குப் பல அணிகலன்களாகப் பல தமிழ் நூல்களையும் யாத்துள்ளனர். தமிழர்கள் சொற்களுக்குரிய பொருள்களை இக்காலத்தைப் போல அகராதிகளைக் கொண்டறிந்திலர். சொற் பொருள்களையும் செய்யுளில் அமைத்தே பயின்று வந்தனர். ஆகவே, அகராதி முறையை அமைத்துத் தந்தவர்களும் கிறித்தவர்களே. தமிழில் அச்சு எழுத்துக்களைக் கண்டுபிடித்து, நூல்களை அச்சு வாகனம் ஏற்றியவர்களும் இவர்களே. இவையே அன்றித் தமிழினை அவர்கள் நன்கு பயின்று, மேற்கு நாட்டவர் பலரையும் பயிலுமாறு செய்ய நந்தம் தமிழ் நூல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர்களும் ஆவர்.

கோள நூல் (நில நூல்), ககோள நூல் (வான நூல்), வரலாற்றுநூல், க்ஷேத்திரக் கணிதம் (நிலக் கணித நூல்) இயற்கை நூல், பிராணி நூல், உயிர் நூல், உடல் நூல், நியாய நூல், மருத்துவ நூல், ரசாயன நூல் (வேதி நூல்) போன்ற நூல்களை முதல் முதல் தமிழில் எழுதி வெளியிட்ட

பெருமை கிறித்தவர்களேயே சாரும். செய்தித்தாள், கிழமைத்தாள், திங்கள் தாள் இவற்றிற்கு முதல், முதல் வித்திட்ட பெருமை கிறித்தவர்களுக்கே உரியது. இவ்வாறு பலவாற்ருலும் தமிழுக்குத் தொண்டு புரிந்த பெரியார்களேப் பற்றிச் சிறிது பார்ப்போமாக.

தத்துவ போதக சுவாமி: இவரை ஆங்கில மொழிப் பெயரால் குறிப்பிடும்போது Robert De Nobili என்பர். இவர் இத்தாலி தேசத்தவர். இவர் தமிழ் நாடு போந்தார். தமிழ்நாட்டு மக்கள்போல, உடை உடுத்திச் சைவ உணவு உண்டு, சந்தன நெற்றியுடன் விளங்கினர். இங்ஙனம் தோற்றம் அளித்ததன் காரணம் தமிழர்களுடன் பழகி அவர்களேக் கிறித்தவர் ஆக்குவதற்கே ஆம். வடமொழி தென் மொழிகளில் வல்லுநராய்த் திகழ்ந்தார். இவர் பல்லாண்டு தமிழ்ப் பணி புரிந்தார். இவர் மயிலேயில் காலமாஞர். இவர் எழுதிய நூல்களாக மந்திரமாலே, கடவுள் நிருணயம், ஏசுநாதர் சரித்திரம், தமிழ்ப் போர்ச்சுகீசு அகராதி என்பனவற்றைக் கூறுவர். இவர் நாய்க்க மன்னர் காலத்தவர் என்று கருதப்படுதலால் கி. பி. 17 ஆம் நூற்ருண்டினர் என்பர்.

வீரமாமுனிவர்: இவர் இத்தாலி தேசத்தில் பிறந்தவர். இவரே கான்ஸ்டாண்ட்டைன், ஜோஸப் பெஸ்கி. இவரைத் தைரியநாதசாமி என்றும் கூறுவர். தமது கிறித்தவச் சமயத்தைப் பரவச் செய்யத் தமிழ் நாட்டிற்கு வந்தவர். இவரும் நோபிலி அவர்களேப் போலவே நடை, உடை, பாவனே, உணவு முதலியவற்றை மேற்கொண்டவர். இவர் லத்தீன், தமிழ், தெலுங்கு, இந்துஸ்தான், பாரசீக மொழிகளேப் பயின்றவர். தொல்காப்பியர் காலத்தில் எகர ஒகர எழுத்துக்கள் மேலே புள்ளி பெற்று எழுதப்பட்டன. இவை குற்றெழுத்துக்கள் ஆகும். புள்ளி பெருமல் இருப்பன நெட்டெழுத்துக்களாகும்.

“ மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலேயல்
எகர ஒகரத் தியற்கையும் அற்றே ”

என்பது தொல்காப்பியம். இதனே மாற்றி இவர் எகர ஒகரங்களின்மீது நீண்ட புள்ளியையும், மெய்யின்மீது சுழித்த புள்ளியையும் அமைத்து எழுதியவர். இதனே விதியாகவே,

"நீட்டல் சுழித்தல் குறில்மெய்க் கிருபுள்ளி" என்றும் தாம் எழுதிய தொன்னூல் விளக்கத்தில் எழுதியுள்ளனர். இவர் பல தமிழ் நூல்களைச் செய்தவர். அவை கீழ் வருவன:

சதுர அகராதி: இந்நூல் பெயர், பொருள், தொகை, தொடை என்ற நான்கு தலைப்புக்களில் சொற்கள் அகர வரிசைப் படுத்தப்பட்டு விளங்குகிறது. இதுவே அன்றித் தமிழ் இலத்தின் அகராதியையும் தொகுத்துள்ளார். இதனால் தமிழர் லத்தீன் மொழியையும், லத்தீன் மொழி பேசுவோர் தமிழ் மொழியையும் கற்கப் பெரிதும் எளிதாகும். தமிழில் அகராதி முறையை ஏற்படுத்தியவர் இவரே.

தொன்னூல் விளக்கம்: எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி இலக்கணங்களைத் தமிழில் கூறும் நூல். பேச்சுத் தமிழ் இலக்கணமாகக் கொடுந் தமிழ் இலக்கணம் என்ற பெயரில் லத்தீன் மொழியில் ஓர் இலக்கணம் எழுதியுள்ளார்.

பரமார்த்த குரு கதை: இது நகைச்சுவை ததும்பும் உரை நடைக் கதை. இதுவே அன்றி வேதியர் ஒழுக்கம், வேத விளக்கம், வாமன் கதை முதலியனவற்றையும் எழுதியுள்ளார்.

தேம்பாவணி: இது பெருங்காப்பிய அமைப்பில் அமைந்த நூல். தேம்பாவணி என்பது இனிய பாவின் அழகு கொண்டு விளங்கும் நூல் என்னும் பொருள் தரும் தொடர். இஃது ஏசுப் பெருமகனாரின் வளர்ப்புத் தந்தையாராகிய சூசையப்பரது வரலாற்றைக் கூறுவது. இதில் 3 கண்டம், 36 படலங்கள், 3615 பாடல்கள் உள. இதில் சிந்தாமணி, கம்ப ராமாயண நடை, கருத்தழகு முதலியவற்றைக் காணலாம்.

"கல்லை ஏற்றலும் கவணினைச் சுழற்றனும் அக்கல்
ஒல்லை ஓட்டலும் ஒருவரும் காண்கிலர் இடிக்கும்
செல்லை ஒத்தன சிலைநுதல் பாய்தலும் அன்னன்
எல்லை பாய்ந்திருள் இரிந்தென வீழ்தலும் கண்டார்."

என்பது தேம்பாவணிப் பாடல். இது கம்பர் கருத்தைத் தழுவியதற்கு ஏற்ற பாடல்.

திருக்காவலூர்க் கலம்பகம்: இது திருக்காவலூர் தேவ மாதாவின்மீது பாடிய சந்த இன்பம் கலந்த 101 பாடல்கள் கொண்ட நூல். இதுவே அன்றி **அடைக்கல நாயகி வெண் கலிப்பா** என்ற நூலையும் பாடியுள்ளார்.

"பார்மேவும் பழிநீப்பப் பகர்ந்தடங்காப் பரிவுள்ளிச்
சீர்மேவும் திருவுளத்தைத் தெரிந்தமரர் உளம்உவப்ப
உருவில்லான் உருவாக உலகில்ஒரு மகன்உதிப்பக்
கருவில்லாக் கருத்தாங்கிக் கன்னித்தாய் ஆயினையே."

கித்தேரி அம்பாள் அம்மானை: இது போர்த்துக்கீசிய நாட்டு வேதக் காட்சியான கித்தேரி அம்பாள்மீது பாடப் பட்டது. இதனைப் பாமரரும் எளிதில் படித்து இன்புறலாம்.

கருணும்பாப் பதிகம்: இந் நூல் தேவாரப்போக்கில் அமைந்ததாகும்.

வீரமாமுனிவர் திருக்குறள் அறத்துப்பால், பொருட்பால் இவற்றை லத்தீன் மொழியில் மொழிபெயர்த்துள்ளார். இவர் திருச்சிராப்பள்ளியை ஆண்ட சந்தாசாகிப்பிடம் திவானு இருந்தார் என்பது இவரது வரலாற்ருல் அறியவரு தலின், இவரது காலம் கி. பி. 18 ஆம் நூற்ருண்டாகும். இவர் திருநெல்வேலியில் காலமானுர். இவரது தேம்பாவணிக் காவியமே இவர்க்கு வீரமாமுனிவர் என்ற பட்டப்பெயரைத் தந்தது.

எல்லீஸ் துரை: இவர் ஆங்கிலேயர். கலெக்டெராகப் பணிபுரிந்தவர். தமிழும் வடமொழியும் அறிந்தவர். பல தமிழ் ஏட்டுச் சுவடிகளைத் தேடிச் சேர்த்தவர். திருக்குறளில் பதின்மூன்று அதிகாரங்களுக்கு ஆங்கிலத்தில் உரை எழுதி-யுள்ளார். அவ்வுரையில் நாலடியார், சீவக சிந்தாமணி, புறநானூறு முதலான நூற்களின் பாக்கள் மேற்கோளாக எடுத்தாளப்பட்டுள்ளன.

"செந்தமிழ்ச் செல்வனும் ஓர்ஆயி ரம்தலைச் சேடனும்யாழ்
சுந்தரத் தோடிசை வல்லோனும் யாவரும் தோத்திரம்செய்
கந்தனைச் சொல்லும் கவிராமச் சந்திரனைக் கண்டுவெட்கி
அந்தர வெற்பிழி பாதாளம் தேடி அடங்கினரே."

இப்பாடல் இவரது நண்பரான இராமச்சந்திரக் கவிராயர்மீது பாடப்பட்டதாகும்.

எல்லீஸ் துரை அவர்கள் கி. பி. 1796 ல் இந்தியா வந்துற்று, 1819 ல் காலமானுர் என்ற குறிப்பு Indian Antiquary என்னும் சஞ்சிகைவழி அறிதலின், இவரது காலம் இன்னது எனப் புலனுதல் காண்க.

ரேனிஸ் ஐயர்: இவர் ஜர்மானிய தேசத்தவர். திருநெல்வேலிக்கு வந்துற்றுப் பாளையங் கோட்டையில் சமய ஊழியம் புரிந்தவர். பல அறங்களையும் புரிந்தவர். தமிழ்மொழியினை இராமகவிராயரிடம் கற்றறிந்தார். தமிழ் உரை நடை நூற்களை எழுதியவர். இவர் திருப்பாற்கடல் நாதன் கவிராயரிடம் நன்னூல் பயின்றனர் எனக் கூறுவர். புதிய ஏற்பாடு முழுவதையும் நல்ல தமிழில் எழுதியுள்ளார். இலக்கணத்தை எளிதில் அறியத் தமிழ் இலக்கணத்தையும் வேத உதாரணத் திரட்டையும் தொகுத்து எழுதியவர். இவரது காலம் கி. பி. 19 ஆம் நூற்ருண்டு.

போப்பையர்: இவர் ஆங்கிலேயர். இவர் இந்தியாவில் பல்லாண்டுகள் இருந்து சமயப்பணி ஆற்றியவர். இவர் பல்லாண்டு தமிழ் மொழியினைப் பயின்று தமிழ்மொழிக்கு அருஞ்சேவை புரிந்தவர். ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் தமிழ் ஆசிரியராகத் தமிழ்த்தொண்டு புரிந்தவர். இவர் மகாவித்துவான் இராமானுஜ கவிராயரிடம் தமிழ் பயின்றவர். இவருக்குத் தமிழ் மொழியில் இருந்த பற்றினைத் தாம் இறந்த பிறகு தம் உடலைப் புதைத்த இடத்தில் "தமிழ் மாணவன்" என்று பொறிக்குமாறு செய்ததன் மூலம் அறியலாம். இதனை அவர் வாக்காக, அவர் திரு. நல்லசாமிப் பிள்ளைக்கு எழுதிய கடிதத்தில் "Whenever I die, '*A Student of Tamil*' will be inscribed on my monument" என்று எழுதி இருத்தலால் அறியலாம். இவரது காலம் கி. பி. 19 ஆம் நூற்ருண்டு.

இவர் திருக்குறள், நாலடியார், திருவாசகம் இவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். பல ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் எழுதியவர். புறநானூறு, புறப் பொருள் வெண்பாமாலை ஆகிய இவ்விரு நூற்களின் சில பாடல்களையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த பெருமை இவர்க்குண்டு.

திருவாசகத்தில் இவருக்கு மிக்க பற்றுண்டு. அப்பற்றினை மேல் நாட்டவரும் அறியவே, இவர் இதனைத் தமது வாழ் நாட்களின் கடைசியில் மொழிபெயர்க்கத் தொடங்கினர். தமது 80 வது ஆண்டில் இதனை அச்சிட்டு வெளியிட்டனர். இவர் இந்நூல் மொழி பெயர்க்கப் படவேண்டிய இன்றியமையாமையை "This is a work that ought to be done" என்று தமது முன்னுரையில் கூறியுள்ளனர். இவர் சைவ சமயத்தையும், சைவ சித்தாந்தத்தையும் வெகுவாக புகழ்ந்துள்ளனர். 'Saivism is the real religion of the South of India' என்றும், 'Saiva Siddantha philosophy has and deserves to have far more influence than any other,' என்றும் அம்முகவுரையில் எழுதியுள்ளனர். இவரது முகவுரையில் April 24, 1900 என்ற குறிப்புக் காணப்படுதலின், அக்காலமே இவரது காலம் என்க.

கால்டுவெல் ஐயர்: இவரது ஆங்கிலப் பெயர் Right Rev. Robert Caldwell என்பது. இவர் அயர்லாந்தில் பிறந்தவர். இவர் சமயத் தொண்டு புரியச் சென்னைக்கு வந்தனர். இவர் திருநெல்வேலியில் தங்கி இருந்தபோது பல இந்துக்களைக் கிறித்தவர்களாக மாற்றினர். இவர் தமது கடைசிக் கால வாழ்க்கையைக் கோடைக்கானலில் கழித்து அங்கேயே இறந்தனர். இவரது உடலம் இடையன் குடியில் அடக்கம் செய்யப்பட்டது. இவர் 1891 ல் இறந்ததாகத் தெரிதலின், இவரது காலம் 19 ஆம் நூற்றுண்டாகும்.

இவர் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகளை நன்கு கற்றவர். இம்மொழிகளே அன்றி வடமொழி கிரீக், லத்தீன், ஈபுரு, ஜெர்மானிய மொழி முதலியவற்றையும் பயின்றார். இதன் பயனாகவே இவர் "திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்" என்று கூறப்படும் (A Comparative Grammar of the Dravidian Languages) நூலை ஆங்கிலத்தில் எழுதியுள்ளனர். இதன் வழி தமிழ் மொழியின் தொன்மையினையும் சிறப்பினையும் நன்கு தெரிவித்துள்ளனர். மனோன்மணீயம் ஆசிரியர் தமிழ் அன்னையின் வணக்கத்தில் "எத்திசையும் புகழ் மணக்கும் இருந்த பெருந் தமிழ் அணங்கே, கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையாளமும் துளுவும் உன் உதரத்துதித் தெழுந்தே

ஒன்று பல ஆயிடினும், ஆரியம்போல் உலக வழக்கழிந் தொழிந்து சிதையாவுன் சீரிளமைத் திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்துதுமே" என்று பாடத் துணையாக இருந்தது கால்டுவெல் அவர்கள் ஒப்பிலக்கணமே. இவர் திருநெல்வேலிச் சரித்திரத்தையும் ஆங்கிலத்தில் எழுதியுள்ளனர். இவரது ஒப்பிலக்கண நூலின் பிற்சேர்க்கையின் மூலம் இக் காலத்தில் வடமொழிகள் என்று கருதப்பட்ட சொற்கள் பலவும் தமிழ்மொழிகளாகும் என்பதையும், அவை வட மொழியில் சேர்ந்து அம் மொழிக்குரிமை பாராட்டும் நிலையினை உற்றன என்பதையும் நன்கு தெரிந்து கொள்ளலாம்.

இவர் தமிழ் மொழி, வட மொழியின் தொடர்பின்றித் தனித்து இயங்கும் ஆற்றல் வாய்ந்தது என்பதையும் தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய மொழிகட்கு இவ்வாறு இயங்க இயலாது என்பதையும், நடுநிலையில் நின்று எடுத்து மொழிந்துள்ளனர். "It is true it would now be difficult for Telugu to dispense with its Sanskrit more so for Canarase; and most of all for Malayalam. These languages have borrowed from Sanskrit so largely, and being so habituated to look up to it for help, that it would be scarcely possible, for them now to assert their independence. Tamil, however, the most highly cultivated Ab-intra of all Dravidian idoms can dispense with its Sanskrit altogether, if need be and not only stand alone, but flourish without its aid." இவ்வாங்கிலப் பத்தியில் தமிழ் மொழித் தனித்து இயங்கும் தன்மை பெற்றது என்பதையும், உயர் தனிச் செம்மொழி என்பதையும் அறிவித்திருப்பதையும் காண்க.

இவர் தமிழில் நற்கருணைத் தியான மாலை, தாமரைத் தடாகம் என்ற பெயரில் நூல்களை எழுதியுள்ளனர். தமிழில் பல கட்டுரைகளையும் வரைந்துள்ளனர்.

வேதநாயகம் பிள்ளை: இவர் சோழநாட்டில் குளத்தூரில் பிறந்தவர். ஆங்கிலமும் அருந்தமிழும் அறிந்தவர். முன்னர் மொழி பெயர்ப்பாளராகப் பணிபுரிந்த இவர், பின்னர்

முனிசீபாகப் பணிபுரிந்தார். இவர் திரிசிரபுரம் மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களின் நண்பர்.

இவர் நீதிநூல் என்னும் நூலை எழுதியவர். இதில் பலவகைத் தலைப்புடன் நீதிப் பாடல்கள் உள்ளன. கீர்த்தனைகளையும் பாடியுள்ளார். சர்வசமய சமரசக் கீர்த்தனை என்னும் நூலைக் காண்க. இவர் திருவாவடுதுறை ஆதின கர்த்தராக இருந்த ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரை மனமாரப் போற்றிப் புகழ்ந்து பாடியுள்ளார்.

“நேரொன்று மில்சுப் பிரமணிய யாதிப நின்னைப்பல்லோர்
காரென்று சொல்வர் அக்காரும் வஞ்சித்த இக்காலத்தில்
ஊரென்றும் வாழ அறுசுவை உண்டி உதவிஉன் தன்
பேரென்றும் நிற்கச்செய் தாய்உனைக் காரெனல்
பேதைமையே.”

என்ற பாடலைக் காண்க. பெண்மதிமாலை என்னும் நூலையும் பாடியவர். இவர் பல கதைகளையும் எழுதியுள்ளனர். அவற்றுள் தலைசிறந்தது பிரதாப முதலியார் சரித்திரம். இது படிக்கப் படிக்கச் சுவை தரும் கதை. ஞானசுந்தரி என்னும் நாவல் ஆசிரியரும் இவரே. இவரது காலம் கி. பி. 19 ஆம் நூற்றாண்டு.

வேதநாயக சாஸ்திரியார்: இவர் திருநெல்வேலியில் 1774 ஆம் ஆண்டு பிறந்தவர். இவர் பராபரன்மாலை, ஞானக்கும்மி, பெத்லேகம் குறவஞ்சி, ஞான ஏற்றப்பாட்டு முதலான நூல்களைப் பாடியுள்ளார். இவரைச் சென்னைப் வாசிகள் பாராட்டியபோது, அது சம்பந்தமாகச் சென்னை பட்டினப் பிரவேசம் என்னும் நாடக நூல் ஒன்றையும் எழுதியுள்ளார். இவர் கி. பி. 18 ஆம் நூற்றாண்டினர்.

பெப்ரீஷியஸ்: இவர் ஓர் அகராதியினைத் தொகுத்துள்ளனர். அதில் தமிழ் இலக்கியச் சொற்களும், பேச்சு மொழிகளும், வட சொற்களும் இடம் பெற்றுள்ளன. தமக்கிருந்த பணமுடைகட்கு இடையே வின்சுலோ அவர்களும் ஓர் அகராதியினைத் தொகுத்து வெளியிட்டனர். கிரால் என்பவர் திருக்குறளை ஜெர்மானிய மொழியில் எழுதியுள்ளனர். ஏரியல் என்பவரும் லெமிரேசர் என்பவரும் பிரஞ்சு மொழி வழியே திருக்குறள் பெருமையினைப் பிரஞ்சு நாட்டார்

அறியச் செய்துள்ளனர். பெர்ஸிவல் தமிழ் நாட்டில் வழங்கிய பழமொழிகளைத் தொகுத்து வெளியிட்டனர்.

கிருஷ்ணப் பிள்ளை: இவர் திருநெல்வேலியில் ரெட்டியார் பட்டியில் பிறந்தவர். இவர் வைணவ வேளாள மரபினர். பின்னர்க் கிறித்தவச் சமயத்தில் சேர்ந்தனர். இதற்குக் காரணம் இவரைக் கால்டுவெல் ஐயர் சாயர்புரக் கல்லூரியில் தமிழ் ஆசிரியர் பதவியினைத் தந்ததே ஆகும். இவர் இரட்சண்ய யாத்திரீகம், இரட்சண்ய மனோகரம் என்னும் நூலைப் பாடியவர்.

"தந்தை யாகி உலகனைத்தும் தந்து மனுக்கள் தமைபுரக்க
மைந்தன் ஆகிப் புனிதாவி வடிவாய் ஞான வரமருளிப்
பந்தம் அறநின் றிலங்குதிரி யேக பரமன் பதாம்புயத்தைத்
சிந்தையாரத் தொழுதேத்திச் சேரவாரும் செகத்தீரே."

நல்லூர் ஞானப்பிரகாசர்: இவர் பன்மொழி வல்லுநராய்த் திகழ்ந்தவர். சொல் பிறப்பு ஆராய்ச்சியில் பெரிதும் ஈடுபாடுடையவர். இவரது "Etymological and Comparative lexicon studies in Tamil Etymology" என்பன மொழிநூல் ஆராய்ச்சிக்குப் பெரிதும் துணைபுரிவன.

சாமுவேல் பிள்ளை: இவர் தொல்காப்பிய நன்னூல் என்னும் நூலை அச்சிட்டுள்ளனர். அதன் மூலம் இவ்விரு நூல்களுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை உதாரணங்களுடன் நன்கு உணரலாம்.

மேலும் கிறித்தவர்களின் தமிழ்த் தொண்டினை அறிய அவாவுவோர், டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்களும், மயிலை. சீனி. வேங்கடசாமி அவர்களும் கிறித்தவப் புலவர்களைப் பற்றியும், அவர்கள் நூற்களைப் பற்றியும் எழுதியுள்ள நூல்களில் காண்க.

முஸ்லீம் புலவர்களின் தமிழ்த் தொண்டு

முஸ்லீம்கள், சமயத் தொடர்பில் வேறுபட்டவர்களாயினும், தமிழ்த் தொண்டு புரிந்ததில் எவர்க்கும் பின்னிட்டவர்கள் அல்லர். இவர் தமிழ் அன்னைக்குப் புதுப்புது இலக்கிய அணிகலன்களைச் செய்து அணிவித்து அகம் மகிழ்ந்துள்ளனர். இவர்கள் புராணங்களையும், நாயகங்கள் என்ற பெயரில் பல நூல்களையும், கலம்பகம்,

அந்தாதி, திருப்புகழ், பிள்ளைத்தமிழ், மாலை, படைப்போர்-நாமா, மசலா, அம்மானை, ஏசல், சிந்து, தாலாட்டு, கும்மி, கோவை என்ற பெயர்களில் பல நூல்களையும் இயற்றி-யுள்ளனர். நாடகங்களையும், தொகுப்பு நூல்களையும், ஞானப் பாடல்களையும் செய்துள்ளனர்.

இவர்கள் தமிழ்த் தொண்டோடு தமிழ் நாட்டு மன்னர்கள் ஆட்சியில், வீரராகவும் தொண்டு புரிந்து வந்துள்ளனர். மெய்க்காப்பாளராக இருந்த பெருமையும் இவர்கட்கு உண்டு. இவர்களிடம் தமிழ் நாட்டுப் பற்றும் காணப்பட்டது. மதுரையில் வீரபாண்டியன் அரசு புரிந்த கி. பி. 16 ஆம் நூற்றுண்டில், டில்லி சுல்தானுன அலாவுதீன் கில்ஜியின் படையானது மாலிக்காபூரின் தலைமையில் தென்னுடு நோக்கிப் படை எடுத்தது. அதுபோது பாண்-டியனிடத்துப் படை வீரராக இருந்தவர்களான முஸ்லீம்கள் மாலிக்காபூர் முஸ்லீம் படைகளைத் தம் மதத்தவர்கள் என்று சிறிதும் சிந்தியாது, எதிர்க்கத் தயாராகவே இருந்தனர். இவ்வாருன இவர்களது தொண்டையும் நாம் மறத்தல் முடியாது.

உமறுப் புலவர்: இவர் சேகு முதலியார் குமாரர். செய்கு முகம்மது அலி என்பது மருவி, சேகு முதலியார் என வழங்கப்பட்டது. சேகு முதலியார் சிறந்த வாசனைப் பொருள் விற்கும் வணிகர். இவர் தம் தொழிலை நடத்த எட்டையபுரத்தை அடைந்தனர். ஒருமுறை சேகு முதலியார் தம் குமாரராம் உமறுவுடன் வருகையில், கடிகை முத்துப் புலவர் கண்டு, உமறைத் தம் மாணவராக்கிக் கல்வி போதித்தனர். இதனுல் இவர் பெரும் புலவராகத் திகழ்ந்தனர். தம் ஆசிரியருடன் வாதம் புரியவந்த வாலவாருதி என்பவனை வாதில் வென்று வெற்றி கண்டவர். அதுமுதல் கடிகை முத்துப் புலவர் தானத்தில் இவர் அமர்ந்து அரச புலவ-ராயினர். இவர் காலத்தில் பெரு வள்ளலாக விளங்கிய செய்க் அப்துல் காதர் (இவரே சீதக்காதி) அவர்களின் வேண்டுகோட்கிணங்கிச் சீருப்புராணத்தைப் பாடினர். இப்புராணம் பாடுவதற்கு முன்பு முகம்மது நபியின் மீது முதுமொழிமாலை என்னும் நூலையும் பாடியதாகவும் கூறுவர்.

சீருப்புராணத்தில் நபி அவர்கள் வரலாறும், அவர் செய்த அற்புதங்களும் பேசப்படுகின்றன. வர்ணனைகள் தமிழ்க்-

காவியங்களில் காணப்பெறும் வர்ணனைகளாக உள்ளன. இந்நூலில் நபிநாயகத்தின் வரலாறு, தொண்டு, அரிய அறவுரைகள் பலவும் காணப்படுகின்றன. இந்நூல் காண்டங்களாகவும், படலங்களாகவும் பிரிக்கப்பட்டு 5,027 செய்யுட்களுடன் திகழ்கிறது.

"வறுமையும் தீரும் நோயும்விட் டகலும் மனத்தினில்
கவலையும் நீங்கும்
சிறுமையும் அகலும் புத்தியும் பெருகும்
தீவினைவந் தடராது
தெறுபகை சிதையும் செல்வமும் வளரும்
தேகமும் சிறந்து பூரிக்கும்
உறுபவம் தொலையும் முகம்மதை எவர்க்கும்
ஒருபகல் காண்கிலென் றுரைப்பார்."

என்பது இவரது பாடல்களில் ஒன்று.

சீதக்காதி மரக்காயர் ஔரங்கசீப் காலத்தில் வங்கப் பிரதிநிதியாக இருந்தார். ஔரங்கசீப் காலம் கி. பி. 18ஆம் நூற்றுண்டு. ஆகவே, சீதக்காதியின் காலத்தவரான உமறும் அக்காலத்தினர் ஆவார்.

சீதக்காதி மதங் காரணமான பகை இல்லாமல் இருந்தனர். இவர் மதுரை மீனுட்சி அம்மன் கோவில் நிர்வாகியாக இருந்தார் என்றும் கூறுவர். இவர் கட்டிய பள்ளிவாசல் இன்றும் தாசில்தார் பள்ளிவாசல் என்ற பெயருடன் மதுரையில் இலங்குகின்றது. திருப்பரங்குன்றம், பழனி போன்ற இந்துக்கள் கோவிலில், தனியே இருந்துகொண்டு முஸ்லிம்கள் தமது மதத் தொழுகையினைச் செய்து வருதலையும் இன்றும் காணலாம். இவர்கள் இந்துக்களுடன் நெருங்கிப் பழகி இருந்தனர். இவர்களுள் பலர் சைவப் புலவர்களை ஆதரித்துள்ளனர். இதற்கு எடுத்துக் காட்டாகச் சீதக்காதியாம் இம் முஸ்லீம் வள்ளல் படிக்காசுப் புலவரை நன்கு ஆதரித்துள்ளார் என்பதைக் காட்டலாம். படிக்காசுப் புலவர் மறந்தும் புறந்தொழா மாந்தர். அத்தகையவரே, சீதக்காதி வள்ளலை,

"ஓர்தட்டி லேபொன்னும் ஓர்தட்டி லேநெல்லும் ஒக்கவிற்கும்
கார்தட் டியபஞ்ச காலத் திலேகா ரியப்பேரார்

ஆர்தட்டி னும்தட்டு வாராம லேஅன்ன தானத்திற்கு
மார்தட் டியதுரை மால்சீதக் காதி வரோதயனே."

என்று பாடி இருக்கிறார் எனில், வேறு சான்றுகளைக் காட்டவும் வேண்டுமோ? **சவ்வாதுப் புலவர்** இவர் சேதுபதி மகாராஜர் வைசூரியால் வருந்தியபோது, அங்நோய் நீங்க இராஜராஜேஸ்வரி மீது பஞ்சரத்தினமாலை பாடியதாகவும் கூறுவர். **மஸ்தான் சாயபு** நந்தீசர் சதகம், அகத்தீசர் சதகம் பாடியுள்ளார் என்பதும் அறிய வருகின்றது.

முஸ்லீம்களுக்கும் இந்துக்களுக்கும் இருந்த ஒற்றுமையால் இந்துக்கள் தமது தமிழ் நூல்களில் இந்துஸ்தான் மொழிகளையும் ஆண்டுள்ளனர். பட்டினத்தார் பாடலில் (இவர் திருமுறையில் காணப்படும் பட்டினத்தாரினும் வேறானவர்) "கொடுக்க அறியா திறக்கும் குலாமர்க்கு என் சொல்வேன் இறைவா கச்சியே கம்பனே", என்றும் குமரகுருபரர், "மகட்குச் சலாம் இடற்கு ஏக்கறும் குமரனே" என்றும், அருணகிரிநாத வாமிகள் "சித்தர் விஞ்ஞையர் மாகர் சபாசெண" என்றும் பாடி இருத்தலைக் காணவும்.

சேகனாப் புலவர்: முகய்தீன் ஆண்டவர் வரலாற்றைக் குத்பு நாயகம் என்ற பெயரால் பாடியுள்ளனர். திருமணிமாலை, கோத்திர மாலை, நாகை அந்தாதி முதலான நூல்களையும், நாகபந்தம், அட்ட நாகபந்தம், கமலபந்தம் முதலான சித்திரக் கவிகளையும் பாடியுள்ளார். பல நூல்கள் இவரால் பாடப்பட்டுள்ளன. இவர் அரபி, பார்ஸி, சமஸ்கிருத மொழிகளிலும் வல்லுநர். இவர் காயல் பதியினர். திருப்புகழ் போன்று, நபிகள் கோமான் ஸல் அவர்களைப் பாடியுள்ளனர். திருப்புகழே அன்றி அவ்வப்போது பாடிய பாடல்களும் உண்டு. அருணகிரிநாதர் பாடிய திருப்புகழ் போல இவர் பாட வேண்டுமெனப் பாடி இருத்தலின், இவரது காலம் கி. பி. 15 ஆம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டதாகும்.

ஜவ்வாதுப் புலவர்: இவர் பல சீட்டுக் கவிகளைப் பாடியவர். இவர் சரம கவியும் பாட வல்லவர். எவர்க்கும் அஞ்சாதவர். பல கவிகளைப் பாடியே பெரும் பொருள் திரட்டியவர். வாழ்த்துப் பாக்களையும் பல பாடியுள்ளனர். இவரே முகம்மது நபியின் மீது ஒரு பிள்ளைத் தமிழையும் பாடியுள்ளார். இவர் 1808 ஆம் நூற்றாண்டில் இறந்தவர் எனத் தெரிகிறது.

சையிது முகிய்யித்தீன் கவிராயர்: இவரது தந்தையார் முகம்மது ஹுசைன் புலவர். முகிய்யித்தீன் ஆண்டகையின் மீது பிள்ளைத் தமிழ் பாடியுள்ளார். மந்திரம், வசியம் ஆகிய கலையிலும் வல்லுநர். காலம் கி. பி. 17 ஆம் நூற்றுண்டு.

" அரிதான நூல்தெரிந்து தமிழ்பாடி யேஉழன்றென்
அகமே புணுகி வஞ்சர் தலைவாயில்
அவைதோறு மேநடந்து நிர்மூட லோபர்தங்கள்
அருகே சொனுலும் இன்பம் அறிவார்போல்
மரியாதையே புரிந்து இனிநாளை வாரும்என்பர்
மறுநாளும் ஏகில் வஞ்ச நினைவாக
மறைவார் நீசர் தங்கள் இடமேசுமா நடந்து
வரவோ நல்வாழ் விரங்கி அருள்வீரே."

சையிது முகம்மது அண்ணுவியார்: இவர் செல்லி நகரில் இருந்தனர். இவருக்குக் கதிர்வேலு உபாத்தியாயர் நட்புக் கிடைத்தது. அவர் பழனிக்குக் காவடி எடுக்கப்போவதாகப் புலவருக்குத் தெரிந்தது. அதுபோது புலவர் உபாத்தியாயரை நோக்கி, " அம் முருகனை இங்கேயே வரவழைப் போம் " என்று கூறித் தாம் சுப்ரமணியர் பிரசன்னப் பதிகம் பாடி முருகனை வரவழைத்தவர். அலி நாமா என்னும் நூலையும் பாடியுள்ளனர். பத்துப் புராணங்களைப் பாடியுள்ளார். இவருக்குப் பின் வந்த இவரது குடும்பத்தினர்களும் பெரும் புலவர்களாய்த் திகழ்ந்தனர்.

வண்ணக் களஞ்சியப் புலவர்: இவர் நாகூர் தர்காவில் இருந்தபோது பத்தானை மரக்காயர் இவருக்குத் தம் மகளை ஈந்து இல்லறத்தில் ஈடுபடுத்தினர். இவர் வண்ணப் பாடல்களைப் பாடுதலில் வல்லுநர். இராச நாயக் என்னும் பெயரிய புராணமும் பாடியுள்ளார். இது சுலைமான் நபியின் வரலாருகும். இவரது வாக்கில் பல நீதி மொழிகள் துலங்குகின்றன.

" இயற்பெ ரும்பலமந்திரம் எவைஎவை ஓதிடினும்
வியத்த நோன்பு நித்தமும் உறையினும் இதன்மேல்எச்
செயல்பொ ருந்துபுண் ணியங்கள் செய்யினும் பசிதீர
நயத்தொ டீவதோர் தருமத்தைப் போலுண்டோ லாபம்."

இவர் உமறுப் புலவரையும் அவர் தம் புராணத்தையும் சிறப்பித்திருப்பதால், காலத்தால் அவர்க்கும் பிற்பட்டவர் என்பது தெரிகிறது.

ஐதுரூசு நயினார்ப் புலவர்: இவர் நகைச்சுவையோடு பாட வல்லவர். ஆத்ம ஞானியும் ஆவார். இவர் மக்களால் நன்கு மதிக்கப்பட்டவர். பொதுமக்கள் புலவர் வரி ஒன்றைப் ஏற்படுத்தி, வசூலித்து இவர்க்கு நல்கி வந்தனர். இவர் தமது ஆசிரியர் மீது நவமணி மாலை பாடியுள்ளார். இவர் அவ்வக் காலங்களில் பாடிய பாடல்கள், பாடல் திரட்டு என்ற பெயராலும் உள்ளது. இவர்க்குப் பொடிப் பைத்தியம் உண்டு. மடிதனில் வைத்துக்கொண்ட பொடியை எவரும் கேட்பவற்கு ஈயவேண்டும் என்பதற்காக,

"பொடிதனை மடியில்வைத்துக் கேட்பவர்க் கில்லையென்றால்
அடிதனில் மூலம்தள்ளி அநியாயமாய்ச் சாகுவாரே"

என்று பாடியுள்ளார்.

குலாம் காதிறு நாவலர்: இவர் நாகூரில் பிறந்தவர். தம் கவிக் கருத்தைக் குறித்து ஐயம் எழுப்புபவர்க்கு நல்ல விடை தரத் தக்கவர். அப்படியே யாழ்ப்பாணத்தில் தம் புராணத்தை அரங்கேற்றுகையில் எழுப்பிய வினாக்களுக்குத் தக்க விடைகளை ஈந்தவர். இவரது தந்தையாரும் பெரும் புலவர். நாகூர்ப் புராணம் பாடியுள்ளார். மும்மணிக் கோவை, நாகூர்க் கலம்பகம், மதுரைப் பிள்ளை மீது மதுரைக் கோவையினையும் பாடியவர். இவைகளே அன்றி, மற்றும் பல நூல்களைப் பாடியவர். நூல்களுக்கு உரையும், உரைநடை நூல்களையும் எழுதியுள்ளார். இவர் 1833 ல் பிறந்தவர் என்பது தெரிவதால் இவரது காலம் புலனா-கின்றது.

பிச்சை இபுறகிம் புலவர்: இவர் இலக்கணக் கோடரி என்ற பட்டம் பெற்றவர். இவர் வணிகத் தொழில் புரிந்து பணம் சேர்த்தவராயினும் தமிழ்த் தொண்டு புரிவதில் பெரும் அவாவுடையவர். திருச்சி எஸ். பி. ஜி. கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக விளங்கியவர். இவர் நாயகத் திருப்புகழ்,

சீதக்காதிப் பதிகம், திருமதினத்து மாலை முதலான நூல்களைப் பாடியவர்.

சதாவதானி செய்குதம்பிப் பாவலர்: இவர் பல புலவர்கட்கிடையே அவதானம் செய்து காட்டியவர். இது குறித்தே இவர் அவதானி என்று கூறப்பட்டனர். (அவதானம் என்னும் சொல் மறப்பு இன்மை, மேன்மைச் செயல் என்னும் பொருளுடையது. அவதானம் செய்ய முன் வரும் புலவர், சபையில் கூடியுள்ள புலவர் பெருமக்கள் கேட்கும் கேள்விகட்கு முறையே மறப்பு இன்றி விடை கூற வேண்டும். எண்மர், பதின்மர், பதினறு பேர் வினவும் கேள்விகட்கு விடை இறுத்தால் அவர்களை அட்டாவதானி, தசாவதானி, சோடசாவதானி என்பர்.) இவர் பத்து வித்துவான்கட்கும் விடை இறுத்ததனுல் தசாவதானி எனப் பட்டார். இவர் இவ்வவதானப் பட்டத்தைச் சென்னை விக்டோரியா மண்டபத்தில் கூடிய கூட்டத்தில் பெற்றனர். சீருப் புராணத்திற்கு உரை எழுதியதாகவும் தெரிகிறது. பல நூல்களுக்குச் சாற்றுக் கவி தந்துள்ளார்.

முகம்மது இபுருகிம் சாகிப் புலவர்: இவர் நபிகள் நாயகத்தின் வரலாற்றை வினு விடையாகப் பாடியவர். பிரசங்கமும் செய்ய வல்லவர். இவர் பெரும் வணிகர்; செல்வர். இவரது பிள்ளைகளும் பெரும் புலவர்கள். இப்ராகிம் சாகிப் புலவர் அவ்வப்போது பாடிய பல தனிப் பாடல்கள் உண்டு. இவர் 20 ஆம் நூற்ருண்டினர்.

சையிது முகம்மது ஆலிப்புலவர்: இவர் கீழைக்கரையில் தோன்றியவர். சாற்றுக் கவிகளை, கீர்த்தனைகளைப் புனைந்தவர். கீர்த்தனு மாலிகை எனும் நூலைப் பாடியவர்.

தற்கலை பீர் முகம்மது சாகிபு: இவர் தென் காசியில் வாழ்ந்த முஸ்லீம் மரபில் பிறந்தவர். இவர் யானை மலைப்பகுதியில் நிட்டையில் இருந்தவர். இவர் நிட்டை புரிந்த இடம் பீர்மேடு என்று இன்றும் வழங்கப்படுகிறது. இவர் பல அற்புதங்களைச் செய்ததாகவும், பல ஆண்டுகள் வாழ்ந்ததாகவும் கூறுவர். இவர் பல நூல்களைப் பாடியுள்ளனர். திருநெறி கீதம், ஞானமணி மாலை முதலாகப் பலநூற்களை இயற்றியுள்ளனர். இவரது காலம் அறிதற்கு இல்லை.

"சொல்லக்கேள் கர்ப்பிணியாள் கர்ப்பம் தன்னில்
சூல்ஆணோ பெண்ணோஎன் றுன்னைக் கேட்டால்
வல்லகலை சூரியனில் வலமே கேட்கில்
வளர்ந்திருக்கும் பாலகன்தான் ஆணே யாகும்
அல்லதவள் சூனியத்தில் நின்று கேட்கின்
ஆணுகும் அதன்காலம் அற்றுப் போகும்
நல்லகலை சந்திரனில் பூர ணம்தான்
நாரியள்சூல் பெண்ணென்று நாட்டு வாயே."

குணங்குடி மஸ்தான் சாயிபு: இவர் காயல்பட்டினத்தில் பிறந்தனர். இளமையில் அத்தர் வாணிபம் செய்தனர். துறவுக் கோலத்திற்குப் பிறகு சென்னை இராயபுரத்தில் வாழ்ந்தனர். இவரது பிள்ளைத் திருநாமம் சுல்தான் அப்துல் காதிறு என்பது. பின்னரே இவர் குணம்குடி-மஸ்தான் சாகிபு என்ற பெயரைச் சூட்டிக் கொண்டனர். இவரது தந்தையார் நயினு முகம்மது ஆவார். இவர் ஞானியார் என்பதற்கேற்பக் காடுகளில், மலைகளில் காலம் கழித்துள்ளார். இவரது பாடல்கள் தாயுமானவர் பாடல்களின் போக்கைத் தழுவியவை. இவர் 18 ஆம் நூற்றுண்டினர்.

இவர் பாடியனவாகக் கூறப்படும் நூல்கள் ஆனந்தக் களிப்பு, நிராமயக் கண்ணி, நந்தீசர் சதகம், அகத்தீசர் சதகம் முதலியன.

"ஐயோ எனைப்போலும் மாபெரும் பாவிஇவ்
அகிலத்தில் எங்கும் இலையே
அநியாயம் அநியாயம் என்பெரும் பாதகம்
ஆர்பால் எடுத்தோதுவேன்
மையான கன்னியர் வலைக்குள் அகப்பட்ட
மாபாவி தீபாவியான்
மகுஹூபு சுபுகானி யானஉமை நாடாத
மடமைகுடி கொண்டபாவி
பொய்யான வாழ்வதனை மெய்யாக நம்பிஉன்
பொன்னடி மறந்தபாவி
பொல்லார்கள் நேசமே அல்லாது நல்லோர்கள்
புறக்கணித் திட்டபாவி

னையுமோர் பொய்யுலக ஞகியே உமதடிமை
நாயினும்கடை ஆவனே
நற்குணம் குடிகொண்ட பாத்துஷா வானகுரு
நாதன்மு கைய்த்தீனே."

இவ்வாறு புலவர்களாகவும், மகான்களாகவும் முஸ்லீம் இனத்தில் பலர் இருந்துள்ளனர். இப்போதும் இருக்கின்றனர். மேலும், முஸ்லீம் புலவர்களைப்பற்றி விளக்கமாக அறிய அவாவுவோர் திரு. அப்துல் ரஹீம் அவர்கள் எழுதியுள்ள முஸ்லீம் தமிழ்ப் புலவர்கள் என்ற நூலில் பரக்கக் காண்க.

இராமலிங்க சுவாமிகள் : இவர் சிதம்பரத்திற்கு வடமேற்கில் மருதூரில் இராமையா பிள்ளைக்கும் சின்னம்மை என்பவர்க்கும் திருமகனாகத் தோன்றினர். இவர் இளமையிலேயே தெய்வத் திருவருளுக்கு உரியவரானர். இளமையிலேயே புராணச் சொற்பொழிவு புரிவதில் பேர் ஆற்றல் பெற்றவர். திருவொற்றியூர்த் தியாகேசப் பெருமானை வழிபடும் மூர்த்தியாகக் கொண்டவர். தென்மொழி வடமொழி சமய சாத்திர இலக்கண இலக்கியங்களில் பேர் அறிவு படைத்தவர். இவரது ஆசிரியராகிய காஞ்சிபுரம் மகா வித்துவான் சபாபதி முதலியார் கட்டளைக் கிணங்கி, மனுமுறை கண்ட வாசகம் என்னும் [illegible]ய உரைநடை நூலை எழுதினர். இந்நூலைப் படிப்பதால் சோழநாட்டுச் சீர்மை, திருவாரூர்ச் சிறப்பு, மனுச்சோழன் மாண்பு, பசுப்பிறப்பின் உயர்வு முதலானவற்றைத் தெள்ளத் தெளிய அறியலாம். மனுநீதி மன்னன் பசுங்கன்று இறந்தமை காரணமாகப் புலம்பிய புலம்பல் மூலம் எங்தெந்தப் பாவச் செயல்களைச் செய்தல் கூடாது என்பதை அறியலாம். அப்பாவச் செயல்களுள் சில பின்வருவன :

"நல்லோர் மனத்தை நடுங்கச்செய் தேனே
வேலை யிட்டுக் கூலிகுறைத் தேனே
குருவை வணங்கக் கூசி னேனே
கற்றவர் தம்மைக் கடுகடுத் தேனே
கல்லும் நெல்லும் கலந்துவிற் றேனே
தந்தைதாய் மொழியைத் தள்ளிநடம் தேனே
தெய்வம் இகழ்ந்து செருக்கடைந் தேனே."

சென்னையில் இருந்த சிலருக்குத் தொண்டை மண்டலமா? தொண்ட மண்டலமா? என்ற ஐயம் பிறந்த வழித் தொண்ட மண்டலம் என்பதே சரி என்பதை இலக்கண இலக்கியச் சான்றுகளுடன் ஓர் அரிய ஆராய்ச்சியினை எழுதியவர்.

பிரம்மஸ்ரீ ஆரூர் சபாபதி சிவாசாரியார் காயத்திரி மந்திரத்தின் உண்மைப் பொருள் அறியாது வள்ளலாரை அணுக, அதன் உண்மைப் பொருளை அவர்க்கு உணர்த்தியவர்.

ஒரு சமயம் ஒரு வைணவர் தேசிகர் அருளிய "மூன்றில் ஒரு" என்று தொடங்கும் குறள் வெண்பாவிற்கு உரை கேட்டபோது, வைணவப் பரமாகப் பௌராணிக உரை, சமய உரை, சமயாதீத உரைகளைக் கூறினர்.

திருக்குறளில் முதல் பாட்டில் வரும் முதற்றே என்னும் தொடரை முதற்று+ஏ என்று பிரிக்கொணாது; முதல்+தே என்றுதான் பிரித்து முதலாகிய தேவன் என்று பொருள் காணவேண்டும் எனத் தம்மாணவர்க்கு உரைத்தவர்.

வள்ளலார் தம் உரைநடையில் பலவகையான அரிய கருத்துக்களை எழுதியுள்ளார். விண்ணப்பம் என்ற தலைப்பிலும், பத்திரிகை என்ற தலைப்பிலும், உபதேசம் என்ற தலைப்பிலும், உண்மை நெறி என்ற தலைப்பிலும் ஒழுக்கம் என்னும் தலைப்பிலும் மற்றும் பற்பல சிறுசிறு தலைப்புக்களிலும் எழுதியுள்ளவற்றைக் காணவும்.

வந்தனை முறையைப் பற்றிய கட்டுரையில் வந்தனை செய்வதால் வரும் பயனைப்பற்றி எழுதியுள்ளனர். தமிழ் என்னும் சொல்லின் பொருளையும், எழுத்தின் பொருளையும் பற்றி இவர் எழுதி இருப்பதை அறிதல் வேண்டும்.

தில்லைக் கூத்தப் பெருமான் சேக்கிழார்க்கு எடுத்துக் கூறிய உலகெலாம் என்னும் தொடர்க்கு விளக்கம் கூறப் புகுந்த வள்ளலார், "மெய்ம்மொழிப் பொருள் விளக்கம்" என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதியுள்ளார். இக்கட்டுரையில் 2306 உலகங்களைக் கூறி, இன்னும் இதனை விரிக்கில் பெருகும் என்று எழுதி முடித்துள்ளனர்.

மூலிகைகளின் பெயர்களை எடுத்துக்காட்டி இன்னின்ன நோய் இன்னின்ன மூலிகையால் தீரும் என்றும் எழுதியுள்ளனர். அக்கட்டுரை ஔஷதியின் குணானுபவம் என்பது.

ஒரு சமயம் பிரம்ம சமாஜம் சம்பேடு ஸ்ரீதர சுவாமி நாயகர் என்பவர் வள்ளலாருடன் விக்கிரக ஆராதனை கூடாது என்றுவாதம் நடத்தினர். அதுபோது வள்ளலார் விக்கிரக ஆராதனைச் சிறப்பை எடுத்து மொழிந்து, திரு. நாயகர் ஒவ்வும் வண்ணம் செய்தனர். இதனை இவரது வரலாற்றில் "நடந்த வண்ணம் உரைத்தல்" என்ற தலைப்பில் காண்க.

வள்ளலார் ஜீவகாருண்யப் பண்பில் ஒப்பாரும் மிக்காரும் இன்றி விளங்கினர். இவரது கால் பட்டு ஒரு களிமண் உருண்டை உடைந்தது பற்றி, இவர் வருத்தம் கொண்டனர் எனில், இவரது சீவகாருண்ய இயல்பு நன்கு தெரிகின்றதன்றோ? ஜீவகாருண்யம் என்னும் பொருள் பற்றி நீண்ட கட்டுரைகள் மூன்று எழுதியுள்ளனர். ஆனால், இதுபற்றி ஏழு கட்டுரைகள் எழுதி இருந்தனர் என்பர். இதுபோது மூன்றே கிடைத்துள்ளன. இவருக்கிருந்த சீவகாருண்யப் பண்பு,

"வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்
பசியினால் இளைத்தே
வீடுதோ றிரந்தும் பசிஅறாதயர்ந்த வெற்றரை
கண்டுளம் பதைத்தேன்
நீடிய பிணியால் வருந்துகின் றோர்என் நேருறக்
கண்டுளம் துடித்தேன்
ஈடின்மா னிகளாய் ஏழைகளாய் நெஞ்சிளைத்தவர்
தமைக்கண்டே இளைத்தேன்."

என்று இவர் பாடிய பாடலால் தெரிகிறது.

ஒருமுறை இசையில் வல்ல கிருஷ்ணய்யர், வள்ளலார் பாடிய மகாதேவ மாலையில் ஒரு பாடலை அபூர்வ இராகத்தில் பாட, வள்ளலார் அதனினும் இனிய இராகத்தில் பாடித் தம் இசைப் புலமையினையும் வெளிப்படுத்தினர்.

ஒழுவிலொடுக்க "வள்ளல் குருராயன்" என்னும் வெண் பாவிற்கு அரியதொரு விருத்தியுரை எழுதியுள்ளனர். அப்-பாடலில் வரும் குருராயன் என்னும் தொடர்க்கு உரை கூற வந்த இவர், "கு என்பது இருள்; ரு வென்பது அருள்; ராயன் என்பது விளங்கச் செய்கின்றேன் என்பது பொருளாம்" என்று எழுதியிருப்பதைக் காண்க.

இவர் பல சித்துக்களையும் அற்புதங்களையும் செய்துள் ளனர். இவருக்குத் திருவொற்றியூர் வடிவாம்பிகை அம்மையார் இரவில் சோறளித்துள்ளனர். இதனை இவர் "அன்றொருநாள் நம்பசிகண்டு அந்தோ தரியாது நள்-ளிரவில் சோறளித்த நற்றாய்காண்" என்று பாடியும் உள்ளனர்.

வள்ளலார் ஒரு முறை தமது மாணவராகிய திருச்சிற் றம்பல ஞானியாருக்கு ஒரு கடிதம் எளிய நடையில் எழுதி-னார். அதனைக் கணக்கில் அவதானி முத்துசாமிப் பிள்ளை என்பவர் பார்த்து, "இதில் இலக்கண இலக்கியச் செறி-வில்லையே!" என்றனர். இதனை ஞானியார் வள்ளலாரிடம் தெரிவிக்க, வள்ளலார் இலக்கண இலக்கியச் செறிவு தோன்ற ஒரு கடிதம் எழுதி அனுப்பினர், அதனை திருவருட்பாவில் காண்க.

வள்ளலார் திருமணம் கொண்டும், இல்லறத்தில் ஈடுபட் டிலர். இவர் தம் ஞான குருவாகத் திருஞான சம்பந்தரைக் கொண்டனர். திருவாசகத்தில் இவருக்கு இருந்த ஈடுபாடு அதிகம். இவரது மாணவர் தொழுவூர் வேலாயுத முதலி-யார். வள்ளலார் சைவ சமயத்தவரேனும் சமரச நோக்கு-டையவர். இவர் சிவபெருமான், பார்வதி, முருகன், கணபதி, திருமால், இலக்குமி, கலைமகள், மாரியம்மன் முதலான தெய்வங்களை எல்லாம் பாடியுள்ளனர். இவர் பாடியுள்ள நூலே திருவருட்பா என்பது. இஃது ஆறு திரு-முறைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. சைவ சமய குரவர் நால்வர்களைப் பற்றித் தம் நூலில் பற்பல இடங்களில் இணைத்துப் பாடி இருப்பதோடு இன்றித் தனித்தனியே அந்-நால்வர் மீது பாடிய பாடல்களும் இவர் நூலில் உண்டு. இவர் பாடிய தனிப்பாடல்களும் உண்டு. சென்னையைப் பற்றிச் சிறப்பாகப் பாடியுள்ளனர். "தருஓங்கு சென்னை, தரமேவு சென்னை, தடிதுன்னுமதில் சென்னை, தள்ளரிய

சென்னை, ததிபெறு சென்னை, தாமம் ஒளிர் சென்னை, தலைவர்புகழ் சென்னை, தருமம்மிகு சென்னை, தரையில் உயர் சென்னை, தாய் ஒன்று சென்னை, தார்கொண்ட சென்னை, சந்தம்மிகு சென்னை, தழைவுற்ற சென்னை, தளர்விலாச் சென்னை" என்ற தொடர்களைக் காண்க. இவர் திருவடிப் புகழ்ச்சி என்ற தலைப்பில் 48 சீர்கள் ஓர் அடியில் பெற்ற நான்கடி அமைந்த ஓர் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் பாடியுள்ளார்.

மாதர்கள் பொருட்டுக் கும்மிகளும், பொதுமக்கட்குக் கீர்த்தனைகளும் இவரால் பாடப்பட்டுள்ளன.

கொம்மி

"குறவர் குடிசை நுழைந்தாண்டி — அந்தக்
கோமாட்டி எச்சில் விழைந்தாண்டி
துறவர் வணங்கும்புக ழாண்டி—அவன்
தோற்றத்தைப் பாடி அடியுங்கடி."

கீர்த்தனை

பல்லவி

"இன்னம் தயவுவரவில்லையா—உனக்கென் மீதில்
என்ன வர்மம் சொல்லையா

அனுபல்லவி

முன்னம்பிழை பொறுத்தாய் இன்னம் பொருதது
முறையோ, முறையோ, முறையோ என்றலறவும்
—இன்னம்."

வள்ளலார் காலம் கி. பி. 19 ஆம் நூற்றுண்டு.

தொழுவூர் வேலாயுத முதலியார்: இவர் சென்னை அரசாங்கக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகத் திகழ்ந்தவர். இலக்கண இலக்கியங்களில் பேரறிவு படைத்தவர். வள்ளலாரிடம் ஒரு முறை தாம் ஒரு பாடலைப் பாடிச்சென்று இது சங்ககாலப் பாடல் என்று காட்ட, வள்ளலார் "இது யாரோ ஒரு கற்றுக்குட்டி பாடியது" என்று கீழே எறிந்துவிட, உடனே அவர் திருவடியில் விழுந்து மன்னிப்புக்கேட்டுக் கொண்டனர். பின் அவரது மாணவராயினர். வள்ளலாரிடம் இருந்த பெரும் பற்றுக் காரணமாக அருட்பிரகாச வள்ளலார் என்னும் இராமலிங்க சுவாமிகள் என்று கூறி அவரைப் போற்றுவராயினர். வள்ளலார் அவரை நோக்கி,

"அருட்பிரகாச வள்ளலார் முக்கண் மூர்த்தியே அன்றி யான் அல்லன்; ஆனால், நீர் கூறும் தொடர்க்கு 'அருள் பிரகாச வள்ளல் ஆர் என்னும் இராமலிங்கம்' என்று பொருள் கண்டு எவர்க்கும் கூறுக," என்று பணிக்க அவ்வாறே செய்து வந்தனர். இவர் எழுதிய நூற்கள் திரு வெண்காட்டடிகள் வரலாறு, வேளாண் மரபியல், சங்கர விஜயம் என்பன. 19 ஆம் நூற்றாண்டினர்.

மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை : இவர் திருசிராப் பள்ளியில் தோன்றியவர். திருவாவடுதுறையில் ஆதீன வித்துவானாக இருந்தவர். இவரது மாணவர்களில் தலை-சிறந்தவர்கள் : தியாகராய செட்டியாரும், டாக்டர் சுவாமி நாதய்யரும் ஆவார். திரு. பிள்ளை அவர்கள் நாற்கவி பாடும் நல்லறிஞர். இவர் புராணங்கள், அந்தாதிகள், மாலைகள், கோவை, உலா, பிள்ளைத் தமிழ் முதலான நூற்களைப் பாடியுள்ளனர். இவர் பாடின நூற்களுள் புராணம் 22, பிள்ளைத் தமிழ் 10, அந்தாதி 11, கலம்பகம் 2, மாலை 7, கோவை மூன்று, உலா ஒன்று, லீலை ஒன்று, என்று கணக்கிட்டுக் கூறியுள்ளனர். பல தனிப் பாடல்களையும் பாடியவர். ஆநந்தக்களிப்பு. காசி ரகசியம் சூதசங்கிதை தமிழ் மொழி பெயர்ப்பு, குசேலோபாக்கியானம் முதலியன-வும் இவரால் பாடப்பட்டனவே. ஆனால், இந் நூல்கள் வல்லூர் தேவராசப் பிள்ளை அவர்கள் பெயரால் வெளி-வந்தவை. தேவராசப் பிள்ளை இவரது மாணவர். குமர குருபரர், சிவஞான சுவாமிகள் வரலாற்றையும் பாடியவர். இன்னோரன்ன காரணங் கொண்டே இவர் துறைசை ஆதீனகர்த்தரால் மகா வித்துவான் எனப்பட்டம் கொடுக்-கப்பட்டனர். இவர் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக பரமா-சாரியரைப் பலவாறு போற்றிய போற்றிகளுள் ஒன்று,

"செல்லார்க்கும் பெருமுழக்கம் மணமுழக்கம்
எனமேல்போய்த் திகழ்மா டத்தால்
சொல்வார்க்கும் கழினிகளால் தொலையாத
வளம்காட்டும் துறைசை மேவிக்
கல்லார்க்கும் நல்லார்க்கும் வல்லார்க்கும்
அல்லார்க்கும் கணக்கி லாமற்
றெல்லார்க்கும் எய்ப்பில்வைப் பாம்சுப்பிரமண்
ணியகுரவன் இருதாள் போற்றி."

என்பது.

திரு. பிள்ளை அவர்கட்குப் பெரிய புராணத்தில் இருந்த பற்றும், அதனை யாத்த சேக்கிழார் பெருமானிடத்து வைத்த அன்பும், இவர் இயற்றிய சேக்கிழார் பிள்ளைத் தமிழில் நன்கு தெரிய வருகின்றன. இந்நூல் வழி பெரிய புராண மாண்பை-யும் சேக்கிழாரின் அரும் பெரும் புலமையையும் அறிந்து இன்புறலாம். சேக்கிழாரை இவர், "ஆர்அருள் ஆகர, சகலாகம பண்டித, தெய்வச் சைவ, அருள் உருதேசு பொலி அருண் மொழித்தேவ" என்றெல்லாம் போற்றிப் புகழந்துள்ளனர். இல்லறத்தின் சிறப்பையும், பொருளின் சிறப்பையும் இவர் பெரிதும் புகழ்ந்து பாடியுள்ளனர். திரு. பிள்ளை அவர்களின் முழு வரலாற்றையும், இவரது நூற்களின் சிறப்பையும் குறித்து இவரது மாணவர் டாக்டர் சுவாமிநாதய்யர் பெரியதொரு நூலாக எழுதியுள்ளனர். இவரது காலம் கி. பி. 19 ஆம் நூற்றுண்டு.

டாக்டர் சுவாமிநாதய்யர் : இவர் கும்பகோணக் கல்லூரியிலும், சென்னை அரசாங்கக் கல்லூரியிலும் தமிழ்ப் பேரா-சிரியாக இருந்தவர். இவருக்குப் பெற்றேர் இட்ட பெயர் வேங்கடராமன் என்பது. திருவாவடுதுறை ஆதீனத்தில் வாழும் பேறு பெற்றபோது, தீட்சா நாமமாகச் சுவாமிநாதன் என்ற பெயரினை வாய்க்கப் பெற்ருர்.

இவர் திரு. பிள்ளை அவர்களின் மாணவர். இவர் தம் ஆசிரியரைத் திரு. பிள்ளை அவர்கள் என்றே கூறுவார். இவரைத் தமிழ்த் தாத்தா என்பர். ஐயர் திரு. பிள்ளை அவர்களின் தலைசிறந்த மாணவரான திரு. தியாகராய செட்டியாரிடம் அளவு கடந்த பற்றுள்ளவர். இதனைத் தம் இல்லத்திற்குத் 'தியாகராய விலாஸ்' என்று பெயர் அமைத்திருப்பது கொண்டு உணர்ந்து கொள்ளலாம். இவர் ஏட்டில் கிடந்த பழம்பெரும் நூல்களை அச்சில் செம்மை யுறக் கொண்டு வந்த பேரறிஞர். இதுபோது தமிழின் பண்டைப் பெருமைகளையும், நாகரிகத்தையும் பற்றிப் பேசுவதற்கு ஒரு வாய்ப்பு இருப்பதற்குக் காரணம், இவர் பழம் பெருநூல்களை அச்சிட்டுத் தந்தமையே ஆகும். இவர் நூல்களைப் பதிப்பித்த முறையைப் போன்று எவரும் பதிப்-பித்ததில்லை. ஒவ்வொரு நூலின் முன் பகுதியில் இவர் எழுதி-யுள்ளனவற்றைப் படித்தாலே, மூலநூலை முற்றும் படித்த உணர்வினைப் பெறலாம். இவர் பதிப்பித்த ஒரு நூல் வழி,

பல நூல்களின் ஒருமித்த கருத்துக்களை ஒருங்கே எளிதில் உணரலாம்.

இவர் எழுதிய உரைநடை நூல்கள் புத்தர் சரித்திரம், உதயணன் கதை, சிலப்பதிகார வசனம், மத்தியார்ச்சுன மான்மியம், மீனாட்சிசுந்தரம் பிள்ளை சரித்திரம், கண்டதும் கேட்டதும், புதியவும் பழையவும் என்பன. பின்னுள்ள மூன்று நூல்களின் வழி, தமிழ் நாட்டில் மூலைமுடுக்குக்களின் சரித்திரங்களையும் அறிஞர்கள் வள்ளல்கள் முதலானவர்களைப் பற்றிய அரிய குறிப்புக்களையும் அறிந்து கொள்ளலாம்.

ஐயர் அவர்களின் சங்க இலக்கிய அறிவினையும், மற்றுமுள்ள நூல்களில் இருந்த புலமையினையும் இவர்கள் குறுந்தொகைக்கு எழுதியுள்ள ஒப்புயர்வற்ற உரையின் மூலம் உணரலாம். இவரது இலக்கண இலக்கியப் புலமைக்கும், தமிழ் வரலாற்றின் அறிவிற்கும் எடுத்துக்காட்டாக இருப்பது, இவர் எழுதிய சங்கத் தமிழும் பிற்காலத் தமிழும் என்னும் நூலாகும்.

இவர் பதிப்பித்த நூற்கள் பத்துப் பாட்டு, சீவகசிந்தாமணி, புறநானூறு, பரிபாடல், ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, புறப்பொருள் வெண்பாமாலை முதலியன. இவரது பதிப்புக்களில் உள்ள சொல்லகராதி ஆராய்ச்சி யாளர்கட்குப் பெரிதும் பயன்தருவதாகும். இவர் தமது ஆசிரியரான திரு. பிள்ளை அவர்களின் பிரபந்தங்களையும் அச்சிட்டுள்ளனர். திரு. ஐயர் அவர்கள் துறைசை ஆதின குருமகா சந்நிதானத்தின்மீது பாடியுள்ள பாக்கள் அவர்கள் மாட்டு இவர்கள் கொண்டிருந்த பேரன்பை இனிது விளக்கும்.

"கருணைஎனும் கடல்பெருகும் மடையாய
நினதுவிழிக் கடையும் சீதத்
தருணமதி அனையமுக மண்டலமும்
தெளிஅமுத தாரை போல
வருமினிய மொழிவாக்கும் வருவோர்க்கு
வரையாது வழங்கு கையும்
திருவருள் சுப்பிரமணிய குருமணியே
காண்பதென்று சிறியேன் மன்னே."

ஐயர் அவர்களின் புலமை அறிந்த சென்னைப் பல்கலைக்-கழகம், இவர்க்கு மகாமகோ பாத்தியாய பட்டத்தையும், டாக்டர் பட்டத்தையும் தந்து சிறப்பித்தது.

ஐயர் காலம் கி. பி. 20 ஆம் நூற்றுண்டு.

வல்லூர் தேவராசப் பிள்ளை: இவரும் திரு. பிள்ளை அவர்-களின் மாணவர். இவர் பாடினவை: பஞ்சாக்கரதேசிகர் பதிகம், தணிகாசலமாலை, சேடமலைமாலை, பஞ்சரத்தினம் என்பன. குசேலோபாக்கியானம் இவரது ஆசிரியர் பாட, இவரது பெயரால் வெளிவந்துள்ளது. காலம் கி. பி. 19 ஆம் நூற்றுண்டு.

சுந்தரம் பிள்ளை: இவர் கேரள தேசத்தில் ஆலப்புழை என்னும் ஊரில் பிறந்தவர். இவர் எம். ஏ. பட்டம் பெற்றவர். ராவ்பகதூர் பட்டமும் உடையவர். இவர் திருவனந்தபுர அரசினர் கல்லூரியில் தத்துவப் பேராசிரியராக இருந்தவர். என்றாலும், தமிழில் தனி ஆர்வமும் அறிவும் பெற்றவர். இதனால்தான் இவர் உள்ளத்தில் "உன்சீர் இளமைத்திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்துதுமே" என்ற வாக்கும் "முதுமொழி நீ அநாதி என மொழிவதும் ஓர் வியப்பாமோ" என்று தமிழைப்பற்றிக் கூறும் உணர்ச்சியும் எழுந்தது.

இவர் எழுதிய தலைசிறந்த நூல் மனோன்மணியம் என்பது. இது நாடக அமைப்பில் எழுதப்பட்டது. இதில் வரும் சிவகாமி சரிதம் பொன்மலர் நாற்றம் உடைத்தாற்-போன்ற சிறப்புடையது. இவர் மரநூல், நிலநூல், உயிர்-நூல் முதலான கலையிலும் புலமை மிக்கவர் என்பது புலனாகிறது. இதனை நடராசன் வாய்மொழியாகப் புலவர் குறிப்பிட்டுள்ளனர். கங்கையினும், தாமிர பரணி சிறந்தது என்பதையும், இமயத்தினும் பொதிகைமலை சிறந்தது என்பதையும் இவர் பாடி இருப்பது இவரது தமிழ் நாட்டுப் பற்றை நன்கு காட்டுகிறது.

"நண்பர்உற வினர்கள் நமைநாடி உறவாடல்
நறுநெய்யுறு குடத்தெறும்பு நண்ணல்என எண்ணாய்
பெண்கள்அகக் காதல்எலாம் பேசும்முயற் கொம்பே
பெருங்கபடம் இடிகலனா பிறங்கும்அவர் உடலம்."

என்பது சிவகாமி சரிதைப் பாடல்.

இவர் எழுதிய "நூல் தொகை விளக்கம்" என்பது ஆங்கிலத்திலும், தமிழிலும் உள்ள அரிய நூல்களைப்பற்றிய குறிப்புக்களைக் கொண்டது. திருஞானசம்பந்தர் காலநிர்ணயம் என்ற நூலையும் எழுதியுள்ளனர். திருவிதாங்கூர் மன்னர் வரலாறு என்ற நூலும் இவரால் எழுதப்பட்டதே.

சோமசுந்தர நாயகர்: இவர் சென்னை, சூளையில் வாழ்ந்தவர். தென்மொழி வடமொழி வல்லுநர். சைவ சித்தாந்த நூல் நன்கு பயின்றவர். பிரசங்கமாரி மொழிவதில் பெரும் புலவர். இவருக்கு 'வைதீக சைவ சித்தாந்த சண்டமாருதம்' என்ற பட்டம் உண்டு. இவர் திருஞான சம்பந்தரைப் போற்றித் துதித்துக் கலைஞானம் வரப்பெற்றவர். மறுப்பு எழுதுவதில் சமர்த்தர். இவரது உரை நடை நூல்களில் வடமொழிகள் அளவின்றிக் கிடக்கும். இவரது மாணவரே மறைமலை அடிகளார். ஆனால், திரு. நாயகர் பாடிய செய்யுட்கள் செந்தமிழால் ஆனவை. இவர் ஆசாரியப் பிரபாவம், மெய்கண்ட சிவதூடண நிரோதம், சிவாதிக்யரத்னாவளி, சித்தாந்தசேகரம், பிரம்மானுபூதி, சிவநாமப் பஃறொடை வெண்பா, சித்தாந்த ரத்னாகரம் முதலாக 110 நூல்களை எழுதியுள்ளனர். இவர் வைணவ மரபினர். அதுபோது இவரது பெயர் அரங்கசாமி என்பது. ஏகாம்பர யோகியரால் சோமசுந்தரம் என்ற தீட்சா நாமம் பெற்றனர். ஆழ்ந்த சைவப் பற்றுடையவர். இவர் விரிவுரை நிகழ்த்தும்போது யாரும் மேற் சட்டையுடன் அமர்ந்து கேட்க முடியாது. அவர்களை உடனே அப்புறப்படுத்துவார். காலம் கி. பி. 19 ஆம் நூற்றாண்டு.

மறைமலை அடிகள்: இவரது முன்னைய பெயர் சுவாமி வேதாசலம் என்பது. தம் பெயர் தூய தமிழால் துலங்க வேண்டி, மறைமலை அடிகள் என மாற்றிக் கொண்டனர். இவர் நாகபட்டினத்தில் கடம்பாடி என்னும் ஊரில் சைவவேளாண் மரபில் பிறந்தவர். தென் மொழி, வட மொழி, ஆங்கிலம் என்னும் மொழிகளில் பேரறிவு படைத்த பெருந்தகையர். இவர் தம் வாழ்நாள் வரையில் செந்தமிழினையும், சிவ நெறியினையும் போற்றி வளர்த்தவர். இவரைத் தனித் தமிழ் இயக்கத் தலைவர் என்னலாம். உயரிய நடையில் தீந்தமிழிலும், ஆங்கிலத்திலும் சொல்மாரி பொழியத்தக்கவர். எழுதும் ஆற்றலையும் சிறக்கப் பெற்றவர். இவரது

பேச்சில் இனிமையுண்டு. செய்யுட்களைக் குயில் ஓசை போலவே இசைப்பர்.

மறைமலை அடிகளாரின் புலமையினை அளவிடல் முடியாது. இவரது இலக்கணப் புலமையினைக் காணவிழை வார்க்கு இவர் எழுதிய சோமசுந்தரக் காஞ்சி ஆக்கம் ஒன்றே போதிய சான்றாகும். இவர் செய்யுள் இயற்றும் செம்மை சான்றவராகத் துலங்கினர் என்பதைத் திருவொற்றியூர் முருகன் மும்மணிக்கோவை, சோமசுந்தரக் காஞ்சி, சாகுந்தல நாடகத்தில் இடையிடையே காணப்பெறும் பாடல்கள் இவற்றால் நன்கு அறியலாம். இவர் திறனாய்வுத் திறனைப் பட்டினப்பாலை, முல்லைப்பாட்டு ஆகிய நூல்களைப் பற்றி ஆய்ந்து எழுதின நூல்களால் தெளியலாம். திருவாசக முதல் நான்கு பாடல்கட்கு எழுதிய உரையானும், திருவொற்றியூர் முருகன் மும்மணிக்கோவை, துகளறுபோதம் ஆகிய நூற்களுக்கு உரை வரைந்தமையாலும் இவரது உரை எழுதும் ஆற்றலை உணரலாம். சிறுவர்களைப் பிறமொழி கலவாமல் எழுதப் பழக்கவேண்டும் என்ற குறிக்கோளுடன் சிறுவர்கட்கான செந்தமிழ் என்ற தலைப்பில் பாட நூல்களையும் எழுதியுள்ளனர். புதுவது புனைவதிலும் (Novel) வல்லுநர். இதற்குச் சான்று குமுதவல்லி, கோகிலாம்பாள் கடிதங்கள் என்பன போதுமானவை. இவரது வட மொழியின் புலமைக்குப் பல எடுத்துக் காட்டுகள் இயம்பலாம். இவர் காளிதாஸரது சாகுந்தலத்தை மொழி பெயர்த்து இருப்பது ஒன்றே போதுமானது. இம்மொழி பெயர்ப்புச் சீரிய முறையில் திகழ்கிறது என்ற காரணமாகத்தான் காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீலஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள் இந்நூலை ஆய்ந்து கட்டுரை எழுதுபவர்க்கு ஆண்டுதோறும் பரிசில் பெறும் முறையில் ஒரு நிதியையும் தனியே ஒதுக்கியுள்ளார்கள். சாகுந்தல நாடகத்தை மட்டும் மொழி பெயர்த்ததோடின்றி, சாகுந்தல நாடக ஆராய்ச்சி என்ற நூலையும் எழுதி, நாடகத்தைப்பற்றி மேனாட்டறிஞர்களின் கருத்துக்களின் பிழின்வையும் நம் நாட்டுப் பழங்கால நாடக அமைப்புக்களைப்பற்றிய சீரிய கருத்துக்களையும் காட்டியுள்ளனர்.

தென் புலத்தார் யார், சாதி வேற்றுமையும் போலிச் சைவமும், தமிழ் ஆசிரியர்கள் தழுவிய வடமொழி நூல்கள்,

சைவ சித்தாந்த ஞான போதம், வேளாளர் நாகரிகம் என்பன போன்ற நூல்களையும் எழுதிய பேரறிஞர் இவர்.

இவரது ஆங்கிலப் புலமையினைக் காட்டுவதற்கும் பலசான்றுகள் உள.

இவர் தாம் எழுதும் நூற்களில் சிலவற்றிற்கு ஆங்கிலத்தில் முகவுரை எழுதியுள்ளனர். பல ஆங்கில நூல்களைப் பயின்றவர். இதனை இவரே தமது முல்லைப் பாட்டு ஆராய்ச்சி நூலின் முகவுரையில், "In commending on this excellent Ode, I followed the main lines of literary criticism inculcated by the able and profound critic professor William Minto" என்று எழுதி இருப்பதைக் காண்க. 'The Ocean of wisdom' என்னும் பத்திரிகை இவரால் ஆங்கிலத்தில் நடத்தப்பட்டது. 'The conception of God as Rudra, Saiva Siddantha as a philosophy of practical Knowledge' என்பன போன்ற தலைப்புக்களில் ஆங்கிலத்தில் சொற்பொழிவு ஆற்றியுள்ளனர். அடிகளின் ஆங்கிலக் கட்டுரையின் மொழி பெயர்ப்பே இவரது சிந்தனைக் கட்டுரையாகும்.

இவரது பலவகைக் கலை நூல் புலமையினைக் காண வேண்டின், மரணத்தின் பின் மனிதர் நிலை, மனித வசியம், யோக நித்திரை, தொலைவில் உணர்தல் (Telepathy), மக்கள் நூறுண்டு வாழ்வது எப்படி, பொருந்தும் உணவும் பொருந்தா உணவும் முதலான நூல்களில் பரக்கக் காணலாம்.

இவர் எழுதியுள்ள மாணிக்கவாசகர் வரலாறும் காலமும் என்னும் பெயரிய நூல், தமிழ் நாட்டு வரலாறும், அகத்தியர் காலமுதல் இடைக்காலப் புலவர்கள் காலம் வரையில் இருந்த நூல்களைப் பற்றிய வரலாறும், காலமும், ஒவ்வொரு நூற்களில் எத்தனை வடமொழிகள் கலந்துள்ளன என்னும் குறிப்பும் ஆகியவற்றைச் செவ்வனே விளக்கிக் கொண்டுள்ளது. இந்நூலைப் பயின்றாலே தமிழ் நூல்களைப் பற்றிய குறிப்புக்கள் பலவற்றை எளிதில் உணர்ந்து கொள்ளலாம்.

அடிகளார் வடக்கே பல்வேறு இடங்கட்குச் சென்று சைவத்தின் சிறப்பையும், தமிழின் மேன்மையையும்

ஆங்கிலச் சொற்பொழிவுகளின் வாயிலாக விளக்கியவர். இவ்வாறான சொற்பொழிவுகளின் கருத்துக்களே சைவ சித்தாந்த ஞானபோதம், கடவுள் நிலைக்கு மாறாக கொள்கைகள் சைவம் ஆகா, பழந்தமிழ்க் கொள்கையே சைவ சமயம் என்ற நூல்களாக வெளி வந்துள்ளன.

இவரது ஆராய்ச்சியின் ஆழத்தைத் திருக்குறள் ஆராய்ச்சி, சிவஞான போத ஆராய்ச்சி, தமிழர் மதம் போன்ற நூல்களில் காணலாம். சிவஞான போத ஆராய்ச்சி வழி, ஆசிரியர் மெய் கண்டார் எழுதிய சிவஞான போதம், தமிழில் எழுந்த முதல் நூலே என்பதைத் தக்க சான்றுகளுடன் நிறுவியுள்ளனர். இவரது அறிவுரைக் கொத்து, மாணவர்கள் கட்டுரை எழுதும் பயிற்சிக்குப் பெருந்துணை செய்ய வல்லது. முற்காலப் பிற்காலத் தமிழ்ப் புலவர் என்னும் நூல் தமிழ்ப் புலவர்கள் இயல்பை நன்கு எடுத்துக் காட்டுவதாகும்.

மறுப்புரை எழுதுவதில் மதிநலம் மிகுதியுடையராய் அடிகளார் திகழ்ந்தார்கள். முதற் குறள் வாத நிராகரணம், மெய்கண்ட சிவ தூஷண நிக்கிரகம், முனி மொழி பிரகாசிகை, சோமசுந்தரக் காஞ்சி ஆக்கம் முதலான நூல்களில் பரக்கக் காணலாம். இவரது மறுப்புரையிலும் இலக்கிய நயமே காணப்பெறும். "அறிவில் கூற்றென மறுக்க, நெகிழ்ந்து உரையாடி இழுக்கினார் என்க, விடுக்குமாறு அறியாது விழிக்கும் நீரர் ஆவர், அழிவழக்குப் பேசுதல் அடாதென்க, சிறு மகாரும் எள்ளி நகையாடுவர், பொள்ளெனப் புலனாகும்." என்னும் தொடர்களைக் காண்க.

நாகை நீலலோசனிப் பத்திரிகையில் "முருகவேள்" என்ற புனை பெயரில் பல கட்டுரைகளை எழுதினார். அடிகளார் எழுத்தெண்ணிப் படித்த அறிஞர் பெருமகனார் என்பதை அவர்கள் வாக்கினாலேயே அறியலாம். திருவாசகத்தில் 2810 சொற்களே உள. ஏழு அல்லது எட்டுச் சதவீதமே வடசொற்கள் உள" என்று குறிப்பிட்டுள்ளனர். (இதனை அறியாத ஒரு சிலர் தேவாரத்தில் காணப்படும் வடசொற்களைவிடத் திருவாசகத்தில் மிகுதியும் உள என்கிறார்கள்.) அடிகளார் சிவஞான போதத்தில் பன்னிரண்டு நூற்பாக்களில் நாற்பத்துநான்கு வரிகளும், இருநூற்றுப்

பதினாறு சொற்களும், அறுநூற்று இருபத்துநான்கு எழுத்துக்களும் உள்ளன என்று எழுதுவாராயின், இவரது அறிவின் திறத்தை என்னென்பது! இங்ஙனமே இவர் தலை சிறந்த நூற்களை எண்ணிப் படித்த விரகர். நூல்களை ஆய்ந்து எழுதி வெளியிடற்கு இத்தனை ஆண்டுகள் கழிந்தன என்பதையும் இவர் குறிப்பிட்டுள்ளனர். இதற்கு ஓர் எடுத்துக்காட்டு, " மாணிக்க வாசகர் வரலாறும் காலமும் என்னும் நூலை எழுத இருபத்து நான்கு ஆண்டுகள் சென்றன " என்று இவரே குறிப்பிட்டிருபதாகும்.

இவர் தேசத் தொண்டர்களைப் பற்றியும் பாடியுள்ளனர். திலக் அவர்கள் இறந்தபோது அவர்மீது கையறு நிலை பாடியவர். இந்தியைத் தமிழ் நாட்டில் கட்டாய பாடமாக நுழைத்த போது, இந்தி பொது மொழியா என்ற தலைப்பில் ஆராய்ச்சியுடன் கூடிய நூலை எழுதினர். இவரிடத்துக் காழ்ப்புக் கொண்ட ஒரு சிலர் இவரது நூற்கு மறுப்பு எழுதியபோது, சிறிதும் அஞ்சாது, சைவ சமயத்தின் நெருக்கடியான நிலை என்னும் சீரிய நூலை எழுதியுள்ளனர்.

மறைமலை அடிகளார் தனித் தமிழ் இயக்கத் தந்தையாராகத் துலங்கியதனல்தான், சூரிய நாராயண சாத்திரியார் என்பது பரிதிமாற் கலைஞர் என்றும், பாலசுந்தரம் இளவழகனர் என்றும், கலியாண சுந்தரம் மணவழகு என்றும், சந்தோஷம் மகிழ்நன் என்றும், சோமசுந்தரம் மதி அழகன் என்றும், நடராசன் ஆடலரசு என்றும், திரிபுரசுந்தரி முந்நகர் அழகி என்றும் இவ்வாறு பெயர்கள் வழங்கலாயின. சுவாமி வேதாசலம் அவர்கள் சில காலம் தம் பெயரை நாகை கிழார் என்று மாற்றி வரைந்தனர். இவரது அடி யொட்டியே கோவை கிழார் (சுப்பிரமணிய முதலியார்) மயிலை கிழார் (பால சுப்பிரமணிய முதலியார்) துடிசை கிழார் (வரத நஞ்சயப்ப பிள்ளை) முதலியோர் தம்மைக் குறிப்பிட்டு வரலாயினர். இவர்களது தனித் தமிழ் இயக்கத்திற்குப் பின்பே பிரசங்கம், உபந்நியாசம் என்பன விரிவுரை, சொற்பொழிவு எனவும், சங்கம் கழகம் எனவும், சமாஜம் மன்றம் எனவும், ஸ்தாபனம் நிறுவனம் எனவும், சம்மேளனம் மாநாடு எனவும், சபா அவை எனவும், மகாசபை பேரவை எனவும் குறிக்கப்பெறும் நிலையினை

உற்றன. மறைமலை அடிகளாரைப் பற்றிய மேலும் பற்பல அரிய குறிப்புக்களைத் திரு. முருகவேள் என்பவர் எழுதிய மறைமலை அடிகளார் மாட்சி என்ற நூலிலும், அடிகளார் மகனார் திரு மறை திருநாவுக்கரசு எழுதிய அடிகளார் வரலாற்று நூலிலும் பரக்கக் காணலாம்.

அடிகளாரைப் பற்றித் திரு. வி. க. அவர்கள் "மறைமலை ஒரு பெரும் அறிவுச் சுடர், தமிழ் நிலவு, சைவ வான், அற்றை நக்கீரனாரும் பிற்றைச் சிவஞான முனிவரரும் ஓருருக் கொண்டு இற்றை மறைமலை அடிகளாராகப் போந்து தமிழ் வளர்க்கின்றார்" என்றும், திரு. ஈ. வே. இராமசாமிப் பெரியார், "சொந்தத்தில் தாமாகவே ஆராய்ந்து பல அரிய பெரிய நூல்கள் எழுதிய ஒருவர்" என்றும், நாவலர் சோமசுந்தர பாரதியார், "தனித் தமிழ்ப் பேருரையாளர், தன்னிகரற்ற சிவாநுபூதிச் செல்வர் உயர் திரு. மறைமலை அடிகள்" என்றும், இலக்கணப் புலவர் மன்னார்குடி சோமசுந்தரம் பிள்ளை "அடிகளே தமிழ் உரை-நடை எழுதும் திறனில் தலைமை சான்றவர்" என்றும், வேலூர் சந்தோஷம் அவர்கள் "அடிகளார் ஒன்றைத் துணியவும் வல்லவர், அன்றித் துணிக்கவும் வல்லவர். அஃது அறிவுரைக் கொத்தால் அறிந்தாம்" என்றும் இவ்-வாறு போற்றிப் புகழ்ந்துள்ளனர். இவர் காலம் இருபதாம் நூற்றாண்டு.

திரு. வி. கலியாணசுந்தர முதலியார்: இவர் சென்னை வெஸ்லி கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகத் தொண்டு புரிந்தவர். இவர் பேச்சிலும் எழுத்திலும் தலை சிறந்தவர். இவரது எழுத்து நடையினைப் பலர் பின்பற்றும் அளவுக்கு எழுதும் ஆற்றல் பெற்றிருந்தனர். இவர் தேசிய இயக்கத்தில் ஈடுபட்டுப் பல்வேறு இடங்களில் பேசும் வாய்ப்புக் கிடைத்த போதெல்லாம் நாட்டுப் பற்றையும், மொழிப் பற்றையும் மக்களிடையே ஊட்டி வந்தனர். அவை நூல்களாகவும் வெளிவந்தன. தொழிலாளர் இயக்கத்திலும் பெரிதும் ஈடுபட்டவர். காந்தி அடிகளிடத்தில் பெரிதும் ஈடுபாடு கொண்டவர். அதன் பயனே காந்தி அடிகளும் மனித வாழ்க்கையும் என்னும் நூல் எழுதக் காரணமாயிற்று. இவர் பெண்களுக்குப் பெருமதிப்பினைத் தந்து பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணை நலம்

என்னும் நூலையும் எழுதினர். இவரது கற்பனைத் திறத்தினை இமயம் என்ற நூலில் காணலாம். இவரது சீர்திருத்த உணர்ச்சியினை இளமை விருந்து அல்லது சீர்திருத்தம் என்ற நூல் வழிக் காணலாம். இவர் சமரச மனப்பான்மை வாய்க்கப் பெற்றவர். இவர் செய்யுள் வடிவில் முருகன் அருள் வேட்டல், திருமால் அருள் வேட்டல், இயேசுநாதர் அருள் வேட்டல் என்ற நூல்களை எழுதி இருப்பது கொண்டு அறியலாம். இவர் தேச பக்தன் என்னும் பத்திரிகையின் ஆசிரியராகவும் பணிபுரிந்தவர். பின்பு நவ சக்தி என்ற பெயரால் தாமே ஒரு பத்திரிகை நடத்தியவர். இவர், என் கடன் பணி செய்து கிடப்பதே, சைவத்திறவு, சைவத்தின் சமரசம், கடவுள் காட்சியும் தாயுமானாரும், இராமலிங்க சுவாமிகள் திருவுள்ளம், தமிழ் நூல்களில் பௌத்தம், தமிழ் நாடும் நம்மாள்வாரும், நாயன்மார் வரலாறு, வேல்ஸ் இளவரசர் முடி துறந்தது பற்றி காதலா, முடியா, சீர்திருத்தமா என்ற நூற்களை எழுதியுள்ளனர். பெரிய புராணத்திற்குக் குறிப்புரையும், திருக்குறள் அறத்துப்பாலுக்கு விளக்க உரையினையும் வரைந்தவர். காலம் 20 ஆம் நூற்றுண்டு.

பூவை. கலியாணசுந்தர முதலியார்: இவர் சிறந்த பிரசங்கியார். நூலாசிரியரும் உரையாசிரியருமாவார். இவர் திருவொற்றியூர் கலம்பகம் என்னும் நூலை எழுதியவர். பட்டினத்தார் பாடல் திரட்டு, தாயுமான சுவாமிகள் பாடல் ஆகிய இவ்விரு நூற்களுக்குச் சிறந்த உரை எழுதியவர். சிந்தாந்த வசன பூஷணம் என்னும் பெயரிய உரை நடை நூலையும் எழுதியவர். காலம் 20 ஆம் நூற்றுண்டு.

சூரிய நாராயண சாஸ்திரியார்: இவர் ஆங்கிலத்தில் பி.ஏ. பட்டம் பெற்றவர். தமிழில் இவருக்கு இருந்த பற்றினை அளவிட்டுச் சொல்ல முடியாது. இதன் காரணமாகத் தமதுபெயரைப் பரிதிமாற் கலைஞர் என்று மாற்றி அமைத்துக் கொண்டவர். செய்யுளும் உரை நடையும் எழுதுவதில் வல்லுநர். சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக இருந்தவர்.

இவரது தமிழ் வரலாற்றுப் புலமையினை இவர் எழுதியுள்ள தமிழ்மொழி வரலாறு என்னும் நூல்வழி உணரலாம். நாவல் எழுதும் திறனை இவர் எழுதிய மதிவாணன் என்னும்

நூல்வழி காணலாம். நாடகம் எழுதும் திறனை மானவிஜயம், ரூபாவதி, கலாவதி என்னும் நூற்களால் தெளியலாம். நாடக இயல் என்னும் நூல் ஒன்றையும் எழுதியுள்ளனர். இவரது செய்யுள் இயற்றும் திறமையினை இவர் எழுதியுள்ள பாவலர் விருந்து, தனிப்பாசுரத்தொகை என்ற நூற்களால் உணரலாம். இவை போப் அவர்களால் ஆங்கிலத்திலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. இவர் ஞானபோதினி என்னும் பத்திரிகையின் ஆசிரியராகவும் திகழ்ந்தவர். இவர் இளமையில் காலஞ்சென்றது தமிழுக்கு ஓர் இழப்பே ஆகும். இவர் 33 ஆண்டுகளே இவ்வுலகில் வாழ்ந்தவர். மேலும் பல்லாண்டுகள் வாழ்ந்திருப்பாரேல், தமிழ் மொழிக்கு மேலும் பல பணிகளைச் செய்திருப்பர். இவரது தனித்தமிழ் நடையினை விழைந்தவர் என்பதை, இவர் எழுதியுள்ள உரைநடைகளைக் காணின் நன்கு உணரலாம். இதற்கு ஓர் எடுத்துக் காட்டு.

"திருவளர்ந்தோங்கும் பரத கண்டத்துப் பாண்டிய நாட்டுத் தலைநகராகிய மதுரை என்னும் மாநகரத்து வையையாற்றின் வடகரைக்கண், ஒரு நாள் காலைப் பொழுது புலர்ந்து சிறிது நேரம் சென்ற பின்னறைச் செவ்விய மேனியன், சிறந்த நோக்கினன், பரந்த மார்பினன், பவளவாயினன் பதினிரட்டைப் பிராயத்தான் ஓர் இளஞ்தோன்றல் போர்க்கோலம் பூண்டு, புரவிமீதேறிக் காற்றினும் கடுகித் தென் புலம் நோக்கி வாரா நின்றான்" என்பது. இவரது காலம் கி. பி. 20 ஆம் நூற்றாண்டு.

பாரதியார்: இவரது முழுப்பெயர் சுப்பிரமணிய பாரதியார் என்பது. இவரது புலமை கருதியே பாரதியார் என்ற பெயர் அமைந்தது. இவரது பெற்றோர்கள் சின்னசாமி ஐயர், லட்சுமி அம்மையார். பாரதியாரது கல்விப் பெருக்கிற்குக் காரணம் இவரது தந்தையாரே. அவர் பாரதியார்க்கு இளமையிலேயே, திருக்குறள், சைவத்திருமுறைகள், கம்பராமாயணம், தாயுமானர் பாடல்கள் இவற்றைச் சொல்லிவைத்தார். எட்டையபுரத்தில் பாரதியார் பெரிதும் வாழ்ந்த காரணத்தால், எட்டையபுரம் தமிழ்க்கும் கலைக்கும் ஒரு நிலைக்களமாக இருந்ததால் பாரதியாரின் தமிழ்ப் பற்றும், கலைப் பற்றும் வேரூன்றலாயின.

பாரதியார் இளமையில் இளஞ்சிருருடன் ஆடுதலும் தவிர்ந்தவர். "வீதி ஆட்டங்களில் கூடிடேன்" என்று இவரே பாடியுள்ளார். ஆனால், அந்நேரங்களில் நூல்களைப்படித்தலில் காலம் கழித்தனர். இதனையும் "தூண்டு நூற்களோடு தோழமை" என்று கூறியுள்ளார்.

பாரதியார்க்குப் பள்ளிப்படிப்பில் பிடித்தம் இல்லை, இவருக்கு ஆங்கிலக் கல்வியே பிடிக்கவில்லை. "ஆங்கிலம் பயில் பள்ளியுள்போகுநர் பேடிக்கல்வி பயின்றுழல் பித்தர்கள்" என்று செப்பியுள்ளனர். இவர் இயற்கையின் இன்பத்தை இனிது துய்த்தவர். இதற்காகக் குளக்கரை, சோலை ஆகிய இடங்கட்குச் செல்வர். இவர் இளமையிலேயே செய்யுள் பாடும் சிறப்பினைப் பெற்றவர். இவர் நல்லறிஞர்கள் வேட்டவாறு கவிபாடியதனால்தான் எட்டைய புரத்தார் இவர்க்குப் பாரதியார் என்ற பட்டம் ஈந்தனர். பாரதியார் காசிக்குச் சென்றபோது சமஸ்கிருதம், இந்தி மொழிகளைப் பயின்றார். என்றாலும், இவரது உள்ளம் தமிழ்மொழியில் நன்கு பதிந்தது. அதனால்தான் "யாம் அறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்," என்று பாடினர். காசியில் திருவெம்பாவைக்குப் பொருள் விளக்கிப் பேர்பெற்றனர்.

பாரதியார் காசியில் இருந்தபோது எட்டையபுர மகாராசா இவரைக் கண்டு, தம்முடன் அழைத்து வந்து தம் சமத்தானத்தில் ஆத்தானக் கவியாக அமர்த்திக் கொண்டனர்.

பாரதியார் பத்திரிகைகளில் ஷெல்லிதாசன், சக்தி தாசன், காளிதாசன் என்ற புனைபெயரால் கட்டுரைகள் எழுதினர் என்பதும் தெரிகிறது. தமிழ் ஆசிரியராக இருந்தும் பணி புரிந்துள்ளார். சுதேசமித்திரன் பத்திரிகையின் உதவி ஆசிரியராகவும் இருந்தார். அக்காலத்தில் இவர் எழுதிய கட்டுரைகள், திரு தூரன் அவர்களால் தொகுக்கப்பட்டு நூலாக வந்துளது. பாரதியார், விவகானந்தர் மாணவியார் நிவேதிதா தேவியாரிடம் உபதேசம் பெற்றவர். இதனை "அருளுக்கு நிவேதனமாய்" என்ற இவரது வாக்கு உறுதிப் படுத்தும். இவர்தேச விடுதலையில் வேட்கையுடையவர் ஆதலின், சென்னைக் கடற்கரையில் பலதேசபக்தர்களைக் கொண்டு சொற்பொழிவு ஆற்றுமாறு செய்தார்.

பாரதியார் இந்தியா எனும் பத்திரிகை வாயிலாக விடுதலை பற்றி எழுதி வந்ததால், இவரைச் சிறைப்படுத்த ஆங்கில அரசாங்கம் நடவடிக்கை எடுத்தபோது, புதுச்சேரிக்குச் சென்று விட்டனர். புதுவையில் இருந்தபோது இவருக்கு அரவிந்தர் நட்புக் கிடைத்தது. பாரதியார் வறுமையால் வாடி இருந்தார். "பஞ்சமும் நோயும் நின்மெய் அடியார்க்கோ?" என்று இறைவனைப் பாடி உருகியுள்ளார். புதுவையில் வாழ்ந்த பிறகு புதுவை எல்லையை விட்டு வெளிவந்ததும், இவரைச் சிறை இட்டனர். ஆனால், இருபது நாளில் விடுதலை பெற்றார். இறுதியில் இவர் வாழ்ந்த இடம், சென்னை, திருவல்லிக்கேணி. திருவல்லிக்கேணியிலேயே இறைவன் திருவடியுற்றனர். அந்த நாள் 11-9-1921.

இவர் பிராம்மணக் குடியில் பிறந்தும், எல்லோரையும் சமமாகப் பாவித்தார். கனகலிங்கம் என்னும் அரிஜனனுக்கும், வள்ளுவப்பண்டாரம் என்பவனுக்கும் பூணூல் அணிவித்து அவர்களைப் பிராம்மணர்கள் என்றே கூறும்படி செய்துள்ளார். இவர் ஜாதி மதம் கடந்தவர் என்பது, "இழிவு கொண்ட மனிதர் என்பது இந்தியாவில் இல்லையே" என்ற அடியே விளக்குகிறது. "ஜாதிகள் இல்லையடி பாப்பா" என்றும் "எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் ஓர் இனம்" என்றும் இவர் பாடியுள்ளார். இக்காலத்தில் கலை அறிவினைத் தமிழ் மொழியில் ஊட்டவேண்டும் என்பதற்குப் பல பணிகள் அரசாங்கம் செய்து வருகிறது. இதன் பொருட்டுத் தமிழ் நாடு நன்றி செலுத்தக் கடமைப் பட்டுள்ளது. இந்த உணர்ச்சியினை முதல் முதல் ஊட்டியவர் நம் பாரதியாரே. இவர் "பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும்" என்றும், "சென்றிடுவீர் எட்டுத்-திக்கும் கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்" என்றும் உணர்ச்சியோடு பாடியுள்ளனர்.

பாரதியார் சிறந்த எழுத்தாளர், கவிஞர், கட்டுரையாளர், கதைநூல் ஆசிரியர், பேச்சாளர். இவரைப் புகழ்ந்து பலர் பாடியுள்ளனர். இவரைச் சுத்தானந்த பாரதியார் "வெறும் பேச்சினைச் செய்கையாய் மாற்றினான்" என்றும், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை "பாட்டுக் கொருவன் பாரதியடா" என்றும், நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை, "சுப்பிரமனிய பாரதியை நினைத்திட்டாலும்,

சுதந்திரத்தின் ஆவேசம் சுருக்கென்றேறும்'' என்றும், "பத்தியோடு அறப்போரில் முனைந்து நிற்கப் பண்ணினது பாரதியின் பாட்டேயாகும்'' என்றும் பாராட்டிப் பாடியுள்ளனர்.

பாரதியார் எழுதிய நூல்கள் பற்பல துறையில் உள்ளன. தேசியப் பாடல்கள், தமிழ் மொழி, தேசீய இயக்கம் பற்றிய பாடல்கள், தெய்வங்களைப் பற்றிய பாடல்கள், ஞானப் பாடல்கள், சமூகப் பாடல்கள், சான்றோர்களைப் பற்றிய பாடல்கள், கண்ணன் பாட்டு, குயில் பாட்டு, பஞ்சாலி சபதம் இங்ஙனம் பல தலைப்புக்களில் பாடல்களைப் பாடியுள்ளனர். விடுதலை பெறுதற்கு முன்பே இவர் விடுதலைப் பாடல்களைப் பாடினார் என்றால், இவரது தீர்க்கதரிசன உணர்ச்சியினை (முன் அறியும் மூதறிவு) என்னென்று இயம்புவது !

பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் : இவர் குடந்தையில் தமிழாசிரியராக இருந்தவர். வடமொழி, தென்மொழி அறிஞர். இவர் நல்ல மனனப் பயிற்சியுடையவர். ஆறுமுக நாவலர் மருகனார் பொன்னம்பலப் பிள்ளை அவர்களிடம் தமது ஐயங்களைப் போக்கிக் கொண்டதோடின்றிச் சிலப்பதிகாரத்தையும் பாடம் கேட்டவர். இவர் நற்றிணைக்கு நல்லதோர் உரையினைத் தெளிவுற எழுதியுள்ளனர். இவர் இயற்றிய நூற்கள் நீல கண்டேச்சுரக் கோவை, மாணாக்கர் ஆற்றுப்படை, இயல்மொழி வாழ்த்து, தென் தில்லை உலா, கலம்பகம், நாராயண அகவல், இறையனார் ஆற்றுப்படை இடும்பவன புராணம், நரிவிருத்தம், சிவபுராணம், பழையது விடுதூது, அரதைக் கோவை, மருதப்பாட்டு, தமிழ்நாயக மாலை, செருப்பு விடு தூது, வீரகாவியம் முதலானவை. காளிதாசர் பிரகசனத்தைத் தமிழில் நாடகமாகவும் எழுதியவர். 19 ஆம் நூற்றாண்டினர்.

தேசிக விநாயகம் பிள்ளை : இவர் நாகர் கோவிலில் இருந்தவர். இவர் ஓர் தமிழ் ஆசிரியர். இவர் பல ஆங்கிலப் பாடல்களைத் தமிழ்ப் படுத்தியவர். இவரைக் கவிமணி என்றும் அழைப்பர். இவரது பாடல்கள் படிக்கப் படிக்க இன்பம் தருவன. இக்கால நோக்கம், கருத்து இவரது பாடல்களில் அமைந்துள்ளன. இவரது தோற்றமும் பண்பும் பற்றி நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை அவர்கள்,

“துரும்பென மெலிந்த தேகம் துலங்கிடும் குளிர்ந்த பார்வை
இரும்பினும் வலிய உள்ளம் இனியவே செய்யும் எண்ணம்
பரம்பொருள் நினவே காட்டும் பாரெலாம் பரந்த நோக்கம்
கரும்பினும் இனிய சொற்கள் கவிமணி வடிவம் ஆகும்.”

என்று உளம் குளிரப் பாடியுள்ளனர். இவர் பெண்ணின் பெருமையை,

“மங்கையராகப் பிறப்பதற்கே—நல்ல
மாதவம் செய்திடவேண்டும் அம்மா
பங்கயக் கைநலம் பார்த்தலவோ—இந்தப்
பாரில் அறங்கள் வளரும் அம்மா.”

என்று பாடியுள்ளனர். இவர் ஆசியஜோதி முதலான நூல்களின் ஆசிரியர்,

கோ. வடிவேல் செட்டியார்: இவர் கோமளீஸ்வரன் பேட்டையில் வாழ்ந்தவர். இவர் இலக்கண அறிவிலும் வேதாந்த அறிவிலும் சிறந்து விளங்கியவர். இவர் திருக்குறள் பரிமேல் அழகர் உரைக்கு விளக்கம் செய்துள்ளார். சிவ ஞான போதத்திற்கு உரை எழுதியுள்ளார். இவர் தோற்று வித்த சங்கமே சிந்தாதிரிப்பேட்டை வேதாந்த சங்கம். காலம் கி. பி. 20 ஆம் நூற்றுண்டு. பேராசிரியர் தெ. பொ. மீனுட்சிசுந்தரம் பிள்ளை, டாக்டர் துரை அரங்கசாமிப் பிள்ளை ஆகியோர் இவரது மாணவர்கள்.

சடகோபராமானுஜாசாரியார், கிருஷ்ணமாச்சாரியார் : இவ்விரு பெருமக்களும் அஷ்டப் பிரபந்தம், நாலடியார் நூல்கட்கு உரை கண்டவர்கள். கி. பி. 20 ஆம் நூற்றுண்டினர்.

கா. சுப்பிரமணிய பிள்ளை : இவர் திருநெல்வேலி மாவட்டத்தினர். எம். ஏ. எம். எல். பட்டம் பெற்றவர். இவரை எம். எல். பிள்ளை என்றே கூறுவர். இவர் தாகூர் சட்டக் கல்லூரி முதல்வராகப் பணி புரிந்தவர். நல்ல ஆராய்ச்சியாளர். இவர் இயற்றிய நூல்கள் தமிழ் இலக்கிய வரலாறு, மெய்கண்ட நூற்கள் உரைநடை, சைவ சித்தாந்த விளக்கச் சுருக்கம், மெய்கண்டாரும் சிவஞான போதமும், இந்து சமயங்களின் சுருக்க வரலாறு, சந்தாணுசாரியர்கள் சரித்திரம், உலகப் பெருமக்களும் மொழிநூற் கொள்கை-

யும், தமிழ் மொழி அமைப்பு, பழந்தமிழர் நாகரிகம், தாயுமானவர், வான நூல் முதலியன. இவைகளே அன்றி அப்பர், சுந்தரர், மாணிக்க வாசகர், சம்பந்தர் வரலாறு களும் அவ்வரலாறுகளின் நுண்மை விளக்கமும் அடங்கிய நான்கு நூற்களையும், திருவாசகத்திற்குக் குறிப்புரை ஒன்றையும் எழுதியுள்ளனர். இவர் கி. பி. 20 ஆம் நூற்றுண்டினர்.

ந. மு. வேங்கடசாமி நாட்டார்: இவர் நாவலர், பண்டித பட்டங்களைப் பெற்றவர். எழுதும் வன்மையும் பேசும் வன்மையும் பெற்றவர். அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பணி புரிந்தவர். நூல் ஆய்வுத் திறன் உடையவர். சிலப்பதிகாரம் பிற்பகுதிக்கு உரை எழுதியவர். திருவிளையாடல் புராணத்திற்கும் இவரது உரை உண்டு. நக்கீரர், அகத்தியர், கபிலர் ஆகிய புலவர்களைபற்றிய ஆய்வு நூல்களை எழுதியவர். இவரது ஆராய்ச்சி வன்மையினைக் கள்ளர் சரித்திரம் என்னும் நூலில் காண்க. கண்ணகியின் கற்பும் மாண்பும் என்பதும் இவரது நூலே. இவர் திருமுறைகளை ஓதும் போது கண்ணீரும் கம்பலையுமாக நிற்பர். ஒருமுறை சென்னை இராயப்பேட்டை பாலசுப்ரமணிய பக்தஜன சபையில், "ஏரி நிறைந்தனைய செல்வன் கண்டாய்" என்னும் அப்பர் தாண்டகத்தைக் கூறியபோது கண்ணீர் ஒழுக நின்றூர். காலம் கி. பி. 20 ஆம் நூற்றுண்டு.

வேங்கடாசலம் பிள்ளை: இவர் தஞ்சை திருவையாற்றில் வாழ்ந்தவர். நல்ல இலக்கண இலக்கியப் புலமை மிக்கவர். இவர் கரந்தைத் தமிழ்க் கல்லூரி வாயிலாகப் பெரும் புலவர்களை உண்டாக்கியவர். இவர் அகநானூற்றுக்கு நல்ல உரை கண்டவர். கன்றும் கனி உதவும் என்னும் நூலையும் எழுதியவர். காலம் கி.பி. 20 ஆம் நூற்றுண்டு.

ரா. ராகவ ஐயங்கார்: இவர் புதுக்கோட்டை இராமானுஜ ஐயங்காரின் அருந்தவப் புதல்வர். இவர் தமது மாதுலர்களிடமே இலக்கியங்களைப் பயின்றவர்; பாஸ்கர சேதுபதி மகாராஜா சமஸ்தான வித்துவான்; நல்ல பேச்சாளர்; ஆராய்ச்சியாளர். இவரது அறிவின் திறத்தை ஆராய்ச்சி வன்மையை வஞ்சிமாநகர், சேதுநாடும் தமிழும், நல்லிசைப் புலமை மெல்லியலார், (சங்க காலம் பெண்மணிகளைப்

பற்றியது.) தமிழ் வரலாறு, பாரி கதை (வெண்பாவால் ஆன நூல், செட்டிநாட்டு அரசர் இதன் பொருட்டு ஆயிரம் வெள்ளிக் காசுகள் பரிசு தந்தனர்.), தொழிற் சிறப்பு என்று இவர் எழுதிய நூல்களில் காணலாம். மதுரைச் செந்தமிழ்ப் பதிப்பாசிரியராக இருந்து, தமிழுக்குத் தொண்டு புரிந்தவர். இவருக்கும் பாஸ்கர சேதுபதி அவர்கட்கும் இருந்த இனிய தொடர்பு,

"செவிக்கினிய கேளேன்சிந் தைக்கினிய தேறேன்
கவிக்கினிய பாடிக் களியேன்—புவிக்கினிய
வள்ளியோன் பாற்கரப்பேர் மன்னன் சொல்லவல்ல
தெள்ளியோன் சென்றபொழு தே."

என்று இவர் பாடிய கையறு நிலைச் செய்யுளால் அறியலாம்.

மு. இராகவ ஐயங்கார்: இவர் இராமநாதபுர சேது சமஸ்தான அஷ்டாவதான முத்துசாமி ஐயங்கார் குமாரர். மேலே கூறப்பட்டவரின் அம்மான் சேய். இவரும் மதுரைச் செந்தமிழ்ப் பத்திராதிபராய் இருந்தவர். கம்ப ராமாயணத்-துக்கு அற்புதமாக உரை கூற வல்லவர். இவர் நூற்-றெட்டுத் திருப்பதி அகவல், மணவாளமா முனிகள் நூற்-றந்தாதி, வேளிர் வரலாறு, தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி, சேரன் செங்குட்டுவன், ஆழ்வார்கள் காலநிலை, சாஸனத் தமிழ்க் கவி சரிதம் என்பனவற்றை இயற்றியவர். இவர் எழுதிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் பற்பல. அவற்றை இவரது அறுபதாவது ஆண்டு விழா நினைவு மலராக வந்த தொகுப்பு நூல்களில் காணலாம்.

இப்பெரியார் பதிப்பித்த நூற்கள் நரிவிருத்தம், சிதம்பரப் பாட்டியல், திருக் கலம்பகம் (இவர் எழுதிய உரையுடன் கூடியவை), விக்கிரம சோழன் உலா, கேசவப் பெருமாள் இரட்டை மணி மாலை, திருக்குறள் பரிமேலழகர் உரை முதலியன. பெருந்தொகை என்னும் நூல் பல பழந்தமிழ்ப் பாடல்களின் தொகுப்பாகும். இதனை இவர் தொகுத்து நல்ல குறிப்புக்களுடன் வெளியிட்டுள்ளனர்.

நூற்பொருள் குறிப்பு: இதில் தேவாரம், திருக்கோவையார், நாலாயிரப் பிரபந்தம், குறுந்தொகை, நற்றிணை, வீர

சோழியம், இறையனூர் களவியல் போன்ற நூற்களைப் பற்றிய அரிய குறிப்புக்கள் இவரால் எழுதப்பட்டுள்ளன.

இவர் சிறந்த ஆராய்ச்சிப் பேச்சாளர். இவரைப்பற்றி அறிஞர்கள்போற்றிப் புகழ்ந்துள்ளனர். தஞ்சை, ஸ்ரீநிவாசப் பிள்ளை "தமிழ் ஆராய்ச்சி செய்து தமிழில் புத்தக ரூபமாக வெளியிட்டிருப்பவர்களில் முக்கியமானவர்கள் தாங்களே" என்றும், "ஓர் இடத்தும் பொருள் மயங்க இடம் இன்றித் தெளிவு பெற எழுதும் தன்மையாளர்" என்று வையாபுரிப் பிள்ளையும் பாராட்டியுள்ளார். இவர் திருவாவடுதுறை ஆதின கர்த்தர் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிகர் அவர்கட்கு, எழுதிய திருமுகத்திற்கு மகா சந்நிதானம் விடை எழுதிய போது, "கரை காண ஒண்ணு வேலைக்குக் கரை இயற்றல் இராகவனது இயல்பே" எனப் புகழ்ந்து வரைந்தனர். டாக்டர் ஐயர் அவர்கள், "உங்களுடைய பல நூல் பயிற்சியையும் ஆழ்ந்த ஆராய்ச்சியின் ஒழுங்கையும் தெரிவிக்கின்றது இப்புத்தகம்" என்று கலிங்கத்துப் பரணி ஆராய்ச்சி நூலைப் பற்றி எழுதினுர். இவரிடத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்ட செல்வ கேசவராய முதலியார் "யான் சேதுபதி அல்லனே! பாண்டித் துரைச்சாமி அல்லனே! புதுக்கோட்டைத் தொண்டைமான் அல்லனே! இதனுல் என் உளம்கொளா மகிழ்ச்சி என்னை விட்டு என் உள்ளத்தை ஈர்த்துக் கொண்டு தங்கள்பால் சென்று விட்டது. அதன் மகிழ்ச்சியை அங்கீகரித்து அதனை என்பால் விடுக்க" என்று எழுதியுள்ளனர். "தங்கள் பாண்டித்தியத்தை நான் புகழ வரவில்லை. அதனை உலகம் அறியும்" என்று பாரதியார் புகழ்ந்துள்ளனர்.

ஐயங்கார் தமது சாசனக் கவி சரித்திரத்தைச் தேசிக விநாயகம் பிள்ளைக்கு அனுப்பிவைத்தபோது அவர், "தமிழில் இம்மாதிரியான நூலொன்றை நான் இதுவரையிலும் பார்த்ததே இல்லை" என்று வாயாரப் புகழ்ந்து பாராட்டியுள்ளனர். இவர் மறைமலை அடிகளார் அவர்கட்கு அனுப்பி வைத்த தருக்க உரை வியாசம் பற்றி விடையிறுத்த அடிகளார் "தங்கள் நுட்ப அறிவும், தருக்க வன்மையும், அவற்ருல் பிறழாது பெருக்கமுறும் விழுமிய ஒழுக்கமும், எம்போல்வாரால் பெரிதும் வியந்தெடுத்துப் போற்றப்படுவனவாம்" என்று பாராட்டி எழுதினுர். சோமசுந்தர பாரதி

யார் "கைம்மாறு கருதாமல் தமிழ் உலகைச் சிறப்பித்தல் ஒன்றே ,விரும்பி, வேலை செய்யும் தங்கள் அருமை, மறவா திருத்தலே கடன் " என்று பாராட்டியுள்ளனர்.

ஐயங்கார் அவர்கள் வேளிர் வரலாறு என்னும் ஒப்புயர் வற்ற ஆராய்ச்சி நூலை எழுதினர். அதற்கு மறுப்பாக வேங்கடசாமி நாட்டார் அவர்கள் ஒரு நூலை எழுதினர். அம்மறுப்பிலும், திரு. நாட்டார் அவர்கள் பாராட்டிய பாராட்டு இன்றியமையாது நாம் அறிதல் வேண்டும். "யான் தங்கள் ஆராய்ச்சித் திறத்தையும், தாங்கள் தமிழ் உலகத்-துக்குச் செய்யும் பெரு நன்றிகளையும் அறியாதவன் என்ருவது, தங்கள்பால் பெரு மதிப்பும் வைத்திராதவன் என்ருவது, தாங்கள் எண்ணி விடாதிருக்க வேண்டும் எனப் பெரிதும் வேண்டுகிறேன். தங்களுடைய அன்பும் ஆசீர்-வாதமும் என்றும் விரும்புகிறேன்" என்பன நாட்டார் அவர்கள் மொழிகள்.

இத்தகைய பாராட்டுக்குரிய இவரது காலம் 20 ஆம் நூற்ருண்டே. இவர் ஸ்ரீ முத்துராமலிங்க சேதுபதி மகாராசா வின் திருமணத்தில் வாழ்த்திய வாழ்த்துக்களில் ஒன்று,

"உருவும் பெருந்திறனும் உள்ளன்பும் என்றும்
மருவி மணுட்டியுடன் வாழ்வாய்—பெருவேந்தே
மாமதியும் ரோகணிபோல் வள்ளியொடு செவ்வேள்போல்
காம ரதிபோல் கலந்து."

என்பது.

சுப்பிரமணிய முதலியார்: இவர் ஆழ்வார் குறிச்சியில் பிறந்தவர். ஆங்கில அறிவும், தமிழ் அறிவும் இவர்பால் இருந்தமையின், ஆங்கில நூற்களைத் தமிழில் செய்யுளாகப் பாடியவர். கோம்பி விருத்தம் (Camilian), சுவர்க்க நீக்கம் (Paradise Lost) இவ்வகையைச் சார்ந்தவை. நெல்லைச் சிலேடை வெண்பா, இராமாயண உள்ளுறைப் பொருளும், தென்னிந்திய சாதி வரலாறும், அகலிகை வெண்பா முதலியன இவரது நூற்கள். கி. பி. 20 ஆம் நூற்ருண்டினர். இவர் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிகரிடத்தில் கொண்ட அன்பு,

"சிந்தைக் கினிது செவிக்கினிது வாய்க்கினிது
வந்தித் திடஇனிது மற்றெம்மைப்—பந்தித்த
வெம்பல ஆணவமும் வெய்தொழித்து வீடளிக்கும்
அம்பல வாணன் அடி."

என்ற பாடலால் தெரிகிறது.

சோழவந்தான் அரசன் சண்முகனார்: இவர் சோழவந்தான் என்னும் ஊரில் வேளாளர் மரபில் தோன்றியவர். இலக்கண இலக்கியப் புலமையில் தலை சிறந்தவர். சிவஞான முனிவர் கருத்துக்களையும், பரிமேல் அழகர் உரையினையும் கண்டித்து எழுத வல்லவர். "விருந்து புறத்ததாத் தாம் உண்டல் சாவா மருந்தெனினும் வேண்டற் பாற் றன்று" என்ற குறட்குப் பரிமேலழகர், "சாவா மருந்தெனினும்" என்பதற்குச் "சாவாமைக்குக் காரணமான மருந்தே என்றாலும்" என்று எழுதி இருப்பதை மறுத்து, "மருந்து என்பது ஈண்டுத் தேவாமிருதம். ஆகவே, அதனை உண்டோர் சாவார். அங்ஙனம் இருக்க அதனை அடை கொடுத்துச் சாவா மருந்து என ஏன் வள்ளுவர் கூறினார்? இக் குறட்கு வள்ளுவர் கருதிய உரை வேறு. விருந்து புறத்ததாத் தாம் உண்டல் சாவாம்; மருந்தெனினும் வேண்டற் பாற்று அன்று என்பதே வள்ளுவர் கருதிய உரை" என இவர் உரை கூறியவர். இவர் பல நூல்களைப் பாடியுள்ளார்.

முருகக் கடவுள் கலம்பகம், மதுரைச் சிலேடை வெண்பா, நூற்றந்தாதி, மாலை மாற்று, மாலை, பஞ்ச தந்திர வெண்பா, இன்னிசை இருநூறு, அந்தாதித் தொடை நிகண்டு, தொல்காப்பிய பாயிர விருத்தி, திருக்குறள் விருத்தி, ஆகுபெயர் அன்மொழித் தொகை ஆராய்ச்சி முதலியன. செந்தமிழ் விவேக பானு முதலான பத்திரிகைகளில் பல ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதினார். காலம் 20 ஆம் நூற்றாண்டு.

பாண்டித்துரைத் தேவர்: இவர் இராமநாதபுரப் பொன்னுச்சாமி தேவர் திருமகனார். புலவர் சூழ வாழ்ந்தவர். வித்துவான்களை ஆதரித்தவர். இலக்கிய இலக்கண சைவ சித்தாந்த அறிவு மிக்கவர். சிறந்த ஆராய்ச்சியாளர். இது போதுள்ள மதுரைத் தமிழ்ச் சங்கத்தைத் தோற்றுவித்தவர் இவரே. இவர் இச் சங்கத்தில் பழஞ் சுவடிகளைப் பெரிதும்

அரிதின் முயன்று தொகுத்தவர். அவை இருந்திருப்பின் தமிழரது மாண்பு மேலும் சிறந்து விளங்கி இருக்கும். அவை தீக்கிரையாயின. இவர் நல்ல சொற் பொழிவாளர். மறைமலைஅடிகளார், டாக்டர் ஐயர் அவர்கள், முப்பெரும் ஐயங்கார் சுவாமிகள் (இராகவர் இருவர், திரு. நாராயணய்யங்கார் ஒருவர்) முதலானவர்கள் இவர் தலைமையில் பலப்பல சொற்பொழிவுகளை ஆற்றியுள்ளனர். இவர் செய்த தொகுப்பு நூல்கள் பன்னூல் திரட்டு, சைவ மஞ்சரி, துதி மஞ்சரி என்பன. சிவஞான முனிவர் மீது இரட்டை மணி மாலையையும் பாடியவர். இவர் விக்டோரியா மகாராணியாரை,

'' மாவளரும் தென்முகவை வாழ்பாற் கரசேது
காவலனை என்றும் கனிந்தளிக்கும்—மேவுபுகழ்
மட்டோத லாகா மகாசக்ர வர்த்தினியாம்
விக்டோரி யாவாழ்க வே.'

என்று வாழ்த்தியுள்ளார்.

கோபால கிருஷ்ணமாச்சாரியார் : இவரை உரையாசிரியர் சக்கரவர்த்தி என்னலாம். கம்ப ராமாயணம் ஆறு காண்டங்களுக்கும் அருமையான உரை எழுதியுள்ளார். பல பிரதிகளை ஆய்ந்தவர் என்பது இவரது உரையால் தெரிகிறது.

வையாபுரிப் பிள்ளை : இவர் திருநெல்வேலி சைவ வேளாளர். சட்டக் கலை பயின்றும், தமிழ்க்கே அருந்தொண்டு புரிந்தவர். சென்னைப் பல்கலைக் கழகத்தில் ரீடராகப் (நூல் ஆய்வர்) பணி புரிந்தார். தமிழ் அகராதித் தொகுப்பில் இவர் பெரிதும் தொண்டு புரிந்தவர். சிறந்த ஆராய்ச்சியாளர். இவரது ஆராய்ச்சி, இவரைத் தமிழின் பழம் பெருந்தொன்மையையும் கூடத் தாக்கும் நிலையில் உள்ளது. இவர் பல ஆராய்ச்சி நூல்களை ஆங்கிலத்திலும், தமிழிலும் எழுதியுள்ளனர். இவர் திருமுருகாற்றுப் படைக்கு ஓர் உரையும் வரைந்துள்ளனர். இலக்கிய தீபம், தமிழ்மொழி இலக்கிய வரலாறு, இலக்கியக் கட்டுரைகள் முதலியன இவரது நூல்கள். புறத்திரட்டு என்னும் நூலுக்கு இவர் எழுதியுள்ள முகவுரையும், நிகண்டுகளைப் பற்றி எழுதியுள்ள கட்டுரையும் ஆய்வாளர்களுக்குச் சிறந்த துணை நூலாகும். காலம் கி. பி. 20 ஆம் நூற்றாண்டு.

பாலசுப்பிரமணிய முதலியார் : இவர் மயிலை கிழார், மாதவ-தாசன் என்னும் பெயரையுமுடையவர். வழக்கறிஞர் பட்டம் பெற்றவர். இவர் தேவாரத் திருமுறைகளை நன்முறையில் அச்சிட்டு, அத்திரு முறையில் காணப்படும் பொருட் சிறப்-புக்களைப் பல்வேறு தலைப்புக்களில் எடுத்துக் காட்டியுள்ளார். பாடல்பெற்ற தலங்களைப் பற்றிய குறிப்புக்களும் இதில் உள. சங்க நூற்களையும் ஒழுங்காக அச்சிட்டுள்ளனர். சிவஞானபோதம் தமிழ் முதல் நூலே என்பதற்குப் பற்பல காரணம் காட்டியும் ஒரு கட்டுரை எழுதியுள்ளனர். ஆங்கிலத்திலும் கட்டுரை எழுதியவர். பிரபந்தம் பதிப்பித்த போது, தம் பெயரை மாதவதாசன் என்ற புனை பெயராக அமைத்துக்கொண்டவர். இவர் எழுதும் முகவுரைகளில் ஆய்வுக் குறிப்புக்கள் காணப்படும். பி. ஏ. பி. எல். பட்டம் பெற்றவர்.

சேதுப்பிள்ளை : இவர் வழக்கறிஞர். திருநெல்வேலியில் பிறந்து சிதம்பரத்தில் விரிவுரையாளராகவும், சென்னைப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகவும் பணிபுரிந்த-வர். டாக்டர் பட்டம் பெற்றவர். நல்ல தூய செந்-தமிழ் நடையில் எழுதவும், பேசவும் வல்லவர். இவர் தரும் தலைப்புக்களே தமிழ் இன்பம் தரவல்லன. கங்கைவேடனும் காளத்திவேடனும், சிறையிருந்த செல்வி, நன்மரமும் நச்சு மரமும் என்பன அவர் தந்த தலைப்புக்களுள் சில. இவர் எழுதிய நூற்கள் திருவள்ளுவர் நூல்நயம், சிலப்பதிகார நூல்நயம், இராமாயணக் கட்டுரை, ஊரும் பேரும், தமிழ் இன்பம், தமிழர் வீரம் முதலானவை. இவரது சொல் அடுக்குப் பேச்சுப் பற்றியே, ‘சொல்லின் செல்வர்’ எனக் குறிக்கப்பெற்றார். இவரது நினைவு மலராக வெளி வந்த நூலில் இவரது அருமை பெருமைகளை மேலும் நன்கு அறிந்து கொள்ளலாம். பி. ஏ. பி. எல். பட்டம் பெற்றவர்.

செல்வ கேசவராய முதலியார் : இவர் சென்னை, பெரம்-பூரில் வசித்தவர். பச்சையப்பன் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக இருந்தவர். எம். ஏ. பட்டமுடையவர். வைணவ சமயத்தவர். இவர்க்குத் தமிழ் மொழியினிடத்து இருந்த பற்றுத் தம் மக்களுக்கு இளம்பூரணன், நச்சினார்க்-கினியன் என்பன போன்ற பெயர்களை அமைத்திருப்பதால் அறிய வருகிறது. தமிழ் என்னும் நூலில் இவரது தமிழ்ப்பற்றைக் காணலாம். கம்பரைப்பற்றி ஒரு நூலும்,

கட்டுரைகள் தொகுப்பாக ஒரு நூலும் இவரால் எழுதப்பட்டுள்ளன. பழமொழி நானூறு, அறநெறிச் சாரம் ஆகிய நூல்கட்கு உரை எழுதியுள்ளனர். காலம் 20 ஆம் நூற்றுண்டு.

தஞ்சை ஸ்ரீநிவாசப் பிள்ளை: இவர் பி. ஏ. பி. எல். பட்டத்தினர். என்றாலும், தமிழ் வரலாறு என்னும் சிறந்த ஆராய்ச்சி மிக்க நூலை எழுதியுள்ளார். கி. பி. 20 ஆம் நூற்றுண்டு.

பாம்பன் சுவாமிகள்: இவர் பாம்பன் குமரகுருபரதாச அடிகள் என்றும் அழைக்கப்பட்டவர். தமிழ் வடமொழி இரண்டையும் நன்கு அறிந்தவர். நூல்கட்கு மறுப்பு எழுதுவதில் வல்லவர். ஆழ்ந்த சைவப் பற்றுடையவர். குமாரசுவாமியம் என்னும் பெருங் காவியத்தை இயற்றியவர். அதன் ஒவ்வொரு படலத்தின் ஈற்றிலும் அருணகிரிநாதரைப் போற்றியுள்ளார். உயிர் பன்னிரண்டு, மெய் பதினெட்டு ஆகிய முப்பது எழுத்துக்களை முதலாகக் கொண்ட முப்பது பாடல்களைப் பாடியுள்ளார். அதுவே சண்முக கவசம் என்பது. சேந்தன் செந்தமிழ் என்னும் நூல் ஐம்பது வெண்பாக்களைக் கொண்டது.

சித்திர கவிகள் பல புனைந்தவர். இவர் இயற்றிய வேறு நூற்கள் சைவசமய சரபம், நாலாயிரப்பிரபந்த விசாரம், தகராலய ரகசியம், சிவஞான தீபம், பரிபூரணானந்தபோதம் என்பன. இவற்றின் வழி இவரது உபநிடத, வேத, சித்தாந்தம் ஆகிய இவற்றில் இவருக்கிருந்த அறிவின் பெருக்கத்தை அறியலாம். கி. பி. 20 ஆம் நூற்றுண்டினர்.

சிங்காரவேலு முதலியார்: சென்னை, பச்சையப்பன் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராக இருந்தார். இவர் பட்டினத்தடிகள் பாடல்கட்கு உரை எழுதினுர். இவரது பெருமையினை எடுத்துக்காட்டுவது, அபிதான சிந்தாமணி என்பது. இது, இதுபோது வெளிவரும் கலைக்களஞ்சியம் போன்றது. இதில் நூல்கள், புலவர்கள் பற்றிய குறிப்புக்கள் அமைந்துள்ளன. கி. பி. 20 ஆம் நூற்றுண்டினர்.

நமச்சிவாய முதலியார்: இவர் காவேரிப்பாக்க முதலியார் மரபினர். ஆரம்ப ஆசிரியராகத் தொடங்கிய இவர், மாகாணக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் பதவி வரையில்

சென்று, தமிழ் ஆசிரியர்கட்கு வழிகாட்டியவர். செல்வத்தில் சிறக்க வாழ்ந்தவர். புலவர்களின் புன்கண் தீர்த்த புனிதர். இவர் கீழ் வகுப்பு முதல் மேல் வகுப்புவரை படிக்கும் மாணவர்கட்குப் பாடநூற்களை எழுதியவர். இவர் தொல்காப்பியத்தைப் பதிப்பித்தவர். திருத்தணிகைப் புராணத்தைப் பதிப்பித்துக் குறிப்புரையும் எழுதியவர். சிறு சிறு வசன நூல்களை எழுதியவர். பிருத்திவிராசன் என்னும் நாடகத்தையும் எழுதினுர். திருஞான சம்பந்தர் வரலாற்றைப் பாடல்களில் பாடினுர். பள்ளிச்சிறுர்கட்குக் கணக்கு, பூகோளம், விஞ்ஞானம், வரலாற்றுப் பாடம் ஆகியவற்றையும் எழுதியுள்ளார். கி. பி. 20 ஆம் நூற்றுண்டினர்.

அனவரத விநாயகம் பிள்ளை: இவர் பி. ஏ. பி. எல். பட்டம் பெற்றவர். என்றுலும், பல்கலைக்கழகத்தில் தமிழ்ப்பணியே புரிந்தனர். நச்சினுர்க்கினியர் உரை பற்றிய ஆராய்ச்சி நூலையும், தமிழ்ப் பெருமக்கள் வரலாறு, சைவ சித்தாந்த வரலாறு என்னும் நூற்களையும் எழுதினுர். கி. பி. 20 ஆம் நூற்றுண்டினர்.

மாணிக்க நாயகர்: இவர் பி. இ. பட்டம் பெற்று, அரசாங்கப் பொறியியலாளராகப் பணி புரிந்தவர். நுண்ணறிவு படைத்தவர். F என்னும் எழுத்தைத் தமிழில் எழுத முடியாது என்றவர்க்கு ஃ என்னும் எழுத்தைக்கொண்டு எம்மொழிச் சொற்களையும் எழுத்துக்களையும் எழுதி விடலாம் என்பதை நன்கு விளக்கி எழுதிய பெருமைக்குரியவர். இவர் எழுதிய நூற்கள் தமிழ் மறைவிளக்கம், தமிழ் அலகைத் தொடர், அஞ்ஞானம் என்பன. கம்பன்-புளுகும் வால்மீகி வாய்மையும் என்னும் ஆய்வுக் கட்டுரையினையும் எழுதியவர். கி. பி. 20 ஆம் நூற்றுண்டினர்.

இலக்குமணப் பிள்ளை: இவர் திருவிதாங்கூரில் பணி புரிந்தவர். தமிழ்க் கீர்த்தனைகள் பலவற்றைப் பாடியவர். இசைப் புலவரும் ஆவார். இவர் காலம் 20 ஆம் நூற்றுண்டு.

சுப்பிரமணிய முதலியார்: இவரைக் கோவைக் கிழார் என்றும் கூறுவர். வழக்கறிஞராய்த் திகழ்ந்தவர். முன்னேர் சென்ற முறையில் சென்றவர். திருநாவுக்கரசர் சிதம்பரம் சென்ற போது, திருக்கோயிலைச் சுற்றியுள்ள நான்கு மதில்-

களையும் பணிந்து பின் உள்பிராகாரங்களை வணங்கிப் பின் கூத்தப்பெருமானைக் கும்பிட உள் சென்றார் என்று பெரிய புராணம் குறிப்பிட்டிருப்பது போலவே, தாமும் அவ்வாறே பணிந்து செல்பவர். பெரிய புராணத்திற்கு இவர் எழுதியுள்ள விரிவுரை போன்று எவரும் இதுவரை எழுதிலர். (சென்னை, வேப்பேரி ஆலால சுந்தரம் பிள்ளை அவர்கள் எழுதினார்கள். ஆனால், அது முற்றுறாது, சென்று தேய்ந்திறுதல் என்னும் குற்றத்திற்கு ஆளாகியது. என்றாலும், இவரது திருக்களிற்றுப்படியார் உரை, திருவுந்தியார் உரை தலை சிறந்தனவாகும்.) சேக்கிழார் என்ற பெயரால் ஒப்பற்ற உரைநடை நூலை எழுதியுள்ளார். மாணிக்க வாசகர் பெருமை என்னும் நூலையும், பெரிய புராணப் பெண்மணிகளைப் பற்றிய நூலையும் எழுதினார். கி. பி. 20 ஆம் நூற்றாண்டினர்.

பூரணலிங்கம் பிள்ளை: இவர் ஆங்கிலத்தில் தமிழ் இலக்கிய வரலாற்றை எழுதினார். தமிழ் இந்தியா என்பதும் ஆங்கில நூலே. கட்டுரைக் களஞ்சியம், தப்பிலி என்பன இவரது உரைநடை நூற்கள். கி. பி. 20 ஆம் நூற்றாண்டினர். பி. ஏ. பி. எல். பட்டம் பெற்றவர்.

மணி. திருநாவுக்கரசு முதலியார்: இவர் சென்னை முத்தியாலுப் பேட்டை உயர்நிலைப் பள்ளியில் தமிழ் ஆசிரியராக இருந்து பின் பச்சையப்பன் கல்லூரித் தமிழ் விரிவுரையாளராகத் திகழ்ந்தவர். ஆணித்தரமாகப் பேச வல்லவர். சிறுவர்கட்கான பாடல்கள் பலவற்றைப் பாடியவர். புலவர் வரலாறு என்னும் நூலை எழுதியவர். கி. பி. 20 ஆம் நூற்றாண்டினர்.

கதிரேசஞ் செட்டியார்: பண்டிதமணி என்றே இவர் அறிஞர்களால் அழைக்கப்பட்டவர். இவர்க்கு ஒரு கால் ஊனம். அங்ஙனம் அமைந்தமையே இவரது புலமைப் பெருக்கிற்குக் காரணமாயிற்று. வடமொழி, தென்மொழி அறிந்தவர். அழகாக நகைச்சுவை தோன்ற பேச வல்லவர். இவரது தலைமையில் எவரேனும் ஒழுங்கற்றுப் பேசினால், அதனை நகைச்சுவை தோன்ற எடுத்துக் காட்டுவார். "இதுவரை ஆற்றுப் புது வெள்ளப் பெருக்கைப் போன்ற பேச்சைக் கேட்டீர்கள். அவ் வெள்ளம்

எல்லாப் பொருள்களையும் அடித்துக் கொண்டு வரும் அன்றோ!'' என்று கூறுவர். பாலில் எறும்பு இருக்க, அதனை எடுக்காமல் ஒருவர் நல்கிய போது, "சீனிவாசன் திருப்பாற்கடலில் பள்ளி கொண்டுள்ளான் போலும்''! என்று வேடிக்கையாகக் கூறியவர். ஸ்ரீநிவாசன் என்பதைத் தம் பொருட்கேற்ப ஜீனிவாசன் (சர்க்கரையில் வாழும் எறும்பு) என மாற்றிக் கூறினர். இவர் நகரத்தார் மரபினர். திருவாசகத்தில் உள்ள திருவெம்பாவை, திருச்சதகம், நீத்தல் விண்ணப்பம் ஆகிய பகுதிகட்கு உரை கண்டவர். மண்ணியல் சிறு தேர் என்னும் நாடகம் எழுதியவர். சுக்கிரநீதி என்னும் நூலை வடமொழி நூல் கருத்து வழுவா வண்ணம் மொழி பெயர்த்துள்ளனர். சுலோசனை, உதயணன் காதை என்பன இவரது உரைநடை நூல்கள். இவர் பல்வேறு சமயங்களில் எழுதிய கட்டுரைகள் சமய உரைநடைக் கோவை என்ற பெயரால் வெளி வந்துள்ளன.

இவர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராகப் பணி புரிந்தவர். மகா மகோபாத்தியாயர் என்னும் பட்டம் பெற்றவர். கி. பி. 20 ஆம் நூற்றாண்டினர்.

தாச்சி அருணாசல முதலியார்: இவர் மயிலை கபாலீசர், கற்பகாம்பிகை, திருமுல்லைவாயில் மாசிலாமணி ஈசர்மீது பல பதிகங்கள் பாடியவர். இவரது பெயரால் திருமயிலையில் ஒரு வீதியும் உண்டு. திரைகடல் ஓடியும் திரவியம் தேடு என்பதை எவரும் உணர,

"குப்பத்துச் செட்டி குமாரன் கடல்தாண்டி
முப்பத்து முக்கா தமும்கடந்து—கப்பலதில்
ஆபத்து வாரா தகற்றி அவன்அதிக
லாபத்துக் காளாயி னான்."

என்று பாடியுள்ளார். இவர் கி. பி. 19 ஆம் நூற்றாண்டினர்.

பூண்டி அரங்கநாத முதலியார்: இவர் எம். ஏ. பட்டத்தினர். ஆங்கிலம் கணிதம் முதலியவற்றில் பேரறிவு படைத்து அரசினர் கல்லூரியில் கணிதப் பேராசிரியராக இருந்தவர். நல்ல அருட் குணமுடையவர். இஃது, இவர் கல்லூரிச்

சம்பளம் 'கட்ட இயலாத காரணத்தால் தொடர்ந்து படிக்க இயலாத ஒரு பிராம்மண மாணவனுக்கு உதவி செய்து படிக்குமாறு செய்து பட்டம்பெறச் செய்ததனுல் தெரிகிறது. சிலேடையாகப் பேச வல்லவர். ஒரு முறை ஜஸ்டிஸ் முத்துசாமி ஐயர் இவரைச் சந்தித்தபோது, தம் வளைதடி தொங்கிய கையை உயர்த்தி "அடியேன்" என்று கூற, உடனே முதலியார் "அப்படியாயின் தங்கள் கையில் தடி ஏன்?" என்றனர். இத்தகைய பெரியார் கச்சிக் கலம்பகம் என்னும் நூலையும் பாடியுள்ளனர்.

இராம பாரதி: இவர் ஆத்திசூடியில் காணும் ஒவ்வோர் அடிக்கும் ஒரு வெண்பாப் பாடி உதாரணமாக ஒவ்வொரு கதையையும் காட்டியவர். 19 ஆம் நூற்றுண்டினர்.

விசாகப் பெருமாள் ஐயர்: இவரது தந்தையார் கந்தப்பையர். இவர்கள் வீர சைவ மரபினர். திருத்தணிகையில் வாழ்ந்தவர்கள். விசாகப் பெருமாள் ஐயர் நன்னூலுக்கு உரை எழுதினர். யாப்பு அணி இலக்கணங்களை வினுவிடையாக எழுதியுள்ளனர்.

சரவணப் பெருமாள் ஐயர்: இவர் விசாகப் பெருமாள் ஐயர் இளவல்; பல நூல்களுக்கு உரை எழுதினர். திருவள்ளுவ மாலைக்கு இவர் செய்த உரையே உளது. பிரபுலிங்க லீலைக்கும் உரை கண்டுள்ளனர். களத்தூர் புராணமும் பாடியுள்ளார். இவரது உரை நடை நூல்கள் இயற்றமிழ்ச் சுருக்கம், பாலபோத இலக்கண வினுவிடை, அணியியல் விளக்கம் முதலியன. கி. பி. 19 ஆம் நூற்றுண்டினர்.

யாழ்ப்பாணப் புலவர்கள்

தமிழ்த் தொண்டு செய்த பல பிரிவுகளில் யாழ்ப்பாணத்திற்கும் ஒரு தனி இடம் உண்டு. இங்குத் தோன்றிய பெருமக்கள் இந்தியாவிற்கு வந்து, சைவ மடங்களில் தங்கி, நூல் அறிவைப் பெற்றதோடின்றிப் பல நூல்களையும் எழுதியும் அச்சிட்டும் தந்துள்ளனர். இவர்களுள் சைவர்களும் உண்டு. கிறித்தவர்களும் உண்டு.

ஞானப்பிரகாசர்: இவர் யாழ்ப்பாணத் திருநெல்வேலியைச் சார்ந்தவர். இவர் போர்த்துகீசியர் செய்த கொடுமைக்கு ஆற்ருது இந்தியாவுக்கு வந்துவிட்டனர். திரு-

வண்ணுமலையில் தங்கிவிட்டனர். சிவஞான சித்தியார்க்கு உரை எழுதினுர்.

ஆறுமுக நாவலர்: இவரை அறியாதவர் தமிழ்நாட்டில் எவரும் இரார். நாவலர் என்றதும் இவரது நினைவே எவர்க்கும் வரும்; இவர் யாழ்ப்பாணத்தில், நல்லூர் என்னும் ஊரில் பிறந்தனர். இவர் தமிழ் உரைநடை எழுதுவதில் வல்லுநர். சிறுவர்கட்காகப் பால பாட நூல்கள், சைவ விஞ விடை, இலக்கணச் சுருக்கம், பெரியபுராண வசனம், திருவிளையாடற் புராண வசனம், கந்த புராண வசனம், இலக்கண விஞ விடை, சிதம்பர மான்மியம் முதலான வசன நூல்கள் இவரால் எழுதப்பட்டன. தேவ கோட்டைத்தல புராணத்தையும், சித்திவிநாயகர் விருத்தத்தையும் பாடியவர். இவர் பல நூல்களைப் பிழையறப் பதிப்பித்துள்ளனர். இவர் பதிப்பித்துள்ள நூற்களுக்குத் தனி மதிப்புண்டு. பெரிய புராணத்தை வெளியிட்டு அதில் அரிய சூசனங்களை எழுதி-யுள்ளனர். ஆனுல், அச்சூசனங்கள் நூல் முழுமைக்கும் இல்லாமல் போனது பெருங் குறையாகும். (சூசனம் = குறிப்பு.) இச்சூசனத்தால் சைவ சித்தாந்த உண்மைகள், சரியை, கிரியை, யோகம், ஞானம் பற்றிய குறிப்புக்கள் பல சாத்திர உண்மைகள் தெரிய வருகின்றன. இவரது மாணவர் Rev. P. Percival. இவர்க்கு நாவலர் பைபில் மொழிபெயர்ப்புக்குப் பெருந்துணை செய்தவர். நாவலர் சிதம்பரத்தில் ஒரு பாடசாலை நிறுவினர். இது, இது போதும் சிறப்புடன் நடந்து வருகிறது. சென்னையில் அச்சகம் ஒன்றையும் நிறுவினுர். அதன் மூலமே தலை சிறந்த நூல்கள் அச்சிடப்பட்டு வெளிவந்தன; வந்துகொண்டும் இருக் கின்றன. இவரது நாவன்மை, பேச்சு வன்மைக் காரண-மாகவே இவர்க்கு நாவலர் என்னும் பட்டம் அளிக்கப் பட்டது.

சபாபதி நாவலர்: இவர் ஈழத்திலும், தென்னுட்டிலும் பல சைவப் பாடசாலைகளை நிறுவியவர். இவர் திருவாவடு-துறை ஆதீன வித்துவானுகத் திகழ்ந்தவர். தமிழ் நூல்-களைப் பிழையற வெளியிடுவதில் வல்லுநர். இவரது சொற்-பொழிவு வன்மை கண்டு, ஆதீனம் இவர்க்கு நாவலர் என்ற பட்டத்தை ஈந்தது. இவர் வட மொழி, தென் மொழி, ஆங்-கில மொழியில் தேர்ச்சி பெற்றவர். சதுர்வேத தாத்பரியம்

என்னும் நூலை எழுதியவரும் இவரே. திராவிடப் பிரகாசிகை என்னும் நூலை எழுதித் தமிழ் இலக்கிய வரலாற்றை அறிய முதல் முதல் வழி காட்டியவரும் இவரே.

திராவிடப் பிரகாசிகை பாயிரம். தமிழின் தெய்வப் பழமை மரபியல், இலக்கண மரபியல், இலக்கிய மரபியல், சாத்திர மரபியல், ஒழிபியல் என்னும் ஆறு பிரிவுகளைக் கொண்டது. இப்பகுப்பின் வழி, இலக்கண இலக்கிய சமய நூல்களைப் பற்றி அரிய குறிப்புக்களையும், தமிழின் மாண்பை யும் எடுத்து மொழிந்துள்ளார். காலம் 19 ஆம் நூற்றாண்டு. இவரது பிறநூல்கள் ஏசு மத சங்கற்ப நிராகரணம், சிதம்பர சபாநாதர் புராணம், சிவ கர்ணாம்மிருதம், பாரத தாத்பரிய சங்கிரகம், இராமாயண தாற்பரிய சங்கிரகம், திருச்சிற்றம்பல யமக அந்தாதி, பதிற்றுப் பத்தந்தாதி, மாவை அந்தாதி, நல்லை சுப்பிரமணியர் பதிகம், இலக்கண விளக்க பதிப்புரை மறுப்பு, வைதிக காவிய தூஷண மறுப்பு முதலியன.

சங்கர பண்டிதர்: யாழ்ப்பாண நீர் வேலியில் வாழ்ந் தவர். வடமொழி தென்மொழி வல்லுநர். இவர் பிறப்பிடம் சுன்னாகம். ஆகம நூல் சித்தாந்த நூல் வல்லுநர்; நல்ல சொற்பொழிவாளர். இவர் இயற்றிய நூற்கள் சைவப் பிரகாசனம், சிவபூசை அந்தாதி உரை, கிறித்து மத கண்ட னம், சிவ தூடண கண்டனம், அநுட்டான விதி என்பன. 19 ஆம் நூற்றாண்டினர்.

வேல் பிள்ளை: இவர் யாழ்ப்பாண மட்டுவில் எனும் ஊரில் பிறந்தவர். பிரசங்கம் புரிவதில் வல்லவர். இவர் திருவாதவூரர் புராண உரை, புலியூர் அந்தாதி உரை, அபிராமி அந்தாதி உரைகளை எழுதியவர். ஈழ மண்டல சதகம், வயிரவர் மீது தோத்திரமும் பாடியவர். இவர் இறுதிக் காலத்தில் சிதம்பரத்தில் வாழ்ந்தவர். காலம் 19 ஆம் நூற்றாண்டு.

நா. கதிரை வேற் பிள்ளை: இவர் ஈழத்தில் பிறந்து சென்னையில் வாழ்ந்தவர். பேச்சாற்றல் பெற்றவர். இவரது பேச்சில் ஈடுபட்டே திரு. வி. கலியாணசுந்தர முதலியார் இவரது மாணவர் ஆயினர். இவரது முயற்சியினால்தான் இராயப்பேட்டை பாலசுப்பிரமணிய பக்த ஜன சபை

தோற்றுவிக்கப்பட்டது. இவர் வடமொழி, தென்மொழி வல்லுநர்; அட்டவதானம், தசாவதானம் செய்து பட்டம் பெற்றவர். இவர் கூர்ம புராணம், பழநித்தல புராணங்கட்கு உரை எழுதினர். சைவ சந்திரிகை, சைவ சித்தாந்தச் சுருக்கம், சிவாலய மகோற்சவ விளக்கம், சுப்பிரமணிய பராக்கிரமம் என்னும் நூல்களை இயற்றியவர். காலம் 20 ஆம் நூற்றுண்டு. யாழ்ப்பாண அகராதி என்ற பெயரால் ஓர் அகராதியைத் தொகுத்துள்ளனர்.

கதிர்வேல் பிள்ளை கு: இவரும் ஈழத்தில் தோன்றியவர். இவர் தமிழ்ச் சொல் அகராதியைத் தொகுத்தவர். வஞ்சி மாநகர் என்னும் நூல் இவரது ஆராய்ச்சியை அறிவிக்க-வல்லது. வில்லி பாரதம் ஆதி பர்வத்துக்கும், மயூரகிரி, புராணத்திற்கும் உரை எழுதியவர்.

அம்பலவாண நாவலர்: இவர் யாழ்ப்பாண வட்டுக்-கோட்டையில் பிறந்தவர். தமிழ் வடமொழி வல்லுநர். ஆரிய-திராவிடப் பிரகாசிகை, பெரிய புராண பாடியம் என்னும் நூல்களை இயற்றினர்.

ஆறுமுகத் தம்பிரான் சுவாமிகள்: இவர் யாழ்ப்பாணத்-தில் பிறந்து திருவண்ணுமலை ஆதீனத்தில் இருந்தவர். இவர் பெரிய புராணத்தின் திட்ப நுட்பப் பொருள்களை நன்கு உணரச் சிறந்த உரையினை அதற்கு எழுதியவர்.

சுவாமிநாத பண்டிதர்: இவர் யாழ்ப்பாண நல்லூரைச் சேர்ந்தவர். இவர் தேவார அடங்கன் முறையை முதல் முதல் திருத்தமாக அச்சிட்டு வெளியிட்டவர். இதுவே அன்றிப் பல நூல்களை அச்சிட்டவர். நல்ல சொற்பொழி-வாளர்.

செந்திநாதய்யர்: இவர் வடமொழி, தென்மொழி, ஆங்கிலம் வல்லுநர். இவர் நீலகண்ட பாஷ்யத்தினைத் தமிழ்ப் படுத்தினர். சிவஞான போத வசனலங்கார தீபம். தேவார வேதசாரம், தத்துவவிளக்கம், ஞான ர்த்ஞவளி சீவகாருண்யம் முதலான நூற்களை வெளியிட்டார்.

திருவிளங்கம்: இவர் கொழும்பில் வழக்கறிஞராக இருந்தவர். சிவஞானசித்தியார், சிவப்பிரகாசம், திருப்புகழ், கந்தர் அலங்காரம் ஆகியவற்றிற்கு உரை எழுதியுள்ளனர்.

சிவபாத சுந்தரனுர்: இவர் யாழ்ப்பாண வாசியார். சைவபோதம், கந்தபுராண விளக்கம் என்ற இருவசன நூல்களையும், திருவருட்பயனுக்கு ஓர் உரையும் வரைந்தவர். ஆங்கிலத்தில் சைவ சித்தாந்தக் கருத்து ஒட்டி ஒரு நூலையும் எழுதியவர்.

விபுலானந்தர்: இவர் ஈழநாட்டு மட்டக்களப்பில் பிறந்தவர். இவர் கைலாசம்வரை யாத்திரை செய்தவர். இது பற்றி ஒரு கட்டுரையும் எழுதியுள்ளனர். இவரது இயற்பெயர் மயில்வாகனம் பிள்ளை என்பது. இராமகிருஷ்ண மடத்தைச் சேர்ந்த பின்பே விபுலானந்தர் என்று அழைக்கப்பட்டவர். இவர் யாழ்நூல், மதங்க சூடாமணி என்னும் நூற்களை இயற்றினுர்.

நவநீத கிருஷ்ண பாரதியார்: இவர் ஈழ நாட்டினர். இராமநாதன் கல்லூரியில் பேராசிரியராக இருந்தவர். சேர் பொன் இராமநாதன் அவர்களின் ஆஸ்தான கவிஞர். இவர் உலகியல் விளக்கம், திருவாசகப் பேருரை முதலான நூல்களை எழுதியவர். எவரும் உணர்ந்திராத முறையில் திருவாசக சிவபுராணம் பாயிரம் என்றும், ஏனைய மூன்று அகவல்கள் நூலில் வரலாறு உணர்த்துவன என்றும் உரை கண்டிருப்பது மிக மிகப் பாராட்டற்கு உரியது.

கணேசய்யர்: இவர் ஈழ நாட்டினர். வடமொழி, தென்மொழி அறிஞர். தொல்காப்பியச் சொல்லதிகாரச் சேனுவரையர் உரைக்கு இவர் எழுதியுள்ள விளக்கம் தலைசிறந்ததாகும்.

குமாரசுவாமி குருக்கள்: திரு. நாவலர் வழி நின்று நூல்களை எழுதியவர். இவர் சைவப்பிரகாசிகை, சிவபூசை விளக்கம், அனுட்டான அகவல் உரை, முப்பொருள் விளக்கம், வேதாகம நிரூபணம் முதலான நூற்களை எழுதியுள்ளனர்.

அருணுசல தேசிகர்: இவர் ஈழத்தில் தோன்றியவர். இவர் சைவசமய சிந்தாமணி என்னும் நூலை இயற்றியவர். பல பாடசாலைகளை நிறுவியவர்.

சி. வை. தாமோதரம் பிள்ளை: இவர் யாழ்ப்பாணத்தில் ஏழாலை என்னும் ஊரில் பிறந்தவர். இவர் பழந்தமிழ் நூல்-

களைப் பதிப்பித்துத் தந்தவர். இவர் பதிப்பித்த நூல்கள் சேனவரையம் கலித்தொகை, தணிகைப் புராணம், வீரசோழியம், இறையனர் அகப்பொருள், தொல்காப்பியப் பொருளதிகாரம், இலக்கண விளக்கம் என்பன. இப்பதிப்புக்களில் இவர் எழுதியுள்ள முகவுரைகள் ஆய்வுக்குக் கட்டுரை களாகும். இவர் கருத்து திருக்குறளைப் பதினெண் கீழ்க்கணக்குத் தொகுதியில் சேர்க்கக் கூடாது என்பது. இவர் சில தனிப்பாடல்களையும் இயற்றியவர். இவர் புதுக்கோட்டை நீதிபதியாகப் பணிபுரிந்தவர். ராவ்பகதூர் பட்டம் பெற்றவர். இவர் சிவமகத்துவம் என்னும் நூலை இயற்றியவர்.

சேனதிராச முதலியார்: இவர் ஆறுமுக நாவலரின் ஆசிரியர். இவரே இலக்கண அறிவை யாழ்ப்பாணத்தில் முதன் முதல் பரப்பியவர். இவர் நெல்லை வெண்பா, நெல்லைக் குறவஞ்சி, நெல்லை அந்தாதி, ஊஞ்சல் பதிகம், நீராவிக் கலிவெண்பா என்ற நூற்களை எழுதினவர். அமெரிக்க மிஷன் வெளியிட்ட அகராதிப் பணியில் இவர்க்கும் பங்குண்டு. யாழ்ப்பாணத்தில் நெல்லிப்புழை என்னும் ஊரில் பிறந்து வழக்கறிஞராகப் பணி ஆற்றியவர்.

முத்துக்குமாரசாமிப் புலவர்: யாழ்ப்பாணச் சுன்னகத்தில் பிறந்தவர். இவர் தமிழ்ப் புலவர் சரிதம், இலக்கியச்சொல் அகராதி முதலான நூல்களை இயற்றியவர். இவர் யாப்பருங்கலக்காரிகைக்கும், நம்பி அகப்பொருள் விளக்கத்திற்கும் அருமையான புத்துரைகளை எழுதியுள்ளார். இவ்விரு நூற்களின் அரிய குறிப்புக்களை எளிதில் அறிதற்கு இப்புத்துரை பெரிதும் பயன் அளிப்பதாகும். யாப்பிலக்கணக் காரிகையில் தூங்கேந்தடுக்கு என்னும் பாடல் பிற பதிப்புக்களில் இல்லை. இது இவர் பதிப்பித்த நூலில் இருப்பது நோக்குதற்குரியது.

மயில்வாகனப் புலவர்: இவர் யாழ்ப்பாண வாசியார். யாழ்ப்பாண வரலாற்றையும், புலியூர்யமக அந்தாதியையும் இயற்றியவர்.

கனகசபைப் புலவர்: இவர் வேளாளக் கிறித்தவர். யாழ்ப்பாண அளவேட்டி ஊரினர். இவர் அளகர்சாமி மடல், திருவாக்குப் புராணம் என்னும் நூல்களை இயற்றியவர்.

பொன்னம்பலப் பிள்ளை: இவர் வரலாற்று ஆராய்ச்சித் திறன் வாய்ந்தவர். இதற்கு எடுத்துக் காட்டாக வஞ்சிமா நகர் என்னும் நூலைக் காட்டலாம். பல சைவசித்தாந்த மாநாடுகளில் தலைமை தாங்கிச் சைவத்தின் மேன்மையினை-யும் தமிழின் சிறப்பையும் எடுத்து மொழிந்தவர்.

முருகேசப் பண்டிதர்: இவர் யாழ்ப்பாணச் சுன்னாகத்தில் பிறந்தவர். இவர் சித்திரகவிபாடுதலில் வல்லவர். இவர் இயற்றிய நூல்கள் நீதிநூறு, சந்திரசேகர விநாயகர் ஊஞ்சல், குடந்தை வெண்பா முதலியன.

சதாசிவப் பிள்ளை: இவர் வேளாளக் கிறித்தவர். யாழ்ப்பாண மானிப்பாயில் பிறந்தவர். இவர் இயற்றியவை நன்-னெறிமாலை, திருச்சதகம், பாவலர் சரித்திர தீபம் என்பன.

சுன்னாகம்முத்துக் குமாரக் கவிராயர்: இவர் சித்திரக்கவி-பாடும் ஆற்றல் மிக்கவர். மறைசைக் கலம்பகம் இவருடை-யதே.

நாகநாத பண்டிதர்: இவர் தென்மொழி, வடமொழி வல்லவர். மேகதூதம், பகவத்கீதை, இதோபதேசம், சாங்-தோக்கியம் ஆகிய நூல்களைத் தமிழில் மொழி பெயர்த்தவர்.

நா. கந்தையாப் பிள்ளை: இவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர். இவர் சங்க நூற்களை வசன நடையில் எழுதியவர். இவ்வரிசையில் பத்துப்பாட்டு வசன நூலை எடுத்துக்காட்டலாம். மாணவர்கள் பொருட்டு நல்ல கட்டுரை நூலையும் எழுதியுள்ளனர். இவர் தொகுத்துள்ள திருக்குறள் சொல் அடைவு ஆராய்ச்சியாளர்கட்குப் பெருந்துணை செய்யும். தமிழர்களின் பழமை, சைவசமயத் தொன்மை முதலான கருத்துக்களை நூல் வடிவில் வெளி-யிட்ட பெருமை இவர்க்கு உண்டு.

இவ்வாறு பல புலவர்கள் யாழ்ப்பாணத்தில் தோன்றித் தமிழ் மொழிக்கு அரும்பெருந்தொண்டுகளைப் புரிந்துள்-ளனர்.

பத்திரிகைகள்

இக்காலத்தில் பத்திரிகைகட்கு அளவில்லை. அச்சு இயந்திரம் உண்டான காரணத்தாலும், அச்செழுத்தும் ஏற்பட்ட காரணத்தாலும் எல்லாமொழிகளிலும் பத்திரிகைகள் மலிந்துள்ளன.

பத்திரிகையின் ஆதிக்காலம் கி.பி. 16 ஆம் நூற்றுண்டு. இம்முறையினைத் தொடங்கியவர்கள் வெனிஸ் நகரத்தார். இவர்கட்குப் பின்பே ஏனைய நாடுகள் பத்திரிகைகளைத் தொடங்க ஆரம்பித்தன.

ஆங்கிலேயர்கள் பத்திரிகையினை ஆரம்பித்தற்கு முன்பு, இந்தியாவில் பத்திரிகையே கிடையாது. மெல்ல மெல்ல நாட்டு மொழிகளில் பத்திரிகையினைத் தொடங்கியவர்கள் கிறித்தவப் பாதிரிமார்கள்தாம். இதுவும் வங்காள மொழியில் சமாசார்தீபம் என்ற பெயரால் வெளிவந்தது. ராஜாராம் மோகன்ராய், கௌமுதி என்னும் பத்திரிகையினையும், ஐஸ்வர் சந்திரகுப்தர், பிரவாகர் என்னும் பத்திரிகையினையும் வெளியிட்டனர். பிறகு படிப்படியாகப் பத்திரிகை வளர்ந்தது.

பழைய தமிழ்ப் பத்திரிகையாகச் சுதேசமித்திரன் விளங்குகிறது. பின்பு குடியரசு, நவசக்தி, பாரதி முதலான பத்திரிகைகள் தோன்றின. பத்திரிகைகளின் தோற்றம் நாட்டின் நாகரிகத்தைக் காட்டும் குறி என்றும் கூறலாம்.

பத்திரிகைகளின் வழியே இருந்த இடத்திலிருந்து கொண்டே வெளிநாட்டுச் செய்திகளையும், உள்நாட்டுச் செய்திகளையும் உணர்ந்து கொள்கின்றோம். அரசாங்கத்திற்கும் மக்கட்கும் நெருங்கிய தொடர்பு கொள்ளுதற்கும் இது துணை செய்யவல்லது. உரிமையினை உணர்த்தற்கும், விடுதலை பெறுதற்கும் பத்திரிகைகளே காரணம். ஒருவர் உள்ளத்தை ஒருவர் அறிதற்கு இதுவே துணை செய்ய வல்லது. இங்ஙனம் பலப்பல நன்மைகள் பத்திரிகையினுல் உண்டு என்பதை எழுதிக்கொண்டே செல்லலாம்.

இப் பத்திரிகைகள் பலவகைகளில் வெளிவருகின்றன. தினத்தாளாகவும், வாரப் பத்திரிகையாகவும், பட்சப் பத்திரிகையாகவும், திங்கள் பத்திரிகையாகவும் வெளி வருகின்றன. இப்பத்திரிகைகள் மதவளர்ச்சியின் பொருட்டும் இலக்கிய வளர்ச்சியின் பொருட்டும், சமூக, சமுதாய நலன் கருதியும் வெளிவருவன. தமிழ்ப் பொழில், செந்தமிழ், செந்தமிழ்ச் செல்வி. கலை மகள், தமிழ்ச் செல்வி, தமிழ் அணுங்கு போன்ற பத்திரிகைகள் இலக்கிய வளர்ச்சிக்குப் பயன்படுகின்றன. கோவைக் கலைக் கதிர்

விஞ்ஞான வளர்ச்சிக்குப் பெரிதும் பயன்பட்டுக் கொண்டு வருகிறது.

வாரத்தாள்களாக ஆனந்த விகடன், கல்கி முதலியன வெளி வருகின்றன. குமுதம் என்பது பத்து நாட்களுக்கு ஒருமுறை வெளி வருகிறது. பத்மஜோதி என்பது பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை வெளிவரும் பத்திரிகை.

சித்தாந்தம் என்னும் பத்திரிகையும், தருமபுர ஆதீன ஞான சம்பந்தம் என்பதும், ஸ்ரீ வைகுண்டம் குமரகுருபரன் என்பதும் சமய சார்பாக மாதந்தோறும் தோன்றி நன்மை புரிந்து கொண்டு வருகின்றன. அறநிலைய பாதுகாப்புக் கழகத்தார் திருக்கோயில் என்னும் பத்திரிகையினை வெளி யிட்டுச் சமயப் பிரசாரம் செய்கின்றனர்.

மூன்று மாதத்திற்கு ஒருமுறை வெளியீடாக Tamil Culture என்பது தமிழ்க்கலை மன்றத்தாரால் வெளி வருகிறது. இதில் ஆங்கிலக் கட்டுரைகளும் வெளி வருகின்றன. இங்ஙனம் பல பத்திரிகைகள் நாட்டில் பல்கி-யுள்ளன.

அன்றாடச் செய்திகளை அறிய, இதுபோது வெளிவரும் பத்திரிகைகளாக வெளி வருபவை சுதேசமித்திரன், தினத்தந்தி, தினமணி, நவ இந்தியா, நம்நாடு, தமிழ் நாடு, மாலை முரசு முதலியன. இவைகளே அன்றிக் கட்சி விளம்பரத்திற்காக வெளிவரும் பத்திரிகைகளும் பல்கி யுள்ளன.

நாவல்கள்

நாவல்கள் தமிழ் நாட்டில் மிக மிகப் பிற்காலத்தில் தான் எழுதத் தொடங்கப்பட்டது. இது பெரிதும் காதல் சுவையே மிகுந்து காணப்படும். கற்பனைக் கதைகளாகவும் அமைந்திருக்கும். தமது சொந்த நடைமுறைகளையும் நாவல் முறையில் எழுதப்படுவதுண்டு. நாவல் எழுதிப் பெரிதும் வெற்றி கண்டவர்கள் ஆங்கிலேயர்களே. இவர்-களுக்கு அடுத்தாற்போல் வங்காளிகளைக் கூறலாம்.

மாயூரம் வேத நாயகம் பிள்ளை அவர்கள் பிரதாப முதலியார் சரித்திரம் என்ற நாவலை எழுதி மக்களைப்

பெரிதும் களிக்கச் செய்தார். அத்துடன் குணசுந்தரி என்ற நாவலையும் எழுதினுர். திரு. ராஜம் அய்யர் கமலாம்பாள் என்ற நாவலையும், மறைமலை அடிகள் நாகநாட்டரசி, கோகிலாம்பாள் கடிதங்கள் என்ற நாடகங்களையும், பரிதி மாற்கலைஞர் மதிவாணன் என்ற நாவலையும், மாதவய்யா பத்மாவதி சரித்திரம் என்ற நாவலையும் எழுதினுர். இத்துறையில் பல நாவல்களை எழுதியவர் ஆரணி குப்புசாமி முதலியார். ரங்கராஜு என்பவர் ராஜாம்பாள் என்ற நாவல் ஆசிரியர். வடுவூர் துரைசாமி ஐயங்கார், திருவல்லிக்கேணி கோதை நாயகி அம்மையார் முதலியோர் நாவல் ஆசிரியர்களே.

கல்கி அவர்கள் எழுதிய அலைஓசை, அரசாங்கப் பரிசைப் பெற்றதாகும். இதுவே அன்றி தியாகபூமி, கள்வனின் காதலி, முதலானவற்றையும் இவர் எழுதியுள்ளனர். மே. வீ. வேணுகோபாலப் பிள்ளையின் அம்பலவாணன் என்ற பெயரியதும் நாவலே. டாக்டர் மு. வரதராசனுர் எழுதிய கள்ளோ காவியமோ, செந்தாமரை, பாவை என்பனவும் நாவல்களே. அமலநாதன் என்பது நான் எழுதிய நாடகமாகும்.

இங்ஙனம் இதுபோது பல நாவல்கள் வந்த வண்ணமாக உள்ளன.

சிறு கதைகள்

நாவல் என்பது தொடர்கதையாகும். நீண்ட கதைக் கோப்புடையது. பல பாத்திரங்கள் அதில் பேசப்படும். காதல் பெரிதும் ஊடுருவிச் செல்லும். சிறு கதைகள் அத்தகையன அல்ல. சிறுகதைகள் சுருங்கிய அளவில் நிகழ்ச்சிகளைக் கூறுவன. ஒருவர் இருவர் செயல்களே சிறு கதைகளில் பெரிதும் பேசப்பெறும். நல்ல நீதிகளும் குறிக்கோளும் சிறு கதைகளில் துலங்க இக்கதைகளை எழுதும் ஆசிரியர்கள் மேற்கொள்வர். சிறு கதைகளில் மக்களே பங்கு கொள்வர் என்பதில்லை. உரையாடாத அஃறிணைப் பொருள்கள் உரையாடுவன போலவும் அமைந்திருக்கும்.

பழங்காலத்தில் இச்சிறு கதைகள் இல்லை என்று கூற முடியாது. ஆனுல், அவை செய்யுள் வடிவில் புராணங்-

களாக இருந்தன. மணிமேகலை, சிலப்பதிகாரம் ஆகிய நூற்களில் சிறுகதைக் குறிப்புக்கள் இருத்தலை உணரவும். இவற்றால் கற்றவர்களும் சமயப்பற்றுடையவர்களுமே, படித்துச் சுவைக்க நேர்ந்தது. ஆனால், இக்காலத்தில் வெளிவரும் சிறு கதைகளைக் கற்றவரும், மற்றவரும் படித்துச் சுவைக்கலாம். மாணவர்கட்குத் தாமே படிக்கும் பயிற்சியினை யூட்டவும் சிறு கதைகள் எழுதப்பட்டு வருகின்றன.

வீரமா முனிவர் எழுதிய பரமார்த்த குரு கதை விடா நகைப்பை யுண்டுபண்ணும் சிறு கதையாகும். இது நீண்ட நூலே ஆயினும், ஒவ்வொரு பகுதியும் சிறு சிறு கதை போன்றதே. தாண்டவராய முதலியார் என்பவர் பஞ்ச தந்திரம் என்ற பெயரால் ஒரு நூல் எழுதியுள்ளார். இதில் ஐந்து பெரும் பிரிவுகள் இருப்பினும், ஒவ்வொரு பிரிவிலும் பல சிறு கதைகள் உள. வீராசாமி செட்டியார் அவர்களின் வினோத ரசமஞ்சரியும் பல பகுதிகள் கொண்டது. என்றாலும், ஒவ்வொரு பகுதியிலும் சிறு சிறு கதைகள் போல் பல நிகழ்ச்சிகள் எழுதப்பட்டுள்ளன. அவை படிக்கப் படிக்கச் சுவை தரும் சிறு சிறு கதைகளே.

பாரதியார் அவர்கள் எழுதிய சிறு கதைகளும் உண்டு. வா. வே. சு. ஐயர், கல்கி, புதுமைப் பித்தன் போன்றோர் பல சிறு கதைகளை எழுதியுள்ளனர். டாக்டர். ஐயர் அவர்கள் எழுதிய கண்டதும் கேட்டதும், சிறு கதையின் பகுப்பைச் சார்ந்ததே. இவர் எழுதிய நல்லுரைக் கோவையும் இத்தகையதே.

நான் எழுதிய சிறு கதைகள் நானே படிக்கும் புத்தகம், அன்புக் கதை, இன்பக் கதை, சிறுவர்கட்கான செந்தமிழ்க் கதை என்பன.

இம்முறையில் இக்காலத்தில் பற்பல சிறு கதைகள் வந்த வண்ணமாகவே இருக்கின்றன.

நாடகம்

நாடகத் தமிழ் பற்றி முன்பே விளக்கப்பட்டது. இங்கு நாடகம் என்பது பிற்காலத்தில் இத்துறையில் நாடக நூல்கள் எங்ஙனம் பல்கின, இயற்றியவர்கள் யாவர் என்பனவற்றை ஒரு சிறிது உணர்தற்காகும்.

இராஜராஜ ஜயம் என்பது இராஜராஜ சோழனது வெற்றிச் சிறப்பை விளக்கும் முகத்தால் எழுந்த நாடக நூல். இது தஞ்சை பெரிய கோவிலில் அவன் காலத்தி-லேயே நடிக்கப்பட்டது. குலோத்துங்க சோழன் பெயராலும் ஒரு நாடகம் இயற்றப்பட்டு நடிக்கப்பட்டது. இறைவன் திருக் கோயில் பெயரால் அமைந்த நாடகம், பூம்புலியூர் நாடக மாகும். இவைகள் கி. பி. பத்தாம் நூற்றுண்டில் நடத்தப் பட்ட நாடகங்கள்.

இதிகாச புராணங்களை ஒட்டிய நாடகங்கள் எழுதப்-பட்டன. அவை அருணசல கவிராயரது இராம நாடகம், அசோமுகி நாடகம் என்பன. பாரத விலாசம், சகுந்தலை விலாசம் முதலியன இராமச்சந்திரக் கவிராயரால் இயற்றப் பட்டவை. நந்தனுர் கீர்த்தனை, இயற்பகையார் என்பன கோபால கிருஷ்ண பாரதியாரால் எழுதப்பட்டவை.

வரலாற்று நாடகங்களாகச் சோழ விலாசம், தேசிங்கு ராஜ நாடகம், இரவி வர்மன் முதலான நாடகங்கள் எழுந்-தன. டம்பாச்சாரி நாடகம் ஒன்று நடிக்கப்பட்டது. அது செல்வர்கள் எங்ஙனம் சிந்தை திரிந்து கெட்டொழிகிருர் கள் என்பதை விளக்குவதாகும்.

ஷேக்ஸ்பியர் எழுதிய நாடக முறையில் எழுதப்பட்ட நாடகங்கள் பல. அதாவது ஷேக்ஸ்பியர் எங்ஙனம் களம், அங்கம் என்று பிரித்து எழுதியுள்ளனரோ, அம்முறையில் அவை எழுதப்பட்ட நாடகங்கள் ஆகும். இம்முறையினைப் பின்பற்றி எழுதியவர்கள் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்களும், பம்மல் சம்பந்த முதலியார் அவர்களும் ஆவார்-கள். முன்னவர் எழுதியது மனேன்மணியம் பின்னவர் எழுதி யவை மனேகரன், கள்வர் தலைவன் முதலான பலவாகும்.

ஷேக்ஸ்பியர் நாடக அமைப்பை மட்டும் கைக்கொள்-ளாமல், அவர் எழுதியுள்ள நாடகங்களையே மொழிபெயர்த்-தும் எழுதிய அறிஞர்கள் பலர். Cymbeline என்ற நாடகத் தைச் சரசாங்கி என்ற பெயராலும், சத்தியவதி என்ற பெயராலும் எழுதினுர்கள். ஒத்தல்லோ என்ற நாடகத்தை T. N. சேஷாசல ஐயர் அப் பெயராலேயே தமிழில் மொழி-பெயர்த்தனர். இவரே பிஸாரோ என்ற நாடகத்தையும் தமிழில் எழுதியவர்.

ரூபாவதி, மானவிஜயம் என இரு நாடகங்கள் வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரியாரால் எழுதப்பட்டன. இவை நல்ல தூய செந்தமிழால் ஆனவை. மான விஜயம் என்னும் நாடகமும் இவரால் எழுதப்பட்டது. இது புறநானூறு, களவழி நாற்பது என்னும் நூற்களின் அடிப்படையில் எழுந்த நாடகம்.

நாடகங்களை எழுதிய தோடின்றித் தாமும் நடிகர்களாக நடித்தவர்களுள் பெரிதும் குறிக்கத் தக்கவர்கள் சங்கரதாஸ் சுவாமிகள், பம்மல் சம்பந்த முதலியார், T. N. சேஷாசல ஐயர் போன்றவர்கள். சிம்பலின், ஒத்தல்லோ நாடகங்களை எழுதி நடித்தவர் சங்கரதாஸ் சுவாமிகள். பிஜாரோ, ஏமாங்கத நாட்டு இளவரசன் என்ற நாடகங்களை எழுதி நடித்தவர் T. N. சேஷாசல ஐயர்.

பம்மல் சம்பந்த முதலியார்தாம் நாடகங்கள் பல எழுதியவர். பல நாடகங்களில் நடித்தும் காட்டியவர். ஆகவே, இவரை நாடகத் தந்தையார் என்னலாம். இவரது நாடகக் கலையின் நுண்ணறிவு காரணமாகவே இவருக்கு மத்திய அரசாங்கம் பட்டமும், பரிசும் அளித்துள்ளது. இவர் எழுதிய நாடகங்களுள் சில லீலாவதி சுலோசனை, காதலர் கண்கள், சாரங்கதரன், சதி சுலோசனா, சபாபதி, கள்வர் தலைவன், வேதாள உலகம், யயாதி, வாணி புரவணிகள், இரண்டு நண்பர்கள், ரத்னவளி, மனோகரன் என்பன. இங்ஙனம் இவர் பல நாடகங்களை எழுதி வெளியிட்டதனால்தான், பலர் பல நாடகங்களைப் பின்னால் எழுதலாயினர்; நடிக்கலாயினர். இவர்கள் சுகுண விலாச சபை மூலம் பல நாடங்களில் நடித்தமையினால்தான் பல நாடக சபைகள் தோன்றின. பல உத்தியோகத்தினர்களும் அதில் கலந்து கொள்கின்றனர். நாடகக் கலையினை இடைவிடாமல் வளர்க்கும் சுகுண விலாச சபாவைப் போலவே, சுகிர்த லட்சுமி விலாச சபாவும் ஆண்டுதோறும் நாடகங்களை நடத்தி அக்கலையினை வளர்க்கிறது. டி. கே. சண்முகம் அவர்களும் இக்கலை பழுதுறுதிருக்கத் தமிழ் நாட்டிலும், கடல் கடந்து சென்று அங்குள்ள நாடுகளிலும் நடத்தித் தமிழ் நாடகத்தை வளர்த்து வருகின்றார். தெ. பொ. கிருஷ்ணசுவாமிப்பாவலர் என்பவர் (இவர் பன்மொழிப் புலவர் தெ. பொ. மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களின் உடன்பிறந்தவர்.) கதரின்

வெற்றி, தேசியக் கொடி, முதலான நாடகங்களை இங்கு நடத்தியதோடு நில்லாமல், வெம்பிலி எக்ஸிபிஷனிலும் நடத்தித் தமிழ் நாடகச் சிறப்பை மேம்படுத்தியவர். என். பாண்டுரங்கன், எம். ஏ., அவர்கள் சித்தர் மகள் என்னும் நாடகத்தை எழுதியுள்ளனர்.

படித்தற்கு என்று எழுதப்பட்ட நாடகங்கள் பல. மறைமலை அடிகளார் எழுதிய அம்பிகாபதி, சாகுந்தலம், பண்டித மணி கதிரேசஞ் செட்டியார் எழுதிய மண்ணியல் சிறு தேர், டாக்டர் மு. வ. அவர்கள் எழுதிய பச்சையப்பர், விபுலானந்த அடிகள் எழுதிய மதங்க சூளாமணி முதலியன. யான் எழுதிய நூல் திருமணம் என்பதும் நாடகம் ஆகும். இவற்றை நடித்தற்குரிய மாறுதல்களைச் செய்துகொண்டால் நடித்தும் காட்டலாம்.

நாடக வளர்ச்சிக்குக் கிறித்தவர்களும், முஸ்லீம்களும் பங்கு கொண்டனர். வேதநாயக சாஸ்திரியார் ஞான தச்சன் என்ற தத்துவப் பொருள் விளக்கும் நாடகத்தை எழுதியுள்ளனர். முஸ்லிம்களால் அப்பாசு நாடகம், அல்லி பாதுஷா நாடகம் இயற்றப்பட்டன.

இங்குக் கூறப்பட்டவைகளே நாடக நூல்கள் எனக் கருத வேண்டா. பலபல நாடகங்கள் வந்துள்ளன; வந்து கொண்டும் இருக்கின்றன; நடிக்கப்பட்டும் வருகின்றன.

தமிழ் இசை வளர்ச்சி

தமிழ் நாடகங்கள் வளர்ந்தது போலவே, தமிழ் இசை இயக்கமும் வளர்ந்தது. இதற்கு அடிகோலியவர் செட்டி நாட்டரசர் ராஜா சர். அண்ணாமலை செட்டியார் ஆவார். அவர் பல்வேறு எதிர்ப்புக்களுக்கிடையே தமிழ் இசைச் சங்கம் என்ற பெயரால் ஒரு சங்கத்தை நிறுவினர். அதன் குறிக்கோள் இசை அரங்குகளில் ஏறக்குறைய நூற்றுக்குத் தொண்ணூறு வீதம் தமிழ்ப் பாடல்களையே பாடவேண்டும் என்பதும், தமிழ் இசைப் புலவர்களை நாட்டில் பெருக்க வேண்டும் என்பதும் ஆகும். இதன் பொருட்டு சர். ஆர். கே. சண்முகம் செட்டியார் அவர்களும், திவான் பகதூர். இரத்தினசபாபதி முதலியார் அவர்களும் பெரிதும் ஊக்கம் கொண்டு இவ்வியக்கத்தை வளர்த்தனர்.

இதுபோது ராஜா சர். முத்தையய செட்டியார் அவர்கள் பெரும் பொருளைச் செலவிட்டுக்கொண்டு இத் தமிழ் இசை வளர்ச்சிக்குப் பெரிதும் பாடுபட்டுக்கொண்டு வருகிறார். இவர்க்குத் துணையாக இவரது இளவலும், திவான் பகதூர். T. M. நாராயணசாமிப் பிள்ளை அவர்களும் பெரிதும் பாடுபட்டு வருகின்றனர். தமிழ் இசைக் கல்லூரியும் நிறுவப்பட்டுத் தமிழ் இசை, மாணவர்கட்குப் பயிற்றுவிக்கப் பட்டு வருகிறது.

இந்த அளவில் தமிழ் இசைச் சங்கம் தன் பணியினை முடித்திலது. ஆண்டுதோறும் பண் ஆராய்ச்சினைச் செய்து, அக்காலத்து இருந்த பண்களுக்கு இக்காலத்தில் இன்னன்ன ராகம் பொருத்தமானது என்ற முடிவைக் கண்டு வெளியிட்டு வருகிறது. மலைகளில், காடுகளில் வாழும் ஆதி மக்கள் எங்ஙனம் ஆட்டம், பாட்டம் ஆகிய கலைகளை வளர்த்தனர்; வளர்க்கின்றனர் என்பதை நாகரிக மக்கள் அறிய, அவ்வவ் விடங்களிலிருந்து அம்மக்களை வரவழைத்து ஆடவும் பாடவும் செய்கின்றது. தமிழ் நாட்டில் பழங்காலத்தில் எந்தெந்த இசைக் கருவிகள் இருந்தன என்பதை நம்மவர்க்கு உணர்த்த, அவற்றை எல்லாம் சேர்த்து மக்கள் காண, காட்சிப் பொருளாகவும் அமைத்துள்ளது. இந்தத் தமிழ் இசைச் சங்கமும், கல்லூரியும் உள்ள இடம் சென்னை அண்ணுமலை மன்றமாகும்.

இக்காலப் புலவர்கள்

தமிழ் மொழி செய்யுள் வளத்தில் தலைசிறந்தது. இக்-காரணத்தால்தான் பழங்காலத்தில் எல்லா நூல்களும் செய்யுள் வடிவில் எழுந்தன. இலக்கணம் கூறும் நூற்-பாக்களும் செய்யுள் வடிவினவே. அவை ஆசிரியப்பா வகையைச் சேர்ந்தவை. செய்யுள் உணர்ச்சியே மக்களுக்கு எழும் என்பதை நம்மவர்கள் நன்கு அறிந்தவர்கள். அதனுல்தான் பாடல்களைப் பாடினர். சுருங்கச் சொல்-வதற்கும், மனத்தில் எளிதில் பதிய வைத்தற்கும் செய்யுள் அமைப்பைத் தமிழர் மேற்கொண்டனர். தம் எண்ணங்களை வெளிப்படுத்துவதற்குப் பேச்சைப் பேசுவதற்கு முன்பே செய்யுளை மக்கள் பாடினுர் என்பர் Otto Jespersan. இதனை அவர் "Men sang out of their feelings long

before they were able to speak their thoughts" என்று கூறியிருப்பது காண்க. எமர்சன் அவர்கள் செய்யுளே உரை நடைக்கு முன்னமேயே உள்ளது என்பதை 'Poetry precedes prose' என்று எழுதியுள்ளார்.

இதனுல் தமிழ் மொழியில் உரை நடையே இல்லை என்று கூறிவிட முடியாது. பழங்காலத்தில் உரை நடைகளும் இடையிடையே இருந்துள்ளன. ஆனல், அவை அருகி இருந்தன. தொல்காப்பியத்தில் உரை நடை உண்டு என்பதை,

"தொன்மை தானே
உரையொடு புணர்ந்த பழமை மேற்றே"

என்றும்,

" பாட்டுஉரை நூலே வாய்மொழி பிசியே
அங்கதம் முதுசொல்லோ டவ்வேழ் நிலத்தும்."

என்றும்,

உரை நடை எவ்வெவ்வாறு வரும் என்பதை,

"பாட்டிடை வைத்த குறிப்பி ைனும்
பாவின் றெழுந்த கிளவி யானும்
பொருள்மர பில்லாப் பொய்ம்மொழி யானும்
பொருளொடு புணர்ந்த நகைமொழி யானும்
உரைவகை நடையே நான்கென மொழிப."

என்றும், கூறிப் போந்ததைக் காண்க.

இச் சூத்திரத்தால் இக்காலத்து எழுதப் பெறும் நாவல்கட்கும், நாடகங்கட்கும், சிறுகதைகட்கும், ஏனைய மறுமலர்ச்சி வகைகட்கும் இடம் இருத்தல் காண்க. மேலும், இக்கருத்துக்கு அரண் செய்வது,

"விருந்தே தானும்
புதுவது புணர்ந்த யாப்பின் மேற்றே."

என்ற நூற்பாவாகும்.

பழங்காலத்தில் உரைநடை இருந்தமையினைச் சிலப்பதிகாரத்தில் இடையிடையே உரைநடை இருந்ததால் அறியலாம். அதில் வரும் உரை நடை,

" அன்று தொட்டுப் பாண்டியநாடு மழை வறம் கூர்ந்து வறுமை யெய்தி வெப்பு நோயும் குருவும் தொடரக் கொற்கையிருந்த வெற்றிவேற் செழியன், விழாவொடு சாந்தி செய்ய, நாடு மலிய மழை பெய்து, நோயும் துன்பமும் நீங்கின," என்பது இளங்கோ அடிகளாரின் உரை நடை. இது குறித்தே சிலப்பதிகாரம் உரையிடை இட்ட பாட்டுடைச் செய்யுள் என்று கூறப்படுகிறது, "உரை இடை இட்ட பாட்டுடைச் செய்யுள் உரைசால் அடிகள் அருள" என்று பதிகத்தும் வருதல் காண்க.

இறையனுர் களவியலிலும் உரை நடை உண்டு. இதற்கு ஓர் எடுத்துக் காட்டு "இட்ட பிற்றை ஞான்று, தேவர் குலம் வழிப்படுவான், தேவர் கோட்டத்தை எங்கும் துடைத்து, நீர் தெளித்து, பூவிட்டு, பீடத்தின் கீழ்ப் பண்டு என்றும் அலகிடாதான், அன்று தெய்வத் தவக்குறிப்பினுன் அலகிடுவன் என்று உள்ளங் குளிர அலகிட்டான். இட்டாற்கு அலகினேடும் இதழ் போந்தன" என்பது.

இவ்வாறே உரையிடை இட்ட பாட்டுடைச் செய்யுளாகப் பெருந்தேவனுர் பாரதம், தகடூர் யாத்திரை முதலான நூல்களால் தெரியலாம். இந் நூற்களுக்குப்பின் உரையாசிரியர்களின் உரை நடைகள் தோன்றின.

இம் மரபு வழியே இக்காலத்துத் தமிழ் அறிஞர்கள் பற்பல வகையில் உரைநடை நூல்களை எழுதித் தமிழ் அணங்கின் திருவடிகளில் சூட்டி மகிழ்ந்து வருகின்றனர். அத்தகைய அறிஞர்களைப் பற்றிச் சிறிது அறிவோமாக.

மே. வீ. வேணுகோபால் பிள்ளை: இவர் ஆயர் மரபினர். பல்கலைக் கழகத்தின் வழி, வித்துவான் பட்டத்தினையும், காஞ்சி மக்கள் வழி, மகா வித்துவான், சிந்தாமணிச் செல்வர் என்னும் பட்டங்களையும் பெற்றவர். இவர் எனது இயற்றமிழ் ஆசிரியரும் ஆவார். இலக்கண அறிவில் தலைசிறந்தவர். திருத்தமாக எழுதவும் வல்லவர். இவரது பார்வை பட்ட நூல்கள், பல திருத்தம் உற்றன. தவறுகளை நூல்களில் கண்டால் எவர் எழுதி இருப்பினும், சிறிதும் தயங்காது திருத்தி விட வல்லவர். ஆங்கில அறிவும் இவர்க்குண்டு.

இவர் தொல்காப்பியச் சொல்லதிகார நச்சினர்க்கினியர் உரை, இறையனுர் அகப்பொருள் உரை, யாப்பருங்கல விருத்தி, அஷ்டப் பிரபந்தம், ஞானக் கோவை,

தஞ்சைவாணன் கோவை ஆகிய நூல்களைக் குறிப்புரையுடன் நன்முறையில் பதிப்பித்துள்ளனர். உரை நடை நூல்கள் குணசாகரர், திருக்கண்ணபிரானுர், துருவன் ஆகியவகைகள். நாவல்கள் தவளை மலைச்சுரங்கம், அம்பலவாணன் என்பன.

டாக்டர் மு. வரதராசனுர்: இவர் முதலியார் மரபினர். இவரைச் சுருக்கமாக டாக்டர் மு. வ. என்பர். இவர் பெற்ற பட்டங்கள், வித்துவான், பி. ஓ. எல்., எம். ஏ., எம். ஓ. எல்., டாக்டர் பிஎச்.டி., என்பன. இவர் சென்னைப் பல்கலைக் கழகப் பேராசிரியர். தம்மைப் போலப் பிறரும் பெருஞ் சிறப்பில் வாழ வேண்டும் என்னும் நல்லெண்ணம் படைத்தவர். இவர் மொழி வரலாறு, மொழிநூல், வள்ளுவர் வாழ்க்கை விளக்கம், கள்ளோ காவியமோ, மொழி இயற் கட்டுரைகள், பெர்னுட்ஷா, தாகூர், காந்தி அடிகள் வரலாறு, மாதவி, கண்ணகி, மனச் சான்று, அரசியல் அலைகள் முதலான எண்ணற்ற நூல்களை எழுதியிருக்கிருர். கடித அமைப்பில் தம்பிக்கு என்னும் பெயரில் ஒரு நூலையும் எழுதியுள்ளார். இவரது அறிவாற்றலை வியந்து அரசாங்கம் பட்டமும், பரிசும் அளித்துள்ளது. அண்மையிலும் ஒரு பரிசைப் பெற்றனர். திருக்குறள் பொழிப்புரை, சங்க நூல்களின் இயற்கை என்பனவும் இவரது நூற்களே. சென்னை அரசாங்கமும், டில்லி அரசாங்கமும் இவரது ஆலோசனைகளை ஏற்று இவரைப் போற்றி வருகின்றனர். இவரது புகழ் குமரி முதல் டில்லி வரை பரவியுள்ளது. இவரது ஆலோசனைகளை ஏற்காத செயற் குழுக்களோ, கழகங்களோ, சங்கங்களோ இல்லை என்னலாம். கடல் கடந்து சென்று தமிழினைப் பரப்பியவர்.

பாரதிதாசன்: இவர் புதுவையில் வாழ்பவர். தலை சிறந்த சீர்திருத்தக்காரர். முதலில் முருகப் பெருமானிடத்தில் பேரன்பு கொண்டு, அவர் மீது பல பாடல்களை இயற்றியவர். பின்பு இக்காலத்துக் கேற்ற சீர்திருத்த முறையிலேயே பல பாடல்களைப் பாடியவர். இவரது இயற்பெயர் சுப்புரத்தினம் என்பது. இவருக்குப் பிரஞ்சு மொழியும் தெரியும். புதுவையில் அரசினர் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக இருந்தவர். இளமை முதற் கொண்டே கவிபாடும் பயிற்சி பெற்றவர். சாதி சமயங்களை வெறுத்தவர். இவர் பாடல்களில் சுவையும் வீரமும் உண்டு.

திரைப்படப் பாடல்களையும் பாடியவர். அறிஞர் பலரும் இவரது கவிதைகளைப் புகழ்ந்துள்ளனர். இவர் பல உரை நடை நூல்களையும் எழுதியுள்ளார். விதவை மணத்தை ஆதரிப்பவர். "வாடாத பூப்போன்ற மங்கை நல்லாள் மணவாளன் இறந்த பின்மணத்தல் தீதோ" என்று இவர் பாடியுள்ள அடிகளைக் காண்க. இக்காலத்தில் எல்லாக் கலைகளும் தமிழில் வரவேண்டும் என்னும் முயற்சி கிளைத்துள்ளது. இதனை இவர் முன்பே "கலையாவும் தமிழ் மொழியில் வளர்ந்தோங்குக" என்று கூறியுள்ளனர். இவர் எழுதிய நூல்கள் அழகின் சிரிப்பு, பாண்டியன் பரிசு, சஞ்சீவி பர்வதத்தின் சாரல், புரட்சிக்கவி, குடும்ப விளக்கு, குறிஞ்சித்திட்டு முதலியன.

மா. இராசமாணிக்கம் பிள்ளை: இவர் தஞ்சை மாவட்டத்தினர். இதுபோது சென்னைப் பல்கலைக் கழகத்தில் ரீடர் (நூல் ஆய்வர்) ஆக இருக்கிறார். சீர்திருத்தம் என்பதை எழுத்தால் எழுதிப் பேச்சால் பேசி வருபவர் மட்டும் அல்லர். செயலாலும் செயற்படுத்தும் சீர்திருத்தக்காரர். இவர் வித்துவான், பி. ஓ. எல்., எம். ஓ. எல்., எல். டி., டாக்டர் பிஎச். டி. ஆகிய பட்டங்களைப் பெற்றவர். இளைஞர் முதல் முதியவர் வரை படித்தற்கான நூல்களை எழுதியவர். பல நூல்களை எழுதிய அறிஞர்களுள் இவரும் ஒருவர். நல்ல ஆராய்ச்சியாளர். கல்வெட்டில் இவருக்கும் நல்ல புலமையுண்டு. இவர் எழுதிய நூல்களுள் சில பல்லவர் வரலாறு, சோழர் வரலாறு, கால ஆராய்ச்சி, மொகஞ்சதரோ, சைவ சமய வரலாறு, பெரிய புராண ஆராய்ச்சி முதலியன.

அ. சிதம்பர நாதனார்: இவர் கும்பகோணத்தில் பிறந்தவர். இவர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த் துறைத் தலைவராக இருந்தார். அங்குத் துணை வேந்தராகவும் சில திங்கள் பணிபுரிந்தார். கடல் கடந்து சென்று தமிழைப் பரப்பியவர். வித்துவான், எம். ஏ., டாக்டர் பிஎச். டி. என்ற பட்டங்களை யுடையவர். இதுபோது சென்னைப் பல்கலைக் கழகத்தில் ஆங்கிலத் தமிழ் அகராதி தொகுப்புத்துறைத் தலைவராக இருக்கின்றார். இவர் எம். எல். சி. உறுப்பினரும் ஆவார். இவரை ஏ. சி. செட்டியார் என்றும் கூறுவர். நல்ல பேச்சாளர். இவரது நூல்கள், உழைப்பால் உயர்ந்த ஒருவர், முன்பனிக்காலம், தமிழ் ஓசை, தமிழ் காட்டும் உலகு, மன்னுயிர்க்கு அன்பர், ஒத்தல்லோ முதலியன. சைவ வேளாண் செட்டியார் மரபினர்.

சுத்தானந்த பாரதியார் : இவர் ஒரு துறவி. இவரைக் கவியோகி என்றும் கூறுவர். இவரைப் போல நூல்களை எழுதிக் குவித்தவர்கள் எவரும் இல்லை. இனியும் இரார். இவர் எழுதாத எத்துறையும் இல்லை எனலாம். சிவகங்கையில் பிறந்த இவர், இதுபோது சென்னையில் அடையாற்றில் உளர். இவர்க்குத் தமிழ், வடமொழி, ஆங்கிலம், இந்தி, பிரஞ்சு, தெலுங்கு ஆகிய பல மொழிகளில் நல்ல புலமை உண்டு. கவிகளாகவும், உரைநடைகளாகவும் எழுதியவை பற்பல. திருக்குறள் இன்பம், சிலம்புச் செல்வம், 'கவிக் குயில், பாரதி சக்தி, மகா காவியம், பாரத கீதம், திருமூலர் திருமந்திர ஆய்வு, திருவருட்பா ஆய்வு, பல தனிப்பாடல்கள், இளிச்சவாயன், ஏழை படும் பாடு முதலியன இவர் எழுதிய நூல்கள். இவர் அரவிந்தர் ஆசிரமத்தில் பல ஆண்டுகள் இருந்தவர். பிராம்மண மரபினர்.

துரை அரங்கசாமிப் பிள்ளை : இவர் செங்கற்பட்டு மாவட்டத்தினர். இவர் இதுபோது மதுரையில் சென்னைப் பல்கலைக் கழகச் சார்பில் தமிழ்ப் பேராசிரியராக இருக்கிறார். இவர் வித்துவான், பி. ஓ. எல்., எம். ஓ. எல்., எம். ஏ., டாக்டர் பிஎச். டி. ஆகிய பட்டம் பெற்றவர். கருணீக மரபினர். இவர் எழுதிய நூற்கள் பண்டைய நெறி, இலக்கியக் கட்டுரைகள், தென்றலிலே தேன்மொழி, சங்க காலச் சிறப்புப் பெயர், தமிழன் நெறி, கதைப் புதையல், இப்சன் நாடகங்கள் (ஆங்கிலத்தில்).

சுப. மாணிக்கம் : இவர் மேலைச் சிவபுரியினர். நகரத்தார் மரபினர். இதுபோது காரைக்குடி அளகப்பா கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக இருப்பவர். இவர் வித்துவான், எம். ஏ., எம். ஓ. எல்., டாக்டர் பிஎச். டி. பட்டம் பெற்றவர். இவர் எழுதிய நூல்கள் மனைவியின் உரிமை, வள்ளுவம், கொடை விளக்கு, தொல்காப்பியப் புதுமை, இரட்டைக் காப்பியங்கள் முதலியன. இவரது எழுத்துப் புலமைக்கு அரசினர் பரிசும் ஈந்துளர். சங்க நூற்களில் காதல் என்பது இவர் எழுதிய நூலே.

சி. இலக்குவனார் : இவர் எம். ஏ., எம். ஓ. எல்., பட்டங்களைப் பெற்றவர். தஞ்சை மாவட்டத்தினர். இவர் இதுபோது மதுரைத் தியாகராயர் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக இருக்கிறார். இவரது நூற்கள் அமைச்சர் யார், எல்லோ

ரும் இங்நாட்டரசர், தமிழ் கற்பிக்கும் முறை என்பன. நமது முதல் அமைச்சர் கனம் காமராசரைப் பற்றியும் ஒரு நூல் எழுதியுள்ளனர். இவருக்குத் தொல்காப்பியத்தில் நல்ல புலமை உண்டு. இந்நூலைப் பற்றி ஆங்கிலத்திலும் நூல் எழுதியுள்ளனர்.

தெ. பொ. மீனுட்சி சுந்தரம் பிள்ளை : இவர் சென்னையில் பிறந்தவர் ; வழக்கறிஞர். ஆனல், தமிழ் மொழிக்கே தொண்டு புரிபவர். சென்னை மாநிலக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக இருந்து, இதுபோது அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராக இருக்கிருர். இவர் வடமொழி, தமிழ், மலையாளம், இந்தி, தெலுங்கு, ஆங்கிலம், கன்னடம், பிரஞ்சு, ஜர்மெனி மொழிகளைத் தெரிந்தவர். இவரைப் பன்மொழிப் புலவர் என்பர். இவர் கடல் கடந்து சென்று தமிழ் மொழியின் சிறப்பை மொழிபவர். ஓயாது படித்துக் கொண்டு இருப்பவர். இவ்வாறே விரும்பிப் படிக்க வருபவர்க்கும் பாடம் சொல்பவர். மொழி வரலாற்றில் வல்லுநர். இவரது பட்டங்கள் வித்துவான், எம். ஏ., பி. எல்., எம். ஓ. எல். இவர் வேதாந்தம் சித்தாந்தம் அறிந்தவர். இவர் பல நூல்களை எழுதியுள்ளனர். பிறந்தது எப்படியோ, தமிழா நினைத்துப் பார், சமணத்தமிழ், இலக்கிய வரலாறு, சயாமில் திருவெம்பாவை திருப்பாவை, கவி இரவீந்திரநாத தாகூர், சேக்கிழாரும் திருக் கண்ணப்பரும், சூளாமணி வசனம், திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் முதலியன.

கா. அப்பாதுரைப் பிள்ளை : இவர் கன்னியாகுமரி மாவட்டத்தினர். இவர் பல மொழி அறிந்தவர். வடமொழி, இந்தி, மலையாளம், ஆங்கிலம், தமிழ் என்பன இவர் அறிந்த மொழிகள். பல நூல்களைப் பயின்றவர். இவரை நடமாடும் நூல் நிலையம் என்றும் கூறுவர். இதுபோது சென்னைப் பல்கலைக் கழகத்தில் ஆங்கிலத் தமிழ் அகராதி தொகுப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். இவர் வித்துவான், பி. ஏ., எம். ஏ., எல். டி. பட்டம் பெற்றவர். இவர் எழுதிய நூற்கள் தமிழ் அகர வரிசை, தென்னுட்டுப் போர்க்களங்கள், மாலதி மாதவன், செஞ்சி இளவரசன், குழந்தை உலகம், இந்து லேக்கா முதலியன.

சரவண ஆறுமுக முதலியார் : இவர் லால்குடியில் பிறந்தவர். இதுபோது பழனி ஓரியண்டல் கலைக் கல்லூரியில்

முதல்வராக இருக்கிறார். எழுத்திலும் பேச்சிலும் வல்லவர். இவர் வித்துவான், பி. ஏ., பி. ஓ. எல்., எம். ஏ., 'எல். டி. பட்டம் பெற்றவர். மலையாளம் தெரிந்தவர். இவர் எழுதிய நூல்கள் தமிழ் கற்பிக்கும் முறைகள், கட்டுரைக் கருவூலம், திருக்குறளும் பொது நோக்கமும், இலக்கிய ஓவியங்கள் முதலியன. இவர் எழுதியுள்ள சிறு பிரபந்தங்களைப் பற்றிய ஆய்வுக் கட்டுரை இவரது பரந்த நூல்அறிவுத் திறனை அறிவிப்பதாகும்.

கீ. இராமலிங்க முதலியார்: இவர் செங்கற்பட்டு மாவட்டத்தினர். எம் ஏ. பட்டம் பெற்றவர். தூய தமிழ் மொழியில் சொற்களை அமைப்பவர். எடுத்துக்காட்டாகப் பிரசவ ஆஸ்பத்திரி என்பதை மகப்பேறு விடுதி என்றும் (டைப்) என்பதைத் தட்டெழுத்து என்றும் மொழி பெயர்த்திருப்பதைக் காட்டலாம். இவரது நூற்கள் வழி காட்டும் வான் பொருள், ஆட்சிச் சொற்கள் என்பன. உண்மை நெறி விளக்கத்திற்கு உரை கண்டவர். தருமை ஆதீன கல்லூரியில் முதல்வராக இருந்தவர். இதுபோது தமிழ் ஆக்கப் பணியில் அரசாங்க அலுவலகத்தில் பணி புரிகிறார்.

ஜி. சுப்பிரமணியப் பிள்ளை: இவர் இதுபோது அண்ணா மலைப் பல்கலைக் கழக ஆராய்ச்சித் துறைத் தலைவராக உள்ளார். நகைச்சுவை ததும்பப் பேசவும், எழுதவும் வல்லவர். வித்துவான், எம். ஏ., பி. எல். பட்டம் பெற்றவர். இவர் எழுதிய நூல்கள் பல. அவை குறள் விருந்து, வெண்ணிலாவிலே என்பன. கம்ப ராமாயணத்தில் எவரும் எடுத்துக்காட்டாத பல பாடல்கள் இடைச் செருகலாக உள என்பதை உறுதிப்படுத்திக் கை எழுத்துப் பிரதிகள் கொண்டு நிலை நிறுத்தியுள்ளனர்.

அ. மு. பரமசிவாநந்தம்: இவர் செங்கற்பட்டு மாவட்டத்தினர். வேளாள மரபினர். வித்துவான், எம். ஏ., எம். லிட். பட்டம் பெற்றவர். பேச்சிலும், எழுத்திலும் வல்லவர். கடல் கடந்து சென்று சொற்பொழிவு ஆற்றியவர். இவர் எழுதியவை கவிதை உள்ளம், ஜாதி வெறி, கறை படிந்த உள்ளம், துன்பச் சுழல், கவிதையும் வாழ்க்கையும், கூடி வாழ் முதலியன. இவரது எழுத்தறிவிற்கு அரசினர் பரிசு தந்துள்ளனர். இதுபோது சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக இருக்கிறார்.

அ. கி. பரந்தாமனுர்: இவர் சென்னையில் பிறந்தவர். இது போது மதுரைத் தியாகரராயர் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராக இருக்கிருர். எம். ஏ. பட்டம் பெற்றவர். இவர் நல்ல தமிழ் எழுத வேண்டுமா? வாழ்க்கைக் கலை, மதுரை நாயகர் வரலாறு, காதல் நிலைக் கவிதைகள், மறுமலர்ச்சிக் கவிதைகள், மனிதன் செய்த மாண்புறு செயல்கள் முதலான நூற்களின் ஆசிரியர்.

ப. சோதிமுத்து: இவர் இராமநாதபுரத்தில் பிறந்தவர். இதுபோது அமெரிக்கன் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக இருப்பவர். கிறித்துவ மரபினர். இவர் எழுதிய நூல் நாட்டிற்குழைத்த நன்மகன் என்பது. ஆங்கிலத்திலும் நூல் எழுதும் ஆற்றல் படைத்தவர். இவர் எம். ஏ., பி. டி. பட்டம் பெற்றவர்.

பூ. ஆலாலசுந்தரம் செட்டியார்: இவர் தாம்பரம் கிறித்தவக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக உள்ளார். எம். ஏ. பட்டம் பெற்றவர். நல்ல பேச்சாளர். இவர் நூல்கள் கட்டுரை விருந்து, கம்பர் காவியத்தில் சில ஓவியங்கள் என்பன. பல கட்டுரைகளையும் எழுதியவர்.

மேரி மாசிலாமணி அம்மையார்: இவர் சென்னை, யங்உமன் கிறித்தவச் சங்கக் கல்லூரியில் தமிழ்த்துறைத் தலைவராக இருக்கிருர். எம். ஏ. பட்டம் பெற்றவர். முல்லைப் பாட்டுப் பற்றி ஒரு கட்டுரை வரைந்துள்ளார். கடல் கடந்து சென்று தமிழின் பெருமையினை உணர்த்தியவர்.

அ. காமாட்சி குமாரசாமி: இவர் சேலம் கல்லூரியில் தமிழ்த்துறைத் தலைவராக இருக்கிருர். எம். ஏ. பட்டம் பெற்றவர். பல கட்டுரைகளை எழுதியுள்ளார். அவற்றைத் தொகுத்து நூலாக வெளியிட்டுள்ளார். சித்தாந்த மகாநாடுகளில் தலைமை தாங்கிப் பேசிய பேச்சும் கட்டுரை வடிவில் வந்துள்ளது. இவற்றின் தொகுப்பே இலக்கிய இன்பம் என்பது.

கா. அப்துல் கபூர்: இவர் கன்னியாகுமரி மாவட்டத்தினர். எம். ஏ. பட்டத்தினர். மலையாளம், அரபி, உருது, ஆங்கிலம் அறிந்தவர். இலக்கியம் ஈந்த தமிழ், இறையருள் மாலை, மும்மணி மாலை, முஸ்லீம் பெரியார் வாழ்க்கை முதலியன இவரது நூல்கள்.

சு. ஔவை துரைசாமிப் பிள்ளை : இவர் தென் ஆற்காடு மாவட்டத்தினர். இதுபோது மதுரைத் தியாகராய கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக இருக்கிறார். வித்துவான் பட்டம் பெற்றவர். அழுத்தந்திருத்தமாகப் பேச வல்லவர். ஆங்கிலம் அறிந்தவர். இவர் எழுதிய நூல்கள் சைவ இலக்கிய வரலாறு, சேர மன்னர் வரலாறு, சிலப்பதிகார ஆராய்ச்சி, வரலாற்றுக் காட்சிகள், நந்தா விளக்கு, தமிழ்த் தாமரை முதலியன. ஞானாமிருதம் என்னும் நூலைத் தக்க ஆராய்ச்சி முகவுரையுடன் பதிப்பித்துள்ளனர். ஆங்கிலத்தில் திருவள்ளுவரைப் பற்றி ஒரு நூல் எழுதியுள்ளனர்.

வெள்ளை வாரணனார் : இவர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ரீடராக (நூல் ஆய்வர்) இருக்கிறார். நல்ல பேச்சாளர். வித்துவான் பட்டம் பெற்றவர். தொல்காப்பியம், சங்ககாலத் தமிழ் மக்கள், குறிஞ்சிப் பாட்டாராய்ச்சி நூல்கள் இவரால் எழுதப்பட்டுள்ளன. சித்தாந்தச் செம்மல், திருமுறைத் தமிழ் மணி என்னும் பட்டமுடையவர்.

மயிலை. சீனி வேங்கடசாமி : இவர் பட்டம் பதவி பெற்றிராவிட்டாலும் தமிழ் நூல் ஆராய்ச்சியில் தலைசிறந்தவர். மயிலையில் வாழ்பவர். கல்வெட்டறிஞர். இவரது நூற்கள் இறைவன் ஆடிய எழுவகைத் தாண்டவம், நரசிம்மன், மஹேந்திரன், பௌத்தமும் தமிழும், சமணமும்தமிழும், கிறிஸ்தவமும் தமிழும், மறைந்துபோன தமிழ் நூல்கள் முதலியன. இவர் அரசினர் பரிசும் பெற்றவர்.

தேவநேயப் பாவாணர் : இவர் எம். ஏ. பட்டம் பெற்றவர். சொல்லாராய்ச்சியில் சிறந்தவர். இவருக்கு இருக்கும் தமிழ்ப் பற்று அளவிடற்பாலதன்று. வடமொழி எனக் கருதப்படும் பல சொற்கள் தமிழ் சொற்களே என்று அச்சொற்களின் அடிச் சொற்களின் வழி நிறுவிக் காட்டவல்லவர். கிறித்தவ மரபினர். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் மொழிநூல் ஆய்வுக்குழுவில் பணி புரிந்தவர். இதுபோது புதுவையில் வாழ்பவர். இவரது புலமையினை இவர் எழுதியுள்ள ஒப்பியல் மொழி நூல் மூலம் அறியலாம். அந்நூலுக்கு இவர் எழுதியுள்ள முன்னுரை ஓர் ஆய்வு முன்னுரை. இவரது ஏனைய நூற்கள் திராவிடத் தாய், பழந்தமிழ் ஆட்சி, கட்டுரை வரைவியல் முதலியன.

லே. ப. 'கரு. இராமநாதன்: இவர் இராமநாதபுர-மாவட்டத்தினர். நகரத்தார் மரபினர். பண்டித, வித்துவான் பட்டங்களைப் பெற்றவர். இப்போது அண்ணுமலைப் பல்-கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராய்ப் பணிபுரிபவர். இவர் கட்டுரைக் கோவை, அண்ணுமலை அரசர், சங்க காலத் தமிழர் வாழ்வு, சோழ வேந்தர் மூவர், இந்திய நாட்டு வரலாற்றுக் கதைகள், பரிபாடல் ஆராய்ச்சி முதலான நூற்களை இயற்றியவர். இவர் தமிழ்நூல் விவரத் தொகுப்பு என்ற நூலையும் தொகுத்தவர். தமிழ் இசை இயக்கத்தில் பெரிதும் ஈடுபட்டவர்.

ஐயன் பெருமாள் கோனுர்: இவர் திரிசிரபுரத்தில் செயிண்ட் ஜோஸப் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராக உள்ளார். வித்துவான் பட்டம் பெற்றவர். பாடநூல்-களுக்கு உரை எழுதி நல்ல புகழ் பெற்றவர். இவரது நூல்கள் சங்ககாலப் பாண்டியர்கள், வள்ளல் பாரி, தமிழ் நாட்டுப் போர்க்களங்கள் என்பன.

கா. ம. வேங்கடராமய்யா: இவர் திருப்பனந்தாள் ஓரியண்டல் கல்லூரி முதல்வர். வித்துவான், பி. ஓ. எல்., எம். ஏ., எல். டி. பட்டங்களைப் பெற்றவர். கல்வெட்டு ஆய்வில் முனைந்து இருப்பவர். இதன் காரணமாகக் குமர குருபரன் பத்திரிகையில் பல கட்டுரைகளை எழுதி வருபவர். திருக்குறள் உரைக் கொத்து என்னும் நூலையும் வெளியிட்-டுள்ளனர்.

ச. தண்டபாணி தேசிகர்: இவர் வித்துவான் பட்டத்-தினைப் பல்கலைக் கழக வாயிலாகவும், மகா வித்துவான் பட்டத்தினைத் திருவாவடுதுறை ஆதீனகர்த்தர் வாயிலாகவும் பெற்றவர். அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் விரிவுரையாளராக இருப்பவர். வடமொழி, தென்மொழி அறிந்தவர். சித்தாந்த அறிவு பெரிதும் உடையவர். இவரது நூல்கள் கணபதி, முருகன், திருக்குறள் அமைப்பும் அழகும், சைவத்தின் மறுமலர்ச்சி, நாட்டாட்சியும் நம-தாட்சியும் என்பன. திருமந்திரத்திற்கு உரையும், முதல் திருமுறைக்கு உரையும் வரைந்துள்ளார். திருக்குறள் வளம் என்னும் நூல், வெளிவந்துள்ள உரைகளுடன் இவரால் பதிப்பிக்கப் பெற்று வெளிவந்துள்ளது. இதில்

இவர் திருக்குறள் ஆட்சி, கருத்து எங்கெங்கெந்த நூல்களில் வந்துள்ளன என்பதை நன்கு எடுத்துக் காட்டியுள்ளனர். இதுபோது சங்க இலக்கிய அகராதியினைத் தொகுத்து வருகிறார். பரத நாட்டிய சாத்திரம், அணியியல் என்பனவும் இவரது நூற்களே.

புருஷோத்தம நாயுடு: இவர் வித்துவான் பட்டம் பெற்றவர். சென்னைப் பல்கலைக் கழகத்தில் ரீடராக (நூல் ஆய்வர்) இருப்பவர். வைஷ்ணவத்தில் ஆழ்ந்த பற்றுடையவர். இதனால்தான் மாணிக்கவாசகர் எடுத்து இயம்பும் சில கருத்துக்களையும் கற்பனைகள் என்று கூறும் துணிவு பெற்றவர். டாக்டர் ஐயர் அவர்கள் கண்டிராத பாட பேதம் என்ற கருத்தில், ஐங்குறுநூறு கடவுள் வாழ்த்துப் பாடலில் "வாலிழைபாகம்" என்னும் தொடரை "வாலிழை ஆகம்" என வைஷ்ணவ பரமாக எடுத்துக் கூறுபவர். இவர் வட மொழி அறிந்தவர். இதன் துணையால்தான் திருவாய் மொழிக்கு எழுதப்பட்ட மணிப்பிரவாள நடையின் உரையினைத் தமிழ்ப்படுத்தி வெளியிட்டவர். இதுபோது ஸ்ரீவைஷ்ணவ பூஷணம் என்னும் நூலை ஆய்ந்து நற்றமிழ் நடையில் பதிப்பிக்க இருப்பவர். இவரது வைணவப் பற்றையும் தொண்டையும் பாராட்டித் திரு. இராசகோபாலாசாரியார் (ராஜாஜி அவர்கள்) பரிசும் ஈந்தனர்.

கி. வா. ஜகந்நாதன்: இவர் வித்துவான், பி. ஓ. எல்., எம். ஏ. பட்டம் பெற்றவர். கலைமகள் ஆசிரியர்; சென்னை மந்தவெளியில் வாழ்பவர். இவர் எழுதிய நூற்கள் தமிழ்க் காப்பியங்கள், கலைஞன் தியாகம், நாடோடி இலக்கியம், எல்லாம் தமிழ், மேகமண்டலம், ஆரம்ப அரசியல் நூல், அறுந்த தந்தி, பவள மல்லிகை முதலியன. இவர் சைவத் திருமுறைகள் பன்னிரண்டிலும், அருணகிரியார் அலங்காரம், அநுபூதி முதலிய நூற்களிலும் சில பாடல்களைத் தேர்ந்தெடுத்து விளக்கம் எழுதி இருக்கும் நூற்கள் படிக்கப் படிக்கத் தெவிட்டாதவை. இவர் அரசினர் பரிசும் பெற்றவர்.

கி. பெ. விசுவநாதன்: இவர் திருச்சியில் ஒரு சிறந்த வணிகர். இவர் பி. ஏ. பட்டம் பெற்றவர். அழகாகப் பேசுந் திறமுடையவர். தமிழ்ப் புலவர்கள், தமிழர்கள் வாழ்வுக்குப் பாடுபடுபவர். தமிழ் நாட்டுப் புலவர் குழு என்ற

ஒன்றைத் தோற்றுவித்து, அதில் சங்க காலப் புலவர்களைப் போல நாற்பத்தொன்பது புலவர்களை அமைத்து, மூன்று மாதங்கட்கு ஒருமுறை தமிழகத்தில் கூட்டம் கூட்டி நடத்தி வருபவர். ஆகாசவாணி என்பதை வானொலி என்றுதான் கூறவேண்டும் என்பதற்குப் போராடியவர். இதில் ஒரு சிறிது வெற்றியும் கண்டவர். இவர் எழுதிய நூல்கள் ஐந்து செல்வங்கள், அறிவிற்கு உணவு, தமிழ் மருந்துகள், திருக்குறள் புதைபொருள், தமிழ்ச் செல்வம் முதலியன. தமிழ் மொழி தமிழ்ப் புலவர்களின் நன்மை கருதிப் பெரும் பொருளை ஒதுக்க எண்ணிச் செயல் படுத்த முனைந்திருப்பது வரவேற்றற்குரியது.

அண்ணாதுரை: இவர் சிறந்த அரசியல்வாதி. எம். ஏ. பட்டம் உடையவர். கேளாரும் வேட்கும் முறையில் எந்த நேரத்தில் எந்தப் பொருளைப் பற்றிப் பேசவேண்டுமானாலும் பேச வல்லவர். பல மணி நேரமும் பேசும் திறன் படைத்தவர். இவரை அறிஞர் அண்ணா என்று அழைப்பர். காஞ்சியில் பிறந்து சென்னையில் வாழ்பவர். இவர் எழுதிய நூற்கள் குமரிக்கோட்டம், சந்திரோதயம், சந்திரமோகன் என்பன. இவர் திரைப் படத்திற்குக் கதை வசனம் எழுத வல்லவர்.

அருணாசல கவுண்டர்: இவர் வித்துவான் பட்டம் பெற்றவர். திருநெல்வேலி இந்துக் கல்லூரியில் தமிழ்த் துறைத் தலைவராகப் பணி புரிபவர். இவரது பிறப்பிடம் கோவை மாவட்டம். வடமொழி, ஆங்கிலம் அறிந்தவர். இவரது நூல்கள் கரும்பின் கதை, வேதநாயகம் பிள்ளை, சுவாமிக்கண்ணுப் பிள்ளை இவர்களது வரலாறுகள்.

அன்பு கணபதி: இவர் தஞ்சை மாவட்டத்தினர். வித்துவான் பட்டத்தினர். சென்னைப் பச்சையப்பன் கல்லூரித் துணைத் தமிழ்ப் பேராசிரியர். இவரது நூற்கள் செந்தமிழ்ச் செல்வியர், காவலரும் பாவலரும் என்பன.

ஆரோக்கியசாமி: இவர் சென்னைப் பல்கலைக்கழகத்தில் வரலாற்றுத் துறையில் ரீடராக (நூல் ஆய்வர்) இருப்பவர். எம். ஏ., டாக்டர் பி. எச். டி. பட்டம் பெற்றவர். தமிழில் தணியா வேட்கையுடையவர். அவ் வேட்கையே இவரை நாம் இருக்கும் நாடு, தமிழ் வரலாறு, ஐரோப்பிய வரலாறு

முதலான நூல்களை எழுதச் செய்தது. அரசினர் பரிசும் பெற்றவர்.

கா. பொ. இரத்தினம்: இவர் இலங்கைவாசி. எம். ஏ., வித்துவான் பட்டம் பெற்றவர். திருக்குறளைப் பரப்புவதில் முனைந்து நிற்பவர். இவர் எழுதிய நூற்கள் இலங்கையில் இன்பத் தமிழ், இலக்கியம் கற்பித்தல் முதலியன. வட மொழியும் அறிந்தவர்.

ப. இராமநாதப் பிள்ளை: இவர் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகப் புலவர். அக் கழக வழி திருமூலர் திருமந்திர உரை, சிவஞான போதச் சிற்றுரை விளக்கம் ஆகிய நூல்களை எழுதியவர். ஐந்தெழுத்து மாண்பு என்னும் நூலும் இவரால் எழுதப்பட்டுள்ளது. வேதநாயகம் பிள்ளை நீதிநூல் உரையும், நல்லொழுக்க வினு விடையும் இவரால் எழுதப்பட்டுள்ளன. இவருக்குத் தனித் தமிழ்ப் பற்றுண்டு. இப் பற்றினை இவரது உரைகளில் காணலாம். சமய வடசொற்களுக்கெல்லாம் இவரே தமிழ்ச் சொற்களை ஆக்கி எழுதியுள்ளார். நக்கீரர் பாட்டில் வரும் தீர்கசுவாகா என்பதை, தீர்கசிவா என்று மாற்றுவாராளுல் இவரது தமிழ்ப் பற்றும் சைவப்பற்றும் எத்தகையன என்பதை உணரலாம்.

இ. இராமலிங்கம் பிள்ளை: இவர் அரசாங்க ஆஸ்தானப் புலவராக இருந்தவர். கவி புனைவதில் சிறந்தவர். தமிழ் மொழி பற்றுப் பெரிதும் உடையவர். இதனுல் அன்றே "தமிழன் என்ற பெருமையோடு தலைநிமிர்ந்து நில்லடா" என்று இவர் பாடியுள்ளனர்! சேலம் நாமக்கல் இவரது பிறப்பிடம். இவரது நூற்கள் தமிழின் இன்பம், அவளும் அவனும், மலைக்கள்ளன், மாமன் மகள், என் கதை, திருக்குறள் புது உரை, காந்தீய அரசியல் முதலியன.

ந. சஞ்சீவி: இவர் திருசிரபுர மாவட்டத்தினர். இது போது சென்னைப் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராக இருக்கிறுர். எம். ஏ. பட்டம் உடையவர். இவரது நூற்கள் சங்ககாலச் சான்ருேர்கள், மானங்காத்த மருதப் பாண்டியன், வீரத்தலைவர் புலித்தேவர், வேலூர்ப் புரட்சி, சிலப்பதிகார விருந்து என்பன. இவர் நல்ல பேச்சாளர். முதலியார் மரபினர். இவர் டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்-

களின் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்பினையும், அவர் எழுதிய நூற்களைப் பற்றிய குறிப்பினையும் எழுதியிருக்கும் கட்டுரை படிக்கப் படிக்கச் சுவை தரத் தக்கது.

சொ. சிங்காரவேலன்: இவர் தருமபுர ஆதீனத் தமிழ்க் கல்லூரி முதல்வர். நல்ல பேச்சாளர். எம். ஏ. பட்டம் பெற்றவர். இவர் எழுதிய நூற்கள் தருமை ஆதீனம், திருப்பறியலூர் வரலாறு முதலியன. இவர் ஆங்கிலப் பாடல்களையும் தமிழ்ப்படுத்துவர்.

சிவஞான கிராமணியார்: இவரை மா. பொ. சி. என்பர். சிறந்த அரசியல் அறிஞர். தமிழ் அறிஞரும் ஆவார். இவரது பேச்சுக் கேட்கச் சுவையுடையது. சிலப்பதிகாரத்தில் ஆழ்ந்த புலமை பெற்றவர். இதன் காரணமாகவே இவர் சிலம்பின் செல்வர் என்றும் அழைக்கப்படுபவர். தமிழ்நாட்டின் எல்லை வடவேங்கடமே என்று போராடியவர். ஆனால், இதில் முற்றிலும் வெற்றி கண்டிலர். திருத்தணி வரை எல்லை கண்டு இன்பம் ஆர்ந்தவர். இவர் எழுதிய நூற்கள் வீரபாண்டிய கட்டபொம்மன், கப்பலோட்டிய தமிழன், வீரக் கண்ணகி, தமிழன் குரல், கட்டுரைக் களஞ்சியம் முதலியன. வீரபாண்டியக் கட்டபொம்மனைப் பற்றித் தமிழரிடையே நினைவு படுத்தியவர் இவரே எனலாம்.

ஸ்ரீநிவாச ராகவன்: இவர் தஞ்சை மாவட்டத்தினர். தூத்துக்குடி வ. உ. சிதம்பரம் பிள்ளைக் கல்லூரியின் முதல்வர். எம். ஏ. பட்டமுடையவர். ஐயங்கார் மரபினர். கம்பராமாயணத்தில் ஆழ்ந்த அனுபவம் வாய்ந்தவர். நல்ல பேச்சாளர். அவன் அமரன், நிழல், மேல்காற்று, காவிய அரங்கில், இலக்கிய மலர்கள் என்பன இவரது நூற்கள்.

என். டி. சுந்தர வடிவேலு: இவர் எம். ஏ., எல். டி. பட்டம் பெற்றவர். சென்னை மாநிலக் கல்வித்துறை இயக்குநர். முதலியார் மரபினர். நன்கு பேச வல்லவர். பேசியவற்றைக் கட்டுரையாகவும் எழுதியவர். கடல் கடந்து சென்று திரும்பிய மாண்பினர். பத்மஸ்ரீ பட்டம் பெற்றவர். இவர் எழுதிய நூற்கள் அடித்தார் அணைத்தார், பூவும் கனியும், உதிரிப் பூ, தம்பி நில், மின் விளக்கு முதலியன. இதுபோது பள்ளிகள் பலவற்றில் பகல் உணவு கொடுப்பதற்குக் காரணர் இவரே.

வா. சு. செங்கல்வராயப் பிள்ளை : இவர் சென்னையில் வாழ்பவர். எம். ஏ. பட்டம் பெற்றவர். அமைதியாகக் தமிழ்ப் பணி புரிபவர். இவர் நூற்கள் தேவார ஒளி நெறி, அருணகிரி நாதர் வரலாறும் நூல் ஆராய்ச்சியும், காசி மகாத்மியம் என்பன.

தா. ஞான மூர்த்தி : இவர் சென்னையில் பிறந்து கோவையில் பி. எஸ். ஜி. கல்லூரித் தமிழ்ப் பேராசிரியராக இருப்பவர். வித்துவான், பி. ஓ. எல்., எம். ஏ. பட்டம் பெற்றவர். இவரது நூற்கள் சுழற்காற்று, காதல் படும் பாடு, பாவையின் உயிர்ப்பு, தெய்வ ஒளி, சிந்தாமணிச் செல்வம் முதலியன.

தூரன் : இவரது இயற்பெயர் பெரியசாமி என்பது. இவர் பி. ஏ., எல். டி. பட்டம் உடையவர். இவரது அரும் தொண்டினுல்தான் கலைக்களஞ்சியம் என்னும் தம்நேரில்லா நூற்களைப் பெற்று வருகிறேம். இவர் சிறந்த எழுத்தாளர். தமிழ்க்கலைக் களஞ்சியத்தலைமை ஆசிரியர். இளந் தமிழர், காதலும் கடமையும், மாவிளக்கு, பாரதித் தமிழ், நிலாப்பாட்டி, கனகத்தின் குரல் முதலியன இவரது நூற்கள். இவர் இசைப் பாடல்கள் பலவற்றையும் பாடியுள்ளனர்.

பெருமாள் முதலியார் : இவர் சென்னை ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி முதல்வர். எம். ஏ., எல். டி. பட்டம்பெற்ற வர். இவரது நூற்கள் இந்திய வரலாற்றுச் சுருக்கம், நமது இந்தியா முதலியன. பாடல்களைப் புனையும் ஆற்றல் பெற்றவர்.

வி. எஸ். வி. ராகவன் : இதுபோது இந்நூலை வெளியிட் டிருக்கும் ஆசிரிய நூற்பதிப்புக் கழகத்தில் பணிபுரிகிறுர். இவர் இனியன் என்ற புனை பெயருடையவர். இவரது நூற்கள் அன்னை சாரதாமணி தேவியார், மணிமேகலை, செந்தமிழ்ச் சிலம்பு, சிறுவர் கதைகள், நகைச்சுவைக் கதைகள், மார்க்கப் போலோ, கலிவரின் யாத்திரைகள் என்பன. இவர் ஐயங்கார் மரபினர்.

சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் : இவர் ஐயங்கார் மரபினர். இவரும் சிறந்த எழுத்தாளர். இவரைப் பாரத

ரத்னு என்று அழைப்பர். சேலத்தில் பிறந்தவர். இதுபோது சென்னையில் வாழ்பவர். நல்ல பேச்சாளர், அரசியல் அறிவு படைத்த அரும்பெரும் மேதை. இவரது நூற்கள் வியாசர் விருந்து, கண்ணன் காட்டிய வழி, ஆத்ம சிந்தனை, ராஜாஜி கதைகள், சக்கரவர்த்தித் திருமகன் என்பன. இதுபோது திருமந்திரங்கட்கு விளக்கம் எழுதி வருகின்றார். தமக்குத் தோன்றிய கருத்தை அஞ்சாது எடுத்து எழுதவும், பேசவும் வல்ல பேரறிவு படைத்தவர். இவரது விளக்கங்கள், பொருள் சிறப்புடையனவாக இருக்கும்.

வரதராஜ அய்யங்கார்: இவர் ஸ்ரீரங்கத்தில் பிறந்து சென்னையில் வாழ்பவர். ஜெயின் கல்லூரித் தமிழ் துறைத் தலைவர். வித்துவான், பி. ஓ. எல்., எம். ஏ., எம். ஓ. எல். பட்டம் பெற்றவர். இவர் தெலுங்கு, மராத்தி, வடமொழி அறிந்தவர். விவேகானந்தர் திவ்வியசரித்திரம், கட்டுரை நவமணிகள், செந்தமிழ் இன்பம் என்பனவற்றின் ஆசிரியர்.

ஜேபரத்தினம்: இவர் திருநெல்வேலியில் புனித யோவான் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக இருக்கிறார். எம். ஏ. பட்டம் பெற்றவர். தென்காசியில் பிறந்தவர். இவரது நூற்கள் மனோதத்துவ சரித்திரம், இளங்கோ உள்ளம், இலக்கிய ஒளி, தமிழ் இலக்கிய வரலாறு என்பன.

வேங்கடராஜுலு ரெட்டியார்: இவர் திருச்சி மாவட்டத்தினர். வித்துவான் பட்டம் பெற்றவர். தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய மொழிகளில் நல்ல புலமை சான்றவர். இதுபோது மயிலையில் வாழ்பவர். இலக்கண நுண்ணறிவுடையவர். இவரது புலமையினை இவர் எழுதியுள்ள பரணர் என்னும் நூலில் காணலாம். பள்ளி மாணவர்கட்கு நல்ல இலக்கண நூல்களை எழுதியுள்ளார். இவரது இலக்கணப் புலமை, திராவிட மொழியின் மூவிடம் பெயர் என்னும் நூல் வழியும், பல தாள்களுக்கு எழுதிவரும் இலக்கணக் கட்டுரைகளின் வழியும் காணலாம்.

வன்மீகநாதப் பிள்ளை: இவரை ஜி. வி. பிள்ளை என்பர். பி. ஏ. பட்டம் பெற்றவர். வடமொழி, இந்தி ஆகிய மொழிகளில் புலமை பெற்றவர். இதுபோது திருச்சியில் வாழ்

கிறார். இவருக்கு ராவ் சாகிப் பட்டமும் உண்டு. இவரது புனை பெயர் புற்றன் என்பது. அப் பெயரால் பூசைக்குரிய பாடல்களைத் தொகுத்து வெளியிட்டவர். திருவாசகம், கம்பராமாயணம் பற்றியும் பல கட்டுரைகள் வரைந்துள்ளார். ராஷ்டிரபதி ராஜேந்திரப் பிரசாத் அவர்கள் தம் சுய சரிதையினை இந்தியில் எழுதியுள்ளார். இதனைத் தமிழில் மூலத்திற்கேற்ப ஒன்றும் பிசகாதவாறு மொழி பெயர்த்த பெருமை இவருக்கு உண்டு.

அர. க. நாராயணசாமி: இவர் எம்.ஏ. பட்டம் பெற்றவர். வடமொழி, தெலுங்கு அறிந்தவர். வித்துவான் பட்டத்தினைச் சிறப்புற எழுதிப் பெற்றதால், திருப்பனந்தாள் காசி மடத்து ஆயிரம் ரூபாய் பரிசு பெற்றவர். இதுபோது விருதுநகர் செந்திக்குமார நாடார் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக இருக்கிறார். இவர் எழுதிய நூற்கள் பிணிதீர்க்கும் பெருமான் என்பது. ஷேக்ஸ்பியர் நாடகங்களான ஜூலியஸ்சீசர், மெக்பத் இவற்றைத் தமிழில் மொழிபெயர்த்துள்ளார். திருக்குறள் அறத்துப்பாலைத் தெலுங்கிலும், குறிஞ்சிப்பாட்டை ஆங்கிலத்திலும் மொழி பெயர்த்து வெளியிட்டுள்ளனர்.

வை. சுந்தரேச வாண்டையார்: இவர் வித்துவான் பட்டம் பெற்றவர். கல்வெட்டாராய்ச்சியில் தலைசிறந்தவர். இது போது அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் கல்வெட்டா-ராய்ச்சிப் பணியில் ஈடுபட்டுள்ளார். கல்வெட்டுக்களுக்குத்-தெளிவான உரை எழுதியவர். இவரது நூற்கள் திருக்-கொட்டையூர் கோடீச்சுரத்தல வரலாறு என்பது.

சி. துரைசாமி ஐயர்: இவர் வித்துவான் பட்டம் பெற்றவர். மயிலம் தமிழ்க் கல்லூரியில் முதல்வராகப் பணிபுரிந்தவர். கணிதப் புலமையும் இவர்க்கு உண்டு. இவர் எழுதிய நூல்கள் மயிலம் திருக்கோயில் திருமடவரலாறு, பிரபுலிங்கலீலை உரை, மயிலம் பிள்ளைத்தமிழ், உரை என்பன.

ஆபிரகாம் அருளப்பன்: இவர் பி. ஏ. பட்டம் பெற்றவர். நாகர்கோவில் இந்துக் கல்லூரியில் தமிழ் ஆசிரியராக இருந்துவருகிறார். இவர் எழுதிய கட்டுரைகள் வள்ளுவப்

பெருந்தகையாளர், பட்டினப்பாலை, திருக்குறள் இன்பம் என்பன.

மா. இராஜமாணிக்கம் : இவர் எம்.ஏ. பட்டம்பெற்றவர். வண்ணைத் தியாகராய கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக இருக்கிறார். இவர் பல தமிழ் இலக்கண இலக்கியக் கட்டுரைகளை எழுதியுள்ளார்.

ச. சச்சிதானந்தம் பிள்ளை : இவர் பி.ஏ., பி.எல். பட்டம் பெற்றவர். இவரைச் சைவப் பாதிரியார் என்றும் கூறுவர். இவரே வார வழிபாட்டைத் தோற்றுவித்தவர். இவரது நூற்கள் சைவசமயம், முருகன் அடியார்கள் என்பன.

தா. ச. மீனாட்சிசுந்தரம் பிள்ளை : இவர் வித்துவான் பட்டம் பெற்றவர். திருவாவடுதுறை ஆதீன வெளியீட்டு நூல்களைச் செம்மையாகப் பதிப்பிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளவர். இவர் பதிப்பிக்கும் நூற்களின் முகவுரை இவரது பரந்த இலக்கண இலக்கிய சைவசித்தாந்த அறிவைப் புலப் படுத்தும்.

தே. க. ஸ்ரீநிவாசாச்சாரியார் : இவர் வித்துவான் பட்டம் பெற்றவர். வைஷ்ணவ ஐயங்கார் மரபினர். இவர் திருவாவடுதுறை ஆதீன வெளியீடுகளாகிய சைவசித்தாந்த நூற்களை உரைநடையில் எழுதியிருக்கிறார். இதன் மூலம் இவரது சைவசித்தாந்தப் பற்றையும், புலமையினையும் நன்கு அறியலாம். இவர் அவ்வாதீனப் புலவர். வடமொழிப் புலமை மிக்கவர். இவர் சிவஞான போதம் பன்னிரு நூற் பாக்களைச் சைவத் திருமுறைகள் பன்னிரண்டுடன் இயைத்துப் பொருத்தம் காட்டி எழுதியிருப்பது; சைவப் பெருமக்களுக்கு அரும்பெரு விருந்தாகும்.

கு. ராஜவேலு : இவர் எம்.ஏ. பட்டம் பெற்றவர். இவரது நூற்கள் அழகு ஆடுகிறது, கடிவாளம், வள்ளல் பாரி முதலியன. இவர் தமிழாசிரியராகப் பணிபுரிந்தவர். இது போது அரசாங்க அலுவலகத்தில் பணி புரிகிறார்.

சி. ஜெகந்நாதாச்சாரியார் : இவர் வரலாறு, தமிழ் ஆகிய வற்றில் எம். ஏ. பட்டம் பெற்றவர். இதுபோது விவேகானந்தர் கல்லூரியில் தமிழ்த்துறைத் தலைவராக இருப்பவர்.

இவர் சேக்கிழார் பிள்ளைத் தமிழுக்கு நல்ல குறிப்புரை ஒன்றை எழுதியுள்ளார்.

ஜி. பெருமாள்: இவர் எம். ஏ. பட்டமுடையவர். சென்னை அரசினர் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக இருப்பவர். தமிழ்க் கட்டுரைகள் பலவற்றை எழுதியவர். நல்ல கவிஞர். ஆங்கிலக் கவிகளை நல்ல தூய தமிழ் மொழியில் அமைத்துப் பாடி இருக்கிறார்.

ரா. கிருஷ்ணமூர்த்தி: இவர் எம். ஏ., எல். டி., பி. ஓ. எல். பட்டம் பெற்றவர். மதுரைக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக இருக்கிறார். இவர் தெலுங்கு, வடமொழி, இந்தி ஆகிய மொழிகளை அறிந்தவர். இவரது நூற்கள் இமய-வெற்றி, அணுவை ஆய்ந்த அறிஞர்கள், பண்டை இந்தியப் பல்கலைக் கழகங்கள், மாயப் பிரபஞ்சம், சென்னைக் காஞ்சி (செய்யுள் நூல்) என்பன.

எம். இராசாக்கண்ணு: இவர் அரசங்கண்ணனார் என்றும் அழைக்கப் பெறுவர். வித்துவான், எம். ஏ., பி. ஓ. எல். பட்டம் பெற்றவர். நல்ல பேச்சாளர். எழுத்தாளர். இது போது உதகை, அரசினர் கல்லூரி முதல்வராக இருக்கிறார். இவரது நூற்கள் தமிழ் எங்கள் உயிர், ஞானியார் சுவாமிகள், கந்தர் சஷ்டி சொற்பொழிவுகள் என்பன. இவர் முன்பு சென்னை அரசினர் கல்லூரியில் தமிழ்த்துறைத் தலைவராக இருந்தவர்.

கே. சிவப்பிரகாசம்: இவர் ஆங்கிலத்திலும், தமிழிலும் எம். ஏ. பட்டம் பெற்றவர். இதுபோது புதுவை அரசாங்கக் கல்லூரியில் தமிழ்த்துறைத் தலைவராக இருப்பவர். பாடம் சொல்வதில் வல்லவர். இவர் சிறந்த கவிஞரும் ஆவார். சோதிடமும் நன்கு அறிந்தவர்.

தி. க. அவினாசிலிங்கம்: இவர் பி. ஏ., பி. எல். பட்டம் பெற்றவர். தமிழ் ஆசிரியர்களின் ஊதியத்தை உயர்த்தி-யவர். இவர் எழுதிய நூற்கள் இந்தியப் பொருளாதார நூல், திருக்கேதார யாத்திரை, வாழ்க்கையின் அடிப்படை, நான் கண்ட மகாத்மா, குழந்தை வளர என்பன. தமிழ் வளர்ச்சிக் கழகத்தை நிறுவியர் இவரே.

ஓ. வி. அழகேசன்: இவர் இந்தி, சமஸ்கிருதம் அறிந்தவர். இவருடைய நூல் உலக சரித்திரம் என்பது.

அழ. அழகப்பன்: இவர் குழந்தை இலக்கியங்களை எழுதுவதில் ஈடும் எடுப்பும் அற்றவர். இவரது நூற்கள் குழந்தை எழுத்தாளர் யார்? எவர்? சங்கரனும் ரங்கனும், ஜப்பான் பொம்மை முதலியன.

கே. அன்பழகன்: இவர் எம் ஏ. பட்டம் பெற்றவர். பச்சையப்பன் கல்லூரியில் துணைத் தமிழ்ப் பேராசிரியராக இருந்தவர். இதுபோது எம். எல். சி. உறுப்பினராக உள்ளார். இவரது நூற்கள் அறிவும் சிந்தனையும், அழகரசி என்பன.

கண்ணதாசன்: இவர் ஒரு சிறந்த கவிஞர். இதுபோது வெளிவரும் சினிமாக் கதைகளில் இவரது பாடல்களே பெரிதும் அமைந்துள்ளன. இவரது கவிதைகளில் பண்டைய இலக்கியக் கருத்துக்கள் மிகுதியும் உண்டு. இவரது நூற்கள் கண்ணதாசன் கவிதைகள், கண்ணதாசன் கட்டுரைகள், ராஜ தண்டனை, ஆயிரம் தீவு முதலியன.

பாஸ்கரத் தொண்டமான்: இவர் எம். ஏ. பட்டம் பெற்றவர். இவர்தம் புனைபெயர் தம்பி என்பது. மலையாள மொழியையும் அறிந்தவர். இவர் தென்னாட்டுக் கோயில்களைப் பற்றி அருமையான கட்டுரைகளை எழுதியுள்ளார். இவரது நூற்கள் கல்லும் சொல்லாதோ கவி, ரசிகமணி டி. கே. சி. என்பன.

கே. கே. பிள்ளை: இவர் பி. ஏ. ஆனர்ஸ் டி. லிட்., முதலிய பட்டம் உடையவர். சென்னைப் பல்கலைக் கழகச் சரித்திரப் பேராசிரியர். இவரது நூல்கள் தென்னிந்திய வரலாறு, இந்திய வரலாறு என்பன.

முல்லை முத்தையா: இவர் நல்ல எழுத்தாளர். இவரது நூற்கள் பஞ்சாயத்துச் சட்டம், தாழ்வு மனப்பான்மை, தபால், தந்தி, டெலிபோன் கதைகள், இந்தியாவின் கதை முதலியன.

ஜகவீர பாண்டியன்: இவர் கவிராச பண்டிதர் என்றும் அழைக்கப் பெறுவர். இவருக்கு ஆங்கிலம், வடமொழி,

தெலுங்கு முதலிய மொழிகளில் நல்ல பயிற்சியுமுண்டு. இவரது நூற்கள் புலவர் உலகம், பாஞ்சாலக் குறிச்சி, வீர சரித்திரம், இந்தியத் தாய் நிலை, புலவர் உலகம், திருக்குறள், குமரேச வெண்பா முதலியன.

பாலூர் கண்ணப்ப முதலியார்: இவர் சென்னையில் பிறந்தவர். சென்னை இராயப்பேட்டைப் புதுக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகவும், தமிழ்த் துறைத் தலைவராகவும் இருந்து கொண்டு பணிபுரிகிறார். இவர் வித்துவான், பி. ஓ. எல்., எம். ஏ. பட்டங்களைப் பெற்றவர். திருமயிலை அன்பர்களால் செந்தமிழ்ச் செல்வர் என்ற பட்டத்தையும், மதுரை திருஞான சம்பந்தர் ஆதினக் கர்த்தரால் சைவ சமய சிரோன்மணி என்ற பட்டத்தையும் பெற்றவர். இவர் பேசும் திறனும் எழுதும் வன்மையும் உடையவர். இவரது தொகுப்பு நூல்கள் தமிழ் இலக்கிய அகராதி, நால்வர் கூறிய நல்லுபதேசங்கள், வள்ளலார் காட்டிய வழி என்பன. இவர் எழுதியுள்ள உரை நூல்கள்: திரு ஈங்கோய் மலை எழுபது, திருவெம்பாவை, திருப்பாவை, திருப்பள்ளி எழுச்சி, மாணவர் திருக்குறள் விளக்கம். சேக்கிழார் பிள்ளைத் தமிழ் பெரு விளக்க உரை (இஃதுஅச்சில் உளது) என்பன. இவரது நாடக நூல் திருமணம் என்பது. ஆராய்ச்சி நூல் பொய்யடிமை இல்லாத புலவர் யார் என்பது. சொற்பொழிவு நூல், கந்தர் சஷ்டி சொற்பொழிவுகள் என்பது. பல சமயங்களில் எழுதிய கட்டுரைகள் சேர்ந்த நூலே கட்டுரைக் கதம்பம் ஆகும். பெரிய புராணம் ஒட்டி எழுதப்பட்டது, வையம் போற்றும் வனிதையர் என்பது. நாவல் வகையைச்சார்ந்தது, அமல நாதன் என்பது. ஆங்கிலம் தழுவிய நூற்கள் பழமை பாராட்டல், ஜான்சன் வரலாறு, புதுமை கண்ட பேரறிஞர், கலைவல்லார் என்பன. சங்க நூற்களைத் தழுவி எழுதப்பட்டவை சங்கச் சான்றோர்கள், கடை எழு வள்ளல்கள், கவி பாடிய காவலர், அதிகமான் என்பன.

மாணவர்கள் இலக்கண அறிவையும், கட்டுரை எழுதும் வன்மையும் பெற எழுதப்பட்டவை மாணவர் தமிழ்க் கட்டுரை, மாணவர் தமிழ் இலக்கணமாகும். இவ்வகையில் எழுதப்பட்ட இலக்கண நூற்கள் ஆரம்ப, நடுத்தர, உயர் நிலை, கல்லூரி மாணவர்கட்கு ஏற்ப உள்ளன. சிறு

கதைகளாக எழுதப்பட்டவை தானே படிக்கும் புத்தகம், சிறுவர்கட்கான சிறு கதைகள், இன்பக் கதைகள், அன்புக் கதைகள், நீதி போதனை என்பன. இவைகளே அன்றி நகைச்சுவையும் கவிச்சுவையும், திருக்குறள் அறத்துப்பால் வசனம். தூது சென்ற தூயர், தமிழ்ப் புலவர் அறுவர், தமிழ்த் தொண்டர், சீவகன் வரலாறு, தமிழர் போர் முறை, வள்ளுவர் கண்ட அரசியல் என்பன-வற்றையும் எழுதியுள்ளார். திருக்காளத்தி நாதர் உலா, திருக்கழுக்குன்றத்து உலா ஆகிய இவ்விரு நூற்களைப் பற்றிய ஆய்வுக் கட்டுரைகளையும், பதினேரும் திருமுறை-யில் உள்ள சில நூல்களை ஆய்ந்து எழுதிய கட்டுரைகளை-யும் எழுதியுள்ளார். இவைகளே அன்றிப் பள்ளிக்கூட மாணவர்கட்குப் பாட நூல்களையும் எழுதியுள்ளார். சித்தாந்த சாத்திரத்தைச் சார்ந்த கொடிக்கவி என்னும் நூல் பற்றிய விரிந்த அளவில் ஒரு கட்டுரையினையும், திருமந்திரத்தினைக் குறித்தும் விரிந்த அளவில் நான்கு கட்டுரைகளையும் எழுதி-யுள்ளார். போப்பையர் திருவாசக ஆங்கில மொழி பெயர்ப்-பைப் பற்றியும், வடநாட்டுத் தலங்களைப் பற்றியும் பல கட்டுரைகளையும் பல தாள்கட்கும், நினைவு மலர்கட்கும் எழுதிய கட்டுரைகளும் பற்பலவாகும்.

இறுவாய்

தமிழகம்

இந்நூலின் தோற்றுவாயில் சங்க கால மக்கள் வாழ்க்-கையினை நன்கு அறிந்தோம். அதன் பின் தமிழ் மொழியின் இலக்கண இலக்கிய நூற்களின் பரப்பையும் மாண்பை-யும் உணர்ந்தோம். அதன் பின் அந்நூல்களை இயற்றிய ஆசிரியர்களின் வாழ்க்கைக் குறிப்புக்களையும், அவர்களது அரும்பெருஞ் சிறப்புக்களையும் தெரிந்து கொண்டோம். இனி இவ்விறுவாய்ப் பகுதியில் இங்ஙனம் நூற்களை யாத்தற்-குக் கருவியாய் இருந்த தமிழ் மொழியின் மாண்பையும், தொன்மையையும், இக்கருவியாகிய மொழியினைப் பயின்று நூற்களை இயற்றித் தமிழ்மக்கள் வாழ்ந்த இடமாகியத் தமிழகத்தின் தொன்மையினையும், மாண்பினையும் சிறிது தெரிந்து கொள்வோமாக. முதற்கண் தமிழகத்தினைப்பற்றி அறிவோமாக.

முதல் முதல் மக்கள் தோன்றிய இடம் தென் இந்தியா என்பது ஆராய்ச்சியாளர் கருத்து. அதுவும் குமரிக் கண்டத்தில் என்பதும் அவர்களது முடிவாகும். இதற்குக் காரணம் முதலில் குளிர்ச்சி அடைந்த இடமே மக்கள் தோற்றத்திற்கு ஏற்றது என்பது. இந்தக் குமரிக் கண்டத்தை மேனாட்டறிஞர்கள் லெமுரியா என்றனர். இங்கு முதல் முதல் வாழ்ந்த உயிர் இனம் லெமூர் என்னும் குரங்கு இனமாம். அதனால் அவர்கள் அப்பெயரை அதற்குச் சூட்டிவிட்டனர். ஆனால், தமிழர்கள் அங்குக் குமரிமலை, குமரி ஆறு, இருந்தால் குமரிநாடு என்று குறிப்பாராயினர். குமரி நாட்டிற்குத் தெற்கே பஃறுளி ஆறு ஓடியது. அதன் கரையில்தான் மதுரை நகர் இருந்தது. அதுவே பாண்டிய நாட்டின் பழந்தலை நகர். அங்குத்தான் முதற் சங்கம் இருந்தது. அதுபோதுதான் நெடியோன் என்னும் பாண்டிய மன்னன் இருந்தனன். அவன் காலத்தில் அகத்தியர் அங்கு வந்தனர். அவன் காலத்தில் கடல் மதுரையைக் கொள்ள, அவன் வடக்கே நோக்கி வந்து, கபாடபுரம் என்ற ஒன்றை உண்டாக்கி, அதனைத் தலைநகராகக் கொண்டனன். அங்குக் கடைச் சங்கம் பின்னல் நிறுவப்பட்டது. கபாடபுரமும் கடல் வாய்ப்பட, மணவூரில் பாண்டியர் குடி ஏறி, இதுபோது வைகைக் கரையில் உள்ள மதுரைநகர் அமைக்கப்பட்டது. இக்குறிப்புக்கள் நம் தமிழ் இலக்கியங்களால் அறிய வருகின்றன. புறநானூற்றில் வரும்.

“செந்நீர்ப் பசும்பொன் வயிரியர்க் கீந்த
முந்நீர் விழவின் நெடியோன்
நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே.”

என்ற வரிகளால் பஃறுளி ஆறு இருந்த செய்தி தெரிகிறது. தெற்கே மதுரை இருந்தது என்பது “தலைச்சங்கம் இருந்தார் தமிழ் ஆராய்ந்தது கடல் கொள்ளப்பட்ட மதுரை என்ப” எனும் இறையனர் களவியல் உரையால் புலனாகிறது. கடல் கொள்ளப்பட்ட செய்தி சிலப்பதிகாரத்தில்,

“பஃறுளி ஆற்றுடன் பன்மலை அடுக்கத்துக்
குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள”

என வரும் அடிகளால் தெரியலாம். குமரிமலை என்பது மகேந்திர மலையே என்பது, வான்மீகி ராமாயணத்தாலும், சிவதருமோத்திர நூலாலும் அறிய வருகிறது. இதனை முறையே வால்மீகர் கிஷ்கிந்தா காண்டத்தில் சுக்ரீவன் வாக்கில் “ தாமிரபரணி நதியைத் தாண்டினல் பாண்டியன் கதவைக் காண்பீர்கள். அதன்பின் தென் சமுத்திரத்தை அடையுங்கள். அந்தச் சமுத்திரத்தின் கண்ணே மலைகளுள் சிறந்தது அழகிய மகேந்திர மலை” என்று குறிப்பிட்டுள்ளனர். “உன்னதத் தென் மகேந்திரமே” என்பது சிவதருமோத்திரம். ‘மன்னு மாமலை மகேந்திரம்’ என்பது மணிமொழியார் வாக்கு. குமரி ஆறு உண்டு என்பது “குமரியம் பெருந்துறை அயிரை மாந்தி” என்றும், “தெனுஅஃது துருகெழு குமரியின் தெற்கும்” என்றும் புறநானூற்றிலும், “தென் திசைக்குமரி ஆடிய வருவேன்” என்று மணிமேகலையிலும், “குமரியம் பெருந்துறை கொள்கையில் படிந்து” என்று சிலம்பிலும் வருதல் காண்க.

இன்னோரன்ன காரணங்களால் தமிழ் நாட்டின் பழமையினைக் காணலாம். தென்னிந்தியாவே மக்கள் தோற்றத்திற்கு முதல் இடம் என்பதை சர். வால்டர் ராலி என்பவர் கருதுகிறார். “India was the first planted and people country after the flood” என்ற வரி இதனை வலியுறுத்தும். டாக்டர் பெர்கூசன் கருத்தும், தமிழர்களின் தென்னிந்தியக் குடி இருப்பு, சரித்திரக் காலத்திற்கு முற்பட்டது என்பது. “Their settlements in India extend to such prehistoric times” என்ற அவர் வாக்கைக் காண்க. இந்தியா என்பது தென்னிந்தியாவை என்க. ஸ்காட் எலியட் என்பவர் தாம் எழுதியுள்ள இழந்த லெமூரியா என்னும் நூலில் (Lost Lemuria) லெமூரியாக் கண்டமே. அதாவது குமரிக்கண்டமே. மனித நாகரிகத்தின் தொட்டில் என்று கூறியிருப்பதையும் நினைவு கொள்ளல் வேண்டும்.

இங்ஙனம் பழம் பெருமையுடைய தமிழகத்தின் எல்லை, இலக்கண வாயிலாகவும் இலக்கிய வாயிலாகவும் எந்தப் பரப்பளவில் இருந்தது என்பதையும் அறிதல் வேண்டும்.

"வடவேங்கடம் தென்குமரி
ஆயிடை, தமிழ்கூறும் நல்உலகம்."

என்று தொல்காப்பியத்தில் பனம்பாரனர் கூறினர்.

"குணகடல் குமரி குடகம் வேங்கடம்
எனும்நான் கெல்லையின் இருந்தமிழ்க் கடலுள்."

என்பர் நன்னூல் பவணந்தியார்.

"வேங்கடம் குமரி தீம்புனல் பௌவம்
என்றின் நான்கெலை தமிழது வழக்கே."

என்பர் சிகண்டி முனிவர். இலக்கண நூல்களால் தமிழ் நாட்டின் எல்லைப் பரப்பை இவ்வாறு அறிகிறோம். இவ்வாறே இலக்கியங்களும் குறிப்பிடுகின்றன.

"நெடியோன் குன்றமும் தொடியோள் பௌவமும்
தமிழ்வரம் பறுத்த தண்புனல்நன் னாட்டு"

என்பது சிலப்பதிகாரம்.

தமிழகம் தொண்டை மண்டலம், சோழ மண்டலம் பாண்டி மண்டலம், சேரமண்டலம் என்ற பிரிவினையுடையது. இவற்றின் வடபகுதி தொண்டை மண்டலம். அப்பகுதியின் பரப்பைக் கூறவந்த இடத்துக் கம்பர்,

"மேற்குப் பவளமலை வேங்கடம் நேர்வடக்காம்
ஆர்க்கும் உவரி அணிகிழக்காம்—பார்க்குளுயர்
தெற்குப் பிணுகி திகழ்இருப தின்காதம்
நற்றொண்டை நாடெனவே நாட்டு."

என்று குறிப்பிட்டுள்ளனர். இதிலும் தமிழ் நாட்டின் வட எல்லை வேங்கடம் என்று இருத்தலைக் காண்க.

தொண்டை மண்டலச் சதகம், தொண்டை நாட்டைச் சார்ந்த சிவதலங்கள் இன்னன என்று குறிப்பிடும்போது;

"கயிலையும் கச்சியும் விற்கோலம் மோடு கழுக்குன்றமும்
பயில்வலி தாயமும் பாச்சூரும் அச்சிறு பாக்கமும்நல்
வயிலையும் வல்லம் திருவொற் றியூரும் அரிசிலியும்
மயிலையும் ஈசன் மகிழ்ந்ததன் றேதொண்டை மண்டலமே."

என்று குறிப்பிட்டனர். ஈண்டுக் கயிலை என்பது தென் கயிலாயமான திருக்காளத்தி. ஆகவே, இதுபோது தெலுங்கு நாட்டிலுள்ள திருக்காளத்தியும் தமிழ் நாட்டைச் சார்ந்தது என்பது புலனாகிறது.

தமிழ் நாட்டுத் தொண்டை மண்டலம் இருபத்து நான்கு கோட்டங்களையுடையது. அவற்றுள் ஒன்று திருவேங்கடம். கிருஷ்ண தேவராயர் காலத்தில் அவருக்கு முதல் அமைச்சராக இருந்த அம்பி அறம் வளர்த்த முதலியாரும், திருவேங்கடத்தைத் தமிழ் நாட்டு எல்லைக்குள் படுத்தியே வைத்தனர். சந்திரகிரியையும் அவர் தமிழ் நாட்டில் சேர்த்திருந்தனர் என்பதும் தெரிகிறது.

சித்தூர், நெல்லூர் என்னும் ஊர்கள் இதுபோது ஆந்திர தேசத்தில் இணைந்திருப்பினும், பண்டைக்கால முதலே தூய தமிழ்ப் பெயரால் குறிக்கப்பட்டமையின், தமிழ் நாட்டைச் சேர்ந்த ஊர்கள் என்பது பெறப்படுகிறது.

சந்திரகிரியில் உள்ள கல்வெட்டுக்கள் நான்கு. அவை யாவும் தமிழ்க் கல்வெட்டுக்களே. திருப்பதியில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டுக்கள் முப்பத்தெட்டு. அவற்றுள் இருபத்தைந்து கல்வெட்டுக்கள் தமிழ். திருக்காளத்தித் தலத்தில் கண்டெடுத்த கல்வெட்டுக்கள் எண்பது. அவற்றுள் அறுபத்தொன்பது தமிழ்க் கல்வெட்டுக்கள். திருச்சானூர் கல்வெட்டுக்கள் ஐந்து. அவை யாவும் தமிழே. நெல்லூர் அரங்கநாதர் கோவில் கல்வெட்டுக்கள் தமிழ்க் கல்வெட்டுக்களே. இன்னோரன்ன காரணங்களால் தமிழ் நாட்டின் எல்லை தெற்கே குமரி முதல், வடக்கே திருவேங்கட (திருப்பதி) மலை வரை இருந்தது என்பதை உளத்துள் கொள்ளவேண்டும்.

தமிழர்கள் திருவேங்கட மலை வரையில் தம் நிலப் பரப்பை அமைத்துக் கொண்டு வாழ்ந்தனர் என்பதோடின்றி, இமயம் வரை சென்று இமயத்து உச்சியில் தமது கொடியினை நாட்டினர் என்ற குறிப்பும் தமிழ் இலக்கியங்களில் காணக் கிடைக்கின்றன.

"தொன்றுமுதிர் வடவரை வணங்குவில் பொறித்து"

என்று அகநானூற்றிலும்,

"ஆரியர் துவன்றிய பேரிசை இமயம்
தென்னங் குமரியொ டாயிடை..."

என்று பதிற்றுப்பத்திலும்,

"மின்தவழும் இமய நெற்றியில் விளங்கு
வில்புலி கயல் பொறித்த நாள்."

என்றும்,

"இப்பால் இமயத் திருத்திய வாள்வேங்கை
உப்பாலைப் பொற்கோட் டுழையதா எப்பாலும்
செருமிகு சினவேல் செம்பியன்
ஒருதனி ஆழி உருட்டுவோன் எனவே."

என்றும் சிலம்பும்,

"கொடுவரிக்
கோண்மாக் குயின்ற சேண்விளங்கு தொடுபொறி
நெடுநீர்க் கெண்டையொடு பொறித்த குடுமிய."

என்று புறநானூற்றிலும் மூவேந்தர்கள் இமயத்தில் தம் தம் கொடிகளை நிலை நிறுத்தியதைக் காண்க.

இக் காலத்தில் இமய உச்சியைக் காண முயல்வார்க்கு இஃது ஓர் அரிய சான்றாக இருத்தலை அறிந்து நாம் இன்புறுதல் வேண்டும்.

மொகஞ்சதரோ, ஹரப்பா போன்ற இடங்களில் பரவிய நாகரிகம் திராவிடர் நாகரிகம் என்று வரலாற்று ஆசிரியர்கள் கூறும் உண்மைகளை உற்று நோக்கின், அந்த அளவுக்குத் தமிழர் பரவி இருந்தனர் என்று நினைவு கூர்ந்து நாம் பேருவகை கொள்வோமாக.

தமிழகத்தின் தென் பகுதி, சேர சோழ பாண்டியர்களாகிய முடியுடை மூவேந்தர்களால் ஆளப்பட்டு வந்தது. இதனைத் தொல்காப்பியம், "வண்புகழ் மூவர் தண் பொழில் வரைப்பு" என்று குறிப்பிடுகிறது. இப்பகுதி தமிழகம் என்று பெயருடையது என்பதைச் சிலம்பு "இமிழ் கடல் வேலித் தமிழ் அகம்" என்றும் சுட்டிக் காட்டுகிறது. இந்தத் தமிழகம் சோழ நாடு, சேர நாடு, தொண்டை நாடு என்றும் பகுக்கப் பட்டிருந்தது. இந் நான்கு நாடுகளின் எல்லை, கீழ் வருமாறு கூறப்பட்டுள்ளது.

சேர நாட்டு எல்லை,

" வடக்குத் திசைபழநி வான்கீழ்தென் காசி
குடக்குத் திசைகோழிக் கோடாம்—கடற்கரையில்
ஓரமே தெற்காகும் உள்எண் பதின்காதம்
சேரநாட் டெல்லைஎனச் செப்பு."

என்பது.

சோழ நாட்டு எல்லை,

" கடல்கிழக்குத் தெற்குக் கரைபொரு வெள்ளாறு
குடதிசையில் கோட்டைக் கரையாம்—வடதிசையில்
ஏணாட்டுப் பெண்ணை இருபத்து நாற்காதம்
சோணாட்டுக் கெல்லைஎனச் சொல்."

என்பது.

பாண்டிய நாட்டு எல்லை, முன்பே கூறப்பட்டது. தொண்டை நாட்டின் எல்லை,

" வெள்ளா றதுவடக்காம் மேற்குப் பெருவழியாம்
தெள்ளற் புனற்கன்னி தெற்காகும்—உள்ளார
ஆண்ட கடல்கிழக் காம்ஐம்பத் தாறுகாதம்
பாண்டியநாட் டெல்லைப் பதி."

என்பது.

இவ்வாறான தமிழ் நாட்டின் எல்லைப் பரப்புக் குறைந்து, இதுபோது வடக்கே திருத்தணிகை மலை வரையில்மட்டும் தான் உள்ளது. மிகப் பரந்து பட்ட நமது தமிழகம் மிகச் சுருங்கித் திருத்தணி வரையில் இதுபோது அமைந்திருந்தாலும், இவ்வெல்லையையும் இனிக் குறையாதவாறு காத்துக்கொள்வது தமிழ் மக்கள் ஒவ்வொருவருடைய கடமையாகும்.

தமிழ் மொழி

தமிழகப் பரப்பினையும், தொன்மையினையும் ஒருவாறு அறிந்தோம். இனி, இத்தமிழகத்தின் மொழியாகிய தமிழ் மொழியின் தொன்மையினையும், மாண்பினையும் சிறிது அறிந்து கொள்வோமாக.

தமிழ் மொழி தொன்மையானது என்பது வான்மீக ராமாயணமும், வியாசர் மகா பாரதமும் கூறுமாற்றால் அறியலாம். பாரதத்தில் பாண்டிய நாட்டைப் பற்றிய குறிப்பு வருகிறது. வானரங்களுக்குச் சுக்ரீவன், "நீங்கள் மலைய மலையின் சிகரத்தில் அகத்தியரைக் காண்பீர்கள். அவர் ஆணை பெற்றுப் பாண்டியர்க்கு உரித்தான கபாட புரத்தைக் காண்பீர்கள்" என்று கூறிய குறிப்பு வான்மீக ராமாயணத்தில் வருதல் காண்க. பாண்டியர்களைப் பற்றிய குறிப்பு அந்நூலில் காணப்படுதலின், அவர்களின் மொழி-யாகிய தமிழின் பழமையும் இதன் வழி அறியவருகிறது. பாண்டிய நாடு தமிழ் வளர்த்த நாடு என்பது,

"சந்தனப் பொதியச் செந்தமிழ் முனியும்
சௌந்தர பாண்டியன் எனும்தமிழ் நாடனும்
சங்கப் புலவரும் தழைத்தினி திருந்த
மங்கலப் பாண்டி வளநா டென்ப."

என்னும் செய்யுளால் தெரிகிறது.

பாரதத்திலும் தமிழ் நாட்டின் சிறப்பும், பாண்டியர் தமிழ் நாட்டை ஆண்ட தொன்மையும் கூறப்பட்டுள்ளன. உதியஞ் சேரலாதன் பாரதப் போரில் பஞ்ச பாண்டவர்கட்கு உணவு கொடுத்து ஊக்கியதைப் புறநானூறு,

"அலங்குளைப் புரவி ஐவரொடு சினைஇ
நிலந்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை
ஈரைம் பதின்மரும் பொருதுகளத் தொழியப்
பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்."

என்கிறது.

இந் நிகழ்ச்சியை அகநானூறு, "முதியங் பேணிய உதியம் சேரல், பெருஞ்சோறு கொடுத்த ஞான்றை." என்றும், சிலம்பு "ஓர்ஐவர் ஈர்ஐம்பதின்மர் உடன் எழுந்த போரில் பெருஞ்சோறு போற்றாது தான் அளித்த சேரன்" என்றும் கூறுதல் காண்க. இச்சேர மன்னன் நாட்டில் பேசிய மொழி தமிழே ஆகும். பதிற்றுப்பத்து என்னும் நூல் தமிழில் அமைந்திருத்தல் காண்க.

சோழ நாட்டிலும் தமிழ் வளர்ந்த நிலையினை,

"மன்ற வாணன் மலர்திரு அருளால்
தென்தமிழ் மகிமை சிவணிய செய்த
அடியவர் கூட்டமும் ஆதிச் சங்கமும்
படியின்மாப் பெருமை பரவுறு சோழனும்
சைவமா தவரும் தழைத்தினி திருந்த
மையறு சோழ வளநா டென்ப."

என ஒரு செய்யுள் கூறுதல் காண்க.

இம்மூவேந்தர்களைப் பற்றிய குறிப்பினைத் தொல்காப்பியர்,

"போந்தை வேம்பே ஆர்என வரூஉம்
மாபெருந் தானையர் மலைந்த பூவும்."

என்று மூவேந்தர் சூடிய மலர்களைக் குறித்துள்ளனர். தொல்காப்பியம் தமிழ் மொழியால் ஆனது.

"வழங்குவ துள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
பண்பில் தலைபிரிதல் இன்று."

என்னும் குறளினின் விசேட உரையில் பரிமேலழகர், "பழங்குடி தொன்று தொட்டு வருகின்ற குடியின்கண் பிறந்தார். தொன்று தொட்டு வருதல் சேர சோழ பாண்டியர் என்றாற் போலப் படைப்புக் காலந்தொடங்கி மேம்பட்டு வருதல்" என்று விளக்கினர்.

அகத்தியர்க்கு இறைவர் தமிழ் மொழியை உணர்த்தினர் என்பது,

"ஆதியில் தமிழ்நூல் அகத்தியர்க் குணர்த்திய
மாதொரு பாகன்."

என்றும்,

"விடையுடை கைத்தவன் பாணினிக் கிலக்கணம் மேனாள்
வடமொ ழிக்குரைத் தாங்கியல் மலையமா முனிக்குத்
திடமு றுத்திஅம் மொழிக்குஎதிர் ஆக்கிய தென்சொல்."

என்றும் "வடமொழியைப் பாணினிக்கு வகுத்தருளி அதற்கு இணையாத் தொடர்புடைய தென்மொழியைக் குறுமுனிக்கு வகுத்துரைத்தார் கொல்ஏற்றுப் பாகர்"

என்றும் வருதல் கொண்டு, அகத்தியர் காலம் முதல் தமிழ் மொழி இருந்ததைக் காண்க. இத்தமிழை முருகப் பெருமானும் அகத்தியருக்கு அறிவுறுத்தினர் என்பதை அருணகிரியார்,

"சிவனைநிகர் பொதியவரை முனிவன்அகம் மகிழஇரு
செவிகுளிர இனிய தமிழ் பகர்வோனே."

என்றும் பாடி இருக்கின்றனர்

இனித்தமிழ் மொழியின் சிறப்பைக் காண்போமாக. முதலாவது இம்மொழி தெய்வீகத்தன்மை வாய்ந்தது. இறைவனே தமிழ் வடிவினன். இவற்றைத் தேவாரத்தாலும், பிரபந்தத்தாலும், பரஞ்சோதியார் வாக்காலும் அறியலாம்.

"தொண்டர் நாதனைத் தூதிடை விடுத்ததும் முதலை
உண்ட பாலனை அழைத்ததும் எலும்புபெண் ணுருவாக்
கண்ட தும்மறைக் கதவினைத் திறந்ததும் கன்னித்
தண்ட தமிழ்ச்சொலோ மறுபுலச் சொற்களோ சாற்றீர்."

என்பது பரஞ்சோதியார் பாடல். வழிபாட்டிற்கும் இம்மொழி உரியது என்பதைத் "தமிழ்ச் சொலும் வடசொலும் தாள் நிழல் சேர" எனத் திருமந்திரத்தும், "அர்ச்சனை பாட்டே யாகும் ஆதலால் நம்மேல் சொற்றமிழ் பாடுக" என்று பெரிய புராணத்தும் கூறப்பட்டிருத்தல் காண்க. முத்திக்கு வித்தானது தமிழே என்பதை,

"தித்திக்கும் தெள்அமுதாய்த் தெள்அமுதின் மேலான
முத்திக் கனியேஎன் முத்தமிழே."

எனத் தமிழ் விடுதூதும் கூறுதல் காண்க. தமிழ் மொழியினிடத்துத் தெய்வங்கட்குப் பெருவிருப்பம் உண்டு என்பது இலக்கியங்களால் அறிய வருகின்றன.

"கண்ணுதற் பெருங்கடவுளும் கழகமோ டமர்ந்து
பண்ணுறத் தெரிந்தாய்ந்த இப்பசுந்தமிழ்."

என்பது பரஞ்சோதியார் வாக்கு.

"முத்தமிழால் வைதாரையும் அங்கு வாழவைப்போன்."

என்பர் அருணகிரியார்.

"கடுக்க வின்பெறு கண்டனும் தென்திசை நோக்கி
அடுக்க வந்துவந் தாடுவான் ஆடலின் இளைப்பு
விடுக்க ஆரம்மென் கால்திரு முகத்திடை வீசி
மடுக்க வும்தமிழ் திருச்செவி மாந்தவும் அன்றோ"

என்பது திருவிளையாடற் புராணம்.

"பைந்தமிழ்ப் பின் சென்ற பச்சைப் பசுங் கொண்டலே" என்பது குமரகுருபரர் வாக்கு.

இன்னோரன்ன காரணங்களால் தமிழ் தெய்வங்களால் பெரிதும் விரும்பப்பட்டதை நன்கு தெளியலாம்.

தமிழ் என்னும் சொல் தமிழே அன்றித் திராவிடம் என்னும் சொல்லின் திரிபன்று. தொல்காப்பியத்தில் "தமிழெனும் கிளவி" என்ற தொடரே தமிழ் என்னும் சொல் இருத்தலைக் காட்டுகிறது. தமிழ் கூறும் நல்லுலகென்பதைத் தொல்காப்பியப் பாயிரத்தும் காண்க. "செந்தமிழ் நிலத்து வழக்கொடு சிவணி" என்னும் தொடரையும் காண்க. "செந்திறத்த தமிழ் ஓசை வடசொல்லாகி" என்னும் நாலாயிரப் பிரபந்தத் தொடரால், வடமொழிக்கும் துணையாய் இருப்பது செந்தமிழ் என்பதையும் அறியவும். தமிழ்மொழியே தீராத ஐயங்களையும் தீர்க்கவல்லது என்பதை வேதாந்த தேசிகர்,

"செய்யதமிழ் மறைஅனைத்தும் தெளிய ஓதித்
தெரியாத மறைநிலங்கள் தெரிகின் றோமே."

என்று கூறுதல் காண்க. இதன் வழி, தமிழ் மறைகள் இருந்தமையும் உணர்வோமாக. கம்பர் "ஆரணத்தின் மும்மைத் தமிழ்" என்று அறிவித்தலை ஓர்க.

தமிழ் மொழி இனிமையானது என்பது இதில் அமைந்துள்ள சொற்களின் உச்சரிப்பு மூலம் அறியலாம். இஃது ஓதற்கெளிதாய், உணர்தற்கு இன்பமாய் அமைந்தமொழி. ஏன்? இனிமை என்னும் பொருளையே தரும் சொல்லாகவும் தமிழ்ச் சொல் திகழ்கிறது. "இனிமையும் நீர்மையும் தமிழ் எனல் ஆகும்" என்பது பிங்கல நிகண்டு. இக்கருத்தைக் கீழ்வரும் இலக்கியத் தொடர்களைக் கொண்டும் அறிந்து கொள்ளலாம்.

"தமிழ் தழீஇய சாயலவர்" என்று சீவகசிந்தாமணியும், "தமிழ் மாருதம்" என்று பெரிய புராணமும், "வண்டு தமிழ்ப் பாட்டிசைக்கும் தாமரையே" என்று கம்ப ராமாயணமும் தமிழ் என்னும் சொல்லை இனிமை என்ற பொருளில் அமைத்திருத்தலைக் காண்க. கவிபாக்ஷா சேகரர் திரு. இராகவ ஐயங்கார் அவர்கள், "இனிமை என்னும் பொருள்படும் தமிழ் என்னும் சொல்லே, நம்நாட்டு மொழிகளுள் தொன்மையும், முதன்மையும் பெற்று இத்தென்னாட்டுத் தாய் மொழிக்குப் பெயராய்ப் பண்டைக்காலம் தொடங்கி வந்தது" என்று கூறியுள்ளனர்.

தமிழ் மொழி எழுத்து நுட்பமும், சொற் பெருக்கமும், பொருட் பொலிவும், யாப்பமைதியும், அணி அழகும், ஒலி இனிமையும், தெய்வத் தன்மையும் அமைந்தது.

தமிழ் மொழியின் மேன்மையைக் குறித்து மேற்கு நாட்டவர்கள் நன்கு சிறப்பித்துக் கூறியுள்ளனர். கால்டு-வெல், கிரியர்ஸ்ன் போன்ற மொழிநூல் பேராசிரியர்கள், தமிழ் மொழியின் ஒலி அமைப்பு, வரி அமைப்பு முதலிய சிறப்பு இயல்புகளை மிக மிகப் பாராட்டி எழுதியுள்-ளனர். டாக்டர் ஜி. யு. போப் அவர்கள், "தென்னிந்தியர், எந் நாட்டாரினும் நல்லொழுக்கத்திலும் சிறந்து முன் அணியில் நிற்றற்குரியர். அதற்குக் காரணம் நாலடி நானூறும், திருக்குறளுமே" என்று கூறி இருப்பது இவ்விரு நூற்களும் நந்தம் நற்றமிழ் மொழியில் இருப்பதனால் அன்றோ? கனம் வின்ஸ்லோ என்னும் மாபெரும் புலவர் "தமிழ்மொழி செய்யுள் அமைப்பில் கிரேக்க மொழியினை-யும், இலக்கியப் பெருமையில் இலத்தீன் மொழியையும் வெல்ல வல்லது" என்கிறார். டாக்டர் கால்டுவெல் "தமிழ் மொழி பழமையானது; நலம் சிறந்தது; உயர் நிலையில் உள்ளது. இதைப் போன்ற திராவிட மொழி வேறு எதுவும் இல்லை" என்று உளமாரப் புகழ்கிறார். சிலேட்டர் என்பவர், திராவிட மொழிகள் எல்லாவற்றிலும், "மக்கள் பேசும் மொழிக்கு உரிய தன்மையைப் பெற்றுள்ள மொழி தமிழ் மொழியே" என்று அறுதியிட்டு உறுதியாகக் கூறுகின்றார். மார்டாக்கு என்னும் புலவர், "துரானிய மொழிகள் பலவற்-றுள்ளும் மிகச் சீரிய மொழியாகவும், அழகிய இலக்கியங்-களைப் பொருந்தப் பெற்றதாகவும் விளங்குவதும் தமிழே"

என்று ஆய்ந்து முடிவு கட்டுகின்றார். ஜெர்மன் தேசத்து அறிஞர்கள், "ஆரியத்துக்கு முன்னது தமிழ்; அது மட்டும் அன்று. அதற்கு மேலானது," என்றும் கூட மொழிந்துள்ளனர்.

"It is most perhaps extravagant to say that in its poetic forms, the Tamil is more polished and exact than Greek."

"It is one of the most copious, refined and polished languages spoken by man."

என்பன தமிழ் மொழியைப்பற்றித் திரு. டெயிலர் அவர்களின் கருத்துக்கள்.

"Tamil is the most highly cultivated language and possesses the richest stores of indigenous literature" என்று மாக்ஸ் முல்லர் கூறியிருப்பதையும் ஈண்டு நினைவு கொள்ளவும்.

நமது பாரத நாட்டின் தந்தையாராகிய மகாத்மா காந்தி அவர்கள், தாம் எழுதிய சிறைச்சாலை அனுபவங்கள் என்னும் கட்டுரையில் வாயார, உளமார நம் செந்தமிழ் மொழியின் சிறப்பைக் குறித்து, எடுத்து எழுதி இருப்பதைக் காண்மினோ! காண்மின்! "தமிழர்கள் மொழியைக் கருத்தூன்றிக் கற்பதில் சென்ற மாதத்தைக் கழித்தேன். எவ்வளவுக்குக் கற்றேனோ அவ்வளவிற்கு அதன் அழகுகளை உணர்ந்தேன். அது விரும்பத் தக்கதும் இன்பமானதுமான மொழி. நான் கற்றதிலிருந்து தமிழர்கள் தங்களுக்கு இடையில் பண்டும் இன்றும், அறிவும், சாதுர்யமும், ஞானமும் வாய்ந்த மக்களைக் கொண்டவர்கள் என்பதை அறிகிறேன். பின்னும் இந்தியாவின் மக்கள் தொகுதி ஒன்றுகுமானால், சென்னை ராஜதானிக்குப் புறம்பே வாழும் மக்கள் தமிழ் அறிதல் வேண்டும்." என்று எழுதியிருத்தல் காண்க.

தமிழ் மொழியின் சாயல் பிற மொழிகளிலும் சேர்ந்துள்ளது. ஹீப்ரு மொழியில் துக்கி எனப்படுவது தோகை என்னும் சொல்லே ஆகும். கிரேக்க மொழியில் உள்ள ஒரிசி என்பது அரிசி என்பதில் ஐயம் இல்லை. இங்ஙனம் தமிழ் மொழி பிறமொழிகளில் கலந்திருப்பதை Rhys

Davids என்பவர் "The three classic languages of the world, namely Sanskrit. Hebrew and Greek contain Tamil words in the vocabulary" என்று கூறியுள்ளனர். Rev. Heras அவர்களும் இக்கருத்தை, "Being Dravidians the inhabitants of Mohenjodaro in Northern India, naturally spoke a Dravidian Language in which, the earliest proportion of the words used are found in Tamil. This confirms the common belief that Tamil is the oldest of the present Language" என்று எழுதியுள்ளனர்.

தமிழ் என்னும் சொல்லின் த என்னும் வல்லினமும், மி என்னும் மெல்லினமும், ழ் என்னும் இடையினமும் சேர்ந்து தமிழ் மொழியின் ஓசையின் சிறப்பியல்புகளை எடுத்துக் காட்டிக் கொண்டிருப்பதைக் காண்க; தமிழ்க்கே உரிய சிறப்பெழுத்துக்களாகிய ற, ன, ழ, எ, ஒ என்பனவற்றுள் ழ எம்மொழியிலும் இல்லாச் சிறப்புடன் துலங்குதலை உணர்க.

திருவருட்பா இராமலிங்க சுவாமிகள், "கடவுள் அருள் ஆணையால் கற்பிக்கப்பட்டதும், எம்மொழிகளுக்கும் பிதுர் பாஷை என்று ஆக, ஆன்றோர்களால் கொண்டாடப்பட்டதும், இனிமை என்று நிருத்தம் சித்திக்கப் பெற்றுள்ளதுமான தமிழ் என்னும் இயற்கை உண்மைச் சிறப்பியல் மொழி" என்றும், "ழ்" என்னும் சிறப்பியல் அக்கரம் (எழுத்து) பதின் எண் மெய்களில் எண் குறிப்பில் நின்று சிவ யோக பூமியாகிய பரத கண்டத்தில் குறிக்கப்பட்ட ஐம்பத்தாறு தேசங்களுள் சுதேசம் (தமிழ் நாடு) தவிர, மற்ற ஐம்பத்தைந்து தேச மொழிகளிலும் இல்லாததாய்" என்றும், "தமிழ் மொழியே அதி சுலபமாகச் சுத்த சிவானுபூதியைக் கொடுக்கும்" என்றும் நன்கு எடுத்து எழுதியுள்ளனர்.

இன்னோரன்ன வளமிக்க தமிழ் மொழியையும், தமிழகத்தையும், தமிழ் நூல்களையும் சிறப்பாகப் பாதுகாத்துக் கொள்வதோடு, பொதுவாக இந்தியாவையும் எவர் கையகத்தும் அகப்படாவாறு முன்னணியில் நின்று எல்லா வகையாலும் காக்கவேண்டியது தமிழர்கள் ஒவ்வொருவருடைய கடமையாகும்.